தென்னிந்தியத் திருச்சபை - கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

## 2012



தென்னிந்தியத் திருச்சபை

## கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

2012

வெளியீடு : தொடர்புத்துறை

# பேராயர் உரை

இறைவார்த்தைகள் மனித வாழ்விற்கு அடித்தளம், ஆதாரம். இவை சரியாக விதைக்கப்படும்போது மனிதன் புதிதாக வடிமைக்கப்படுகிறான். மட்டுமல்லாது இறை வார்த்தையினை வாழ்வில் உட்கொண்டு, அதின் உயிரோட்டத்தில் வாழ்வது சிறந்த ஆன்மீக வாழ்வாகும். ஆன்மீக வாழ்வு இடையூறுகளின்றி சிறப்பாக இயங்கவும் மக்கள் இறையாளுகையின் மக்களாய் உலகில் வாழவும் வழிபாடு, அவைகளில் ஆற்றப்படும் அருளுரை சிறப்பிடம் பெறுகின்றது. பல்வேறு நிலைகளில் பிளவு கொண்டு வாழும் மக்கள் கடவுளின் உலகில் ஒன்றாய் வாழ்ந்திட கருத்தாழமிக்க அருளுரைகள் உதவுகின்றன.

இச்சூழலில், இறைப் பணியாளர் ஒவ்வொருவரும் ஆற்றும் அருளுரைகள் தூய ஆவியாரின் துணையோடு தகுந்த ஆயத்தத்துடனும், திருமறை ஆதாரங்களோடும் ஆழ்ந்த இறையியல் கருத்துக்களோடும் அமைய வேண்டும். இவ்வாண்டு கடவுளது உலகில் ஒன்றாய் வாழ அழைக்கப்பட்டுள்ள நமது வாழ்வில் இக்கையேட்டிலுள்ள அருளுரைகள் பல மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இதனை ஒரு கையேடாக பயன்படுத்தவும் திருமறையினை ஆழமாக கற்று, தகுந்த இறைவேண்டலுடனும், ஏற்புடைய ஆயத்தத்தோடும் மக்களுக்கு ஆயத்தம் செய்து அருளுரையாற்றகேட்டுக் கொள்கிறேன். இந்நோக்கோடு ஆற்றும் இவ்வாண்டின் அருளுரைகள் மனித உறவினை செப்பனிட்டு, புதிய சமூகமாக மாற்றியமைக்கட்டும் என வாழ்த்துகிறேன்.

இந்நூல் சிறப்புடன் வெளிவர முயன்ற தொடர்புத்துறை இயக்குனர் அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களையும், நூல்வடிவம் பெறுவதற்கு தொகுப்பாசிரியராக நற்பணியாற்றின அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் அவர்களையும், அவர்களோடு இணைந்து பணியாற்றின வர்கள், அருளுரை எழுதியவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். அதோடு, சீரிய முறையில் அச்சுப்பணியினை நிறைவேற்றின ஆதீன அச்சக மேலாளர் திரு. D. ஆபிரகாம் ராபர்ட் செல்வன் அவர்களையும் மற்றும் அச்சக பணியாளர்களையும் பாராட்டுகிறேன்.

இறையாசி அனைவரோடும் இருப்பதாக.

**பேரருள்திரு. G. தேவகடாட்சம்**
துணைப் பிரதமப் பேராயர் C.S.I., பேராயர் குமரிப் பேராயம்

# இயக்குநர் உரை

போதகரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்வு கொள்கிறேன்.

இறைவாக்கினை இக்கால சூழலோடு ஒப்பிட்டு மக்கள் உள்ளத்தினில் பதிய வைப்பது தான் இறைப்பணியாளரின் பொறுப்புள்ள பணிவிடையாகும். அத்தகைய நிலையில் தூய ஆவியாரின் ஆற்றலோடும் அருளுரை ஆற்றும் போது மக்களில் அசைக்க முடியாத ஆன்மீக அழுத்தத்தை அது ஏற்படுத்தி விடுகிறது. அதை உணர்ந்து ஆக்கம் தரும் வகையில் தான் அருளுரை கையேடு துணை நூலாக தொகுக்கப்பட்டுள்ளது. ஆகவே இறை வேண்டுதலோடும், இறைப் பண்புகளோடும்ஆன்மீக மணத்தை அருளுரை மேடைகளில் பதித்திடுவோம்.

2012-ம் ஆண்டின் அருளுரை கையேடு தொகுப்பு பணியல் ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்தும் கண்ணியத்திற்குரிய பேராயர் G. தேவகடாட்சம் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியினை தெரிவிக்கிறேன். இப்பணியில் தொகுப்பாசிரியராக செயல்பட்ட அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் அவர்களுக்கும், இணைந்து செயல்பட்ட குழுவினருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். மேலும் ஆக்கப்பூர்வமான ஆலோசனை வழங்கியவர்கள், கருத்து செறிவுடைய அருளுரைகளை ஆயத்தம் செய்த போதகர்கள், இறைப்பணியாளர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். அருளுரை நூலுக்கு அழகுடன் அச்சுப் பணிகளை செய்து தந்த ஆதீன அச்சக மேலாளர் திரு. D. ஆபிரகாம் ராபர்ட் செல்வன் மற்றும் ஆதீன அச்சக பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

தூய ஆவியரின் துணையோடு அருளுரைகளை ஆயத்தம் செய்து, நற்செய்தியை மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம்.

இறையாசி நம்மோடிருப்பதாக.

இறைவேண்டலுடன்,

**அருள்திரு. N. விபின் ஜாண்**

இயக்குநர், தொடர்புத் துறை

# தொகுப்பாசிரியர் உரை

வார்த்தையாய் படைப்பில் செயல்பட்டு, வார்த்தையாய் உலகினில் வாழ்ந்து, இன்று வார்த்தையாய் நம்மில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இறை மைந்தன் இயேசுவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.

கடவுளின் வார்த்தை ஆற்றல் மிக்கது. ஆற்றல் நிறைந்த இவ்வார்த்தைகள் அருளுரை மேடைகளிலிருந்து தரப்படும் போது மக்கள் மாற்றம் பெறுகின்றனர். பிரிவினை அகன்று கடவுளது ஒப்பற்ற உலகில் ஒன்றாய் வாழ வழி காட்டுகிறது. நமது அருளுரைகள் இத்தகைய உணர்வினை இறை மக்களிடையே தரவேண்டும் எனும் ஒரே நோக்கோடு இவ்வாண்டு அருளுரைக் கையேடு வெளியிடப்படுகிறது. இங்கே அருளுரை எழுதியுள்ள அனைவரும் மிகுந்த இறைவேண்டலோடும், தகுதியான ஆயத்தங்களோடும் எழுதியுள்ளனர். அனைவரையும் பாராட்டுகிறேன்.

இந்நூலை பயன்படுத்துவோர் இதனை ஒரு வழிகாட்டியாக பயன்படுத்த வேண்டும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள அருளுரைகள் அனைத்தும் முழுமையானதல்ல, திருமறை ஆழமே முழுமையானது. ஆகவே திருமறையினைத் தெளிவுறக் கற்று, தியானித்து, வாழ்வின் அனுபவங்களோடு அருளுரையினை ஆயத்தம் செய்து ஆற்றும் போது மக்கள் தொடப்பட்டு முழுமை வாழ்விற்கு நேராய் தங்களை அர்ப்பணிக்கின்றனர். இந்த உணர்வோடு அருளுரையாற்றுவோம்.

இவ்வாண்டு தொகுப்பாசிரியராக செயல்பட எனக்கு வாய்ப்பு தந்த நமது அன்பிற்குரிய பேராயர் பேரருள்திரு. G. தேவகடாட்சம் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்து உற்சாகப்படுத்திய தொடர்புத்துறை இயக்குனர் அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். இந்நூல் நூல் வடிவம் பெற என்னோடு தோழமையோடு முழுமையாக உழைத்த அருள்திரு. S. வில்சன்,அருள்திரு. P.D. அலெக்ஸ்சாண்டர், திரு. ரமேஷ் D. தாஸ், அவர்களுக்கும், தொகுப்பு பணியில் உதவியாயிருந்த அருள்திரு. பாலஸ் செல்வமணி, அருள்திரு. R. சேம் பிரின்ஸ், அருள்திரு. ஸ்பர்ஜன் இன்ப ஜெயா, திரு. பிரபின் செல்வமணி, திரு. டேவிட் ஜெயசிங், திரு. விக்டர் வேத ராஜ், திரு. மில்ட்டன் மார்க், திரு. பால்தாஸ் ஆசிரியர், பேரா. அறிவர். D. தேவதாஸ் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் குறித்த நேரத்தில் அச்சுப்பணியினை நிறைவேற்றிட உதவிய ஆதீன அச்சக மேலாளர் திரு. D. ஆபிரகாம் ராபர்ட் செல்வன் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அச்சக பணியாளர்களுக்கும் உளமாற நன்றி கூறுகிறேன்.

இறையாசி நம்மோடிருப்பதாக.

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

தொகுப்பாசிரியர், அருளுரைக் கையேடு 2012

## Liturgical Colours - 2012

| | | |
|---|---|---|
| January 1 to January 6 | - | White |
| January 7 to February 21 | - | Green |
| February 22 to April 7 | - | Purple |
| April 8 to May 26 | - | White |
| May 27 to June 2 | - | Red |
| June 3 | - | White |
| June 4 to November 26 | - | Purple |
| November 27 to December 24th Morning | - | Purple |
| December 24th Evening to December 31 | - | White |

* நெடுங்காலக் காத்திருந்தல் இழைப்பை ஏற்படுத்தினாலும் விரும்பியது கிடைக்கும் போது மகிழ்வை ஏற்படுத்தும்.

* அன்னாள் நெடுங்காலமாய் காத்திருந்து சுதந்திரவாளியானாள் (1 சாமு. 1 : 1-20).

* காத்திருந்து இறை வேண்டல் செய்த அன்னாள், மாற்றம் பெற்றாள்.

### 3. காத்திருந்தல் மகிழ்வை தரும் :

* காத்திருத்தல் இயல்பியலில் மகிழ்வையும் பொறுமையின்மையும் தருகிறது.

* ஆபிரகாம் பொறுமையோடு காத்திருந்து மகிழ்வு பெற்றார் (எபி. 6 :15).

* சிமியோன் எருசலேம் ஆலயத்தில் மாற்றத்திற்காகக் காத்திருந்தார் (லூக். 2 : 25).

* பொறுமையோடு காத்திருந்த சிமியோன் வாழ்வுதரும் கிறிஸ்துவைக் கண்டு மன மகிழ்வடைந்தார் (லூக். 2 : 32).

**மன்றாட்டு :**

*பேராயம் மற்றும் அதின் சிறப்பான திருப்பணிகளுக்காய்*
*பேராயர், பேராயத் தலைவர்களின் நல்வாழ்வுக்காய்*
*பேராயத்தில் பணிபுரியும் போதகர்கள், இறைப்பணியாளர்களுக்காய்*

**Rev. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**



**01-01-2012**

***புதிய வருடம்*** ***கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் முதல் ஞாயிறு***

## வாழ்வளிக்கும் நித்திய வார்த்தை

தொநூ. 17 : 1–8 2 தெச. 1 : 3–12
தி.பா. 20 யோவா. 6 : 59–69

"ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன" (யோவா. 6 : 68)

இயேசு நாதரின் போதனைகள் பழைய காலாவதியான மரபுகளுக்கு எதிராக இருந்தன. சீடர்கள் அதனைக் கடினமான உபதேசம் என்றனர் (யோவா. 6 : 60). இவற்றைக் கண்டு பலர் பின்வாங்கிச் சென்றனர். இயேசு சீடர்கள் பன்னிருவரையும் பார்த்து நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? என்று கேட்டார் (யோவா. 6 : 67). ஆண்டவரின் கேள்விக்குச் சீடராகிய சீமோன் பேதுருவின் பதிலுரை தான் இந்த நாளின் தியான வசனம் (யோவா. 6 : 68).

வருடம் முடியும்போது வாழ்வின் ஒரு பகுதி முடிகிறது. அத்துடன் புதிய ஆண்டும் தொடங்குகிறது. அதுபோல உலக வாழ்வு முடியும்போது நித்திய வாழ்வு தொடங்குகிறது. பழைய ஆண்டிலிருந்து புதிய ஆண்டிலே பிரவேசிக்கும் போது பிரவேசிக்கும் புதிய ஆண்டை மட்டுமல்ல, நித்தியமானதையும் பற்றி யோசிக்க அழைக்கப்படுகின்றோம். ஆண்டவருடைய வார்த்தைகளாகிய வசனங்கள் மனித வாழ்வையும் உலக வாழ்வையும் மாற்றும் திறன் கொண்டவை. உலக சிந்தனையாளர்களின் வசனங்கள் ஆட்சியையும் அதிகாரங்களையும் அசைத்து, மாற்றியதை அறிவோம். நித்திய ஜீவ வசனங்கள் இவ்வுலகத்தில் நம்மை நேர்த்தியாய்ப் பூர்த்தியாய் வழி நடத்தி, நித்தியத்திலும் சேர்க்கும் ஆற்றல் கொண்டவை.

நித்திய வசனங்களின் முக்கியத்துவத்தை மூன்று பார்வைகளில் கவனிப்போம்.

### 1. வாழ்க்கையின் அர்த்தம் கற்பிக்கும் நித்திய வார்த்தை :

வார்த்தையாகிய கிறிஸ்து சொன்னார், "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத். 4 : 4, லூக். 4 : 4, இச 8 : 3).

புசிப்பும் குடிப்புமே வாழ்க்கையென்று கொள்கை வகுத்து வாழ்ந்தவர்கள் எப்பிக் கூரியர்கள். இன்றும் புசிப்பதும், குடிப்பதும், சம்பாதிப்பதும், அனுபவிப்பதும் தான் வாழக்கையென்று மக்கள்

யோசிக்கும்போது, இயேசு நாதர் அதற்கும் மேலானது "தேவனுடைய வார்த்தை" என்று சொல்லுகிறார். தேவ வார்த்தையை அறிந்தோர் உலகைப் பற்றியும், உவகை தரும் படைப்புக்களைப் பற்றியும், தன்னைப் பற்றியும், பிறரைப் பற்றியும், உறவுகளைப் பற்றியும் தெளிவான அறிவுடன் வாழ்வர்.

இறைவன் மனிதனுக்குக் கொடுத்தது ஒரே வாழ்க்கை (எபி. 9 : 27). இந்த ஒரே வாழ்க்கையை அர்த்தமுள்ளதாய் நடத்தும் போது, நித்திய வாழ்வுக்குச் சுதந்திரவாளிகளாக மாறுகிறோம் (The purpose of life is to live a life of purpose). ஆயக்காரன் என்று அழைக்கப்பட்ட சகேயு, ஆபிரகாமின் குமாரனென்று அழைக்கப்பட்டது (லூக். 19 : 9) அர்த்தமுள்ள வாழ்வு. இந்த வாழ்க்கை மாற்றத்திற்கு ஆண்டவருடைய வார்த்தை துணை நின்றது.

அர்த்தமுள்ள வாழ்வை வாழ்வோர், இலக்கு நிர்ணயித்து வாழ வேண்டும். வாழ்க்கையைப் பற்றிய ஒரு வரைபடத்தை (Life Map) கிறிஸ்து கற்பித்து தந்த நம்பிக்கையினடிப்படையிலும், திருவசனப் போதனையினாலும், கர்த்தருடைய ஆவியானவரின் ஆலோசனையோடு அமைத்துக் கொள்ளுவது நன்று. இத்தாலிய கடற் பிரயாணி கிறிஸ்டோபர் கொலம்பஸ், ஸ்பெயின் நாட்டு அரசன் பெர்டினண்ட் மற்றும் அரசி இசபெல்லா ஆகியோரின் உதவியினால் இந்திய துணைக் கண்டத்தைக் கண்டுபிடிக்கக் கடற்பயணம் மேற்கொண்டார். ஆனால் இந்தியாவிற்குப் பதிலாக 1492-இல் San Salvador நாட்டில் கரைசேர்ந்தார். அப்போது அவர் சொன்னாராம் "ஒரு தகுதியான வரைபடமின்றி சரியான திசையில் பயணிக்க முடியாது". இயேசுநாதர், நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவா. 14 : 6) என்று சொன்னார். இயேசு நாதர் தம்முடைய வாழ்வின் அர்த்தத்தையும் "நானோ அவைகளுக்கு ஜீவன்உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றார் (யோவா. 10 : 10).

வாழ்க்கையின் அர்த்தம் கற்பிக்கும் நித்திய வார்த்தையை, சத்தியமாய் ஏற்றுக் கொள்ளுவோம்.

## 2. வாழ்வின் அச்சம் அகற்றும் நித்திய வார்த்தை

வார்த்தை ஆண்டவரின் அருட்கொடை. வாயினின்று புறப்படும் வார்த்தை பிறிதொருவரை ஆற்றல்படுத்தவும் செய்யலாம். அச்சப்படுத்தவும் செய்யலாம். இறைவன் வார்த்தைகள் அச்சமகற்றுபவை, தீயோனின் வார்த்தை அச்சம் ஏற்படுத்துபவை. நீதி. 15 : 23 "ஏற்றக்காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது".

அச்சத்தைத் துச்சமாக எண்ணுவோர் எவரும் கிடையாது. பிரபல விஞ்ஞான பத்திரிக்கையான Current Biology-ல் அச்சமே இல்லாத பெண் என்று ஒரு பெண்ணைக் குறித்துக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. ஆனால் எந்த அளவிற்கு இவை உண்மை என்ற அறுதியிட்டு உறுதியாகக் கூற



**03-01-2012**

நாள் 2 *ஜெப வாரத் தொழுகை*

# ஆண்டவருக்காய்க் காத்திருந்து மாற்றம் பெறுதல்

1 சாமு. 1 : 1 – 20 எபி. 11 : 32 – 34
திபா. 40 மத். 3 : 13 – 17

"கடவுளுக்கு ஏற்புடையது அனைத்தையும் நாம் நிறைவேற்ற வேண்டும்" மத். 3 : 15

எந்தவொரு மாற்றத்திற்கும் காத்திருக்கும்போது, பொறுமையும், நம்பிக்கையும் தேவையானது. கடவுளின் வாக்கு நம்மில் நிறைவேற நாம் பொறுமையுடன் காத்திருத்தல் தேவை. இயேசு நாதர் கடவுளுக்கு ஏற்றதை நிறைவேற்றும் திருப்பணியினைச் செய்திட தன்னை ஆயத்தம் செய்ய திருமுழுக்குப் பெற பொறுமையோடு வரிசையில் காத்து நின்றார். பொறுமையோடு காத்திருத்தல் இறையவனின் நியதியாகச் சொல்லப்பட்டது. மட்டுமன்றி கடவுளுக்கு ஏற்புடையதை நிறைவேற்றி தன்னைக் கடவுளோடு இணைத்தார். திருச்சபை இன்று பிளவுபட்டு நிற்கும் சூழலில் ஆவியாரின் இணைக்கும் திருப்பணியில் நாம் நம்மை இணைத்துப் பொறுமையோடும் நம்பிக்கையோடும் செயல்படுவது இன்றியமையாதது. ஆண்டவரின் செயல்பாட்டிற்காக பொறுமையோடு காத்திருப்போர் என்ன நன்மைப் பெறுகின்றனர் என்பதை சிந்திப்போம்.

## 1. காத்திருத்தல் மாற்றம் தரும் (மத். 3 : 17)

* யோர்தான் நதிக்கரையில் இயேசுவின் காத்திருத்தல் அவரை இறைமகன் என உலகிற்கு அறிமுகப்படுத்தும் மாற்றத்தினைத் தந்தது (மத். 3 : 16,17).
* காத்திருத்தலினால் கடவுளுக்கு ஏற்புடையவரும் மாற்றத்தினைத் தருகிறது (மத். 3 : 17).
* திருப்பாடலாசிரியர் தமது வெட்கம், அவமானம், நிந்தை, வேதனைகள் அகன்றிட கடவுளின் செயல்பாட்டிற்குக் காத்திருந்து மாற்றம் பெற்றதை உணர்ந்து நன்றி செலுத்தினார் (திபா. 40).

## 2. காத்திருத்தல் சுதந்திரவாளியாக்கும் (1 சாமு. 1 : 1-20)

* குழந்தைகள் கடவுளால் கிடைக்கும் சுதந்திரம்
* சுதந்திரமாய் வாழ முதுமை நிலையிலும் காத்திருப்போர் அநேகர்.

"கடந்து செல்லுகிறவைகளெல்லாம் ஒரு கணம் மட்டும்" என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாம் நுழைவாயிலில் (All which troubles is but for a moment) "கலக்கமடையச் செய்கிறவைகளெல்லாம் ஒரு கணம் மட்டும்" என்று எழுதப்பட்டிருந்தது. மூன்றாவது நுழைவாயிலில்( That only important is eternal "முக்கியமானது நித்தியம் மட்டுமே" என்று எழுதப்பட்டிருந்தது. இந்த நுழைவாயிலைக் கடந்து செல்லும்போது, பரிசுத்த ஸ்தலம் இறைவனைத் தரிசிக்கும் இடமாக அமைந்திருக்கிறது.

நாமெல்லாரும் இந்த உலகத்தில் பல நிலைகளைக் கடந்து செல்ல வேண்டியதாக இருக்கிறது. இந்த உலகத்தின் வெற்றிகளும், தோல்விகளும், மகிழ்ச்சிகளும், சங்கடங்களும் தற்காலிகமானதே. நிலையானது, நித்திய வாழ்வு. புதிய வருடத்தில் ஆண்டவருடைய வார்த்தையை வாழ்வில்கொண்டு உலக ஆசீர்வாதங்களையும் இறுதியில் நித்திய வாழ்வையும் பெற்றுக் கொள்ள இறைவன் அருள் செய்வாராக.

**மன்றாட்டு :** *நித்திய கடவுளே, தொடக்கமும், முடிவுமானவரே, உம்முடைய அருளும், அன்பும், பராமரிப்பும் இணைந்து, எங்கள் போக்கையும் வரத்தையும் தேவரீர் காத்து நடத்தும்படி நாங்கள் வேண்டிக் கொள்ளத் தூண்டுகிறது. தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியே, ஆமென்.*

பேரருள்திரு. G. **தேவகடாட்சம்**

பேராயர்



**02-01-2012**

நாள் 1 *ஜெப வாரத் தொழுகை*

## பணியாள் கிறிஸ்துவில் மாற்றம் பெறுதல்

சகரி 9 : 9 – 10 உரோமர். 12 : 3 – 8

சங். 131 மாற். 10 : 42 – 45

"மானிட மகன் தொண்டாற்ற உலகிற்கு வந்தார்" மாற். 10 : 45

மாற்றம் பெற்று புதிய வாழ்வு வாழ்தல் கிறிஸ்தவ வாழ்வில் சிறந்தது. இந்நாளில் பணியாற்ற உலகில் வந்த இயேசு கிறிஸ்துவில் மாற்றுரு பெற்று நாம் திருச்சபையாக ஒன்றாக வாழ்ந்திட அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு கிறிஸ்து தமது மாற்றம் தரும் திருப்பணியின் முழுமையாக தமது வாழ்வினை உலகின் மக்களின் ஒன்றிப்புக்காகப் பகிர்ந்தார். கிறிஸ்துவின் இந்தத் திருப்பணியினைப் பிளவுபட்டுள்ளத் திருச்சபை மற்றும் உலக அமைப்பில் நிறைவேற்றிட நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பணியாள் கிறிஸ்துவில் மாற்றம்பெற என்ன செய்யவேண்டும்?

**1. மாற்றம் காண பணிவிடை செய்தல் :** (மாற். 10 : 45)

* பணிவிடை மாற்றத்தை ஏற்படுத்தும்.
* முதன்மையானவன் பணிவிடைக் காரனாயிருப்பான் (மாற். 10 : 43)
* பணி செய்கிறவன் இறுமாப்பாய் பணி செய்யக்கூடாது (மாற். 10 : 42)
* மானிட மகன் தொண்டாற்ற உலகில் வந்தார் (மாற். 10 : 45)
* கிறிஸ்துவின் பணிவிடை இரகசியத்தை வாழ்வாக்கி மாற்றம் காண்போம்.

**2. மாற்றம் காண வாழ்வு இழத்தல் :** (மாற். 10 : 45)

* கிறிஸ்துவின் பணிவிடை இரகசியம் தமது உயிரை இழந்து மறறவரை மீட்டல்

* இந்திய நாடு ஆங்கிலேய அடிமைத் தனத்திலிருந்தபோது விடுதலைப்பெற அநேகர் தங்கள் வாழ்வினை இழந்தனர்.

* தீமைகளில் வாழ்ந்த மக்கள் மீட்படைய கிறிஸ்து தம் உயிரை இழந்தார் (மாற் 10 : 45).

* நல் மேய்ப்பனாம் கிறிஸ்து ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கிறார் (யோ. 10 : 11)

* கிறிஸ்துவில் மாற்றம் பெற்று உலகம் மாற்றுருவாக விரும்பும் மனிதர் தமது பணிவிடையில் தன்னை இழக்கவும் ஒப்பு கொடுக்கிறார்.

**3. மாற்றம் காணும் பணிவிடை ஓர் அருட்கொடை :** (உரோமர் 12 : 3-8)

* பணிவிடைச் செய்யும் வாழ்வு இறைவன் தந்துள்ள அருட்கொடை (உரோமர் 12 : 6)
* பணிவிடையைப் பாரமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது.
* நமது உடல் ஒன்றாக இருந்தாலும் பல அவயங்கள் அவைகளுக்கு வெவ்வேறு பணிகள், அனைத்துப் பணிகளும் உடலின் செயல்பாட்டிற்காக இருப்பது போல, இறை மக்களுக்கு வெவ்வேறான பணி செய்யும் வரங்களைத் தந்துள்ளார். ஆனால் இவ்வரங்கள் திருச்சபையின் ஒற்றுமைக்காக பயன்படுத்துதல் சிறப்பானது.

**மன்றாட்டு :**

*புதிய ஆண்டு நன்மை நிறைந்ததாய் அமைய.*
*இறைமக்களிடையே அன்பும், நல்லுறவும் நிலைத்திட*
*திருச்சபையில் திருப்பணிகள் சிறப்பாய் நடைபெற.*

**Rev. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**



முடியாது. மானிடத்திற்கு அச்சம் ஏற்படுத்தும் செயல்களாகப் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பிணி, மூப்பு, சாவு ஆகியவை எவரையும் அச்சப்படுத்தும் செயல்கள்.

அச்சப்படும் சூழ்நிலை ஏற்படும்போது, ஆண்டவர் நம்மோடிருக்கிறார். (திபா. 46 : 7, 11) நம்மோடு பேசுகிறார் (யோசுவா 1 : 9) ஆண்டவர் நம் பக்கம் சாய்கிறார் (திபா. 34 : 6) ஆண்டவர் கரம் நீட்டி தூக்குகிறார் (சங். 146 : 8) நமது மார்போடு அணைக்கிறார் (ஏசா. 66 : 13) என நம்மை ஊக்கப்படுத்தும் வார்த்தைகளைத் திருமறையில் படிக்கிறோம். Winston Churchil ஒரு முறை சொன்னார் "வெற்றி இறுதியானதல்ல", (Success is never final) "தோல்வி இறுதியானதல்ல" (Failure is never final) "தைரியமே தேவையானது" (It is a courage encourage that counts)

இறைவனும் அவருடைய வார்த்தையும் நம்மோடிருந்து நம்மை ஆற்றல்படுத்துகையில் தீயோன் தவறு செய்யத் தூண்டி விடுகிறான். மனதில் அச்சத்தை ஏற்படுத்தி இவ்வாறு தூண்டுகிறான். அப்போது மனம் பதற்றமடைந்து அறிவின்றி செயல்படுகிறது. பதறாத போது தான் மனம் சிதறாமலிருக்கிறது.

அச்சமகற்றும் ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள், "பயப்படாதிருங்கள்" (மத். 28 : 10) "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத். 28 : 20)

## 3. வாழ்வின் அக்கரை சேர்க்கும் நித்திய வார்த்தை

ஆண்டவருடைய வார்த்தை அக்கரைக்குப் போக நம்மை அழைக்கின்றது. அக்கரை சேர கர்த்தரின் கரத்திலும், கர்த்தரின் வார்த்தையிலும் கர்த்தரின் கிருபையிலும் கர்த்தரின் நடத்துதலிலும் அடங்கியிருக்க வேண்டியது இன்றியமையாதது. எலியா போல "போதும் ஆண்டவரே" (1 அர. 19 : 4) என்று சொல்லும் நேரங்கள் ஏற்படலாம். அடுத்த அடி எடுத்து வைக்கக் கூடிய மன தைரியம் இல்லாமலிருக்கலாம். புதிய ஆண்டிலும் இப்படிப்பட்ட சூழல்கள் ஏற்படும்போது அக்கரை சேர்க்கும் ஆண்டவரின் வார்த்தை நம்மை வழி நடத்தும்.

மோசே கானான் தேசத்தைக் கண்டார். ஆனால் யோர்தானைக் கடந்து அதில் காலடி வைக்கவில்லை (இச. 34 : 4). அதற்குரிய காரணங்கள் இச. 32 : 51-இல் சொல்லப்பட்டுள்ளன. மோசே இறைவனோடு, நில்லாமல் மக்களோடு சேர்ந்தார். இறைவனோடு சாராமல் மக்களோடு மற்றும் உலகோடு சார்ந்த மோசே அக்கரை சேரவில்லை.

இத்தாலிய நாட்டிலுள்ள நகரில் அமைந்துள்ள பேராலயம் ஒன்றில் பரிசுத்த ஸ்தலத்தை அடைவதற்கு முன்னால் மூன்று வாயில்களைக் கடந்து செல்ல வேண்டும். முதல் வாயிலில் (All which passes is but for a moment)

* கடவுளால் பிறந்தவன் அன்புள்ளவன், அவன் உலகினை வெல்கிறான் ( 1 யோ. 5 : 5).
* இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசிக்கிறவன் கடவுளால் பிறந்தவன்.
* கிறிஸ்துவில் உலகினை வென்றவர், மனமாற்றம் பெற்று, உலக நன்மைகளை நிலை வாழ்வின் தன்மையோடு பெற்று மரணத்தின் மீதுள்ள இறுதி வெற்றியினை நம்புகிறார்.

**3. அன்பு களிப்படையச் செய்கிறது :** (ஆப. 3 : 17, 18)

* அன்பினால் கடவுளிடம் கொள்ளும் நம்பிக்கை எல்லா இழப்புகளின் நடுவிலும் களிப்படையச் செய்கிறது (ஆப. 3 : 18).
* வாழ்வு சார்ந்த நன்மைகள் கிடையாவிட்டாலும் கடவுளிடம் உள்ள அன்பினால் அவரில் மகிழ்ச்சியாயிருப்பேன். (ஆப. 3 : 17).
* இக்களிப்பும், மகிழ்வும் உயர்வான அனுபவத்தைத் தருகிறது (ஆப. 3 : 19).
* கிறிஸ்துவில் வெளிப்பட்ட கடவுளின் அன்பு நம்மிலே மாற்றத்தை ஏற்படுத்தி, மகிழ்வுடனும் களிப்புடனும் வாழச் செய்கிறது.

**மன்றாட்டு :**

* *ஏழைகள், ஒரங்கட்டப்பட்டோர், அநாதைகள், விதவைகள் போன்றோருக்காய்.*
* *நோயாளிகள், வாழ்வின் அமைதியிழந்தோர் அமைதி பெற்று வாழ்ந்திட.*
* *வன்முறைச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அவைகளில் ஈடுபடுவோருக்காக.*

**Rev. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**



**04-01-2012**

**நாள் 3**

## துன்புறும் பணியாளரால் மாற்றம் பெறுதல்

ஏசா. 53 : 3 – 11 திபா. 22 : 12 – 24
1 பேது. 2 : 20 –25 லூக். 24 : 25 – 27

"கிறிஸ்துவும் உங்களுக்காக துன்புற்று ஒரு முன் மாதிரியை வைத்து சென்றுள்ளார்" (1 பேதுரு 2 : 21)

மாற்றம் பெறுவதற்குப் பாடுகள் தவிர்க்க இயலாதவை. சிலுவை இல்லையென்றால் சிங்காரமில்லை. கிறிஸ்து துன்புறும் மக்களோடுத் தம்மை இணைத்துக் கொள்வதற்காக துன்பத்தைத் தம்மிடத்தே ஏற்று வெற்றி கண்டார். துன்புறும் பணியாளரான கிறிஸ்துவைப் பின் தொடரும் கிறிஸ்தவர்கள் துன்புறும் மக்களோடுத் தங்களை இணைத்துக் கொள்கின்றனர். கிறிஸ்துவின் சிலுவையோடு நாம் இணைந்து வாழ்வது, துன்புறும் மக்களோடு இணைந்து வாழும் அனுபவத்திற்கு அடையாளமாகும். துன்பத்தோடு வாழும் கிறிஸ்தவர்கள் துன்பத்தைப் பொறுக்க முடியாதிருக்கையில் சோர்ந்து போகக்கூடாது. காரணம் கிறிஸ்துவும் துன்புற்று மகிமையான மாற்றமடைந்தார். ஆகவே துன்புறுவோர் துன்பத்தின் வாயிலாய் மாற்றம் பெற்று மகிழ்கின்றனர்.

**1) துன்புற்றும் அமைதி இழக்காத பணியாளர்** (ஏசா. 53 : 7).

* துன்புறும் பணியாளராக இங்கே சொல்லப்படுகின்றவர் விடுதலையாளர்.
* துன்புற்று விடுதலையாகிய மாற்றத்தைத் தருகிறார்
* மனித பாடுகளைத் தாமாக ஏற்றப்பணியாளர் (ஏசா. 53 : 4).
* நொறுக்கப்பட்டும் அமைதி காத்தவர் (ஏசா. 53 : 5).
* வேதனையிலும் பொறுமையினை இழக்கவில்லை (ஏசா. 53 : 7).

**2) துன்புற்றும் நன்மை செய்த பணியாளர்** (1 பேதுரு 2 : 21).

* துன்புற்ற கிறிஸ்து முன் மாதிரியாக உள்ளார் (1 பேது. 2 : 21).
* துன்பத்தை ஏற்ற கிறிஸ்துவின் அடிச்சுவடு மாற்றம் பெறுவதற்கான நடைமுறை (1 பேது. 2 : 21).
* துன்பம் தரப்படும்போது தீமை செய்யாதிருந்தார் (1 பேது. 2 : 22, 23).
* மானிட மீட்புக்கு, மானிடர் பாவங்களைத் தாமே ஏற்றுக் கொண்டார் (1 பேது. 2 : 24).

* நன்மை செய்து பாடு அனுபவித்தல் கடவுளுக்கு ஏற்புடையது (1 பேது. 2 : 20).

**3) துன்புற்று வெற்றியடைந்த பணியாளர்** (லூக். 24 : 26) .

* துன்புறும் பணியாளர் துன்புற்று வெற்றியடைந்ததால் துன்புறுவோரின் வாழ்வில் மாற்றம் தருகிறார்.
* கிறிஸ்துவின் பாடுகள் முன்னுரைக்கப்பட்டவை (லூக். 24 : 26).
* பாடுபட்ட மகிமையடைந்த பணியாளர் (லூக். 24 : 26).
* கிறிஸ்துவின் சிலுவை வெற்றி துன்புறுவோரின் துயர் நீக்கி வாழ்வில் அமைதியினைத் தந்து மகிமைக்குள் அழைத்துச் செல்கிறது.

**மன்றாட்டு :**

*பேராயத்தின் நிறுவனங்கள், அதின் பணிகளுக்காய்*
*கல்வி கூடங்கள், மாணவர்கள், பணியாளர்கள்*
*மருத்துவமனைகள், அவைகளின் வாழ்வுக்காய்*
*நெய்யூர் கேன்சர் பிரிவிற்காய்*

**Rev. A. மகேர்ஷால் அஸ்பாஸ்**



**07-01-2012**

நாள் 6 *ஜெப வாரத் தொழுகை*

## கடவுளின் ஒப்பற்ற அன்பினால் மாற்றம் பெறுதல்

ஆப. 3 : 17 – 19 1 யோ. 5 : 1–6
திபா. 136 : 1–4, 23–26 யோ. 15 : 9 – 17

கடவுள் ஒப்பற்ற அன்பின் உறைவிடம். அவரிடமிருந்து வெளிப்படும் அன்பு உலகினை வெல்கிறது. தமது ஒரே மகனான இயேசுவை அவர் உலகிற்குத் தந்து, அவரது ஒப்பற்ற அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகிறார். இந்த ஒப்பற்ற அன்பு நம்மை கடவுளோடும், சக மாந்தரோடும் படைப்புகளோடும் இணைந்து வாழ அழைக்கின்றது. கிறிஸ்துவின் பஸ்கா இரகசியம் இந்த ஒப்பற்ற அன்பினை வெளிப்படுத்தி, நம்மைப் புதிய பற்றுறுதி வாழ்வினுள் அழைத்து அதில் நிலைத்து நிற்கச் செய்கின்றது. இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் கடவுளின் இணையற்ற அன்பினால் பல அற்புதங்களையும் அடையாளங்களையும் விடுதலை வாழ்வினையும் அனுபவிக்க முடிந்தது. (தி.பா. 136). இந்த ஒப்பற்ற அன்பு பிரிந்து நிற்கிற நம்மைக் கிறிஸ்துவிலே ஒன்றாக்குகிறது. நம்மிலே மாற்றம் தரும் கடவுளின் ஒப்பற்ற அன்பு...

**1. அன்பு இழக்க கொடுக்கிறது :** (யோ. 15 : 13)

* நண்பனுக்காக வாழ்வினை இழக்கச் செய்யும் அன்பு (யோ. 15 : 13)
* கடவுளின் ஒப்பற்ற அன்பினால் மாற்றமடைந்தோர் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும் (யோ. 15 : 12).
* இயேசுவின் சிலுவை மரணம் கடவுளின் அன்பின் ஆழத்தை உணர்த்துகிறது.
* இயேசு தமது சீடர்களிடம் கொண்டிருந்த உறவு அன்பினை அடித்தளமாகக் கொண்டிருந்தமையால் அவர் தமது சீடர்களை நண்பர்கள் என அழைத்தார்.
* கடவுளின் ஒப்பற்ற அன்பு நம்மை இழக்கக் கொடுத்து மாந்தர் நம்மில் ஐக்கியத்தை ஏற்படுத்துகிறது.

**2. அன்பு உலகை வெல்கிறது :** (1 யோ. 5 : 4).

* கடவுளின் ஒப்பற்ற அன்பு உலகையும் அதின் இச்சைகளையும் வெல்கிறது.

## 2. தீமையை வேரறுத்து நன்மை செய் : (உரோமர் 12 : 21).

* நன்மை செய்வதினால் மட்டுமே தீமையினை வேரறுக்க முடியும்.
* தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்தல் (உரோமர் 12 : 17).
* கடவுளின் அதிகாரத்தை அவரது அடியார் பயன்படுத்தக்கூடாது (உரோமர் 12 : 19).
* தீமையை வேரறுக்க அனைவரோடும் சமாதானமாய் வாழ வேண்டும் (உரோமர்12 : 18).
* துன்பம் தந்தவன் தேவையோடிருக்கும் போது அவனுக்கு உதவி செய்யவேண்டும் (உரோ. 12 : 20).

## 3. தீயோனை வென்றவரைப் பின் தொடர் : (மத். 4 : 1-11)

* இறை வார்த்தையால் தீயோனை வென்றவர் கிறிஸ்து (மத். 4 : 7).
* இறை வார்த்தையை நேசித்து, தியானித்து வாழ்கிறவன் தீமையினை வென்று வாழ முடியும் (தி.பா. 1 : 2).
* தீயோனின் கவர்ச்சியான வார்த்தைகளை இயேசு உசாதினப்படுத்தினார்.
* இன்று கவர்ச்சியான விளம்பரத்தால் ஏமாற்றம் அடைவோர் ஏராளம்.
* கவர்ச்சியான தீமைகளை விட்டு விலகி, கவர்ந்திளுக்கும் கல்வாரிச் சிலுவையினைப் பின்தொடர்வோம்.

**மன்றாட்டு :**

* *தென்னிந்திய திருச்சபையின் வாழ்வுக்காய்.*
* *ஜனவரி 13-15 கன்னியாகுமரியில் நடைபெறும் சினாட் மாமன்ற கூடுகைக்காய்.*
* *தென்னிந்தியத் திருச்சபையின் தலைவர்கள் அவர்தம் சீரிய பணிகளுக்காய்.*
* *தென்னிந்தியத் திருச்சபயின் அனைத்துப் பேராயங்கள் அவைகளின் சிறப்பான திருப்பணிகளுக்காய்.*

**Rev. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**



**06-01-2012**

நாள் 5 *ஜெப வாரத் தொழுகை*

# உயிர்த்த ஆண்டவர் தரும் அமைதியால் மாற்றம் பெறுதல்

மலா. 4 : 5 – 6 எபே. 2 : 14–20
திபா. 133 யோ. 20 : 19 – 23

"இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று வாழ்த்தினார். (யோ. 20 : 19)

இயேசுவின் சிலுவை மரணம் சீடர்களைக் கதி கலங்க செய்தது. இயேசுவோடிருந்த தங்களையும் யூதர்கள் கொலை செய்து விடுவர் என பயந்து ஒழித்து வாழ்ந்தனர். இச்சூழலில் வாரத்தின் முதல் நாள் மாலை நேரத்தில் பயந்திருந்த சீடர்கள் நடுவே இயேசு வந்து நின்று சமாதானம் கூறி பயம் அகற்றினார். உயிரோடு எழுந்த இயேசு மரணத்தின் மேலும் இருளின் மேலும் வெற்றி கண்டார். அவர் அமைதி அருளி மாற்றம் பெற உதவிச் செய்கிறார். பிளவுபட்டு நிற்கும் நமது சமூகம் திருச்சபை இவைகளை ஒன்றிணைத்து, பலமுள்ள தாக்கி, புதுவாழ்வின் வியூகத்தினையும் இறையரசின் வருகைக்காக உழைக்கும் வலிமையினையும் தருகிறார். அமைதியும், ஒற்றுமையுமே உயிர்த்த ஆண்டவர் நம்மில் தரும் மாற்றத்தின் மையங்கள். இந்த மையங்களின் ஊடாக மனித வாழ்வு கடந்து வரும்போது, மனித வாழ்வில் மாற்றம் பெறும் அனுபவம் ஏற்படுகிறது. கிறிஸ்து அருளும் அமைதியால் பெறும் மாற்றங்கள்.....

## 1. உறவில் சீர்படுதல் : (மலா. 4 : 5-6)

* ஆண்டவரின் நாளுக்காக காத்திருந்த மக்களிடையே அமைதியின்மையும், பிரிவினையின் கூறுபாடுகளும் இருந்தன.
* பெற்றோர் - பிள்ளைகள் உறவில் பிளவு (மலா. 4 : 6)
* கடவுளின் உதவியின்றி பெற்றோரும் பிள்ளைகளும் இணைந்து வாழமுடியாது.
* உயிர்பெற்று எழுந்து அமைதி அருளும் ஆண்டவர், அமைதியிழந்த குடும்பங்களில் அமைதி அருளி மாற்றம் ஏற்படுத்துகிறார்.

## 2. உறவில் ஒன்றாகுதல் : (திபா. 133)

* சகோதரர் உறவில் ஒன்றாகி வாழும்போது எத்தனை பெரிய மகிழ்வு.

* மனிதன் தனிமையாகவும் உறவின்றியும் வாழ கடவுள் படைக்கவில்லை.
* மனித சமூகம் அமைதி, நம்பிக்கை, உண்மை, புரிந்து கொள்ளுதல் இவைகளோடு ஒன்றாய் இணைந்து வாழ்வதில் சந்தோஷம் கிடைகிறது.
* நலமான உறவுகள் உலர்ந்த நிலத்தில் விழும் பனிக்கும், முழு நலனையும் இன்பத்தையும் தருகின்ற நறுமண தைலத்திற்கும் ஒப்பாயிருக்கிறது (திபா. 133 : 2, 3).

**3. உறவில் உயிரடைதல் :** (யோவான் 20 : 23).

* உயிர்த் தெழுதலின் அமைதியினைப் பெறுகின்றவர் இறைவனோடுள்ள உறவில் உயிரடைகின்றார்.
* உயிரடைதல் ஒப்புரவு உறவினுள் வரச்செய்கிறது (எபே. 2 : 16).
* அமைதி உரித்தாகுக எனும் அழைப்பு கடவுளிடம் அமைதி தேடவும், புதிய நீடித்திருக்கும் உறவினை மனித குடும்பங்களிலும், படைப்பிலும் ஏற்படுத்தவும் உதவுகிறது (யோ. 20 : 21).

**மன்றாட்டு :**

* *H.M.S. N.M.S. D.M.P.B. போன்ற அருட்பணி இயக்கங்களுக்காய்.*
* *D.M.P.B. யின் அனைத்துப் பணித்தளங்கள், பணியாளர்கள், தலைவர்கள், அலுவர்கள் அனைவருக்காய்.*
* *சமூக - சமய - பொருளாதார மாற்றத்திற்காக இயங்கும் இயக்கங்கள், தொண்டு நிறுவனங்களுக்காய்.*

**Rev. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**



**05-01-2012**

நாள் 4 *ஜெப வாரத் தொழுகை*

## தீமையின் மேல் வெற்றி கண்ட ஆண்டவரால் மாற்றம் பெறுதல்

விப. 23 : 1 – 9 உரோமர். 12 : 17–21
சங். 1 மத். 4 : 1 – 11

“தீமை உங்களை வெல்லவிடாதீர்கள். நன்மையால் தீமையை வெல்லுங்கள்” (உரோம. 12 : 21)

இறைவன் நல்லதெனக் கண்ட இவ்வுலகம் தீமையின் உறைவிடமாய், நன்மையினைத் தீமை மேற்கொள்ளும் நிலையில் உள்ளது. தீமைக்கு எதிரான கிறிஸ்தவர்களின் போராட்டத்தில் கிறிஸ்து இல்லாதபோது வெற்றியடைய முடியாது. தீமைக்கு எதிரான போராட்டத்தில் கிறிஸ்துவில் வெற்றி காண வேண்டும். ஏனென்றால் தீமையினை வென்றவர் அவரே. கிறிஸ்துவில் வெற்றி பெறுதல் என்பது தீமை நிறைந்த உலகில் கடவுளின் படைப்புகளில் ஏற்பட்டுள்ள சேதங்களைச் சரி செய்யும் நிலையாகும். இயேசு கிறிஸ்துவோடு இந்தப் புதிய வாழ்வினைப் பகிர்ந்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம். ஆனால் நம்மிடையே நமது திருச்சபைகளுக்கிடையே பிளவுகள், பிரிவினைகள் தீமைக்கு எதிரான போராட்டத்தின் வேகத்தினைக் கட்டுப்படுத்துகிறது. ஆனால் கிறிஸ்துவோடு இவ்வுலகின் தீமைகளுக்கு எதிராகப் போராடி, புதிதாக்கப்பட்டுள்ள நம்பிக்கையோடு நன்மையின் வழிகாட்டுதல்படி மகிழ்வோடு வாழ்வினைத் தொடர கடவுள் நம்மை அழைக்கிறார். தீமையின் மேல் வெற்றி கண்டு, மாற்றம்பெற்று, இறைவனோடும், சக மாந்தரோடும் இணைந்து வாழ என்ன செய்யவேண்டும்?

**1. தீமை செய்வோரைப் பின் தொடராதே** : (விப. 23 : 1-9)

* இஸ்ரவேலர் கடவுளுக்குத் தூயோராயிருக்க வேண்டும் (விப. 22:31).
* தூயோராயிருக்க வேண்டியவர் தீமைச் செய்யக்கூடாது (விப.23 : 1).
* அதிகமானோர் தீமை செய்தாலும், அவர்களைப் பின்பற்றக்கூடாது (விப. 23 : 2).
* தீயோரின் ஆலோசனை, அவர் தம் பாதை, அவர் அமருமிடம் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். (திபா. 1 : 1).

**15-01-2012**

*பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு*

# அழைப்பிற்கு இசைந்து வாழ்தல்

**LIVE WORTHY OF YOUR CALLING**

| | |
|---|---|
| தானி. 1 : 1–17 | 1 பேது. 1 : 13–21 |
| திபா. 1 | லூக். 17 : 1–4 |

"ஆகவே உங்கள் மனம் செயலாற்றத் தயாராக இருக்கட்டும்; அறிவுத் தெளிவுடையவர்களாயிருங்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்களிக்கப்படும் அருளை முழுமையாக எதிர்நோக்கி இருங்கள்."

1 பேதுரு 1 : 13

மனித வாழ்க்கையிலும், கிறிஸ்தவ வாழ்வு எனும் வாழ்க்கை ஓர் அழைப்பின் அனுபவம் கொண்ட வாழ்க்கையாகும். இறை மக்களாகிய நாம் பெற்றிருக்கிற இறையழைப்புப் பன்முகம் கொண்டது (2 தீமோ. 1:11). மனித உடலின் அவயவங்கள் ஒவ்வொன்றும் பல்நோக்கோடு, பன்முகப் பணிகள் செய்வதுபோல, நாம் நம் வாழ்வில் வெளிப்படுத்தும் செயல்களும், செய்யும் பணிகளும் பன்முகப் பார்வை கொண்டதாகும். அதே வேளையில், ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம், பொதுவான, சில நோக்கங்களுக்காக ஆண்டவரால் அழைப்புப் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் அனுதினமும் நம்மில் நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

நித்திய வாழ்வை முன்னிட்டு, ஆன்மீகப் பயணம் மேற்கொண்ட ஆசிய நாட்டு (1பேதுரு 1:1,2) விசுவாசிகளுக்குப் பேதுரு அடிகளார், அவர்களின் அழைப்பை நினைவுப்படுத்தி (1பேதுரு 1:13-21) ஆண்டவர் அவர்களை அழைத்தஅன்பிற்கு இசைந்து வாழ அழைக்கிறார். அந்த அழைப்பை 3 கருத்துக்கள் வழியாக சிந்திப்போம்.

**1. அறிவு தெளிவுடையவர்களாயிருங்கள்** (1 பேதுரு 1 : 13)

எல்லா மனிதரும், எல்லா காரியங்களிலும், தெளிவு உடையவராயிருப்பது, அவரது மனித மாண்பைக் காக்கும், மது அருந்துபவனுக்கு மனந்தெளிவிராதது போலவே தீய சிந்தை உள்ளவனுக்கும் மனத் தெளிவு இராது. ஒருவரின் மனதின் தெளிவினை அவரது அறிவுத் தெளிவாகக் காட்டும். கிறிஸ்துவின் வருகையில் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள நீங்கள் செயல்பட ஆயத்தமாயிருங்கள். அறிவுத் தெளிவு உடையவர்களாயிருங்கள் என பேதுரு அறிவுறுத்துகிறார். செயல்பட துணிந்தவன் எல்லாவற்றிலும் அறிவுத் தெளிவுள்ளவனாக இருப்பான். ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவன் தனது



**08-01-2012**

நாள் 7 *ஜெப வாரத் தொழுகை*

# நல் ஆயனால் மாற்றம் பெறுதல்

| | |
|---|---|
| 1 சாமு. 2 : 1–10 | தி.பா. 23 |
| எபே. 6 : 10–20 | யோ. 21 : 15–19 |

. . . "என்னை பின் தொடர்" (யோ. 21 : 19).

மாற்றம் பெற்று வாழ்வதற்கு முன்மாதிரியானவர் இயேசு கிறிஸ்து. அவர் தன்னை நல்ல ஆயனாக உலகில் வெளிப்படுத்தினார். நல்ல ஆயன் ஆடுகளை நல்வழிப்படுத்தி, நல்ல மேய்ச்சல் கொடுத்துத் தீமைகள் நெருங்கும்போது பாதுகாத்து, ஆடுகளின் மீது கரிசனை கொண்டு, ஆடுகளின் வாழ்வுக்காக தனது வாழ்வையும் இழப்பதற்கு ஆயத்தமுள்ளவர். ஆயன் நல்லவராக இருக்கும்போது ஆடுகளுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லை (தி.பா. 23 : 1) கிறிஸ்தவர்களும், நமது திருச்சபைகளும் இயேசுவை ஆயராகக் கொண்டு அவரைப் பின் தொடரும்போது, நம்மிடையேயுள்ள பிளவுகள் அகன்று ஒன்றாய் வாழமுடியும். நாம் ஒன்றாய் இணைந்து வாழ்வதற்கு நல் ஆயனாம் இயேசு நாம் மாற்றுரு பெற்று ஒன்றாய் வாழ்வதற்குத் தன்னையே பலியாக்கினார். அவர் ஒருவரே மேய்ப்பர் நாம் அவரது மந்தை. நம்மிலே பலமிழந்தவர்களையும், இளைத்துப் போனவர்களையும், தவறி போனவர்களையும், தம் பக்கம் திருப்புகிறார். நல் ஆயனாம் அவரில் மாற்றம் பெற்றிட . . .

**1. பயப்படாதிருங்கள்** (தி.பா. 23 : 4)

* நல் ஆயனாம் இயேசுவைப் பின் தொடர்ந்தால், சாவின் விழிம்பிலும் பயமில்லை . . . அவர் முன் செல்கிறார்.
* நீதி வழி நடத்திடும் ஆயன், பயப்படாதிருங்கள் (தி.பா. 23 : 3)
* ஆடுகளுக்காக வாழ்வையும் இழக்கிறார் பயம்வேண்டாம் (யோ. 10 : 11)
* எதிரிகளின் முன் விருந்து தருகிறவர் பயம் வேண்டாம் (தி.பா. 23 : 5)
* நன்மை, கிருபை நம்மை தொடர வைப்பவர் பயம் வேண்டாம் (தி.பா. 23 : 6)

**2. பலமுள்ளவராகுங்கள்** (எபே. 6 : 11)

* கிறிஸ்தவ வாழ்வு போராட்டங்கள் மிகுந்தது. பலமுள்ளவராயிருங்கள்.
* ஆண்டவரோடு இணைந்து அவர் தரும் வலிமையாலும் ஆற்றாலும் பலப்படுங்கள் (எபே. 6 : 10)
* உலகின் தீமைகளின் நடுவில் வலுவடைந்து போரிடுங்கள் (எபே. 6 : 12)
* பலமுள்ளவராக வாழ உண்மை, நீதி, நம்பிக்கை, மீட்பு, கடவுளின் வார்த்தை இவைகளை வாழ்வில் கைக் கொள்ளுங்கள் (எபே. 6 : 14-17)
* பலமுள்ளவராய் வாழ விழிப்புடன் இருங்கள் (எபே. 6 : 18)

**3. பின் தொடருங்கள்** (யோ. 21 : 19)

* பின் தொடர உண்மையான அன்பு தேவை.
* என்மீது அன்பு செலுத்துகிறாயா? (யோ. 21 : 15, 16, 17)
* ஆயனில் ஆடுகள் அன்பு செலுத்துவதினால் ஆயன் முன் செல்லும் போது ஆடுகள் அவனுக்குப் பின் செல்லுகிறது (யோ. 10 : 4)
* பின் தொடர்வதால்போதுமான உணவு, பாதுகாப்பு, கரிசனை, பலம் கிடைக்கிறது
* ஆடுகள் ஆயனுக்குரியது - பின் தொடரும் உரிமை பெற்றது.
* ஆயனாம் இயேசுவைப் பின் தொடர உரிமை பெற்றவர்களான நாம், அவரைப் பின் தொடர்ந்து மாற்றுரு பெற்று, அவரில் நிலைத்து நிற்போம்.

**மன்றாட்டு :**

* *இந்தியாவுக்காக, ஆளுகை செய்வோருக்காக, நாட்டு மக்களின் அமைதியான வாழ்வுக்காக.*
* *அகில உலக நாடுகளுக்காகவும், உலகின் மக்கள் அனைவரும் மாற்றம் பெற்று ஒன்றாய் வாழ்ந்திட.*
* *அனைத்துலக திருச்சபைகள் அதின் பணிகளுக்காய்*

**Rev. A. மகேர்ஷால் அஸ்பாஸ்**



ஏறுமுகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆண்டவர் நமக்கு முன் வைக்கிற உண்மைகளை உள்வாங்கி, விடுதலைக்குத் தோள்கொடுத்துத் தேவைகளில் கரம் கொடுத்து நற்செய்தியாக வாழ்ந்து காட்டுவோம். இறைவனின் ஆளுகையின் எல்கைகள் விரிவாக இறைவன் அருள்புரிவாராக.

**மன்றாட்டு :** *அன்புள்ள கடவுளே, உம்முடைய மைந்தரில், எங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் உம்முடைய அரசில் களிகூரவும் எங்களை அழைத்திருக்கிறீர். கிறிஸ்துவின் முதல் அப்போஸ்தலர்களைப் போல், நாங்களும் அவரின் சீடத்துவ அழைப்பைக் கேட்கவும், பழைய வழிகளை உதறிவிட்டு நொறுங்குண்ட உலகில் புதுவாழ்வின் நற்செய்தியை அறிவிக்கவும் அருள்புரியும், தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து, உம்முடன் ஆளுகைபுரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியே, ஆமென்.*

**அருள்திரு. S. கிறிஸ்டோபர் ஏசுமணி**

**08-01-2012**

# நற்செய்தியைப் பகிர்தல்

**(Sharing the Good News)**

ஏசா. 58 : 6 - 12 யோவா. 1 : 35 - 42

உரோம 12 : 9-21 திபா. : 34 : 1 - 11

"நற்செய்தியை முன்னிட்டு வெட்கப்படேன்" (உரோ. 1 : 16)

18-7-1967 -ஆம் நாள் தமிழகத்திற்குப் பொன்னான நாள். மெட்ராஸ் என்று அழைக்கப்பட்ட நம் மாநிலம் தமிழ்நாடு என்று பெயர்ச் சூட்டபட தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள். அப்போதைய முதலமைச்சர் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் தீர்மானத்தை முன்மொழிய, அனைத்துக் கட்சியினரும் ஆதரவு தெரிவித்தனர். தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. அண்ணா அவர்கள் எழுந்து தமிழ்நாடு என மூன்றுமுறை குரல் எழுப்ப சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வாழ்க என்று குரல் எழுப்பினர். சட்டசபை முழுவதும் ஏன் தமிழ்நாடு முழுவதும் தமிழ், தமிழன், தமிழ்நாடு என்ற நல்ல செய்தியால் உணர்ச்சிமயமாக காட்சி அளித்ததாக வரலாறு சொல்கிறது.

19-ஆம் நூற்றாண்டினில் முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் தொழிலாளர், உழைப்பாளர் இனம் கொடுமையாகப் பாதிக்கப்பட்டது. வறுமை, நோய், குறைவான கூலி, கொத்தடிமைத்தனம் இவைகளில் உழன்று உருக்குலைந்திருந்த தொழிலாளர்களின் காதில் பொதுவுடமைச் செய்தி தேனாய்ப் பாய்ந்தது. அடிமை விலங்கைத் தவிர இழப்பதற்கு எதுவுமில்லை, "அனைத்து உலக தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" (Nothing to loose but Indians the Workers of all Countries Unit)எனும் அழைப்பு தொழிலாளர்களுக்கு நற்செய்தியாய் வந்து சேர்ந்தது. பல நாடுகளில் புரட்சி வெடித்தது. மக்களாட்சி பல நாடுகளில் மலர்ந்தது. அனைத்து வளங்களும், சொத்துக்களும் மக்களுக்கே சொந்தம் என்ற சிந்தனை 17 நாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது.

முழுப்படைப்பும், முழு மனுக்குலமும் நல்ல செய்திக்காக ஏங்கி, எதிர்பார்த்துக் காத்து ஆவியாய்த் தவிக்கிறது. உழைப்பிற்கேற்ற கூலி, தரமான மருத்துவ சிகிட்சை, கல்விக்கேற்ற வேலை, இலஞ்ச ஊழலற்ற நிர்வாகம், நல்ல காற்று, குடிநீர், இருப்பிட வசதிகள், உறுதியான பாதுகாப்பு, இன, நிற, சாதி மோதலற்ற சமுதாய அமைதி வாழ்வு என்ற நல்ல செய்தி பகிரப்படாதா என ஏக்கங்கள் எல்லா மட்டங்களிலும் எதிரொலிக்கின்றன.

கிறிஸ்துவே வழி, வாய்மை, வாழ்வு என திருச்சபையாக, கிறிஸ்தவர்களாக நாமும் நற்செய்தியைச் சொல்லித்தான் பார்க்கிறோம்.



ஆனால் மக்களுக்கு அவை நற்செய்தியாக தெரியவில்லை. ஏற்கத் தயங்குகிறார்கள். கால தாமதம் செய்கிறார்கள், சில வேளை ஏற்கவும் மறுக்கிறார்கள். காரணம் சொல்லுகிற முறை சரியில்லையோ? சொல்லுகிற நமக்கு தகுதியில்லையோ, நற்செய்தியைத் துர்செய்தி என புரட்டுகிறோமோ? கலப்படமாக நற்செய்தியைச் சொல்லுகிறோமோ? ஆராய்ந்து பார்க்கவேண்டியுள்ளது. நற்செய்தியை ஆற்றலோடு, கிறிஸ்து நெறியில் பகிர்வது எப்படி?

**1. விடுதலைக்குத் தோள் கொடுத்தல்:** (ஏசாயா 58 : 6)

சமயப் பாரம்பரியங்கள் எல்லா சமயங்களிலும் உண்டு. சமய பாரம்பரியங்கள், ஆசாரங்கள், கடவுளின் விருப்பத்தில் நம்மை இணைக்க வேண்டும். ஏசாயா இதனையே இப்பகுதியில் கண்டித்து உணர்த்துகிறார். உபவாசம் என்ற சமய ஆசாரம் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற தடையாக இருக்குமானால் அதில் பயனில்லை. விடுதலை வாழ்வுக்குத் தோள்கொடுக்க நம்மை அர்ப்பணித்து, சமய பாரம்பரியங்களைப் பின்பற்றுவதே நல்லது என்பதே ஏசாயாவின் போதனை. உபவாசம் இருக்க முற்படுகிற இஸ்ரயேலர் அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்க, நுகத்தடியாக பிணைத்திருக்கும் அடிமைத்தனங்களை அகற்ற உடைக்க நெருக்கப்பட்டவர்களை விடுதலையாக்க முன்வர வேண்டும். அப்போது தான் கடவுளின் விருப்பமாகிய வெளிச்சத்தின் வாழ்வு, சுகவாழ்வு, நீதி வாழ்வு, நிறைவேறும். உரோமர் 16 : 3,4-இல் பிரிஸ்கில்லா ஆக்கில்லா குடும்பம் பவுலின் நற்செய்தி பணியில் தங்கள் கழுத்தைக் கொடுத்தார்கள். கிறிஸ்துவின் சிலுவை உலக மக்களின் விடுதலைக்காக தோள் கொடுக்க, தியாகம் செய்ய முற்பட்ட அனுபவமே.

நகம் நனையாமல் நத்தை எடுக்க கிறிஸ்தவர்கள் திருச்சபையார் பழகி உள்ள காலம் இது. நற்செய்திப் பணியில் பணம், அந்தஸ்து, பெருமை, புகழ் அதிகாரம் தேட முற்படும் காலம் இது. தியாகம் செய்ய, இழக்க துன்பப்பட, தோள் கொடுக்க முன்வராமல் நற்செய்திப் பணி விடுதலைப்பணி சாத்தியமில்லை. சமய ஆகாரங்களை விட விடுதலைப்பணியில் தோள் கொடுப்பதையே கடவுள் விரும்புகின்றார்.

**2. தேவைகளில் கரம் கொடுத்தல் :** (ஏசாயா 58 : 7)

உண்மையான உபவாசம் என்பதே பசிக்கு உணவைப் பகிர்வது, வீடுகளை இழந்தவர்களுக்குத் தங்க இடமளிப்பது, ஆடையில்லாதவனுக்கு ஆடையளிப்பது - பிறருக்கு முன் வெளியரங்கமாக வாழ்வது. இது நற்செய்திப்பணிக்கும் பொருந்தும். தேவைகளில் இருப்போரிடம் இயேசு நேசிக்கிறார், இயேசு அழைக்கிறார், இயேசு கைவிடார், இயேசு மனதுருகுகிறார் என்று சொல்லி விட்டு ஒதுங்கி செல்வது, ஓடிவிடுவது, மறந்து விடுவது நற்செய்தியைத் துர்செய்தியாகச் சொல்வதற்குச் சமானம். தேவைகளில் கரம் கொடுத்து, உதவி செய்து, வாழ வழிகாட்டுவதே உண்மையான நற்செய்தியாக அமைய முடியும்.

இயேசு கிறிஸ்து அதையே செய்தார். உணவற்றவருக்கு உணவழித்தார் (யோ. 6 : 10, 11). தொழுநோயாளிகளைத் தொட்டு குணமாக்கினார். இவை அனைத்துமே தேவைகளில் கரம் கொடுத்து நற்செய்தியைச் செயல்படிவம் ஆக்குதல் ஆகும். திப. 3 : 6, 7-இல் பேதுருவும் யோவானும் செய்த பணி இத்தகையதே.

ஏழைக்கு இறைவன் ரொட்டி வடிவத்தில் வருகிறார் என காந்தியடிகள் கூறியதும் ஏழைகளின் முகங்களில் இறைவனைக் காண்கிறேன் என அன்னை தெரசா அவர்கள் கூறியதும் நற்செய்திப்பணியின் தொடர்ச்சியே.

**3. நற்செய்தியாக வாழ்ந்து காட்டுதல் :** (யோ. 1 : 36)

'இதோ தேவ ஆட்டுக்குட்டி' என்பது திருமுழுக்கு யோவானின் அறிமுக அறிக்கை. இயேசுவைப் பற்றிய பல அறிமுகங்கள், அறிக்கைகள் திருமறையில் உண்டு. யோவான் இயேசுவை நற்செய்தியாகவே வாழ்ந்து காட்டுகிறவர் என்ற பொருளில் தேவ ஆட்டுக்குட்டி என்று தெளிவுப்படுத்தினார். பலியாக பலியிட எப்போதும் ஆயத்தமாக இருக்கும் அதேவேளை தியாகத்தோடு வாழ்ந்துகாட்டுபவர் என்ற பொருளில் இதனைப் பயன்படுத்துகின்றார் யோவான். இன்று நற்செய்தியை வாயால், வார்த்தையால், திரைப்படங்களால், கணிணியால், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால், ஒலிபெருக்கிகளால், ஊடகங்களால், அலைபேசிகளால் சொல்லி ஓய்ந்து போய் உள்ளோம். காரணம் பெரிய பலன் இல்லாமை. செலவிடுகிற பணமோ கோடிகோடியாய். பலனோ மிகக்குறைவு. நமக்கே ஒரு சலிப்பு, வெறுப்பு வந்து விட்டது. ஆனால் வாழ்ந்துகாட்டும் நற்செய்தியாளர்கள், வாழ்ந்துகாட்டும் அருளுரை மேடைகள், வாழ்ந்துகாட்டும் நற்செய்திப்பணி மாதிரிகள் நம்மிடம் இல்லாததே இந்த தேக்க நிலைக்குக் காரணம் என்பதை அறியலாம். அதற்கான மாற்று வழியை ரோமர் 12-ஆம் அதிகாரத்தில் பவுல் கூறுகின்றார் (உரோமர் 12 : 9-19). மாயமற்ற அன்பு தீமையை வெறுத்து நன்மையை பற்றுதல், சகோதர சிநேகம், ஒருவரை ஒருவர் கனம்பண்ணுதல், விழிப்போடு இருத்தல், உபத்திரவகாலத்தில் பொறுமை, ஜெபத்தில் உறுதி, குறைவில் உதவுதல், அந்நியரை உபசரித்தல் துன்பப்படுகிறவர்களை ஆசீர்வதித்தல், அழுபவரோடு அழுதல், தங்களைப் புத்திமான் என எண்ணாதிருத்தல், தீமைக்குத் தீமை செய்யாதிருத்தல், யாவரோடும் சமாதானமாக இருத்தல். இவை அனைத்தும் நற்செய்தியாக வாழ்ந்துகாட்டும் வழிகள் முறைகள், என வேதம் தெளிவுபடுத்துகிறது. இப்படி வாழ்ந்துகாட்ட கிறிஸ்தவர்கள் முற்பட்டால் இறை அரசு வெகுதூரம் இல்லை.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் இப்படிபட்ட வாழ்க்கை முறைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தால் இந்திய கிறிஸ்தவர்களின் சதவீதம்



**06-01-2012**

***பிரசன்னத் திருநாள்***

## அனைவருக்கும் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்து

**Christ is revealed for all**

எசா. 60 : 1–5 மத். 2 : 1–12
திபா. 72 திப. : 10 : 30–43

**மன்றாட்டு :** *மக்களினங்களின் ஆண்டவரே, நாங்கள் உமது மாட்சிமையை, மகிமையுடன் உதிக்கும் நட்சத்திரத்தில் பார்த்திருக்கிறோம். வாக்கு வடிவான உம்முடைய மன்னுருவேற்பின் வல்லமை பிரகாசம் இரவில் ஊடுருவி பூமியை மூடுவதுடன், நீதி மற்றும் அமைதி தவிர்ப்பதின் அடையாளத்தைத் தருகிறது. இந்த ஒளிக்கீற்று நாங்களும் அனைத்து மக்களும் ஒன்றாய் உம்முடைய வெளிச்சத்தில் நடக்க எங்கள் வாழ்வில் பிரகாசிக்கட்டும், தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியே, ஆமென்.*

**26-01-2012** *குடியரசு தினம்*

# பொறுப்புள்ள குடிமக்கள்

## RESPONSIBLE CITIZENSHIP

ஆமோஸ் 5 : 7 – 15 உரோம 13 : 1–10
திபா. 146 மத். 5 : 1 – 12

"நீங்கள் தீமையை வெறுத்து நன்மையை விரும்பி ......" ஆமோஸ் 5 : 15

இன்று நம்நாடு 62-ஆவது குடியரசு தினத்தைக் கொண்டாடுகிறது. இந்நாள் முக்கியமானநாள். மன்னராட்சி மாற்றம் கண்டு மக்களாட்சி உதயமான நாள். சகல உரிமையையும், ஆட்சியுரிமையில் பங்கு உண்டு என நிலைநாட்டப்பட்டநாள். எனவே அனைத்து மக்களும் குடியாட்சிக்கு உரியவர்களாக மாறி மக்களாட்சிக்கு விரோதமாக எழுகின்ற எந்த சட்ட திட்டங்களுக்கும் தனி மனித ஆதிக்கத்திற்கும் இடம்கொடுக்கக்கூடாது. மக்களாட்சிக்கு மதிப்பளித்து வாழ வேண்டும்.இன்று எங்கு பார்த்தாலும் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் சீரழிவுகளைக் காண முடிகிறது. இச்சீரழிவுகளை பொறுப்புள்ள குடிமக்களாகச் செயல்பட முடியும் என்பதனைக் குறித்து இன்று சிந்திப்போம்.

### 1. நமது கடமைகள் : (உரோம. 13 : 7)

கடவுளே உச்ச அதிகாரமுடையவர். அதிகாரிகளும், பொதுமக்களும் கடவுளுக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டும். அரசுகளைத் தமது திட்ட நிறைவேறுதலுக்காக கடவுள் பயன்படுத்துகிறார். மனசாட்சியும் அதிகாரங்களைப் பற்றி உணர்த்துகிறது. இன்று பல்சமயச் சூழலில் பல்வேறு குடும்பங்களையும் மற்றும் மனிதன் செயல்படும் அமைப்புகளையும் கொண்டதே நமது சமுதாயம் ஆனால் இன்று நாம் காணும் சமுதாயத்தில் சாதியம், வன்முறைகள், தீவிரவாத சக்திகள் பெண் அடிமைதனம், வரதட்சணை, போதைக்கு அடிமையாதல், அநீதி, வறுமை போன்ற பல்வேறு சமூகச் சீர்கேடுகள் மலிந்து காணப்படுகின்றன. கிறிஸ்தவ சமூகமாக இந்த நாட்டில் நாம் செய்த கல்விப் பணிகள், மருத்துவப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகள் இன்றும் மற்றவர்களுக்குச் சவாலாக நிற்கின்றன.

ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூரும் வகையில் இயேசுவின் பாதையைப் பின்பற்றி இன்றைய சமுதாய வளர்ச்சிக்காக நல்ல சமாரியனைப் போல நாம் நற்பணி செய்ய வேண்டும். இயேசு நாசரேத்தூர் அறிக்கையில் தம் பணியைக் குறித்து வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு



உணவு, உடல் பருமன், உடை, ஓடும் பாதை, ஆற்றல் இவைகளைக் குறித்து தெளிவுள்ளவனாயிருந்து முதல் பரிசை பெறுவான். தேர்வு எழுதும் மாணவனின் மனத் தெளிவில், அறிவு தெளிவில் சரியான விடை பிறக்கிறது. முழுமையான வெற்றியைப் பெற்றுக் கொள்கிறான். ஆன்மீக வாழ்வில், நம் அழைப்பை உணரும்போது விசுவாச ஓட்டத்தை தடை செய்யும் லௌகீக காரியங்களினின்றுநாம் நம்மை தப்பித்துக்கொள்வதற்கு நம் அறிவு தெளிவு நமக்கு உதவிச் செய்கிறது. இதற்கு, ஆவியின் கனியாகிய இச்சையடக்கத்தை (கலா. 5:23) நம்மில் அடித்தளமாகக் கொள்ள வேண்டும்.

உலகத்தைக் குறித்த நம்முடைய கண்ணோட்டம் தான் நமது மனது அல்லது அறிவுத் தெளிவை நிர்ணயிக்கிறது. அதன் மூலம் நம்மில் உருவாகும் மனோபாவங்கள், புதுக்கருத்துக்கள் இவைகள் தான் நம் செயலின் ஊக்க சக்தி. ஆபிரகாம் லோத்து சகோதரரின் மனோபாவங்கள் குறித்து தொடக்கநூல் 12 மற்றும் 13 - ம் அதிகாரங்களிலும், எபிரேயர் 11:8-16, பகுதிகளிலும் காணலாம். ஆபிரகாம் ஆண்டவரிலும், லோத்து லௌகீக காரியங்களிலும் கொண்டிருந்த மனோபாவங்கள் அவர்களின் அறிவுத் தெளிவை வெளிப்படுத்தினது. தானியேலின் வாழ்வியல் ஒழுக்கம் குறித்த மன தெளிவு எங்கும் தன்னைத் தெளிவுள்ளவனாகக் காட்டியது (தானியேல் புத்தகம்). யோசேப்பின் பாலியல் ஒழுக்கம் குறித்த அறிவுத் தெளிவு போத்திபாரின் வீட்டில் வெளிப்பட்டது (தொநூ. 39:7-9). அழைப்பில் தெளிவில்லாத பிலேயாம் தீர்க்கனின் ஊழியம் பாதிப்புக் கொண்டதாயிருந்தது. தெளிவு ஏற்பட்டபோது இஸ்ரவேலருக்கு ஆசீர்வாதமாயிருந்தது (எண்ணிக்கை நூல் 22-24) விசுவாச வாழ்க்கையில் பவுல் மிகுந்த தெளிவாயிருந்தார் (1 தீமோ. 1:12).

நமக்கு ஒழுக்கமுள்ள வாழ்வு மாத்திரம் போதாது. மாறாக உலக காரியங்களைக் குறித்த நம் கண்ணோட்டங்களினால் மனதிலும், அறிவிலும் தெளிவு எற்பட வேண்டும். அதாவது நம்முடைய மனோபாவங்களில் புதுமை ஏற்பட வேண்டும். சிறப்பாய் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வின் அழைப்பில் நம்முடைய அறிவுத் தெளிவை வெளிப்படுத்துவதில் நாம் கவனமாய் காணப்பட வேண்டும் (எபே. 4:23, ரோமர் 12:12).

### 2. கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருங்கள் (1 பேதுரு 1 : 14)

ஒரு குழந்தை தன் பெற்றோரை மகிழ்ச்சியாக்குவது தன்னுடைய கீழ்படிதலினாலேயே (நீதி. 10:1). சிலுவை வழி மீட்பினால் நாம் அவர் பிள்ளைகளாக மாறினபடியால் நாம் அவருக்குக் கீழ்படிய வேண்டும். உண்மையான மீட்பு கீழ்படிதலை மையமாகக் கொண்டுள்ளது (உரோ. 5-ம் 1பேது. 1:2). நாம் கிறிஸ்துவுக்குள் வருமுன் கீழ்படியாமையின் மக்களாயிருந்தோம் (எபே. 2:1-3). ஆனால் இப்பொழுதோ கீழ்படியும் மக்கள் இதற்கு இசைவாய் வாழ்வது தேவை. சாமுவேல் கீழ்படிதலுக்கு

எப்போதும் ஆயத்தமாயிருந்தார் (1 சாமு. 1:1-11). பேதுரு இயேசுவுக்குக் கீழ்படிந்தவர். எனவே அவர் கீழ்படிதலை வலியுறுத்தினார் (1பேதுரு 1:2, 22, 3:1-6, 4:7). நாம் கிறிஸ்துவுக்குள் வருமுன் வாழ்ந்த வாழ்க்கையைப் பின்பற்றாதிருப்பதும் கீழ்படிதலே (எபே. 2:1-3, 4:17-18, தீத்து 2:3). அழைப்பை உணராத, ஆன்மீக உணர்வில்லாத எந்த மனிதனும் உலக மோகங்களுக்கு அடிமையாயிருக்கிறான். (உதா:சிம்சோன்) (திப. 17:30, எபே, 4:17).

இஸ்ரவேலின் ஆண்டவரும், கிறிஸ்தவத் திருச்சபையும், அறம் சார்ந்த உயரிய வாழ்வுக்குச் சிறந்த அடையாளங்கள். ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள், உள்ளும் புறம்புமான வாழ்வில் அவருக்குக் கீழ்படிகிறவர்களாக வாழ வேண்டும். இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்த பின்னும் எகிப்தின் உணவை இச்சித்து மனதால் கீழ்படியாமையை வெளிப்படுத்தி மோசேக்கு எதிராக செயல்பட்டனர். அவர்களிலும், அவர்களைப் போலல்லாமல், ஆண்டவருக்குக் கீழ்படிந்த காலேப், யோசுவா போன்றவர்கள் கீழ்படிதலால் கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெற்றனர். புதிய இஸ்ரவேலராகிய நாமும் வனாந்தரமாகிய இவ்வுலகின் வாழ்வுகளின் மத்தியில் காலேப், யோசுவா போன்றோரின் கீழ்படிதலை மாதிரியாகக் கொள்வோம்.

### 3. தூய்மையுள்ளவர்களாயிருங்கள் (1 பேதுரு 1 : 15)

நாம் தூய்மையுடன் வாழ இரண்டு காரியங்கள் தேவை. ஒன்று, தூய்மையற்றதைக் களைய வேண்டும். மற்றொன்று தூய்மையானதைத் தரித்துக்கொள்ள வேண்டும் (எபே. 4:24, 1தெச. 4:7, தீத்து 2:11-12). நம் தூய்மை செயல்களே நாம் தூயவரின் மக்கள் என வேறுபடுத்திக் காட்டும் (தானியேல் 1:8-17). பேதுரு, மீன்பிடித் தொழிலினின்று, மனிதரைப் பிடிக்கும் பணிக்கு அழைக்கப்பட்டார் (மாற்கு 1:17). எனவே தன் அழைப்பை அதிகமாய் உணர்ந்தார் என்பதை அவர் எழுத்துக்கள் மெய்ப்பிக்கின்றது (1பேதுரு 1:15, 2:21, 3:9, 5:10). பேதுருவின் வாழ்விலும் நாம் அதைக் காண முடிகிறது.

உடல் தூய்மைக் குறித்துக் கவலைப்படும் நாம் உள்ளத்தின் தூய்மை குறித்தும் அக்கரை செலுத்த வேண்டும் (1கொரி. 3:16,17). பெற்றோரின் குணங்கள் பிள்ளைகளில் காணப்படுவதுபோல, கடவுளின் குணங்கள் அவர் மக்களிலும் காணப்பட வேண்டியது அவசியம். புற இனத்து மக்களின் கடவுள்கள் ஒழுக்கத்தில் தவறியவர்களாக காணப்பட்ட வேளையில் கடவுளின் தூய்மை குறித்து மோசே புகழ்ந்து பேசுகிறார் (விப. 15:11). ஆண்டவரின் தூய்மை குறித்து உணர்த்தும் பேதுரு அதற்கு இசைவாய் வாழவே நீங்கள் அழைக்கப்பட்டீர்கள் என சபைக்கு உணர்த்துகிறார் (1 பேது. 1:15).



இந்நற்செய்தியாகிய ஒன்றிப்பை எடுத்துரைக்க அவர்களுக்குப் போதித்தார். பவுல் கொரிந்து திருச்சபைக்கு எழுதும்போது இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாய் இருப்பதற்கு உங்களை அழைத்த ஆண்டவர் (1 கொரி. 1 : 9) என எழுதுகிறார். கடவுளால் படைக்கப்பட்ட மக்கள் அனைவரும் கிறிஸ்துடனே வேறுபாடுகளைக் களைந்து ஒன்றாய் வாழ உதவுவதே ஒன்றிப்பு அருட்பணி.

ஒன்றிப்பு அருட்பணியின் ஊடகமாக திருச்சபையினைக் கருதும் நிலையில், திருச்சபை அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஏற்புடைய வழிபாட்டு முறை, இறையியல் அடிப்படை, கோட்பாடுகள், ஆளுகை விதிமுறைகள் போன்றவற்றை ஏற்படுத்தி செயல்படுத்த வேண்டும். இந்த நிலையினை அடைய இழக்க கொடுப்பதும் ஏற்றுக் கொள்வதும் பொறுத்துக் கொள்வதும் இன்றியமையாதது. இதனால் உள்ளூர் திருச்சபைகள் ஒன்றாய் இணைக்கப்பட முடியும். மட்டுமல்லாது இயேசு கிறிஸ்துவின் எதிர்பார்ப்பான ஒரே மந்தை, ஒரே ஆயர் (யோ. 10 : 16) எனும் நிலை உருவாகிட அனைத்துலக திருச்சபைகளும், திருச்சபையினை ஊடகமாகவும், சிலுவையினைத் தளமாகவும், கிறிஸ்துவை மையமாகவும் கொண்டு வேறுபாடுகளைக் களைந்து ஒரே சிந்தையில் செயல்பட்ட ஒன்றிப்பு அருட்பணியினை நிறைவேற்ற வேண்டும். இத்தகைய திருப்பணியினை நிறைவேற்றிட இறைவன் அருள்புரிவாராக.

**மன்றாட்டு :** *கடவுளே, நம்பிக்கையின் ஆதாரமே, உம்மைப் போற்றுகிறோம். கிறிஸ்துவில் உம்முடைய இரட்சிப்பின் அருட்கொடைக்காய் நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். எங்கள் சகோதர சகோதரிகளோடும், அனைவரோடும் கிறிஸ்துவுக்குள் பெற்றுக்கொண்ட திருமுழுக்கின் வழியே, வாழ்வின் ஆதாரமும், வாழ்வு வழங்குபவருமான உமக்கு நன்றி கூறுகிறோம். எங்களுக்கும், எங்கள் திருச்சபைகளுக்கும், அத்துடன் முழுபடைப்புக்கும் புதுவாழ்வின் நம்பிக்கையைத் தந்திருப்பதற்காய் உமக்கு நன்றி கூறுகிறோம். நீர் எங்களை ஒன்றாய் இணைத்திருப்பதற்காய் நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். எங்கள் பிரிவினைகளை மன்னித்து, எங்கள் பணிகளில் அவைகளை மேற்கொள்ளும் ஆற்றலைத் தாரும். உயிருற்றெழும் நிலை வாழ்வுக்கான மகிழ்வில் தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே, ஆமென்.*

**திரு. ரமேஷ் D. தாஸ்**

**22-01-2012**

*பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு*

# ஒன்றிப்பு அருட்பணி

**ECUMENISM**

| | |
|---|---|
| 2 குறி. 30 : 13–22 | 1 கொரி. 1 : 10–8 |
| திபா. 122 | யோவா. 10 : 7–18 |

"....அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும் (யோ. 10 : 16)

ஒன்றிப்பு அருட்பணி இறைவனால் கொடுக்கப்பட்ட ஒன்று. இதற்காகவே கடவுள் திருச்சபைகளை நமக்குத் தந்திருக்கிறார். ஆனால் இன்றையத் திருச்சபை இந்த நோக்கத்தை விட்டு தங்களுக்குள்ளே பிரிவினைகளை உருவாக்கி பிரிந்திருக்கிறது. தென் இந்தியத் திருச்சபை உருவானபோது பல பிரிவினை கொண்ட திருச்சபைகள் ஒன்றாக இணைந்து ஒரே திருச்சபையாக உருவானது. ஆனால் இன்று திருச்சபைக்குள்ளேயே வேறுபாடுகளும் கட்சிப்பூசல்களும், இன வேறுபாடுகளும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இதன் விளைவாக ஒற்றுமை உடைபட்டுப்போகிறது. இச்சூழ்நிலையில் ஒன்றிப்பை உருவாக்க திருச்சபை எப்படி செயல்பட வேண்டும்? இயேசுக்கிறிஸ்துவின் தூரக் காட்சியாகிய ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் என்ற நிலை உருவாக நாம் (திருச்சபை) என்ன செய்ய வேண்டும்.

## 1. ஒன்றிப்பு அருட்பணியின் மையம் கிறிஸ்து :

(யோவா. 10 : 7-18)

ஒன்றாய் இணைவதற்கு மையம் ஒன்று தேவை. அந்த மையத்தைச் சார்ந்தே பிரிந்திருப்பவர்கள் ஒன்றாய் இணைய முடியும். யோவான் நற்செய்தியாளர் இயேசு கிறிஸ்துவை ஒன்றிப்பின் மையமாகக் குறிப்பிடுகிறார். ஒன்றிப்பின் மையமான இயேசு கிறிஸ்து ஓர் நல்ல ஆயராகவும், ஆடுகளுக்காகத் தம் உயிரையே கொடுக்கும் அளவிற்குச் செயல்படுகிறவர். அதாவது தனது நலனைக் காட்டிலும் ஆடுகளின் நலனில் அக்கரைக் கொண்டவர். அவைகள் இணைந்து வாழ வழிகாட்டுகிறவர். அவரது அருட்பணி தொழுவத்திலுள்ள ஆடுகளை மட்டும் பாதுகாப்பதல்ல. மாறாக தொழுவத்தில்லாத ஆடுகள் தொழுவினுள் வரும்போது தொழுவிலுள்ள ஆடுகள் ஏற்பதற்குத் தயங்கும். சில பிரச்சினைகள்



உருவாகும். இந்தச் சூழலில் நானே ஆடுகளுக்கு வாயில் என் வழியாய் நுழைபவர்களுக்கு ஆபத்தில்லை. தேவையான அனைத்து நன்மைகளும் கிடைக்கும் என்கிறார். (யோவா. 10 : 9).

இஸ்ரயேல் சமூகத்திலே யூதர்களுக்கும் புற இனத்து மக்களுக்கும் வேறுபாடுகள் காணப்பட்டது. தங்களுக்குள்ளே எந்த உறவையும் வைத்துக் கொள்ளாத ஒரு சூழல் காணப்பட்டது. இயேசு கிறிஸ்து இச்சூழலில் ஒன்றிப்பை வலியுறுத்துகிறார். தம் வாழ்விலும் பணியிலும் இதை அவர் செயல்படுத்தினார். அனைவரும் ஒன்றிப்புடன் வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். மக்களெல்லாரும் ஒன்றாய் வாழ வேண்டும் என கடவுளிடம் மன்றாடினார் (யோவ. 17 : 21) எல்லாரும் ஒன்றாய் வாழ வேண்டும், நலமாய் வாழ வேண்டும் என்பதற்காக அவரது பிறப்பு முதல் இறப்பு வரை பணி செய்தார். சமூகத்தின் ஓரங்களில் வாழ்ந்த தொழு நோயாளிகள், பார்வையற்றோர், கேட்கும் திறன் இல்லாதவர், அங்கவினமுற்றோர் போன்றோரை அரவணைத்து விடுதலை கொடுத்துச் சமூகத்தில் இணைந்து வாழ வழி காட்டினார். தனது அருட்பணி அறிக்கையில் இதனை வெளிக்கொணர்ந்து, தானே ஒன்றிப்பு அருட்பணியின் மையம் என்பதை எடுத்துரைத்தார் (லூக். 4 : 18, 19)

இன்று திருச்சபை, தனிமனிதனிடையே உறவுகள் பிளவுபட்டு நிற்கின்றன. கோட்பாடுகள், கொள்கைகள், இறையியல் சிந்தனை போன்றவைகளின் வேறுபாடுகளினால் இந்தியத் திருச்சபைகளும், உலகத் திருச்சபைகளும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும். எல்லா திருச்சபைகளும் மக்களும் ஒன்றாய் இணைவதற்கு வாய்ப்புகளில்லை என்று எளிதாக கூறும் நாட்களில், ஒன்றாய் இணைந்து வாழ முடியும் என்பதே திருமறை வலியுறுத்தும் உண்மை. ஒன்றிப்பு அருட்பணியில் கிறிஸ்துவை மைய மாக்குவோம். கிறிஸ்துவை நம் வாழ்வின் மூலம் வெளிப்படுத்தி அனைவரும் ஒன்றாகிட உழைப்போம். கிறிஸ்து இல்லாத ஒன்றிப்பு நிலைத்து நிற்காது. காரணம் இப்பணிக்கு வாயில் அவரே, மாதிரியும் அவரே.

## 2. ஒன்றிப்பு அருட்பணியின் அடிப்படை சிலுவை :

(1 கொரி. 10 -18)

கொரிந்து திருச்சபையில் கிரேக்கர்களும், ரோமர்களும் அடிமைகளும், புற இனத்தவர்களும் காணப்பட்டனர். இந்த வேறுபாடுகள் தவிர அன்று திருச்சபை தலைவர்களைச் சார்ந்த வேறுபாடுகளும் காணப்பட்டது. பவுலைச் சேர்ந்தவர்கள், அப்பல்லோவைச் சேர்ந்தவர்கள், கேபாவைச் சேர்ந்தவர்கள், கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்ற வேறுபாடுகள் காணப்பட்டது. மேலும் கிரேக்கர்கள் ஞானத்தை மேன்மையாகக் கொண்டு

அதன் மூலமாக தங்களை வேறுபடுத்திக் கொண்டனர். பவுலினுடைய போதனைக்கு மாறாக பல போதனைகளும் கொரிந்துவில் பரவியிருந்தது. இப்படிப்பட்ட வேறுபாடுகள் மேலோங்கிய சூழலில் பவுல் கொரிந்து திருச்சபையினரிடம் ஒத்த கருத்துடையவர்களாயிருங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம், ஒரே மனமும், ஒரே நோக்கமும் கொண்டிருங்கள். (1 கொரி. 1 : 10) என வலியுறுத்துகிறார். தலைவர்கள் பெயரிலா திருமுழுக்கு பெற்றீர்கள் எனக்கேட்ட பவுல் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெற்றவர்கள் கிறிஸ்துவோடு ஒன்றாக வேண்டும். இவ்வொன்றிப்புக்கு அடிப்படை கிறிஸ்துவின் சிலுவை. சிலுவை பெருளற்றதாய் போகாதபடி ஒன்றாய் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

கிறிஸ்துவின் சிலுவை ஒப்புரவாக்குதலின் மையம். பகையைச் சிலுவையில் கொன்று இரு பிரிவினரையும் ஒன்றாக்கினார். ஆகவே சிலுவை ஒன்றிப்பின் தளமாக உள்ளது. இந்தச் சிலுவையில் மன்னிப்பு, ஏற்றுக் கொள்ளுதல், அரவணைப்பு, துன்பம், சகித்தல் போன்ற நற்குணங்கள் அடங்கியுள்ளது. சிலுவையைத் தளமாகக் கொண்டு செயல்படுகிறவர்கள். துன்பங்களைத் தாண்டி மகிழ்வாய் வாழ முடியும். ஒன்றிப்பு அருட்பணியில் துன்பங்கள் வருவது இயல்பு. ஆனால் சிலுவை அதனை மேற்கொள்ளும் ஆற்றலைத் தருகிறது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின்போது எருசலேம் தேவாலயத்தில் அமைப்பு, அதிகாரம் கடவுளை வழிபடும் மக்களிடையே தாங்களாகவே உருவாக்கிக்கொண்ட வேறுபாடுகள் சிலுவையின் வழியாக நீக்கப்பட்டு அங்கே ஒன்றிப்பு உருவாக்கப்பட்டது. (மத். 27 : 51).

இன்றும் சிலுவை, திருச்சபைகளுக்குள்ளேயும், வெளியேயும் ஆழமாக வேரூன்றியிருக்கும் வேறுபாடுகளை வேரறுத்து ஒன்றிப்பை ஓங்கச் செய்யும் சிறந்த அடையாளமாக காணப்படுகிறது. திருச்சபை சிலுவை சுமக்காத கிறிஸ்துவை உலகிற்கு காட்டாமல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை உலகிற்கு வெளிப்படுத்தி (1 கொரி. 1 : 23) சிலுவை வாயிலாக கிறிஸ்துவில் அனைவரையும் ஒன்றிணைக்க உழைக்க வேண்டும்.

## 3. ஒன்றிப்பு அருட்பணியின் ஊடகம் திருச்சபை

(யோ. 10 : 7-18)

இயேசு கிறிஸ்து தமது திருப்பணியின் ஆரம்பத்தில் தம்முடைய திருப்பணிக்கு உதவியாக பனிரெண்டு சீடர்களைத் தெரிந்தெடுத்து இறையரசின் நற்செய்தியினை அறிவிக்கும் பணியில் ஈடுபடுத்தினார். வெவ்வேறு சமூக சூழலில் வாழ்ந்து வெவ்வேறு பணிகளைச் செய்த சீடர்களைத் தம் ஒன்றிப்பு அருட்பணிக்கு உறுதுணையாக தெரிந்தெடுத்தார். வேற்றுமைகளைக் களைந்து உலகமனைத்திற்கும்



தூய்மை என்பது பாலியல் காரியங்களில் மாத்திரமல்ல வாழ்வின் அனைத்து நடக்கைகளிலும், பிற மனிதரோடுள்ள உறவுகள் என்று எல்லாவற்றிலும் நாம் தூய நடக்கையுள்ளவர்களாய் காணப்பட வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதியாக பணியாற்றின ஆபிரகாம் லிங்கன், ஜார்ஜ் B. மாக்ளின் என இராணுவ அதிகாரிக்கு மேஜர் ஜெனரல் என்று பதவி உயர்வைக் கொடுத்தார். ஐக்கிய மாநிலங்களின் இராணுவத்தின் கமாண்டர் ஆக்கினார். பதவி உயர்வு பெற்ற அன்று ஜார்ஜ் அவர்கள் தன் மனைவிக்கு எழுதின கடிதத்தில் இங்ஙனம் குறிப்பிட்டார். எனக்கு நேற்றைய தினத்திலிருந்து இன்றைய தினத்திற்கு எந்த வித்தியாசத்தையும் காணவில்லை. என்னுடைய புதிய பதவிக்கான இராணுவ உடையை நான் அணியவுமில்லை. ஆனால் ஜனாதிபதி எனக்கு அனுப்பின பதவி உயர்வுக்கான உத்தரவுக் கடிதம் என் மேஜையின் மேல் இருப்பதைக் காணும்போது ஐக்கிய மாநிலங்களின் இராணுவ கமாண்டர் நான் தான் என்பது எனக்குத் தெரியும். என்று எழுதினார். தான் புதிய பணிக்காக அழைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார் என்பதினால் அதற்கு ஏற்றபடியான நடக்கையுள்ளவராயிருந்தார்.

அன்பான இறைமக்களே ! பாலை ஊற்றுவதற்குத் தூய்மையான பாத்திரங்கள் தேவை. ஆண்டவரின் பாத்திரங்களாகிய நாம் அறிவு தெளிவுள்ளவர்களாய், கீழ்படிதலுள்ளவர்களாய், நடத்தைகளில் தூய்மையுடையவர்களாய், ஆண்டவரின் அழைப்பிற்கு இசைந்து வாழ்ந்து நம் ஆண்டவரை மகிமைப்படுத்துவோம்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, எங்கள் இருதயங்களை உமக்கு நேராக்கி, எங்கள் உள்ளத்தை வழிநடத்தி, எங்கள் எண்ணங்களை நிரப்பி, எங்கள் விருப்பங்களைக் கட்டுப்படுத்துவீராக. நாங்கள் முழுவதும் உம்முடையவர்களாய், எங்களை முழுவதும் உம்மிடத்தில் அர்ப்பணிக்கின்றோம். உம்முடைய அழைப்பிற்கும் பாத்திரமாய் வாழ எங்களுக்கு உதவிபுரியும். தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து, உம்முடன் ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியே, ஆமென்.*

அருள்திரு. **P. சேம் இம்மானுவேல் தோமஸ்**

| 05-02-2012 | *பக்திமுயற்சி சங்க ஞாயிறு* |
|---|---|

## இறைப்பற்றில் வளரும் இளையோர்

1 சாமு. 24 : 1 – 22 1 தீமோத். 4 : 7 – 16
திபா 67 லூக். 9 : 57 –62

"சாதனைகளைச் சாதிக்கும் இளமை பருவத்தினர் இன்று பொது சிந்தனை குறைந்து தன்னலத்தோடு செயல்படுகின்றனர். தனது அறிவு கூர்மையாலும் ஆற்றலாலும் வன்முறைகளையும் தீய செயல்களையும் அரங்கேற்றுகிறார்கள். உலக மயம், மக்கள் தொகைபெருக்கம், சுற்றுச் சூழல் சீர்கேடு போன்ற முக்கிய பிரச்சினைகள் உலகம் சார்ந்து இருக்கும் போது நான் எனது என்ற குறுகிய நிலையில் சிந்திக்கும் நிலையில் சென்றுக் கொண்டிருக்கிறது இளையோர் சமூகம். இயேசுவின் இறைபணியில் சந்தித்த இளையோர்களை லூக்கா ஆக்கியோன் தெளிவாக விளக்குகிறார்.

### 1. ஆதாயம் தேடிய இளைஞர் :

சீடர்களோடு பேசிக்கொண்டிருந்த இயேசு எருசலேமுக்குச் செல்ல இருக்கும் போது அங்குச் செல்வதால் பிரச்சனை என உணர்ந்து ஒரு கிராமத்திற்கு (பெயர் குறிப்பிடப்படவில்லை) செல்கிறார். இங்கு இயேசுவைச் சந்திக்கும் ஒருவர் இயேசுவை நோக்கி ஆண்டவரே, நீர் எங்கே சென்றாலும் உம்மை பின்பற்றுவேன் என்கிறார். இயேசு பதிலுரையாக நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப்பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானுட மகனுக்குத் தலைசாய்க்க இடமில்லை என்கிறார்.

பெரும்பாலும் பாலஸ்தீன யூதர்கள் ஏழைகள், வீடு இல்லாதவர்கள். இவருடைய மனநிலை இயேசுவைப் பின் பற்றினால் இயேசுவுக்குக் கிடைக்கும் எல்லா வரவேற்பும், இருப்பிடம் கிடைக்கும் என்ற தன்நல நோக்கோடு கேட்டிருக்க கூடும். இயேசு கூறிய பதில் அந்த நபரின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யப்படவில்லை. அந்த நபர் இயேசுவின் பதிலைக் கேட்டு அவரைப் பின் தொடர விரும்பவில்லை. அந்த நபரைக் குறித்து அதன் பின் குறிப்பிட படவில்லை.

இன்று நுகர்வு கலாச்சாரத்தில் மூழ்கி இருக்கும் இளம் சமூகம் தன்னல ஆதாய நோக்கோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இளைஞர்கள் ஆதாய நோக்கோடு அநீதி, அநியாயத்தை நியாயப்படுத்தும் நிலைக்கு மாறிவிட்டனர். ஆதாயத்திற்காக எதையும் செய்ய துணிந்துவிட்டனர். நூதன தொழிற்நுட்ப முறையில் மோசடிகள் செய்ய



குடிமகனும் நல்லாசிரியராக, நல்லதோர் போர் வீரனாக, நல்ல விளையாட்டு வீரனாக ஒப்படைப்புள்ளவனாக வாழவேண்டும் என்கிறார். விதிமுறைகளைக் கடைபிடித்து நாட்டின் சட்டதிட்டங்களைக் கை கொள்ளுகிறவர்களாய் வெற்றியுள்ள வாழ்வு வாழ்கிறவராக செயல்படவேண்டும் என குறிப்பிடுகிறார் (தீமோ. 2 : 4). நாமும் நமது கடமைகளைக் கூடியவரைச் செய்து நிறைவேற்றுவோம்.

### 2. நன்மையைத் தேடுங்கள் : (ஆமோஸ் 5 : 14)

மக்களால் தெரிந்தெடுக்கப்படும் தலைவர்கள் நம்மை ஆளும் சூழலில் அனைத்து ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் ஆதாரமாய் இருப்பவர் இறைவன் என்பதையும் மக்கள் உணரவேண்டும். மக்கள் தலைவர்கள் நீதி, தேர்மை, நியாயமான முறையில் மக்களை ஆளுகை செய்தால் இறையாளுகையாகக் கருதபடுகிறது. இறையாளுகையில் பணபலம், ஆள்பலம், பழிவாங்குதல், கையூட்டுப் பெறுதல் பாரபட்சத்திற்கு இடமில்லை. மக்கள் நலன் மட்டுமே மையம் பெறும். ஆனால் இன்று நம் சூழலில் ஆளுகை செய்கிறவர்களும், ஆளப்படுகிறவர்களும், பணத்தின் மீது ஆசை கொண்டு தவறான முறையில் செயல்படுகின்றனர். இதனால் நீதி, நியாயம் பெற முடியவில்லை. ஆமோஸ் தீர்க்கன் சொன்னபடி தரித்திரனை மிதித்து, நியாயத்தை எட்டியாக மாற்றி நீதியைத் தரையிலே விழப்பண்ணும் அவலநிலை. நீதிமானை ஒடுக்கி பரிதானம் வாங்கி ஏழைகளின் நியாயத்தைப் புரட்டும் செயல்கள் வளர்ந்து வருகின்றன. இத்தகைய நிலைக்கு மக்களின் பொறுப்பற்ற செயல்கள் காரணங்களாகும். இறைவன் மீது கொள்ள வேண்டிய பற்று, நம்பிக்கை, அன்பு, இறையுறவு இவைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. மனித நேயம், பண்பாடு, ஒருவரை ஒருவர் ஏற்றுகொள்ளுதல், இணைந்து வாழ்தல் போன்றவை முற்றிலும் இல்லாமல் போகின்றது. பரிதானம் வாங்குவதும், கொடுப்பதும் தவறு என உணர்ந்து தூய்மையுடன் வாழ வேண்டும். இறைவன் ஆமோஸிடம் ஒலிமுக வாசலில் நீதியை நிலைபடுத்த அழைப்பு விடுக்கிறார். அநியாயத்தை விட்டுத் திரும்பினால் நன்மையை தேடினால் பிழைப்பீர்கள் என்கிறார். நன்மையைத் தேடுவோம், பெறுவோம்.

### 3. நலம் நாடுங்கள் (திபா. 146 : 5)

நம்மை ஆள்பவர்களை நாமே தெரிந்தெடுக்கும் உரிமையினைக் குடியரசு என்ற அமைப்பில் நாம் பெற்றுள்ளோம். நம்மால் தெரிந்து கொள்ளப்படுவோரின் நற்பண்புகளைப் பொறுத்து நல்லாட்சி நடைபெறும். நாடும் நலம் பெறும். எனவே பொறுப்புள்ள கிறிஸ்தவர்களாக, நேர்மையானவர்கள், இரக்கமுள்ளவர்கள், மக்களுக்குப் பணிபுரியும் ஒப்படைப்புள்ளவர்கள், நீதியின் மேல் விருப்புடையவர்களை அடையாளம் கண்டு தேர்வு செய்யும்படி நம்மை அர்ப்பணிக்க வேண்டும். தேர்தல் காலங்களில் நம் வாக்குரிமையைப் பயன்படுத்த தவறக்கூடாது.

பெலிஸ்தியர் இஸ்ரயேலரைத் தொடர்ந்து அச்சுறுத்திக்கொண்டிருந்தனர். இஸ்ரயேலரையும், இஸ்ரயேல் மக்களையும் கேலி செய்கின்றான் பெலிஸ்திய பிரதிநிதி கோலியாத். இஸ்ரயேலருக்கு அச்சுறுத்தலாகவும் எதிர்ப்பாளராகவும் இருந்த கோலியாத்தை எதிர்த்து போரிட தாவீது தயாராகின்றார். சவுல் அரசன் தாவீதுக்கு ஆசி வழங்கி கடவுள் உன்னோடு இருப்பார் புறப்பட்டுபோ என இறைவனின் பெயரால் போர்களத்திற்கு அனுப்பி வைக்கிறார். கோலியாத்தை எதிர்த்து போரிடவே தாவீது வெற்றியடைந்தார். இந்நன்னாளில் நாம் வாழும் சமூகம் பல்வேறு தீமைகளால் அழிந்து கொண்டிருக்கின்றன. தீமைகள் நியாயப்படுத்தப்படுகின்றன. தாவீதைப் போல கடவுள் நம்முடனே கூட இருக்க தேவையான கிறிஸ்தவ பண்புகளோடு வாழ்ந்து தீமைகளை எதிர்த்து போராட வேண்டும். அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியை உண்மையாய் செலுத்த வேண்டும். இறைவன் தந்துள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் உண்மையாய் இருக்கவேண்டும்.

நாம் நம்முடைய நாட்டிற்கு நிறைவேற்ற வேண்டிய நமது கடமைகளை நிறைவேற்றுவோம், நன்மையைத் தேடுவோம்; நலம் நாடுவோம். பொறுப்புள்ள குடிமக்களாய் வாழுவோம்.

**மன்றாட்டு :** *ஆண்டவரே, உம்முடைய பராமரிப்பில் எங்கள் நாட்டை காப்பீராக. எங்கள் நாட்டின் தலைவர்களை ஆசீர்வதிப்பீராக. நாங்கள் எங்களுக்குள் சமாதானமாயிருக்கவும், உலகின் மக்களினங்களுக்கு ஆசீர்வாதமான மக்களாகவும் வாழ அருள்புரியும். நம்பிக்கைக்குரிய தலைவர்களை நாங்கள் தேர்ந்தெடுக்கவும், நாட்டு முன்னேற்றத்திற்காய் ஞானமுள்ள முடிவுகள் மேற்கொள்ளப்பட எங்கள் பங்களிப்பை ஆற்றவும், அதன் வழியே உமக்கு நாங்கள் உண்மையுள்ள மக்களாய், உம் தூய பெயருக்கு புகழ்ச்சியாய் வாழவும் உதவிசெய்யும். தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து, உம்முடன் ஆளுகை புரிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியே, ஆமென்.*

**திரு. T. S. ஏசையன்**



பயமனைத்தையும் அகற்றினார் (36 : 4) என்கிறார். அவ்வாறே இயேசுவின் பிறப்பிலும் (லுக். 1 : 30, 2 : 9) அவரது உயிர்ப்பிலும் (மாற். 16 : 6) பயம் அகற்றப்பட்டது. சீடர்களின் பயத்தையும் அகற்றினார். (மத். 14 : 27) அதற்கு மேலாக உங்கள் உள்ளம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக (யோ. 14 : 27) என்று கூறி ஆற்றல் அருளினார். பயமகற்றும் ஆண்டவரைப் பற்றிக் கொண்டு வாழ்வோமாக.

## 2. சகாயம் அருள்பவர் (உதவியருள்பவர்)

துன்பச் சூழலில், தனித்துவிடப்பட்டிருக்கும் நேரத்தில் உதவிக்காக (சகாயம்) ஏங்கி நிற்பதுண்டு. இத்தகு நேரத்தில் கடவுள் தம்முடைய பிள்ளைகளுக்கு உதவியருள்வதாக வாக்கு அருளியுள்ளார். திருப்பாடகரும் தம்முடைய நெருக்கடியான காலங்களில் கடவுள் தமக்கு உதவியருள்பவராக இருக்கிறார் என்று குறிப்பிடுகிறார் (27 : 9, 30 : 9, 54 : 4). எனினும் மனிதருடைய உதவி வீணானது என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார் (60 : 11, 108 : 12). கடவுளுடைய சகாயம் ஒருவரைவிட்டு நீங்கிப்போகும்போது அல்லது நெருக்கடியான காலத்தில் கடவுள் அவருக்குச் சகாயம் செய்யாவிடில் அந்த நபர் பயங்கரமான நெருக்கடிக்கும் வேதனைக்கும் உள்ளாவார். இதனை யோபு பக்தர் தம்முடைய வாழ்வில் கடவுளுடைய சகாயம் தம்மைவிட்டு நீங்கிப்போனதாகப் புலம்புகிறார் (யோபு 6 : 13). இந்த உலக வாழ்வில் கடவுள் நமக்குச் சகாயராய் இருக்கும்போது நாமும் புது பெலனடைந்து முன்னேறிச் செல்ல முடியும். எபிரேயர் திருமுகத்தின் ஆக்கியோன் ஆண்டவர் நமக்குச் சகாயராயிருக்கிறபடியால் மனிதன் எனக்கு என்ன செய்வான் எனத் தைரியமாக முழங்கலாம் என குறிப்பிடுகிறார் (எபி. 13 : 6). நாமும் சகாயராகிய ஆண்டவரின் கரம்பற்றி முன்னேறுவோம்.

## 3. வலக்கரத்தால் தாங்குபவர்:

கடவுள் தம் மக்களைக் கரம் நீட்டித் தாங்குகிறார் என்கின்ற செய்தி அவருடைய மக்கள் அனைவருக்கும் ஆறுதலான செய்தியாகும். கடவுளுடைய கரத்தின் ஆற்றலைத் திருமறைத் தெளிவாகப் போதிக்கிறது. கடவுளின் கரம் அனைத்துப் படைப்புகளுக்கும் ஆதாரம் எனத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார்(19 : 1, 95 : 5). இந்தக் கரத்தின் ஆற்றலால் இஸ்ரயேலர் விடுதலை பெற்றனர். (இச. 4 : 35, 5 : 15) அவரது கரம் தம் பிள்ளைகளைத் தாங்குகின்றது (தி.பா. 18 : 5). தொடுதல் என்பது தொடர்பில் மிக முக்கியமான பண்பு ஆகும். அதிலும் நமது ஆண்டவருடைய தொடுதல் மனிதரை உயர்வுக்குள்ளாக வழி நடத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் குணமாக்குதலின் தொடுதல் (Healing Touch), பார்வையளிக்கும் தொடுதல் (Illuminating touch), விடுவிக்கும் தொடுதல் (Liberating Touch) என அவரது தொடுதல் ஒவ்வொருவருக்கும் புது வாழ்வைத் தந்தது. பேதுரு கடலில் அமிழ்ந்து போகும்போது தாங்கித் தூக்கியதுபோன்று ஆண்டவரின் கரம் வாழ்வின் எல்லா எதிரிடையான ஆழங்களிலும் வீழ்ந்து போகாமல் தூக்கி நிறுத்துவதாக அமைந்துள்ளது. இப்புதிய ஆண்டின் தொடக்க நாட்களில் வைக்கப்பட்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் அவரது கரத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறிச்செல்வோமாக.

**அருள்திரு. பிரைட் சாலமோன்**

கிறிஸ்துவின் ஆளுமை திருவருட்சாதனங்களில் வெளிப்பட்டது.

அ) ஏற்றுக்கொள்வதில் வெளிப்பட்டது: திருமுழுக்கில் பாவிகளோடு தன்னை இணைத்துக் கொண்டார் (மத். 3 : 14,15)

ஆ) தாழ்மையில் வெளிப்பட்டது : திருவிருந்தில் சீடர்களின் கால்களைக் கழுவிய நிகழ்வு (யோவான் 13 : 4, 5)

**2. ஆற்றலை வெளிப்படுத்தியது** (ஏசாயா 41 : 4)

"ஆண்டவராகிய நானே முதலானவர்! முடிவானவற்றுடன் இருக்கப் போவதும் நானே!"

இறைவனின் ஆற்றலைப் படைப்பின் தொடக்கத்தில் காணலாம். இல்லாமையில் இருப்பதை படைத்தவர். மக்களின் கூக்குரலைச் செவிமடுத்து கேட்டவர் மாந்தர்க்குப் புதுவாழ்வை அருள தனித்தன்மை பொருந்திய கிறிஸ்துவில் வெளிப்பட்டது. கிறிஸ்துவின் உயர்தனித்தன்மை பிறப்பிலிருந்து கல்வாரி வரையிலும் பிரதிபலித்தது.

**அ) அருஞ்செயல்களில் ஆற்றல் வெளிப்பட்டது**

இயற்கையின் மீது ஆற்றல் (மாற். 4 : 39)

தீய ஆவியின் மீது ஆற்றல் (மாற். 5 : 13)

உடல்நலமற்றவர்கள் மீது ஆற்றல் (யோவா. 5 : 8)

உயிர்மீது ஆற்றல் (யோவா. 11 : 44)

**ஆ) வார்த்தையில் ஆற்றல் வெளிப்பட்டது**

மலைபொழிவில் வாழ்வின் அறநெறி சார்ந்த போதனைகளைப் போதித்தார் (மத். 5 : 8)

நிலைவாழ்வைக் குறித்துப் போதித்தார் (லூக். 10 : 37)

என்இல்லம் இறைவேண்டலின் வீடு என்று ஆலய தூய்மையைப் போதித்தார் (மாற். 11 : 17)

சோதனைக்காரனை வார்த்தையினால் மேற்கொண்டார் (மத். 4 : 10)

3) நிலைவாழ்வை வெளிப்படுத்தியது (திருவெளி. 5 : 9)

"உமது இரத்தத்தால் . . . மக்களைக் கடவுளுக்கென்று விலைகொடுத்து மீட்டுக்கொண்டார்."

கிறிஸ்துவின் வாழ்வு, பாடு, மரணம், உயிர்தெழுதல் அழிவில்லா



நிலைவாழ்வை மானிடர்க்குத் தந்தது என தூய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்துவாலேயல்லாமல் ஒருவன் மறுமைக்குள் பிரவேசிக்க இயலாது யோவா. 14 : 6-ல் என் வழியாயன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை என்கிறார்.

**அ) இம்மைவாழ்வின் நிலைவாழ்வு** : கிறிஸ்து இறைவனோடு ஒன்றித்திருந்தார் ஆகவே இவ்வுலக பாடுகள் அவமானகள் சிலுவைமரணம் இவைகள் இம்மைவாழ்வில் நிலைவாழ்வைக் கற்றுத்தந்தது. தூயபவுலடிகவாரும் கிறிஸ்துவில் இணைந்தபோது (உரோ. 8 : 35, 36) "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது?" . . . என்கிறார்.

**ஆ) மறுமைவாழ்வின் நிலைவாழ்வு** : நிலைவாழ்வை அருள பூவுலகில் மானிடரான கிறிஸ்து நடுதீர்ப்பில் நியாயாசனத்தில் அமர்ந்து நியாயந்தீர்ப்பார் (மத். 25 : 31-46). எனவே பூவுலகில் நாம்செய்யும் நற்செயல் மறுமைவாழ்வின் நிறைவுக்கு நம்மை அழைத்துச் செல்லுகிறது.

கிறிஸ்துவின் உயர்தனித்தன்மை பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுக் கிறிஸ்துவின் பிறப்பு வாழ்வு மரணம் உயிர்த்தெழுதலில் முழுமையாகி மானுடர்க்குப் புதுவாழ்வைத் தந்து கொண்டிருக்கிறது.

**மன்றாட்டு :** *வல்லவரும் நித்தியருமான கடவுளே, உம் மைந்தர் இயேசுகிறிஸ்துவில் எல்லாவற்றையும் மீண்டும் முன்போலாக்குவது உமது திருவுளமாயிருக்கிறது. பூவுலகின் அனைத்து மக்களும் பாவ அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று, உம்முடன் புதிய கூட்டுறவிலும், ஒருவருக்கொருவரும் ஒன்றாய் கொண்டுவரப்பட அருள்புரிவீராக. தூய ஆவியாருடன், ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகைபுரியும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியே, ஆமென்.*

**அருள்திரு. G. சதிலால் விஜின்**

**01-02-2012**

*அருணோதயத் தொழுகை*

## கரம்பிடித்துத் தாங்கும்கடவுள்

தி..ப. ஏசா. 41 : 1–10

"என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன்" (ஏசா. 41 : 10)

புதிய ஆண்டின் இரண்டாவது மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் இவ்வேளை தம்முடைய நீதியின் வலது கரத்தினால் தாங்குவேன் என்று இஸ்ரயேலருக்கு வாக்களித்த கடவுள் ஒவ்வொருவருக்கும் அவ்வாறே வாக்கருளித் தாங்குகிறார். வாழ்வில் எதிர்பாராத ஏமாற்றங்கள் நிறைந்த அனுபவங்கள் எதிரிட்டு வரும்போது ஏற்படுகின்ற விரக்தியான நிலையில் யாராவது ஆறுதலாக இருப்பார்களா? என்ற ஏக்கத்தோடு பயணிப்பதுண்டு. அவ்வாறே கடந்த ஆண்டின் அனுபவங்களை எண்ணிச் சோர்புறாமல் வலக்கரம் தந்து தாங்கும் தயாபரனைப் பற்றிக் கொண்டு முன்னேறிச்செல்ல ஒவ்வொருவரும் அழைக்கப்படுகிறோம். இஸ்ரயேலரும் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட போர் அபாயங்கள், சிறையிருப்புச் சூழ்நிலைகள் இவற்றால் சோர்புற்றிருந்தனர். அவர்களது வாழ்வும் பயங்கரமான அழிவுகளும் அடிமைத்தன அவலங்களும் நிறைந்த வாழ்வாகவே அமைந்திருந்தது. இதனால் விரக்தியோடிருந்த இம்மக்களைப் பயப்பட வேண்டாம் என்று கூறி திடப்படுத்தி தமது கரத்தினால் தாங்குவேன் என கடவுள் தேற்றுகிறார். புதிய ஆண்டில் பயத்தோடும், நடுக்கத்தோடும் இருக்கும் அனைவரையும் பயம் அகற்றி, புது பெலன் தந்து வலக்கரத்தால் தாங்கி வழி நடத்துகிறார் நமது கடவுள். அவர் அருளும் ஆதரவினைத் தொடர்ந்து தியானிப்போமாக.

### 1. பயம் அகற்றுபவர்

வாழ்க்கையின் நிம்மதியானப் பிரயாணத்துக்குப் பயம் ஒரு பெரிய எதிரியாகும். அடுத்த நிமிடம், அடுத்த நாள் என்ன நடக்குமோ என்ற ஏக்கம், பயம் இவற்றால் பலர் சோர்புற்று விடுவதுண்டு. அப்படிப் புலம்புவோரது பயமகற்றிப் புது நம்பிக்கையருள்கிறார் கடவுள். இஸ்ரயேலரும் பல்வேறு வேதனைகளினால் கலக்கத்தோடு வாழ்ந்த வேளை கடவுள் பயப்படாதேயுங்கள் என்று கூறி தேற்றினார். மானிட வாழ்வில் ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு நேராக அடியெடுத்து வைக்கும்போது ஒருவித பயம் கலந்த சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. அப்பேர்பட்ட சூழ்நிலையில் மானுடரின் பயம் அகற்றி ஆற்றல்படுத்துவர் கடவுள் என திருமறை உறுதியுடன் எடுத்தியம்புகிறது. கடவுள் ஆபிரகாமை அழைத்து ஒரு புது வாழ்வுக்கு வழி நடத்தும்போது பயப்படாதே என்று சொல்லித் தேற்றினார் (தொ. நூ. 15 : 1). மேலும் ஈசாக்கு (தொ. நூ. 46 : 3) யோசுவா இவ்வாறு பக்தர்களின் பயமகற்றி ஆற்றல் படுத்தினார். திருப்பாடகர், ஆண்டவர் தமது



**29-01-2012**

*பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு*

## கிறிஸ்துவின் தனித்துவம்

**SUPREMACY OF CHRIST**

ஏசாயா 41 : 1–4 திவெளி. 5 : 1 – 14

தி. பா. 110 யோவான் 1 : 29 – 34

"இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" (யோவா. 1 : 29)

அண்டசராசரங்களைப் படைத்த இறைவன் எல்லாவற்றிற்கும் மகுடமாக இறைச்சாயலில் மனிதனைப் படைத்தார். மனிதன் இறைவனோடும், இறைவன் மனிதனோடும் ஒன்றித்துவாழவேண்டும் என்பது இறைவன் திட்டம். மனிதனோ கீழ்படியாமையால் வீழ்ந்துவிட்டான் பாவம் மானுடத்தைப் பற்றிக்கொண்டது. படைப்பை மீட்க வார்த்தையான இறைவன் மனிதனானார். கடவுள் கிறிஸ்துவில் ஆகவேதான் முழுக்குமுனிவர் யோவான் கடவுளின் ஆட்டுக்குட்டி உலகின் பாவத்தைப் போக்குபவர் என்றார். கிறிஸ்துவின் தனித்தன்மையைத் திருமறை பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்துகிறது.

### 1. ஆளுமையை வெளிப்படுத்தியது (யோவான் 1 : 30)

"எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம்பெற்றவர்; ஏனெனில் எனக்கு முன்பே இருந்தவர்" . . .

முழுக்குமுனிவர் யோவான், என்னைவிட முன்னிடம்பெற்ற வாக்கு மனுவுரு எடுத்தது என்கிறார். கடவுள் கிறிஸ்துவில் வெளிப்பட்டார் என்பது அவரது ஆளுமை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் தனித்தன்மை என்பது கடவுளின் தனித்தன்மை. ஆகவேதான் (யோவான் 14 : 9)-ல் என்னைக் காண்பது தந்தையைக் காண்பதாகும் என்கிறார். மானிட வாழ்வு தரமிழந்து தீமையைப்பற்றிக் கொண்டு தடம்மாறி சென்றபோது நீதிதலைவர்கள், இறைவாக்கினர்கள் கடவுளின் தனித்தன்மையை மானுடத்திற்குச் சுட்டிக்காட்டி மீட்பின் பணிக்குப் பாலமானார்கள். இதனடிப்படையில் மெசியாவின் ஆளுமை இவ்வுலகில் உதயமாகும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே தோன்றியது (யோவான் 4 : 25) பழைய ஏற்பாட்டில் கடவுளின் தனித்தன்மை மெசியாவில் வெளிப்படுமென்று ஏசாயா இறைவாக்கினர் (ஏசாயா 9 : 6)-ல் தெளிவுபடுத்துகிறார்.

**12-02-2012**

*(உயிர்த்தெழுந்த ஞாயிறுக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு)*

# கடவுளிடமிருந்தும் படைப்புகளிடமிருந்தும் தூரமாக்கும் பிழை

## SIN : ALIENATION FROM GOD AND CREATION

| | |
|---|---|
| தொ.நூல் 6:1-13 | உரோ. 3:21-30 |
| தி.பா. 51 | லூக். 15:1-7 |

"கடவுள் முன்னிலையில் மண்ணுலகு சீர்கெட்டிருந்தது." தொ.நூல். **6 : 11**

எஸ்கிமோக்கள் ஓநாயைப் பிடிக்க ஓர் எளிய முறையைப் பின்பற்றுவர். ஓநாய்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் அதன் கால் பதிந்த பாதைகளில் ஓர் கூரிய இருபுறமும் வெட்டுகிற கத்தியில் இரத்தத்தைப் பூசி நிறுத்தி வைப்பர். இரத்தத்தின் வாசனையை நுகரும் ஓநாய் வந்து இக்கத்தியைத் தனது நாவினால் நக்க தொடங்கும் சற்று நேரத்தில் அதன் நாக்கு அறுந்து அதனுடைய இரத்தம் வடியும் தனது இரத்தம் என்று அறியாத ஓநாய் அதனையும் சுவையாய் குடித்து வீழ்ந்து மரித்துவிடும். அதுபோல் பாவம் மனிதனைக் கடவுளிடமிருந்து தூரமாக்கி சிறிது சிறிதாக அழித்து விடும் தன்மையுடையது. மனிதரைப் படைத்த கடவுள் படைப்புகளை நல்தென்று பார்த்தார் (தொநூ. 1:31). மனிதர் கடவுளின் கட்டளையை மீறி தவறு இழைத்த போது கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே உறவில் தூரம் ஏற்பட்டது (தொநூ. 3:8). மனிதர் ஒருவருக்கொருவர் பழியைச் சுமத்திய போது மனிதருக்கும் மனிதருக்குமிடையே உறவில் தூரம் தோன்றியது (தொநூ. 3:12) மனிதர் இயற்கையின் மீது பழியைப் போட்டபோது மனிதருக்கும் படைப்புகளுக்கடையே தூரம் ஏற்பட்டது. (தொநூ. 3:13). பாவம் என்பது உறவு சீர்கெட்ட நிலை அல்லது குறைவுநிலை எனக் கருதலாம்.

கடவுளிடமிருந்தும், படைப்புகளிடமிருந்தும் தூரமாக்கும் பிழைகள் என்ன?

### 1. நீதி இல்லாமை : (தொநூ. 6:11)

நோவாவின் நாட்களில் வாழ்ந்த மானிடர் வன்முறை, ஒழுக்கக்கேடு இவைகளைச் செய்து தீச்செயல்களுடன் வாழ்ந்தனர் மானிடரில் நீதி இல்லாமையால் கடவுள் மண்ணுலகுடன் மானிடரை அழிக்க விரும்பினார் (தொநூ. 6:13). சமுதாய கூட்டு வாழ்வில் நெறிமுறைகளைக் கடைபிடித்தல் கடவுளின் நீதியைச் செயல்படுத்துவதாகும் (இச. 33:21). கடவுளுக்கும் மானிடருக்கும் இருக்க வேண்டிய தொடர்புக்கு நீதியே அடிப்படையானது.



முற்படுகின்றனர். சமீபத்தில் சென்னையில் இரு பொறியியல் பட்டதாரிகள் ஒரு குழந்தையைக் கடத்தி பணம் பெற விரும்பிச் செயல்பட்டதால் காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட விபரம் எல்லோரையும் சிந்திக்கச் செய்தது.

லூக்கா 9 : 25 ஒருவர் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? இளைஞர்களாகிய நாம் இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறோம்.

### 2. அழைக்கப்பட்ட இளைஞர் (லூக். 9 : 59)

இயேசு அவரைப் பின்பற்றி வந்த மற்றொருவரைப் பார்த்து என்னைப் பின்பற்றி வா என அழைக்கிறார். இயேசுவைப் பின்பற்றியவர் முதலில் இயேசுவைப் பின்பற்றுகிறேன் என கேட்டபோது கூறிய பதிலுரையைக் கேட்டவர் ஆனால் இயேசு அவரை அழைத்தபோது நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண உத்தரவு கொடும் என்று கேட்கிறார்.

தந்தை மரித்து கிடக்கும்போது இயேசுவைப் பின்தொடர்ந்தாரா? என்பது கேள்வி குறி. யூத முறைப்படி பெற்றோரை அடக்கம் செய்வது மிக முக்கிய சம்பிரதாயமாய் இருந்தது. (தொநூ. 50 : 5-8) இயேசு அந்த நபரிடம் கேட்டவுடன் அது ஏற்றுக் கொள்ளமுடியாத பதிலுரையாக இருந்தது. யூத முறைமையின் படி பெற்றோர் இறந்து அடக்கம் செய்து ஒரு வருடத்திற்குப் பின்னர் அடக்கம் செய்யப்பட்டவரின் எலும்புகளை எடுத்து மற்றொரு இடத்தில் அடக்கம் செய்வது வழக்கமாக இருந்தது. இந்த மனிதர் ஒரு வருடம் கழித்து உம்மைப் பின்பற்றுகிறேன் என்ற நிலையில் கூறுகின்றார்.

இன்று இளைஞர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய தவறுகின்றனர். படிக்கும் நேரத்தில் வேறு சிந்தனைகளில் நேரத்தைச் செலவழிக்கின்றனர். காலந்தவறாமை என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இளைஞர் சமுதாயம் திருச்சபை மற்றும் திருச்சபை ஈடுபாட்டில் அக்கறை இல்லாமை, வாழ்வில் இயேசுவின் அழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்போம். ஆண்டவர் நம் காரியங்களைப் பார்த்துக் கொள்வார்.

### 3. ஆவலோடு இருந்த இளைஞர் (லூக். 9 : 61)

இந்தப் பகுதியில் வரும் நபரை இயேசு அழைக்கவில்லை. அந்தப் பெயர் குறிப்பிடப்படாத நபர், அவராகவே நான் வீடு சென்றுவிட்டு வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வருகிறேன் என்கிறார்.

இப்பகுதியில் கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறுகிறார்கள் மனித வளத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தத்

தவறுகிறார்கள். இளைஞர்களின் அறிவு, ஆற்றலை அழிவுக்கு நேராக பயன்படுத்தும் நிலையினைக் காணமுடிகிறது.

இவர் இன்று சமூகத்தில் இயேசுவைப் பின்பற்றுவதால் அங்கீகாரம் கிடைக்கிறது என்றாலும் என்னுடைய தனிப்பட்ட நிலையில் நான் நல்லவர்தான் எனக்கு விருப்பம்தான், ஆனால் அதே வேளையில் நான் பெற்றோரிடம் அனுமதி பெற்று வரவேண்டும் எனக் கூறுகிறார். இன்று மற்றவர்கள் தன்னை நல்லவர்கள் என மதிப்பிட வேண்டும் என்ற ஒரே நோக்கில் செயல்படுவதாகும். மற்றவர்களிடத்தில் அங்கீகாரம் வேண்டும் என்ற நிலையில் செயல்படுவது அங்கீகாரம் கிடைக்காத போது இளைஞர்கள் மத்தியில் விரக்தி ஏற்படுகிறது. இயேசுவைப் பின்பற்ற விருப்பம். ஆனால் சுற்றி இருக்கும் சுழலைக் காரணம் காட்டி தன்னை நல்லவர்கள் என மற்றவர்கள் முன் நிலைப்படுத்த விரும்பும் நிலை மாறவேண்டும்.

ஆகவே, இளைஞர்கள் தங்களை அடையாளப்படுத்துவதிலும் முன்னிலைப்படுத்துவதிலும் குறிக்கோளாக இருப்பதைவிட்டுவிட்டு ஆண்டவரை முன்னிலைப்படுத்துவோம்.

## 4. அர்ப்பணித்த இளைஞர்

உன் இளமையை குறித்து ஒருவரும் அசட்டை செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறுகிறார்.

கிரேக்க கலாச்சாரத்தினால் சீர்கெட்டு இருந்த காலகட்டத்தில் கிறிஸ்தவ வாழ்வு, மாதிரி வாழ்வு என்பதைத் தீமோத்தேயுவுக்குச் சுட்டிக்காட்டுகிறார். கிறிஸ்தவ இளைஞர்கள் பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றிற்கு மாதிரியாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

முன்னேற்றம் என்ற நிலையில் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் திருமறை வழிகாட்டுதலுக்கு எதிராய் இருந்தும் இது காலத்தின் கட்டாயம் என்ற நிலையில் தவறுகளைச் சரி என நியாயப்படுத்துகின்ற நிலையில் நமது அர்ப்பணம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை சிந்தித்து செயல்பட இளைஞர்கள் அழைக்கப்படுகிறீர்கள்.

கிறிஸ்துவுக்காக திருச்சபைக்காக என்ற பக்தி முயற்சி சங்க கோட்பாட்டை அடிப்படையாக வைத்து நம்மை கிறிஸ்துவுக்காக அர்ப்பணிப்போம்.

**அருள்திரு. M. பிரேம் செல்வசிங்**



படைப்பனைத்தையும் கண்ணும் கருத்துமாகப் பேணிகாப்பது. மரம், செடி, கொடிகள், பறவைகள் விலங்குளை அன்பு செய்வது, நச்சு வாயு, நச்சு பொருட்கள், பிளாஸ்டிக் குப்பைகள், கழிவு நீர் மூலம் இயற்கையை மாசு படுத்தாதிருப்பது, மரம் செடி, கொடிகளை நட்டுத் தரிசு நிலங்களைப் பண்படுத்துவதுமாகும். இவைகளைக் கருத்தில் கொண்டு, அனுதினமும் இறையருளைப் பெற்று இயற்கையை நம் நண்பராகக் கண்டு, இயற்கைக்கு எதிராக நடக்கும் அநீதிகளை எதிர்த்து இயற்கையைப் பாழாக்காமல் பேணிக் காப்போம்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, உம்முடைய படைப்பின் வாக்கு, தண்ணீரைப் பல்வகை உயிரினங்களாலும், வான்வெளியைப் பறவைகளாலும் நிரப்ப செய்தது. நாங்கள் உம்முடைய மேன்மை மிகு படைப்பில் அக்களித்து, எங்களுக்காகவும், எங்கள் தலைமுறையினருக்காகவும் நீர் உண்டுபண்ணியவைகளை அழிக்காமல், ஞானமாய் அவைகளைப் பராமரிக்க எங்களுக்கும், உலகிலுள்ள அனைவருக்கும் உமது ஞானம் அருள வேண்டுகிறோம். தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே, ஆமென்.*

**Rev. G.S. ஆஸ்வின் ஜெய்சிங்,**

படைப்பாளரைக் குறித்தும் படைப்பைக் குறித்தும் திருவிவிலியம் நமக்கு தரும் தெளிவினைத் தியானித்தறிந்து, இறைமக்களின் உக்கிராணதுவத்தையும் உணர்ந்து கொள்வது அவசியமானதாகும்.

## 1. மேன்மையானவரின் படைப்பு

திருப்பாடலாசிரியர் 104-வது திருப்பாடலில் படைப்பின் மேன்மையைக் குறித்து பாடுவதற்கு முன் அந்தப் பாடலின் முதலாவது வசனத்தில் "என் கடவுளாகிய ஆண்டவரே நீர் எத்துணை மேன்மைமிக்கவர்" என புகழுகிறார். அத்துடன் 104:24-இல் "ஆண்டவரே, உம் வேலைபாடுகள் எத்தனை, எத்தனை, நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்! பூவுலகமே உம் படைப்புகளால் நிறைந்துள்ளது" என மகிழ்வோடு பாடுகிறார். அப்படியே, கடவுள் சூறாவளியினின்று யோபுவோடு உரையாடினபோது "மண்ணகத்திற்கு நான் கால்கோள் இட்டேன்" (யோபு 38 : 4) என்று கோடிட்டுக்காட்டினார். தொடக்க நூல் ஆக்கியோன் கூட முதலாவதாக (1:1) கடவுள் "விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார்" என குறிப்பிட்ட பின்பு படைப்பை ஒன்றன் பின் ஒன்றாக வரிசைபடுத்துகிறார்.

இறைவன் தம் ஞானத்தாலும், தூய ஆவியாரின் ஆற்றலாலும் நாம் காண்கிற மற்றும் கண்ணுக்குப் புலப்படாத அனைத்தையும், அண்டசராசரத்தையும் அவற்றில் உள்ள அனைத்து உயிரினங்களையும் நேரிய முறையில் படைத்துள்ளார். எனவே தான் திருபாடலாசிரியர் (தி.பா. 24 : 1 - 2) மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை . . . அவரே அதற்கு அடித்தளமிட்டார் என்கிறார். இவ்வுண்மையை அறிந்திருந்தும் அவரால் படைக்கப்பட்ட மனிதன் தன்னைப் படைப்புக்குச் சொந்தக்காரனாக பாவித்துத் தன் சுய இச்சையின்படி, பொருள் ஈட்டும் பேராசையால் படைப்புகளை பாழாக்குகிறான். இந்தப் பூமி எண்ணற்ற மக்கள் வாழ்ந்த, வாழுகின்ற, வாழப்போகிற சொத்து. இதைப் பயன்படுத்த மட்டுமே நமக்கு உரிமை இருக்கிறதே ஒழிய அழிக்க உரிமையில்லை என்பதை உணராமல் அறிவிலியைப் போல செயல்படும் நிலைதான் எங்கும் காணப்படுகிறது.

அனைத்தும் அவரால் உண்டாயின (யோவா 1 : 3) என்று தூய யோவான் அழுத்தமாக தனது நற்செய்தி நூலின் ஆரம்பத்திலே அறிவுறுத்துகிறதை இறை மக்களாகிய நாம் நம் உள்ளத்தில் ஆழமாக பதித்துக் கொள்வோம். மேலும் மனுக்குலமாகிய நாம் அனைவரும் மேன்மையானவரின் படைப்பு என்று பெருமை கொள்வோம். நன்றி செலுத்தி வாழ்வோம்.

## 2. மேன்மையான பெறும் படைப்பு

உருவற்று வெறுமையாய் இருக்கும் எதைக் கண்டாலும், கடவுள் அமைதியாக இருந்திடமாட்டார். அந்நிலையைக் கண்டால் கடவுள் மனம் வருந்துகின்றார். மனது உருகுகின்றார். அவற்றைச் செப்பனிட, சீர்படுத்த



செழுமைப்படுத்த அவர் போராடுகின்றார்.அப்படியே வெறுமையிலிருந்து ஒரு மேன்மையான படைப்பைக் கடவுள் உருவாக்கினார். அந்தப் படைப்புக்கு எவை எவைத் தேவைப்படுமோ? அவைகளைக் கடவுள் அவைகளுக்கு அருளினார். தன் தன் தேவைகளுக்குப் படைப்பனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து வாழும் தன்மையைக் கொடுத்துள்ளார். அதாவது அந்தந்த இனத்தின்படியே மற்றும் அவற்றின் இனத்தின்படி (தொ.நூ. 1 : 11, 12, 21, 24, 25) எனும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். இதன் மூலம் படைப்புகள் எல்லாம் ஒன்றை ஒன்று சார்ந்து இணைந்து, இசைந்து வாழ்கின்றன என்றும், படைப்புகள் எதுவுமே தன்னிச்சையாக நின்று நிலைத்திட முடியாது என்றும் பொருள்படுகின்றன.

ஆகவேதான் தாவீது 104-வது திருப்பாடலில் "சீராக படைக்கப்பட்ட படைப்பின் மேன்மையினைச்" சித்தரிக்கிறார். மேலும் இந்த மேன்மையான படைப்பு எப்போதும் இறைவனைக் குறித்துப் பேசிக் கொண்டே இருக்கின்றது. மனிதர்கள் எத்தனை இடர்களை இயற்கைக்கு செய்துவந்தாலும் இயற்கை தம் கடமையைத் தவறாமல் செய்து கடவுளைப் போற்றி கொண்டிருக்கின்றது. திருப்பாடல் 148 முழுவதும் எப்படி எல்லா படைப்புகளும் கடவுளைப் போற்றுகின்றன என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது. சிறப்பாக இப்படைப்புகள் தங்கள் செய்கைகளின் மூலம் கடவுளின் மாட்சியையும், மாண்பையும், ஆற்றலையும் அதிகாரத்தையும் வெளிபடுத்துகின்றன. எனவே படைப்புகள் எல்லாம் மேன்மையானவை, நல்லவை, அழகானவை, ஒழுங்கானவை, அவைகள் உயிரினங்களின் வாழ்வுக்கு ஏற்றவை, இன்றியமையாதவை என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம் படைப்பின் மேன்மையை உணர்ந்த இறையடியான் "கடவுளுக்கு நன்றி படைக்கும் போது உம் செயல்கள் வியக்கத்தக்கவை" (Your works are wonderful ) என்பதை என் மனம் முற்றிலும் அறியும் (தி.பா. 139 : 14) என்கிறார். இப்பேருண்மையைத் தியானிக்கிற நாமும் இத்துணை மேன்மையான படைப்புக்காக இறைவனைப் போற்றத் தவறிப் போகாமலிருப்போம்.

## 3. மேன்மையாக காக்க வேண்டிய படைப்பு

படைப்புகள் அனைத்தும் தலைமுறைத் தலைமுறையாக பாதுகாக்கப்பட வேண்டியவை, பராமரிக்கப்பட வேண்டியவை. படைப்புகள் பராமரிக்கப்படுவதால் மட்டுமே உயிரினங்களின் வாழ்வு சாத்தியமாகும் என்பது உலகறிந்த உண்மை. எனவே தான் இணைச் சட்டம் 20 : 19-இல்... அதிலுள்ள மரங்களைக் கோடாரியால் வெட்டி அழிக்காதே. நீங்கள் அவற்றின் பழங்களை உண்ணலாம். ஆனால் அவற்றை வெட்டலாகாது என கடவுள் இயற்கையை அழிப்பதை வன்மையாகக் கண்டிக்கிறார். மனுக்குலம் இயற்கையை, லாபத்தைப் பெருக்கும் ஊடகமாய் கருதாமல் எதிர்கால

சந்ததியார் வளமுடன் வாழப் பயன்படும் படைப்பு என உணர்ந்து படைப்பை மேன்மையாகக் காக்க வேண்டியது கட்டாயமாகும். மற்றபடைப்புகளோடு நல்லிணக்கத்தோடு வாழ்வது தான் தற்போதைய அவசரத் தேவையாகும். குறிப்பாக கடவுள் மனிதர்களுக்குக் கொடுத்த பொறுப்பு ஆண்டு கொள்ளுவது அல்ல மாறாக தொண்டு புரிவது (Not ownership but Stewardship) என்பதை எல்லா சூழலிலும் கருத்தில் கொண்டு செயல்பட அழைக்கப் படுகிறோம்.

மரம், செடி, கொடிகள் கரியமில வாயுவை ($CO_2$) உள்வாங்கி கொண்டு பிராணவாயுவை ($O_2$) உற்பத்தி செய்து உயிரினங்களுக்கு வழங்கி இயற்கையின் விதிகளை நிறைவேற்றுகின்றன. ஆனால் பகுத்தறிவுள்ள மனிதனோ வாழ்வு சீராக செயல்பட அனுமதியாமல் இயற்கை விதிகளை மீறுகிறான் என்பது வேதனையானதாகும். இன்று இயற்கையை அழி, நாளை இயற்கை உன்னை அழித்துவிடும் என்னும் உண்மையை மனுக்குலம் மறந்துபோகாமல் எச்சரிக்கையுடன் வாழ்ந்தால் நலமாயிருக்கும்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே பிலிப்பைன்ஸ் நாட்டினர் இயற்கையை அழித்து வந்ததால் நாட்டின் அழகை மேலும் மேம்படுத்தும் வகையில் 1977 -ஆம் ஆண்டில் அரசு ஒரு சட்டத்தை அவசர அவசரமாக கொண்டு வந்தது. அதன்படி 10 வயதிற்கு மேற்பட்ட ஆரோக்கியமான உடல்நலம் கொண்ட ஒவ்வோர் ஆணும், பெண்ணும் ஒவ்வொரு மாதமும் ஒரு மரம் நட்டு அது அழிந்துவிடாமல் பாதுகாத்து வளர்க்கவேண்டும் என்று கூறியது. இந்த சட்டத்தை மீறுபவர்களுக்கு அரசால் வழங்கப்படும் எல்லா சலுகைகளும், உரிமைகளும் ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதுபோக 175 டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

மரங்களின் நாற்றுக்களை அரசு இலவசமாக வழங்கியது. ஆர்வத்துடன் அரசின் குறியீட்டைவிட அதிகமாக மரம் வளர்த்தவர்களுக்கு அரசாங்கம் ஒரு சான்றிதழும், அரசு வேலைகளில் முன்னுரிமையும் கொடுத்தது. இந்த திட்டத்தின்படி ஐந்து ஆண்டு முடிவதற்குள் 36 கோடி புதிய மரங்கள் நாட்டில் முளைத்தன. இன்றைக்கு இயற்கை வளம் நிரம்பிய ஒரு தேசமாக பிலிப்பைன்ஸ் பசுமையோடு திகழ்கிறது. (தினதந்தி 13-10-2011, ப. 12). நாமும் எத்தனை நாளைக்குத் தான் வெறும் விழிப்புணர்வை மட்டும் கொடுத்து கொண்டே இருப்போம். அரசும் திருச்சபையும் இதை ஒரு சட்டமாக கொண்டு வந்து கடுமையாக அதை அமல் படுத்தினால் இந்தியாவும், ஏன் நம் குமரியும் கூட ஒரு பசுமை பூமியாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே இறைமக்களாகிய நாம் இயற்கை வள மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொண்டு இயற்கையை மேன்மையாகக் காக்க முயல்வோம்.

சுற்றுச் சூழல் ஆன்மீகம் (Eco Spirituality) என்பது இயற்கை வழி இறைவனை அடைவது மட்டுமன்று, அதே இயற்கையின்



**05-02-2012**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்கு***
***முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு***

## படைப்பு : கடவுளின் அருட்கொடையின் அடையாளம்

**Creation : The sign of God's providence**

யோபு 38 : 1–8 எபே. 1 : 3–14
திபா. : 104 லூக். 12 : 22–34

"…. பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது" (திபா. 104 : 24)

"சுற்றுச்சூழல் மாசு காரணமாக பூமியின் மேற்பரப்பில் உள்ள ஓசோன் மண்டலத்தில் ஓட்டை ஏற்பட்டு அது நாளுக்கு நாள் விரிவாகிக் கொண்டே வருகிறது" என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. 2006-ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட அமெரிக்காவின் "ஆரோ" செயற்கைக்கோள், அண்டார்டிகா பகுதியின் மீது உள்ள ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டையானது 2 கோடியே 75 லட்சம் சதுர கி.மீ. பரப்புக்கு விரிவு அடைந்துள்ளதைக் கண்டுபிடித்தது. எனவே சூரியனின் புற ஊதார் (Altra voilet rays) கதிர்கள் பூமியின் மீது விழுந்து அங்கு வாழும் உயிரினங்களுக்குப் பேராபத்தை ஏற்படுத்தும் என்பதை உறுதி செய்திருக்கிறது (தினத்தந்தி 18-10-2011 P.18). அங்ஙனமே ஆசியா கண்டமும், குறிப்பாக மனிதவளத்தில், வன வளத்தில், மலை வளத்தில், பசுமை வளத்தில், மழை வளத்தில், மீன் வளத்தில், மீனவர் வளத்தில், நீர் வளத்தில், இயற்கை வளத்தில் தனக்கு தானே நிகர் என்ற செழிப்பு மிக்க குமரியும் இப்படிப்பட்ட ஆபத்திற்கு உட்பட்டுதான் காணப்படுகிறது.

ஏனெனில், மனிதர்களின் வாழ்வாதரங்களுக்கு ஒரு கருவூலமாகவும் எண்ணற்ற உயிரினங்களுக்கு வாழிடமாகவும் இருக்கும் இயற்கைச் சூறையாடப்பட்டு ஏறக்குறைய உருவற்ற வெறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை நாம் காணமுடிகிறது. இனி உலகில் உயிரினங்கள் வாழ முடியுமா? எனும் நிலை எழுந்துள்ளது. இச்சூழலில் "பிளாஸ்டிக்கை ஒழிப்போம், பூமியைக் காப்போம்" என அறைகூவல் விடுக்கும் குமரி அரசோடும், "இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" (திருவெளி 21:5) என வாக்குரைத்திருக்கும் வல்லவராம் கடவுளோடும், படைப்புகளைப் புதுபிக்கும் பணியில் இறைமக்களாகிய நாமும் இணைந்து, இசைந்து செயலாற்ற அழைக்கப்படுகிறோம். ஆகவே, இத்தூயநாளில்

## 1. சிலுவை : உருகுலைந்த வாழ்வை உருமாற்றம் செய்கின்றது

நாம் வாழும் காலம் கவர்ச்சிகளும், விளம்பரங்களும் நிறைந்த காலம். நாம் சந்தையில் வாங்கும் சாதாரணச் சொட்டுநீலம் முதல் மின்னணு சாதனங்கள் வரை அத்தனையும் கவர்ச்சி நிறைந்த விளம்பரங்களால் சந்தைப்படுத்தப்படுகின்றன. சில நேரங்களில் இந்தக் கவர்ச்சியையும் விளம்பரங்களையும் நம்பி நாம் வாங்கும் பொருட்களின் தரம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் போது உள்ளம் வேதனைப்படுவதுண்டு.

நம்முடைய ஆன்மிக வாழ்வில் வெளிப்புறமான அலங்காரத்திற்கும் சடங்காச்சாரங்களுக்கும் முக்கியப்படுத்துவதுண்டு, ஆனால் உள்ளான வாழ்வில் உயிரற்று காணப்படுவதுண்டு. வெளிப்புற வேடமாக உயிரற்று உருக்குலைந்த நம் வாழ்வை உருமாற்றம் செய்வது இந்தத் தவக்காலம். ஏசாயா தீர்க்கன் வெளிப்புற வேடமாக அலங்காரமாக வாழும் இஸ்ரயேல் மக்களின் உருக்குலைந்த வாழ்வைப் பார்த்து வேதனையோடு உருமாற்றம் பெற அழைக்கின்றார். திருமறையில் நோன்பிருத்தல் பாவத்தை அறிக்கை செய்தல் (லேவி 16 : 29), துன்பத்தில் துக்கத்தில் விடுதலைக்கு வேண்டியும், இறை வழி நடத்துதலுக்குகாகவும் ஆசரிக்கப்பட்டது (வி.ப. 34 : 28). இத்தகைய நோன்பின் உயர் பண்புகள் காலப்போக்கில் தங்கள் சமயப்பற்றைப் பிறருக்கு வெளிப்படுத்தும் ஊடகமாகவும் பயன்படுத்தத் துவங்கினர். ஏசாயா இத்தகையோரை வெளிப்புற வேடதாரிகள் (ஏசா. 58 : 3, 4) என்று அழைக்கின்றார். இயேசு கிறிஸ்துவும் இத்தகைய பண்புடையவர்களை வெளி வேடக்காரர் (மத். 6 : 16), வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை (மத். 23 : 27), குருடருக்கு வழி காட்டும் குருடர்கள் (மத். 23 : 16) என்று அழைக்கின்றார். ஏசாயா தீர்க்கன் அர்த்தமுள்ள நோன்பு, செயலாக்கம் உள்ள நோன்பு வெளிப்பட அழைக்கின்றார். (ஏசா. 58 : 6, 7). யோவேல் தீர்க்கனும் இத்தகைய நிலையில் வாழ்பவர்கள் உள்ளத்தை கிழித்து கடவுளிடம் திரும்ப அழைக்கின்றார் (யோவே. 2 : 12-18). ஏசாயா, மக்களின் உருகுலைந்த வாழ்வு உருமாற்றம் செய்ய அழைக்கின்றார். பவுல் சிலுவையை நோக்கிப் பார்த்த போது சுயம் உடைக்கப்பட்டது. இனி நான் அல்ல, கிறிஸ்துவே எல்லாம் என்று உருமாற்றமடைந்து பிறரையும் உருமாற்றஞ்செய்ய (Iகொரி. 9 : 19, 22) தன்னை அர்ப்பணிக்கின்றார்.

## 2. சிலுவை : துன்பத்தில் இன்பம் தருகின்றது

நாம் வாழும் காலம் வலியில்லாமல் பிரசவத்தைத் தேடும் காலம், உழைக்காமல் உயர்வைத் தேடும் காலம், படிக்காமல் பட்டத்தைத் தேடும் காலம், துன்பமில்லாமல் இன்பமாய் வாழ் துடிக்கும் காலம். கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வு இத்தகைய வாழ்வு முறைகளுக்கு நேர் எதிரானது. சிலுவை இல்லாமல் சிம்மாசனம் இல்லையென்றே கற்றுத் தருகின்றது. இந்தச் சிலுவைகள் ஒரு சுமையல்ல சுகமென்றே சிலுவை நமக்கு கற்றுத் தருகின்றது.



நீதித்தீர்ப்பு கடவுளுடையது (இ.ச. 1:17). கடவுள் நீதியுள்ளவராய் இருப்பதைப் போன்று அவர் பிள்ளைகளும் நீதியுள்ளவராய் இருக்க வேண்டும் (1யோவா. 2:29; 3:7-10). இந்நீதி சமாதானத்துடன் கூடியதாகும் (திபா. 85:10). ஆனால் நோவாவின் நாட்களில் மானிடர் நீதியின்மையால் தங்களுக்குள் தீமைகளைப் பெருக்கிக் கொண்டனர் (தொநூ 6:11). மண்ணில் மனிதர் பெருகியபோது தெய்வப் புதல்வர் (தொநூ 6:2) என்று குறிக்கப்படுகின்ற கடவுளின் மக்கள் (இச. 14:1; ஓசே. 1:10) மனிதரின் புதல்வியர் (தொநூ 6:2) என்கிற ஆண்டவரின் திருமுன்னை விட்டுச்சென்ற காயீனின் வழிமரபினரை (தொநூ. 4:16-23) மனைவியராக்கி கொண்டனர். இது கடவுளின் பார்வையில் நீதியற்ற செயலாய் இருந்ததது. தீமைகள் உலகில் பெருகின. தீச்செயல் அனைத்தும் பாவமாகும் (1யோவா. 5:17). இச்செயல் கடவுளிடமிருந்து மானிடரைத் தூரமாக்கியது.

## 2. நன்மை செய்யாமை : (தொநூ. 6:5)

“நோவா” என்றால் “ஓய்வு” என்றும் பொருள். “நம்மைத் தேற்றுவான்” என்றும் பொருள். லாமேக் இவருக்கு நோவா என்று பெயரிட்டார். நன்மை செய்து தேற்றுவோர் வாழும் கூட்டத்தில் நன்மை செய்யாமல் தீமை செய்து வாழ்வோரும் இருப்பர். நன்மை செய்ய ஒருவருக்குத் தெரிந்திருந்தும் அவர் அதைச் செய்யாவிட்டால் அது பாவம் (யாக். 4:17). நன்மை செய்யாமையும் கடவுளை விட்டு நம்மை தூரமாக்குகிறது. இயேசு கிறிஸ்து குறிப்பிட்ட உவமையில் (லூக். 16:19-31) செல்வந்தன் நன்மை செய்யாத காரணத்தால் இறையரசை இழந்ததாக காண்கிறோம். நன்மை செய்தல் என்பது செயல்கள் மட்டுமன்று சிந்தனைகளையும் உள்ளடக்கியதாகும் (மாற். 7:6,7) சிந்தனையில் சீர்கேடு வருவது அடிப்படையான பாவமாகும். மானிடர் எதைப் பார்க்கிறாரோ அதை சிந்திக்கிறார். எதைச் சிந்திக்கிறாரோ அதைச் செய்கிறார். நாமும் நல்லவற்றைச் செயல்படுத்த அழைக்கப்படுகிறோம். பிரதிபலனை எதிர்பாராமல் நன்மை செய்து, அதனைத் திரும்ப நினைவுக்குக் கொண்டுவராமல் மறந்து போனவருக்கு ஆண்டவர் கொடுத்த பெயர் தந்தையால் ஆசி பெற்றவர் (மத். 25:34). நன்மை தீமை நிறைந்த உலகில் நன்மையைப் பிரித்து நல்லவை செய்ய அழைக்கப்படுகிறோம்.

## 3. நம்பிக்கைக் கொள்ளாமை : (உரோ. 3:28)

கடவுளிடம் நம்பிக்கை கொள்ளாமல் வாழ்வது கடவுளை விட்டு நம்மைத் தூரமாக்குகிறது. யூதமயமாக்கும் கிறிஸ்தவத்தில் சிலர் பவுல் எடுத்துரைத்த போதனைகளுக்கு எதிராகப் பேசினர். அவர்கள் திருச்சட்டத்தால் தான் மீட்பு பெற இயலும் என வாதிட்டனர் திருச்சட்டத்தாலோ, விருத்தசேதனத்தாலோ மீட்பு பெற இயலாது. கடவுளின் மீது கொள்ளும் நம்பிக்கையே கடவுளுடன் வாழ வழி வகுக்கிறது (உரோ. 3:28). என்ற உண்மையைப் பவுல் வெளிப்படுத்தினார். உறுதியான

மனநிலையோடு செயல்படாததெல்லாம் பாவமாகும் (உரோ. 14:23). கடவுளைச் சாராது தம்மை மட்டும் நம்பி வாழும் போக்குக் கடவுளைவிட்டுத் தூரப்படுத்துகிறது. லூக்கா 15-ஆம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து கூறிய காணாமல்போன ஆடு குறித்த உவமை இதனைத் தெளிவுபடுத்துகிறது (லூக். 15:4-7). இவ்ஆட்டினை ஒருவரும் தொலைக்கவில்லை. அது தானாகவே சுயவிருப்பம், சுயநம்பிக்கை, சுயபோக்கு இவைகளால் காணாமல் போனது. இன்றைய சமுதாயத்திலும் தம் கண்கள் காணும் வழியிலே சிறிய நன்மைகளுக்காக கடவுளைவிட்டு தூரம் செல்கின்றனர். இதற்குச் சபைவிட்டுச் சபை மாறும் கிறிஸ்தவரும் விதிவிலக்கல்ல இவர்களையும் தேடி மந்தையிலே சேர்க்க ஆட்டுக்குரியவர் முயல்கிறார்.

கடவுளைவிட்டுத் தூரம் போக காரணமான நீதி இல்லாமை, நன்மை செய்யாமை, நம்பிக்கைக் கொள்ளாமை இவைகளை அறிந்து கொண்ட நாம் இறைவனுடனும் இயற்கையுடனும் இணைந்து வாழ முற்படுவோம். நமது வாழ்வில் கடவுளிடமிருந்தும் அவரது படைப்புகளிடமிருந்தும் நம்மைத் தூரமாக்கும் பிழைகளைக் கண்டறிந்து, அவைகளிலிருந்து விலகி, இறைவனோடு இணைந்து வாழ்வோம். இறையுறவில் ஒன்றித்து, இயற்கை இணைவில் இன்புற்று மகிழ்வுடன் வாழ தூயாவியார் துணைபுரிவாராக.

**மன்றாட்டு :** *அன்பின் கடவுளே, உம்மை விட்டு விலகிப் போன உலகில் உமது நேசகுமாரனை அனுப்பி, மனுக்குலம் இருளிலிருந்து ஒளியினிடத்திற்கும், அலகையின் பிடியினின்று உம்மண்டைக்கும் திரும்பச் செய்தவரே, வாழும் கடவுளே, எங்களை மேற்கொள்ளும் சுயநலத்தினின்றும், பெருமையினின்றும் எங்களை விலக்கி, உமக்கு ஏற்புடைய மக்களாய் எங்களை மாற்றுருவாக்கும், தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகைபுரியும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியே, ஆமென்.*

அருள்திரு. **S. கிரீஷ் குமார்**



**22-02-2012**

***சாம்பல் புதன்***

## சிலுவை நம்பிக்கையின் அடையாளம்

**The Cross : The sign of Hope**

ஏசா. 58 : 1 – 8 | மாற். 8 : 34 – 38
தி.பா. 130 | I கொரி. 9 : 19 – 27

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு. என்னைப் பின்பற்றட்டும்" (மாற். 8 : 34)

நம்முடைய ஆன்மீக வாழ்வில் தவக்காலம் மாற்றத்தின் காலம். வாழ்க்கையை நெறிப்படுத்தும் காலம். இறை உறவில் வேரூன்றி வளர்வதற்கும், கனி தருவதற்கும், புது தகவுகளைச் சொந்தமாக்க உதவுவதற்கும் உரிய காலம். தவக்காலம் நம்முடைய ஆன்மீக வாழ்வின் வசந்த காலம். பழைய வாழ்வின் இலைகள் உதிர்ந்து புதிய வாழ்வின் தளிர்கள் மலர வேண்டிய காலம். புதிய தளிர்கள் நம்மில் மலர நம்மை உள்ளாய்வு செய்ய வேண்டிய காலம். நம்முடைய ஆன்மீக வாழ்வின் பலம்(Strength), பலவீனம் (Weakness), வாய்ப்புகள் (Opportunities), தடைகள் (Theats) எவைகள் என்று ஆய்வு செய்ய வேண்டிய காலம். சுருங்கச் சொன்னால் Lent is a period of introspection and retrospection, renewal and reconstruction.

பல்கலைக்கழகமொன்றில் Sabbatical Leave-ல் சென்ற பேராசிரியர் வழியனுப்பு விழாவில் ஏற்புரை நிகழ்த்திய போது கூறியதாவது, இந்த Sabbatical Leave காலத்தில் வேறு ஒரு கல்லூரியில் இணைந்து கற்றுக் கொள்ளவும் நான் செய்யும் ஆசிரியப் பணியைக் குறித்து ஆய்வு செய்யவும் போகின்றேன் (Introspect and Retrospect) என்றார். மட்டுமல்ல என்னைப் புதுப்பித்து (Renew and Reconstruct) மறுபடியும் புதிய பார்வையோடு ஆசிரியப் பணியைச் செய்ய போகின்றேன் என்றார்.

இந்தத் தவக்காலத்தில் சிலுவையை நாம் நோக்கும் போது வாழ்வு பெறுகின்றோம். அவமானச் சின்னமாம் சிலுவை கிறிஸ்துவின் மரணத்தால் மனுக்குலத்தில் அவமானத்தை மறைத்து வாழ்வு தரும் நம்பிக்கையின் சின்னமாகி நம்மை வாழ்வுப் பெற அழைக்கின்றது. நம்பிக்கையின் சின்னமான சிலுவை உருகுலைந்த மனித வாழ்வை உருமாற்றஞ்செய்து, துன்பத்தில் இன்பமாக வாழக் கற்று தந்து, தூய்மையாக வாழ வழி நடத்துகின்றது.

கடவுளின் திட்டம். ஆனால் தீயோனின் தூண்டுதலால் மானிட உறவில் பிளவு ஏற்பட்டது. பின்னர் அது பகையாக மாறி மனித உறவுகளில் அமைதியற்ற சூழல் ஏற்படுத்தியது. விரும்பத்தகாதது என்று கடவுளால் ஏற்படுத்தப்பட்டதை விரும்பத்தகுந்ததாக ஏற்றுக் கொள்ளும் சூழல் உருவானது. இதனால் பாவம் பிறந்தது. கடவுள் விரும்பாததைச் செய்வது பாவம். இன்றும் கடவுள் விரும்பாத தகாத உறவுகளினால் குடும்பங்களில் கணவன் மனைவி உறவு நிலைகளில் விரிசல் ஏற்படுகிறது. பொழுது போக்கில் அதிக நாட்டம் கொள்வதால் பெற்றோர் பிள்ளைகள் உறவில் விரிசல் ஏற்பட்டு அமைதியற்ற சூழல் உருவாகிவிடுகிறது. கடவுள் விரும்பும் ஐக்கியம் குடும்பங்களில் முதலாவது ஏற்பட வேண்டும்.

யாக்கோபு சுயநல உணர்வுடன் அண்ணன் ஏசாவின் தலைமகனுரிமையையும் ஆசீர்வாதத்தையும் தனக்குரியதல்லாததைத் தந்திரமாய் பெறுகிறான். இதினிமித்தம் அமைதியிழந்து பகைமை ஏற்பட்டது. தன் தவறை உணர்ந்த யாக்கோபு அண்ணனிடம் கனிவு பெறவும், தன் தம்பியிடம் கனிவு காட்ட நான் கடனாளி என உணர்ந்த ஏசா கனிவு காட்டவும் ஆயத்தப்பட்டனர். இதனால் உருவானது ஒப்புரவு. ஒப்புரவின் மேன்மை அண்ணன் முகத்தில் கடவுளின் முகத்தைக் கண்டு கொள்ளச் செய்தது. நமக்குரியது நம்மிடமிருந்தால் ஒப்புரவு உண்டாகிறது. பிறர்க்குரியதை நமக்குரியதாக்குவதால் பகைமை பிறக்கிறது. அவரவர் உரிமை அவரவரிடம் இருந்தால் அபாயம் ஒன்றுமில்லை.

தீவிரவாத செயல்கள் நிரம்பியுள்ள இன்றைய சூழலில், தீமை செய்வோரும், தீமையினால் பாதிப்படைபவர்களும் ஏசா-யாக்கோபு போல் உணர்வு பெற்றால் ஒப்புரவு உருவாகும். மானிடர் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்வதினால் கடவுளைக் காண இயலா நிலை உருவாகிறது. இருவர் ஒருமித்து இருக்குமிடம் கடவுளின் இருப்பிடம். குடும்ப வாழ்வில் சமூக வாழ்வில், திருச்சபை வாழ்வில் கடவுளைக் காண, கடவுளின் ஆசி பெற தி.பா. 133-இன்படி அவரவர் தம்தம் மனகுமுறல்களையும், மனக்குறைவுகளையும் களைந்து மன ரம்மியமாய் சமத்துவ சகோதரத்துவப் பாதையில் ஒப்புரவுடன் வாழ அழைக்கப்படுகிறோம்.

## 2. இயற்கையில் இறைவனைக் காண்பது ஒப்புரவு

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார் (தொ.நூ. 2 : 15).

மானிட வாழ்வு சிறப்படைய கடவுளின் அருள்கொடையான இயற்கை என்பதே உண்மை. பூமியைப் பண்படுத்திப், பாதுகாத்துப் பயன்பெறவேண்டும் என்பது கடவுளின் திருவுளம். இயற்கையோடு இணைந்து இன்னலின்றி இன்பமாய் வாழவேண்டும் என்பது இறை நீதி. இறை நீதியை நிறைவேற்றத் தவறிய ஆதாம் - ஏவாள், பூமியைப்



பண்படுத்திப் பாதுகாப்பதற்குப் பதிலாய் தீயோனின் சூழ்ச்சியால் இயற்கையின் மீது கடவுள் அருளிய அதிகாரத்தை இழந்து, ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்டார்கள். இனிமையான வாழ்வு வாழ வேண்டியவர்கள் இன்னல் அடைந்தார்கள்.

தி.பா. 128-இல் இயற்கையோடு இணைந்த மனிதவாழ்வு குறித்து விளக்கப்படுகிறது. துணைவியார் கனிதரும் திராட்சைச்செடி, பிள்ளைகள் ஒலிவ கன்றுகள். மானிட வாழ்வில் உறவுகள் எந்நிலையில் சிறப்பு பெற்றதோ அவ்வண்ணமாக, இயற்கையோடு உள்ள மானிட உறவும் அமைந்திருக்கிறது. மண்ணில் பிறக்கிற மனிதன் மகிழ்ச்சியாய் வாழ கடவுள் அருளிய அருட்கொடை இயற்கை. இயற்கையின் அருள்பெற இயற்கையைப் பாதுகாத்தல் அவசியம்.

காடுகளை அழித்தல், தண்ணீரை மாசுபடுத்தல், காற்று மண்டலத்தை மாசுபடுத்தல் இவைகள் மனிதன் இயற்கையோடு பகைமை கொண்டு வாழ்வதைத் தெளிவுபடுத்தாது. அணு உலைகள், உலகமயமாதல், இயந்திரமயமான வேளாண்மை இவைகளால் மனிதன் இயற்கையைப் படிபடியாய் அழித்து இயற்கை வளங்களை இழக்கச் செய்து வருகின்றான். நோய்கள், இயற்கை அழிவுகள், சுனாமி போன்ற ஆபத்துகள் ஏற்பட காரணமாகிறது. யோ. 15:1-இல் இயேசு நாதர் தம்மைத் திராட்சை செடி எனவும் பிதாவைத் திராட்சை செடியை நட்டு வளர்ப்பவர், பாதுகாப்பவர் என விளக்குகிறார். இவ்வாறு மானிட உருவெடுத்த இயேசு நாதர் இயற்கையோடு இணைவு பெற்று வாழ வேண்டிய வாழ்வைத் தெளிவுபடுத்துகிறார்.

இயற்கையைப் பண்படுத்தி, பாதுகாத்து இறைநீதியை வெளிப்படுத்தி இயற்கையின் அருளை நிறைவாய் பெற்று வாழ அழைக்கப்படுகிறோம்.

## 3. இறைவனில் மனிதரை இணைப்பது ஒப்புரவு

“தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார், சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்” (எபே. 2:16)

ஆதாமும் ஏவாளும் செய்த பாவம் அவர்களை இறை சமூகத்திலிருந்து ஒளித்துக்கொள்ளச் செய்தது இதனால் அவர்களை மரணம் சொந்தமாக்கினது, கடவுளை விட்டு பிரித்தது, கடவுளின் சாயலை அவர்களிடமிருந்து அகற்றிவிட்டது, கடவுளோடு அவர்களில் உள்ள உறவைத் துண்டித்தது, பகைமை உருவானது. “உங்கள் தீச் செயல்களே உங்களுக்கும் உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன, உங்கள் பாவங்களே அவர் செவி சாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன” என்கின்றது திருமறை. இவ்வாறு கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே ஏற்பட்ட உறவின் முறிவை ஒன்றாக்க இரக்கமுள்ள கடவுள் தமது குமாரனாகிய இயேசுவை ஒப்புரவின்

புது உறவை ஏற்படுத்தினார். புதிய மனிதராக மாற்றம் செய்துள்ளார் (எபே. 2:16). லூக். 19 : 9-இல் சகேயுவின் வாழ்வை இயேசு மாற்றியதால் சகேயுவும் தீய செயலை, தீய வழியில் சேர்த்த செல்வத்தை விட்டுவிட தீர்மானிக்கிறார். இதினிமித்தம் ஆபிரகாமின் மகன் என அழைக்கப்பட்டு உறவில் புதுமை பெறுகிறான்.

கடவுளோடு மனிதன் ஒப்புரவாக வேண்டும் என்பது கடவுளின் திருவுளம். இயேசு நாதர் வழியாய் கடவுளோடு மனிதன் ஒப்புரவாக்கப்படுகிறான். இயேசு நாதர் தமது சிலுவை மரணத்தின் வழியாய் மானிடரைக் கடவுளோடு ஒப்புரவாக்கினார். இவ்வாறு கடவுளின் திருவுளம், இயேசுநாதர் வாயிலாய் நிறைவேற்றப்பட்டிருக்க, நாம் நம்மை இயேசுநாதர் வழியாய் கடவுளோடு ஒப்புரவுடன் வாழ தூய ஆவியர் வழி காட்டி உதவி செய்கிறார். நம்மை நாம் உணர்ந்து, மனம் திரும்பி, தீய செயல்களை விட்டு விட்டு, கடவுளோடு ஒப்புரவாகி, கிறிஸ்துவுக்குள்ளாய் புதுவாழ்வு பெற்று வாழ அழைக்கப்படுகிறோம்.

ஒப்புரவாகுதல் கடவுளின் அருள்வெளிப்பாடு, அது கிறிஸ்துவில் தொடர்ந்து நமக்கு அருளப்பட்ட அருட்பணி. இப்பணி அனைத்து படைப்புகளையும் உள்ளடக்கியது. ஒப்புரவாகுதலால் கிடைக்கும் மேன்மை அமைதி, ஆசி போன்றவையாகும். இப்பணி தொடர நம்மை ஒப்புரவின் பணியாட்களாய் ஒப்புக்கொடுப்போம்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, மானுடரை உம்முடைய சாயலில் படைத்தவரே, எங்கள் மீறுதலால் இறைசாயல் இழந்த நாங்கள் உமது குமாரனின் பிராயச்சித்தத்தால் ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். இந்த ஒப்புரவாக்குதலின் அனுபவத்தை எங்கள் வாழ்க்கையில் நாங்கள் அனுபவிக்க தேவரீர் அருள்புரிவீராக, தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே. ஆமென்.*

**அருள்திரு. S. டார்வின்**



**19-02-2012**

***(உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு)***

# கடவுளோடும் படைப்புகளோடும் ஒப்புரவாகுதலைக் கொண்டாடுதல்

## Celebrating Reconciliation with God and Creation

தொ.நூ. 33 : 1–7 உரோ. 5 : 1–11
தி.பா : 34 லூக். 19 : 1–10

"நாம் கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப் பட்டுள்ளோம்" (உரோ. 5 : 10)

ஒப்புரவு என்பது பிளவுபட்ட நிலையிலிருந்து ஒன்று சேர்தல் இணைந்திருத்தல் என்பவையாகும். Kattaiage என்ற கிரேக்க பதத்திற்கு ஒப்புரவு என பொருள். திருமறையில் ஒப்புரவாகுதல் என்ற சொல் ஐக்கியப்படுதல் என்ற பொருளில் விளக்கம் தருகிறது. ஒருவருக்காக இன்னொருவர் கைமாறு கருதாமல் உள்ளன்பை வெளிப்படுத்தல் ஒப்புரவாகும். கைமாறு கருதாமல் கொடுக்கும் பண்பு ஒப்புரவு என திருக்குறள் தெளிவுபடுத்துகிறது. ஒப்புரவு கடவுளின் அன்பில் வெளிப்பட்டு நிற்கும் அடிப்படை பண்பு. இச்சிறந்த பண்பு இல்லாமையினால் மானிட வாழ்வில் குடும்ப, சமூக, ஆன்மீக வாழ்வில் அமைதியின்மையும் பகைமையும், தீமையும் ஏற்படுகின்றது.

கல்லூரி ஒன்றில் கிழிக்கப்பட்ட உலக வரைபடத்தை ஒன்றிணைக்கும் போட்டி நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்ட மாணவர் ஒருவர் பலமுறை முயற்சி செய்தும் இயலவில்லை மாற்று வழி காண வரைபட துண்டுகளின் மறு பகுதியில் என்ன வருகிறது என முயற்சித்து பார்த்தார். மனித உடலின் உறுப்புகள் என கண்டார். அப்படியே அதனை ஒழுங்கு படுத்தினார். உலக வரைபடம் மிக சிறப்பாய் ஒழுங்குபடுத்தப்பட்டது. மானிட வாழ்வு ஒன்றுபடுகிறபோது எல்லாமே ஒன்றுபடும். ஒப்புரவாகுதல் என்பது என்ன? ஒப்புரவாகுதலின் மேன்மை என்ன என இங்கு சிறிது ஆய்வோம்.

### 1. மனிதரில் கடவுளைக் காண்பது ஒப்புரவு

... உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பது போல் இருக்கிறது. ஏனெனில் நீர் எனக்குக் கனிவு காட்டியுள்ளீர் (தொ.நூ. 33 : 10)

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார், அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். மனிதன் ஒன்றித்து வாழ வேண்டும் என்பது

காணிக்கையைச் செலுத்து என்கிறார். இதில் ஒரு சமய அணுகு முறையினை இயேசு சுட்டி காட்டுகின்றார். எனவே தான் லூக். 5 : 15-16-இல் திரளான மக்கள் இயேசுவை மேசியாவாக ஏற்று ஒரு அரசியல் புரட்சிக்குக் காரணமாக இருந்தவர் இந்த தொழுநோயாளியான ஓரங்கட்டப்பட்டவரே.

**முடிவுரை :** உலகமயமாதல் சூழலில், அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களால் பலர் சமூகத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப்படித் தள்ளப்பட்ட மக்களிடம் சரியான அரசியல் நிலைபாடுகள் ஏற்படவும், தங்கள் வாழ்வாதாரங்களையும், உரிமைகளையும் பெற்று சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ கிறிஸ்துவின் பணி நமக்கு ஆற்றல் அளிக்கின்றது.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, உம்முடைய அரசை ஆற்றலுடன் போதிக்க இயேசுநாதரை அனுப்பினீர். நாங்களும் நற்செய்தியை ஏழைகளுக்குக் கொண்டு செல்லவும், நொறுங்குண்ட இதயமுடையோரைக் கட்டவும் சிறைப்பட்டோர்க்கு விடுதலையை அறிவிக்கவும் எங்களை உமது தூய ஆவியால் அபிஷேகம் செய்யும். தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து உம்முடன் ஆளுகைபுரியும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியே வேண்டுகிறோம்! ஆமென்.*

**அருள்திரு. கிங் தனேஷ் குமார்**



இயேசு தாம் பாடுபட வேண்டியதின் அவசியத்தைச் சீடர்களுக்கு எடுத்துரைத்து, தம்மைப் பின்பற்ற விரும்பும் சீடர்கள் வாழ்வில் துன்பங்களை ஏற்க வேண்டுமென்று மிகவும் அழுத்தமாகக் கூறுகின்றார் (மாற். 8 : 34). இங்கே கூறப்படும் சவால் கிறிஸ்தவ சீடத்துவ வாழ்வுக்குத் தரும் சவால். தன்னலம் துறந்து, துன்பங்களை ஏற்று பிறர் நலம் பேண தரும் சவால். இந்த துன்பங்கள் சுமைகளல்ல, சுகமான சுமைகள்.

தொடக்ககாலத் திருச்சபை துன்பத்தின் குகைகளில் புடமிடப்பட்டு நெருப்புத் தணலில் வேகவைக்கப்பட்டுத் தியாகம் என்னும் அச்சுக்களில் வார்க்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும். இதை நாம் ஸ்தேவானின் இரத்த சாட்சி மரணத்தில் புரிந்து கொள்ளலாம் (தி.ப. 7 : 51-60). சீடர்களில் பலர் நற்செய்திக்காக அநுபவித்த துன்பங்களில் நாம் கண்டுகொள்ளலாம். சிரமமில்லாமல் உயர்வு இல்லை என்பதை (Iபேது 1 : 6, 7)-ல் காணலாம்.

நம் வாழ்வில் எதிர்பார்த்தாலும் எதிர்பார்க்காவிட்டாலும் இவ்வுலகில் துன்பங்களைச் சந்தித்துதான் ஆகவேண்டும். எனக்கு மட்டும் ஏன் இத்தனை துன்பங்கள்? நான் மாவு விற்க போனால் காற்று அடிக்கின்றது. உப்பு விற்க போனால் மழை பெய்கின்றது என்ற கவலை கொள்ளாதபடி நம்பிக்கையின் அடையாளமாம் சிலுவையைப் பார்த்து துன்பத்தில் இன்பமாக வாழ கற்றுக் கொள்வோம்.

மார்டின் லுத்தர் இயேசுவின் பாடுகளைச் சிந்தித்து மரணப் படுக்கையிலிருந்த தமது அன்னைக்கு எழுதிய கடிதத்தில், அன்புள்ள அம்மா கடவுளின் அருள் குறித்து நீங்கள் அறிவீர்கள். தந்தையாகிய இறைவனின் கருணைத் திட்டத்தின் கீழ்தான் உங்களுக்கு நோய் வந்திருக்கிறது என்றும் அறிவீர்கள்.

கடவுளால் நேசிக்கப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகளை நினைத்துப் பாருங்கள். ஒருவன் தூக்கிலிடப்பட்டான். இன்னொருவன் தீக்கிரையாக்கப்பட்டான். மூன்றாமவன் மூழ்கடிக்கப்பட்டான். இப்படி எத்தனையோ இன்னல்கள். இவைகளை நினைத்துப் பார்க்கையில் உங்கள் நோய் இலேசானதே... கடவுளின் அருளை நினைப்பூட்டும் கருவியாக எண்ணுங்கள்.

இயேசுவின் துன்பத்தை நினைத்துப் பாருங்கள். இவருடைய துன்பம் இவருக்கு சொந்தமானதல்ல. பிறருக்காக நமக்காக இவர் துன்புற்றார்.

உங்கள் நோய் சாவுக்கேதுவானதாக இருந்தாலும் இது இயேசுவின் துன்பத்தை விடச் சிறியதல்லவா?...

## 3. சிலுவை : பொய்மையில் தூய்மையைத் தருகிறது

நாம் வாழும் காலம் பொய் எது? மெய் எது? நன்மை எது? தீயது எது? தரமில்லாதது எது? தரமுள்ளது எது? நீதி எது? அநீதி எது? என்பதை பிரித்துக் காட்ட முடியாத காலம். இத்தகைய உலகில் நம்மிடம் இறைவன்

எதிர்பார்ப்பது தூய்மையுடன் தனித் தன்மையுடன் வாழ அழைக்கின்றது. (With uncompromised and unique qualities).

உரோம ஆதிக்க சக்திகளின் அதிகார அடக்குமுறைகள் யூதச் சமயத் தலைவர்களின் தந்திர சதி ஆலோசனைகள், அநீதியின் சக்தியோடு ஒன்றிணைந்த பொது மக்கள், போர் வீரர்களின் குரல்கள், வேடிக்கை குரல்கள் மத்தியில் சிலுவை தனித்தன்மையோடு நிமிர்ந்து நிற்கின்றது. பொய்மை நிறைந்த உலகில் உயிரோட்டம் உள்ள வேறுபடுத்தப்பட்ட தூய்மையான வாழ்வு வாழ்ந்து காட்ட அழைக்கின்றது.

சிலுவை அன்பின் அடையாளமாக அனைவரையும் ஏற்றுக் கொள்கின்றது (லூக். 23 : 34), மன்னிப்பும் மீட்பும் தருகின்றது (லூக். 23 : 43). சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்த்து அவருடைய தனித்தன்மை உள்ள வாழ்வைப் பார்த்து இம்மனிதர் உண்மையாகவே இறைமகன் என்றார் (மாற். 15 : 39). சிலுவை நம் வாழ்வுக்கு விடுதலைத் தந்து வாழ தனித்தன்மையுடன் வாழ்ந்து காட்ட அழைக்கின்றது.

இந்தத் தவக்காலத்தில் சிலுவையில் உருமாற்றம் பெற்று, துன்பத்தில் இன்பமாக வாழ்ந்து, தனித்தன்மையுடன் வாழ, வாழ்ந்து காட்ட இறைவன் அருள்புரிவாராக.

**மன்றாட்டு :** *அன்பின் கடவுளே, இயேசு கிறிஸ்துவில் உம்மை எங்களுக்குத் தந்ததினால், சிலுவையின் வழியிலான உமது தூய திருவுளத்தின்படி வாழ எங்களை உம்மிடத்தில் தருகிறோம். கிறிஸ்து நடத்தும் வழியில் எங்கள் காலடிகளை உறுதிப்படுத்தும்; கிறிஸ்து எங்களுக்குக் கற்பிக்கிறபடி எங்களை உண்மை பேசுகின்றவர்களாய் மாற்றும்; எங்களுடன் இருக்கும் கிறிஸ்துவாய் தூயாவியாருடன் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து, உம்முடன் ஆளுகை புரியும் அதே ஆண்டவரின் வழியே வேண்டுகிறோம்! ஆமென்.*

**Rev. C. கில்டன் தயானந்த்**



லூக். 5 : 12-இல் ஒருவர் உடலெல்லாம் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். ஒருவர். இது சமூக வாழ்வில் ஓரங்கப்பட்டோரின் வலிமையும், வேதனையும், அங்கிகாரமற்ற நிலையினையும் விளக்குகின்றது. இங்குச் சொல்லப்படும் எதிர் மறையான கூற்று என்னவெனில், ஆசாரியன் நீர் நலமடைந்துள்ளீர் என அதிகாரப் பூர்வமாக அறிவிக்க வேண்டும் (லேவி. 13 :17). அதற்கு முன்பே அவர் மக்கள் கூட்டத்தோடு இணைந்து விடுகின்றார். லூக். 5 : 12-இல் தொழுநோயாளியின் இரண்டு விதமான செயல்பாடுகள் கூறப்பட்டுள்ளன. 1) அவருக்குள் நடைபெறும் செயல்பாடு இயேசுவைக் கண்டு அவர் காலில் விழுந்து என்ற வசனத்தில் இங்கு "கண்டு", "விழுந்து" என்ற இரண்டு எச்சவினைச் சொற்களைக் காண்கின்றோம். அதனை அடுத்து ஏதோ ஒரு நிகழ்வு நடைபெறுகின்றது என்பதை இச்சொற்கள் காட்டுகின்றது. 2) அவர் வெளிப்படுத்தும் அறிக்கை ஆண்டவரே, இச்சொல் லூக். 5 : 8-இல் பேதுருவின் அறிக்கைக்கு சமமானது. ஆண்டவரே என்பது மேசியாவை அறிக்கையிடுகின்ற நம்பிக்கைமிகு வார்த்தை. எனவே தான் நீர் விரும்பினால் சமூக அலுவலங்கள் மாறும். நோய்கள் அகலும் என மேசியாவின் அருளாட்சி நடைபெற வேண்டுகின்றார். ஆக ஓரங்கப்பட்ட சமூக அவலங்களால் வேதனையோடு துன்பத்தோடு வாழ்ந்த இந்த மனிதனிடம் கிறிஸ்துவின் ஆட்சிக்கான வேட்கை வெளிப்படுவதை அறியலாம்.

## இயேசு கிறிஸ்துவின் செயல்பாடு

லூக். 5 : 13-இல் இயேசுவின் செயல்பாடில் இரண்டு விதங்களில் நடைபெறுகின்றது. 1) கையை நீட்டி அவரைத் தொடுகிறார். இது இயேசு தம்முடைய உடலால் செயல்படுகின்றார் என்பதை உணர்த்துகிறது. அதாவது விளிம்பு நிலையில் வாழந்து வந்த தொழுநோயாளியை ஏற்றுக் கொள்ளும் செயல்பாடு. அதோடு மட்டுமல்ல, கடவுளின் மேலான விருப்பத்தையும் இயேசு வெளிப்படுத்துகின்றார். நான் விரும்புகின்றேன் உமது நோய் நீங்குக, தள்ளப்பட்ட, வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் சமூகம் வைத்திருப்பதால் வேதனையோடு உள்ளுக்குள் வலியோடும் வாழும் மக்களின் நிலைமாற வேண்டும் என்பது கிறிஸ்துவின் செயல்பாடாகும்.

லூக். 5:14-இல் இதை யாருக்கும் சொல்ல வேண்டாம்... நீர் நலமடைந்துள்ளீர் என்பதற்கு அது சான்றாகும். இங்கு அரசியல் நிலைமைக் குறித்த விளிப்புடன் இருக்க இயேசு எச்சரிக்கின்றார். ஆண்டவரே என்பது அரசரை அழைக்கும் சொல். இங்கு ஓரங்கட்டப்பட்ட மக்களின் அரசியல் பிரவேசம் மற்றவர்களால் மழுங்கடிக்கப்படாமல் இருக்க இதை யாருக்கும் சொல்ல வேண்டாம். ஆனாலும் அதற்கான படிநிலை பணிகளைச் செய்ய இயேசு கூறுகின்றார். குருவிடம் காண்பது மோசே கட்டளையிட்ட

இருந்தபோதே வியத்தகு செயல்கள் செய்தார். அதன் வழியாக அவர்களில் இறை நம்பிக்கையை வளர்த்தார். இந்தப் பகுதியிலும் தன்னோடு கூட விழித்திருக்க தம் சீடர்களுக்கு அழைப்பு கொடுத்து விழித்திருக்க ஊக்குவிக்கிறார். ஆண்டவரும் இணைந்து செயல்பட "விழிப்பாயிருங்கள்; நம்பிக்கையில் நிலைத்திருங்கள்" என்ற தூய பவுலின் வார்த்தைகளும் நம்மை இதற்கு அழைக்கிறது (Iகொரி. 16.13).

## 2. விழிப்போடு இறைவனிடம் வேண்டுங்கள்

"உங்கள் மனம் ஆர்வமுடையது தான் ஆனால் உடல் வலுவற்றது. எனவே, சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" என்று இயேசு கிறிஸ்து கூறினார் (மத். 26 : 41). இறைவேண்டல் செய்யும்போது உடலும் உள்ளமும் விழிப்பு நிலையில் இருக்கவேண்டும் என இப்பகுதி நமக்கு அறிவுறுத்துகிறது. இயேசு கெத்சமனேத் தோட்டத்தில் விழித்திருந்து மூன்று முறை இறைவேண்டல் செய்கிறார். "என் தந்தையே, நான் குடித்தாலன்றி இத்துன்ப கிண்ணம் அகல முடியாதென்றால் உமது திருவுளப்படியே ஆகட்டும்" என்று முதலாவது இறைவேண்டல் செய்தார். அது மட்டுமல்லாது இரண்டாம் முறையாகவும் இறை வேண்டுதல் செய்துவிட்டு விழித்திராது உறங்கிக் கொண்டிருந்த சீடர்களை மீண்டும் "விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" என்று சொல்லிவிட்டு மூன்றாம் முறையும் இறைவேண்டல் செய்ய இயேசு திரும்பவும் சென்றார். காவலிலிருந்து விடுவிக்கப்பட்ட பேதுரு, மாற்கு எனப்படும் யோவானின் தாயாகிய மரியாளின் வீட்டுக்குப் போனார். இங்கே பலர் இணைந்து இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தனர் (தி.ப. 12 : 12). இப்பகுதி துன்பப்படும் நாளில் விழிப்போடு வேண்டிக் கொண்டிருக்க கற்றுத்தருகிறது. நாமும் லெந்து நாட்களில் கடவுளை நோக்கி விழித்திருந்து வேண்டுதல் செய்ய அழைக்கப்படுகிறோம். நமது வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் கடினப்பாடுகளை வெற்றிக்கொள்ள விழித்திருந்து இறைவேண்டல் செய்வது தேவையானது.

## 3. விழிப்போடு மீட்க எழுந்திருங்கள்

தந்தையின் மீட்புத்திட்டம் நிறைவேறும் வேளை வெகு அருகில் வந்து விட்டது என்பதை இயேசு உணர்ந்தார். கெத்சமனேத்தோட்ட இறைவேண்டலை முடித்து கொண்டு இயேசு சீடர்களையும் எழுப்புகிறார். தமது நிலையையும் சீடர்களுக்கு வெளிப்படுத்துகிறார். "மானிட மகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படுகிறார். எழுந்திருங்கள் போவோம் இதோ! என்னைக் காட்டிக் கொடுப்பவன் வந்துவிட்டான்" என்று கூறினார் (மத். 26 : 45, 46). நெகேமியா "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" எனக்கூறி இடிந்து போன மதிலைக் கட்ட மக்களைத் தூண்டினது போல, இயேசுவும் இறையரசைக் கட்டி எழுப்பவும் தன்னை இழந்து மக்களுக்கு வாழ்வுத்தர



தன் சீடர்களோடு எழுந்து சென்றார். "விழித்தெழு, விழித்தெழு சீயோனே, உன் ஆற்றலை அணிந்து கொள்" (எசா. 52 : 1). "சிறைப்பட்ட எருசலேமே, புழுதியைத் தட்டிவிட்டு எழுந்து நில்" (எசா. 52 : 2) போன்ற திருமொழிகள் விழிப்போடு எழுந்து நிற்பது மீட்புக்காகவே என்பதை உணர்த்துகிறது.

இங்கிலாந்தில் ஒரு இளைஞன் தான் செய்த குற்றத்திற்காக சிறையிலடைக்கப்பட்டான். அவனது தாய் அவனில் அதிக அன்பும் பாசமுமுடையவள். எனவே ஒருநாள் அரசனிடம் சென்று தன் மகனை திருந்தி வாழ ஒரு வாய்ப்பு கொடுங்கள் என விண்ணப்பித்துக் கெஞ்சினாள். அரசனும் மனமிரங்கினான். தான் எழுந்திருந்து அந்த இளைஞனை விடுவிப்பதற்காக சிறைச்சாலைக்குச் சென்றான். அங்கே சென்று இளைஞனை நோக்கி கூப்பிட்டான். ஆனால் இந்த இளைஞன் எழுந்து சென்று மறு உத்தரவு கொடுக்கவில்லை. அமைதியாக விரக்தியோடு சிறையறையில் இருந்தான். அரசனும் சென்று விட்டான். பின்னர் சிறை அதிகாரிகள் வந்தது அரசன் என்றும் நீ எழுந்து வராததால் அவர் சென்றுவிட்டார் எனவும் அவர் உன்னை விடுவிக்கவே வந்தார் எனவும் கூறினர். இதைக் கேட்ட இளைஞன் மிகவும் வேதனைப்பட்டுக் கண்ணீர் விட்டானாம். விழிப்போடு இருக்கும் போதே மீட்பைக் கொடுக்கவும் பெறவும் முடிகிறது.

**முடிவுரை :**

நாமும் இறைவனுடன் விழித்திருந்து இறைவேண்டல் செய்யவும் மீட்பு பெறவும் பிறர் வாழ்வு பெறவும் நம்மை அர்ப்பணிப்போம்.

**திரு. T. எட்வர்டு S. ராபின்சன்**

**26-02-2012**

## கிறிஸ்துவும் ஓரங்கப்பட்டோரும்

**CHRIST AND THE MARGINALIZED**

| | |
|---|---|
| வி.ப. 3 : 7 – 18 | யாக். 5 : 1 – 11 |
| திபா. 54 | லூக். 5 : 12 – 16 |

"இயேசு கையை நீட்டி, அவரைத் தொட்டு நான் விரும்புகின்றேன், உமது நோய் நீங்குக, என்றார். உடனே தொழுநோய் அவரை விட்டு நீங்கிற்று" (லூக். 5 : 13).

**முன்னுரை :** ஓரங்கப்பட்டோர் அல்லது விளிம்புநிலையினர் என்பவர் ஒரு குறிப்பிட்ட மக்களின் கீழ் நிலை அல்லது விளிம்பு நிலையிலுள் சிக்கலானப் படிநிலை. சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார நிலைகளில் விளிம்புக்குத் தள்ளப்படுகின்ற நிலையாகும். சமூகத்தில் பொதுவாக பெண்கள், ஏழைகள் வாய்ப்புகள் மறுக்கப்பட்டோர் இந்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். காலணியாதிக்கத்தால் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு சமூகம் தங்களுடைய நிலங்களையும், வாழ்வாதாரங்களையும் நல்ல கலாச்சார தகவுகளையும் உரிமையையும் இழந்து விடுகின்றனர். ரூத். 1-ஆம் அதிகாரத்தில் நகோமி விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட சூழலைப் பார்க்கின்றோம். லூக்கா நற்செய்தி நூல் இவ்வாறாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டோருக்குக் கிறிஸ்துவின் பணி அவர்களை மையத்துக்குக் கொண்டு வரும் விதம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் குறித்து சித்தரிப்பதைச் சிந்திப்போம்.

### விளிம்பு நிலையினர்

விளிம்பு நிலை மக்களைக் குறித்து லூக்கா நற்செய்தி நூல் அதிக அவா கொண்டுள்ளது. குறிப்பாக லூக். 6 -ல் ஏழைகள் லூக். 12-இல் சிறுமந்தை லூக். 14-இல் ஏழைகள், பார்வையற்றோர்... லூக். 18-இல் சிறு பிள்ளைகள் லூக். 16:20-இல் லாசர், இவர்கள் யாவரும் கிறிஸ்துவால் ஏற்றுக் கொள்ளப்படுதலும், லூக். 1 : 50-53 அஞ்சி நடப்போருக்கு இரக்கம், செருக்குடையோருக்கு... லூக். 3 : 17 கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அணையா தீயிலிட்டுச் சுட்டெரிப்பார். லூக். 13-இல் மனம்மாறாவிடில் அழிவு, லூக். 16 செல்வந்தர் லூக் 18 :18 இறையாட்சிக்கு உட்படாத செல்வர் என இறையாட்சி தகவுகளை மறுதலிப்போரையும் காணலாம்.

### தொழுநோயாளி



**24-02-2012**

*லெந்துகாலம் : வெள்ளி*

## விழித்திருக்கக் கூடாதா?

மத்தேயு 26 : 36–46

"... ஒரு மணிநேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?" (மத். 26 : 40ஆ)

"விடிகாலை நேரத்திலே விழித்திருந்து கனா கண்டேன்
கனவெல்லாம் நனவாகி விடுதலையை வெல்லக்கண்டேன்"

என்றார் கவிஞர் ஒருவர். இயேசுகிறிஸ்து விழித்திருத்தலின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்தார். தம் சீடர்களுக்கும் விழித்திருக்கக் கற்றுக் கொடுத்தார். பாடுகளை வெற்றிக்கொள்ள விழித்திருந்து இறைவேண்டல் செய்ய கெத்சமனேத் தோட்டத்திற்குத் தம் சீடர்களோடு கூட இயேசு சென்றார். இறை வேண்டலில் இணையாமல் உறங்கிக் கொண்டிருந்த சீடர்களுக்கு விழித்திருந்து இறைவனிடம் வேண்டுதல் செய்ய ஊக்குவித்தார். பாடுபட தம் உடலையும், உள்ளத்தையும் பக்குவப்படுத்திய பின்பு எழுந்திருங்கள் என்றுச் சொல்லி சீடர்களோடு கெத்சமனேத் தோட்டத்திலிருந்து வெளியே வந்தார். இயேசுகிறிஸ்து சீடர்களுக்குத் கற்றுக்கொடுத்த நற்பாடத்தைத் தொடர்ந்து காண்போம்.

### 1. என்னோடு கூட விழித்திருங்கள் :

இயேசு கிறிஸ்து தம்தந்தையின் திருவுளம் தன்னில் நிறைவேறும் காலம் வந்துவிட்டதை உணர்கிறார். தம்மைப் பலியாக ஒப்படைக்க தம்மை ஆயத்தம் செய்ய எண்ணினார். எனவே தமது சீடர்களைத் தம்மோடுகூட அழைத்துச் சென்று கெத்சமனேத் தோட்டத்தில் "எனது உள்ளம் சாவுவருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது, நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள்" என்று கூறினார் (மத். 26 : 38). மேலும், இயேசு கிறிஸ்து சற்று அப்பால் சென்று முகங்குப்புறவிழுந்து "என் தந்தையே முடிந்தால் இத்துன்ப கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும், ஆனாலும் என் விருப்பப்படி அல்ல உம்முடைய விருப்பப்படியே நிகழட்டும்" என்று கூறி இறைவனை நோக்கி வேண்டினார் (மத். 26 : 39). சீடர்களிடம் வந்து ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? என்று கேட்டார். இயேசு தனியாக எதையும் செய்ய விரும்பினதில்லை. எப்பொழுதும் தம் சீடர்கள் தன்னுடன்

நொடியில் கூட புன்முறுவலோடு எதிரிகளை வரவேற்க முடிந்தது. இப்படி எந்த நிலையிலும் பயந்து விடாமல் துணிந்து செயல்பட, நமது பட்டயத்தை உறையில் போடுவது அவசியமானது.

### 3. அமைதியை மீட்க

உலகில் இன்று அமைதி, பட்டயத்தின் முன்பு மண்டியிட்டு நிற்கிறது. மனித உயிர்கள் பறிக்கப்படுவது சாதரணமாக நடக்கிறது. இந்தச் சூழலில், வீழ்ந்து போன அமைதியை எழுந்துநிற்கச் செய்யும் ஆற்றல் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு உண்டு. ஒருவேளை, சீமோன் பேதுரு செய்த செயல், அமைதியைத்தர அல்ல அமைதியை குலைக்கவே எனவே தான் இயேசுகிறிஸ்து பட்டயத்தை உறையில் போடும்படிக் கூறினார்.

மீக்கா இறைவாக்கினர் பட்டயங்கள் எல்லாவற்றையும் விவசாயக் கருவிகளாக மாற்றும்படியாக அழைப்பு கொடுக்கிறார் (மீக்கா 4 : 3). தூய பவுலார் அதற்கு ஒரு படி மேலேச் சென்று, கடவுளின் வார்த்தையைப் பட்டயத்திற்கு நிகராக ஒப்பிடுகின்றார் (எபேசியர் 6 : 17). கடவுள் வார்த்தை எனும் பட்டயமே நமக்கு அமைதியைக் கொண்டு வரும்.

நமது மதிப்பிற்குரிய முன்னாள்முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேரு அவர்கள், “சண்டைக்குப் பின்வரும் அமைதியைவிட என்றும் சண்டையே இல்லாத அமைதியே நமக்கு வேண்டும்” என்றார்.

அன்பிற்குரியவர்களே ! இந்த உலகில் நம்மைக் காத்துகொள்ளவும், பயம் எனும் நோயை நீக்கவும், அமைதியை நிலைநாட்டவும், இயேசு கிறிஸ்து கூறியபடி வன்முறைக்கும், அழிவுக்கும் நேராக வழிநடத்தும் பட்டயங்களை உறையிலே போடுவோம், அழியாத நிலை வாழ்வைச் சொந்தமாக்குவோம் !.

**திரு. M. கிதியோன்**



**29-02-2012**

*லெந்துகால புதன் தியானங்கள்*

## சிலுவையில் அறையப்பட வேண்டியவைகள்

கலா. 6 : 12–18

துளிர்விடும் நாட்களில் பயணித்திருக்கும் நாம் அனைவரும் ஆன்மீக மணம் நிறைந்த வாழ்வு வாழ வேண்டுமென்று கடவுள் விரும்புகின்றார். “துளிர்விடுதல்” எனும் நிகழ்வு எதற்காக முறைப்படுத்துள்ளது.

1) ஆன்மீகத்தை வளப்படுத்த

2) ஆண்டவர் உறவில் ஒன்றிக்க

3) அடுத்திருப்போரோடு நல்லுறவு ஏற்படுத்த

4) அருட்பணியின் எல்லையை விரிவுப்படுத்த

இதுவே முக்கியமான படி நிலையாகும். தொடக்க காலத்தில் லெந்து நாட்கள் தவக்காலம், நோன்புக்காலம் என்று முதன்மைப்படுத்தி தனி மனித திருப்பத்திற்கு வழிகாட்டினார். ஆனால் தொடர்ந்து திருச்சபையில் ஏற்பட்ட ஆன்மிக மறுமலர்ச்சி, இறையியல் தெளிவு, ஒப்படைப்பு இவைகளின் வாயிலாக தனி மனித மாற்றம் மட்டுமல்ல, சமூக மாற்றமும் அடிப்படை என்ற நிலையில் பக்திக்குரிய வாழ்க்கையை நெறிப்படுத்தினார். இதன் வழியாக சிலுவை குறித்து தெளிவான எண்ணங்களும், புதுமையான புரிந்து கொள்ளுதலும், நல் எதிர்நோக்கோடு கூடிய விசுவாச வலிமையும் வலுவூட்டு பெற்றது. ஆகவே இந்நாட்களில் பற்றுமையின் தளத்தில், பண்புள்ள, பக்குவமுள்ள வாழ்வு வாழ பயனுள்ள முறையில் பயன்படுத்துவோம். திருமறையைத் திரும்ப திரும்பப் படித்துத் திருத்தம் பெறுவோம். அந்தத் திருத்தமே இறைவனுக்கு நேராக நம்மை திருப்பட்டும். அதுவே அவரது திருவுளம் நிறைவேறுதலுக்குரிய ஊடகமாய் அமையட்டும்.

**29-02-2012**

***லெந்துகாலம் : புதன்***

# பெருமை (PRIDE)

கலா. 6 : 11–18, கொலோ. 2 : 6–7

தி.வசனம் : நானோ நம் ஆண்டவர்................ (கலா. 6 : 14)

பெருமை மானிட வாழ்வை அழித்து விடும் ஆற்றல் நிறைந்தது. பெருமை உள நோயின் வெளிப்பாடு என்று குறிப்பிடுகின்ற கூற்றுகளும் உண்டு. மட்டுமல்ல இது தங்களைக் குறித்து நம்பிக்கையற்றிருப்பவர்களின் செயல் என்றும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. பவுலாரைக் குறித்து நாம் அறிந்திருப்பது அவர் அறிவு திறன் பெற்றவர், சுதந்திரவாளியானவர், சட்டத்தை அறிந்தியிருந்தவர் என்பது தான். ஆனால் அவரோ "சிலுவைக்கு முன் இவையெல்லாம் ஒன்றுமில்லாதது" என ஏற்றுக் கொள்கிறார். ஊனியல்படி ஏற்படும் பெருமையை விட ஆபத்தானது ஆன்மிகப் பெருமை. இதிலே திருச்சபை விழிப்புணர்வு பெறுவது முக்கியமானது. மட்டுமல்ல அத்தகையப் பாவத்திலிருந்து விடுக்கப்படுதலே சிறப்பானது. இவைகளிலிருந்து விடுபட பவுலார் குறிப்பிடும் சிந்தைகளைப் புரிந்து கொள்வோம்.

## 1. கிறிஸ்து இயேசுவில் வேரூன்றுங்கள் : (கொலோ. 2 : 6,7)

மனிதன் தன்னைக் குறித்துள்ள தவறான எண்ணத்தை மாற்றி சுயம் என்ற வட்டத்தைத் தாண்டி வரவேண்டுமெனில் கிறிஸ்து இயேசுவில் வேரூன்றுவது சிறப்பானது. மரம் உறுதியாக நிற்க வேண்டுமெனில் அதனுடைய வேர் ஆழமாகப் பதிக்கப்பட வேண்டும். அப்போது மட்டுமே உறுதியுடன் நின்று பலன் கொடுக்க முடியும். உறுதியற்றவையோ உலர்ந்து போகும். அவ்வாறாகவே கிறிஸ்து இயேசுவில் வேரூன்றும் போது தன்னலத்தை துறக்கிறோம். கிறிஸ்தவ வாழ்வில் பெருமை இன்று மிகக் கொடிய நிலையில் சென்றுள்ளது. சிலுவைக்கு எதிராக ஆன்மிகப் பெருமை பற்றியிருக்கிறது. இதன் விளைவு தள்ளப்படுதலே (ஏசா. 14 : 12-15) என்பதை இக்காலத்தில் புரிந்துகொள்ள வேண்டும், மேலும் பெருமையுள்ளவர்கள் கடவுளின் ஆசியைப் பெறுவது கடினமாகும் (1பேதுரு 5 : 5). ஆகவே நமக்கு போதிக்கப்பட்ட போதனையின் அடிப்படையில் கிறிஸ்து இயேசுவில் வேரூன்றுதல் பலன் கொடுக்கவே நம்மை ஒருமுகப்படுத்தும்.

## 2. கிறிஸ்து இயேசுவில் கட்டி எழுப்புங்கள்

தன்னலமும் தப்பிச்செல்லும் வழிமுறைகளும் கொண்ட மனிதர் தம்



இன்று பட்டயங்கள், சிறு குழந்தைகள் வழியாகக் கூட தீவிரவாதத்தையும், அழிவையும் கொண்டு வருவதை ஊடகங்கள் உறுதி செய்கின்றன. குழந்தைகள் கைகளில் பொம்மைகளுக்குப் பதில் துப்பாக்கிகளே இடம் பிடிக்கின்றன. அமெரிக்காவில் புளோரிடாவில் உள்ள போர்ட் லாடர் டேல் என்ற இடத்தைச் சேர்ந்தவர் ஜூலியா பென்னட். 33 வயதான இவருக்கு 2 வயதில் டிராய் பெய்லி என்ற ஒரு மகன் இருந்தான். அவன், தரையில் கிடந்த துப்பாக்கியை எடுத்தான். அதில் குண்டுகள் நிரப்பப்பட்டிருருந்தன. அதனை விளையாட்டுத் துப்பாக்கி என நினைத்த அவனது தந்தை ஜூலியாவும், அதைச் சாதாரணமாக எடுத்துக்கொண்டார். ஆனால், அந்தத் துப்பாக்கியைக் கொண்டு ட்ராய் பெய்லி தன் தாயாரைச் சுட்டான். இதில் அவர் இறந்தார் (தினத்தந்தி 24-04-2011). பட்டயம் அதனை எடுப்பவர்க்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் அழிவைக் கொண்டு வருவது உறுதி. இயேசு கிறிஸ்து கூறுவது போன்று பட்டயத்தை உறையில் போடுவதே, அதைத் தடுக்க சிறந்த வழி.

## 2. பயத்தை நீக்க

பொதுவாக, பயத்தின் மிகுதியினாலேயே பெரும்பாலானோர் பட்டயம் எடுப்பதாக அறிஞர்கள் கூறுகின்றார்கள். அதற்கு உதாரணமாக பட்டயம் மூலமாக இலட்சக்கணக்கானோரைக் கொன்றுக் குவித்த அடால்ப் ஹிட்லரைக் காட்டுகின்றனர். ஹிட்லர் இயல்பாக சிறு வயதிலேயே பயந்த குணம் கொண்டவர். அவரது எதிரிகளாக அவர் கருதிய அனைவரையும் கொன்றொழிக்கக் காரணம், அவர்களை எதிர்கொள்ள இயலாது என்ற அவரது பயமே ஆகும். மேலும் தனது வாழ்வைத் தற்கொலை மூலம் முடிவு செய்தார். இதுவும் அவரது பயந்தத் தன்மையைக் காட்டுகிறது எனலாம். இப்படி, பட்டயத்தை ஏந்தியவரின் பின்னணியில் பயம் என்கிற ஒரு குணநலத்தைக் காணமுடிகிறது.

இங்கே, மல்குசின் காதை வெட்டிய சீமோன் பேதுருவும் பயம் நிறைந்த ஒரு மனிதர் தான். இதனை அவரே பலமுறை நிரூபித்திருக்கிறார். இயேசு கிறிஸ்து ஒருமுறை கடல் மீது நடக்கும் போது, நானும் நடப்பேன் என்றார் பேதுரு. அதற்கு இயேசுவும் சம்மதித்தார். ஆனால் பயத்தினால் கடலில் மூழ்க, இயேசுவால் காப்பாற்றப்பட்டவர் தான் பேதுரு (மத்தேயு 14 : 22-32). அதுபோன்றே, இயேசு கிறிஸ்து தமது மரணத்தை முதன் முதலாக அறிவித்த போதும், பயந்து போன பேதுரு இயேசுவிடம், இப்படி நடக்கக் கூடாது எனக்கூறி இயேசுவால் கடிந்துக் கொள்ளப்பட்டார். (மத்தேயு 16 : 21-28). என்னை மறுதலிப்பாய் என இயேசு கிறிஸ்து முன்குறித்த போது வீர வசனம் பேசிய பேதுரு, துன்பம் வந்தபோதோ பயந்து மறுதலித்து ஓட்டம் பிடித்தார் (மத்தேயு 26 : 69-75).

ஆனால் இயேசு கிறிஸ்துவோ துன்பத்தினை எதிர்கொள்ளும் உறுதியான மனப்போங்கைப் பெற்றிருந்தார். எனவே அவரால் அந்த கடைசி

**01-03-2012**

*அருணோதயத் தொழுகை*

## பரிகாரியாகிய ஆண்டவர்

திப. விப. 15 : 22–27

"... நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்" (விப. 15 : 26ஆ).

செங்கடல் வழியாகக் கடவுளுடைய நடத்துதலைக் கண்ட இஸ்ரயேலர் சூர் வனாந்திரம் வழியாகப் பிரயாணப்பட்டார்கள். ஆனால் அங்கே தண்ணீர் கிடைக்காததால் மூன்று நாட்கள் தண்ணீரின்றி மாராவிற்கு வந்தார்கள். (15 : 23) மாரா என்ற பெயருக்கேற்ப அங்குள்ள தண்ணீர் கசப்பாய் இருந்தது. செங்கடலைப் பிளந்த ஆண்டவரைத் துதித்துப் பாடிய இஸ்ரயேலர் மாராவின் கசந்த நீரின் காரணமாகக் கடவுளுக்கு எதிராக முறுமுறுத்தார்கள் (15 : 24) கடவுளின் கரத்திலிருந்து நன்மை பெறும்போது அவரைத் துதிப்பதும் துன்பச் சூழலில் அவருக்கு எதிராக முறுமுறுப்பதும் நமது வாழ்விலும் காணப்படும் இயல்பான நிலையாகும். ஆனால் தீமைகள் அல்லது எதிரிடையான அனுபவங்கள் வரும்போது அதற்குப் பரிகாரம் (remedy) உண்டு என்பதை மறந்து போகிறோம். இதை உணர்த்தவே ஆண்டவர் மோசேயிடம் நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்கிறார். இங்கே கூறப்படும் பரிகாரம் என்ற சொல்லை வெறும் குணமாக்குதல் (Healing) என்று மட்டும் புரிந்து கொள்ளாமல் Remedy என்று புரிந்து கொள்வது அதிக பொருளுள்ளதாகும். இப்புதிய மாதத்தில் கடவுள் நமது வாழ்வில் எங்ஙனம் பரிகாரியாக இருந்து செயல்படுகிறார் எனத் தியானிப்போம்.

### 1. கசப்பை மாற்றுபவர்

மாரா என்றால் கசப்பு (Bitter) என்பது பொருள். தங்கள் விடுதலைப் பயணத்தின் போது மாராவில் வந்த இஸ்ரயேலர் கசப்பான தண்ணீரைக் குடிக்க முடியாமல் வேதனைப்பட்டார்கள். முறுமுறுத்தார்கள். இந்த இக்கட்டான வேளையில் மோசே கடவுளிடம் விண்ணப்பம் பண்ணினார். அவர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அம்மரத்தின் துண்டு தண்ணீரில் போடப்பட்டவுடன் தண்ணீர் கசப்பு நீங்கி சுவையாய் மாறிற்று (15 : 25) வாழ்க்கையில் கசப்பான வேதனையான அனுபவத்தை எதிர்கொண்ட நகோமி (பிரியமான) தமது பெயரை மாரா என மாற்றிக் கொள்ளவேண்டும் என தமது ஊராரிடம் கூறினார் (ரூத் 1 : 20). ஆனால் நகோமியின் பரம்பரையை இயேசுவின் பரம்பரையில் இணைத்துப் பெருமைப் படுத்தினார் கடவுள் (மத். 1 : 5). இவ்வாறு வாழ்வில் கசப்புகள் வந்தால் விடிவில்லையா என்ற ஏக்கம் மனித வாழ்வில் வருவதுண்டு. ஆனால் மாராவின் கசப்பு நீங்க ஒரு மரம் இருந்தது போல வாழ்வில் கசப்புகள் நீங்க இயேசு இருக்கிறார். கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரைச் சுவையுள்ள இரசமாக மாற்றினவர் (யோவா. 2 : 1-10) நமது வாழ்வையும் சுவையாக மாற்றுவார்.

### 2. வியாதியை விலக்குபவர்

எகிப்தியர்களின் வாழ்வில் கடவுள் வரப்பண்ணின சுகவீனங்களைக் கண்டு பயந்துபோன இஸ்ரயேலர் தங்கள் வாழ்விலும் அப்பேர்ப்பட்ட வியாதிகள் வந்து விடுமோ என அஞ்சி கவலைப்பட்டனர். ஆனால் கடவுள் அவர்களிடம் நீங்கள் எனது பார்வைக்கு நலமானதைச் செய்தால் நோய்களை உன்மேல் வரவிடமாட்டேன் (15 : 26) என்றார். இயேசு கிறிஸ்துவும் இவ்வுலகில் சுகவீனர்களுக்குச் சுகம் அருளி அவர்களை ஆற்றல்படுத்துகிறவராகவே சுற்றித்திரிந்தார். அதுவே தம்முடைய பணி என்று பிரகடனப் படுத்தினார் (லூக். 4 : 18, 19). எனவே பலர் இயேசுவிடம் வந்து சுகம் பெற்றனர் (மத். 8 : 2, 3) 27 - 29). சிலரைத் தேடிச்சென்று சுகம் அருளினார் (யோவா. 5 : 1-10) என்றும் காண முடிகிறது. இன்றும் நமது வாழ்வின் எல்லா சுகவீனங்களிலிருந்தும் சுகம் அருளி ஆற்றல்படுத்துபவர் அவர் என்பதை உணர்வோம். நமது வியாதியை விலக்கும் அவர், நமது சுகவீனங்களுக்கெல்லாம் பரிகாரியாவார்.

### 3. தேவைகளை நிறைவு செய்பவர்

தண்ணீரில்லை (emptiness) கசப்பு (Bitterners) போன்றவற்றை அனுபவித்த இஸ்ரயேலர் ஒலீமுக்கு வந்தபோது 12 நீரூற்றுகளும், 70 பேரீச்ச மரங்களும் இருந்தன. அவர்கள் தண்ணீருள்ள இடத்திலே குடியிருந்தார்கள் (15 : 27). இங்கே குறிப்பிடப்பட்டுள்ள 12 நிரூற்றுக்களும் 12 கோத்திரங்களைக் குறிப்பதாகவும், 70 பேரீச்ச மரங்கள் என்பது முழுமையான, நிறைவான (ஏழு என்பது முழுமையைக் குறிப்பதாகக் கருதப்பட்டது) என்றும் புரிந்து கொள்ளலாம். இதுவரை இருந்த வேதனையான அனுபவங்கள் மாற்றப்பட்டு, நிறைவான மகிழ்வான வாழ்வை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். திருப்பாடகர்.... நாங்கள் துன்பத்தைக் கண்ட ஆண்டுகளுக்கு நிகராய் எங்களை மகிழ்ச்சியாக்கும். (தி.பா. 90 : 15) என்கிறார். காரணம் கடவுள் ஒருவரே துன்பம் அகற்றி மகிழ்வான வாழ்வைத் தர முடியும். கடந்து வந்த பாதையில் சகப்புகள், சுகவீனங்கள் இவற்றைக் கண்டு துவண்டிருப்போமென்றால் கசப்பகற்றும் கடவுளை நோக்கிப்பார்ப்போம். அவர் கசப்புக்குப் பதில் மதுரத்தையும், சுகவீனத்திற்குப் பதில் ஆரோக்கியத்தையும், துக்கத்திற்குப் பதில் மகிழ்ச்சியையும் அருளுவார்.

**அருள்திரு. பிரைட் சாலமோன்**

**02-03-2012**

***லெந்துகாலம் : வெள்ளி***

# வாள்களோடு.... வந்தது ஏன்?

மத்தேயு 26 : 51 – 56

அப்பொழுது இயேசு அவரிடம், "உனது வாளை அதன் உறையில் திரும்பப் போடு. ஏனெனில் வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்துப் போவர்". (மத். 26 : 52)

கள்வனைப் பிடிக்க வருவது போல் வாள்களோடும் தடிகளோடும் என்னைக் கைது செய்ய வந்தது ஏன்? (மத் 22 : 55)

நாம் சிந்தனைக்காக எடுத்துக் கொண்டப் பகுதி இன்றைய சூழலுக்கு முற்றிலும் பொருந்தக் கூடிய நலமான ஒரு பகுதி ஆகும். ஏனெனில் இன்று, உலக நாடுகள் அனைத்தும் வெளிப்படையாக ஆயுதத் தடைச் சட்டத்தில் கையெழுத்திட்டுக் கொண்டு ஆயுதங்களை மறைமுகமாய்க் குவிக்கின்றன. இந்நிலையில் "பட்டயத்தை உறையிலே போடு" என்ற இயேசுவின் நலவுரை நிச்சயம் சிறப்பான ஒன்றே.

போர் வீரர்கள் இயேசுவின் சீடரான யூதாஸ் காரியோத்தின் துணை கொண்டு, அவரைப் பிடிக்க வந்தார்கள். நீதிபரராம் இயேசு கிறிஸ்துவைப் பிடிக்க அநீதியான பட்டயங்களோடு, கும்பலாக வந்தனர் போர் வீரர்கள். அப்பொழுது, இயேசுவுடன் இருந்த சீடர்களில் ஒருவர் மால்குஸ் என்ற தலைமைக் குருவின் பணியாளரின் வலதுக் காதைத் தனது வாளால் வெட்டினார். இதைக் கண்டுப் பதறிப் போன இயேசு கிறிஸ்து, கதறி அழுத பணியாளரின் காதைக் குணமாக்கியதோடு, "உனது வாளை அதன் உறையில் திரும்பப் போடு. ஏனெனில் வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்துப் போவர்" எனக் கண்டித்தார். வாள்களோடு ஏன் வந்தீர்கள் என்று கேட்டு, "பட்டயத்தை உறையிலே போடு" என இயேசு ஏன் கூறுகிறார் ஏன் பட்டயத்தை உறையிலே போடவேண்டும்?

## 1. நம்மைக் காக்க

பட்டயம் நம் கையில் இருக்கும் வரை "பணி" நமக்கு உண்டு. அதுபோல, பட்டயம் நம் கையில் இருக்கும் வரை "சாவு" நமக்கு உண்டு என்பதை மறுக்க முடியாது. பட்டயத்தை எடுத்துச் சிந்திக்காமல் வெட்டிவிட்டார் சீடர் (மத். 26:51). இயேசுவைக் காக்கவே பட்டயத்தை எடுத்தார், ஆனால் பட்டயம் வன்முறையின் அடையாளம், அதனை இயேசு ஏற்காததினால் பட்டயத்தை உறையிலே போடும்படி கேட்டுக் கொண்டார்.



இயல்பான நிலையைச் சிந்திக்காமல் நியாயப்படுத்தும் செயலைச் செய்கிறதை இன்றைய கால கட்டங்களில் அறியலாம். இதற்குக் காரணம் என்னவெனில் விசுவாசமின்மையே ஆகும். ஆகவேதான் பிறர் புகழ்ச்சியில் மயங்குவதும், தங்களையே பெரிதாக எண்ணி பெருமைக் கொள்வதுமாக மனிதர்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். தூய பவுலார் இந்த நிலையிலே தான் சிலுவை எனக்கு மேன்மை எனக் குறிப்பிடுகிறார். வீட்டின் அடித்தளம் உறுதியாக இருந்தால் மட்டுமே கட்டிடம் வலுவாக நிற்கும் (மத். 7 : 24, 25). இல்லையெனில் பரிதாபமே. அவ்வண்ணமாக ஆன்மிக பயணத்தில் அக்கரைக்குப் பயணித்துக் கொண்டிருக்கும் நாம் நம்மை நிலைகுலையச் செய்கிறப் பெருமை எனும் பாவத்தை முளையிலே கிள்ளி எறிய வேண்டும். அதற்கு இறை இயேசுவில் இணைந்து கொள்ள வேண்டும்.

## 3. கிறிஸ்து இயேசுவில் உறுதியுடன் நில்லுங்கள்

தங்களை மட்டுமே அறிவாளிகளாக எண்ணி உயர்வு மனப்பான்மை கொண்டிருக்கும் உலகில், கிறிஸ்து இயேசுவில் ஒன்றிப்பதே வெற்றியினைத் தரும் என்ற சிந்தையை வளர்க்க வேண்டும். ஆன்மிகப் பெருமையால் தங்களை மக்கள் முன் நேர்மையாளராகக் காட்டிக் கொள்கின்றவர்களைக் கடவுள் அருவருக்கிறார். அவர்களது வேண்டுதல்கள், நோன்பிருத்தல் முறைகள், பத்திலொரு பங்கைக் கொடுத்தல் போன்றவைகளையும் வெறுக்கிறார் (லூக். 18 : 9-14). மட்டுமல்ல செல்வப் பெருமையும் ஏற்புடையதல்ல (தி.பா. 62 : 10, எரே. 49 : 4). அனைத்து வளங்களுக்கும் காரணர் கடவுளே (1 குறி. 29 : 12, யாக். 1 : 17). ஊனியல்பில் அவரையே மறந்து பெருமை கொள்வது, வெட்டப் பயன்படுத்துகிறவனுக்கு மேலாக கோடாரி தன்னை மேன்மைப்படுத்துவதுப் போலும் (ஏசா. 10 : 15). வேரிலிருந்து ஊட்டம் பெறும் கிளையை போலும் தான் உள்ளது (உரோ. 11 : 18). ஆகவே எவரும் எதைக் குறித்தும் பெருமை பாராட்டாதபடி இறையருளைப் பற்றி நிற்பது சிறப்புக்குரியதாகும் (எபே. 2 : 9).

துளிர் விடும் நாட்களில் உலகப் பெருமையைத் தேடாது, உன்னதரில் நாம் பெற்றிருக்கும் மீட்பின் அடையாளமான சிலுவையைக் குறித்தே மேன்மைப் பாராட்டுவோம். அதுவே நமது விண்ணக வாழ்விற்குரிய வாயிலாகும்.

**அருள்திரு. R. சாம் பிரின்ஸ்**

“நான் இறக்கவேண்டிய சூழல் வந்தாலும் எனக்கு இந்தநாள் வரைக்கும் எந்தத் தீங்கும் செய்யாத கிறிஸ்துவையும் கிறிஸ்தவத்தையும் நான் மறுதலிப்பதில்லை” என்று அவர் கூறினார். இயேசுவின் கேள்வி, அநியாயமாய் இன்று பல்வேறு துன்பங்களை அனுபவிப்போரை இன்று நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

**3. சமய வெறியால் துன்புறும் மானுடத்தின் கேள்வி** : (திப. 9 : 5)

சமய நம்பிக்கை எல்லா மனிதரிடமும் உண்டு. ஆனால் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் பிறரை ஏற்றுக்கொள்ளாமலும், பிறரை ஒடுக்குவதாலும் பல பிரச்சனைகள் எழுகின்றன. தூய பவுல் யூத சமயத்தின் மீது அளவற்ற பற்றும் நம்பிக்கையும் உடையவர். அந்தப் பற்றினால் பிற சமயத்தினரை அழிக்கவும், துன்புறுத்தவும் அதற்காக முயற்சி செய்து அதற்காகப் போகும் வழியில், தமஸ்குவில் தடுத்தாள் கொள்ளப்படுகிறார். **மேசிய பற்றிய நம்பிக்கை யூத சமயத்தின் கொள்கையும் கூட**. ஆனால் யார் அந்த மேசியா என்று புரிந்து கொள்ளாமல் அவரையே துன்புறுத்தினார். “நீ துன்புறுத்தும் இயேசு நானே” என்று இறைவனின் கருணைச் சத்தத்தையும் கேட்டார்.

இன்றைய சூழ்நிலையில் கிறிஸ்தவர் என்ற பெயராலே பல்வேறு தீமைகளைச் செய்கிறோம். திருச்சபையில் பிரிவினைக்கும், வன்முறைக்கும் காரணமாகிறோம். பதவிகளைத் தவறாகப் பயன்படுத்துகிறோம். நமது செயல்பாடுகள் கிறிஸ்துவை வேதனைபடுத்துவதாக இல்லையா?

ஒரிசாவில் 2008-09-இல் கிறிஸ்தவர்களுக்கு எதிரான துன்புறுத்தல் நடைபெற்ற வேளையில் கிறிஸ்தவத் திருச்சபைகள் கந்தமால் மாவட்டத்தில் துன்பத்திற்கு இறையாயின. அந்நாட்களில் 2009 அக்டோபர் 26 இரவு 8 மணிக்குச் சித்தரஞ்சன் டயல் என்ற நபரும் அவருடன் ஐந்து பேரும், போதகர் சைமன் நாயக் என்பவரைக் கொலை செய்யவும், பணியாற்றி வந்த திருச்சபையைத் தீக்கிரையாக்கும் நோக்கத்துடன் காடு வழியாக வந்தனர். ஆனால் அவர்கள் சென்ற பாதையில் திடீரென பேரொளியுடன் கூடிய காட்டுயானையின் சத்தத்தைக் கேட்டு பயந்தனர். ஒரு சத்தம் ஒளியிலிருந்து வந்தது : “என் மக்களைத் துன்புறுத்தாதே நான் இயேசு”. இதைக் கேட்ட அவர் பயந்து நடுங்கி அதே போதகரிடம் சென்று நடந்ததைச் சொல்லி திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவராக மாற்றப்பட்டுச் சாட்சியாக வாழ்ந்து வருகிறார்.

கிறிஸ்து இன்றும் செயல்படுகிறார் என்பதற்கு இது ஒரு சான்று. நாம் இன்றும் நம்முடைய செயல்பாடுகளால் அவரை அடிக்கிறவர்களாய் இருக்கிறோமா இல்லை அரவணைப்பவர்களாய் இருக்கிறோமா. சிந்திப்போம். அவரின் பிள்ளைகளாய் செயல்புரிவோம்.

**திரு. B.S. எட்வின் சேம்**



**04-03-2012**

***(உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு)***

# பிழை பொறுக்கும் கிறிஸ்து

**Christ Forgives Sin**

| | |
|---|---|
| ஏசா 1 : 10 – 20 | 1 யோ. 1 : 5 – 22 |
| தி.பா. : 103 : 1 – 14 | மாற். 2 : 1 – 12 |

**முன்னுரை :**

இறைவன் மனிதனைத் தமது சாயலாக உருவாக்கி, தமது சொல்லுக்கு அடிபணிந்து, ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ள ஆதியில் ஏதேனில் குடியமர்த்தினார். ஆனால் மனிதனோ இறைவனின் கட்டளையை மீறி தவறு செய்து தண்டனையை அனுபவித்தான். இதனையே திருமறை பிழை அல்லது பாவம் என்கிறது. கட்டளையை மீறுவது பாவமாகும். (யோவா. 3 : 4) பாவத்தின் சம்பளம் மரணம் (உரோ. 6 : 23). மாறாக கடவுள் கொடுக்கும் அருட்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலை வாழ்வு ஆகும். அப்பெருவாழ்வு பெற பிழையற்ற வாழ்வு தேவை. அதை அருள்பவர் இயேசு ஒருவரே. அவ்வாழ்வு பெற அவசியமான அம்சங்கள் ...

**1. பிழை அறிதல் :** (ஏசாயா 1 : 16)

பிழையைப் பிழையென்றியாப் பிழையே
பிழையினுள் எல்லாம் பிழையே

கிமு. 8-ம் நூற்றாடின்பிற்பகுதியில் எருசலேமில் வாழ்ந்த ஏசாயா இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு யூதா மக்களிடம் அனுப்பப்பட்டார். யூதாவின் மக்கள் கடவுள் மீது நம்பிக்கை இழந்து, அவருக்குப் பணியாது துணிந்து பாவம் செய்து வாழ்ந்தனர். எனவே எழுச்சியூட்டும் சொற்களாலும், செயல்களாலும், யூதா மக்களையும், அதன் தலைவர்களையும் கர்த்தரின் வார்த்தையைச் சொல்லிக் கண்டிப்பதுடன், இனிமேலாவது நீதியோடும், நேர்மையோடும் வாழுங்கள் என அறிவுறுத்துகிறார்.

இறைவன் தம்மை ஆராதிக்கவே அடிமை வீட்டிலிருந்து உரிமை நாட்டுக்கு தம் மக்களை அழைத்து வந்தார். (விப. 5 : 1). தமது சொந்த மக்களின் புத்தியில்லாத ஆராதனையையும், பக்தி இல்லாத காணிக்கைகளையும், அர்த்தமில்லாத பண்டிகைகளையும், கொண்டாட்டங்களையும் என் உள்ளம் வெறுக்கின்றது என வெளிப்படையாகக் கூறுகின்றார் (ஏசா. 1 : 14). எனவே தவறைத் தவறென

அறிந்து, பாவக்கறைகள் நீங்க கழுவித் தூய்மைப் படுத்தவும், தீமை செய்தலை விட்டுவிடவும், நன்மை செய்ய கற்றுக்கொள்ளவும், நீதியை நாடித்தேடி, பிறர்க்குப் பயன்தரும் பக்திவாழ்வு வாழ அறிவுரைக் கூறுகிறார். இறைவனின் வார்த்தைக்கு இணங்கினால் வாழ்வு, பிணங்கினால் அழிவு உறுதி என எச்சரிக்கிறார் தீர்க்கன்.

தூயாவியர் பாவத்தைக் குறித்த உணர்வுகளை வெளிப்படுத்தி பரிசுத்தமாய் வாழ வழி காட்டுகிறார் (யோ. 16 : 8). எனவே வசனத்தின் வெளிச்சத்தில் பிழை அல்லது பாவம் எது என தெளிவாய் அறிந்து அழிவுக்குத் தப்பித்துக் கொள்வது சிறப்பு.

**2. பிழையை அறிக்கையிடுதல்** (1 யோ. 1 : 9)

மனித சுபாவம் பாவக்கறை நிறைந்தது. இவ்வுண்மையை மறுப்பவர் பொய்யர். நான் பிழையில்லாதவன் என்பது பொய்யிலும் பெரும்பொய் ஆகும் (1 யோ. 1 : 8, உரோமர் 3 : 23). யூத சமய நம்பிக்கைப்படி பாவம் செய்கிறவர் சாவார் (எசே. 18 : 20) மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. (லேவி. 17 : 11) இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை (எபி. 9 : 22). எனவே யோவான் அப்போஸ்தலர் கிறிஸ்துவின் தியாக பலியினால் சிந்தப்பட்ட இரத்தத்தினால் பாவ மன்னிப்பு உண்டென்பதையும், மன்னிப்புப் பெற பாவங்களை அறிக்கை செய்ய வேண்டியதின் அவசியம் குறித்தும் அறிவுறுத்துகிறார். (1 யோ. 1 : 8-9). பாவத்தில் விழுவது மனித இயல்பு, ஆனால் அதிலே அமிழ்ந்து போகாது, மீட்படைய முயல்வது சிறப்பானது.

தம் குற்றப்பழிகளை மூடிமறைப்பவரின் வாழ்க்கை வளம் பெறாது. அவற்றை ஒப்புக்கொண்டு விட்டுவிடுகிறவர் கடவுளின் இரக்கம் பெறுவர். (நீதி. 28 : 13) பாவம் செய்தவர்கள் தாங்கள் செய்த பாவங்களில் எதையும் மறைக்காமல் அறிக்கையிட வேண்டும் (எண். 5 : 7) என்பது திருமறையின் நியதி. இளைய குமாரன் தனது தந்தையிடம் தவறுகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டு, அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றார். சகேயு தனது தவறை உணர்ந்து திருந்த தீர்மானித்தபோது கிறிஸ்துவின் மீட்பைப் பெற்றுக் கொண்டார்.

பாவத்தின் பலனாகிய மரணத்தின் பிடியிலிருந்து தப்பி மறுவாழ்வு பெற கிறிஸ்துவைக் கிருபாதார பலியாக்கினார் இறைவன். அவர் சிந்திய இரத்தம் பாவ அழுக்குகளை அகற்றி பரிசுத்தம் ஆக்குகிறது. அந்தப் பாக்கியம் பெற நமது பிழைகளை அறிக்கையிட்டு, விட்டு விலகி, தூய வாழ்வு பெறுவோம். திபா. 103 : 10-ன் படி அவர் நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மை தண்டிப்பதில்லை ... தந்தை தம் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவது போல ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இரங்குகிறார். எனவே அவர் இரக்கம்பெற நமது தவறுகளைத் தவறாது அறிக்கை செய்து மன்னிப்பின் மகிழ்வைப் பெறுவது அவசியம்.



இப்படி செய்திருக்கிறேனா என்று கேட்க பிலேயாமின் கண்கள் திறக்கப்பட்டன.

இன்றும் மனிதன் பிற உயிர்களை மதிக்காமல் அவற்றை வேட்டையாடுகிறான். (எ.கா.) Cell Phone Tower வளர்ச்சியின் போர்வையில் செய்யப்படுகிறது. ஆனால் அது உயிரினங்களையும், இயற்கையையும் அழிக்கிறது. மனிதன் அவற்றையும் பிலேயாமைப் போல் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்து அடக்கி ஆள நினைப்பது ஏனோ?

அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் 1873-ம் ஆண்டில் விலங்குகள் நலனுக்கான சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. 1966-ல் அதைத் திரும்பவும் வலுப்படுத்த கொழுப்பு, தோல், போர்வை, மாமிசம் என பிற பயன்பாட்டிற்காக விலங்குகள் கொல்லப்படுவதைத் தடுக்க அந்நாடு சட்டம் இயற்றியது. இந்தியாவில் முதலில் 1948-ம் ஆண்டிலும் தொடர்ந்து 1954, 1964 ஆகிய ஆண்டுகளில் பிறர் நலனுக்காக உயிர்கள் கொலை செய்யப்படுவதைத் தடுக்க சட்டம் இயற்றப்பட்டது. சட்டங்கள் இப்படி ஒருபுறம் இருக்க மீறல்கள் மறுபுறம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இன்று இயேசுவின் கேள்வியைத் தியானிக்கும் நாம் உயிர்களைத் துன்புறுத்துகிறோமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

**2. அநீதியினால் துன்புறும் இயேசுவின் கேள்வி**

அதிகாரம் படைத்தோர் தங்களுடைய அதிகாரத்தினால் பிறரை அடக்கியும், ஒடுக்கியும், அடித்தும் துன்பப்படுத்துகிற நிலை தொன்றுதொட்டு இன்றுவரை நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. இயேசு கிறிஸ்துவும் குற்றமற்றவராக இருந்தும் கைது செய்யப்பட்டுத் தலைமை குருவால் விசாரிக்கப்படும் போது தன்னுடைய குற்றமில்லாத் தன்மையை விளக்கிக் கூறினார். “நான் இத்தனை நாட்களும் உங்களுடனும், உங்கள் தொழுகைக்கூடங்களிலும் கற்பித்து வந்தேன்; எனக்குப் பதுங்கு குழிகளோ, மறைவிடங்களோ எதுவும் காணப்படவில்லை. மறைவாக எதையும் பேசியதில்லை. இல்லையென்றால் நான் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் சென்று கேட்டுப் பாருங்கள்” என்ற நிலையில் பேசினார். இப்படியா ஒரு தலைமைக் குருவுக்குப் பதிலுரைப்பது என்று சொல்லி தன்னிடமிருந்த அதிகாரச் செருக்கினால் காவலன் ஒருவன் அடித்தான். கடவுளின் ஆற்றலால் அவனிடம் “என்னை ஏன் அடிக்கிறாய்?” என்று திருப்பிக் கேட்கிறார். சாதாரண மனிதர்கள் தன் பகுதியிலுள்ள நியாயத்தை எடுத்து சொல்லக்கூட வாய்ப்பு மறுக்கப்படுவதை இப்பகுதி சுட்டி காட்டுகிறது.

புனித போலிகார்ப் என்பவர் திருச்சபையின் தந்தையர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவர். 2-ம் நூற்றாண்டில் சிமிர்ணாவின் பேராயராக பணியாற்றியவர். தனது 84-வது வயதில் கிறிஸ்தவத்தைக் கைவிடும்படி அதிகார வர்க்கத்தினரால் துன்புறுத்தப்பட்டார். அப்பொழுது

**07-03-2012**

***லெந்துகால புதன்***

# பெருந்தீனி (GLUTTONY)

லூக். 21 : 34–36
தி.வசனம் : லூக். 21 : 34

வாழ்வது சிலகாலம், ஆகவே கிடைப்பதையெல்லாம் சாப்பிடுவது நல்லது. இப்படி இன்றைக்குச் சிந்திப்பதையும், அதன் வழியாக துரித உணவகங்கள் சாலைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். வயிறுக்காக மட்டும் வாழ்வதாக எண்ணி செயல்படும் மனிதனைச் சிந்திக்க வைப்பது இக்கால கட்டத்தின் முதன்மையானதொன்றாகும். உடலை ஒடுக்குதல் நல்லது என்பது மருத்துவத் துறையால் அறிவுறுத்துகின்ற நல் ஆலோசனையாகும். அளவோடு உண்டு அமைதியான வாழ்வு வாழ்வது தான் சிறப்பு. வயிறுக்காக மனிதர் படைக்கப்படாமல், கடவுளுக்காக மனிதர் படைக்கப்பட்டவன் என்ற உணர்வை, உண்மையை, உள்ளத்தில் பதித்துக் கொள்வது தீமையை வெற்றி பெறுவதற்குரிய வழி முறையாகும். அதுவே மன உறுதியைக் கொண்டு வரும். தவ நாட்களில் இதைச் சிந்திப்போம்.

## 1. வரையறை செய்யுங்கள்

"மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாத கடவுளின் வாய் சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்'' (மத். 4 : 4) என்ற இயேசுவின் கூற்றைக் கடைபிடித்தல் வேண்டும். ஏனெனில் நாம் உண்ணுகின்ற உணவு நம்மைக் கடவுளிடம் கொண்டு சேர்ப்பதில்லை (1 கொரி. 8 : 8). மட்டுமல்ல நமது உணவு பழக்கங்கள் மற்றவர்கள் இடறி போவதற்கும், பாவத்தில் விழுவதற்கும் காரணமாய் இருக்கக் கூடாது (1 கொரி. 8 : 13, கொலோ. 2 : 16). எந்த நிலையிலும் விசுவாசத்தைக் காப்பதில் தான் நம்முடைய ஒப்படைப்பு. சிலுவையைக் குறித்து மேன்மைப் பாராட்ட அழைக்கப்பட்ட நாம் கவனமாக இருத்தல் வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவரும் தம் சொந்த தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகின்றனர். அது அவர்களைக் கவர்ந்து மயக்கி தங்கள் வயப்படுத்துகிறது. ஆகவே நாம் கட்டுப்பாடுகளோடு உணவுப் பழக்கங்களைக் கையாளுவது சிறப்பானது (நீதி. 23 : 1-3, தானி. 1 : 8).

## 2. வருங்காலத்தை விரும்புங்கள்

அதிகமாக சாப்பிட்டு ஆபத்தைத் தேடிக் கொள்ளாமலிருப்பது நல்லது.



இஸ்ரயேலரின் வரையறை தாண்டிய உணவு பழக்கம், அதற்காக இறைவனிடத்தில் நடந்து கொண்ட முறை எவ்வாறு என்பதைத் திருமறையில் காணலாம். பேராவலோடு அவர்கள் கொண்ட பெருந்தீனி எண்ணமே இறைவனின் சினத்திற்கு அவர்களைத் தள்ளிவிட்டது (கி.பா. 78 : 24-31). மட்டுமல்ல அவர்களுக்குரியவர்களை வாரிபோட்டது. ஆகவே மனத் தெளிவோடு இருப்பது நல்லது. ஈசாக்கின் அதி தீவிரமான உணவு ஆசையே உறவுகளுக்குள் பிளவை ஏற்படுத்தி விட்டது. அவரது முதுமை காலம் துக்கம் நிறைந்ததாகவே மாறிவிட்டது (தொ.நூ. 27). வருங்காலத்தை நேசிக்கிறவர்கள் வயிறைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும்.

## 3. வல்லவருக்காக வாழுங்கள்

உணவு வகைகளால் உடலை வளர்ப்பவன் வாழ்ந்ததாக வரலாறு குறிப்பிடவில்லை. ஏசாவின் அடக்கி கொள்ள முடியாத வயிற்றுப் பசியால் தலைமகனுக்குரிய உரிமையை இழந்தான் (தொ.நூ. 25 : 30-34, எபி. 12 : 16). ஆகவே பெருந்தீனி எனும் பாவத்தை நம்மை விட்டு அகற்றுதல் நம் வாழ்வை வளமூட்டும். அனைத்தும் பாங்காகவும், ஒழுங்காகவும் நடைபெறும் போது மட்டுமே இறை சான்று வெளிப்படுகிறது. தானியேலும், நண்பர்களும் தங்கள் உடலை வளர்த்துக் கொள்ளாமல் வல்லவருக்காக சான்றுடன் வாழ்வதிலே திடம் பண்ணினார்கள் (தானி. 1 : 8). ஆகவே இறைவாக்கு எல்லை தாண்டி சென்று சான்று பகிர்ந்தது.

கிறிஸ்தவ நெறிக்குட்பட்டு இந்தத் தவ நாட்களில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது சிலுவையைக் குறித்த மேன்மையான செய்தியாகும். "இனி நானல்ல என்னில் கிறிஸ்து மட்டுமே வாழ வேண்டுமென்ற" பவுலாரின் சிந்தையை நமதாக்கி வாழ்வினில் வெற்றி காண்போம்.

**அருள்திரு. R. சாம் பிறின்ஸ்**

**09-03-2012**

***லெந்துகால வெள்ளி***

# ஏன் என்னை அடிக்கிறாய்?

யோவா. 18 : 19 – 23 எண். 22 : 21 – 31

அப். 9 : 1 – 5

சரியாக பேசியிருந்தால் என்னை ஏன் அடிக்கிறீர்கள்?

யோவா. 18 : 23

மனிதன் பல்வேறு நிலைகளில் வன்முறையைக் கையாளுகிறான். அவை இயற்கைக்கு எதிராகவும், மனித நேயத்தை அழிப்பதாகவும், ஆண்டவரின் விருப்பத்திற்கு எதிராகவும் உள்ளது. Dr. பினேய்சென் ஒரிசாவில் காடுகளில் வாழ்ந்த பழங்குடி மக்களுக்கு இலவச மருத்துவத்தோடு விழிப்புணர்வினைக் கொடுத்ததால் மாவோயிஸ்டுகளுடன் ஒப்பிடப்பட்டுச் சமூக விரோதி என்ற குற்றம் சாட்டப்பட்டுக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார். இதுபோல் இந்த உலகத்தில் அநீதி செய்யாத மக்கள் பலர் துன்புறுத்தப்படுகின்றனர். இயேசுவும் கூட சமுதாய முன்னேற்றத்திற்காகச் செயல்பட்ட வேளையில் அவரின் செயல்பாடுகளின் மேல் அதிகார வர்க்கத்தினருக்கு ஏற்பட்ட பொறாமை அவரை வாழ்வின் கடை நிலைக்கு அழைத்துச் சென்றது. குறிப்பாக “ஏன் என்னை அடிக்கிறாய்” என்ற இயேசுவின் கேள்வி நம்மை சிந்திக்க வைப்பதாக உள்ளது (யோவா. 18 : 23). நீதிதனை மறந்து அநியாயம் தலைவிரித்தாடியபோது “என்னை ஏன் அடிக்கிறாய்” என்று இயேசு கேட்டார். இக்கேள்வியால் வெளிப்படும் மூன்று உண்மைகளை இன்று தியானிப்போம்.

**1. மனிதனால் துன்புறும் உயிர்களின் கேள்வி :** எண். 22 : 28

பிலேயாம் என்பவர் பாலாக் அரசனின் வெகுமதிகளுக்காக இஸ்ரவேல் மக்களைச் சபிக்கும்படி பயணமாகச் சென்று கொண்டிருந்தார். தான் சென்று கொண்டிருந்த கழுதை திடீரென முன் செல்ல மறுத்து நின்றது. ஏனென்றால் உருவிய பட்டயத்துடன் தேவதூதன் அதன் முன் வந்து நின்றார். மூன்றுதரம் இப்படி மறுத்தது. கழுதை மறுக்க மறுக்க அதை அதிகமாக அடித்து மிதித்துப் பிலேயாம் துன்புறுத்தினார். இறுதியாக வலியும் துன்பமும் ஒருபுறமும், தேவதூதனின் காட்சி மறுபுறம் கழுதை படுத்துவிட்டது. தான் நினைத்ததைச் சாதிக்க முடியாததால் தன்னுடைய மன அழுத்தமும் கோபமும் கழுதையைத் திரும்பவும் அடிக்கவும் உதைக்கவும் வைக்கிறது. ஆனால் கழுதை பேசத் தொடங்கி ஏன் என்னை அடிக்கிறாய் இவ்வளவு நாளும் நான் உன்னைச் சுமந்தேன் அல்லவா எப்போதாவது



**3. பிழை பொறுக்கும் கிறிஸ்து** (மாற்கு 2 : 10)

அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர், ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடையப் பாவங்களிலிருந்து மீட்பார் (மத். 1 : 21) என்பது இயேசுவைக் குறித்த இறைவாக்கு.

இழந்து போனதைத் தேடுவதும், மீட்பதுவுமே கிறிஸ்துவினுடைய திருப்பணியின் சிறப்பம்சமாகும் (லூக்கா 19 : 10). பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் (மத். 9 : 13) என தனது பணிக்காலத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுத்தார். மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், உயிரைக் கொடுக்கவுமே வந்தார். ஆயக்காரருக்கும், பாவிகளுக்கும் சிநேகிதன் (மத். 11 : 19) என வெளியரங்கமாக அறிக்கை விடுத்தார்.

இத்தகைய அன்புடையவருக்குப் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டு. பாவங்களை மன்னிக்க பாவமில்லாதவரால் தான் முடியும். முடக்குவாதமுற்ற மனிதரிடம் மகனே உன் பாவங்களை மன்னிக்க மானுடமகனுக்கு அதிகாரம் உண்டு என பதிலுரைத்தார். மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகில் தூதர்களிடையே மிகுந்த சந்தோஷம் உண்டாகும் என்றுரைத்த இயேசுவின் வார்த்தையை நம்பி, அனுதினமும் இயேசுவே எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும் என்று இடைவிடாமல் இறைவேண்டல் செய்து மன்னிப்பினால் உண்டாகும் மறுவாழ்வு பெற்று மகிழ்ந்து வாழ்வது சாலச்சிறந்தது.

முடிவுரை :

பிழை பொறுக்கும் கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து, நமது பிழைகளைத் தூயாவியரின் துணையுடன் அறிந்து, அறிக்கைசெய்து, மன்னிப்பின் மகிழ்வு பெற்று வாழ்வோம். பூமிக்கு வானம் உயரமானது போல அவருடைய கிருபை உயரமானது. மேற்குக்கும், கிழக்குக்கும் இடையே உள்ளதூரம் போல அவரது அன்பு அகலமானது. தந்தை பிள்ளைகளுக்கு இரங்குவது போன்ற உறவில் அவரது இரக்கம் ஆழமானது.

**மன்றாட்டு :** *கருணைக் கடவுளே நீர் கோபம் கொள்வதில் தாமதமாயும் இரக்கமும் பரிவும் உடையவராய் எப்போதும் எங்களை மன்னிக்கிறவராயிருக்கிறீர். நாங்கள் உமது கிருபையினால் தீமையினை விட்டுவிலகி, உமது அன்பிற்கினிய பிள்ளைகளாய் கிறிஸ்துவோடு இணைந்து வாழ்ந்திட, உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம்! ஆமென்.*

**Rev. D. ஜாண் ஜெபதாஸ்**

வாழ்வில் பாதை மாறிச் செல்லும்போது, ஆண்டவர் நமக்குத்தரும் எச்சரிப்பையும், அழைப்பையும் ஏற்கின்றோமா? என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம்.

## 3. பரிவுடன் பாதுகாப்பு

'யாரைத்தேடுகிறீர்கள்?' என்று இயேசு இரண்டாவது முறையாக எழுப்பியக் கேள்வியில், ஆடுகளை ஓநாய்களிடமிருந்து பாதுகாக்கத் துடிக்கும், ஆயரின் அன்பு வெளிப்படுகிறது. ஓநாயைக் கண்டதும், கூலிக்கு மேய்ப்பவர் ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போவதைப் போன்று, இயேசு நடந்துக்கொள்ளவில்லை (யோவான் 10 : 12). ". . . நீங்கள் என்னைத் தேடுகிறீர்களென்றால், இவர்களைப் போக விடுங்கள்," என்று சொல்லி தம்மைத் தியாகம் செய்யவும், சீடர்களைக் காப்பாற்றவும் முற்படுகிறார். இந்நிகழ்வு, "நல்ல ஆயன் நானே" (யோவான் 10 : 11) என்ற இயேசுவின் அறைகூவலை உறுதிப்படுத்துகிறது. பாடுகளை எதிர்நோக்கும் சூழலிலும் இயேசு சீடர்களைப் பாதுகாக்கத் துடிப்பது அவரது தன்னலமற்ற அன்பைப் பறைசாற்றுகின்றது.

கோடைக்காலங்களில் அமெரிக்காவின் விசாலமான புல்வெளிகளில், நெருப்புப் பற்றி மிகுந்த சேதம் ஏற்படுவதுண்டு. ஒருமுறை அவ்வாறு நெருப்பு ஏற்பட்டது. அக்காட்டின் மத்தியில் இருந்த வீட்டார், தங்கள் பொருட்கள் அனைத்தையும் விட்டுவிட்டு உயிர்தப்ப ஓடினர். நெருப்பு அணைந்ததும் திரும்பி வந்தனர். அப்பொழுது ஒரு கோழி கருகிய நிலையில் கிடந்ததைக்கண்டு, அதை அகற்றியபோது, அதன் சிறகுகளினின்று குஞ்சுகள் எவ்வித சேதமுமின்றி வெளியே வந்தன. ஆபத்தான நேரத்திலும், தனதுக் குஞ்சுகளைப் பாதுகாத்த தாய்க்கோழியின் அன்பு நம்மைப் பிரமிக்க வைக்கின்றது.

ஆண்டவரும், தம் நலனை விட, தம் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு முதன்மையளிப்பது, அவரது அன்பின் சிறப்பைப், பறைசாற்றுகின்றது.

இவ்வாறாக இயேசுகிறிஸ்து, தாம் கைதுச் செய்யப்படும் நேரத்திலும், தமது இறைத்தன்மைகளை வெளிப்படுத்துகின்றார். பாடுகளை ஏற்கத் தாமாகவே முன்வந்து அர்ப்பணித்தது, எதிராக வந்தோரின் மனமாற்றத்தை விரும்பியது, பாடுகளின் சூழலிலும், சீடர்களைப் பாதுகாக்க துடிப்பது நம் வாழ்விற்கு வளமை சேர்க்கும் சிறந்த முன்மாதிரிகளாகும்.

**திரு. R. ஜெகதீஸ்லால் ரெகு**



**11-03-2012**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு***

# தடைகளை உடைத்து ஒன்றிணைக்கும் நற்செய்தி

## Gospel Breaks Barriers and Builds Bridges

| | |
|---|---|
| ஏசா. 45 : 1 – 8 | கலா. 2 : 11 – 21 |
| தி.பா. 47 | மத். 15 : 21 – 28 |

"உன்னதராகிய ஆண்டவர் அஞ்சுதற்குரியவர்; உலகனைத்தையும் ஆளும் மாவேந்தர் அவரே" (திபா 47 : 2).

கிறிஸ்தவ வாழ்விற்கு மீன் சின்னம் கொடுக்கப்பட்டுள்ளது. அது எதிர் நீச்சல் போட்டு முன்னேறும். அது போல கிறிஸ்தவர்கள் உலகளவிலும் ஆன்மீக அளவிலும் தடைகளைத் தாண்டி முன்னேற அழைக்கப்படுகிறார்கள். இன்றைய உலகம் ஊடக உலகமாக உள்ளது. இவற்றின் மத்தியில் நாம் முன்னேற நற்செய்தி நமக்குத் துணையாக நின்று அன்பு-ஐக்கியம், விட்டுக் கொடுத்தல், விடுதலை பெறுதல், தூய்மை இவற்றை ஏற்படுத்த வேண்டும். இதற்கு உன்னதராகிய ஆண்டவர் நமக்கு உறுதுணை. கிறிஸ்துவாகிய நற்செய்தியின் செயல்பாடு என்ன?

## 1. தடைகளை உடைக்கும் உன்னதர் (ஏசா. 45 : 5)

நான் நானே கர்த்தர் என்பவர் பயங்கரமானவர். தனக்காக அன்னியனாகிய கோரேசைத் தெரிந்து, அபிஷேகித்துப், பெயர் சொல்லி அழைத்து வெண்கல கதவுகளையும், இடுப்புத் தாள்பாள்களையும் முறித்து, புதையல்களையும் பொக்கிஷங்களையும் கொடுத்து, அவனுக்கு இடைக்கட்டு கட்டி, ஒருவரும் எதிர்த்து நில்லாத அளவுக்குச் செய்ய ஊக்கமான உன்னதர். அவர் செய்ய விரும்புவதை ஒருவராலும் தடுக்கவோ, எதிர்த்து நிற்கவோ முடியாது. ஒரு சொல்லாலே உலகத்தைப் படைத்தவர். பிறப்பு முதல் இறப்பு வரையிலும் ஒருவராலும் எதிர்த்து நிற்கக் கூடாதவர் (மத். 22 : 15-46). விண்ணில் ஓர் விண்மீன் கண்ட சாஸ்திரிகள் அரச குழந்தை என அரண்மனை அணுகினர், மாறாக சத்திரத்தில் குழந்தையைச் சாஷ்டாங்க பணிந்தனர். சாஸ்திரிகளின் உலக ஞானம் உடைக்கப்படுகிறது. தீட்டு என ஒதுக்கியோரைத் தொட்டு துயர் துடைத்தார். (மத். 8:3). மரணமே

முடிவு என முடிவு கட்டியவர்கள் நாண மரணத்தை முறியடித்தவர் (1கொரி. 15 : 55). அறிவு, அதிகாரம் ஏற்படுத்தும் தடைகளை உன்னதர் முறியடிக்கிறார்.

**2. உடைந்து ஒன்றிணைக்கும் உன்னதர் :** (மத். 15 : 28)

நமது ஆண்டவர் உடைத்துப் போடுகிறவர் அல்ல உடைத்து ஒன்றிணைக்கும் ஆண்டவர். இயேசுவிடம் வந்த கானானிய பெண் இறை ஒன்றிப்பினைப் பெற்றாள். கானான் தேசம் பாலும், தேனும் வழிந்தோடும் செழுமையான தேசம். செழுமையைக் கடவுளாகக் கொண்டு வணங்கிய மக்கள். இன்றைய உலகில் செய்யும் தொழிலே தெய்வம் என்பார் போன்றவர்கள். கர்த்தருடைய கற்பனை என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் வேண்டாம். (விப. 20 : 3). இந்தக் கற்பனைக்கு விரோதமானவளே கானானிய பெண். கிரேக்கர்கள் கல்வி அறிவில் தேறியவர்கள். அவர்கள் கல்வி ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்களே தவிர கடவுளுக்கு அல்ல. அவர்களுடைய ஆளுமை சிந்தனைகளை உடைக்கிறார். அதோடு கானானிய பெண்ணின் தாழ்மை, விசுவாசம் இவற்றைக்கண்டு வாழ்வு வழங்கி தன்னுடன் சேர்த்துக் கோண்டார். தாழ்மையுடையோருக்குக் கிருபை வழங்கும் ஆண்டவர் விசுவாசத்தால் மகிமை காணச் செய்தார். சிந்தனையை உடைத்து ஒன்றிணைக்கும்படி செய்தார்.

**3. உயிர்விட்டு ஒன்றிணைக்குக்கும் உன்னதர் :** (எபே. 2 : 14-16)

இயேசுகிறிஸ்து தமது மரணத்தின் மூலம் தடையை உடைத்தவர். தேவாலயத் திரைச்சீலையை இரண்டாகக் கிழியச் செய்து (மத். 27 : 51). இனி மேல் பிரதான ஆசாரியன் வேண்டியது இல்லை, எல்லோரும் ஆண்டவரைச் சேரலாம். எனும் நம்பிக்கையைத் தந்துள்ளார். பகையாக இருந்த நடுச்சுவரைத் தகர்த்து எறிந்தார். அன்னியர் என்கிற வேறுபாடு இல்லை. எல்லோரும் ஒன்றாக வாழலாம் எனும் நிலையினை ஏற்படுத்தினார். யூதர் என்றும் கிரேக்கர் என்றும் இல்லாமல்; ஆண் என்றும் பெண் என்றும் இல்லாமல், அடிமை என்றும் சுயாதீனம் உடையவர் என்றும் இல்லாமல் இருக்கும் நிலைக்கு மாற்றம் ஏற்படுத்தினர். உலகளவில் மக்கள் சகோதர நிலையிலும் ஆன்மீக அளவில் மக்கள் இறைவனோடு இசைந்து இருக்கவும் உன்னதர் உதவினார். ஒருவன் தன் நண்பனுக்காக ஜீவனைக் கொடுக்கிற அன்பை விட மேலானது அன்பு இல்லை என்பதை தமது மரணத்தால் வெளிப்படுத்தி தடையை மாற்றி ஒன்றிணைத்தார்.



தென் பசுபிக் தீவில் தொழுநோய் பரவியபோது, தொழுநோயாளிகளை, மொலாக்காய் தீவிற்கு நாடு கடத்தினர். அவர்களை நோயிலிருந்துக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லை. ஏனெனில் அங்குச் செல்பவர்கள் நாட்டிற்கு வரக்கூடாது, என்று அரசு கட்டளையிட்டிருந்தது. 1873-ம் ஆண்டு டேமியன் என்பவர், அவர்களுக்கு உதவ முன்வந்தார். பலர் அவரைத் தடுத்தனர். ஆனால் டேமியானோ, துன்பங்களை எதிர்கொள்ளத் தயங்கவில்லலை. அங்குச் சென்று, தொழுநோயாளிகளுக்கு வீடுகள், மருத்துவமனைகள் கட்டிக் கொடுத்தார். மேலும் பலநற்பணிகள் புரிந்த டேமியனுக்கும் தொழுநோய் தொற்றிக் கொண்டது. நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டு, தனது 49-ம் வயதில் மரணமடைந்தார். பாடுகள் பலவற்றை எதிர்கொள்ளவேண்டும், என்பதை அறிந்த பின்பும், தனது வாழ்வைத் தொழுநோயாளிகளுக்காக அர்ப்பணம் செய்த டேமியனின் வாழ்வு நமக்கு ஒரு சவாலாக இருக்கின்றது.

பிறரது நல்வாழ்விற்காக பாடுகளை ஏற்க நேரிட்டாலும் தயங்காமல் நம்மை ஒப்படைப்பது சிறந்த கிறிஸ்தவப் பண்பு ஆகும்.

## 2. மனம் திருந்த அழைப்பு

'யாரைத் தேடுகிறீர்கள்' என்ற ஆண்டவரின் கேள்வி, அவர்களுடையத் தவறானத்தேடலை உணர்த்தி, சரியானப் பாதைக்குத் திரும்ப மறைமுகமாக அழைப்பு விடுக்கின்றது. தம்மை அழிக்க நினைப்போரும்; அழிவின் பாதையிலிருந்து மனமாற்றம் பெறவேண்டும் என்பதே, இயேசுவின் விருப்பம். ஆண்டவரைச் சாதாரண மனிதராகவே அறிந்திருந்தவர்களுக்குத், தமது இறைத்தன்மையை வெளிப்படுத்தினார். நான்தான் என்றவுடன் அனைவரும் பின்வாங்கித்தரையில் விழுந்தனர். இதன்மூலம் மனம் வருந்தி, திருந்த மறுபடியும் ஒரு வாய்ப்பை, ஆண்டவர் வழங்கினார். 'யாரைத் தேடுகிறீர்கள்' என்றக் கேள்வியை முன் வைத்தார். தவறை உணர்ந்து, சரியான மனிதர்களாக எழுவார்கள், என நம் ஆண்டவர் எதிர்பார்த்திருப்பார். ஆனால், அவர்களோ பழைய மனிதராகவே எழுந்து, பழைய தேடலிலேயே ஈடுபட்டு, தரப்பட்ட அழைப்பைப் புறக்கணித்துவிட்டனர். யூதாஸ் உட்பட அனைவரும், அழிவின் பாதையையே மறுபடியும் தெரிந்துக்கொண்டனர்.

இறைமக்களைத் துன்புறுத்த, தமஸ்குவை நோக்கிச் சீறிப் பாய்ந்தார், சவுல். ஆண்டவரின் வல்லமையால் தடுத்தாட்கொள்ளப்பட்ட சவுல். தரையில் விழுந்தார். ஆண்டவர் அன்பு நிறைந்தக் கேள்வி ஒன்றை எழுப்பி, மனந்திரும்ப அழைப்பு விடுத்தார். தரையில் தள்ளப்பட்டது புதிய மனிதனாக எழச் செய்யவே என்பதைப் புரிந்துக்கொண்ட சவுல், தன் வாழ்வின் பாதையை மாற்றிக் கொண்டார். புதிய பாதையைத் தெரிந்துக் கொண்டு, வாழ்வை வெற்றியாக நிறைவுச் செய்தார்.

**14-03-2012**

***லெந்துகால புதன்***

## சோம்பல் (SLOTH)

II தெச. 3 : 6–15
தி.வசனம் : 2 தெச. 3 : 6

காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்பது சமூக வழக்கத்தின் பொருளுள்ள சொற்றொடராகும். தற்காலத்தில் இந்த உலகம் மிக விரைந்து செயல்படுகிறகிறதையும் இதன் வழியாகப் பல படிம வளர்ச்சிகளையும் எட்டிக் கொண்டிருக்கிறது. ஆயினும் எதைக் குறித்தும் கவலைப்படாமலும் தங்களுக்குள் இருக்கும் வரங்களை, வளங்களை, திறன்களை முறையுடன் பயன்படுத்தாமல் நம்மில் அநேகர் இருக்கின்றனர். இந்தத் தவக் காலத்தில் இத்தகைய சோம்பலின் தன்மை பாவம் என்று உணர்த்தி அவர்களை வளக்கமாகச் செயல்பட தூண்டுவது கிறிஸ்தவத்தின் கடமையாகும். சோம்பல் மானிட வாழ்வின் உணர்ச்சியை வேறுபட்ட வாழ்க்கையைக் காட்டும் குணமாகும். இறைவன் தனக்குக் கொடுத்த உணர்ச்சியைச் சரியான வழியில் பயன்படுத்தாமல், நன்மையான எதையும் செய்யாமல் வாழுகின்ற வாழ்வு கொண்டவரே சோம்பலுக்குட்பட்டவராவார். இவர்களே வறுமையையும், ஏழ்மையையும் தங்களுக்குரியது என்று ஏற்பதில் முன்னுரிமை பெறுகின்றனர் (நீதி. 6 : 9). இந்நிலையில் முடங்கி நிற்கும் இவர்களது முழு திறனுடன் செயல்பட இந்த நாட்களில் உண்மைகளைத் தெளிவுடன் எடுத்துரைப்பது ஏற்புடையதாகும். சிலுவை மேன்மையாக ஏற்கத் தடையாக இருக்கும் சோம்பலை மாற்றுவதற்குப் பவுலாரின் அறிவுரைகளைக் கவனத்தில் கொள்வோம்.

### 1. தன்னம்பிக்கையுடன் உழைத்தல் : (2 தெச. 3 : 8)

எவரையும் சார்ந்து நிற்காமல் இறைவனைச் சார்ந்து கடினமாய் உழைக்கும் உழைப்பே நமது சோம்பலை மாற்றி ஆரோக்கியப்படுத்தும். நல் எதிர்நோக்குடன் செயல்படுவதும் அதில் முழு உறுதியைப் பெற்றுக் கொள்வற்கு முழு ஆர்வத்தை இறுதி வரை காட்டுவதுமே தன்னம்பிக்கைக் குரிய படிநிலையாகும் (எபி. 6 : 11). அதில் கடினங்களும், கண்ணீரின் அனுபவங்களும் இருக்கலாம். ஆனால் அக்களிப்பின் மகிழ்வொலியும், களிப்போசையும் உண்டு என்பதையும் நினைவில் நிறத்தி கொள்ள வேண்டும். இது செயல்பட வேண்டிய காலம். ஏனெனில் துன்பங்களும், துயரங்களும், வன்முறையும், தீவிரவாதமும், பொருளாதார நெருக்கடியும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் காலம். மௌனத்துடன் சோம்பித் திரியாமல் விழிப்புடன் செயல்பட்டால் மட்டுமே விடுதலையை அனுபவிக்க முடியும்.



(எஸ். 4 : 13, 14). ஆக அற்பமாய் எண்ணப்பட்டாலும் ஞானத்தோடும் அறிவோடும் வரும் நாட்களைக் குறித்தும் விழிப்போடு செயல்படும் எறும்பை போல தன்னம்பிக்கையுடன் உழைக்க வேண்டும். அதுவே உயர்வையும், ஊக்கத்தையும் கொண்டு வரும் (தி.பா. 128 : 2, நீதி. 6 : 6).

### 2. தகுதியுடன் நடத்தல் : (2 தெச. 3 : 8)

நேர்மையானக் கடமைகளைப் புறக்கணியாமல், பிறரது உழைப்பையும், தாராள தன்மையையும் சார்ந்திராமல் செயல்படுதலே மானிடத் தகுதியை உறுதிப்படுத்துகிறது. தங்களுக்குரிய பொறுப்புகளை ஒதுக்கிவிடாமல், சோம்பலை சிலுவையில் அறைந்து செயல்படவேண்டும். அப்படியில்லாதவர்கள் உணவருந்தும் தகுதியை இழந்து விடுகின்றனர் (IIதெச 3 : 10) என்கிறார் தூய பவுலார். சோமபலே வாழ்வின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிறது. தகுதியுடன் கூடிய உழைப்பே தகுந்ததாக ஏற்கப்படுகிறது (திபா. 25 : 18, 19). இன்றைய நாட்களில் வாய்ப்புக்களை நிராகரித்து, காரணங்களைக் காட்டி, சுய நீதிக்காரர்களாக வாழும் மக்களிடையே விழிப்புணர்வு கொடுத்தல் சிறப்புக்குரியதாகும். தசை ஆடாமல் காரியங்கள் நடக்கவேண்டுமென்று சிந்திக்கும் கால கட்டத்தில் தகுதியுடன் செயல்படுதலை இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார் (மத். 25 : 24-30). இல்லையெனில் நிலை பரிதாபமாக அமையும்.

### 3. தன்னிறைவு பெறுதல்

காலத்தையும், நேரத்தையும் சரியாகப் பயன்படுத்துபவர் வாழ்வில் நிறைவு பெறமுடியும். அவர்களே மகிழ்வுடனும் வாழமுடியும். சோம்பித் திரிபவர்கள் நிறைவு பெறுவது இயலாத காரியம். செயல்படுதலோடு கூடிய ஒப்படைப்பும், கனிவோடு கூடியப் பங்களிப்பும், பிறரை எதிர்பாராமல் உழைக்கும் உழைப்பே வாழ்வில் தன்னிறைவு தரும் (தொ. நூ. 26 : 12). பெருந்தினி சோம்பேறிகளாக சுற்றி திரிவோர் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் (தீத். 1 : 12). ஏனெனில் நிறைவுள்ள வாழ்வு வாழ்வதற்கு உழைப்பு மிக முக்கியமாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். எந்தப் பணியும் இறைப்பணி. நல்ல சிந்தையுடனும் ஒப்படைப்புடனும் எவரொருவர் முழு பங்களிப்புடன் செயல்படுகின்றாரோ அவர்கள் இறைவனின் மேன்மைக்குரிய அடையாளங்களே.

சோம்பல் ஆன்மீகத்தை அரித்துவிட்டபடியால் இறைவனில் வழங்கப்பட்ட வளங்களெல்லாம் முட்செடியும், முட்புதருமாய் காணப்படுகின்றன. இந்நிலையில் சிலுவையை மேன்மையாகப் பற்றிக் கொள்ளும் அனைவரும் சோம்பலைச் சிலுவையின் வழி வெற்றி கண்டு உழைப்பின் பலனை அனுபவித்து, உன்னதரின் அறுவடைபணிக்கு அர்ப்பணிப்போம்.

**அருள்திரு. R. சாம் பிறின்ஸ்**

**16-03-2012**

***லெந்துகாலம் : வெள்ளி***

## யாரைத் தேடுகிறீர்கள்?

யோவான் 18 : 1–9

"தமக்கு நிகழப்போகிற அனைத்தையும் இயேசு அறிந்து, அவர்கள் முன்சென்று, யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார்" (யோவா. 18 : 4)

இயேசு கிறிஸ்துவின் மானுட வாழ்வில், பலர் அவரை ஆவலோடுத் தேடி வந்தனர். அவர் பிறந்தபோதே, ஞானியர் வெகுதூரத்திலிருந்து தேடிவந்து பணிந்து வணங்கினர். திருப்பணிக் காலத்தில், அவரது அருளால் விடுதலைப் பெறவும், அருள் வாக்கைக் கேட்கவும் பலர் நாடித்தேடி வந்தனர். இன்றையத் திருமறைப் பகுதியிலும், ஒரு கூட்டம் இயேசுவைத் தேடி வருகின்றது. இவர்கள் இயேசுவிடம் வாழ்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அவரைத் தேடவில்லை. அவரது வாழ்விற்கு முடிவுக்கட்ட வேண்டும், என்ற தீயஎண்ணத்தோடு, தேடி வருகின்றனர். இவர்களுடையத்தேடலின் முழு விபரத்தையும் அறிந்து ஆண்டவர், 'யாரைத் தேடுகிறீர்கள்?' என்றொரு கேள்வியை எழுப்புகின்றார். இந்தக் கேள்வி மற்றும் அதனுடன் இணைந்த உரையாடல் உணர்த்தும் உண்மைகளைச் சிந்திக்க முயல்வோம்.

### 1. பாடுகளை ஏற்க ஒப்படைப்பு

இயேசுவைக் கைதுச் செய்ய படைப்பிரிவினரும், காவலரும், யூதாஸ்-உடன் விரைந்து வந்தனர். மக்களைத் தேடிவந்து, வாழ்வு வழங்கிய இறைமகனைத் தேடிப்பிடித்து, அவர் வாழ்வையே வீழ்த்திட முயன்றனர். இதற்கு முன்பும் பலமுறை அவரைப் பிடிக்க முயற்சிகள் நடந்தன. (யோவான் 7 : 30, 32, 44; 10 : 39; 11 : 53, 54). ஆனால் அவை அனைத்தும் தோல்வியில் தான் முடிவடைந்தன. ஏனென்றால், அவர் அனுமதியின்றி, அவரது உயிரை, யாரும் பறிக்க இயலாது (யோவான் 10:18).

இயேசு கிறிஸ்து விரும்பியிருந்தால், இந்த முறையும், அவர்களுடைய தேடலிலிருந்து தப்பியிருக்கலாம்; அல்லது அவர்களை எதிர்த்து நின்று வென்றிருக்கலாம் (மத்தேயு 26 : 53). ஆனால் ஆண்டவர் தாமாகவே முன் சென்று, 'யாரைத் தேடுகிறீர்கள்?' என்று கேட்டு எதிரிகள் தம்மைக் கைதுச்செய்ய அனுமதியளிக்கின்றார். தாம் எதிர்கொள்ள இருக்கும் பாடுகள் பயங்கரமானவை, என்பதை அறிந்திருந்தும், இயேசு தம்மைக் கைதுச் செய்ய வாய்ப்பளித்தார். நல்ல ஆயராக, ஆடுகளின் நல்வாழ்விற்காக, பாடுகளை ஏற்கவும், உயிரையேத்தியாகம் செய்யவும், தம்மை ஒப்படைத்தார்.



இந்த உன்னதமான ஆண்டவரைச் சொந்தமாகக் கொண்டவர்கள் தடைகளைப் படிகளாகக் கொண்டு முன்னேறியுள்ளார்கள். வில்லியம் கேரி கல்கத்தாவில் அருள்பணி புரிந்தார். நற்செய்திக்குத் தடையாக இருந்த உடன்கட்டை ஏறுதல், சிசுவதை, நரபலி போன்றவற்றை உடைத்து நற்செய்தியின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். தென்திருவிதாங்கூரில் பணியாற்றிய மிஷனெரிகள் சமூகத் தீமைகளைக் கண்டு அஞ்சாமல் நற்பணியாற்றினார்கள். நாம் முன்னேற்றம் கண்டோம் நற்செய்தியின் ஒளி நம்மில் வீசியது. நாமும் நமது நற்செய்தி வழியாகவும், நற்பணி வழியாகவும் தடைகளைத் தாண்டி முன்னேறுவோம், உன்னதமான ஆண்டவராகிய நற்செய்தியின் சாரத்தோடு வாழ்வோம்.

**மன்றாட்டு :** *ஆண்டவராகிய கடவுளே வீழ்ந்த மனுக்குலம் எம்மில் உருவாக்கிய தடைகளை எம்மை விட்டு உடைத்தெறிய எங்களில் ஊடுருவிச் செல்லும் நற்செய்திக்காக உமக்கு நன்றி படைக்கிறோம். எம் திருச்சபையிலுள்ள எல்லா தடைகளையும் உடைத்து, உமது ஆவியாரின் ஆற்றலால் வழிநடத்தவும் கிறிஸ்துவில் வெளிப்பட்ட உமது அன்பினால் அனைத்துப் படைப்புகளையும் அணைத்து, இணைத்திட உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம் ஆமென்.*

**அருள்திரு. N. ஸ்மைல்**

நலமாய் இருந்திருக்கும்'' என்று தன்னை காட்டி கொடுப்பதால் அவனுக்கு கிடைக்கபோகும் அவல நிலையையும் எடுத்து கூறுகிறார் (மாற். 14 : 17-21). இயேசுவை காட்டி கொடுப்பது பாவம், அவது பெரிய கேடு தரும் என்பதை தெளிவாக சீடர்களுடன் இருந்த யூதாசுக்காக இதை ஆண்டவர் இயேசு கூறினார்.

இப்படி சொல்லி கேட்டிருந்த யூதாசு 30 வெள்ளி காசுகளுக்காக இயேசுவை காட்டி கொடுக்கும்படி காவலர்களுடனும் குருக்களுடனும் வந்திருக்கிறார். முத்தத்தால் அவரை காட்டி கொடுத்தார். இங்கேதான் இயேசு தோழா எதற்காக வந்தாய்? என்று கேட்கும் கேள்வி இயேசுவை காட்டி கொடுக்கவா வந்திருக்கிறாய்? காட்டி கொடுக்கிறவனுக்கு ஐயோ. என்று சொல்லியிருக்கிறதே நீ செய்கிறது பாவமல்லவா என்று யூதாசின் பாவச் செயலை உணர்த்தும் கேள்வியாக இருக்கிறது.

அன்று யூதாஸிடம் பாவத்தை உணர்த்தும் விதத்தில் சொல்லப்பட்ட கேள்வி நம் மனநிலைமையையும் சிந்திக்க வைக்கிறது. உண்மையாகவே கடவுள் சொன்னவைகளுக்கு கருத்தாய் கீழ்படிகிறோமா என்ற கேள்வியை மனதுள் எழுப்ப நம்மை ஆராய்ந்து பார்க்க தூண்டுகிறது.

### முடிவுரை

நெருங்கிய உறவுகள் சில நேரங்களில் உறவை மறுதலிப்பதும் உண்டு. மறுதலிக்க நினைத்த யூதாசிடம் மீண்டும் தோழா என்று அழைத்து நெருங்கிய உறவை ஏற்படுத்தி அவனை காப்பாற்றவும் பாவ உணர்வை வெளிப்படுத்தி மனந்திருப்ப ஆண்டவர் இயேசு முயன்றார். ஆனால் உறவை மதிக்காத யூதாஸ் இயேசுவை காட்டி கொடுத்துவிட்டான். பின்பு சிந்தித்து தவறு என்று எண்ணி நான்றுகொண்டு செத்தான் என்று பார்க்கிறோம்.

நாம் கடவுளுடன் வைக்கும் உறவு எப்படிப்பட்டது என்று சிந்தித்து உண்மையான கீழ்படிதலுள்ள உறவை மதிக்கும் வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.

**திரு. J. பொன் விஸ்வா ஜீசஸ்**



**18-03-2012**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு***

## தீமையில் ஆற்றல் மேல் கிறிஸ்துவின் வெற்றி

ஏசா. 59 : 14 – 21 உரோ. 8 : 31 – 39
தி.பா. 44 லூக். 13 : 10 – 17

"ஆபிரகாமின் மகளாகிய இவரைப் பதினெட்டு ஆண்டுகளாகச் சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து இவரை ஓய்வுநாளில் விடுவிப்பது முறையில்லையா? என்றார்'' (லூக். 13 : 16).

தீமையின் ஆற்றல் இன்று உலகில் பல நிலைகளில் வெளிப்படுகிறது. இதனைச் சாத்தான், பிசாசு, பகைவன் என்று நாம் கூறலாம். மனிதனுடைய வியாதிக்குக் காரணமாக தீமையின் ஆற்றல் உள்ளது. உலகில் நடைபெறும் தீமையனைத்தையும் தீயோனே செய்கிறான் என்பது மனித நம்பிக்கை. ஆனால் இந்த தீமைகளிலிருந்து விடுதலைதரக்கூடிய ஆற்றல் இயேசு கிறிஸ்துவில் உண்டு. அவர் தீமையின் ஆற்றல் மீது வெற்றி கொண்டது, மட்டுமன்றி தன் அடியார்களும் தீமையின் ஆற்றல் மீது வெற்றி கொள்ளும் அதிகாரத்தைத் தருகிறவருமாய் இருக்கிறார் (மாற். 3 :11,15). இன்று உலகம் முழுவதும் தீமையின் ஆட்சிக்குள் இருக்கிறது (1 யோ. 5 : 19). இதில் கிறிஸ்தவர்களாகிய நாம் போராட்ட அனுபவங்களைக் காண்கிறோம். கிறிஸ்துவின் துணையோடு போராட்டத்தில் வெற்றி பெற வேண்டும். ஆகையினால் தான் இயேசு கிறிஸ்து எங்களைச் சோதனைக்குட்பட பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் என்று மன்றாடக் கற்றுத் தந்தார். நாம் இந்த நம்பிக்கையில் உறுதி கொண்டவர்களாக தீமையின் மேல் வெற்றி கொள்ள ஆயத்தப்பட வேண்டும் (எபே. 6 : 12). இன்றைய சிந்தனைப் பகுதியில் தீமையின் ஆற்றலின் மேல் கிறிஸ்துவின் வெற்றிச் சிந்தனையைக் காணமுடிகிறது.

### 1. தீமையின் விளைவு

பதினெட்டு வருடமாய் தீமையின் ஆற்றலால் பிடிக்கப்பட்ட பெண்மணி வேதனையினை அனுபவிக்கிறாள். அவளது உடல் பலனிழந்து

மற்றவர்களைப் போல சாதாரணமாக நடக்க இயலாமல் தீமையின் ஆற்றல் அவளது வாழ்வில் அமைதியினை இழக்கச் செய்தது. பலருடைய கேலிக்கு உட்பட்டாள். சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவளாய் இனி வாழ்வேது எனும் நிலையில் இருந்தாள். தீமையின் ஆற்றல் வாழ்வில் நன்மையினைத் தருகிறது. வாழ்வை விழிம்பிற்கு நேராய் அழைத்துச் செல்கிறது. ஆனால் தீமையை நன்மையினால் வெல்லலாம் என்பது திருமறை வலியுறுத்தும் உண்மை. தீமைகள் எப்போதும் வெற்றி காண்பதில்லை. இப்பெண்மணியின் வாழ்வில் தீமையின்மேல் வெற்றி காணும் பாக்கியம் உண்டு என்பதை நாம் தொடர்ந்து வரும் பகுதியிலிருந்து கற்றுக் கொள்ள முடியும்.

## 2. தீமையின் மேல் வெற்றி

தீமையை வெல்வதற்குக் கிறிஸ்துவே வாயில். கிறிஸ்து பகையாகியத் தீமையைச் சிலுவையிலே வென்று வெற்றி சிறந்தார். தமது பணி வாழ்வில் தாம் சந்தித்த இப்பெண்மணி தீமையின் மேல் வெற்றி காண அவளைத் தம்னிடம் அழைத்து “ஸ்திரீயே உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்” என்று சொல்லி அவள் மேல் தனது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினாள். கிறிஸ்துவின் வார்த்தை தீமையை வெல்லும் ஆற்றலுடையது என்பது இங்கு தெளிவாகிறது. தீமையை வென்ற சேனையில் எதிராக பேசினதை இயேசு எதிர்த்துப் பேசினார். கிறிஸ்துவின் பதிலைக் கேட்ட மக்கள், அதோடு தீமையின் மேல் அவர் கொடுத்த வெற்றி, அவரிடமிருந்த இறையாற்றல் இவை அனைத்தையும் கண்ட மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆண்டவர் இயேசு தமது பணி நாட்களில் தீமையின் ஆற்றல்களாகிய பாரம்பரியங்களை எதிர்த்தார். சுயநீதிக் காரர்களை எதிர்த்தார். அதிகார வர்க்கங்களை எதிர்த்தார். சமூக, சமய தீமைகளை ஆற்றலோடு எதிர்த்தார். தீமையின் ஆற்றலை வெற்றி கொண்டார். இன்று உலக வாழ்வில் தீமையின் ஆற்றலோடு நமக்கும் எப்போதும் போராட்டம் உண்டு. அதை மேற்கொள்ள இயேசுவின் சிந்தை, செயல் நமக்கும் வேண்டும்(பிலி. 2 : 8)

## 3. தீமையை வெல்லும் வழி

உலக வாழ்வில் தீமைகளுக்கு நாம் விலகி வாழ வேண்டும். கடல் மீன் உப்பு நீரில் வாழ்கிறது. ஆனால் அது உயிரோடிருக்கு மட்டும் அந்த உப்பால் சாரமேற்றப்படாது. அந்த மீன் செத்துவிட்டால் உப்பால் சாரமேற்றப்படும். இன்று நாம் கிறிஸ்துவில் வெற்றி கொள்ள உயிர் உள்ள வாழ்வு வாழ வேண்டும்.



அன்பின் வார்த்தைகளைப் பயன்படுத்தி பகைவரிடமும் அன்பு காட்ட அழைக்கப்படுகின்றோம்.

## 1. பகைவரையும் பாதுகாக்கும் கேள்வி

கெத்சமனித் தோட்டத்து நிகழ்வில் “நான்தான்” என்று இயேசு அவர்களிடத்தில் சொன்னவுடன் அவர்கள் பின்வாங்கி தரையில் விழுந்தார்கள் (யோவா. 18 : 4-9). இங்கே இறை ஆற்றல் இயேசுவையும் சீடர்களையும் காவலர்கள் நெருங்கும்போது அருகில் வராதபடி தடுத்தது. இறை ஆற்றல் அவர்களை நிலைதடுமாற வைத்தது. காரணம் தந்தையாம் கடவுள் தன்னிடம் ஒப்படைத்தவர்களுள் ஒருவரையும் இழந்துவிடாதபடி அங்கே சீடர்களைக் காப்பாற்றுகிறார் (யோவா. 18 : 9). காவலர்கள் நிலை தடுமாறுகிறார்கள், சீடர்கள் தப்பித்துக்கொள்ள நேரம் கொடுக்கப்படுகிறது. இங்கே இயேசுவின் சிந்தை சீடர்களை எப்படியாவது காவலர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதே.

இத்தகைய சூழலில், தனக்கு முத்தம் கொடுத்த யூதாசிடம் எதற்காக வந்தாய்? என்ற கேள்வி, “இங்கே ஆபத்து இருக்கிறது அல்லவா எதற்காக வந்தாய்” என்று இயேசு யூதாஸிடம் கேட்கிறதாய் அமைகிறது. இங்கே அவருடைய சிந்தை யூதாசை அவர் இழக்க விரும்பவில்லை என்பதே. தன்னைக் காட்டிக் கொடுக்க வந்திருக்கிறான் என்று அறிந்திருந்தும் அவனை காப்பாற்ற நினைக்கும் நல்ல பண்புடன் அவர் அந்த கேள்வியை யூதாஸிடம் கேட்கிறார்.

இன்று நமக்கு இந்த கேள்வி, நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் ஆபத்து தரும் இடத்தில் இருக்கிறோமா அல்லது ஆண்டவரை விலகி சென்று அழிவுக்கு நேராய் இருக்கிறோமா என்ற உணர்வை நமக்கு தருகிறது. பகைவரையும் அன்பு செய்யும் இயேசுவின் குணம் நம்மையும் அவர் இழக்க விரும்பவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

## 2. பாவ நிலையை உணர்த்தும் கேள்வி

இயேசுவை காட்டிக் கொடுக்க வந்த யூதாசிடம் இந்த கேள்வியை தோழா எதற்காக வந்தாய்? என்று கேப்பது அவன் செய்வது பாவம் என்பதை அந்த வேளையிலாவது உணர்த்த இயேசு கேட்டார். இயேசு கிறிஸ்து சீடர்களிடம் பேசும்போது தன்னை காட்டிக் கொடுக்கப் போகிறவனைப் பற்றி பேசுகிறார். தன்னோடு பந்தியில் உண்ணுகிறவன்தான் காட்டி கொடுப்பான் என்று உறுதியாக சொல்கிறார். “ஆனால் ஐயோ அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்கு கேடு. அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு

**21-03-2012**

***லெந்துகால புதன்***

## பேராசை (COVETOUSNESS)

1 யோவா. 2 : 12–17
தி.வசனம் : 2 : 16

பேராசை என்பது வரையறைத் தாண்டிய ஆசையின் வெளிப்பாடு. இது எல்லா வகையான பாவங்களையும் செய்யத் தூண்டும் கருவியாகத் உள்ளது. உள்ளத்தினுள் ஊற்றாக உருவெடுத்து வாழ்க்கையையே அழித்து விடும் ஆற்றல் இதற்கு உண்டு. தொடக்க காலத்திலிருந்தே இது எங்கும் படர்ந்து விரிந்து மானிட உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் கறையாக்கிக் காயப்படுத்தியுள்ளது. கடவுளைப் போல் மாறவேண்டும், கண்கள் திறக்கப்பட வேண்டும், காலமெல்லாம் வாழவேண்டுமென்ற பேராசையின் விளைவு தான் பாவத்தின் உச்சநிலை. அதுவே மானிடத்தின் தோல்விக்கும், வீழ்ந்து போகுதலுக்கும் காரணமாயிற்று. இந்நிலையில் மீண்டும் மானிடத்திற்கு உயிரூட்டம் கொடுப்பதற்குத் தான் திருமைந்தனார் உலகினில் வந்தார். அவரே மீட்கும் பொருளாகவும், எவரையும் இழக்காமல் பெற்றுக் கொள்வதற்காகவும், அதற்குத் தம் உயிரையும் கொடுக்கவும் வந்தேன் எனவும் தெளிவுப்படுத்தினார். யோவா. 3 : 16). இதுவே நமது விசுவாசத்தின் அழுத்தமானச் சிந்தையாகும். அப்படியெனில் பற்றி நிற்கும் பேராசையைச் சிலுவையில் அறைந்து விடுதலில் தான் மீட்பு உயிரூட்டம் பெறுகிறது என்பதால் அதன் வழிமுறைகளைச் சிந்திப்போம்.

### 1. ஆசையை வரையறுத்துக் கொள்ளுங்கள் : (15)

ஆசை இயற்கையானது தான். ஆனால் கட்டுப்படுத்தல் என்பது மிக முக்கியமானது. ஆசை நிறைவேறாதபடியால் மனிதனைக் கவலைத் தொற்றிக் கொள்கிறது. ஆகவே உடல் அளவிலும், உள அளவிலும் பாதிக்கப்படும் சூழல் உருவாகிறது. **போப் ஜாண்பால்** என்பவர், "தீமையின் கருவியாக இருப்பது மனித ஆசையே. ஆசை படக்கூடாது என்பதல்ல அது நோக்கம் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பதே" எனக் கூறினார் இன்று எதிலும் அளவுக்கதிகமான ஆசை படர்ந்து, பற்றியிருப்பதால் அமைதியற்ற, வன்முறை சூழல் உருவாகியுள்ளது. ஆகவே தான் ச.உ. 5 : 10-இல் பண ஆசை உள்ளவருக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் ஆவல் தீராது; செல்வத்தின் மேல் மிகுந்த ஆசை வைப்பவர் அதனால் பயனடையாமற் போகிறார் என்று குறிப்பிடுகிறார். கண்களுக்குக் களிப்பூட்டுவதாக இருந்தது என எவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் அதன் முடிவு பரிதாபமே (தொ. நூ. 3 : 6) எனவும் ஆசைக்கு எல்லை இல்லையெனில் அது ஆபத்தான விளைவை ஏற்படுத்திவிடும். (1அர. 21). ஆகவே பேராசை எனவும் திருமறைக் கூறுகிறதுபடுவதை உள அளவிலே மாற்றம் செய்வதும், அதற்கேற்ற அடிப்படையில் அமைத்துக் கொள்வதும் நல்லது.

### 2. ஆண்டவரிடத்தில் பற்றுக் கொள்ளுங்கள் : (14 b)

வாழ்வுக்காக ஏங்குவதை விடுத்து, வாழ்வு தந்த வல்லவரையே நோக்கிப் பார்ப்பது தான் சிறப்பானதாகும் (தி.பா. 121:1). ஏனெனில் அவரே நமக்கு மாட்சியையும் மேன்மையையும் முடியாக சூட்டி, எல்லாவற்றையும் ஆளுகை செய்யும் அங்கீகாரத்தையும் தந்துள்ளார் (தி.ப. 8 : 5), மட்டுமல்ல அவரது முழு நிறைவும் நம்மில் குடி கொள்ள திருவுளமும் கொண்டார். (கொலோ. 1 : 19). ஆகவே உலகத்தோடு நட்புறவு கொள்வது கடவுளைப் பகைப்பது (யாக். 4 : 4) என்ற தெளிவான சிந்தையில் முழுமையும் அவரிடத்தில் படைத்துக்கொள்ளவேண்டும் (உரோ. 12 : 1). இஸ்ரயேலரின் தவறான தெரிந்து கொள்ளுதலே அவர்களுக்குத் தீங்கை ஏற்படுத்தியது (எரே. 2 : 13). பேராசையை மேற்கொள்வதற்குரிய ஊடகம் இறை உறவின் ஒன்றிப்பே. அப்போது வெளிப்படுவது எனக்கு வேண்டிய மட்டும் உள்ளது என்பதே (தொ.நூ. 33 : 11). இந்த ஒன்றிப்பே நமது உள்ளத்தில் அமைதியினையும் கொண்டு வரும்.

### 3. ஆண்டவரில் மகிழ்ச்சியாயிங்கள் : (2 : 17)

மகிழ்வின் ஊற்றாக இருப்பது கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்கான ஒப்படைப்பாகும். அதுவே எப்போதும் நம்மை மகிழ்ச்சிப்படுத்துகிறது (பிலி. 4 : 4). மட்டுமல்ல எந்நிலையிலும் மனநிறைவையும் (பிலி. 4 : 11) விசுவாசத்தின் உண்மை நிலையையும் வெளிப்படுத்துகிறது (1 திமொ. 6 : 6). வாழ்வின் அடித்தளங்கள் அசைக்கப்படலாம் அல்லது பெயர்க்கப்படலாம். ஆயினும் மகிழ்வுடன் இருப்பதில் தான் நமது நம்பிக்கை துளிர் விடுகிறது. இறை மேன்மைக்கு நம்மை ஒருமுகப்படுத்துகிறது (ஆப. 3 : 17-19). இல்லாமை ஏற்படும் சூழலிலும் இறைவனை விட்டுவிடாது, இறைவாக்கில் ஊன்றியிருப்பது, நமது மகிமையின் ஊற்றாகிறது. அது இறைவனின் நியதிக்குட்பட்டதாகயுள்ளது (மத். 6 : 33).

இறை மக்கள் பேராசையின் வெளிப்பாடாகிய தங்களுக்குள் ஏற்படுத்தி அமைதியற்ற நிலையை உருவாக்கும் தற்பெருமை, பொறாமை, போட்டி மனப்பான்மை, ஓயாத மோதல்கள் இவைகளை விட்டுவிட்டு நம்பிக்கையின் நல் எதிர்நோக்கில் செயல்படவேண்டும்.

**அருள்திரு. R. சாம் பிறின்ஸ்**

**23-03-2012**

***லெந்துகாலம் : வெள்ளி***

# தோழா, எதற்காக வந்தாய்?

மத். 26 : 47–50

**“இயேசு அவனிடம், தோழா, எதற்காக வந்தாய்?” என்று கேட்டார் (மத். 26 : 50).**

கெத்சமனித் தோட்டத்தில் இயேசு இறைவேண்டல் செய்து முடித்த பின்பு தமது அன்பான சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவரைப் பிடிக்கும்படி குருக்களும் மக்களின் மூப்பர்களும் அனுப்பிய பெருங்கூட்டத்தினர் வந்தனர்.அவர்களுடன் இயேசுவின் சீடர்களுள் ஒருவராகிய யூதாசும் வந்தார். அவர் இயேசுவைக் கண்டதும், “ரபி வாழ்க” என்று கூறி அவரை முத்தமிட்டார். இயேசு அவரிடம், “தோழா, எதற்காக வந்தாய்?” என்று கேட்டார். இயேசுவின் கேள்வி யூதாசுக்கு மூன்று உண்மைகளை உணர்த்துவதாக அமைந்திருந்தது. அவ்வுண்மைகளை இன்று சிந்திப்போம்.

“தோழா” என்ற வார்த்தை திருமறையில் சில இடங்களில் சொல்லப்பட்டள்ளது (மத். 22 : 12, மத். 20 : 13). நெருங்கிய உறவுடைய ஒருவரையே “தோழா” என்று அழைப்பது வழக்கம். ஆனால் இயேசு இங்கே தன்னைக் காட்டிக்கொடுக்க வந்த, தனது சீடராயிருந்து, துரோகியாக மாறின யூதாசைப் பார்த்து “தோழா” என்று அழைக்கிறார். பகைவரையும் நேசிக்கும் இயேசுவின் அன்பு இங்கு வெளிப்படுகின்றது. பகைவரிடம் அன்பாயிருத்தலைக் குறித்து இயேசு சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தார் (மத். 5 : 43-48). இப்போது தாம் கற்று கொடுத்ததை சீடர்களுக்குச் செய்து காட்டுகிறார். அனைத்து சமயங்களும் பிறரிடம் அன்பு கொள்ள வேண்டுமெனப் போதிக்கின்றன. ஆனால், கிறிஸ்தவ சமயம் அனைத்து சமயங்களுக்கும் ஒருபடி மேலே சென்று பகைவரிடம் அன்பு செய்தலைக் குறித்து போதிக்கின்றது. கிறிஸ்துவின் இப்போதனை அனைத்து சமய மக்களாலும் பாராட்டப்படுகின்றது. ஆனால் இன்று கிறிஸ்தவரிடமும் காணும் கட்சி மனப்பான்மைகளும், பிரிவினைகளும், பழிவாங்கும் செயல்களும் பகைவரையும் அன்பு செய்யும் கிறிஸ்துவின் போதனைக்கு முரணாகவுள்ளன. இந்நிலையில் கிறிஸ்தவராகிய நாம் “தோழா” எனும்



தற்போதைய கிறிஸ்தவர்களில் அனேகர் தீமையின் ஆற்றல்களில் சிக்கித் தவிக்கின்றனர். குறிப்பாக ஜாதகம் பார்ப்பது, நாள் பார்ப்பது, சகுனம் பார்ப்பது, நல்ல நேரம் பார்ப்பது, வாஸ்து சாஸ்திரம் பார்ப்பது போன்ற தீமையின் ஆற்றல்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். இவற்றை விட்டு ஆண்டவரில் நம்பிக்கை வைத்து ஆண்டவரின் சத்திய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து அன்றாட வாழ்க்கையில் செயல்படும் போது கிறிஸ்து தருகின்ற வெற்றி வாழ்வை நாமும் சொந்தமாக்கலாம். தீமையின் ஆற்றல் கர்த்தரால் அகற்றப்படுகிறது. (தி.வெ. 20 : 1-6).

**மன்றாட்டு :** *அனைத்து ஆற்றலுமுள்ள கடவுளே, இயேசு கிறிஸ்துவில் மரணத்தை வாழ்வாகவும் தோல்வியை வெற்றியாகவும் மாற்றியிருக்கிறீர். நாங்கள் திமையின் மேல் வெற்றி கொள்ளும்படி எங்கள் பற்றுறுதியை அதிகரித்து, அவரில் நம்பிக்கை கொள்ளச் செய்திட உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம் ஆமென்.*

**Rev. J. ஜெயக்குமார்**

இலாபம்பெற நினைத்தான். திட்டமிட்டான். எதிரிகளைச் சந்தித்தான். தீவிரமாகச் செயலில் இறங்கினான். இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.

### 1. பணத்திற்காக காட்டி கொடுத்தவர் (மத். 26 : 15)

இயேசுநாதரோடு நட்புறவோடு வாழ்ந்த ஒருவர் இயேசுவின் வாழ்விலும் நோக்கிலும் உடன்படாமலே வாழ்ந்து வந்துள்ளார் என்பதுதான் ஆச்சரியம். மிகத் திறமைமிக்க படைப்பாற்றல் கொண்ட செல்வாக்குள்ள ஒரு குழுவில் உறுப்பினராக இருக்கும் யூதாசுக்கு அதனால் தனக்கு ஏதாவது இலாபம் உண்டா என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டிருந்தார். 'இயேசுவின் வழியும், வாய்மையும், வாழ்வும் தன் பொருளாதார பெருக்கத்திற்கு எந்த ஆதாயமுமில்லை' எனக் கண்டுகொண்ட யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுக்க நினைத்ததில் எந்த வியப்பும் இல்லை. எனவே இயேசுவின் வழியாக ஆதாயம் பெறத் துடித்துக் கொண்டிருந்தவருக்கு இயேசுநாதரின் எதிரிகள்தான் நினைவுக்கு வந்தது. அவர்களிடம் செல்கிறான். தானாக அவரைக் காட்டிக்கொடுக்க தயார் எனக்கூறுகிறான். இது அவர்களுக்கு மிகப்பெரிய வியப்பும்கூட. ஏனெனில் இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவரே தன்னார்வத்துடன் வருவதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே அவர்கள் மகிழ்ந்தனர் (லூக். 22 : 4). அவர்கள் மகிழ்ந்து பணம் கொடுக்க ஒத்துக்கொண்டனர். பணத்திற்காக யோசேப்பை விற்ற சகோதர்களும் இங்கு நினைவு கூறப்பட வேண்டியவர்களே. ஒப்படைப்பு இல்லாத வாழ்வு, சீரிய நோக்கு இல்லாத வாழ்வு, பிடிப்பற்ற/ பற்றுறுதி இல்லாத வாழ்வு ஆகிய அனைத்தும் எப்போதும் பணத்தை நோக்கியே தாவும்.

நம்முடைய கிறித்தவ வாழ்வில் இயேசுநாதரின் வாழ்விலும் வழியிலும் உடன்பாடு இருப்பது போன்று காட்டிக்கொள்ள முனைகிறோம். ஆனால் நாம் நினைத்தவாறு ஆசீர்வாதங்கள் பெறாதபோது, நினைத்த வளர்ச்சி நம் குடும்பத்தில் இல்லாதபோது, நம் ஒப்படைப்புகளைக் காட்டிக்கொடுத்துக் காசு சம்பாதிக்க, குறுக்கு வழிகளில் செல்ல நம்மை ஆயத்தப்படுத்துகிறோம். சிலுவைப்பாடுகள் நிறைந்த இயேசுநாதரைவிட செல்வாக்குமிக்க ஒரு பணக்கார இயேசுவையே எதிர்ப்பார்க்கிறோம். அப்படிப்பட்ட சம்பாத்தியத்தினை ஒரு சிலைவணக்கமாகவே பார்க்க முடியும். இயேசுவைக் காட்டிக்கொடுத்துப் பணத்தை சிலையாகப் பணிய நம்மையறியாமலே தூண்டப்படுகிறோம். இந்தச் சோதனைகள் தெளிவாக உள்ளபூர்வமாக நிராகரிக்கப்படாதவரை இயேசுவைப் பின்பற்றுதல் இயலாது.



**25-03-2012**

## சிலுவை : கிறிஸ்துவின் பணியாள் தன்மையில் புதிய திருக்காட்சி

## The Cross : The new vision of Christ's Servanthood

ஏசா 42 : 1 – 9 | 1 கொரி 6 : 3 – 10
தி.பா. : 89 : 34 – 52 | மாற் 10 : 32 – 52

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை எடுத்து என்னை பின்பற்றட்டும்". மாற்கு 3 : 34

வாழ்வில் திருப்பு முனையாகவும், ஓர் புதிய திருகாட்சியைத் தரும் சின்னமாகவும் சிலுவையை இறைமக்கள் தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்து தம் சீடர்கள் நடுவில் முதல் முறையாக தம் மரணத்தை முன்னறிவித்தபோது இயேசுவின் சீடர்களாய் அழைக்கப்பட்டுச் சமூக உயர்வு பார்வை பெற்ற பேதுரு இயேசுவைக் கடிந்து கொள்ள, இறைமகன் இயேசுவும் அவனைக் கடிந்துகொண்டு இத்திருவாக்கினை அழுத்தமாக தம் சீடர்களுக்குக் கற்று கொடுத்தார்.

பாடுகள் வாயிலாக மீட்பின் சமுதாயத்தை உருவாக்க தம்மைப் பாவ நிவாரணபலியாக்கினார். கிறிஸ்துவின் பாடுகளின் உச்சநிலை சிலுவை. இச்சிலுவை அவனால் ஏற்படுத்தப்பட்ட மீட்பின் பாதைக்கு நமக்கு ஒரு புதிய திருக்காட்சி அந்தச் சிலுவை சுட்டிகாட்டும் பணிவிடையாளரின் தன்மைகளை இன்றையத் திருமறைப் பகுதிகள் வாயிலாகச் சிந்திப்போம்.

### 1. பாடுகள் (ஏசாயா 42 : 1 - 9

மாற்கு 8 : 31 - 34, மாற் 9 : 30-32, மாற். 10 : 32-34. கிறிஸ்துவின் பாடுகளின் உச்சநிலை சிலுவை. இச்சிலுவைப் பாடுகள் ஏசாயா 42 : 1-9-ன் தீர்க்கதரிசன நிறைவேறுதல் ஆகும். எல்லாமனுகுலத்தினருக்கும் இறைநீதியை வழங்கவும், மீட்பின் உடன்படிக்கையாகவும், கைதிகளின் தளைகள் அறுக்கவும் இருளின் ஆதிக்க சக்தியினால் வாழ்விழந்தோரை மீட்டு வாழ்வு அருளவுமே இப்பாடுகள். பாவசாயலில் வீழ்ச்சியடைந்து இருளிலிருப்போர் புத்தாக்கம் பெற்று இறைசாயலில் மாற்றுருவாக்கம் பெற கிறிஸ்துவின் சிலுவை பாடுகள் இன்றியமையாதவை. இறைமகன் இயேசு கிறிஸ்துவின் வழி வெளிப்பட்ட மீட்பின் சந்தோஷம், சமாதானம், நீதி, சத்தியம் இவைகளால் தீமையின் உலகு புத்தாக்கம்பெற கிறிஸ்துவின்

பாடுகள் ஒவ்வொரு இறைமக்கள் வாழ்விலும் வெளிப்பட வேண்டும். இறைமகன் இயேசு வெளிப்படுத்திய இறையாழுகையின் சமுதாயம், அது அன்புள்ள சமுதாயம், சமத்துவ சமுதாயம் கிறிஸ்துவின் பாடுகள் இன்றி உருவாக்க இயலாது. மீட்பின் பணியும் கிறிஸ்துவின் பாடுகளின் அனுபவ வாயிலாக சிலுவை ஒரு புதிய காட்சியைச் சுட்டிகாட்டுகிறது. சிலுவை ஓர் அலங்கார பொருளோ. அதிகாரத்தின் வெளிப்பாடோ அல்ல மாறாக எல்லா மக்களையும் இறைவனுக்குள் இறைசாயலாய் மாற்ற ஏற்கும் தியாகத்தையும், தன்னலமற்ற வாழ்வையும் புதிய காட்சியாக்குகிறது.

**2. நீதி செய்தல்** (மாற். 10 : 46-52, 1 கொரி. 6 : 3-10)

எரிகோ செல்லும் வழியில் பார்வை இழந்து வாழும் பார்வையற்ற சகோதரர் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு ஓரம் கட்டப்பட்டவர். இழிநிலை வாழ்வு. நல்உறவு இழந்து நிற்கும் நிலை. சமூகத்தால் நீதி அற்றநிலையில் வாழும் இவருக்குக் கிடைக்க வேண்டியது நீதி. சமூக அங்கிகாரம், பார்வை, புதிய வாழ்வு, இறைநீதி சுயநலம் சார்ந்தது அல்ல. அது மக்கள் நலம் சார்ந்தது எனவே 1 கொரி. 6 : 2-ல் இறைமக்கள்தான் உலகிற்குத் தீர்ப்பு அளிப்பவர்கள் உங்களுக்குள்ள சின்ன, சின்ன வழக்குகளைக் கூட தீர்த்துகொள்ள தகுதியற்றவர்களாய் மாறிவிட்டீர்கள் ஏனெனில் சுயநலம். வஞ்சித்தல், தீங்கிழைக்கும் செயல்கள், பேராசை, குடிவெறி, தகாத பாலுறவு, கொள்ளையடித்தல் போன்ற தன்மையால் பிடிக்கப்பட்டோர் இறைநீதியை வெளிப்படுத்த தகுதியற்றவராகின்றனர். இவர்களால் இவ்வுலகில் வாழும் மக்களிடையே இறைநீதி சிதைக்கப்படுகிறது. சமுதாயத்தில் சமத்துவம் சீர்குலைந்து ஏற்றத் தாழ்வு, பிரிவினைகள், போன்றவை ஏற்படுகின்றன. எனவே கிறிஸ்துவின் பாடுகள் வழி சிலுவைதரும் புதுகாட்சி, இறைநீதி இவ்வுலகில் நிறைவேற பாடுபடல் இன்றியமையாதது. இறைநீதி அற்ற உலகை இறைநீதியால் புத்தாக்கம் செய்திட அற்பணிக்கப்பட்ட அற்பணம் இன்றியமையாதது என்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.

**3. பணியாளராய் செயல்படுவீர்** (மாற். 10 : 43 - 45)

இயேசு தம் மரணத்தை முதல் அறிவித்தவுடன் சீடர்களின் கலக்கமும் திகைப்பும் எப்படியாவது இயேசுவுக்கு மரணம் ஏற்படகூடாது என்ற நிலைபாடும் பேதுருவின் செயலில் வெளிப்படுகிறது. மாற். 8 : 31 - 34.

இரண்டாவது அறிவித்தபோது மாற். 9 : 30-32. சீடருக்குள்ளே யார் மிக பெரியவர் என்ற நிலை எழுந்தது. இயேசுவின் கூற்றுப்படி மரித்தால் நம்மில்யார் இயேசுகிறிஸ்துவின் இடத்தைப் பிடிப்பது என்ற பிரச்சனை எழுந்தது. மூன்றாம் முறையாக மாற். 10 : 32-34-ல் அறிவித்தபோது செபுதேயின் குமாரர், யாக்கோபு, யோவான் இயேசுகிறிஸ்துவிடம் உம் அரியணையின் வலது, இடது பக்கம் எங்களுக்கு வேண்டும் எனக்கேட்க



**30-03-2012**

***லெந்துகாலம் : வெள்ளி***

## முத்தத்தினாலேயா என்னைக் காட்டிக்கொடுக்கிறாய்?

மத். 26 : 47–56, மாற். 14 : 43–59,
லூக் 22 : 47–53, யோ 18 : 3–12

**"இயேசு அவனிடம் யூதாசே, முத்தமிட்டா மானிட மகனைக் காட்டிக் கொடுக்க போகிறாய்?" என்றார் (லூக்கா 22 : 48).**

காட்டிக்கொடுப்பது என்பது பல்வேறு சூழலில் பல்வேறு பொருளைக் கொடுக்கும். முகவரிக்குச் சரியான ஆளைக் காட்டிக்கொடுப்பது என்பது பெரும்பாலான நேரத்தில் நல்லதொரு பணிதான். ஆனால் சரியான தருணம் பார்த்துக்கொண்டிருந்து பழிவாங்கத்துடிக்கும் ஒரு கும்பலுக்குத் தன்னார்வத்துடன் சென்று 'நீங்கள் விரும்பும் ஆளை நான் காட்டிக்கொடுக்கிறேன்' எனப் பேரம்பேசி பணம்பெறும் ஒரு பச்சைத் துரோகத்தை நாம் இன்று திருவிவிலியம் வாயிலாகக் காண இருக்கிறோம். காட்டிக் கொடுக்கப்படும் அனுபவம் என்பது புதிய அனுபவம் அல்ல. திருவிவிலியத்திற்கு முன்பும் பின்பும் நடந்து வரும் துரோகச் செயல்தான். இருப்பினும் இந்த காட்டிக்கொடுக்கப்படல் எனும் அனுபவத்தை இயேசுநாதர் மட்டுமின்றி இன்றைய அனைத்து நீதிமான்களும் அன்றாடம் சந்திக்கும் நிகழ்வைக் காணலாம். இதன்மூலம் இன்றும் தொடர்ந்து இயேசுநாதரும் காட்டிக்கொடுக்கப்படுகிறார், சிலுவையில் அறையப்படுகிறார் என்பதை நாம் புரியமுடியும்.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக தலைமைக் குருக்கள் வேத அறிஞர்கள் 'இயேசுவை கைது பண்ணவேண்டும் அவரைச் சிறையிலிட வேண்டும்' எனக் கடுமையாக முயன்றனர். மறைமுகமாக பலரை ஏவினர். உரோம காவலர்களையும் கோவில் காவலர்களையும்கூட தூண்டிவிட்டனர். இருப்பினும் இயேசு நாதருக்கு இருந்த செல்வாக்கு மற்றும் மக்கள் கூட்டம் அவரை நெருங்க முடியாதவாறு பாதுகாத்தன. இச்சூழலில் இயேசுவோடு நெருங்கிய சீடருள் மெத்த படித்தவன், பேராசைக்காரன் என பெயர்பெற்ற யூதாஸ் ஸ்காரியோத் என்பவன் இயேசுவின் வாழ்வில் விளையாடி

**28-03-2012**

# கோபம் (சினம்) (ANGER)

யாக். 1 : 19–27
தி.வசனம் : யாக். 1 : 20

மனிதர் பல உணர்ச்சிகளின் கூட்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த உணர்ச்சிகளின் ஒரு நாற்று தான் கோபம். இது மனிதரின் உள்ளத்தினுள் உறைந்து கிடக்கும் பகைமைத் தன்மையின் வெளிப்பாடாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமறையில் கடவுளின் கோபத்திற்கும் மனிதரின் கோபத்திற்கும் இறையியல் சார்ந்தும் வேறுபாடுகள் உண்டு. பொதுவாக ஒருவரின் மனம் ஒரு தவறினால் புண்படுத்தப்பட்டால், அந்தப் புண்பட்டவரின் மன உணர்ச்சியே கோபமாகவும் வெளிப்படலாம். தொடக்கத்திலேயே மனிதரிடம் இந்தத் தீய பாவம் இருந்தது என்பதைத் திருமறை விவரிக்கிறது (தொ.நூ. 4 : 5, 23 : 24). ஆனால் கட்டுப்பாடுள்ள ஒரு சமூக அமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து கோபம் வேண்டாத ஒன்றாக கருதப்பட்டது (தி.பா. 36 : 8, நீதி. 14 : 29). ஆனாலும் இது ஒரு மனித உணர்ச்சி என்பது மறக்கப்படவில்லை (மத். 22 : 7). கோபம் வெறும் அழிவை மட்டுமல்ல ஆக்கப்பூர்வமான செயலையும், அதன் வழியான மாற்றத்துடன் கூடிய செயலையும் தரக்கூடியது (மாற். 3 : 5, யோவா. 2 : 13 - 21, லூக். 6 : 11). ஆகவே இதை இறையியல் தெளிவோடும், தூய ஆவியாரின் துணையுடனும் புரிந்துகொள்ள ஒருமுகப்படுவோம். கோபத்தின் உச்சி நிலையை மேற்கொள்வது எப்படி?

## 1. ஆற்றலை ஒருமுகப்படுத்துங்கள் : (1 : 19)

எந்த நிலையிலும் அவசரம் காட்டாமல் நிதானத்தோடு செயல்படும் போது கோபத்தைத் தவிர்த்து ஆற்றலை நெறிப்படுத்த முடியும். இதற்கு நம்முள் மறைத்து வைக்கப்பட்டுள்ள நான் என்ற சுயநலம் வேரறுக்கப்பட வேண்டும். அப்படியெனில் மட்டுமே மனித ஆள் தன்மை காக்கப்படும். ஆகவே தான் பவுலார் இனி நானல்ல என்னில் கிறிஸ்து வாழ்கிறார் என்கிறார் (கலா. 2 : 20) கண்களுக்கு முன் நடைபெறுகின்ற நிகழ்வுகள் உருவாக்கலாம். ஆனால் அது நன்மைக்குரியதாக இருந்தாலும் சினத்தைச் செயலிழக்கச் செய்வது ஏற்புடையதாகும். காயீனின் அவசர முடிவு, அடக்கமுடியா கோப வெறி ஆபேலின் வாழ்வைப் பறிப்பதற்குக் காரணமாயிற்று (தொ.நூ. 4 : 8). மட்டுமல்ல கடவுளின் கேள்விக்குப்



பதிலுரைக்க முடியாமல் பதற வைத்தது (தொ.நூ. 4 : 9, 10). அதன் விளைவாக காயீன் வாழ்வின் மேன்மையை இழக்கின்றவனாக மாறுகின்றான் . ஆகவே தான் இறைமக்களின் வாழ்வுக்குரிய ஆலோசனைகளை யாக்கோபு தருகிறார் (யாக். 1 : 19). ஆக்கத்திற்கென்றும், புதிய படைப்புக்கென்றும் இறைவனால் வழங்கப்பட்ட ஆற்றல்கள் பொறுப்புடன் முறைப்படுத்தப்படவேண்டும்.

## 2. அர்ப்பணத்தை காத்திடுங்கள் : (1 : 20)

நமது விருப்பத்திற்கும் எதிர்நோக்கும் ஏற்புக்கும் அனைத்தும் நடைபெற வேண்டுமென்று எல்லோரும் எதிர்பார்க்கும் இக்காலகட்டத்தில், எதிர்மறையாக நிகழ்வுகள் நடக்கும் போது நமது அணுகு முறைகள் எப்படி உள்ளது. பழிவாங்குதலுக்கும், பழித்துறைத்தலுக்கும் வாய்ப்பாகவே அது அமைந்து விடுகின்றது. இந்நிலையில் மனித அறிவு மந்தமாகி விட, மனிதரோ தங்கள் நிலை இழந்து விடுகின்றார். இதன் விளைவு அர்ப்பணத்தின் உண்மை நிலை மறைந்து விடுகின்றது (வி.ப. 16 : 20, 32 : 19). இறைவனின் காருண்ய உறவினில் ஊன்றப்பட்ட மோசேயின் கோபம் உடன்படிக்கை பலகைகளையே வீசியெறிந்து உடைக்கும் நிலைக்குப் போய்விட்டது. இன்றும் இறை அழைப்பிற்கு எதிரிட்டுத் துணிச்சலோடு குற்றப்பழிகளைச் செய்கிறவர்களின் நடுவில் நமது அர்ப்பணத்தைக் காத்துகொள்ள வேண்டும். அதற்குரிய ஊடகமாக ஆண்டவரோடு ஒன்றிணைந்து, அவர் தரும் வலிமையாலும், ஆற்றலாலும் வலுவூட்டம் பெறுவது தான் ஏற்புடையது. (எபே. 6 : 10) ஆகவே கோபத்தை நெறிப்படுத்த கற்றுக்கொள்வதும், கண்ணியமான வாழ்வு வாழ உறுதி ஏற்பதுமே நலம் தரக்கூடியதாக அமையும்.

## 3. ஆரோக்கியத்துடன் வாழுங்கள் : (1 : 21)

“கோபம் அது பாவம் அதன் முடிவோ பரிதாபம்” என பாடல் வரியொன்றை நாம் கேட்டிருக்கிறோம். பொருள் நிறைந்த வரிகளை நினைவில் நிறுத்திக்கொள்ளும் போது அமைதி சூழல் உருவாக வாய்ப்புள்ளது. கோபமே பாவத்திற்கும் தூண்டுகோலாகிறது. ஆகவே இதைத் தவிர்த்தல் சிறப்பானதாகும் (தி.பா. 4 : 4, எபே. 4 : 26). ஏனெனில் கோபம் மனித உடலின் உறுப்புகளை அரித்துவிடும், உறவுகளைத் தகர்த்துவிடும். (லூக். 15 : 28). நாம் கோபப்படும் போது உடலின் தசைகளும், நரம்புகளும், மூளையும் அதிர்வுக்குள்ளாகிறன. அதன் விளைவாக, உடல் நிலை மட்டுமல்ல, உள அளவிலும் மாற்றம் ஏற்படுகிறது. அப்போது முகத்தினில் வெறித் தன்மையும், பற்களைக் கடித்தும் நிற்கும், எரிச்சலின் வேகமும் வெளிப்படுவதை உணரலாம்.

முடக்கத்தைக் கொண்டு வந்து, அருவருப்பை ஏற்படுத்தும் இந்தச் செயல் அகற்றப்பட வேண்டும். இயேசுநாதரும் கோபப்பட்டாரே என்று குறிப்பிடுகின்ற சிலரையும் நாம் பார்த்தியிருக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் அதன் பின்னணியைப் படித்துப் பார்க்க வேண்டும். மட்டுமல்ல இயேசு போல வாழ்கிறவராக அவர் இருக்கிறாரா என்றால் கேள்வியே. அதற்காக தவறுகளை அநீதிகளை காணாமல் கண்ணை மூடிக்கொண்டிருங்கள் என்பதல்ல, மாறாக இறையுறவின் இணைப்புடனும், இறைவாக்கின் தெளிவுடனும், இறையரசு பார்வையுடனும் முறையாக கையாள வேண்டும். அப்போது நமது ஆரோக்கியமும் வலுப் பெறுகின்றது (1 தீமோ. 2 : 8, தீத் 1: 7).

இவ்வுலக வாழ்வினில் இறை திருவுளத்திற்கேற்ப வாழ விரும்புவோர் சினத்தையும், சீற்றத்தையும் தவிர்த்துச் சீரியச் சிந்தையுடன் செயல்படுவது தான் சிறப்பானதாகும்.

**அருள்திரு. R. சாம் பிறின்ஸ்**



மற்ற 10 சீடர்களும் இருவர் மீது கடும் சினம் கொண்டனர். இந்நிலையில் இயேசு கிறிஸ்து கற்று கொடுத்தார் முதன்மையை நாடாதே பணியாளராய் பணி செய்யுங்கள். மானிட மகனும் தொண்டு ஏற்க அல்ல மாறாக தொண்டு ஆற்றவும் எல்லாருடைய மீட்புக்காக தம் உயிரை ஈடாக கொடுக்கவும் வந்தேன் என்றார். பணிவிடை என்பது சமுதாயத்தில் நீதியின்றி அன்றாட தேவைகள் மறுக்கப்பட்ட வாழ்வு இழந்த எளியோர் வாழ்வு பெற பணிசெய்யும் பணி இப்பணி செய்ய பணியாளர்களின் பணிவிடையைக் கற்றுகொண்ட சீடர்கள் கோதுமை மணியாக்கினர் தம் வாழ்வை. மீட்பின் வரலாறு தொடர்ந்து மக்களிடையே புதுவரலாறு படைத்திட பணியாளன் கோதுமை மணியாய் நிலத்தில் வீழ்ந்து தன்னை அழித்திடல் இன்றியமையாதது. இறைவனின் மீட்பின் திட்டத்துக்குள் இவ்வுலகும், அனைத்துப் படைப்புகளும் புதுப்பிறப்படைய கோதுமை மணியாய் செயல்பட புதிய பார்வையை நமக்கு தருகிறது.

அன்பர்களே!

சிலுவை என்பது கிறிஸ்துவின் பணியான தன்மையில் பாடுகளின் தியாகம், நீதிக்காய் அற்பணிக்கப்பட்ட அர்ப்பணம் - பணியாளர்கள் கோதுமை மணியாய் செயல்படும் நிலைபோன்ற திருகாட்சியை நமக்கு தருகிறது.

இறையாசி உங்களுடன் இருப்பதாக.

**மன்றாட்டு :** *கடவுளே உமது ஞானத்தின் பிரகாசத்தால் எங்கள் மனதைப் பிரகாசிக்கச் செய்து ஆதனால் நாங்கள் செய்ய வேண்டியதைச் செய்யவும் ஆற்றல் பெறச் செய்கின்றீர். தொண்டு ஏற்பதற்கு அல்லாமல் தொண்டு புரிய எங்களுக்காக மரித்ததினால் தமது வாழ்வினைத் தந்து இன்றும் வாழ்வோராய் உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுயாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகைபுரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

அருள்திரு. J. **ஜேம்ஸ் ஞானரோஸ்**

தனத்தால் ஏற்பட்ட அவர்களது முறையீடு கடவுளை நோக்கி எழும்பிற்று. அவர்களது புலம்பலை கடவுள் கேட்டார். மோசே வாயிலாக விடுதலை நல்கினார். வரலாற்றில் இஸ்ரயேலர், பாபிலோனியர், பெர்சியர் கிரேக்கர், உரோமர் ஆகியோர்களின் அடிமைத்தனத்துள் வாழ்ந்தனர். இத்தகு சூழல்களிலெல்லாம் கடவுள் விடுதலை நல்குபவர் என்பதனை இறைவாக்கினர்கள் உறுதி செய்தனர். அடிமைத் தனத்தினால் நொந்து போய் குரல் விடுக்கும் மக்கள் தங்கள் வாழ்வில் மேசியா வருவார் தங்களை விடுவிப்பார் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த யூத மக்களுக்கு சகரியா நம்பிக்கை யூட்டுகிறார் (சகரி. 9 : 9).

பலருடைய விடுதலைக்காகத் தம்மையே அர்ப்பணம் செய்யும் சாந்தம் மிகுந்த "துன்புறும் ஊழியன்" என்பதை இயேசு பயன்படுத்திய வாகனமான கழுதை உணர்த்துகின்றது. மேசியா எதிர்ப்பார்ப்பினால் உந்தப்பட மக்கள் வெற்றியின் (யோவான் 12:13) அரசருக்கு எதிர்கொண்டு போய் குருத்தோலைகளை பிடித்து ஓசன்னா பாடி மகிழ்ந்தனர். உரிமைக்குரல் கொடுக்கும் மேசியாவுடன் இணைந்து பவனியாக எருசலேம் நோக்கிச் சென்றனர். நகரமே பரபரப்புற்றது. மேசியாவின் வருகையால் எருசலேமே விழித்தெழுந்தது. இயேசுவோ கண்ணீர் பெருக நின்றார். எருசலேமையும் அதன் அவல முடிவையும் எண்ணி புலம்பி நின்றார். உள்ளங்களை உருக்கும் வல்லக்காட்சி இது. "ஷாலோம்" என்பது சமாதானத்தைக் குறிக்கும் எபிரேயச் சொல். அனைவரும் முழுமையின் நிறைவினைப் பெறுவதே ஷாலோம் வலியுறுத்தும் உண்மை. இந்நிறைவே இறைவன் அருளும் உண்மையான மீட்பு. மீட்பின் உரிமையினை மானிடம் பெற்றுக்கொள்ள இறைமகன் இயேசு அமைதியின் பவனியனை மேற்கொண்டார். இன்று விடுதலைக்காக எங்கும் மக்களுடன் கிறிஸ்துவோடு தன்னை இணைத்துக் கொண்டு அவர்களுக்காக குரல் எழுப்பி சமாதானம் நல்கும் ஆற்றல் கொண்ட திருச்சபையாய் இருக்கிறோமா?

## 2. ஊரிலிருந்து பட்டணம் நோக்கிப் பயணிக்கும் சமாதானம் (லூக். 19 : 29)

மேசியா இயேசுவின் சமாதானத்தின் பேரணித் தொடங்கிய இடம் பெத்பகே பெத்தானியா என்னும் கிராமங்கள். எரிகோவிலிருந்து எருசலேம் செல்லும் சாலையில் எருசலேம் பட்டணத்திற்கு ஒன்றே கால் மைல் தூரத்திலிருக்கிறது. கெதரோன் பள்ளத்தாக்கு கிராமங்களையும் எருசலேமையும் பிரிக்கிறது. பெத்பகே "அத்திபழங்களின் வீடு" என்றும் பெத்தானியா "வறுமையின் வீடு" "துன்புறுவோரின் வீடு", "பேரிச்சம் பழங்களின் வீடு" என்றும் பொருள்படும். ஒலிவ மலை வழியாக கெதரோன் பள்ளத்தாக்கு வழியாக பவனி சென்றிருக்கும். ஒலிவ மரங்களைக் கொண்ட மலை எண்ணெய் மலை, அபிசேக மலை என ஒலிவ மலையை அழைப்பதுண்டு. அவ்வழியாக அபிஷேகம் பண்ணப்பட்டவர் புறப்பட்டு



## 2. இறைவேண்டல் நேரத்தில் காட்டிக் கொடுத்தவர் (யோ. 18 : 1-2)

இயேசுவும் சீடரும் அடிக்கடி கெதரோன் நீரோடைக்கு அப்புறம் செல்வதுண்டு. யூதாசுக்கும் இந்த இடம் பழக்கமான ஒன்று. இறைவேண்டல் நேரமும் கடவுளோடு தியானிக்கும் நேரமும் ஆண்டவர் இயேசுவுக்கு மிக முக்கியம். இரத்தம் வியர்வையாக சிந்தும் அளவிற்கு அவர்களது இறைவேண்டல் அமைந்த இடம். இந்த இடத்தை யூதாஸ் தெரிவுசெய்தது மட்டுமின்றி, இறைவேண்டலின் நேரத்தையும் கூட காட்டிக்கொடுக்க தெரிந்த ஒரு சீடராகிவிட்டார். கடவுளோடு உறவாடும் நேரம் ஒரு கள்ளம் கபடமற்ற நேரம். உலகியல் வாழ்வைச் சிந்திக்காத நேரம். அமைதியான நேரம். ஆனால் இந்த நேரந்தான் சதித்திட்டதிற்காக தெரிந்தெடுக்கப்பட்ட நேரமாக அமைந்தது. ஏனெனில் அப்படிப்பட்ட நேரங்களில் பெரிய தடைகள் வர வாய்ப்பில்லை. எதிர்ப்புகள் வர வாய்ப்பில்லை. வன்முறை வர வாய்ப்பில்லை என்றுதான் யூதாஸ் கணித்திருக்கக்கூடும். காட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்ட நேரம் இறைவேண்டலின் நேரம் என்பது எத்துணை வன்மம் நிறைந்த திட்டமாக இருந்தது என்பதை நம்மால் யூகிக்க முடிகிறது. எந்த இறைவேண்டலை இயேசுகிறிஸ்து சீடர்களுக்குச் சொல்லிக் கொடுத்தாரோ அதே இறைவேண்டலின் நேரத்தை இயேசுவின் எதிரி சிந்தனையாளருக்கு யூதாஸ் விலைபேசத் தயங்கவில்லை. இந்தத் துரோகச் செயல் இன்றும் நம்மிடையே தொடர்கிறது.

இன்றும் தேவாலயங்களுக்குச் செல்லும்நேரங்களில் வழிபாடு முடித்தபின் இது போன்ற துரோகச் செயல்களும் வன்முறைகளும் வழக்குகளும் இன்றும் தொடரத்தான் செய்கின்றன. சில நல்ல ஆயர்கள் ஆயர் உடையுடன் இருப்பதால் இது போன்ற வன்முறைகளை தாமே தாங்கிக் கொள்கின்றனர். ஆயர் உடையில் இல்லாமலிருக்கும்போது தாக்குதல் நடத்துவது இயலாது என்பது நமக்குத் தெரியும். திருச்சபை நேரத்தை ஆன்மீக நேரத்தை வன்முறைக்காக பயன்படுத்துவோர் இன்று அதிகரித்து வருகின்றனர். இதர சமய வெறியாளர்களும் இதில் உள்ளடக்கம். யூதாஸ் இறைவேண்டல்நேரத்தை ஒரு யுக்கதியாகவே தெரிந்தெடுத்தார் ஆன்மீகமான நேரத்தைப் பலவீனமாக நேரமாகவே அவர் கணித்துவிட்டார் போலும்.

## 3. பாசத்தைப் பொழிந்து காட்டிக்கொடுத்தவர் (மத். 26 : 49 -50)

யூதாஸ் இறைவேண்டல் நேரத்தில் பழிவாங்க திட்டமிட்டிருந்தான். 'ரபீ வாழ்க' எனக் கூறி முத்தமிட்டான். முத்தம் என்பது உணர்வு பூர்வமான

அடையாளம். எல்லா வயதினரும் பயன்படுத்தும் அன்பின் அடையாளம். முதிர்ச்சியான ஓர் அன்பின் அடையாளம். இந்த அன்பின் அடையாளம் இங்குத் துரோகத்தின் குறியீடாக மாற்றப்படுகிறது. இஸ்ரவேலில் முத்தம் என்ற பண்பாடு அங்கீகரிக்கப்பட்டு பரவலாக பயன்படுத்தப்பட்டது. பவுலடிகளார் தம் எழுத்துக்களில் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள் எனவும் (1 கொரி. 16 : 20, உரோ. 16 : 16) பேதுரு அன்பின் முத்தத்தோடு வாழ்த்துங்கள் எனவும் (1 பேதுரு 5 : 14) கூறுகின்றனர். இயேசுநாதரின் வாழ்வில்கூட அன்பின் முத்தம் அடிக்கடி பரிமாறப்பட்டன. பாவியான பெண்மணி இயேசுவின் காலை ஒயாமல் முத்தமிட்டுக் கொண்டிருந்தாள் (லூக்கா 7 : 45) எனவும், அவர் விருந்து கொடுத்தவரைப் பார்த்து 'நீ என்னை முத்தமிடவில்லை அவள் என்னை ஒயாமல் முத்தமிட்டாள்' என இயேசு கூறியதிலிருந்து முத்தமிடும் பண்பாடு யூதர்களின் நடுவே அங்கீகரிக்கப்பட்ட ஒன்று எனப்புரிகிறது. விவிலியம் முழுவதும் இந்தப் பண்பாட்டைப் பார்க்கலாம். ஆனால் இம்முத்தத்தைத் துரோகச் செயலுக்காகப் பயன்படுத்திய வரலாறு யூதாசிடமிருந்தே ஆரம்பிக்கிறது. ஆண்டவராகிய இயேசுவும் இம்முத்தத்தினை ஒரு துரோகச் செயலாகப் பார்க்காமல் நண்பனே எதற்காக வந்துள்ளாய்? என்கிறார் (லூக்கா 26 : 49-50). முத்தத்தை ஒருவர் கொச்சைப்படுத்துவார் என இயேசுநாதர் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் மத்தேயு ஆசிரியரின் குறிப்புப்படி மிக விரைவில் புரிந்துகொண்டு முத்தத்தினாலேயே என்னைக் காட்டிக் கொடுக்கிறாய்? என வினவினார்.

இன்றும் நம்மிடையே மற்றவர்களை அளவுக்கு மிஞ்சி புகழ்ந்து வாழ்த்தி பேசும் வழக்கம் உள்ளது. அப்படிப் புகழுபவர்கள் அனைவரும் திறந்தமனதோடு செய்வதில்லை. பொடி வைத்துப் பேசுவதும், பாசாங்கு செய்து பேசுவதும், அவர்கள் அகன்றபின் அவர் முதுகில் குத்துவதும் கொடிய வார்த்தைகளால் இகழுவதும், காட்டிக்கொடுப்பதும் தந்திரமாகச் செய்கின்றனர். தங்களுக்குச் சாதகமான செயல்களைச் செய்ய பிறரை நம்ப வைக்கின்றனர். தம்முடைய வார்த்தைகளுக்கும் செயல்பாட்டுக்கும் தொடர்வு இல்லாமலே போய்விடுபவரைக் குறித்து பலர் கவலைப்படுவதில்லை. தந்திரமாகப் பேசி நம் கடமைகளை நிறைவேற்றி காலம் கடத்திவிடுகிறோம். மனச்சாட்சியைக் கொன்று குழிதோண்டி புதைத்து விடுகிறோம். யூதாசின் ஆவி நம்மில் பலரிடம் குடிகொண்டுள்ளதால் பாசத்தைக்காட்டி, முத்தமிட்டு காட்டிக் கொடுக்கவும், இலாபமடையவும் தயங்குவதில்லை. நம் வார்த்தைகளில் உண்மை இல்லாவிடில் மாயமால யூதாசின் ஆவியை அணிந்துள்ளோம் என்றுதான்



**01-04-2012** *குருத்தோலைத் திருநாள்*

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் முதல் ஞாயிறு*

# இயேசு சமாதானத்தின் அடையாளம்

## Jesus the Sign of Peace

செக். 9 : 9–12 எபே. 2 : 11–22
தி.பா. 24 யோவா. 12 : 12–19

"இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர்" (செக் 9 : 9).

இறைவனால் படைக்கப்பட்ட உலகில் மனிதன் படைப்பனைத்துடன் நல்லுறவுடன் சமாதானமாய் வாழ்ந்து வந்தான். கடவுளின் கட்டளையினை மீறி சமாதானமற்றவனானான். அச்சத்தினால் தன்னை அத்தி இலைகளுள் மறைத்து வாழ விரும்பினான். கடவுள் உறவை விட்டு விலகியபோது பொறாமை, கொலை, உறவின்மை போன்றவற்றை சந்தித்தான். சமாதானமற்றவனானான். இதனால் தொடர் வாழ்வில் நீதி, நியாயமற்ற ஆளுமை, அடிமைத்தனம் இவற்றை சொந்தமாக்கினான். சுதந்திரமற்ற வாழ்வால் சமாதானம் இழந்த மானிடத்திடம் கடவுள் கனிவு கொண்டு இறைவாக்குரைப்போரின் வாயிலாக நம்பிக்கை தளிரினைதந்து உதவினார். இதற்கு தீர்க்கர்களின் நூல்கள் சான்றாயுள்ளன. "சமாதானத்தின் இளவரசர் வந்து முடிவில்லா சமாதானம் அருளுவார்" என ஏசாயா கூறுகிறார் (ஏசா. 9 : 6).

மனிதன் தேடும் வழிகளில் சமாதானம் அடைவதில்லை. "மாறாக சமாதானக் காரணரான இயேசு கிறிஸ்துவில் தான் சமாதானம்" என சகரியா தனது தீர்க்க தரிசன நூலில் முன் அறிவிப்பாய் உரைக்கிறார். நீதி, உண்மை சார்ந்த உலக ஆசியும் சீர ஆன்மீக நலவாழ்வும் பெறுவதே சமாதானம். இது இயேசுவில் மட்டுமே பெற இயலும் என்பதனைத் திருமறைச் சார்ந்து சிந்தனை செய்வோம்.

### 1. உரிமைக்குரலுக்குள் மலரும் உன்னதரின் சமாதானம்

வரலாற்றில் இஸ்ரயேல் மக்கள் வாழ்வுக்காக எகிப்தில் சென்றவர்கள் அங்கே பலுகிப் பெருகினர். இதனால் கலக்கம் கொண்ட மன்னர் நூதனமாக எண்ணிக்கையின் வளர்ச்சியினைத் தடை செய்ய ஆண் மகவுகளைக் கொலை செய்ய கட்டளையிட்டான். அதிக வேலை பழுக்களை சுமத்தி அவர்களை ஒடுக்கினார் (வி.ப. 1 : 13). எகிப்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களோ அடிமைத்தனத்தால் அழுது புலம்பினர் (வி.ப. 2 : 23, 24). அடிமைத்

**01-04-2012**

*அருணோதயத் தொழுகை*

# மகிழ்வருளும் மகிபன்

யோவா. 15 : 1–11

"என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்" (யோவா 15 : 11).

எங்கே மகிழ்ச்சி எங்கே நிம்மதி என்ற ஏக்கக்குரல் மானிடரிடையே ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஆகவே மானிடர் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காக எதையும் இழப்பதற்கு ஆயத்தமாகி விட்டனர். கேளிக்கை உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று சொற்பநேர மகிழ்ச்சியைத் தேடுபவர்களும், மகிழ்ச்சிக்காகப் போதைப் பொருட்களைப் பயன்படுத்தி தங்களையே கெடுத்துக் கொள்பவர்களையும் காணமுடிகிறது. இவைகள் நிலையானது அல்ல என்றும் இவைகளால் அழிவும் வேதனைகளுமே மிஞ்சிப்போகிறது என்றும் உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால் இப்புதிய மாதத்தில் ஆண்டவர் தம்முடைய மகிழ்ச்சியை மனுக்குலத்திற்கு அருளி மனுக்குலம் மகிழ்வுடன் வாழ அழைப்பு விடுக்கிறார் என்பதை உணர்ந்துகொள்ள அழைக்கப்படுகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நிலைத்துநின்று வாழுகின்ற மனிதர்கள் அவருடைய மகிழ்ச்சியிலும் நிலைத்து நின்று வாழ முடியும் என்று குறிப்பிடுகிறார் (யோவா. 15 : 11). எனவே அவரே மகிழ்வின் காரணர் எனவும், மகிழ்வின் ஊற்று எனவும் அறிந்து கொள்ள முடிகிறது. இன்றைய மனுக்குலத்தின் மகிழ்வுக்கான ஏக்கத்தையும் இறை மகிழ்ச்சியையும் குறித்துத் தியானிப்போமாக.

## 1. மகிழ்வுக்காக ஏங்கும் மனுக்குலம்

மனுக்குலம் மகிழ்வை இழக்கும் முதல் தருணம் தீங்கிழைக்கும் வாழ்வு (Sinful life) என அறுதியிட்டு கூறமுடியும். இதனைத் திருப்பாடகர் தாவீதின் வாழ்விலிருந்துத் தெளிவாகக் கற்றுக் கொள்ள முடியும். அவர் கடவுளிடம் ஏறெடுக்கும் மன்றாட்டில் இறையே மீட்பின் மகிழ்வைத் திரும்பவும் எனக்குத்தாரும் (51 : 12) என்று முறையிடுகிறார். இம்மன்றாட்டில் இருக்கும் திரும்பவும் என்ற சொல் மிக முக்கியமானதாகும். அதாவது கடவுளுக்குப் பயந்து உண்மையோடு



வாழ்ந்த வேளை இறை மகிழ்ச்சியால் நிறைக்கப்பட்டிருந்த இம்மனிதர் எப்போது கொடுஞ்செயல்புரிந்தாரோ (2 சாமு. 11, 12) அப்பொழுதே அவரது வாழ்விலிருந்து மகிழ்ச்சி எடுபட்டுப்போனது. எனவே கடவுளிடம் மன்றாடி கெஞ்சுகின்றார். எனவே கடவுளிடமிருந்துத் தூரம் செல்லும் பாவ வாழ்வு மகிழ்விலிருந்தும் மனிதரைத் தூரமாக்கி விடுகிறது. காரணம் அவரே மகிழ்வுக்குக் காரணராவர் (யோவா. 15 : 11) மகிழ்வுக்காக ஏங்கி நிற்கும் ஒவ்வொருவரும் ஆண்டவரிடமிருந்து (அவரிடமுள்ள) மகிழ்வைப் பெற்றுக் கொள்ள அழைக்கப்படுகிறோம். அதை ஒவ்வொருவரிடமிருந்தும் எவரும் அபகரித்து எடுத்துப்போட முடியாது (யோவா. 16 : 22) .

## 2. இயேசுவின் பிறப்பின் வழி மகிழ்ச்சி

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் பிறந்தபோது மேய்ப்பர்களைச் சந்தித்த வானதூதர், "இதோ எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று இயேசுவின் பிறப்பின் செய்தியை அறிவித்தார் (லூக் 2 : 10). எனவே மகிழ்விழந்த மனுக்குலத்திற்கு இயேசுவின் பிறப்பு மகிழ்ச்சியைக் கொண்டு வந்துள்ளது. பழைய ஏற்பாட்டிலும் பக்தர்கள் தங்கள் வாழ்வில் ஆண்டவரே உண்மையான மகிழ்ச்சியை அருளுகிறவர் என்பதை உணர்ந்திருந்தார்கள் எனவே தான் திருப்பாடகர் "எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற கடவுளிடத்தில் பிரவேசிப்பேன் (தி.பா. 43 : 4)" என்கிறார். அதோடு ஏசாயா இறை வாக்கினர் மூலமாக மக்களுக்கு அளிக்கப்படும் செய்தியில் கடவுள் தம்முடைய பிள்ளைகளைத் தலைமுறை தலைமுறையாக மகிழ்ச்சியாக வைப்பதுடன் (ஏசா. 60 : 15) அவர்கள் மீது மகிழ்ச்சியாயிருப்பேன் (65 : 19) என்கிறார். மகிழ்ச்சியின் உறைவிடமாகியக் கடவுள் இயேசு கிறிஸ்துவின் வழியாக அனைவரும் அம்மகிழ்ச்சியைப் பெற்று அனுபவிக்க விரும்புகிறார். இந்த மகிழ்ச்சியை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள ஆயத்தமாவோமாக.

## 3. வசனத்தின் வழி மகிழ்ச்சி

திருமறையைக் கற்பதும் தியானிப்பதும் அதிக மகிழ்ச்சியைத் தருகிறது என்பதைத் திருப்பாடகர் தம் வாழ்வினூடாய் வெளிப்படுத்தியுள்ளார். அவர் கடவுளுடைய வார்த்தையே தமக்கு மகிழ்ச்சி (119 : 77, 174) என்றும் கடவுளுடைய விதிமுறைகளில் மகிழ்ச்சியாயிருப்பேன் (119 : 16) என்றும் குறிப்பிடுகிறார். அதோடு ஆண்டவரைத் தேடுகிற அனைவரும் ஆண்டவருக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக (தி.பா. 40 : 16; 70 : 4) என்றும் குறிப்பிடுகிறார். தூய யோவான் ஆண்டவருடைய வார்த்தைகள் எழுதப்பட்டிருப்பதின் நோக்கமே "கடவுள் நமக்கு

அருளியுள்ள மகிழ்ச்சி நம்மில் நிறைவாய் தங்கியிருப்பதற்காகவே" என்று குறிப்பிடுகிறார் (1 யோவா. 1 : 4). எனவே திருமறையைக் கற்று தியானித்து ஆண்டவரைப் பற்றிக் கொண்டு மகிழ்ச்சியாய் வாழ அழைக்கப்படுகிறோம். மகிழ்வாய் வாழ்வதே மருந்து போன்றது (நீதி. 17 : 22) என்றும் மனமகிழ்ச்சி முகமலர்ச்சி தரக்கூடியது (நீதி. 15 : 13) எனவும் நீதிமொழிகள் ஆக்கியோன் குறிப்பிடுகிறார். நாம் கவலையடைந்து சோர்ந்து வாழ கடவுள் ஒருபோதும் விரும்புவதேயில்லை. எனவே கவலைப்படுவதால் எதையும் சாதிக்க முடிவதில்லை என இயேசுகிறிஸ்துவும் (மத். 6 : 25-34) மகிழ்ச்சியாய் வாழ வேண்டும் என பவுலாரும் (பிலி. 4 : 4) அழைப்பு விடுக்கின்றனர். இப்புதிய மாதத்தில், ஆண்டவர் அருளும் மகிழ்ச்சியைப் பெற்று நிறைவுடன் வாழ அனைவருக்கும் அருள் தருவாராக!

**அருள்திரு. பிரைட் சாலமோன்**



பொருள்.

**முடிவுரை**

முதல் மூன்று நற்செய்தி நூற்களும் யூதாஸ் இயேசுநாதரைக் காட்டிக்கொடுத்தார் எனக் கூறினாலும் யோவான் நற்செய்தி நூல் ஆசிரியர் 'இயேசுவை காட்டிக்கொடுக்க முடியவில்லை. இயேசுதான் தன்னார்வமாக யூதாசின் முயற்சிக்குத் தன்னை இருமுறை ஒப்படைத்தார்'. என கூறுவதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும் (யோ. 18 : 4-9). ஆண்டவரின் உதவியின்றி யாரும் ஆண்டவரைக் காட்டிக் கொடுக்க முடியாது என்ற உண்மையைக் காணலாம். யூதாசின் மேல் ஆண்டவருக்குக் கடைசிவரை கரிசனை இருந்தது. ஒரு பாவிகூட கெட்டுவிடக்கூடாது என்பதில் அவர் குறியாக இருந்திருக்கலாம்.

காட்டிக்கொடுத்தல் என்ற பண்பை இன்று பலரும் தரித்திருக்கின்றனர். தேர்தல் நேரங்களில் நம்பியிருப்பவர்களை எளிதில் ஏமாற்றிவிடுவர். வெளிப்படையாக பேசுபவர்கள் சில நேரங்களில் வெறுப்புடையோர் போன்று காணப்படுவர். ஆனால் இனிமையாக பேசுபவர்கள்தான் எளிதில் இதுபோன்ற காட்டிக்கொடுத்தலைச் செய்துவிட முடியும். நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக காணப்படுபவர்கள் தமது பதவிக்காக, உயர்வுக்காக, பணத்துக்காக காட்டிக் கொடுப்பதுதான் உச்சகட்ட துரோகம்.

நம் கிறித்தவ வாழ்வில் விழித்திருக்க வேண்டிய நேரத்தில் தூங்குதல், பாதுகாக்க வேண்டிய நேரத்தில் பச்சைத் துரோகத்தால் காட்டிக் கொடுத்தல், நியாயமாகப் பகிரவேண்டிய நேரத்தில் அநியாயமாக அபகரிப்பது துன்புற வேண்டிய நேரத்தில் ஒடி ஒளிந்து கொள்ளல், கூட்டொருமைப்பாட்டுடன் துணிந்து நிற்க வேண்டிய நேரத்தில் மறுதலித்தல் போன்ற அனுபவங்களை இயேசுவும் சிலுவை வழியாய் தாங்கினார். நாமும் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தால்தான் பல சிலுவைகளைத் தவிர்க்க முடியும். இல்லாவிடில் இயேசுநாதரின் தோழமையைவிட யூதாசின் தோழமையையே நாம் தெரிந்தெடுக்கிறோம் என்று பொருள். 'யூதாசே முத்தினாலேயோ என்னைக் காட்டிக்கொடுக்கிறாய்?' என்ற இயேசுவின் குரல் இன்னும் தொடர்ந்து நம்மிடம் கேட்கிறது.

**அருள்திரு. அறிவர் சாலமன் விக்டசு**

**04-04-2012**

***புனித புதன்***

## அபிஷேகம் : நற்செயலின் அடையாளம்

மத்தேயு 26 : 6 – 13

"அங்கு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது விலையுயர்ந்த நறுமண தைலம் கொண்ட படிகச்சிமிழுடன் பெண்ணொருவர் அவரிடம் வந்து அதை அவர் தலையில் ஊற்றினார்" (மத். 26 : 7)

கிறிஸ்து என்னும் தமிழ்ச் சொல்லுக்கு கிரேக்கத்தில் கிறிஸ்தோஸ் (Christos) என்றும், எபிரேயத்தில் மாஷியா (Mashiah) என்றும் அரேமயத்தில் மேஷிகா (Meshiak) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் பொருள் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" அல்லது "அருட்பொழிவு பெற்றவர்" என்பவையாகும். ஒரு குறிப்பிட்ட பணிக்கென்று குறிப்பிட்ட நபரை அருட்பொழிவு செய்து அனுப்பும் முறை இஸ்ரேலில் வழக்கத்தில் இருந்தது. இவ்வாறு அரசர், ஆசாரியர், இறைவாக்கினர் ஆகியோர் தம் தம் பணிக்கென்று அருட்பொழிவு செய்து அனுப்பப்பட்டனர்.

இயேசு நாதரின் நாசரேத் ஊர் அறிக்கையில் ஆண்டவருடைய ஆவி என்மேலுள்ளது; ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர்; என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார் (லூக். 4 : 18, 19) என குறிப்பிடுகிறார்.

பாஸ்கா காலம், யூதர்கள் எருசலேமில் குழுமியிருந்தநேரம். யூத வழக்கப்படி பாஸ்கா கொண்டாடவரும் மக்கள் எருசலேமை சுற்றியுள்ள கிராமங்களில் இரவில் தங்குவதும் உறவுகளோடு இணைந்து விருந்துண்ணுவதும் இயல்பு இவ்விதம் ஓர் நிகழ்வில் தான் பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோன் இல்லத்தில் இயேசு உணவருந்தி கொண்டிருந்தபோது பெண்ணொருத்தி விலையுயர்ந்த தைலம் கொண்ட படிகசிமிழுடன் வந்து அதை உடைத்து அவர் தலையில் ஊற்றி அவரை அபிஷேகம் பண்ணின நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வு . . . .



வருகிறார் என்ற யூதர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப (சகரி. 9 : 9,14 : 3-5) இயேசு ஒலிவ மலை வழியாக பவனி சென்றார். இயேசுவின் சமாதானப் பேரணி சிற்றூரிலிருந்து பட்டணம் நோக்கிப் பயணித்தது. கலாச்சாரத்திலும் சமயக் கட்டுப்பாடுகளிலும் சிறந்து விளங்கும் பட்டணம் நோக்கி சிற்றூரிலிருந்து பேரணி பயணிக்கிறது என்றால் வியப்பானது. நாசரேத்தூரிலிருந்து நன்மை பிறக்கக்கூடுமோ? எனும் கேள்விக்கு விடையாக பேரணியில் நன்மை பிறந்தது. ஒதுக்கப்பட்ட ஓரம்கட்டப்பட்ட இடங்களிலிருந்தே நன்மை புறப்பட்டுச் செல்கிறது. இயேசு அவைகளோடு தன்னை இணைத்துக் கொள்கிறார். கலாச்சாரம் வளர்ந்த பட்டணத்தில் கலாச்சார சிதைவுகளால் ஆன்மீகச் சிதைவுகள், சிதைவுற்றிருக்கும் பட்டணங்களை விடுவிக்க கிராமங்கலிருந்து விடுதலைப் பயணம் பவனியாக பெத்பகே பெத்தானியா கிராமங்கலிருந்து எருசலேம் பட்டணம் நோக்கி பயணித்தது இயேசுவின் பேரணி.

### 3. உரிமம் வழங்கி அகமகிழச் செய்யும் சமாதானம்

ஒரு முறை தாவீது அரசர் எபூசியர் மேல் யுத்தம் செய்ய எப்ரோனிலிருந்து புறப்பட்டபோது, நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை, குருடரும், சப்பாணிகளும் உன்னை தடுப்பார்கள் என்று சொன்னார்கள் (2 சாமு. 5 : 8). ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையை பிடித்தார். அதுவே தாவீதின் நகரமாயிற்று. கோட்டையை பிடிக்க தடையாக இருந்த குருடர்களையும், சப்பாணிகளையும் முறியடிக்க கட்டளையிட அவர்களை முறியடித்தனர். அன்று முதல் குருடரும், சப்பாணிகளும் ஆலயத்தினுள் நுழையலாகாது. தாவீதின் பாரம்பரியம் 1000 ஆண்டு காலங்கள் பழக்கத்திலிருந்தது. மறுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வும் ஆலய பிரவேசமும் தரப்படுவது நியாயமானது அல்லவா? இஸ்ரயேல் மக்கள் என்பதில் அடிமைகளாக வாழ்ந்த காலங்களில் விடுதலை தர கடவுள் நினைத்து, மோசேயை தெரிந்து கொண்டார். மோசே கடவுளிடம் (வி.ப. 4:10) நான் வாக்கு வல்லவன் அல்ல நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன் எனக்கூற (வி.ப. 4:11) மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும், செவிடனையும், பார்வையுள்ளவனையும் குருடரையும் உருவாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? கடவுளே அவர்களை ஏற்றுகொள்ளும் போது மாற்றுதிறன் ஓர் தடையாகாதே என்று பதிலுரைத்து என மோசேயை இஸ்ரயேலின் மேல் தலைவராக மாற்றினார். அதே கடவுள் தன் குமாரனாகிய இயேசுநாதரின் வழி எருசலேம் தேவாலயத்தில் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டு கண்ணீர் சிந்தி எருசலேம் தேவாலயத்துள் அவர்களுடன் நுழைகிறார். இது பயனற்று போன மனித நேயம் பேணாத பாரம்பரியங்கள் என கண்டு அவைகளை உடைத்தெறிந்தார். ஓய்வு நாளில் எதுவும் செய்யலாகாது முடங்கிப் போன மனிதர்களை ஓய்வு நாளில் இயங்கச் செய்தார். மனித நேயமற்று பெற்றோரை பராமரிக்காது கொர்பான் காணிக்கை வழி கடமை நிறைவுற்றது

என்பதை உடைக்கிறார். தள்ளுதல் சீட்டு வழங்கி விவாகரத்து செய்வோரை விபச்சாரம் செய்ய தூண்டுகிறாய் எனக் கூறி கூடாது எனச் சாடுகிறார். 4000 ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்த உடன்கட்டை ஏறுதல் நிகழ்வினை வில்லியம், ராஜாராம் மோகன்ராய் எடுத்த முயற்சியால் ஆங்கிலேயப் பாராளுமன்றம் அதிகாரப் பூர்வமாக தடை செய்தது. ராஜாராம் மோகன்ராய் 1811-இல் தனது சகோதரன் மரித்தபோது அவரது மனைவியை உடன்கட்டை ஏற்றியதால் இதை குறித்து எதிர்ப்பு தெரிவித்தார். அதன் விளைவு இன்றைய சமுதாயத்திற்கு சமாதானம் நல்கிற்று. இன்று திருச்சபையாக சமுதாயத்திலும், திருச்சபைகளிலும் காணப்படும் மனித நேயமற்ற செயல்பாடுகளையும், பாரம்பரியங்களையும் உடைத்தெறிந்து மனித நலம் பேண பவனி செல்லும் சமாதானக் காரணியாகும் இயேசுவுடன் இணைந்து பயணம் செய்வோம்.

**மன்றாட்டு :** *கடவுளே, உமது மைந்தர் அன்பு தவிர மற்றெல்லாவற்றிலும் தம்மை வெறுமையாக்கினார். அமைதியின் நகரில் கழுதையின் மேல் ஏறி பயணித்ததின் வழியாக உமது தாழ்மையையும், கீழ்ப்படிதலையும், வெளிப்படுத்தினார். நாங்கள் உமது சமாதானத்தின் வடிகாலாய் விளங்கவும், எளிமையுடன் பணி செய்யவும், சாட்சியாய் வாழவும் உமது அருளை வழங்குவீராக. உம்மோடும் தூயஆவியாரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

**Rev. V. டேவிட் ராபி ஜேக்கப்**



**வஞ்சகக் கேள்வி :**

யூதேயாவை உரோமர்கள் ஆட்சி செய்ததால், ஒவ்வொரு குடிமகனும் வரி செலுத்த வேண்டும். இந்த நிலையில் ஆண்டவரிடம் வந்த வஞ்சகமான மனிதர்கள் கேள்வியை கேட்டார்கள் மத். 22:17. “வரி கொடுப்பது நியாயமோ ? நியாயமில்லையோ?” எதற்கு வரி செலுத்த வேண்டும் என்று ஆண்டவர் சொன்னால், நாட்டுப்பற்று இல்லாதவர். வரி செலுத்தக் கூடாது என்றால் உரோம ஆட்சிக்க எதிராக மக்களை தூண்டி விடுகிறார் என்று குற்றம் சாட்டி ராஜ துரோகத்திற்கான மரண தண்டனை பெற்று தர யோசித்தனர். இவ்வாறு நம்மை சுற்றியும் இன்று வஞ்சகம் தீர்க்க துடிக்கும் மனிதர்கள் ஏராளம். சவுல், தாவீதை வஞ்சகம் தீர்க்க தேடிக் கொண்டிருந்நதான். அப்சலோம் தந்தை தாவீதை வஞ்சக நோக்கோடு பார்த்தான். இன்று நம்முடன் இருப்பவர்கள், நம் உறவினர்கள் என பலர் வஞ்சகம் தீர்க்க துடிப்பதினால் நாம் கவனமுடன் இயேசுவைப் போல் செயல்படுவோம்.

**வஞ்சகப் புகழ்ச்சி :**

ஒரு மனிதனை வீழ்த்த பல வியூகங்களை வகுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவனை அளவுக்கதிகமாக புகழ்ந்தால் போதும். அப்படித்தான் ஆண்டவரை அளவுக்கதிகமாக வஞ்சகப் புகழ்ச்சியாக புகழுகிறார்கள் (மத். 22:16). ஒரு மனிதனை புகழும்போது, அவனுக்கு பெரிய ஆபத்து, பெரிய சூழ்ச்சி, நஷ்டம், சதித் திட்டம் அவனுக்காக தயாராகி கொண்டிருக்கிறது என்பதனை புரிந்துகொள்ள வேண்டும். இதனை ஆண்டவரும் உணர்ந்தார் மத். 22:18-இல் “இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்து.....” என திருமறை வசனம் தெளிவுப்படுத்துகிறது. இன்றையச் சூழலில் தனக்கு மேல் உள்ள அதிகாரிகளிடம் நன்மை பெற இல்லாததை பொல்லாததை சொல்லி புகழ்ச்சியால் உச்சிக்கு கொண்டு போய் விடுகிறார்கள். இருதயத்தில் விஷத்தை வைத்துக் கொண்டு நாவில் தேனை கொண்டு பேசுவது எவ்வளவு ஆபத்தல்லவா..... வஞ்சகப் புகழ்ச்சி மனிதர்களை இனம் கண்டுக் கொள்வோம்.

மனிதன், மிருகங்களை காட்டிலும் கொடியவன் என்பார்கள். ஏனென்றால் காட்டில் வாழும் சிங்கம், புலி, கரடி, நரி இவைகளை பார்த்ததும் இவைகள் தான் கரடி, புலி, நரி என அடையாளம் காணலாம். ஆனால் மனிதனில் பலர் நம்மிடம் சிரித்து பேசியே குழி பறிக்கிற இவர்களில் யார் நரி, கரடி, சிங்கம் எனக் கண்டுபிடிப்பது, இயேசுவும் மத்தேயு 7:15 - இல் ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டு, உள்ளத்திலே பட்சிக்கிற ஓநாய்கள் என்கிறார். ஆக இன்றைய சூழலில் வஞ்சக மனிதர்களையும், வஞ்சக புகழ்ச்சி செய்யும் மனிதர்களையும் இனங்கண்டு, அவர்கள் மத்தியில் எச்சரிக்கையாய் கள்ளம் கபடம் இல்லாமல் வாழ்வோம்.

அருள்திரு. **P. இராஜா ஸ்டாலின்**

எனினும் இலைகள் நிறைந்திருந்த அத்திமரத்தை தேடிச் சென்ற இயேசுவை அத்திமரம் ஏமாற்றிப் போட்டது.

பாதையோரம் நிற்பவைகள் பொதுமக்களுக்கு அல்லது பிறருக்கு பயன் கொடுப்பதற்காகவே நிற்றல் அவசியம். பாதையோரம் பொது நலனுக்காக நின்ற மரத்தில்கனி இல்லாதது அல்லது பிறரை ஏமாற்றியது ஆண்டவரை வருந்த செய்தது. இவ்வாறே இஸ்ராயேல் மக்கள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள், தெரிவு செய்யப்பட்டவர்கள், இவர்கள் பிறருக்கு ஆசீர்வாதமாக திகழ வேண்டியவர்கள். ஆனால் பாதையோர அத்திமரம் போலவே இவர்கள் உள்ளனர் என்பதை இயேசு சுட்டிக்காட்டுகிறார்.

## 2. பயனற்ற அத்திமரம் : மத். 21:19

"அதில் இலைகளைத் தவிர வேறு எதையும் அவர் காணாமல்......" மரத்தினை நட்டு வளர்ப்போர் எதிர்பார்ப்பது கனியை அல்லது பலனை மட்டுமே. அவ்வாறு நட்டு வளர்க்கப்பட்ட மரம் கனியையோ பலனையோ கொடுக்காவிட்டால் ஏமாற்றமே ஏற்படுகிறது. இயேசு பாதையில் கண்ட அத்திமரத்தில் கனியில்லாததால் அது பயனற்ற ஒரு மரமாகவே விளங்கியது. இஸ்ராயேல் மக்களிடம் இயேசு எதிர்பார்த்தவைகளை அவர்கள் வெளிக்காட்டி வாழாத செயல், அவர்கள் பயனற்றவர்கள் என்பதையே வெளிக்காட்டுகிறது. தங்கள் புகழுக்காக தர்மம் செய்தது (மத். 6:1). தங்கள் பக்தியை வெளிக்காட்ட நோன்பிருத்தல் போன்ற மாய்மாலமான செயல்கள் இஸ்ரயேலரின் போலியான பயனற்ற வாழ்வின் ஆதாரங்களேயாகும்.

மகா கஞ்சன் தான் சேர்த்த செல்வங்கள் எல்லாவற்றையும் செலவழிந்துவிடுமோ என்ற பயத்தில் அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து தங்கக் கட்டிகளாக மாற்றி, யாருமே அறியாத நிலையில் ஊரின் எல்லையில் ஒரு மரத்தடியில் புதைத்து வைத்தான். ஒவ்வொரு நாளும் மரத்தடி சென்று தங்கக் கட்டிகளை பார்த்துவிட்டு வருவான். இதைக் கவனித்த திருடன் தங்கக் கட்டிகளை திருடிவிட்டான். மறுநாள் மகா கஞ்சன் தங்கக் கட்டிகளை காணாது அழுது புரண்டான். ஊரார் கூடினர், காரணத்தை அறிந்தனர். அப்போது அவர்கள் "எப்போதாவது தங்கக் கட்டிகளை பயன்படுத்தியதுண்டா" எனக் கேட்டனர். இல்லை என்றான். உடனே அவர்கள் அருகில்கிடந்த கல்லை எடுத்து கொடுத்து இதை தங்கக் கட்டியாக எண்ணி புதைத்து வை, உனக்கும் பிறருக்கும் பயன்படாத தங்கம் இருந்தால் என்ன ? இல்லாமல் இருந்தால் என்ன ? என்றனராம்.

## 3. பட்டுப்போன அத்திமரம் : மத். 21:19

"உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று."

பாதையோர அத்திமரம், பயனற்ற அத்திமரம் இயேசு சபிக்க, பட்டுப்போன அத்திமரமானது. எரேமியா 8:13இல் உலர்ந்துபோன அல்லது



பட்டுப்போன அத்திமரமானது தண்டனையின் அல்லது அழிவின் அடையாளமாக சொல்லப்பட்டுள்ளது. இங்கு பட்டுப்போன அத்திமரம், நியாயத்தீர்ப்பின் இஸ்ராயேல் மக்களின் தண்டனையை அல்லது அழிவை சுட்டுவதாய் அமைந்துள்ளது. தண்டனையிலிருந்து தப்பித்து வாழ்வு பெற்றிட நமது தீச்செயல்களுக்காக இறைவனிடம் இறைஞ்சி, இரக்கம் பெற்றுக்கொள்தல் அவசியம். அந்த இரக்கம் கனிக் கொடுக்கும் பயனுள்ள வாழ்வை அமைத்துக்கொள்ளும் வாய்ப்பின் காலமாக கருதுதல் அவசியம்.

அன்பர்களே நாம் அனைவரும் பாதையோரத்தில் பயன் கொடாத அத்திமரமாய் அல்ல பயன் கொடுக்கும் அத்தி மரமாய் செயல்படுவோம்.

அருள்திரு. **ஜா. நேசபிரின்ஸ்**

**03-04-2012**

***புனிதவாரம் : செவ்வாய்***

# வஞ்சக புகழ்ச்சியில் வஞ்சக மனிதர்கள்

மத். 22 : 15–40

"நீர் முகதாட்சிணியம் இல்லாதவர், வரிக்கொடுக்கிறது நியாயமோ? அல்லவோ?" (மத். 22 : 16 – 17)

ஆண்டவர் இவ்வுலகை முழுமையாக அழகாகப் படைத்தார். மனுக்குலத்தின் தேவை விரிவடைந்தபோது, தம் தேவையை பூர்த்திச் செய்ய பண்டமாற்று முறையை பயன்படுத்தினான் பண்டமாற்று முறையால் தானிய வகை, உயிர் பொருட்கள், உலோகப் பொருட்கள் இவைகளை பயன்படுத்தினான். இச்சூழலில் மிகுதியான பொருட்களை வாங்கும்போது பண்டமாற்று முறையில் பொது பொருளை பயன்படுத்த திட்டமிடுகின்றான். அதன்படி உயிரின பொருளான ஆடு, மாடுகளை பொது பொருளாக பயன்படுத்தினான். அதே வேளையில் குறைந்த அளவில் உள்ள பொருட்களை வாங்க கடல் சிப்பிகளை பயன்படுத்தினார்கள். ஆனால் கடல் சிப்பிகள் எளிதில் உடைந்தததால், அதற்கு பதிலாய் செம்பு தகட்டையும், அரிய, பெரிய பொருட்களுக்காய் தங்க தகட்டையும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். இந்த வளர்ச்சியில் தான் தங்களுக்குரிய தகட்டை அடையாளப்படுத்த தங்கள் குழுக்களின் குல சின்னங்களை பதித்தார்கள். இப்படி தான் நாணயம் பயன்பாட்டுக்கு வந்தது.

சேர மக்களின் நாணயத்தில் ஒரு பக்கம் யானை உருவமும், மறுபக்கம் அம்பு உருவமும், சோழ மக்களின் நாணயத்தில் ஒரு பக்கம் யானை உருவமும், மறுபக்கம் புலி உருவமும், பாண்டிய மக்களின் நாணயத்தில் ஒரு பக்கம் யானையையும், மறுபக்கம் மீன் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைப் போன்று உரோம நாணயத்தில் இராயனின் உருவமும் மேலெழுத்தும் பொறிக்கப்பட்டது. இந்த நாணயத்தை யூதர்கள் பயன்படுத்த தயங்கினார்கள். ஏனெனில் அவர்களது கோட்பாட்டின் படி, உருவம் பொறிக்கப்பட்ட நாணயம் விக்கிரம் ஆகிவிடுகிறது. இதனால் உரோம நாணயத்தை நிலவரிக்கும், சொத்து வரிக்கும், எருசலேமில் வீட்டு வரிக்கும், சுங்க வரிக்கும் பயன்படுத்தினார்கள். ஆனால் ஆலய பயன்பாட்டுக்கு எந்த உருவமும் பொறிக்காத shekkel என்ற நாணயத்தை பயன்படுத்தி வந்தார்கள். இருபது வயது நிரம்பிய யூதன், ஆலய பயன்பாட்டிற்கு, காணிக்கையாக அரை shekkel வெள்ளி நாணயம் கொடுக்க வேண்டும். வி.ப. 30:13-16-இல் இதற்கான கட்டளை இடம் பெற்றுள்ளது. மத். 17:24-27-இல் ஆண்டவரும் இறை நிறைவேற்றினார் எனக் கூறப்பட்டுள்ளது.



**02-04-2012**

***புனிதவாரம் : திங்கள்***

# அத்திமரம்: போலி வாழ்வின் அடையாளம்

மத். 21 : 18–22

"வழியோரத்தில் ஓர் அத்திமரத்தைக் கண்டு அதன் அருகில் சென்றார். அதில் இலைகளைத் தவிர வேறு எதையும் அவர் காணாமல், -இனி நீ கனிகளைக் கொடுக்கவே மாட்டாய்" என்று அதைப் பார்த்துக் கூறினார். உடனே அந்த அத்திமரம் பட்டுப்போயிற்று." மத். 21 : 19

அத்திமரம் இஸ்ராயேல் மக்களின் வாழ்வோடு பின்னிபிணைந்த மரம் ஆகும். இது பாலஸ்தீன மலைப்பகுதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் குறிப்பாக திபேரியா அருகிலுள்ள பள்ளத்தாக்கில் கலிலேயா கடல் ஓரத்தில் அதிகம் வளர்க்கப்படுவதாகும். அத்திமரம் பற்றியச் செய்தி திருமறை முழுவதிலும் சுமார் 60க்கும் அதிகமான இடங்களில் விரவிக்கிடக்கிறது. பாலஸ்தீனத்தில் கானானியர் காலம் முதலே அத்திமரம் பயிரிடப்பட்டு வருகிறது. தொடர்ச்சியாக பத்து மாதங்கள் கனி தருவது இது. இஸ்ராயேல் மக்களிடையே அத்திப்பழம் மிக முக்கிய உணவாக கருதப்படுகிறது. இது 5 - 15 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. இதன் பரந்த நெருக்கமான இலைகள் நல்ல நிழல் தருவதாகும். திருமறையில் அத்திமரம் பற்றிய செய்திகளை படிக்க முயலுவோமாயின் "இது செழுமையை வெளிப்படுத்தும் அடையாளமாகவும்" (இ.ச. 8:8), அமைதியின் அடையாளமாகவும் (மீகா 4:4), உலர்ந்து போன அத்திமரம் அழிவின் அடையாளமாகவும் (எரே. 5:17), மேசியாவின் வருகையை உணர்த்தும் அடையாளமாகவும் சொல்லப்பட்டடுள்ளது. ஆனால் இன்றைய திருமறைப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள அத்திமரம் தொடர்பான செய்தி யூதர்களின் போலியான பொய்மையான வாழ்வினை எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது. அவற்றை விரிவாக சிந்திக்க முயலுவோம்.

## 1. பாதையோர அத்திமரம் : மத்தேயு 21:19

"வழியோரத்தில் ஓர் அத்திமரத்தைக் கண்டு.......". இயேசு குரத்தோலை பவனியை முடித்தவிட்டு பெத்தானியாவில் வந்து தங்கினார். பின்பு மறுநாள் மீண்டும் பெத்தானியாவிலிருந்து எருசலேம் செல்லுகிறார். அப்படி செல்லும்போது அவருக்கு பசி ஏற்படுகிறது. அப்போது அவர் கண்ணிற்கு தென்பட்டது இலைகள் நிறைந்த ஓர் அத்திமரம். அம்மரம் பாதையோரம் நிற்கிறது. ஒரு அத்திமரத்தில் இலைகள் இருந்தால் பழம் நிச்சயம் இருக்க வேண்டும். ஆனால் இது அத்திப்பழ காலம் அல்ல.

அவரால் இயலாதது ஒன்றுமில்லை (எரே. 32:17). இந்த இறைவன் இஸ்ராயேலின் வரலாற்றிலே தமது ஆற்றலை வெளிப்படுத்தினார். பார்வோனிடம் அடிமைகளாயிருந்த இஸ்ரயேல் மக்களைத் தமது ஓங்கிய புயத்தினாலே மீட்ட கடவுள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்த மானுடரை மீட்க ஒப்பற்ற தியாகத்தின் வழியாய்த் தமது ஆற்றலை வெளிப்படுத்தினார் (இ.ச. 4:34, 1கொரி. 1: 18). பாவத்திலிருந்து அனைவரையும் மீட்கவே கடவுள் விரும்புகிறார். கடவுள் இந்த மீட்பின் திட்டத்தைத் தமது ஒரே பேறான மகன் இயேசு கிறிஸ்து வழியாக நிறைவேற்றுகிறார். மீட்பராகிய கிறிஸ்து சிலுவைச் சாவுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்ததன் வழியாக அவரது ஆற்றல் வெளிப்பட்டு அனைவருக்கும் வாழ்வு வந்தது.

### 1. வேள்வியினூடாய் வெளிப்பட்ட இறையாற்றல் :

(தொ.நூ. 22:1-14)

கடவுள் ஆபிரகாமிடம் நீ அன்பு கூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை பலியிடு என்று கேட்டதன் வழி ஆபிரகாமின் நம்பிக்கை சோதிக்கப்படுகிறது. இந்த நிகழ்வின் வழியாக ஆபிரகாமின் நம்பிக்கையை மட்டுமல்ல ஈசாக்கின் கீழ்ப்படிதலையும் நாம் புரிந்து கொள்ளலாம். வேள்வி நிறைவேற்றப்படுவதற்கு ஈசாக்கின் இந்த ஒப்படைப்பும், கீழ்ப்படிதலும் இவரைக் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாகக் காட்டியது. ஈசாக்கின் பலி இயேசு கிறிஸ்துவின் ஒரே பலிக்கு நிழலாட்டமான செயல் எனலாம். ஆபிரகாமின் மகன் பலியிடப்படாமல் காத்த கடவுள் தமது மகனைப் பலியிட அனுமதித்தார். ஈசாக்கிற்குப் பதிலாக ஆட்டுக்கடா பலியிடப்பட்டது. இதைப் போன்று நமக்குப் பதிலாக நமது பாவங்களுக்குப் பதிலீடாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் ஒரே முறை பலியிடப்பட்டார் (யோவா. 1:24; 1 பேது 2:24; எபி. 7:26-27). இன்னொரு உயிரை வேள்வியில் கொடுப்பதன் வழியாக மனிதர் தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பது பழங்கால நம்பிக்கை. யூதப் பின்னணியிலும் மனிதனின் பாவங்களை ஓர் ஆட்டின் மேல் சுமத்திப் பலியிடுவதால் பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற நம்பிக்கை மீட்டுக் கொண்டார். தன்னைக் கொடுத்து, நம்மைக் கொண்டார் என்பதிலிருந்து சிலுவை வேள்வி கடவுளின் மீட்கும் ஆற்றலின் வெள்ப்பாடு என நாம் புரிந்து கொள்ளலாம்.

### 2. வெறுமையாக்குதலினுடாய் வெளிப்பட்ட இறையாற்றல் :

(1 கொ. 1 : 18 - 25)

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்று வாக்குப்பண்ணப்பட்ட கானான் நாட்டைச் சொந்தாமாக்கியதன் வழியாக



### 1. நினைவு கூருதலின் அடையாளம் : (மத். 26 : 12)

“இவர் இந்த நறுமண தைலத்தை எனது உடல்மீது ஊற்றி எனது அடக்கத்திற்கு ஆயத்தம் செய்தார்.”

பாஸ்கா பண்டிகையின்போது பெத்தானிய தொழுநோயாளி சீமோன் வீட்டில் இயேசு பந்தியிருந்தால், பாஸ்கா இஸ்ரேலரின் விடுதலையை நினைவு கூரும் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டது. நிசான் மாதம் 14-ஆம் தியதி மாலை குடும்பத் தலைவரால் பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. அதன் குருதி ஆட்டை உண்பவர்களின் வீட்டின் வாசல் நிலைக்காலகள் இரண்டிலும், நிலையின் மேல் சட்டத்திலும் பூசப்பட்டது. எகிப்த்தியரின் தலைப்பேறுகளை அளிக்க இறைத்தூதர் சென்றபோது இக்குருதியைக் கண்டு அது இஸ்ரேல் வீடு என்று அறிந்து அதைவிட்டு, கடந்து போனார் என்பதன் நினைவாக பாஸ்கா ஆசரிக்கப்பட்டது (யாத். 12 : 5-7). பிற்பாடு பாஸ்காவும் புளிப்பில்லா அப்ப விழாவும் சேர்ந்ததாக நிசான் மாதம் 14-ஆம் தியதி முதல் 21-ஆம் தியதிவரை ஆசரிக்கப்பட்டது. இவ்விழாவில் என் தகப்பன் அழிவுக்கு நேரான சிரியா தேசத்தான் அலைந்து திரிந்தவன், பிழைப்பு தேடி எகிப்திற்கு சென்றாள். எகிப்தியர் அடிமைப்படுத்தினபோது கடவுள் அவர்களை விடுதலை செய்து பாலும் தேனும் ஓடும் இக்கானான் நாட்டிற்கு எங்களைக் கொண்டு வந்தார் என்று வருகின்ற விடுதலையாள் பற்றுறுதியறிக்கை செய்யப்பட்டது. பிள்ளைகள் பாஸ்காவின் பொருள் என்ன என்று கேட்கும்போது, விடுதலை வரலாறு அவர்களுக்குச் சொல்லப்பட்டது. புதிய ஏற்பாட்டில் பாஸ்கா ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புமைப்படுத்தப் பட்டுள்ளது. தரிசன நூலில் உயர்த்தப்பட்டு உயரிடத்தில் இருக்கும் இயேசு ஆட்டுக்குட்டியென 28 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

தூய பவுல் கூறும்போது நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே (1 கொரி. 5 : 7) என்கிறார். பாஸ்காவில் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. கிறிஸ்துவும் உலகத்தின் பாவத்தை சுமந்து திரிகிற தேவ ஆட்டுக்குட்டியாக சிலுவையில் அடிக்கப்பட்டார். இதை அடையாளப்படுத்தும் விதத்தில் இப்பெண்மணி இயேசுவை நறுமணத்தைலத்தால் அபிஷேகம் செய்தார்.

### 2. நற்செயல்களின் அடையாளம் : (மத். 26 : 10)

ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள். என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள்.

நற்செயல்களுக்கு மாதிரிகளாய் கிறிஸ்தவர்கள் வாழவேண்டும் என்று திருமறை வலியுறுத்துகிறது. விசுவாசிகள் என்று அறியப்படுகின்ற நம்முடைய விசுவாசம் நற்செயல்கள் வழி வெளிப்படவேண்டும். இயேசுநாதர் மலைப்பெழியில் நீங்கள் மண்ணுலகுக்கு உப்பாய்

இருக்கிறீர்கள். நீங்கள் உலகுக்கு ஒளியாய் இருக்கிறீர்கள். உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க. அப்போது அவர்கள் உங்கள் நற்செயல்களை கண்டு விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள் (மத்தேயு 5 : 13-15) என்கிறார். கனிதரும் மரத்தில் கல்லெறி விழும் என ஒரு பழமொழி உண்டு. நற்செயல் செய்ய முற்படும்போது அதற்கு எதிர்ப்புகளும் தடைகளும் ஏற்படுவது இயல்பு. இங்கும் இப்பெண்மணிக்கு பல தடைகள் ஏற்படுகின்றது. சீடர்களின் கோபத்திற்கு ஆளாகின்றாள் ஏன் இந்த வீண் செலவு? நல்ல விலைக்கு விற்று தரித்திரருக்கு கொடுக்கலாமே என விமர்சனத்திற்கு ஆளாகின்றாள் (மத்தேயு 26 : 8). அப்பெண் மீது சீறி எழுந்தனர் (மாற்கு 14 : 5) ஆனால் இவைகள் எதுவும் தன்னுடைய நற்செயலுக்கு தடையாயிருக்கவில்லை. அனேகர் தடைகள் வரும்போது ஏன் வீண் சிரமம் என நற்செயல்களிலிருந்து ஒதுங்கி விடுகின்றனர். ஆனால் நற்செயல்கள் தடைகளைத் தாண்டி செல்ல வேண்டும். தூய யாக்கோபு தன் நிருபத்தில் குறிப்பிடும்போது செயலற்ற நம்பிக்கை பயனற்றது (யாக். 2 : 20). உயிர் இல்லா உடல்போல், செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே (யாக். 2 : 20) என்கிறார். இறுதி நியாயத்தீர்ப்பு நற்செயல்களின் அடிப்படையில் அமைகின்றது. நற்செயல் செய்யாதோர் முடிவில்லா தண்டனையும், நற்செயல் செய்தோர் நிலை வாழ்வையும் அடைகின்றனர் (மத். 25 : 31-46) இயேசு நாதர் அபிஷேகத்துக்குரிய மெசியா என்பதை உணர்ந்து விசுவாசித்த இப்பெண்மணி விலையுயர்ந்த நறுமணத் தைலத்தால் அவரை அபிஷேகம் செய்து தன்னுடைய விசுவாசத்தை நற்செயலால் அடையாளப்படுத்தினார். இயேசுவை மெசியா என்றும் ஆண்டவர் என்றும் அறிக்கை செய்யும் நாம், நம் விசுவாசத்தை நற்செயல்கள் வழி அடையாளப்படுத்துகின்றோமா?

### 3. நற்செய்தியின் அடையாளம் : (மத். 26 : 13)

உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக்கூறப்படும் இவரும் நினைவு கூரப்படுவார்.

இயன்றதை ஏற்ற வேளையில் செய்த இந்த பெண்மணி இயேசுவின் அன்புக்கு பாத்திரமானாள். நற்செயல் மூலம் நற்செய்தியை அடையாளப்படுத்தினாள். இயேசு மெசியா என்று நறுமணத் தைலத்தால் அபிஷேகித்து உலகுக்கு காட்டிய பெண்மணி நற்செய்தியாகவே மாறிவிட்டாள். உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் (மாற்கு 16 : 15) என்ற இயேசுவின் கூற்றுக்கிணங்க எல்லா படைப்புகளுக்கும் கிறிஸ்துவாகிய நற்செய்தியை அறிவிப்பது நமது கடமை. இறைவார்த்தையை அறிய வாய்ப்புக்கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதை செய்வதில் கருத்தாய்யிரு. கண்டித்துப் பேசு, கடிந்து கொள்; அறிவுரை கூறு; மிகுந்த பொறுமையோட கற்றுக்கொடு (2 தீமோ. 4 : 2) என்று



**06-04-2012**

***புனிதவெள்ளி***

## கடவுளின் மீட்கும் ஆற்றலின் வெளிப்பாடு

**Revelation of the Power of God's Salvation**

| | |
|---|---|
| தொ.நூ. 22:1-14 | 1 கொரி. 1:18-25 |
| தி.பா. 22 | மத். 27:27-56 |

"சிலுவை பற்றியச் செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" **(1 கொரி. 1 : 18).**

அரசர் ஒருவர் தன் அமைச்சரிடம், "மானுடரை மீட்கக் கடவுள் ஏன் மனிதனாக உலகில் வர வேண்டும். அவரது சொல்லும், செயலும் ஆற்றல் நிறைந்தவைதானே! அவைகளைக் கொண்டு இந்த மீட்புச் செயலை நிகழ்த்தியிருக்கலாமே அல்லது கடவுளுக்குக் கணக்கற்ற தேவதூதர்கள் இருக்கின்றனர் அல்லவா! அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தால் அவர்கள் இறையாற்றலைப் பெற்று மக்களை இரட்சித்திருப்பார்களே" என்றார். சிறிது நேரம் சிந்தித்த அமைச்சர் இதற்கானப் பதிலை நாளை கூறுகிறேன் என்று எழுந்து சென்றுவிட்டார். மறுநாள்அரசர் தம் குழந்தை மற்றும் அமைச்சருடன் ஆற்றங்கரையோரமாய் உலாவச் சென்றார். அப்போது அனைவரும் படகில் அக்கரைக்குச் செல்லத் தீர்மானித்து ஒவ்வொருவராய்ப் படகில் ஏறினர். அமைச்சர் ஏறுகின்றபோது வேண்டுமென்றே தன் கையிலிருந்த அரசரின் குழந்தையை நழுவவிட்டு தண்ணீரில் போட்டுவிட்டார். பதறிய அரசன் தாமதமின்றி தண்ணீரில் குதித்து குழந்தையைக் காப்பாற்றினார். இப்போது அமைச்சர் அரசரைப் பார்த்து அரசே ! தாங்கள் இந்நாட்டின் மன்னர். ஆற்றல் பொருந்தியவர். குழந்தையைக் காப்பாற்ற உமது படை, பரிவாரங்களுக்குக் கட்டளையிட்டிருந்தால் அவர்கள் இதைச் செய்திருப்பார்களே அதை விட்டுவிட்டு நீர் ஏன்? தண்ணீரில் குதித்து குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்றார். இவன் என் மகனல்லாவா ? என்றார் அரசர். இதே போன்று தான் கடவுளும் தமது சொந்த சாயலாய் படைக்கப்பட்ட மக்கள் பாவத்திற்கு அடிமையாகி அழிவைச் சந்திக்க நேர்ந்த போது அவரே மனுவுருவேற்று உலகில் வந்து சிலுவையிலே தன்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுத்து அதன் வழி தம் மக்களை மீட்டுக்கொண்டார்.

இறைத்தன்மையின் முக்கிய இயற்பண்பாக ஆற்றல் உள்ளது. இறைவன் அனைத்து ஆற்றலையும் தன்னகத்தே கொண்டவர் (திபா. 33:9).

**05-04-2012**

***புனித வியாழன்***

# திருவிருந்து : உறவின் கொண்டாட்டம்

**Eucharist : Celebration of Fellowship**

விப. 12 : 1–14 | 1 கொரி. 11 : 23–34

தி.பா. 116 | மத். 26 : 20–30

"இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக். 22 : 19).

நற்செய்தி நூலாசிரியர்களின் மனதையும் விட்டு நீங்காத நிகழ்ச்சி ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பஸ்கா நிகழ்ச்சியாகும். நற்செய்தி நூல் ஆசிரியர்கள் சில மாற்றங்களுடன் (மத். 26, மாற். 14, லூக். 22, யோவா. 13) இதை எழுதித் தந்துள்ளனர். இயேசு கிறிஸ்து தம் திருவாயால் அருளிய இரு பெரும் கூட்டங்களில் ஒன்றாகிய திருவிருந்து, மானுட வரலாறு முழுவதும் தொடரும் திருநிகழ்வு மட்டுமல்லாமல், மறுமையிலும், முழுமை பெறும் இறையரசிலும் தொடருவது. இயேசு இதை மானுடத்திற்கு சொல்லுகையில் . . . இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் (லூக். 22 : 19) என்றார். இயேசு கிறிஸ்து தரும் இந்த விருந்தில் மகிழ்ச்சியுடன் பங்கேற்று, கிறிஸ்துவின் மூலம் வரும் விடுதலைக்காய் மகிழ்ந்திருக்கவேண்டும் என்பாரும் உண்டு. . . . இந்த அப்பத்தைப்புசித்து, இந்த பாத்திரததில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறார்கள் (1 கொரி. 11 : 26) என்பதால் துக்கத்துடன் இதனை ஆசாரிக்க வேண்டும் என்பாருமுண்டு. இயேசு கிறிஸ்துவின் பஸ்காவாம் திருவிருந்து தரும் மூன்று குறிப்புகளை ஈண்டு காண்போம்.

## 1. கடந்த காலவிடுதலையை நினைந்து கொண்டாடியது

யூதரபிகள், தங்கள் சீடர்களுடன் "ஹபூரா" என்னும் இரவு விருந்து ஆசரிப்பது வழக்கம். இயேசு தமது சீடர்களுடன் பஸ்காவை ஆசரித்தார் (லூக். 22 : 8). இந்த பஸ்கா இஸ்ரயேலர்களின் விடுதலை நிகழ்ச்சியுடன் நெருங்கியத் தொடர்புடையது. கடினமானச் சாந்து மற்றும் செங்கல் வேலையாலும், வயல்வெளி வேலையாலும் கொடுமைபடுத்தப்பட்டு, வாழ்க்கையே கசந்து வாழ்ந்த மக்கள் (யாத். 1 : 14) எகிப்திலிருந்து விடுதலை பெறுகையில், பழுதற்ற ஆண், ஒருவயது ஆட்டுக்குட்டியின் இறச்சியோடும், புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் (யாத். 12 : 5-11)



ஆசரித்தார்கள். இறைவனின் பேராற்றலால் அடிமைத் தனத்தினின்று மீட்கப்பட்ட மீட்பின் வரலாற்றை இஸ்ரயேலர்கள் தலைமுறை, தலைமுறை தோறும் நினைவுகூர்ந்து ஆசரிக்க வேண்டும் என்பது இறைவனின் திருக்கட்டனை (யாத். 12 : 17). இயேசு கிறிஸ்து தம் மக்களின் மீட்பு நிகழ்ச்சியையும், இறைவனின் திருவுளத்தையும் நினைந்து, தம்மவர்களுடன் பஸ்காவை கொண்டாடினார். இயேசுக் கிறிஸ்து, தந்தையாம் யாவே மீட்பர் என்பதை, மானுட விடுதலைக்காய் அவர் இதயம் ஏங்குகிறது என்பதை பஸ்கா நிகழ்ச்சியினூடாய் தம்மவர்களுக்கு நினைப்பூட்டினார். பழமையை நினைந்து, அடிமை வாழ்வை நினைந்து, அடிமையின் விடுதலையில் இறைவனின் கரிசனையை எண்ணி, களிகூர்ந்து கடவுளுக்கு நன்றி சொல்வது பஸ்கா விருந்தின் நற்செய்தியாகும். இயேசு கிறிஸ்துவினூடாய் வந்துள்ள பன்முக விடுதலைக்காய் பரமனுக்கு நன்றிச் சொல்லி மகிழ்வோம்.

## 2. நிகழ்காலத் தியாகத்தை நினைந்து கொண்டாடுவது

இயேசு தம்முடைய சீடர்களுடன் பஸ்காவை ஆசரிக்கும் நேரம், பாடுகள் சூழ்ந்து நிற்கின்ற நேரம், இந்த வேதனையான சூழலில், இயேசு தம்மவர்களுடன் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தார். இயேசுவின் சாவு அவருக்கு வேதனைதான் எனவே தான் ஒலிவமலையில் சென்ற இயேசு தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும் (லூக். 22 : 42) என்று மன்றாடினார். இயேசு இந்த இருண்ட நேரத்திலும் தன் திருவுடலையும், தன் திரு உதிரத்தையும் உணவாகக்கொடுத்து தம்மவர்களுடன் பஸ்காவை ஆசரிக்க மிகவும் ஆசையாயிருந்தார். இந்த திருவுடல், உதிரம், சீடர்களின் உடலோடு, மானுடத்தின் உடலோடு சங்கமித்துப் போவதால் தன் ஆற்றல், தன் ஆளுமை, இவர்களுடன் இரண்டறக்கலந்து, தன்போல் ஆகவேண்டுமென்று மிகவும் ஆசையாயிருந்தார். இது இவரது உள்ளான ஆவல். படைப்பாளர் தன்னை படைப்புகளுக்கு உணவாக்குவது, மரத்தை நட்டவரே, மரத்திற்கு தன்னை எருவாக்குவது போன்றது. இது மனிதனால் புரிந்துகொள்ள முடியாத இறையன்பின் புதிர், தூய பவுலர் இயேசு கிறிஸ்துவின் தியாக அன்பை குறிப்பிடுகையில், அறிவுக்கெட்டாத அந்த அன்பு (எபே. 3 : 18) என்கின்றார். இயேசு கிறிஸ்துவின் தியாக அன்பை தியானித்து தியானித்து அந்த தியாக அன்பு பிரவாகத்துள் இணைந்து, இசைந்து இன்புறுவதே மெய்யான மகிழ்ச்சி. இம் மகிழ்ச்சியே, பாடுகளிலும் நம்மை கிறிஸ்து இயேசுவுடன் இணைத்து இன்புற வைக்கும். இதுவோர் ஆன்மிக அனுபவம். இந்த ஆன்மிகம் வேண்டி, அகமகிழ்விக்கும் ஆன்மீகராம் இயேசு கிறிஸ்துவின் தியாகத்தையே தியானித்து முன்னேறுவோம்.

## 3. வருங்கால விருந்தை நினைந்து கொண்டாடுவது

இயேசு கிறிஸ்து சீடர்களுடன் பஸ்காவை ஆசரிக்கையில் நான் தேவனுடைய ராஜ்யத்தில் தவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப் பழரசத்தை இனி நான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மாற். 14 : 25).

இயேசு கிறிஸ்துவின் சிலுவைச்சாவு அவரின் முடிவன்று, மாறாக உயிர்ப்பையும் இறுதிகால, மேசியாவின் அரசையும் தோற்றுவிக்கும் ஒரு தொடக்கம். வரவிருக்கிறது, ஆட்டுக்குட்டியின் திருமண விருந்து (வெளி. 19 : 9) இந்த திருமண விருந்தில் பிரிவில்லாத பேரின்பத்தையும், மறைத்து வைக்கப்பட்டிருந்த மன்னாவையும் பெறுவோம் (வெளி. 2 : 17) வாழ்வு தரும் மரத்தின் கனியை உண்போம் (வெளி. 2 : 7) இயேசுவின் மேல் வீட்டறை பஸ்கா, நிறைவு பெறும் இறையரசு விருந்தின் முன் சுவையாயுள்ளது. நிஜமாதம் விண்ணக பஸ்காவின் நிழலே மண்ணுக பஸ்கா. இந்த பஸ்காவில் பங்கேற்கும் நாம், இறையரசின் விருந்திற்கும் தகுதியுடையோராய் வாழுதல் வேண்டும். அந்த இலட்சியத்தோடு இந்த விருந்தில் பங்கேற்போர் பாக்கியவான்கள் அபாத்திரமாய் இந்த விருந்தில் பங்கேற்போர் எச்சரிக்கப்படுகின்றனர் (1 கொரி. 12 : 27-30) ஆட்டுக்குட்டியானவரை மணவாளராய் தனதாக்கி, மணவாட்டியாய் அவருடன் உண்டு மகிழும் நாளை எதிர் நோக்கி, அதை அகக்கண்களால் தரிசித்து முன்னேறுவோம்.

வரலாற்றில் இறைவனின் விடுதலையையும், நிகழ்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் தியாக அன்பையும் வெளிப்படுத்தும் பஸ்கா, எதிர்கால விருந்தின் ஆவலைத் தூண்டுகின்றதே, இந்த ஆவல் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் நிறைவுறும். அதில் நாம் பங்கேற்று மகிழ்வோம்.

**மன்றாட்டு :** *ஆண்டவரே அருளின் இறைவா, நன்மையின் இறைவா, ஒவ்வொரு படைப்புக்கும் உமது வலிமையிலிருந்து எல்லாம் வழங்குகின்றீர். உம்முடைய படைப்பை வாழ்வாதாரங்களால் நிரப்புகிறீர். மட்டுமல்ல திருவிருந்தை ஏற்படுத்தியதின் வழி, கரிசனையுடன் நாங்களும் ஒருவருக்கொருவர் அன்புடன் எங்களையே பகிர்ந்து கொள்ளும் முன் மாதிரியை செய்து காண்பித்திருக்கிறீர். சமூகத்தில் நலிவடைந்தோரும், புறந்தள்ளப்பட்டோரும் உமது அரசில் மகிழ்வுடன் ஏற்கப்படும் அளவிலான உமது அருளுக்கு எங்களை கருவிகளாய் பயன்படுத்தும். உம்மோடும் துயாவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

**அருள்திரு. பாலஸ் செல்வமணி**



தீமோத்தேயுவுக்கு தூய பவுலார் கூறுகின்ற கூற்று. நற்செய்தி அறிவிப்பதின் தீவிரத்தை நமக்கு உணர்த்தி நிற்கின்றது. இது வாழ்வில் இரண்டறக்கலந்த ஒன்று. நம் வாழ்வியலையும் நற்செய்திப்பணியையும் பிரித்து பார்க்க முடியாது. சமாரிய பெண்ணோடு யாக்கோபின் இணத்தண்டை உரையாடல் நடத்திய இயேசுவை முதலாவது அப்பெண்மணி ஒரு யூதனாகவே கண்டாள். அவள் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை இயேசு கூறியபோது அவரை ஒரு தீர்கனாக கண்டாள் இறுதியில் ஊருக்குள் ஓடிச்சென்று மேசியா இவர்தானோ? வந்து பாருங்கள் என்று நற்செய்திக்கு சான்றாக மாறி அனைவரையும் இயேசுவண்டை அழைத்து வந்தாள். பெத்தானிய தொழுநோயாளர் சீமோன் வீட்டில் குழுமியிருந்த மக்களுக்கு தருணம் பார்த்து அபிஷேகத்தின் வழி இயேசுவே மெசியா என்ற நற்செய்தியை இப்பெண்மணி அடையாளப்படுத்தினாள். அன்பரே இன்று நற்செய்தியாகிய இயேசுவை அடையாளப்படுத்த தவறியளுக்கின்றோமா?

நற்செய்தியையும், நற்செயலையும் பிரித்துப்பார்க்க இயலாது. நற்செய்தி நம்மை நற்செயலை செய்யயத்தூண்டுகின்றது. இந்தியா திருநாட்டில் சுமார் 150 வருடங்களுக்குமுன் குழந்தை திருமணம் நடைமுறையில் இருந்தது. இளம் வயதில் கணவன் இறந்துவிட்டால் சதி என்னும் உடன்கட்டை ஏறும் கொடிய நிகழ்வின்வழி இனம் பெண்கள் கொலை செய்யப்பட்டனர். பெண் கல்வி மறுக்கப்பட்டது. தாழ்ந்த குலமக்கள் மிகவும் இழிவுப்படுத்தப்பட்டனர். இச்சூழலில் பண்டிதரமாபாய் அம்மையார் துணிவுடன் இச்சமூக திமைகளை அகற்ற பாடுப்பட்டார். முக்தி மிஷன் சாரதா சதன் என்னும் அமைப்புக்கள் இவர்மூலம் நிறுவப்பட்டது. ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகள் போன்றோருக்கு அடைக்கலம் கொடுத்தார். தேவதாசி முறையை அகற்ற பாடுபட்டார். இதனால் இந்து பூசாரிகள் அவருக்கு விரோதிகளானார்கள். என்றாலும் ஓர் விடுதலைப்போராட்ட விரங்களையாய் ஜெபத்தோடு ஆயிரமாயிரம் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றினார். இந்திய மக்கள் மனதில் இன்றும் அவர் நீங்கா இடம் பெற்றுள்ளார். கிறிஸ்துவின் வழி தான் பெற்ற விடுதலையின் நற்செய்தியை நற்செயல் வாயிலாய் இந்தியாவில் அடையாளப்படுத்தினார்கள். இன்றும் அது நினைவு கூறப்படுகின்றது. இன்று நம் நிலை என்ன கிறிஸ்துவை எந்த நிலையில் அடையாளப்படுத்த தவறியிருக்கின்றோம்.

**அருள்திரு. A. மேஷாக்**

**06-04-2012**

# மூன்றாம் திருமொழி

யோவா. 19 : 23 – 27

“அம்மா இவரே உம் மகன் ... இவரே உம் தாய் ...” (யோவா. 19 : 26, 27)

மனித உறவுக்குத் தேவையானச் சிந்தனையின் வெளிப்படையாக இந்த மூன்றாம் திருமொழி அமைந்துள்ளது. இன்றைய உலகில் குடும்ப உறவுகள் நாள்தோறும் பலவீனம் அடைந்து வருகின்றன. குடும்பப் பிரச்சனைப்பற்றி நீதி மன்றங்களில் அதிக வழக்குகள் உள்ளன என்கிற உண்மை மேற்சொன்ன கருத்துக்கு ஆதாரமாய் உள்ளது. அன்பு குறைந்து சுயநலம் மிகுதியாவதே இதற்கு காரணம் குடும்ப நலச் சிந்தனை குறைவதுதான் அதன் விளைவு. ஒருமித்த கருத்து. முடிவுகள் ஏற்படுவது அரிது. தூய யோவான் புது உலகம் படைக்க புதிய உறவுகளின் வழியே முடியுமென்ற நம்பிக்கையுடையவர். இந்த கண்ணோக்கில் “வார்த்தை மாமிசமானார்” என்ற கறைபடாத உறவை வகுத்து இறைமகன் இயேசுவின் பிறப்பை விளக்குகிறார். தொடர்ந்து யோவான் 2 : 4 இல் இயேசு தாயிடம் “அம்மா எனக்கும் உனக்கும் என்ன” என்றும் யோவான் 2 : 5 இல் இயேசுவின் தாய் பணியாளர்களிடம் “அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள்” என்கிறார். இதோடு நிறுத்திக்கொள்ளாமல் இயேசு சிலுவையில் தொங்கிய நிலையில் தம் தாயைப் பார்த்து ஸ்திரியே அதோ உன் தாய் தாயே, அதோ உன் மகன்

## 1. அன்பை உணர்த்தும் கல்வாரி உறவு

இன்றைய உலகில் அன்பு, மனிதநேயம் குறைந்ததால் வன்முறை எங்கும் தலை தூக்குகின்றன. அன்பு செழித்து ஆன்மிக உறவு வளரும் இடத்தில் வன்முறை குறையும். இதனை தனது பணியில் ஆண்டவர் இயேசு அநேக அருஞ்செயல்களில் விளக்குகிறார். ஆண்டவர் இயேசு உணவு உண்ணகூட நேரமில்லாமல் மக்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நேரம் தாயும், சகோதர்களும் அவரை அழைத்து செல்ல வந்தனர். சீடர்கள் இயேசுவிடம் அறிவித்தபோது என் தாயும் சகோதரரும் யார் என்று சொல்லுகிறீர்கள் தம்மை சூழ உட்கார்ந்து இருந்தவர்களைப் பார்த்து இதோ என் தாயும் என் சகோதர்களும் என்கிறார். யார் எல்லாம் கடவுளின் சித்தப்படி செய்கின்றார்களோ அவர்களே என் தாய், சகோதரன், சகோதரி என்றார்.

ஆண்டவர் இயேசு தாம் உருவாக்க வந்த உறவு இறையரசின் உறவு எனப் போதித்தார். தமது பணியில் அன்பு தரும் உறவு இறையரசின் உறவு என உணர்ந்து செயல்பட்டார். மேசியா வருகையில் ஓநாய், ஆட்டுக்குட்டி,



இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் கடவுளின் ஆற்றல் வெளிப்பட்டது (வி.ப. 9:16). இதைப் போன்றே மெசியாவின் நாட்களிலும் கடவுள் மீண்டும் பழைய ஏற்பாட்டுக் கால வரலாற்றைப் போல தமது வல்லமையை வெளிக்காட்டுவார் என யூதர்கள் எதிர்பார்த்தனர் (மாற். 8:11; லூக். 11:16; யோவா. 6:30). அருஞ்செயல்களையும், அடையாளங்களையும் செய்து காட்டி கிறிஸ்து யூதப் பேரரசைத் தோற்றுவிப்பார் என்று நெடுங்காலமாகவே நினைத்து வந்தனர். கிரேக்கர்கள் கல்வியறிவில் சிறந்தவர்கள். கடவுளை அறிவுப் பூர்வமாக அடைந்துவிடலாம் என நம்பினர். ஆகவே இருசாராருக்கும் சிலுவையின் வழி மீட்பு எனும் செய்தி மடமையாகவும், பழிச்சொல்லாகவும், பலவீனமாகவும் தோன்றியது. மரத்திலே தொங்கவிடப்பட்டவன் கடவுளால் சபிக்கப்பட்டவன் (இ.ச. 21:23) அப்படியாயின் சபிக்கப்பட்ட கிறிஸ்து எப்படி நமது மீட்பர் ஆக முடியும் இதுதான் இருசாராருக்கும் ஏற்பட்ட இடறல், ஆனால் கடவுளில் விளங்கிய கிறிஸ்து கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதாமல் தம்மையே வெறுமையாக்கி சாவுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தார். சிலுவையில் இறந்து உயிர்த்த கிறிஸ்துவில் இறைவன் தம் மீட்பளிக்கும் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். ஏனெனில் உயிர்த்தெழுதல் எனும் ஆற்றல் சிலுவை என்ற வெறுமையாக்குதலில் தானே உருவானது (பிலி. 2:6-11).

## 3. வேதனையினூடாய் வெளிப்பட்ட இறையாற்றல் : (மத். 27:27-56)

மானுடரை மீட்கும் பொருட்டு கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் தமது மனித வாழ்வு முழுவதிலும் மானுடரின் துன்பத்தைப் பிரதிபலித்தார். தமது திருப்பணி வாழ்விலே பலதரப்பட்ட மக்களைச் சந்தித்தார். அவர்களுடைய வேதனைகளைக் கண்டு பரிவு கொண்டு அவ்வேதனைகளைப் பகிர்ந்து கொண்டார். இப்போது சிலுவைச் சாவிலும் அதனை சிறப்புறக் காட்டுகின்றார். ஒரு மனிதனுக்கு என்னென்ன துன்பம் நேருமோ அவைகளையும் அதற்கு மேலானத் துன்பங்களையும் காட்டிக் கொடுக்கப்பட்டதிலிலுந்து கல்வாரி வரை பரிணமிக்கின்றார். உடனிருந்த சீடர்களின் துரோகம், மறுதலிப்பு, அநியாயமான அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்கள், வசைச் சொற்கள், வன்முறை, ஏளனம் செய்தல், இகழ்தல், சிலுவைச் சாவுக்கு ஒப்புக் கொடுத்தல் எனத் தொடர் துன்பத்திற்கு தன்னைக் கையளித்தார். இவ்வுலகில் ஆதிக்க சக்திகளாலும், அநீதியாளர்களாலும் அப்பாவி மக்கள் எங்ஙனம் துன்புறுத்தப்படுவர் என்பதை நினைந்து அந்த நிந்தனைகளைத் தன் மீது ஏற்று சிலுவைத் துன்பத்தின் வழி அத்தகையோரை மீட்டு தமது ஆற்றலை வெளிப்படுத்துகின்றார்.

கிறிஸ்துவின் இந்தத் தியாகச் செயலால் அவரது உதிரம், சிலுவை ஆகியவற்றிற்கு மீட்கும் ஆற்றல் அளிக்கப்பட்டது (உரோ. 3:25,26; 5:9). கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கும் ஒவ்வொருவரும் இந்த மீட்கும் ஆற்றலால் ஆட்கொள்ளப்படுவர் என்பது திண்ணம். உலகினரின் பாவங்களுக்காக வேள்வினூடாய்த் தன்னை வெறுமையாக்கி, வேதனைகளின் வழி இறையாற்றலை வெளிப்படுத்திய கிறிஸ்து நாதர் மீது முடிவு பரியந்தம் நம்பிக்கை கொண்டு மீட்பை உறுதிசெய்வோம். மீட்கப்பட்டவர்களாய் வாழ்வோம்.

**மன்றாட்டு :** *இரக்கமுள்ள கடவுளே, உமது குமாரனை சிலுவையின் அவமானத்திற்கு பாடுபட கொடுத்தீர். எங்களுக்காக மரிக்கும் அவரைப் பார்ப்பது நாங்கள் மனந்திரும்பி எங்கள் பாவங்களை அறிக்கையிட்டு பொங்கி வழிந்தோடும் உமது அன்பைப்பெற எங்கள் கடின இதயத்தை மீட்டருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

**திரு. B. சாம்ஜெபசிங்**



“பரதீசு” என்பது நாம் உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாக கொண்டதல்ல, மாறாக தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டது ஆகும். பரதீசு - PARADISE “பேரின்ப வீடு” (The Place of Great Happines) எனவும் ஆதாமும் ஏவாளும் வாழ்ந்த ஏதேன் தோட்டம் (The Garden of Eden were Adam and Eve Lived) எனவும் பொருள்படுகின்றது.

2 கொரி 12 : 4 இல் ஒரு மனிதன் பரதீசுக்கு சென்றதை பவுல் பார்த்ததாக சாட்சி கூறுகின்றார். தி.வெ. 2 : 7 இல் ஜெயங்கொள்கிறவனுக்கு பரதீசின் வாழ்வு உண்டு என கூறுகிறது.

திருமறையில் இரண்டாம் கள்வனின் வேண்டுதல், ஆண்டவரின் உறுதிமொழி ஆகியவற்றை சிந்தனை செய்யும் போது “மரணம் என்பது ஒரு முடிவு அல்ல” இயேசுவோடு வாழும் மகிழ்ச்சி நிறைந்த துவக்கம் என்பது தெளிவாகின்றது. இந்த பேரின்ப வாழ்வை பெற நாம் என்ன செய்ய வேண்டும்?

→ தன்னை உணர வேண்டும்

→ மீட்பு பெற விரும்ப வேண்டும்

கள்வனுக்கு உடனடியாக இயேசு தன்னுடன் வாழும் பேரின்ப வாழ்வை கொடுத்தார். அவனும் பெற்றுக்கொண்டான்.

நமது நிலை என்ன?

மீட்பு பெற விரும்புகிறோமா?

நாமும் கள்வனை போல நமது கருத்தியல்களையும், வாழ்வு முறைகளையும் மாற்றி அமைத்து கொண்டு இயேசுவிடம் நம்மை தாழ்த்தி அர்ப்பணித்து பேரின்ப வாழ்வை பெற்று கொள்வோம்.

வீழ்ச்சி இல்லாமல் மாட்சி இல்லை
சிலுவை இல்லாமல் மகிமை இல்லை
முள்முடி இல்லாமல் மணிமுடி இல்லை
துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை
சாவு இல்லாமல் வாழ்வு இல்லை

சாவை வென்ற இயேசுவோடு பேரின்ப வாழ்வை பெற இந்த வார்த்தையை வாழ்வோடு அனுபவமாக்கி கொள்வோம், இயேசுவுக்காய் வாழ்வோம் இறையரசை பெற்றுக் கொள்வோம்.

**திரு. A. ஜெபதாஸ்**

அவசியமானது.. இந்த நம்பிக்கை கண்டிப்பாக வெறியாக மாறக்கூடாது. யூதர்கள் கடவுள் மீது வெறிகொண்டவர்கள். எனவே தாங்கள் செய்வது கடவுளுக்கு செய்யும் தொண்டு என்று நினைத்தார்கள். ஆனால் ஒன்றை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தாங்கள் வழிபடும் எலோகீமைத்தான் அவர் தந்தையே என அழைக்கிறார் என்பதை அறியமுடியாதபடி சமய வெறி அவர்களது கண்களை மறைத்திருந்தது. ஆகவே தான் இயேசு கிறிஸ்து சிலுவையில் நின்ற வண்ணமாக இவர்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். இவர்களை மன்னியும் என்றார்

## 1. மன்னிப்பு ஏற்றுக் கொள்ளுதலை உணர்த்துகிறது

மன்னிப்பு என்பது எளிதானது அல்ல, மன்னிப்பு ஓர் உயரிய அனுபவம். அதற்குள் மேலும் பல படிநிலைகள் உள்ளன. ஒருவரை மன்னிக்க வேண்டுமென்றால் முதலில் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். துன்பம் தந்தவர்களை ஏற்றுக் கொள்ள எப்படி முடியும்? ஆனால் ஏற்றுக் கொள்வதுதான் கிறிஸ்துவின் தன்மை.

கடவுளின் அருளால் அரசரானவர் தாவீது. பல நாடுகளை பிடித்து பேரரசராகி உயர்வு பெற்றார். தமது உயர்விற்குப் பின்னர் ஏழையான ஆட்டிடையனாக இருந்த தமது ஆரம்பத்தை மறந்தார். ஏழைகளை மறந்தார் நடக்க முடியாதவர்களை பார்வை யிழந்தவர்களை ஆலயத்தில் ஏறவிடாமல் தடுத்தார். அனைவரையும் ஏற்றுக் கொள்ளும் தன்மை தாவீதுக்கு இல்லாதிருந்தது. இச்செயலால் வந்த யூதர்களும் மக்களை பாவிகள் என்றே ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் அதே மரபில் வந்த இயேசு கிறிஸ்து அவர்களை அதே நிலையில் ஏற்றுக் கொண்டார். சமூகத்தில் ஏற்றுக் கொண்டார். ஆலயத்தில் ஏற்றுக்கொண்டார். தன்னை காயப்படுத்தினவர்களையும் அதே நிலையில் ஏற்றுக் கொண்டார். தாவீது அரசரால் துரத்தப்பட்ட அனைவரும் இயேசு கிறிஸ்துவால் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

## 2. மன்னிப்பு அன்பு செலுத்துதலை உணர்த்துகிறது

தன்னை துன்புறுத்தியவரை இயேசு மன்னிப்பதற்கு காரணம் அவர்கள் மீது அவர் காட்டின அன்பு. துன்புறுத்துவோரையும், பகைவரையும் அன்பு செலுத்துங்கள் என போதித்தவர் அதனை தனது வாழ்வினில் செய்து காட்டினார். ஆகவே தான் தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்று பரிந்து பேசினார். இயேசு கிறிஸ்து உயிரை கொடுத்து அன்பு காட்டியதால் தவறிழைத்தோர் மன்னிப்பைப் பெற்றனர். மத். 26 : 53-இன் படி இயேசு கிறிஸ்து நினைத்திருந்தால் படைகளை வரவழைத்து, தனக்கு எதிரானவர்களை அழித்திருக்கலாம். ஆனால் தனது அன்பினால் அவர்களை மன்னித்தார்.



## 3. மன்னிப்பு புது வாழ்வினை உணர்த்துகிறது

இயேசு கிறிஸ்து தமது பணிவாழ்வு நாட்களில் மக்களின் அழிவினையல்ல வாழ்வினையே விரும்பினார். ஆகவே அநேகரை மன்னித்து புது வாழ்வு அருளினார். விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெண் முறைப்படி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். ஆனால் இயேசு கிறிஸ்து அவளது அழிவை விரும்பவில்லை மாறாக மன்னித்து வாழ்வு கொடுத்தார். (மத். 15 : 28) கானானிய பெண்மணியான புற இனத்தவரின் மகளை குணப்படுத்தி புது வாழ்வு கொடுத்தார்.

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களை துன்பப்படுத்தின சவுலை அழிக்காதபடி அவனில் அன்பு கூர்ந்து ஏற்றுக் கொண்டு, சவுலே சவுலே ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்? எனக்கூறி அவனை மன்னித்து புது வாழ்வினைக் கொடுத்தார் (அப். 9 : 1-9) . மன்னிப்பை பெற்ற சவுல் யூதரும் புற இனத்தவரும் இம்மன்னிப்பை பெற்றுக் கொள்ள காரணமானார். இயேசு நமக்கு அருளிய மன்னிப்பு வழியாக வாழ்வு பெற்றிருக்கும் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம்? நமக்கு அடுத்திருப்பவர்களை ஏற்றுக் கொள்கிறோமா? அவர்களிடம் அன்பு காட்டுகிறோமா? அவர்களை மன்னிக்கிறோமா?

இயேசு கிறிஸ்து கற்றுத் தந்த ஜெபத்தில் எங்கள் கடன்களை மன்னியும் என்று கேட்கிறோம். - ஆனால் நாம் மன்னிக்கிறோமா? நாம் ஜெபிக்கும்போது உமது பிள்ளையாக என்னை ஏற்றுக் கொள்ளும் என்கிறோம். - நாம் ஏற்றுக் கொள்கிறோமா? இயேசு கிறிஸ்து நம்மிடம் அன்பாய் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். நாம் அன்பு காட்டுகிறோமா? - கடவுள் மன்னிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். நாம் பிறரை மன்னிக்கிறோமா? நாம் தவறு செய்தால் பிறர் நம்மை மன்னிக்க வேண்டும் என விரும்புகிறோம். நாம் மன்னிக்கிறோமா? இயேசு கிறிஸ்து எவ்வளவு இறங்கி வந்து நம்மை ஏற்றுக் கொண்டு அன்பு காட்டி, மன்னித்து நமக்கு வாழ்வு தந்திருக்கிறார். இதை இப்போது உணர்ந்து கொள்ளுவோம். அன்பு எங்கு இல்லையோ அங்கு அமைதி வாழ்வு இல்லை. எங்கு மன்னிப்பு இல்லையோ, அங்கு அமைதி வாழ்வு இல்லை. எனவே இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட மன்னிப்பை தரித்து அமைதி வாழ்வுக்கு காரணமாய் மாறுவோம்.

**திரு. J. ஸ்டீபன்**

**06-04-2012**

# இரண்டாம் திருமொழி

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன் என்றார்" (லூக். 23 : 43)

உலகின் மையப் புள்ளியை எனக்கு காட்டுங்கள். நான் என்னுடைய நெம்பு கோல் தத்துவத்தை கொண்டு உலகையே உயர்த்திக் காட்டுகிறேன் என்ற நெம்பு கோல் தத்துவத்தை கண்டுபிடித்த அறிவியல் மேதை "ஆர்க் மெடிஸ்" என்பவரால் அதனை செய்துகாட்ட முடியவில்லை.

ஆனால் இயேசு கிறிஸ்து சிலுவை வழி உலகையே உயர்த்திக் காட்டினார் (யோவா. 12 : 22). நான் மன்னிப்பிலிருந்து உயர்த்தபடும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன் என்ற வாக்கை நிறைவேற்றினார். இயேசு சிலுவையில் அவமானமாகத் தொங்கவிடப்பட்டது காலத்தின் கோலமோ, விதியின் விளையாட்டோ, யூதாசின் சதியோ, பரிசேயரின் காழ்புணர்வோ, பிலாத்துவின் கோழைத்தனமோ இல்லை, மாறாக அது கடவுளின் திட்டம் என்றே கூறலாம்.

ஆண்டவர் இயேசுவின் சிலுவைப் பாடுகளும் மரணமும், அவருக்கு அதிக அவமானத்தையும் வேதனைகளையும் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு பகுதி தான் கள்வர்கள் நடுவில் இயேசுவை அறைந்து இயேசுவும் ஒரு குற்றவாளி என அடையாளப்படுத்தினர். இயேசுவின் இரு பக்கத்தில் இருந்த கள்வர்களும் பல குற்றங்களை செய்தவர்கள். ஏரோது ராஜா எருசலேம் ஆலயம் கட்டிமுடித்தபின் 40,000 பேர் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். இவர்களில் அனேகர் பிழைக்க வழியின்றி கொள்ளை அடித்து சாப்பிட்டனர். இந்த கூட்டத்தில் உள்ளவர்கள் தான் இந்த கள்வர்கள்.

இவர்களில் ஒருவன் இயேசுவை எள்ளி நகையாடினான். நீ மேசியாவானால் உன்னையும் எங்களையும் காப்பாற்றிக்கொள் என்றான். மற்றவன் "நீ கடவுளுக்கே அஞ்சுவதில்லையா, நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் நாம் நடப்பித்தவைகட்கு ஏற்றத் தண்டனை பெறுகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என தன்னை உணர்ந்து அந்த கள்வனை கண்டிக்கின்றான். இயேசுவிடம் "உமது அரசு வரும்போது என்னை நினைத்து கொள்ளும்" என தனது மீட்புக்காக மன்றாடினான். இயேசு அவனிடம் இன்றைக்கு என்னுடனேகூட பரதிசிலிருப்பாய் என மெய்யாகவே உனக்கு சொல்கிறேன் என்றார்.



**06-04-2012**

# முதலாம் திருமொழி

லூக். 23 : 34

"அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார் (லூக். 23 : 34).

- பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்ற வார்த்தை அனைத்து உலக மக்களையும் வியப்பில் ஆழ்த்திய வார்த்தை. ஏன் என்றால், தன்னை வேதனைப்படுத்திய, கொடுமைப்படுத்திய, மரணத்துக்குட்படுத்திய அதுவும் சிலுவை மரணத்துக்குட்படுத்திய கொடியவர்களை ஒருவர் மன்னித்திருக்கிறார் என்பது தான். இந்த வார்த்தை ஏனைய மனிதர்களிடமிருந்து தன்னை பிரித்து காட்டிய வார்த்தை. இயேசு கிறிஸ்து யாரைக் குறிப்பிட்டு இப்படி சொன்னார்?, நிச்சயமாக, படைவீரர்களாக இருக்க வாய்ப்பு இல்லை. காரணம் அவர்கள் கூலியாட்கள் தங்களுக்கு தரப்பட்ட ஆணையினை நிறைவேற்றியவர்கள் . அதே நேரத்தில் இயேசுவை இந்த நிலைக்கு கொண்டு வந்தவர்கள் அந்நாட்களிலிருந்த சமயத் தலைவர்களான ஆட்சியாளர்கள். இதிலிருந்து நாம் வேறொரு உண்மையையும் புரிந்து கொள்ள முடிகிறது. இயேசுவை கொலை குற்றத்திற்கு உட்படுத்தியவர்கள் வேறு சமயத்தையோ, வேறு இனத்தையோ சார்ந்தவர்கள் அல்ல. மாறாக அவரது இனத்தை சார்ந்தவர்கள். அப்படியென்றால், இயேசுவின் மீது இவர்களுக்கு ஏன் இந்த வெறி?

இயேசுவும் சீடர்களும் ஓர் ஓய்வுநாளில் பயிர்வழியாய் போனபோது கதிர்களை கொய்து தின்றார்கள். மாற்கு 3 : 5 -இல் ஓய்வுநாளில் கையில் குறைபாடு உள்ள ஒரு மனிதரை இயேசு கிறிஸ்து சுகப்படுத்தினார். இப்படிப்பட்டதான நிகழ்வுகள் ஓய்வுநாள் சட்டத்தை மீறிய செயல். இந்த செயல்கள், சமய வெறிபிடித்த யூதருக்கு பேரிடியாக இருந்தது. இயேசு கிறிஸ்து அவர்களின் எதிர்பார்ப்புபடி மேசியாவாக வரவில்லை. ஆகவே அவர்கள் கடவுளிடம் இருந்து வந்தவர்கள் என அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே இவரை கொல்வது கடவுளுக்கு செய்யும் தொண்டாக நினைத்திருப்பார்கள்.

இன்றும் உலகத்தில் கடவுளுக்கு செய்யும் தொண்டாக நினைத்து அனேக வன்முறைகள் நடத்துகின்றனர். எடுத்துக்காட்டக குஜராத் ரெயில் எரிப்பு, கந்தமால் படுகொலை என அடுக்கிக்கொண்டே போகலாம். இச்செயல்கள் எல்லாம் தங்கள் கடவுளுக்கு செய்யும் தொண்டாக நினைத்து செய்கிறார்கள்.மனிதனுக்கு கடவுள் மீது நம்பிக்கை இருப்பது

**06-04-2012**

# ஆறாம் திருமொழி

**"இயேசு காடியை வாங்கினபின்பு முடிந்தது என்று சொல்லி, தலையை சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவா. 19 : 30)**

நான்கு நற்செய்தி நூல்களிலும் இவ்வார்த்தை இடம் பெற்றுள்ளது.

யோவான் நற்செய்தியாளர், "முடிந்தது" எனவும் மத்தேயு "இயேசு மறுபடியும் மகா சத்தமாய் கூப்பிட்டு ஆவியைவிட்டார்" (27 : 50) எனவும், மாற்கு நற்செய்தியாளர் "இயேசு மகாசத்தமாய் கூப்பிட்டு ஜீவனை விட்டார்" (15 : 37) எனவும் லூக்கா நற்செய்தியாளர், ". . . மகா சத்தமாய் கூப்பிட்டு சொன்னார்" (23 : 46) எனவும் குறிப்பிடுகின்றன. இவற்றுள் "மு டி ந் த து" என்ற வார்த்தையை யோவான் மட்டும் குறிப்பிடுவது சிறப்பானது.

தந்தையானவர் தன்னிலே கொடுக்கப்பட்டவற்றை நிறைவேற்றினார் என்பதை தன்னில் உணர்ந்து "முடிந்தது" என சொன்னார்.

முடிந்தது என்பதற்கான கிரேக்க சொல் "டெடலெஸ்டாய்" *(Tetelestai)* என்பதாகும். இதன் பொருள் நிறைவுற்றது அல்லது முழுமையுற்றது என்பதாகும். கடினமான பணியை முடித்துவிட்டு மனநிறைவில் ஓய்வெடுப்பது எனவும் பொருள் கொள்ளலாம்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆசாரியன் பலியை செலுத்திய பின்பு "முடிந்தது" என்ற வார்த்தையைச் சொல்வாராம். இயேசு கிறிஸ்துவும் தந்தையானவர் தனக்கு கொடுத்த பொறுப்புக்களை பூரணமாய் நிறைவேற்றிய பின்பு "முடிந்தது" என்ற வார்த்தையை கூறுகின்றார்.

யோவான் நற்செய்தியாளர் "இயேசு காடியை வாங்கின பின்பு" என இவ்வார்த்தையை குறிப்பிடுகின்றார். காடி என்பது புளித்த திராட்சை இரசம் ஆகும். வேதனையில் துடிக்கும் ஒருவருக்கு காடியைக் குடிக்கக் கொடுப்பார்கள். காடியை குடித்தபின்பு ஒரு வகையான போதை மயகக்த்தால் வேதனையிலிருந்து மீள்வர். சிலுவையில் அறைப்படுகின்றவர்களுக்கு இதை குடிக்க கொடுப்பது வழக்கம். எனவேதான் யோவான் நற்செய்தியாளர் காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது (யோவான் 19 : 29) என குறிப்பிடுகின்றார். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறுதலாகவும் இயேசுவுக்கு காடியை குடிக்க கொடுத்தனர்.



கூடி மேயும், சிங்கம் மாட்டை போல் வைக்கோல் தின்னும் இதுவரையில் ஒன்றையொன்று கடித்து, பட்சித்து வந்தவைகள் இனி வன்முறையை விட்டு அன்புறவைக் கற்றுக்கொள்ளும். இந்த அன்பின் உறவை நிறுவ வந்த ஆண்டவர் இயேசுவுக்கு அன்பில்லா சமுதாயம் கொடுத்தது சிலுவை மரணம். சிலுவையில் தொங்கி கொண்டிருக்கும் போது தனது மகன் அனுபவிக்கும் வேதனை, நிந்தை, அவமானம், எல்லாம் தாயானவள் பார்த்து சகித்து கொண்டிருக்கும் வேளையில் இயேசு தம் தாயாரைப் பார்க்கிறார். அதனருகில் தம் அன்பின் சீடனையும் காண்கிறார். அன்பு தரும் புதிய உறவை ஏற்படுத்தத் துடிக்கிறார் அது அம்மா மகன் உறவு. இந்த உறவில் எந்த தீமையும் இராது எந்த தாயும் மகனுக்கு விரோதமாய் செயல்பட மாட்டார். சிலுவை தரும் புதிய உறவு தோன்றி திருச்சபையாகிய குடும்ப உறவில் தாய், மகன் போல் எல்லாரும் வாழும்படி இயேசு குறிப்பிடுகிறார்.

இந்த உறவு உருவாகும் போது கடித்து, பட்சித்து வாழும் குணங்கள் மாறி புதிய அன்புறவில் வாழும் நிலை ஏற்படும்.

## 2. கடமையை உணர்த்தும் கல்வாரி உறவு

இயேசு கடமை உணர்வு மாறாமல் தம் தாய்க்கு ஆறுதல் அளிக்க "அம்மா அதோ உன் மகன் என்கிறார்". ஆண்டவர் தாம் அடிக்கப்பட்டு சிலுவையில் இருப்பதால் இனி இவ்வுலகில் தன் கடமை ஆற்ற முடியாது என எண்ண வேண்டாம். தமது தாயை யோவானின் தாயாக்குகிறார். தமது இடத்தை தமது சீடன் யோவானிடம் கொடுத்து ஆறுதல்படுத்துகிறார். தொடர்ந்து தம்முடையப் பணியை இவ்வுலகில் தமது சீடர்கள் கடமையுணர்வோடு ஆற்றி புதிய உறவுக்குள் கொண்டு வருவார்கள் என உணர்த்துகிறார். இந்த புதிய உறவை ஆண்டவர் இயேசு சீடர்களின் பாதங்களை கழுவுதல் வழி புதிய உறவு தோன்றச் செய்கிறார். பொதுவாக பார்க்கும் போது எஜமானின் பாதங்களை அடிமை கழுவ வேண்டும். ஆனால் அடிமையின் பாதங்களைக் கழுவி இறை அரசின் புதிய உறவைத் தோற்றுவிக்கிறார். இந்த புதிய உறவு ஏற்படாமல் அழிக்க பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்கின்றான். அநீதியை நிலைநாட்ட கடமை உணர்வு இல்லா பிலாத்தும் ஏரோதும் இணைந்து கொண்டனர். இது அநீதியின் உறவைக் காட்டுகிறது. ஆனால் ஆண்டவர் காட்டிய அடிமையின் உறவு, அதோ நிற்கும் சீடன் மூலம் இன்னும் தொடரும்.

## 3. இறைவனில் இணைக்கும் கல்வாரி உறவு

இயேசு உருவாக்கிய இறையரசின் புதிய உறவுக்குள் வருபவர்கள் இறைவனோடு தம்மை இணைத்துக்கொண்டு தீமைகளை, வன்முறைகளை, பிரிவினைகளை, கலவரங்களை, அகற்றி அமைதியான வாழ்க்கையை தாமும் அடைந்து பிறர்க்கும் கையளிப்பர். யோவான் 15-ஆம் பிரிவில் நானும்

பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். நீங்களும் நானும் ஒன்றாய் இருக்க பிதாவை வேண்டிக்கொள்கிறேன் என்னில் நிலைத்திருக்கிறவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்.

கொடியானது செடியில் நிலைத்திருந்தால் மிகுந்த பலனைக் கொடுக்கும் என இயேசு குறிப்பிடுகிறார். புதிய உறவு உருவாக்க வந்த ஆண்டவர் இயேசுவுக்கு வன்முறையாளர்கள் கொடுத்தது சிலுவை மரணம். அடிமை பணி செய்தவர்க்கு அன்றைய மக்கள் அளித்த பரிசு சிலுவை. சிலுவையில் தொங்கும் இயேசுவை உலகம் கைவிட்டது ஆனால் தாம் இறைவனின் கரத்தை பற்றிக்கொண்டு இறைவனோடு தன்னை இணைத்து உலகத்தை தாம் வென்று விட்டதாக அறைகூவல் விடுக்கிறார். கடவுளோடு தன்னை இணைத்து பாடுகளின் வழியே உருவாகும் கல்வாரி உறவுகளால் இவ்வுலகை மகிழ்ச்சி நிறைந்ததாக மாற்ற முடியும் எனக் கூறுகிறார். யோவான் இதை அறிவுரையாக தந்து புதிய உறவுக்குள் நம்மை அழைக்கிறார்.

கறைகள் இல்லா உறவாம் கல்வாரி உறவு. அந்த உறவுக்குள் நம்மை இணைத்து இறையரசை கட்டுவோம் வாரீர்.

**திரு. G. பால்சன்**



ஒன்றுவிட்ட 40 அடி உடல் கிழிந்து இரத்தம் வெளியேறியது நெடிய தூர சிலுவை பயணம் உடலளவில் மிகவும் தளர்ந்துபோன இயேசு தாகமாய் இருக்கிறது என்றார். தி.பா. 22 : 15யில் என் வலிமை ஓடுபோல் காய்ந்தது. என் நாவு மேலண்ணத்தோடு ஒட்டிக்கொண்டது. அப்போது புளித்த திராட்சை ரசத்தை கடற்பஞ்சில் நனைத்து கொடுத்தார்கள். யோவா. 19 : 29, 30. தி.பா. 69 : 21யில் அவர்கள் என் உணவில் நஞ்சைக் கலந்து கொடுத்தார்கள். என் தாகத்துக்குக் காடியை குடிக்கக் கொடுத்தார்கள். இது ஒரு மயக்கமருந்து. வேதனையை உணராமல் இருக்கக் கொடுப்பது. அதை வாங்கிய பின் உயிர் துறந்தார். மானுட வாழ்வு எப்படி அமையவேண்டும் என்பதற்கு முன் அடையாளம் எனலாம். கிறிஸ்துவை போன்று தாகத்தோடு இருப்பவர்கள் இன்றும் திருச்சபையிலும் வாழும் சமூகத்திலும் உண்டு.

இந்தியாவில் தண்ணீர் வியாபாரமாக்கப்பட்டபடியால் சொந்த நாட்டிலேயே தண்ணீர் அகதிகளாக வாழும் மக்கள் குரலில். சுகாதாரமான தண்ணீர் இன்மையால் லட்சோப குழந்தைகள் நாவரண்டு தாகமாய் இருக்கிறது என உரக்க அழுது ஒட்டிய நாவோடு வாழ்கிறார்கள். ஆதரவற்ற முதியோர்கள் பாதுகாப்பற்ற நிலையில் எப்போதாவது கிடைக்கும் உணவை சாப்பிடும்போது கை நடுக்கத்தில் உணவு சிதறுகிறது. சாப்பிட ஆசையாக இருக்கிறது சாப்பிட முடியவில்லையே என்ற ஏக்க குரலில்.

இயேசுவின் குரல் கேட்கிறது. இவர்களின் தாகம் தீர்ப்பது நமது கட்டாயக்கடமை. அப்போது இயேசு சொல்லுவார் தாகமாய் இருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்.

**திரு. E. ஜெபசிங்**

வார்த்தையை மத்தேயு "ஏலி" என குறிப்பிடுகிறார்? "ஏலி" என்பது எபிரேய மொழியிலும் "ஏலோயி" என்பது அரமேய மொழியிலும் கடவுளைக் குறிக்கும் சொற்களாகும்.

இந்த வார்த்தை பல கேள்விகளை எழுப்புகின்றது.

- ⇨ கடவுளின் மைந்தர் ஏன் கடவுளை நோக்கி இந்தக் கேள்வியை கேட்க வேண்டும்?
- ⇨ தந்தையாகிய கடவுள் தம்மை கைவிட்டார் என்று அவர் எண்ணினாரோ?
- ⇨ அப்படி எண்ணினாலும் அது தவறாகிவிடுமோ?
- ⇨ அப்பா தந்தையே! உம்மால் எல்லாம் இயலும்.
- ⇨ இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் உம் விருப்பப்படியே நிகழட்டும் (மாற். 14 : 36), என அவர் விடுத்த விண்ணப்பம் கேட்கப்படவில்லையே என்ற வருத்தமா?
- ⇨ இயேசு இப்படிப்பட்ட மரணத்தை எதிர்பார்க்கவில்லையா?
- ⇨ இயேசு திருமுழுக்கு பெற்றபோது, இவர் என் நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் (மத். 3 : 17) என்று கூறின கடவுள், மறுரூபமலையில், "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன், இவருக்கு செவி கொடுங்கள்" (மத். 17 : 5) என்று கூறின கடவுள் ஏன் இயேசு. கிறிஸ்துவை கைவிடப்பட்ட நிலைக்கு தள்ளவேண்டும்?

இவ்வாறு பல கேள்விகளை எழுப்பும் இவ்வார்த்தை எப்படிப்பட்ட வார்த்தை? என்பதை இவண் காண்போம்.

## 1. உறவின் வார்த்தை

இவ்வார்த்தை தந்தைக்கும் மைந்தனுக்குமிடையே உள்ள உறவைக் குறிக்கின்றது. தந்தையும் பல சூழல்களில் தம் மைந்தருக்குமிடையேயுள்ள உறவை வெளிப்படுத்துகிறார் (மத். 3 : 17, 17 : 5).

தொடக்க நூல் 22இல் ஆபிரகாம் ஈசாக்கை பலிசெலுத்தும்படி மோரியாமலைக்கு அழைத்துச் செல்கின்றார். அங்கே அவருக்குள் நிச்சயம் ஒரு போராட்டம் நிகழ்ந்திருக்கும் - எப்படி என் மகனை பலி செலுத்துவது? என்பதுதான் அந்த போராட்டம். ஈசாக்குக்கும் தான் பலிப்பொருளாக அழைத்து செல்லப்படுவது தெரியாது. ஆனால் ஆபிரகாம் அவரை பலி செலுத்த ஆயத்தமானார். அங்கே ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்குமிடையே ஏற்பட்ட போராட்டம் அவர்களுக்கு மிகுந்த வேதனையை அளித்திருக்கும். அது உறவின் அடிப்படையிலே எழுந்தது.



இயேசு கிறிஸ்துவும் கெத்செமனே தோட்டத்தில் ஜெபித்தபோது "தந்தையே கூடுமானால் இத்துன்பக்கலம் என்னிடமிருந்து நீங்கட்டும். என்றாலும் நான் விரும்புகிறபடியல்ல, நீர் விரும்புகிறபடியே நடக்கட்டும்". எனத் தந்தையிடம் வேண்டுகிறார். இந்த வேண்டலுக்கு தந்தையின் பதில் எத்தகையதாய் இருந்திருக்கும். இயேசுவும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பினாலும் அவரது உள்ளம் நடைபெறபோகும் நிகழ்வை நினைத்தபோது சாவுக்கேதுவான ஆழ்துயரம் கொண்டிருந்தது (மத். 26 : 38) என கூறுகின்றது.

இவ்வாறான போராட்டச் சூழ்நிலையில், துயரத்தின் உச்சகட்டத்திலும் தந்தையின் உறவை வெளிப்படுத்துகிறது.

## 2. வெற்றியின் வார்த்தை

என் கடவுளே! என் கடவுளே! என்னும் திருவார்த்தை 22-ம் திருப்பாடலின் முதல் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திருப்பாடல் யூத சிறுவர்கள் தங்கள் சிறுவயதிலே மனப்பாடம் செய்யும் திருப்பாடல். இத்திருப்பாடலில் முதற்பகுதி (1-21) நேர்மையாளர் ஒருவரின் இன்னல்கள், இக்கட்டுகளை பற்றியும், பிற்பகுதி (22-31) நம்பிக்கையோடு அவர் செலுத்தும் நன்றியைக் குறித்தும் சொல்லுகிறது. இயேசு ஒரு யூதனாக இருந்தபடியால் அவர் இத்திருப்பாடல் முழுமையும் சொல்லியிருக்கலாம் என இறையியலாளர்கள் கூறுகின்றனர். எனவே இது தோல்வியின் வார்த்தையல்ல அது ஓர் வெற்றியின் வார்த்தையே. ஏனென்றால் இப்பாடல் ஓர் வெற்றியின் முழக்கத்தோடு நிறைவு பெறுகின்றது.

இயேசு தாம் கைவிடப்பட்ட நிலையை எண்ணி கதறாமல், கைவிடப்பட்ட சூழலிலும் கை கொடுக்கும் இறைவனின் கருணையை எண்ணி வெற்றியின் வார்த்தையாக இறைமகன் சிலுவையில் நான்காவது வார்த்தையாக மொழிகின்றார்.

அரசியல் ஆதிக்கத்தினாலும், ஆக்க சக்திகள் நம்மை துன்புறுத்தும்போதும் அதினால் வரும் வேதனையால் கதறும்போது நாம் எழுப்பும் வேதனையில் குரல்கள் இறைவனுக்கும் நமக்குமிடையேயுள்ள உறவை வெளிப்படுத்துவதாய் அமைய வேண்டும்.

நோயின் கொடுரத்தன்மைகளினால், துன்பங்கள் நம்மை நெருக்கும்போதும் உறவுகள் நம்மை கைவிடும்போதும் நாம் எழுப்பும் ஏன்? ஏன்? என்ற கேள்விகள் உலக உறவையல்ல இறைவனுக்கும் நமக்குமிடையே உள்ள உறவை வளர்பதாகவும் தோல்வியையல்ல வெற்றியை குறிப்பதாகவும் அமைய வேண்டும்.

**திரு. ரமேஷ் டி. தாஸ்**

06-04-2012

## ஐந்தாம் திருமொழி

இதன்பின் அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு, தாகமாய் இருக்கிறது என்றார். (யோவா. 19 : 28)

இயேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்த 5-வது வார்த்தையைப் பல கோணங்களில் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அவரது தாகம், ஆன்மீக தாகம், ஆத்துமாக்களை குறித்த தாகம், மானுட மீட்பைக் குறித்த தாகம் என சிந்திப்பது இயல்பானது. ஆனால் இயேசுவை இந்த இடத்தில் ஒரு கடவுளாக பாராமல் மானிட மகனாக பார்ப்பது ஏற்புடையது. தண்ணீர் மானுட வாழ்வின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. தண்ணீர் ஓர் உடலுக்குச் சரியாக கிடைக்கவில்லையெனில் பல பாதிப்புகளை உருவாக்கும் என்பது மருத்துவ உண்மை. ஏனெனில் மனித உடல் அதிகமாக தண்ணீரால் ஆனது. துன்புறுத்தப்பட்ட இயேசு சிலுவையில் நின்று "தாகமாய் இருக்கிறேன்" என்று கேட்கும்போது ஒரு இயல்பான மனித குரலை கேட்க முடிகிறது (Human Nature). சாகும் நிலையில் இருக்கும் மனிதனுக்கு தண்ணீர் கொடுப்பது நடைமுறையில் இருக்கும் செயல். இந்து சகோதர்கள் கங்கை ஆற்றுத் தண்ணீரைக் கொடுப்பார்கள். கிறிஸ்தவர்கள் அதிகமாக நற்கருணை கொடுப்பார்கள். ஒருவேளை இயேசு கடவுளாக இத்துன்பத்தை அனுபவித்திருந்தால் 3 மணிநேரம் காத்திருந்து தியானிக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஏனெனில் அவர் கடவுள். அவருக்கு இது சாதாரணம். இயேசு ஒரு மனிதனாக நின்று தாகத்தை வெளிப்படுத்தியதால் தான் இந்த வார்த்தை துன்புறும் மானுடத்தை உரசுகிறது. பற்றுறுதியாளர்ளின் துன்பங்களை தாங்க வலிமை அருளும் வார்த்தை மட்டுமல்ல ஆறுதல் பெறச் செய்யும் வார்த்தை.

துன்பங்களற்ற வாழ்வுதான் கடவுளது ஆசிபெற்ற வாழ்வு என பெரும்பான்மை யூதர்கள் நம்பினார்கள். இயேசு மானுட வாழ்வில் துன்பங்கள் உண்டு என்பதை உணர்வுபூர்வமாய் தெளிவுப்படுத்தினார். எனவே ஒரு மனிதனாக நின்று தனது வேதனையை தேவையை வெளிப்படுத்துவதை உணர முடிகிறது. மாற். 14 : 25-ல் இறுதி விருந்தில் திராட்சைப்பழ இரசம் குடிப்பதை தவிர்த்தார். லூக். 22 : 44b, ஒலிவமலையில் இரத்தம் வியர்வையாக வெளியேறியது. இரவு முழுமையும் விசாரணை



06-04-2012

## நான்காம் திருமொழி

மாற்கு 15 : 33, 34

"ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு "ஏலோயி, ஏலோயி லாமா சபக்தானி"என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று அர்த்தமாம்" (மாற். 15 : 34).

உலக வரலாற்றில் பல நிகழ்வுகள் வரலாற்றை மாற்றியமைத்துள்ளன. அவைகளில் பல மறைக்கப்பட்டவைகளும் மறுக்கப்பட்டவைகளும் உண்டு. ஆனால் இயேசு சிலுவையிலறையப்பட்ட நிகழ்வு மனிரவரலாற்றில் மாற்ற முடியாததும், உலகை மாற்றின நிகழ்வாகவும் காணப்படுகிறது. இயேசு சிலுவையில் 6 மணிநேரம் தொங்கி அனுபவித்த வேதனைகள் வரலாற்றில் அனேகரை ஈர்த்த நிகழ்வாகவே காணப்படுகிறது.

சிலுவையில் இறைமகன் இயேசு தாங்கமுடியாத துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவித்து, இழிச்சொற்களும் உடல் வேதனையும் தாங்கிக்கொண்டு தன்னை துன்புறுத்தினவர்களுக்காய் பிதாவிடம் மன்றாடினார்.

மூன்று மணிநேரம் சிலுவையின் வேதனையை தாங்கியவர் பிதாவின் சித்தத்தை உணர்ந்தபோது "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்", என கதறுகிறார்.

இந்நிகழ்வை மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடும்போது 6-ஆம் மணி நேரம் முதல் 9-ஆம் மணிநேரம் வரை அந்த காரம் உண்டாயிற்று எனக் கூறுகிறார் (மத். 27 : 45). மூன்று மணிநேரம் நிலவிய அந்த காரத்தைக் குறித்து மூன்று நற்செய்தியாளர்களும் சற்று வித்தியாசமாக குறிப்பிடுகின்றனர். மத்தேயுவும், மாற்குக்கும் நடைபெற்ற விளைவைச் சுட்டிக்காட்ட முயற்சிக்கின்றனர். ஆனால் லூக்கா காரணத்தின் மூலக்கூறுகளைச் சொல்கிறார் (லூக். 23 : 44-45).

தாலஸ் என்ற வரலாற்று ஆசிரியர் "பஸ்கா பண்டிகை கொண்டாடும் காலத்தில் இப்படிப்பட்ட அந்தகாரம் ஏற்படுவது அசாதாரணமான நிகழ்வு" எனக் குறிப்பிடுகின்றார். இப்படிப்பட்ட வித்தியாசமான நிகழ்வு நடைபெறும் சூழலில் இயேசு "எலோயி, எலோயி லாமா சபக்தானி" என்று உரக்கக் கத்தினார் (மாற். 15: 34). இங்கு குறிப்பிடப்படும் எலோயி என குறிப்பிடும்

15-04-2012

***உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிறு***

## உயிர்த்த கிறிஸ்துவுடன் சந்திப்பு

**Encounter with the Risen Christ**

| | |
|---|---|
| யோபு 19 : 1–29 | தி.ப. 9 : 1–19 |
| தி.பா. 48 | லூக். 24 : 13–35 |

"அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள்" (லூக். 24 : 31a)

புதிய உலகம் காணப்புறப்பட்ட மாலுமி கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டிலிருந்து பத்தொன்பது நண்பர்களோடு சிறிய கப்பலில் புறப்பட்டார். ஒரு நாளில் நாம் கரையைக் கண்டுவிட வாய்ப்பு உண்டு. ஒருவேளை அப்படி காணாவிட்டால் என்னை இதே கடலில் தள்ளிவிட்டு விடுங்கள். என்னால் மிச்சமாகும் உணவு உங்களுக்கு ஊர்போய் சேரும் வரை உதவும் என்றார். கொலம்பஸின் நியாயமான வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு இன்னும் ஒருநாள் முன்னோக்கி நகர்ந்தது கப்பல். அந்த நாள் தான் கப்பல் தரையைக் கண்டநாள் உலகைக் குறுக்கு வசமாக கொலம்பஸ் அளந்த நாள். கடல் வழி பயணத்திற்கு கரை தெரிந்த நாள். புதிய உலகம் என்றழைக்கப்பட்ட அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட நாள். கரையைக் கண்ட கப்பல் சொல்லிக்கொண்டது என்னவெனில் "இழக்க துணிபவனே புதியன படைக்கிறார்" என்பதாகும்.

முன்னோக்கிச் சென்று சாதனை புரிவதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் அவரின் மரணத்திற்கு பின்பு பின்னோக்கிச் செல்வதை விரும்பாது, அவர்களை முன்னோக்கிச் செல்ல அழைப்பதாகவும் புதிய சாதனையாளர்களை உருவாக்குவதாகவும் உயிர்த்த இயேசுக் கிறிஸ்துவின் சந்திப்பு அமைந்தது.

கடவுள் நம்மைத் தேடி வருகிறார். கடவுள் நம்முன் இருக்க விரும்புகிறார். தூய உள்ளமே கடவுள் வாழும் இல்லம்.

கடவுளின் படைப்புகள் அனைத்தும் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன. பறவைகள் ஒன்றையொன்று சந்திக்கின்றன. விலங்குகள் ஒன்றையொன்று



"முடிந்தது" என்னும் இவ்வார்த்தை சத்துருக்களிடமிருந்து வந்திருக்க வேண்டும், ஆனால் இயேசுவே "முடிந்தது" என கூறுகின்றார். வேதவாக்கியங்கள் யாவும் நிறைவேறவும், இறைவாக்கினர்களால் உரைக்கப்பட்டவை யாவைவும் நிறைவேற்றியவர் முடிந்தது எனவும் உரைக்கின்றார்.

தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே தம் திருப்பணியின் நோக்கமாக கொண்டுள்ளார். இதை வெளிப்படுத்தும் வகையில் தன் சீடர்களிடம் "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிருபையை முடிப்பதே என்னுடைய போஜமாயிருக்கிறது" (யோ. 5 : 30) எனக் கூறினார். இவ்வுலகில் இயேசு நற்செய்திப் பணியை ஆரம்பித்தபோது பிதாவே உமது சித்தத்தின்படி பணி செய்ய வருகிறேன் என்று கூறியவர் பணியினை நிறைவேற்றினார். அதோடு தந்தை பணிகள் ஏதாவது தவறிவிட்டதோ என ஆராய்ந்து தாம் எல்லாவற்றையும் நிறைவேற்றினார் என்பதை உணர்ந்து எல்லாம் முடிந்தது என்றார்.

பூமியிலே உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோ. 17 : 4) என தந்தையிடம் கூறியவர் சிலுவையிலும் இதை நினைத்து முடிந்தது என வீரமுழக்கமிட்டார். மனிதரிடத்திலே அன்பு கொண்டு அவர்களுடைய மீட்புக்காக பாடுபடுவதே இறைசித்தம். இச்சித்தத்தை முடிப்பதையே நோக்கமாக கொண்டார். அடிமையின் உருவெடுத்து, அடிமையின் பணியை இவ்வுலகில் நிறைவேற்றினார். எனவே தான் அவரால் முடிந்தது என கூற முடிந்தது.

சிலுவையில் தம் பணியை நிறைவு செய்தேன் என்று சொன்ன இறைமகன் இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களாகிய நாமும் இறைவனால் எனக்கு கொடுக்கப்பட்ட பணி நிறைவடைந்தது அதை நிறைவேற்றிவிட்டேன் என நம்மால் கூற முடியுமா? சமுதாயத்தால் ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்வுக்காகவே பணி செய்ய வந்தேன் (லூக்கா 4 : 16-18) என்று கூறியவர் அப்பணியை நிறைவேற்றி விட்டேன் என கூறினார். நம்மால் இவ்வார்த்தையை சொல்ல முடிகிறதா?

வாழ்வின் முழுமை அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதிலே தான் காணப்படுகிறது. நம் வாழ்வின் நோக்கத்தை நம்மால் நிறைவேற்ற முடிகிறதா?

**திரு. ரமேஷ் டி. தாஸ்**

**06-04-2012**

# ஏழாம் திருமொழி

"தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்; என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர்துறந்தார்" (லூக். 23 : 46).

"உரக்க கத்தி உயிர்துறந்தார்" என மத்தேயு, மாற்கு ஆகிய நூற்களிலும் யோவான் - எல்லாம் நிறைவேறிற்று என்று கூறி தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார் என பதிவு செய்துள்ளார். அதே வேளையில் லூக்கா இப்பகுதியில் சிறப்பு அழுத்தம் கொடுத்திருப்பது (தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்) கிறிஸ்துவின் பணி நிறைவை அடையாளப் படுத்துவதாய் உள்ளது. இயேசுக் கிறிஸ்துவினுடைய ஒப்படைத்தலும் இறப்பும் அவரது வாழ்வு, பணியைக் குறித்த மதிப்பீட்டை நமக்கு தந்துள்ளது. அவர் யார்? என்பதை உலகிற்கு அடையாளப்படுத்திய மையம். திருச்சபை என்ற இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்த இடம். இயேசு உண்மையாகவே கடவுளின் மகன் என மக்கள் ஏற்றுக்கொண்ட இடம் (மத். 27 : 54)

இயேசு கிறிஸ்து இந்த வார்த்தையை (இறைவேண்டல்) தி.பா. 31 : 5-லிருந்து எடுத்து பயன்படுத்தினார். யூதக் குழந்தைகளுக்கு பெற்றோரால் கற்றுக் கொடுக்கப்படும் இறைவேண்டல்.

யூதர்கள் மூன்று சூழல்களில் இந்த இறைவேண்டலை செய்வார்கள் இரவில் தூங்கச் செல்லுமுன்னும், துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டு துயருறும் மக்கள் விசாரணைக்கு கொண்டு செல்லும்போதும், இனி என் வாழ்வு உமது கையில் இருக்கிறதென நொந்துபோய் உள்ளம் உடையும் நேரத்திலும் இவ்இறைவேண்டலைச் செய்வார். இது மரண வேளையில் முற்றிலுமாய் தம்மை கடவுளிடம் ஒப்படைத்து செய்யும் இறைவேண்டலாகும்.

இயேசு 3-வது சூழலில் இந்த இறைவேண்டலை செய்கிறார். மகன் தந்தையிடம் கொண்ட நம்பிக்கை மற்றும் உறவின் வெளிப்பாடாகவும் அமைந்த வார்த்தை. இயேசுவின் ஒப்படைத்தலில் கிடைக்கப்பெறும் உண்மை யாதென சிந்திக்கும் போது . . .



அறிவித்தனர். நிகழக்கூடாதது நிழந்தது. மனிதன் செத்தபின் பிழைப்பானோ? (யோபு 14 : 4). பிழைப்பான். இதுவரையிலும் நிகழாமல் இருந்தஒன்று நிகழ்ந்துவிட்டது என அறிந்தபேதுரு வியப்புற்று திரும்பிச் சென்றான் (லூக். 24 : 12).

கிறிஸ்துவின் உயிர்ப்பின் முதுமை இன்று நம்மிடையே நிறைவேற கடவுள் எதிர்பார்க்கின்றார். எனது வேதனைக்குப் பின் வாழ்வு உண்டா? கீழே விழுந்த நான் திரும்ப எழும்ப முடியுமா? அழிவின் பாதையில் செல்லும் எனது வாழ்விற்கு வாழ்வு உண்டா? எனது நம்பிக்கை நடைமுறைக்கு ஒத்ததா? நிகழக்கூடாதது நிகழ்ந்த கிறிஸ்துவின் உயிர்ப்பின் நற்செய்தி எனக்கு தரும் நம்பிக்கை என்ன? உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் அடியவராய் வாழும் மக்கள் புதிய விடியலின் துவக்கத்தில் புதிய அனுபவத்தோடு வாழ கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் தூண்டுகிறது. நம்பிக்கை இழந்தோரின் வாழ்வு கிறிஸ்துவில் கட்டியெழுப்பப்படும்.

1666ஆம் ஆண்டு இலண்டன் மாநகரின் ஒரு பகுதி தீ விபத்தினால் எரிந்து சாம்பலானது ஆலயம் ஒன்றும் சாம்பலானது. மக்களது நம்பிக்கை கேள்வியானது. கட்டிடப் பொறியாளர் ஒருவர் ஆலயமிருந்த இடத்தை பார்வையிட்டபோது சாம்பலோடு கல்வெட்டு ஒன்றினைக் கண்டார். அதை சுத்தம் செய்து பார்த்தபோது அதில் "கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால் நானும் மறுபடியும் எழுந்திருப்பேன்" எனப் பொறிக்கப்பட்டிருந்தது. இதனைக் கண்ட பொறியாளர் திரும்ப ஆலயம் கட்டப்படும், மக்களின் நம்பிக்கை வீண்போகாது, திரும்ப மக்கள் ஆலயத்தை நாடி வருவார்கள் எனும் நம்பிக்கையோடு ஆலயத்தை திரும்ப கட்டினார். மக்கள் கடவுளை வழிபட்டு கொண்டாடி மகிழ்ந்தனர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்பிக்கையிழந்தோருக்கு நம்பிக்கையாகவும், நற்செய்தியை ஏற்காதோருக்கு நற்செய்தியாயும் இனி வாழ்வில்லை என்போருக்கு வாழ்வாகவும் அமைகிறது. ஆகவே கொண்டாடுவோம் அவருக்கு சான்றாய் வாழ்வோம்.

**மன்றாட்டு :** *இரக்கமுள்ள கடவுளே, வாழ்வின் ஆண்டவராய் எங்களில் வாழும் இயேசுவை மரித்தோரிடத்தில் காணாதிருக்க அருள்புரியும். அழிவின் ஆழியிலிருந்து எங்களை அவரோடு எழுப்பி, உமது ஈவான எமது வாழ்வினை அவரில் புதிதாக்கியிருக்கிறீர். எங்கள் உள்ளத்திலும் இருதயத்திலும் நாங்கள் கிறிஸ்துவோடு பகிர்ந்திடும் உயிருற்று எழுந்த வாழ்வினை அதிகரித்து, உம்மிடமுள்ள நிலையான வாழ்வுக்கு நேராய் வளர்ந்திட உம்மோடும் தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள்ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

செயல்பாடுகளைக் கண்ட யூதர்களும், எருசலேம் மக்களும் கிண்டல் செய்த போது (தி.ப. 2 : 13), பேதுரு உயிர்த்தெழுதலின் நற்செய்தியினை ஏற்காத அவர்களுக்கு கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார் இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள் எனும் நற்செய்தியை அறிவித்தார் (தி.ப. 2 : 32).

பவுலின் திருப்பணி காலத்தில் ஏதென்ஸ் நகரத்தார் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உடல் சார்ந்த உயிர்த்தெழுதலை ஏற்காமல் கிண்டல் செய்தனர் (தி.ப. 17 : 18,32). "அறியாத தெய்வத்துக்கு" என எழுதப்பட்டிருந்த பலிபீடத்தில் வழிபட்டனர் (தி.ப. 17 : 23). ஆனால் பவுல் 'இந்த அறியாத தெய்வமே உயிரோடு எழுந்த கிறிஸ்து, இந்த நற்செய்தியை ஏற்காத உங்களுக்கு அவர் நற்செய்தியாக இருக்கிறார்' என அறிவித்தார். ஆகவே உயிர்த்த கிறிஸ்து பவுலின் நற்செய்திப் பணிக்கு அடிப்படையாக உள்ளார். இந்த நற்செய்தி வரலாறு சார்ந்தது. தொடர்ந்து அனைத்து திருத்தூதுவர்களும் அதனை அறிவித்தனர்.

கொரிந்து திருச்சபை புற ஜாதி கிறிஸ்தவர்கள் ஆவர். இவர்கள் ஆன்மா என்றென்றும் வாழும் என்பதை நம்பினார்களே தவிர, சரீர உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே தான் பவுல் இறந்தோர் உயிரத்தெழமாட்டார் எனில் கிறிஸ்துவும் உயிரோடு எழுப்பப்படவில்லை என்றாகிவிடும். ஆகவே நாங்கள் பறை சாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் என்கிறார் (1 கொரி. 15 : 12-14). கிறிஸ்துவின் உயிர்த்தெழல் உணர்த்தும் நற்செய்தி என்ன? மரணம் வாழ்வின் முடிவல்ல, இன்னொரு வாழ்வின் தொடக்கம் - கிறிஸ்துவின் உயிர்த்தெழல் மனித உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்துகிறது. அதோடு மரணத்தை மேற் கொள்ளுதல் தீமையை வேரறுத்தல், கிறிஸ்தவ சேவைக்காக ஊக்கப்படுத்துதல் போன்ற நற்செய்தியின் தகவுகளை நம்மில் ஏற்படுத்துகிறது.

### 3. நிகழக்கூடாதது நிகழ்ந்தது : (லூக். 24 : 6)

இயேசு தனது பணிக்காலத்தில் தான் உயிர்பெற்று எழுவேன் என்பதை மறைமுகமாகவும், நேரடியாகவும் கூறியிருந்தார். யூதர்களும் சமயத் தலைவர்களும் அவர் உயிரோடு எழும்பக்கூடாது என்பதில் உறுதியாயிருந்து கல்லறைக்கு முத்திரை வைத்து காவல் காத்தனர்.ஆனால் தமது கலிலேயத் திருப்பணியின் போது அவர் கூறியது நிறைவேறும்படியாக உயிருடன் எழுப்பப்பட்டார் (லூக். 24 : 6). இயேசுவின் கல்லறைக்கு நறுமணப் பொருட்களோடு வந்த பெண்கள் அவர் உயிரோடு எழுந்திருப்பார் என்ற நம்பிக்கையோடு வராததால் குழப்பமுயன்றனர் (லூக். 24 : 4). ஆனால் சரீர உயிர்த்தெழுதலை நம்பினவர்கள் அதை கொண்டாடி மகிழ்ந்திட கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்து சீடர்களுக்கு



### 1. பொறுப்புள்ள மகனாக ஒப்படைத்தார் :

இஸ்ரவேலர் கடவுளின் முதன்மை மக்கள். கடவுள் அவர்களுக்கு விடுதலை வழங்கி ஒரு சமூகமாகக் கூட்டி இணைத்ததற்கு ஒரு நோக்கம் இருந்தது.

இவர்கள் வழி மக்களினம் ஆசி பெற வேண்டும். கடவுளின் மீட்பின் பணியில் பங்குகொள்ளவேண்டும். நீதியும் அமைதியும் நிறைந்த கடவுளின் அரசை நிறுவ வேண்டும் (வி.ப. 19 : 6). இவைகளை நடைமுறைப்படுத்த இவர்கள் தூய மக்களாக இருக்கவேண்டும்.

முதன்மை மக்கள் பொறுப்புணர்வை மீறியதால் கடவுளின் மகனே உலகில் வந்து பொறுப்புணர்வுடன் கடவுளின் ஆலோசனையுடணிணைந்த வழிகாட்டுதலில் அப்பணியை நிறைவு செய்தார். யோ 19 : 30 இல் எல்லாம் நிறைவேறிற்று என்று கூறுவதில், பொறுப்புள்ள மகனாகத் தந்தை தமக்களித்த இறை அரசுப் பணியை நிறைவு செய்தேன் என கூறுவதை உணரமுடியும். ஆகவே . . . மத்தேயு இயேசுவின் இறப்பை கடவுளுக்கு ஏற்புடையச் செயலாக பதிவு செய்கிறார் (மத். 27 : 51-54).

### 2. புதிய உறவிற்கு அடித்தளம் அமைத்தார்

இயேசுவின் ஒப்படைப்பும் இறப்பும் மானுட வாழ்வில் இடையறுந்த இறை உறவை ஒன்றுப்படுத்தியது. கொலோ 1 : 21-இல் "முன்பு நீங்கள் இறைவனோடு உறவற்றவர்களாய் இருந்தீர்கள்" என வாசிக்கிறோம். கொலோ. 1 : 22-இல் "உன் உடல் எடுத்த தம் மகனது சாவின் வழியாகக் கடவுள் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் எனப் படிக்கிறோம். எனவே இயேசு பொறுப்புள்ள மகனாக கடவுளது பிரதிநிதித்துவப் பணியினைச் செய்து நிறைவேற்றியமையால், தவறிழைத்து கெட்டுப்போன நாம் இறை உறவை மீண்டும் பெற்று அப்பா என அழைக்கும் உரிமையை பெற்றுள்ளோம் என்பது உண்மை. இயேசுவின் இறப்பு இதற்கு அடித்தளமாய் அமைந்தது.

திருச்சபை அழைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் நம் வழி மக்களினம் ஆசிபெற வேண்டும், கடவுளின் மீட்பின் திட்டத்தை செயல்படுத்த வேண்டும், நீதியும், அமைதியும் நிறைந்த இறையரசுப் பணியை தொடரவேண்டும், நாம் தூயவர்களாய் வாழவேண்டும் என்பதாகும். இவைகளை செயல்படுத்த கிறிஸ்துவில் இருந்த ஒப்படைப்பு திருச்சபைக்குத் தேவை.

**திரு. A. ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**

**08-04-2012**

***உயிர்ப்புத் திருநாள்***

# கிறிஸ்துவின் உயிர்ப்பு : நம்பிக்கையின் கொண்டாட்டம்

## Christ Resurrection: Celebration of Hope

எசே. 37 : 1–14 | 1 கொரி. 15 : 1–20
தி.பா. : 16 | லூக். 24 : 1–12

"அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். கலிலேயாவில் இருக்கும்போது அவர் உங்களுக்கு சொன்னதை நினைவுபடுத்தி கொள்ளுங்கள்" **(லூக். 24 : 6).**

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் துன்பமான வேதனையான புனித வெள்ளிக்கு பின்பு கொண்டாட்டம் நிறைந்த ஞாயிறு ஒன்று உண்டு என்பதை உணர்த்துகிறது. தீமையை நன்மையினால் வெல்ல முடியும் என்பதின் முழுமையே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். ஆகவே அது நம்பிக்கையின் கொண்டாட்டம். சிலுவையில் அறையப்பட்டு மரித்தவர்கள் அநேகர், ஆனால் உயிரோடு எழுந்தவர் கிறிஸ்து ஒருவரே. உயிர்த்தெழுந்த கிறிஸ்து சரீரம் உயிர்பெற்று எழும் எனும் நம்பிக்கையினை உறுதிபடுத்துகிறார் எனவே உயிர்ப்பு நம்பிக்கையின் கொண்டாட்டம்.

உலக வரலாற்றில் மாமனிதர்கள், சமயத் தலைவர்கள் என அழைக்கப்பட்டவர்கள் மரித்த பின்பு நல்லடக்கம் செய்யப்பட்ட கல்லறைகள் இன்றும் மூடியே கிடக்கின்றன. முகமதுநபியின் கல்லறையினைக் காண இஸ்லாமியர் மதினாவுக்கு புனிதப் பயணம் மேற் கொள்ளுகின்றனர். நெப்போலியனின் கல்லறையினை காண சுற்றலாப் பயணிகள் பிரான்ஸ் செல்கின்றனர். மும்தாஜ்யின் கல்லறையினைக் காண மக்கள் தாஜ்மகால் செல்கின்றனர். இந்த மூன்று கல்லறைகளும் மூடியிருக்கின்ற நிலையில் எருசலேம் செல்லும் புனிதப் பயணிகள் இன்றும் திறந்து கிடக்கும் இயேசுவின் கல்லறையைக் காண்கின்றனர். திறந்து கிடக்கும் இயேசுவின் கல்லறை கிறிஸ்து மரணத்தை வென்று உயிாத்தெழுதலின் நம்பிக்கையினைத் தந்துள்ளார் என்பதை பறைசாற்றுகிறது. ஆகவே அதனைக் கொண்டாடி மகிழ வேண்டுமெனும் உண்மையினை உணர்த்துகிறது. உயிர்த்தெழுதல் தரும் நம்பிக்கையின் கொண்டாட்டம் உணர்த்தும் உண்மை என்ன?

### 1. நம்பிக்கையிழந்தோர்க்கு நம்பிக்கை : (எசே. 37 : 11)

எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கினுள் அழைத்துச் செல்லப்பட்ட



எசேக்கியேல் கொலையுண்டவர்களின் எலும்புகளைக் காண்கிறார் (எசே. 37 : 9). கொலையுண்டு உயிரற்று உலர்ந்து இருப்பவர்கள் வாழ்வின் பெறமுடியாத சூழலில் எசேக்கியேலின் காட்சி உயிர்பெறும் நம்பிக்கையினைச் சுட்டுகிறது. வாழ்ந்தவர்கள் கொலையுண்டார்கள். திரும்ப எழும்பி நிற்கமுடியாதவர்கள் எழும்பி சேனையாய் நின்றனர்.

எலும்புகள் உயிர் பெறுவது எலும்புகளிலல்ல கடவுளில் இருக்கிறது, காரணம் அவைகள் தாமாக இயங்க முடியாது. உயிர் பெற முடியுமா? ஆம் இறையாற்றல் வெளிப்பட்டால் உயிர் பெற முடியும். ஆண்டவரின் ஆற்றல்மிக்க வார்த்தைகளை உரைத்த போது எலும்புகள் உயிர்பெற்றன. (எசே. 37 : 5-7). ஆண்டவரின் ஆற்றல்மிக்க வார்த்தையினால் நம்பிக்கையிழந்தோர் நம்பிக்கைப் பெறுகின்றனர். உலர்ந்து போன நம்பிக்கையோடு வாழ்கின்றவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பினால் நம்பிக்கை பெறுகின்றனர். கல்லறைகளைத் திறந்து கல்லறையிலிருந்து மேலே கொண்டு வருவேன் (எசே. 37 : 12) எனும் வார்த்தை உயிரற்ற நம்பிக்கை திரும்ப உயிர் பெறும் என்பதை உணர்த்துகிறது.

நாட்டை இழந்து, உரிமையினை இழந்து, நம்பிக்கை இழந்து, அந்நிய நாட்டில் வாழ்ந்த இஸ்ரயேலரின் நிலை உயிரற்ற உலர்ந்த எலும்புகளைப் போலிருந்தது (எசே. 37 : 11). கடவுளின் ஆவியான நம்பிக்கை உலர்ந்த எலும்புகளுக்குள் புகும்போது, எலும்புகள் அதனை தன்னகத்தே கொள்ளும் போது, பிரிந்து கிடக்கும் எலும்புகள் ஒன்றாகின்றன. ஒவ்வொரு எலும்பும் தனக்குரிய எலும்புடன் சேர்ந்து கொண்டது (எசே. 37 : 7). உயிர்பெற்ற எலும்புகள் தனக்குரிய இடத்தை அடைந்தது போல, திரும்ப நாட்டை அடைய முடியுமா? எனும் நிலையில் இருப்போர் நாட்டை அடைவர் என்பது நம்பிக்கை இழந்தோருக்கு தரப்படும் நம்பிக்கை.

கிறிஸ்துவின் மரணத்திற்கு பின் பயந்து, தாங்களும் கொலை செய்யப்படுவோம் எனும் நம்பிக்கையற்ற நிலையில் இருந்த சீடர்களுக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்து தரிசனமாகி உங்களுக்கு அமைதி உரித்தாகுக (லூக். 24 : 36). எனும் நம்பிக்கையின் செய்தியினைத் தந்தார். உலர்ந்த நம்பிக்கை உயிர்பெற்றது. உயிர்த்தெழுதல் மீட்பின் நம்பிக்கையினை இன்றும் தருவதாய் உள்ளது.

### 2. நற்செய்தியை ஏற்காதோர்க்கு நற்செய்தி : (1 கொரி. 15 : 14)

பல்வேறு பிளவுகளோடு சாரமற்றிருந்த கொரிந்து திருச்சபையில் ஒரு சாரார் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உணர்த்தும் நற்செய்தியினை ஏற்றுக்கொள்ளவில்லை (1 கொரி. 15 : 12) தவறான புரிந்து கொள்ளுதலோடு வாழ்ந்தனர். இவர்களுக்கு தரப்பட்ட செய்தி கிறிஸ்துவின் உயிர்த்தெழல் ஒரு வரலாற்று நிகழ்வு என்பதாகும் (1 கொரி. 15 : 3-11). பெந்தேகோஸ்தே நாளில் உயிர்த்த கிறிஸ்துவின் ஆவியரால் ஆட்கொள்ளப்பட்ட மக்களின்

**29-04-2012**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு***

## உயிர்த்த ஆண்டவருக்கு சான்றாகுதல்

**Witnessing to the Risen Lord**

| | |
|---|---|
| தானி. 12 : 1–13 | தி.ப. 2 : 22–36 |
| தி.பா. 23 | யோவா 20 : 1–18 |

"ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் . . . " (தி.ப. 2 : 36)

உலக வரலாற்றின் முன்னும் பின்னும் நிகழ்ந்திராத நிகழ்வு, இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல். உயிர்தெழுந்து உரோம அரசு முத்திரையை உடைத்து போர் வீரர்களின் காவல்களை சிதறடித்து 3-ஆவது நாளின் அதிகாலைப் பொழுதில் கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார். உலக சரித்திரமே அவரைத் தெரியாது எனக் கூற இயலாதபடி கிறிஸ்துவுக்கு முன் (B.C.)எனவும், கிறிஸ்துவுக்கு பின் (A.D.) எனவும் எவரும் அறியவும் மறுக்கக்கூடாதவாறும் உலக சரித்திரத்தின் நடுவாய் உயிர்த்த இயேசு நிற்கிறார். இன்று இமைப்பொழுதிலே உலகில் வாழ்வோர் யாருடனும் நேரடியாகப் பேசுவது மட்டுமன்றி, கண்டு நேரடித் தொடர்புகளை பெற்றிடுதல் என முன்னேறி, நம் உலகே ஒரு அறைக்குள் என்றாகின்றது அன்றோ? உயிர்த்தெழுந்து நித்தமும் நம்மை தேடி வருகின்ற இயேசு கிறிஸ்துவை கண்டு, அறிந்து நேரடி உறவுக் கொண்டு இறையருட்பணியில் நாமும் ஆற்றல்மிகு சான்றுகளாகிட அழைக்கப்பட்டுள்ளோம்.

### 1. இயேசு கிறிஸ்துவைக் கண்டும் அவரை அறிந்திடாத உலகு

(யோவான் 20 : 13,14)

உலக வாழ்வில் இயேசு கிறிஸ்துவை நீண்ட நாட்களாக கண்டு, பழகிய அநேக இருபால் மக்கள் உயிர்த்த ஆண்டவரை அறியாத உலகத்தாராக நின்றநிலை இங்கு காணப்படுகிறது. உயிர்த்தெழுந்தருளுபவராக நினைக்கவோ, அவரை அறிந்திடவோ செய்யாத உலகு. இன்றையத் திருச்சபையார் கண்ணெதிரே ஆலயங்களை காண்கிற வேளையிலாவது கடவுளை நினைப்பதோ, அறிந்துரை முனைவதோ இல்லை. இதர சமய மக்கள் பேருந்துகளில் நம் அருகில் இருந்தாலும் கண்டு அடையாளங்களையிட்டு முனைகிக்கொள்வதை நாம் அனுதினம் காண்கிறோமல்லவா?



சந்திக்கின்றன. படைப்புகளில் சிறந்த படைப்பாகிய மனுக்குலமும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கின்றனர். இந்த சந்திப்புகளில் உறவுகள் வலுப்படுகின்றன. அதேப் போன்றுதான் கடவுளும் மனிதரை சந்தித்து உறவை வலுப்படுத்த ஆண்டவர் விரும்புகிறார். எனவேதான் மனிதரை தம் சாயலில்படைத்தார். ஆனால் அவர்களை சந்திக்க வந்தபோதோ மறைந்து கொண்டனர் (தொ.நூ. 3 : 8). காரணம் அவர்கள் செய்த பாவம் அவர்கள் கடவுளைச் சந்திக்காமலிருக்கக் காரணமானது.

பாவத்தின் பரிகாரியாய் மனிதரையும் கடவுளையும் இணைக்கும் பாலமாய் உலகில் வந்து மனிதரோடு மனிதராய் வாழ்ந்து பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்த இயேசு கிறிஸ்து இன்று நம்மை சந்திக்க விரும்புகிறார்.

### 1. சீடரைச் சந்தித்த இயேசு

இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார் (லூக். 24 : 15b)

இயேசுக்கிறிஸ்து உலகில் பணிசெய்த நாட்களில் அதிகமாக அவரோடு இருந்தவர்களில் பனிரெண்டு சீடர்கள் முக்கியமானவர்கள். இவர்களிடம் முன் கூட்டியே தனது மரணத்தைக் குறித்தும், மூன்றாம் நாள் உயிரோடு எழும்புவதைக் குறித்தும் மூன்று முறை முன்னறிவித்திருந்தார். முதல் முன்னறிவிப்பை மத்தேயு 16 : 20-28; மாற்கு 8 : 30, 9 : 1; லூக். 9 : 22-27 வரை உள்ள பகுதிகளிலும் இரண்டாம் முன்னறிவிப்பை மத். 17 : 22, 23; மாற். 9 : 30-32; லூக். 9 : 43-45 வரை உள்ள பகுதிகளிலும் மூன்றாம் முன்னறிவிப்பை மத். 20 : 17-19; மாற். 10 : 32-34; லூக். 18 : 31-34 வரை உள்ள பகுதிகளிலும் காணலாம்.

இயேசு கிறிஸ்துவின் பாடுமரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிந்திருந்த அவரது சீடர்களே அதனை நம்பவில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. எனவேதான் அவர் மரணமடைந்த உடனே பயந்து ஒளிந்து கொள்கின்றனர். கலங்கித் தவிக்கின்றனர். அவர்கள் பயத்தைப் போக்கி, கலக்கத்தைத் தீர்க்கவே இயேசுக் கிறிஸ்து அவர்களைச் சந்திக்கிறார். ஆனாலும் அவரை அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. (லூக். 26 : 4). ஆனால் அவர் யார் என்று அறிந்து உணரமுடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப் பட்டிருந்தன. அந்த அளவுக்கு அவநம்பிக்கை அவர்களுக்குள்ளும் புகுந்திருந்தது.

இன்று நாமும் இயேசுக்கிறிஸ்துவின் சீடர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆனால் பலவீனமோ, இழப்போ, சிறு துன்பமோ, தோல்வியோ வாழ்வில் வந்தவுடனே நாமும் பழைய நிலைக்குக் கடந்து செல்கிறோம்.

அனுதினமும் நம்மை சந்தித்து நம்மோடு இணைந்து வாழ்கின்ற இயேசுக் கிறிஸ்துவைப் பார்க்க முடியாமல் நம்முடைய கண்கள் மூடப்பட்டு, அவரை சந்திப்பதற்காக புண்ணிய ஸ்தலங்களுக்கும், போலி இடையீட்டாளர்களிடமும் செல்கிறோம்.

இந்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் நம்மைச் சந்திக்க வந்திருக்கும் இயேசு கிறிஸ்துவை அவரது சீடர்களைப்போல வருந்தி அழைத்தால், நம் இல்லத்திலும், உள்ளத்திலும் வருவார். (லூக் 24 : 29). இயேசுவின் சீடர்கள் அவரைக் கட்டாயப்படுத்தி இணங்க வைத்தார்கள். அவர் அங்கு தங்குமாறு அவர்களோடுச் சென்றார். நம் இல்லத்திலும், உள்ளத்திலும் இடம் கொடுத்தால் அவர் நம்மோடு பந்தி அமர்வார்; நம்மில் ஒருவராக மாறுவார். அப்பொழுது நாம் அவரை அறிந்து கொள்ளலாம் (லூக். 24 : 31). அப்பொழுது அவர்கள் கண்கள் திறந்தனன. அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டனர்.

இயேசு கிறிஸ்துவின் உண்மைச் சீடர்கள் என்று பெயர் பெற்ற நாம் அவரை சந்தித்து முன்னோக்கிச் சென்று சாதனை பெறுவோம்.

## 2. சீடராக்கச் சந்தித்த இயேசு

‘அதற்கு அவர், ஆண்டவரே நீர் யார் எனக்கேட்டார். ஆண்டவர் நீ துன்புறுத்தம் இயேசு நானே’ (தி.ப. 9 : 5).

சீடர்களைச் சந்தித்த இயேசு கிறிஸ்து சீடர்கள் அல்லாதோரையும் சீடர்களாய் மாற்ற எண்ணினர். எனவே தான் கிறிஸ்துவர்களை அழித்துக் கொண்டிருந்த சவுலைச் சந்திக்கிறார். காரணம் உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் மனுஷியும் தமது சீடர் ஆக வேண்டுமென்பது அவரது ஆவல். ஏனென்றால் அனைவரும் கடவுளின் பிள்ளைகள். சவுலை இயேசு கிறிஸ்து சந்திக்கும் அனுபவம் பல ஆண்டுகளுக்கு முன் தொலைந்துபோன பிள்ளையைச் சந்திக்கும் தாயின் அனுபவம் போன்றது.

இயேசு கிறிஸ்து சவுலை சீடராய் அழைக்கிறார் என்பதை அனனியாவோடு இயேசு கிறிஸ்து சொல்லும் வார்த்தைகள் விளக்கிச் சொல்கிறது. தி.ப. 9 : 16இல் என் பெயரின் பொருட்டு அவர் எத்துணை



சேர்கிறார். பேதுருவின் இந்த இறை அனுபவம் அவரை முற்றிலும் மாற்றுகிறது. எத் துன்பங்களையும் கண்டு அஞ்சாத வாழ்வு பெருக்கெடுக்கத் தொடங்குகிறது. கிறிஸ்தவ அனுபவத்தை பெற்ற யாவரும் அதை தம்முடனே வைத்திருக்க முடியாது. செயல்பட தூண்டுகிறது. எனவே தான் பேதுரு கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள் (தி.ப. 2 : 32). என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது, நாங்கள் கண்டதையும், கேட்டதையும் உங்களுக்கு அறிவிக்கறோம் (1 யோவா. 1 : 4) என்கின்றனர்.

உயிர்த்த ஆண்டவரை தங்கள் வாழ்வின் அனுபவமாக்கும் போது தங்கள் வாழ்வை துச்சமாக எண்ணினர். உலகின் நாலா பக்கங்களிலும் இயேசுவின் அன்புக்கு சான்று பகர்ந்தனர். இரத்தசாட்சிகளாய் மடிந்தனர். பேதுரு இயேசுவை தன் வாழ்வின் அனுபவமாக்கினதாலே தலைகீழாக சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

**மன்றாட்டு :** *கடவுளே, எம்மில் உமது உடனிருத்தலை நாங்கள் காணாமலும் உரையாமலும் இருக்கும்போது, எங்கள் இருதயம் எங்களுக்கு பற்றி எரிவதற்கு தக்கதாய் உமது வார்த்தையான உடைக்கப்பட்ட அப்பத்தில் நிலைத்திருக்க வேண்டுமென, உம்மோடும் தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே மன்றாடுகிறோம். ஆமென்.*

அருள்திரு. N. ஜாண் பென்டிங்

**22-04-2012**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு***

## உயிர்த்த ஆண்டவரை அனுபவமாக்குதல்

**Experience of the Risen Lord**

யோபு 5 : 8 – 19 | தி.வெ. 1 : 4 – 8
தி.பா. 93 | யோவா. 21 : 1 – 14

"அங்கு நிற்பவர் ஆண்டவர் தாம்" (யோவா. 21 : 7)

பேதுரு கலிலேயா கடற்கரையில் அமைந்திருக்கும் பெத்சாயிதா என்ற ஊரைச் சார்ந்தவர். மீன்ப் பிடி தொழில் செய்து அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தவர். இயேசு என்னை பின் செல், இன்று முதல் உன்னை மனிதரை பிடிப்பவராக்குவேன் லூக். 5 : 9 எனக்கூறி அவரை அழைத்தார். அவரும் இயேசுவை பின் தொடர்ந்தார். தொடர் பயணத்திலே இயேசுவானவரின் செயல்பாடுகளான இயற்கையின் மீது, கடலின் மீது, தீய ஆவிகள் மீது, வியாதிகள் மீது கொண்டிருந்த ஆற்றலையும் அவர் செய்த அருஞ்செயல்கள், அடையாளங்களையும் கண்டு ஆச்சரியப்பட்டார். இயேசு தம் சீடர்களை நோக்கி நீங்கள் நான் யார் என சொல்கிறீர்கள் என கேட்டபோது (மத். 16 : 15) சிறிதும் தயக்கமில்லாமல் 'நீர் மேசியா, வாழும் கடவுளின் மகன்' (மத். 16 : 17) என்ற உண்மையை தைரியமாய் அறிக்கை இட்டார். அப்போது இயேசு 'யோனாவின் மகனான சீமோனே உன் பெயர் பாறை. இந்த பாறையின் மீது என் திருச்சபையைக் காட்டுவேன்' என்றுக் கூறி பேதுருவைப் பாராட்டினார்.

இயேசு தம் இலட்சியப் பயணத்தின் போது நீங்கள் எல்லோரும் என்னிமித்தம் இடறல் அடைவீர்கள் என்ற போது எல்லோரும் உம்மை விட்டு ஓடிப்போய் விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிபோக மாட்டேன். (மத். 26 : 35) என்று சவால் விட்டவர் பேதுரு. கெத்சமேனேயில் ஆண்டவரை கைது செய்த போது தலைமை குருவின் பணியாளரான மால்கூஸ் என்பரை வாளெடுத்து தாக்கியவர் (யோவா. 18 : 10). இயேசுவை மூன்று முறை மறுதலித்தவராக மாறுகிறார். இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பின்னர் நம்பிக்கை இழந்தவராக மாறுகிறார். இயேசுவின் சிலுவை சாவுக்கு பின் அவரது கொள்கைகளுக்கு சாட்சியாக விளங்குவதை விட்டு இலட்சியத்தை மறந்து, நம்பிக்கை இழந்தவனாக, மீன் பிடிக்க போகிறேன் என்று சொல்ல மற்றும் ஆறு பேர் நாங்களும் உம்முடனே கூட வருகிறோம் என்று சொல்ல



(யோவா. 21 : 3) அவர்களையும் அழைத்துக் கொண்டு மீன்பிடிக்கச் செல்கிறார்.

மனிதர்களைப் பிடிக்க அழைக்கப்பட்டதை மறந்து நிராசையோடு மீன்பிடிக்கும் பழைய தொழிலுக்கேச் செல்லுகின்றனர். அப்படி செல்லும் போது திபேரியக் கடற்கரையில் ஏற்பட்ட அனுபவம் அப்போஸ்தலர்களுடைய இருதயத்தை ஊடுருவி அவர்கள் வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக பேதுரு தன்னை உயிர்த்த இயேசுவுக்கு முழுமையாக அர்ப்பணிக்கின்றார்.

### 1. ஏமாற்றத்தின் நடுவில் பெற்ற அனுபவம் :

கடலில் மீன் பிடிக்க சென்றவர்களுக்கு மீன் ஒன்றும் அகப்படாததால் பெரும் ஏமாற்றம். இரவு முழுவதும் முயற்சி செய்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. தங்களுடைய விருப்பத்துக்கும், சிந்தனைகளுக்கும் தோல்வியும், சோர்வும் விரக்தியும் பெருகியது. கடவுளும் எங்களை கைவிட்டு விட்டார், கடலும் எங்களை கை விட்டுவிட்டது. ஏமாற்றமே உன் பெயர் தான் வாழ்க்கையா? என மனம் நொந்து போன நிலையில் தன்னிடம் ஒப்படைத்த யாரையும் இழக்க விரும்பாத இயேசு (யோவா. 18 :9) அவர்களை கடிந்து கொள்ளவில்லை. கடலை கொந்தளிக்க செய்யவில்லை. காற்றால் அலைகழிக்கபடவில்லை. ஒரு தாய் தன் பிள்ளைகளை அழைப்பது போல "பிள்ளைகளே'' என்று அன்போடு அழைத்து "மீன் ஒன்றும் பிடிபடவில்லையா" (யோவா. 21 : 5) என்று கேட்டார்.

அழைக்கப்பட்ட அழைப்பை மறந்து, பொறுப்பை மறந்து, கடமையை மறந்து, மனிதப் பெலவீனத்தால் சோர்ந்து தடுமாறி ஏமாற்றத்தின் மத்தியில் இருந்த சீடர்களை உயிர்த்த இயேசுவே தேடிச் சென்று உறவை புதுப்பிக்கின்ற அனுபவம். பின்வாங்கி சென்ற சீடர்களை தேடி இயேசுவே முதல் அடி எடுத்து வைக்கிறார். அவரே நம்மை முதலில் அன்பு செய்கிறவர் நாம் பாவிகளாயிருந்த போதே கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்தார் (ரோம. 5 : 8).

திருமறையின் ஆரம்பம் முதல் இறுதி வரை உள்ள மையச் செய்தி கடவுள் தம் மக்களைத் தேடி செல்கிறார். கடவுள் முதல் மனிதன் ஆதாம் பாவம் செய்து மறைந்திருந்த போது கேட்ட கேள்வி மனிதா நீ எங்கே இருக்கிறாய்? பாருங்கள். ஆதாம் கடவுளைத் தேடி செல்லவில்லை. மாறாக மரங்கள் பின்னால் ஒளிந்து கொண்டான். அவனை கடவுள் தேடிச் சென்றார். இதுதான் சீடர்கள் பெற்ற இறை அனுபவம்.

சகரியாவின் இறை அனுபவம் தம் மக்களை தேடி வந்து விடுவித்தருளினார். (லூக். 1 : 68) சகேயு வீட்டில் கிறிஸ்து வெளிப்படுத்திய அனுபவம் இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்

(லூக். 19 : 10) தவறிய ஆட்டை தேடி அலைவது, காணமற் போன நாணயத்தை தேடி கண்டுபிடித்து மகிழ்வது இவை எல்லாம் கடவுள் மனிதனை எப்போதும் தேடி செல்கிறார் என்பதை உணர்த்துகிறது. இங்கேயும் ஏமாற்றத்தின் நடுவில் நிராசையோடு இருந்த சீடர்களை தேடி விசாரிக்கிறார் என்பதே சீடர்களுக்கு கிடைத்த அனுபவம்.

## 2. இருக்கும் இடத்திலேயே சந்திக்கின்ற அனுபவம் :

ஆண்டவரை சந்திப்பதற்காக நாம் ஓடி அலைய வேண்டியதில்லை. எங்கு என் பெயரால் இரண்டு மூன்று பேர் கூடி இருக்கின்றார்களோ அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கின்றேன் என்றவர் நாம் இருக்கின்ற இடத்திலே நம்மை சந்திக்கின்றவர். ஏமாற்றத்துடன் மீன் ஒன்றும் அகப்படாமல் வேதனையோடு இருந்தவர்களிடையே உயிர்த்த இயேசு கரையில் நின்றார் (யோவா. 21 : 4). எகிப்தில் உங்களுக்கு நேரிட்டதையும், நான் கண்ணாலே கண்டேன். உங்களை நடத்தி செல்வேன் என்றவர் (விப. 3 : 16 - 18) உடனிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் ஆலோசனை கொடுக்கிறார். "நான் உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை காட்டுவேன் உன்மேல் என் கண்னை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" (சங். 32 : 8) வழிவிலகிச் செல்லும் போது வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்கிறார். "ஆராய முடியாப் பெரியனவற்றையும், எண்ணிலடங்கா வியக்க தக்கனவற்றையும் செய்பவர் அவரே" (யோபு 5 : 9), என்பதற்கிணங்க படகின் வலப் பக்கத்தில் வலை வீசுங்கள் மீன் கிடைக்கும் என்கிறார் (யோவா. 21 : 6). மீன்கள் மிகுதியாய் அகப்பட்டது. வலையை இழுக்க முடியா அனுபவம். அவர் நம்மை சந்திக்கிற போது அளவற்ற அருள்வரம் அபரிவிதமாக நம்மைச் சூழ்ந்து கொள்ளும். அவர் நம்மோடு இருக்கிற போதும், அவரோடு நாம் இருக்கிற போதும் அங்கே அளவில்லா ஆனந்தம் தான். கொண்டாட்டம் தான் மகிழ்ச்சிதான்.

## 3. அர்ப்பண வாழ்வுக்கு தூண்டும் ஆண்டவர் :

அனுபவங்கள் ஒரு மனிதனுக்கு ஆசான். அனுபவங்கள் கற்று தருகின்ற பாடங்கள் எந்த அறிவியல் கல்வியும் கற்றுத் தரமுடியாது. இந்த அனுபவ பாடங்களை புரிந்துகொள்ள ஒருவன் திறந்த மனதுடனும் தயார் நிலையில் இருக்க வேண்டும். அதே போல் இந்த அனுபவம் அறிவைப் பெற தான் பார்க்கின்ற பொருள்களுடனோ, தான் சந்திக்கின்ற ஆட்களுடனோ, தன்னை பாதிக்கின்ற நிகழ்வுடனோ அவன் ஒன்றிணைய வேண்டும். அப்போது தான் அது நிறை அனுபவமாக இருக்கும். இங்கே உயிர்த்த இயேசு தங்கள் வாழ்வின் ஏமாற்றத்தில் நிராசையோடு இருந்த போது இருக்கிற இடத்திலேயே சந்தித்து இல்லாமையை அகற்றியது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அது ஒரு நிறை அனுபவமாக மாறியது. எனவே கரையில் நிற்பவர் ஆண்டவர் தாம் என்று அறிந்தவுடன் கடலில் குதித்து கரை



துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக்காட்டுவேன். இந்த வசனத்திலிருந்து நாம் புரிந்து கொள்வது சவுலை சந்தித்த இயேசு கிறிஸ்து அவரை சீடராக அழைக்கிறார் என்றும் சீடரானவர் துன்பங்களை ஏற்று தடைகளைத் தாண்டி சாதனை புரிய வேண்டும் என்பதையும் நமக்குச் சொல்கிறது.

இயேசு கிறிஸ்துவால் சந்திக்கப்பட்ட சவுல் உண்மைச் சீடராய் மாறி பிறரையும் இயேசுவின் சீடராக மாற்றும் பொறுப்பை ஏற்கிறார். அதற்காக தான் உயர்வாகக் கருதிய அனைத்தையும் இழக்கவும் முன் வருகிறார். பிலிப்பியர் 3 : 7இல் ஆனால் எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக் கருதினேன். பிலிப்பியர் 3 : 8இல் அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்து விட்டும், கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறார்.

இயேசு கிறிஸ்துவால் சந்திக்கப்பட்ட சவுல் உண்மைச் சீடராகி எப்படி சாதனை புரிந்தார் என்பதை 2 திமொத். 4 : 7-இல் நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்துவிட்டேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் என்னும் அவரது வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது.

உயிர்த்த இயேசுக் கிறிஸ்துவின் சந்திப்பு பின் வாங்கியச் சீடர்களை முன்னோக்கிச் செல்ல உதவியது அதேப்போன்று இன்று உயிர்த்த இயேசுக் கிறிஸ்துவால் சந்திக்கப்பட்டு சீடராக மாற்றப்பட்டிருக்கிற நாம் எச்சூழலிலும் அவரது அன்பை விட்டு பின்வாங்காமல் உண்மைச் சீடர்களாய் வாழ்ந்து பிறரையும் சீடராக மாற்றி கிறிஸ்துவுக்காய் சாதனைகள் பல புரிந்து அவரோடு நித்திய நித்தியகாலம் வாழ்கின்ற பேற்றினைக் பெறுவோமாக.

**அருள்திரு. S. ஜேக்கப் ராஜ்**

8 : 17இல் இயேசு கிறிஸ்துவோடு இணைந்து இருப்போர்க்கு இனி தண்டனையே கிடையாது. பயம், சுயம், பாவம், ஆட்கொள்ள முடியாது.

கிறிஸ்தவன் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் பணி புரிகின்றவன், வாழ்பவன், அவர் சித்தமாகிய பரலோக வாழ்வை அனுபவிப்பவன். கிறிஸ்தவன் கிறிஸ்துவில் இணைந்து வாழ்பவன். ஆகவே அவனிடம் எப்போதும் நித்திய மகிழ்ச்சி உண்டு. உயிர்த்தெழுந்த இயேசு இணை பிரியா உறவில் நிலைத்து இருப்பதால் பரிசுத்த ஆவியர் நடத்துதல் முடிவு பரியந்தம் உண்டு. அதுவே இவ்வுலகில் நமக்கு நம்பிக்கை, சமாதானம் தரும்.

**மன்றாட்டு :** *விண்ணக ஆண்டவரே, நாங்கள் உம்மோடு ஒப்புரவாகும்படி உம்முடைய குமாரனை அனுப்பினீர். உம்முடைய தெய்வீக வாழ்வின் பங்காளிகளாய் மாற்றியிருக்கிறீர். நாங்கள் அவரின் அன்பில் நிலைத்து அவரின் கட்டளைகளைக் கடைபிடிக்கவும் அதன்வழி உமது மாட்சிமைக்கு கனி தரவும் உமது ஆசீர்வாதத்தை தந்தருளும். உம்மோடும் தூயாவியரோடும் என்றென்றைக்கும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே ஆமென்.*

**அருள்திரு. T. ஜாண் பீட்டர்**



**2. இயேசுகிறிஸ்து பேசக் கேட்டும், அவரை அறிந்திடாத உலகு** (யோவான் 20 : 16)

இயேசுகிறிஸ்து உடன் பயணித்தும் எம்மாவூர் சீடர்களால் அவரை புரிந்துகொள்ள இயலவில்லை. லூக்கா 24 : 15இ இயேசு கிறிஸ்துவின் உலக வாழ்வில் அவரை மிக நெருக்கமாகக் கண்டும், அவரது குரலை நன்கு கேட்டு பழகி போனவர்கள், இப்போது அவரை அறியாத உலகின் பிரதிபலிப்புகளாக நிற்கின்ற மக்கள், வேதனைகள் பட்டு மரித்ததையும், கல்லறையில் வைக்கப்பட்டதையும் உரோம அரசின் அதிகார முத்திரை மற்றும் பலத்த காவல்களையும் கண்டவர்கள் தான் இந்த மக்கள். ஆனால், இயேசு கிறிஸ்து யார்? எனவும் அவர் கூறிய வாக்குகளை என்ன? என அறிந்து உணர்வடையாதவர்களும், குறைந்த பட்சம் திறந்த கல்லறையினை கண்டாகிலும் உணர்வடைந்து அறிய முயற்சி செய்யாத மக்கள் இவர்கள்.

ஆண்டவர் இயேசு நம்முடன் அமைதியில் பேசுவதை பல வேளைகளில் நாம் கேட்டும், அவரது குரலினை நம்மோடு பேசும் இறைவனது குரல் என அறியாத உலகினர் நாம். ஆற்றலோடு நாம் வேகமாக நடந்து செல்லும்போது, நம் எதிரில் நடக்க இயலாத மக்கள், மற்று உயிரினங்களைக் காணும்போது நம்மோடு பேசும் கடவுளின் வார்த்தைகளை அறியாத மக்கள் நாமன்றோ? ஏன்? நாம் கண்டும் காணாது, கேட்டும் அவர் குரலினை கேளாதுள்ளோம்.

**3. இயேசு கிறிஸ்துவின் தொடர்பில் அவரை அறிந்து கொண்ட உறவு** (யோவான் 20 : 16)

மரியாள் இயேசுகிறிஸ்துவை தோட்டக்காரராக கண்டார், ஆனால் பெயர் சொன்னவுடன் கொண்ட நேரடித் தொடர்பு அவரது அகக்கண்களை திறக்கச் செய்தது. நேரடித் தொடர்புகள் போதகராகக் கண்டிடச் செய்தது; நேரடித் தொடர்பு அவரோடு பேசிடச் செய்தது, செயல்பட வழிநடத்துவதை நாம் காணமுடிகிறது.

பெயர்ச் சொல்லி அழைத்து நேரடித் தொடர்பு கொள்ளும் வேளையில் தோட்டக்காரரென்னும் எண்ணங்கள், தோட்டக்காரராக காணும் காட்சி, கேள்விகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாய் மாற்றி விடுகின்றது.

இயேசு கிறிஸ்துவின் நேரடித் தொடர்பு விவரிக்க இயலாத அனுபவ சொற்களாகிறதை கலங்கி நின்ற மரியாவிடம் தெளிவாகத் தென்படுகின்றதன்றோ?

மரியா, இப்படிப் பற்றிக் கொள்ளாதே என்ற இயேசு கிறிஸ்து அவரிடம் உடல்ரீதியான பற்று அல்ல, நம் உள்ளத்தில், உணர்வுகளில் பற்றுறுதி கொள் என தெளிவாக போதிக்கின்றார்.

நேரடித் தொடர்பு இறையருட்பணி செய்ய கூறியவுடன், உடனடியாகவே செயல்பட வைத்ததை காண்கின்றோம். காலம் பாராது

உடனடியாகவே மரியாவை தான் கண்ட காட்சி, மாற்றங்கள், சிந்தை மற்றும் கேள்வி மாற்றங்கள் அவளினின்று பகிரப்பட துவக்கிற்று. இது அவளது வாழ்வின் அருட்பணியுமாயிற்று.

இச்செய்தியினை ஓர் வாழ்வு செய்தியினின்று புரிந்திட முயல்வோம். திடீரென அன்றொருநாள் பொங்கி படர்ந்த தீயினின்று, ஓடித் தப்பி வீடுகளை விட்டு அனைவரும் வெளியேறினர். புலம்பி கதறித் தீயில் பாய முற்பட்ட பெண்ணை தடுத்து தீயில் பாய்ந்து தொட்டியில் படுத்திருந்த குழந்தையை காப்பாற்றினான் இளைஞன் பென்னி. அக்குழந்தை வளரும்போது தன் தாய்க் கூறின இவ் அனுபவத்தினை அவள் தன் வாழ்வின் ஒப்பற்ற நிலையில் வைத்துக்கொண்டாள். முன்பின் தெரிய இயலா நிலையில் அப்பெயர் பென்னி என மட்டும் பலமாய் நினைவில் கொண்டாள். அவள் மாநில அளவில் திறமை, அறிவு முதல் நிலையில் நிலையாளர் ஆனான், பாராட்டுகள் பெற்று ஓங்கி உயர்ந்து பணிஉயர்வு பெற்றான். தன் கீழ்நிலை பணியாளர் தேர்வு நடத்தும்போது வந்த விண்ணப்பங்களில் ஒரு பெயர்மட்டும் அவளது கண்ணில்பட்டது. பென்னி என்பது தான் அப்பெயர். விசாரித்தறிந்தபோது, தீ விபத்தின் நிகழ்வுகள் தெரிய வந்தது. வடுக்களால் அலங்கோலமான பென்னியை அந்த இளம்பெண்ணிற்கு பணி வழங்கி வாழ்வு கொடுத்தார்.

**மன்றாட்டு :** *எங்கும் வியாபித்திருக்கும் உயிரோடெழுந்த கிறிஸ்துவே, வாழ்வருளும் உமது உயிரினை உயிரற்ற எங்களில் ஊதி, எங்களது கண்கள் மறைக்கப்பட்டுள்ள நிலையிலும், உம்மோடு உயிரோடு எழுந்து உமது உயிர்த்தெழுதலின் முழு நம்பிக்கை கொண்டு உம்மை அறிக்கையிட உதவிச் செய்திட எல்லா கனத்திற்கும் மகிமைக்கும் எப்போதும் பாத்திராயிருந்து உம்மோடும் தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே மன்றாடுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. S. காட்பிரே சாமுவேல்**



பண்ணுவேன். இவற்றின்படி நாம் தரிசனத்தின்படி பணியாற்ற அழைக்கப்படுகின்றோம் என்பதை புரிந்து கொள்ளமுடிகிறது. அப். 4:12இல் பேதுருவின் ஆற்றல் மிகு வார்த்தைகள் அவரில் பெற்ற உறவு மற்றவர்களும் கண்டுணரச் செய்தது. இரட்சகராக இயேசுவை உலகுக்கு வெளிப்படுத்தி பணியாற்றும் வாழ்வினை நமதாக்குவது அவசியம்.

## 2. பயணிக்கும் வாழ்வு

இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் எனக்கு எட்டாத உயரமுமாய் இருக்கிறது (தி.பா. 139 : 6). இவ்வுலகில் நாம் பயணிகள். ஆகவே நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழ்வதற்கு உயிர்த்த கிறிஸ்துவோடு கொண்ட உறவில் வளர்வது தேவையானது. வாழ்வில் ஏற்படும் தடுமாற்றங்களில் உயிர்த்த இயேசு வெற்றியை தருகிறார் (தி.பா. 107 : 13,14). தங்கள் ஆபத்திலே கடவுளை நோக்கி கூப்பிட்டார்கள். அவர்கள் இக்கட்டில் இருந்து அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார். அந்தகாரத்திலும் மரண இருளிலும் இருந்து அவர்களை வெளிப்படப் பண்ணி அவர்களின் கட்டுகளை அறுத்தார் .

உயிர்த்த இயேசு நம் வாழ்வில் அற்புதங்களை அனுதின வாழ்வில் செய்து நிறைவேற்றுகின்றார். இன்று அநீதிகள் மனித நேயமற்ற வன்முறைகள், சமயத் தீவிரவாதங்கள் மனித வாழ்வை அலைக்கழிக்கின்றன. இந்த வாழ்வை மறுரூபப்படுத்துகின்ற அதிசயத்தை (தி.ப. 2 : 22) நீங்கள் அறிந்து இருக்கிறப்படி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். இன்றும் உயிர்த்த இயேசுவை தவிர வேறு யாராலும் நடத்த முடியாது. சிறையில் கட்டுண்டு காவல் பண்ணப்பட்ட பேதுரு அடிகள், தடைகள் உடைக்கும்படி ஊக்கத்தோடே ஜெபித்தபோது அற்புத விடுதலை கண்டார் (தி.ப. 12 : 6,7,10). இறை உறவில் உறுதியாய் இருப்போர் உன்னத வாழ்வில் இணைந்த வாழ்வை கண்டடைய முடியும்.

## 3. பயன்பெறும் வாழ்வு

முடிவுபரியந்தம் உங்களுடனே இருக்கிறேன் என்றார் இயேசு (மத். 28 : 20). நமக்கு நித்திய மகிழ்ச்சியும் மகிமையின் நம்பிக்கையும் உயிர்த்த இயேசு தருகிறார். யோவா. 20 : 19இல் இயேசு தாம் உயிர்த்தெழ வேண்டிய அவசியத்தைச் சொன்னார். பூட்டிய வீட்டில் பயந்து இருந்தவர்களுக்குப் பரலோக வாழ்வை வாக்களித்தார். யோவான் 11 : 25இல் "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" என்றார். 2 தெசலோனிக்கேயர் 2 : 14இல் நீங்கள் கர்த்தராகிய இயேசுவின் மகிமை அடைவதற்கு இரட்சிப்பின் தேவையை சொன்னார் பவுல். உரோமர்

கடவுளை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிடுகின்றார் எனும் அவல நிலையைக் காணமுடியும். ஆகவே தான் உனக்கு வாழ்வு தந்த கடவுளை மறவாமல் (இ.ச. 8 : 16) என்று நினைவுபடுத்துகிறார். அதோடு இது என்னுடைய உழைப்பின் பலன், எனது முயற்சி என்ற சிந்தனைகள் வந்துவிடக்கூடாது என எச்சரிக்கப்படுகின்றனர். காரணம், எவ்வளவு உழைத்தாலும், உழைப்பதற்கு ஆற்றலருளி, உழைப்பின் பலனை அருளிச் செய்கிறவர் கடவுள் என்பதே உண்மை. இதை பவுலாரும் உணர்ந்து வலியுறுத்துகிறார் (2 கொரி. 9 : 10); 1 கொரி. 3 : 6). அதோடு ஆண்டவர் உழைக்கின்ற மக்களோடுஇருக்கும் போது உழைப்பின் பலன் மிகுதியாயிருக்கும் (யோவா. 21 : 1-11). இஸ்ரயேலருடைய வரலாற்றுப் பற்றுறுதி அறிக்கையிலும் ஒன்றுமில்லாமையிலிருந்து கடவுள் அவர்களுக்கு அளித்த வாழ்வைக் காணமுடியும் (இச. 26 : 1-11). எனவே நேபுகாத்நேச்சருடைய சிந்தனையை போல் அல்ல (தானி. 4 : 30), வாழ்வு தந்த கடவுளை மறவாமல் அவர் அருளை நாடி கருத்தாய் உழைப்போம்.

## 2. உறுதியுடன் உழைப்போம்

ஒவ்வொருவருடைய உழைப்பிற்கும் தகுந்த பலன் உண்டு. எனவே உழைப்பில் உறுதியாய் இருந்து கடினமாய் உழைக்க வேண்டும். மிகுந்த கடினமாய் உழைக்கிறவர்கள் மகிழ்ச்சியாய் அறுப்பார்கள் என திருப்பாடகர் குறிப்பிடுகிறார் (126 : 5). இயேசு கிறிஸ்துவும் "வேலையாள் தன் கூலிக்குத் தகுதியுடையவனாயிருக்கிறான்" என்று கூறுகிறார் (லூக். 10 : 7; மத். 10 : 10). ஆகவே வீணாய்ப் பலனின்றி உழைப்பதல்ல; மாறாக நம்பிக்கையோடு பலனை எதிர்நோக்கி உழைக்க வேண்டும். இணைச்சட்டம் 28 ஆம் அதிகாரத்தில் கடவுளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உழைத்தால் எல்லா வேலைகளிலும் அவர் நிரம்ப ஆசீர்வாதம் அருளுவார் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார். திருப்பாடகரும் ஆண்டவருக்கு அஞ்சி வாழ்ந்தால் உழைப்பின் பலனை உண்டு மகிழும் குடும்பமாகக் காணப்படும் என்று குறிப்பிடுகிறார் (தி.பா. 128 : 1, 2). எனவே நாம் உறுதியுடன் உழைக்கக் கடவுள் ஆற்றல் அருளுவாராக.

## 3. உயர்வுபெற உழைப்போம்

இன்றைய காலச் சூழலில் உழைப்பவர்களைக் குறைத்து மதிப்பிடுவதும் உழைக்காமல் உண்பவர்களை உயர்வானவர்களாகக் கருதுவதும் உண்டு. ஆனால் திருமறை அனைவரும் உழைக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறது. கடவுள், தாம் படைத்த மனுக்குலம் உழைத்து வாழ வேண்டும் என்று கட்டளைப் பிறப்பித்தார் (தொ.நூ. 2 : 15). இயேசு கிறிஸ்துவும், இரவு முழுவதும் உழைத்த சீடர்கள் மீண்டும் உழைக்காமல் உண்ண வழி செய்யாமல் அவர்களை உழைப்பதற்காக அனுப்பி வைத்து உணவை ஆயத்தம் செய்தார்; அதோடு அவர்களது கடின உழைப்பின் பலனையும் சுவைத்து மகிழ்ந்தனர் (யோவா. 21 : 1-11). தேவைக்கேற்றவாழ்வு வாழ அனைவரும் உழைக்க வேண்டும் என்பதைத் திராட்சை தோட்ட உவமை விளக்குகிறது (மத். 20 : 1-9). இவைகளுக்கு மேலாக உழைக்காதவர் உண்ணக்கூடாது என தூய பவுல் கூறுகிறார் (2 தெச. 3 : 10). நமது வாழ்விலும் உயர்வான அனுபவங்களைப் பெற சிறப்பாய் உழைத்து வாழ அழைக்கப்படுகிறோம். இந்த உழைப்பவர் தினத்திலே இம்மட்டும் நமக்கு உழைக்க ஆற்றலருளிய கடவுளை மறவாமல், நம்மையும் நமது உழைப்பின் பலனையும் அவர் கரத்தில் அர்ப்பணிப்போமாயின் தொடர்ந்து நமது வாழ்வு வளம் பெற நாம் சிறப்பாய் உழைக்கத் தமது ஆற்றல் அருளி நம்மை ஆதரிப்பாராக.

**அருள்திரு. பிறைட் சாலமோன்**

**06-05-2012**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு பின்வரும்*
*நான்காம் ஞாயிறு*

# உயிர்த்த ஆண்டவரோடு உறவில் இணைதல்

## In Fellowship with the Risen Lord

| | |
|---|---|
| எசே. 36 : 26–36 | 2 தெச. 2 : 13–3:13 |
| தி.பா 139 : 1–12 | மத். 28 : 16–20 |

"நான் உங்களுக்கு கட்டளை இட்ட யாவையும்... நான் உங்களுடனே இருக்கிறேன்" (மத். 16 : 20)

உயிர்த்த ஆண்டவர் இயேசுவுடன் உறவில் நிலைத்து இருந்து சான்று பகருவது அன்றாட வாழ்வின் அனுபவங்களாக வேண்டும். சீடர்கள் வாழ்வில் ஏற்பட்ட மாபெரும் உயர்வுகளுக்கு அடிப்படை இயேசு உயிர்த்து எழுந்தார் என்பதே. சீடனாகிய தோமா கண்டு கொண்ட பற்றுறுதி, இன்னல்கள், இயலாமைகள் மத்தியில் உயிர்த்தெழுந்த இயேசு தரும் ஆற்றல் அவருக்காகப் பணியாற்றி இயேசுவின் பிரசன்னத்தில் வாழ்ந்து பரலோக வாழ்வு சுதந்தரிக்க நம்மை நடத்தும்.

### 1. பணியாற்றும் வாழ்வு

இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சீடர்களுக்குச் சொல்லுங்கள் என்பது தூதனுடைய அறிவுரை (மத். 28 : 7). உயிர்த்தெழுந்த இயேசுவில் நாம் பெற்ற உறவு இறைப்பணியாற்றும் பணியாளர்களாக அன்றாட வாழ்வின் நிகழ்வுகளிலும் சமூக வாழ்வில் சான்று பகர்வதும் ஆகும் மத். 28 : 19இல் இயேசு தரும் பிரதானக் கட்டளை "சகல ஜாதிகளையும் சீஷர்களாக்குங்கள்" என்பதாகும். உயிர்த்த இயேசு நம்முடன் இருப்பது நமக்குத் துணையும் துணிவும் தருகின்றது. நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரிய கூட்டம் (1 பேதுரு 2 : 9).

நமது தேசத்தில் வங்காளம், தரங்கம்பாடி போன்ற இடங்களில் ஏற்பட்ட இறைப்பணியினால் நம் தேசம் கண்ட திருமறை, திருமறை அறிவு என்றும் போற்றுதற்குரியது. எசேக். 36 : 27இல் உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களை கைக்கொள்ளவும் அவைகளின்படிச் செய்யவும்



**01-05-2012**

*அருணோதயத் தொழுகை*

# உழைக்க ஆற்றல் அருளும் ஆண்டவர்

இச. 8 : 10–18

உங்கள் மூதாதையருடன் ஆணையிட்டுச் செய்துகொண்ட உடன்படிக்கையை உறுதிப்படுத்துமாறு, இந்நாளில் இருப்பது போன்ற செல்வங்களை ஈட்ட வல்ல ஆற்றலை உங்களுக்கு அளித்த, உங்கள் ஆண்டவரை நினைவில் கொள்ளுங்கள். (இ.ச. 8 : 18)

திருமறையில் உழைப்பும், உழைப்பவர்களும் உயர்வானவையாகக் கருதப்பட்டுள்ளனர். கடவுள் தாம் ஒரு சிறந்த உழைப்பாளராய்த் (படைப்பவர்) தம்மை வெளிப்படுத்தினார். இறையடியார்களும் உழைத்து வாழ்ந்தார்கள் என வலியுறுத்துகிறது. உழைப்பவர் தினமாகிய இந்நாளில் உழைப்பாளராகிய நமது கடவுள் உழைக்கின்ற மக்கள் இன்றும் சிறப்பாக உழைக்கத் தம்முடைய ஆற்றலை அருளி செல்வத்தில் உயர்வடைய ஆதரிக்கிறார் என்கின்ற செய்தி மிக மேன்மையானதும், நம்பிக்கைத் தரக்கூடியதுமாகும். காரணம் கடின உழைப்பால் மனதளவிலும், உடலளவிலும் சோர்ந்து போவோர் கொஞ்சமல்ல. ஆனால் இறை ஆற்றலால் ஒவ்வொருவரும் சிறப்பாக உழைத்துத் தங்கள் வாழ்வில் வளம் பெற வழி செய்கிறது. 100 ரூ. கொடுத்தால் 1000 ரூ. கிடைக்கும் என்று மோசடி செய்கின்ற மனிதர்களைப் போல காணிக்கை கொடுப்பதையும் பலர் கணக்கிட்டுச் சொல்லுவது உண்டு. ஆனால் திருமறைகூறும் உண்மைகளைக் கடைபிடித்து உழைத்தால் நாம் சிறப்பாக உழைத்துச் சம்பாதிப்பதற்கு கடவுள் ஆற்றலருளுகிறார் என்று திருமறை கூறுகிறது. அப்படியென்றால் நாம் கடைபிடிக்கவேண்டிய உண்மைகளை இவண் தியானிப்போம்.

### 1. உழைப்பில் இறையருளை நாடுவோம் (இச. 8 : 16, 17)

கடவுள் உழைப்பதற்கு ஆற்றல் அருள வேண்டுமென்றால் மனிதன் செய்ய வேண்டிய முதல்படி, வாழ்வில் கடவுளை மறவாதிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது. அதாவது நான் பெற்றிருக்கின்ற நன்மைகளும், உயர்வுகளும் எனது தனிப்பட்ட முயற்சி அல்ல என்பதை உணர வேண்டும். இன்று மனிதர் பொருளாதாரத்தில் உயர்வுகளைப் பெற்றுக் கொண்டவுடன்

கொள்பவனுமாகிய யோவான் என்னும் நான்; கடவுளின்வாக்கை அறிவித்து, இயேசுவுக்கு சான்று பகர்ந்ததால், பத்மூ தீவுக்கு வரநேர்ந்தது" (திருவெளி. 1 : 9).

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை உதறித்தள்ளி, துன்பத்தைத் தவிர்த்து வாழத்துடித்த தோமாவைக்கண்டு, தனது காயங்களைக் காட்டுகிறார் ஆண்டவர். தீயோரின் துன்புறுத்தலால் வந்த காயங்களைக் கண்டு, உயிருடன் வாழும் இயேசுவை விசுவாசித்து, கி.பி. 49இல் இந்தியாவுக்கு வருகிறார் தோமா.

காந்தாரத்தை (பஞ்சாப்) ஆண்ட மன்னர் குந்தபோரசின் கட்டிட வல்லுநராகச் செயல்பட்டார். அரச குமாரன் காட் என்பவனை உயிருடன் எழுப்பி உலகில் வாழச் செய்கிறார். இதனால் குந்தபோரஸ் வாழும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்! உயிர்த்தெழுந்து வாழும் கிறிஸ்துவுக்கு அங்கேயும் திருச்சபையை உருவாக்குகிறார்.

கி.பி. 52இல் மலபார் கடற்கரையில் கிரங்கனூர் எனும் இடத்தில் வந்து, பாலூர், கிரங்கனூர், பாரூர், கோக்கமங்கலம், காயல், நிரணம், கொல்லம் என்ற எழு திருச்சபைகளை உருவாக்கினார். தமிழ்நாட்டுக்கு வந்து, மைலாப்பூர் எனும் இடத்தில் திருச்சபையை ஸ்தாபித்தார். தனது கைப்பட ஓர் ஆலயத்தையும் கட்டினார். சின்னமலையில் ஒரு குகையில் ஜெபிக்கும்போது, பூசாரிகள் அவரை ஈட்டியால் குத்திவிட்டனர். சிதைக்கப்பட்ட சீடர் தோமா சித்திரவதையுடன் சிரமப்பட்டு இன்று 'சாந்தோம்' என்றழைக்கப்படும், பெரிய மலைக்குச் சென்று, சிலுவையைத் தழுவியவாறே, கி.பி. 72ஆம் ஆண்டு ஜீலை 3ஆம் நாள் உயிர்நீத்தார். அவரது உடல் மைலாப்பூரில் தோமா கட்டிய ஆலயத்தண்டை கல்லறையில் வைக்கப்பட்டது. இன்று மைலாப்பூரில் 'சாந்தோம் கத்தீட்ரல்' என்றப் பெயருடன் பேராலயம் ஒன்று காணப்படுவது உயிர்த்த கிறிஸ்துவும் திருச்சபையும் என்பதற்கு சான்றாகும்.

இன்னவண்ணம், பேதுருவும் கி.பி. 68இல் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார், வாடிகனில் அவரை அடக்கம் செய்த இடத்தில், புனித பேதுரு ஆலயம் கட்டப்பட்டு, மாபெரும் திருச்சபை செயல்பட்டு வருதல் சிறப்பாகும்.

பத்மூ தீவில் யோவான் கண்டத்திருக்காட்சியில் துன்பத்தில் வாழும் திருச்சபைகள் எல்லாம் உயிர்த்த கிறிஸ்துவுக்குள் வாழும் திருச்சபைகளாய், வளரும் திருச்சபைகளாய், வளமுடன் காணப்படுகின்றன. திருச்சபை மக்களாகிய நமக்கு வரும் துன்பங்கள் உலகம் சார்ந்தவை. ஆனால் உன்னதம் சார்ந்த வாழ்வும், வளமும், உயிர்த்த ஆண்டவரால் வரும் என்பதில் உண்மைகள் உள்ளன.



**13-05-2012**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்கு பின்வரும் ஐந்தாம் ஞாயிறு***

# உயிர்த்த ஆண்டவரால் ஆற்றல் பெறுதல்

## Empowered by the Risen Lord

ஏசா. 55 : 6 – 13 பிலி. 3 : 7 – 16
தி.பா. : 27 யோவா. 20 : 19 – 23

**"... உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (யோவா. 20 : 19).**

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நிகழ்வு அக்காலத்தில் பல நிலைகளில் முரண்பாடாக பேசப்பட்டு வந்தது. நாட்டில் பலபுரளிகள் பரவிக் கொண்டிருந்தன. உரோம அரசு பணத்தை கொடுத்தே புரளிகளை பரப்பிவிட்டது. இயேசுவின் உடலை அவரது சீடர்கள் காவலில் நின்ற அதிகாரிகளுக்கு பணம் கொடுத்து களவாடிச் சென்று விட்டனர். இயேசு உயிர்த்தார் எனப் பொய்கூறித் திரிகின்றனர்; இப்படி பேசுபவர்களை அரசுக்குத் தெரிவித்தால் தக்க பரிசு தரப்படும் என அரசு முரசு அடித்தும் செய்தியாக அறிவித்தது. இதுகேட்ட சீடர்கள் பயந்து நடுங்கி, வீடுகளைவிட்டு வெளியே வராமல் முடங்கியே, பூட்டப்பட்ட அறையில் தங்கியிருந்தனர்.

இச்சூழலில்தான் உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களுக்கு காட்சித்தருகிறார். வாழ்க்கையில் நொந்துபோய், சோர்ந்துபோய் பயத்துடனும், ஏமாற்றத்துடனும் இருந்த சீடர்களுக்கு இயேசு காட்சித் தருகின்றார். அதன்பின் சீடர்கள் புத்தெழுச்சியடைந்து, ஆற்றல் பெற்று துணிவுடன் செயல்பட ஆரம்பிக்கின்றனர்.

கடவுளை பெலனாகக் கொண்ட மனிதரின் துணிச்சலை உலகின் சக்திகளால் அசைக்க முடியாது. ஒரு பெரும்படையை ஒரு தனிமனிதராக எதிர்கொள்ள முடியும் என தாவீது அறைகூவினார். எந்த ஆபத்துக்கும் கலங்காத அவரைக் கடவுள் தமது கூடாரத்தில் மறைத்து, கன்மலையின் மேல் உயர்த்துவார் என அவர் நம்பினார். தாவீதின் இறையாற்றல் நிறைந்த வாழ்க்கை அனுபவங்கள் இவற்றை மெய்யென நிரூபித்தும் காட்டியுள்ளன. எடுத்துக்காட்டாக கோலியாத்தையும் பெலிஸ்திய படையையும் தாவீது இறையாற்றலால் வீழ்ச்சியுற செய்த நிகழ்வைக் குறிப்பிடலாம்.

உயிர்த்த ஆண்டவரால் சீடர்கள் அடைந்த அனுபவங்களை திருமறைச் சார்ந்து சிந்திப்போம்.

## 1. ஆறுதல் பெற்றனர் :

“யூதர்களுக்கு அஞ்சி வாழ்ந்தனர்” (யோவா. 20 : 19).

உள்ளத்தில் கலக்கமுற்றச் சீடர்கள் ஆறுதல் இன்றி தவித்தனர். தங்கள் குருவாகிய இயேசுவின் மரணம் அவர்களின் உள்ளத்தை உருகுலையச்செய்தது. அவர்கள் எதிர்பார்ப்புகள் முற்றிலும் தகர்ந்து போனது. அவர்களின் உள்ளத்தை ஓர் அச்ச உணர்வு குடிகொண்டு அவர்களை ஆளுகை செய்தது. எனவே தங்களுக்கு ஆறுதல் தரக்கூடியவர் இனி யார்? என்ற கேள்வியுடன் வாழ்ந்தனர். இச்சமயத்தில் தான் உயிர்த்தெழுந்த இயேசு காட்சிதந்து ‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக’ என வாழ்த்துகிறார். அவர்களின் அமைதியின்மையை கண்டவர் அமைதியையே வழங்குகிறார். சீடர்கள் புதிய ஆற்றல் பெற்றதுடன் உள்ளத்தில் இருந்த அச்ச உணர்வு நீங்கப்பெற்று ஆறுதலடைந்தனர். அச்சம் அகன்று அமைதி உள்ளத்தை நிறைத்தது. இந்த அமைதியும், ஆறுதலும் உலகம் கொடுக்கிறபடி அல்ல வித்தியாசமான ஒன்று என திருமறை கற்பிக்கின்றது (யோவா. 14 : 27). “இதை குறித்து ஏசாயா தீர்க்கன் முன்னுரைக்கும்போது “அவர் சோர்புற்றவனுக்கு வலிமை அளிக்கிறார் வலிமை இழந்தவரிடம் ஊக்கம் பெருக செய்கின்றார்” (ஏசாயா 40 : 29) என்று கூறுகின்றார்.

இயேசுகிறிஸ்து பிறந்தவுடன் உரைக்கப்பட வாழ்த்தொலியில் “உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகும்” (லூக்கா 2 : 14) எனக்கூறப்பட்டுள்ளது. எனவே அமைதியின் உறைவிடமாகவே இயேசு உலகத்திற்கு வந்தார். அமைதி இழந்து இருந்த சீடர்களுக்கு அமைதியைத் தந்து, அமைதி கொண்ட வாழ்வுடன் உலகில் அனுப்பி வைக்கிறார் (யோவா. 20 : 21). சீடர்களுக்கு தரப்பட்டுள்ள சமாதானத்தின் செய்தி இன்றும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது.

வியாதி, வறுமை, ஏழ்மை, தீய எனும் ஆற்றல்களால் மனிதன் பாதிக்கப்படுகின்றான். உலகின் நடப்புகளை எண்ணிப்பார்த்து அச்சத்துடன் வாழ்கின்றான். என்ன செய்வது என அறியாது திகைக்கிறான். இச்சூழலில் நம்மோடு வாழும் உயிர்த்தெழுந்த இறைவன் நம் பயஉணர்வுகளை அகற்றுபவராக நம்மை ஆற்றல்படுத்துகின்றவராக அமைதிப் படுத்துகின்றவராக ஆறுதல் படுத்துகின்றவராக இருக்கிறார் என்பதை உணர்வோம். நாம் வாழும் உலகம் வன்முறை வளர்ந்து வருகின்ற உலகமாகும் இவ்வுலகில் அமைதியை உருவாக்க நாம் ஊடகங்களாக செயல்பட வேண்டும். “அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்” (மத். 5 : 9) என இயேசு மலைப்பொழிவில் எடுத்துரைத்தார்.



பாபிலோனிய மன்னரால் பாலஸ்தீனத்திலிருந்து, சிறைபிடித்து வரப்பட்ட, தானியேலும், அவர்தம் கூட்டாளிகளும், வேற்றினத்து அரசர் பெல்சாட்சரின் அவையில் செயல்பட்டவேளை தானியேல், மன்னனையோ மற்றெந்த தெய்வத்தையோ துதிபாடமல், கர்த்தரின் ஆலயம் அமைந்திட்ட எருசலேமை நோக்கி, தன் மேல் வீட்டுப் பலகணிகளைத்திறந்து தினம் மூன்று வேளை துதி செய்தான்! இக்காட்சிகளைக் கண்டிட்ட மனித துதி பாடிகள், வெகுண்டெழுந்து, மன்னனிடம் முறையிடுகின்றனர் (தானி 6 : 12).

இத்தகைய வாயாடிகளின் தந்திர மந்திரத்தில் மயங்கிய மன்னன், மதிகெட்டுப்போய், சிங்கக் கெபியிலிட்டான் தானியேலை. கடவுள், கடந்து செல்கிறார். பகைகள் நிறைந்த குகையில் பட்சிக்க வந்த சிங்கங்களின் வாயைக் கட்டுகிறார்!

மன்னனையும், மனிதர்களையும் துதிபாடிய, பக்தனை பட்சிக்க நாடி, பரனை துதிக்க மறுத்த பகைவர்கள், அவர்தம் மனைவியர், மக்கள் அத்தனையோரும்தள்ளப்பட்டனர் கெபியில் (தானி. 6 : 24). அவர்கள் குகையின் அடித்தளத்தை அடையுமுன்னரே சிங்கங்கள் அவர்களைக் கவ்விப்பிடித்தன என்பது வரலாறு!

விண்ணகத்திருச்சபையில், உயிர்த்தெழுந்த ஆண்டவரை (தானி. 4 : 11) துதித்து பாடுகின்றார். “எங்கள் ஆண்டவரே, எங்கள் கடவுளே, மாட்சியும் மாண்பும், வல்லமையும்பெற நீர் தகுதி பெற்றவர். ஏனெனில் . . . அனைத்தையும் படைத்தவர் நீரே; உமது திருவுளப்படியே, அவை உண்டாயின படைக்கப்பட்டன” - எனப்பாடினர். துதித்தனர் நன்று!

## 2. துன்பத்தில் வாழும் திருச்சபை

“நீ மனவுறுதி கொண்டுள்ளாய்; என் பெயரின் பொருட்டு, எத்தனையோ துன்பங்களை நீ தாங்கிக் கொண்டுள்ளாய் ஆயினும் சோர்வு அடையவில்லை என்பது எனக்குத் தெரியும்” (தி.வெ. 2 : 3).

துன்பம் கண்டு, துவண்டு போகாமல் துடிப்புடன் வாழும் திருச்சபையாக கடவுள் எபேசுத் திருச்சபையைக் காண்கிறார்.

இன்றைய திருச்சபைகளில் பாடுகளைக் கண்டு பயந்து, பாரச்சிலுவையை ஏற்காமல் எறிந்துவிட்டு பரமனைப்பின் தொடர்கிறேன் எனக்கூறி பலரும், பஞ்சணைகளைப் பற்றிக் கொண்டு, பஞ்சம், பசி, பட்டினி, பணப்பற்றாக்குறைகள் பட்டிடுவோரைப் பாவிகளின் பட்டியலில் போட்டுக்கொண்டு, “நாங்கள் தான் பரத்தை நோக்கிப் பயணிக்கும், பக்தர்கள் கூட்டமெனக் கூறி பத்மூ தீவைப் புறக்கணிக்கப் பார்க்கின்றனர். இத்தகையோர், பாடுகளைக் கண்டு, பரமனையும் விட்டுப் புறமுதுகிட்டு ஓடித்திரிகின்றனர்”!

“உங்கள் சகோதரனும், இயேசுவோடு இணைந்த நிலையில், உங்கள் வேதனையிலும், ஆட்சியுரிமையிலும் மனவுறுதியிலும் பங்கு

இவ்வனுபவத்தை தடைபண்ண இயலாது (1 தெச. 5 : 16; 2 கொரி. 13 : 11; பிலி. 3 : 1).

**மன்றாட்டு :** *மாட்சிமையின் கடவுளே, பாவமான உலகின் மத்தியில் உம்முடைய திருச்சபையை, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் வரும் வல்லமையினால் நிரப்புவீராக. அது கிறிஸ்துவுடன் புது வாழ்வுக்கென்று உயிருற்றெழும் ஒரு புதிய மானுடத்தின் துவக்கமாக அமையட்டும். உம்மோடும் தூயாவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே ஆமென்.*

**அருள்திரு. A. இயேசுதாஸ்**

**17-05-2012**

***விண்ணேற்றத் திருநாள்***

## கிறிஸ்து அனைவருக்கும் ஆண்டவர்

**CHRIST - LORD OF ALL**

| | |
|---|---|
| தொ.நூ. 5 : 21–24 | தி.பா. 110 |
| தி.ப. 1 : 1–11 | லூக். 24 : 50–53 |



**20-05-2012**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்கு பின்வரும் ஆறாம் ஞாயிறு***

## உயிர்த்த கிறிஸ்துவும் அவரின் திருச்சபையும்

**Risen Christ with His Church**

| | |
|---|---|
| ஏசா. 65 : 17 – 66 : 2 | தி.வெ. 1 : 9–20 |
| தி.பா. 100 | யோவா. 3 : 31–36 |

"அஞ்சாதே முதலும் முடிவும் நானே! . . . . வாழ்பவரும் நானே!"

(திரு. வெளி. 1 : 17, 18)

உயிர்த்தெழுந்த ஆண்டவர், உலகில் உலவுகின்றார்; உறவாடுகின்றார்; உரையாடுகின்றார். உடனிருந்த சீடர்களில், அன்புச் சீடர் யோவான். கி.பி. 90-95-க்கு இடைப்பட்டக் காலத்தில், துன்புறும் நிலையில், டொமீஷியன் எனும் உரோமப் பேரரசரால், ஆசியாமைனர் கடல்துறையின் அண்டையில், எரிமலைகள் நிறைந்த, பத்மு தீவுக்கு நாடு கடத்தப்படுகிறார். அங்கிருந்து, தூயாவியர் திருச்சபைகளுக்குச் சொன்ன சொல்லோவியங்களை, எழுத்தோவியமாய் வடிவமைக்கிறார்!

இந்நூல், எழுதப்பட்ட காலகட்டம் தீயோனின் அந்தகார ஆளுகையின் போராட்டகாலம் எனலாம்!. உலகிற்கு வெளிச்சம் கொடுக்க தீபங்களாய் செயல்பட்ட, விசுவாசிகளை தீப்பந்தங்களாய் எரித்துச் சிரித்தான் நீரோ!. இத்தீஞ்செயல்கள் கி.பி. 64-70இல் நிகழ்ந்திருக்கின்றன! இவை தொடர்ந்து வந்த டொமீஷயன் தன்னை "ஆண்டவன்" - என அறிக்கையிட மறுத்த மெய்க்கிறிஸ்தவர்களை அகற்றிடத் துடித்த அவலக்காலம் அது!

இக்கால உலகிலும், அதிகாரங்களும், ஆட்சிகளும், சூட்சிகளும் கொண்டவர்கள், தங்களை "ஆண்டவர்" - என அழைக்கப்படத் துடிக்கும் சூழலில், காக்காய் பிடிப்பவர்கள், கால் பிடிப்பவர்கள் எல்லாம் திருச்சபையின் தலைவரும், உயிர்த்தெழுந்த ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்துவை பணிபவர்களாகவோ அவருக்கு பணியாற்றுவோராகவோ செயல்பட முடியாது!

துன்பங்கள் கண்டு துவண்டு போகாமல் துடிப்புடன், திருப்பரன் இயேசுவுக்கு சான்றுகளாய் செயல்படுவோர் மட்டுமே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு, திருச்சபையில் உறுதியுடன் நின்றிட இயலும் எனக் காணுதல் தகும்.

## 1. துதித்து வாழும் திருச்சபை!

"தூயவர், தூயவர் தூயவர் எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் . . . என அல்லும் பகலும் இடையறாது பாடிக் கொண்டிருந்தனர்!" (தி.வெ. 4 : 8)

மண்ணில் துதித்துப் போற்றப்படும் ஆண்டவர் விண்ணிலும் துதிக்கப்படுகிறார்! விண்ணக அரியணையில், அமர்ந்திருக்கும் ஆண்டவரை சூழ நின்ற விண்ணகத் திருச்சபையோர் 24 மூப்பர் குழாம் துதித்துப் பாடிப்போற்றும் திருக்காட்சிகளைக் காண்கிறார் யோவான்! "அரியணையில், வீற்றிருப்பவரை . . . என்றென்றும் வாழ்பவரை, அவை போற்றிப் புகழ்ந்து அவருக்கு நன்றி செலுத்தின" (தி.வெ. 4 : 9)

"இருபத்து நான்கு மூப்பர்கள் அரியணையில் வீற்றிருந்தவர்முன் விழுந்து, என்றென்றும் வாழ்கின்ற அவரை வணங்கினார்கள்" (தி.வெ. 4:10).

"எங்கள் ஆண்டவரே, எங்கள் கடவுளே . . . மாட்சியும், மாண்பும், வல்லமையும் பெற நீர் தகுதி பெற்றவர், எனத்துதித்துப் பாடிப் போற்றி புகழ்கின்றனர்." (தி.வெ. 4 : 11).

விண்ணகத்தில் . . . தூய தூதர்களின் சபையில் மட்டுமின்றி, மண்ணகத்திலும் திருச்சபைகளில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் துதித்தலுக்குரியவர்! அன்றும். . . இன்றும் . . . என்றும், என்றென்றும் அகில உலகம் மட்டுமென்ன? அண்ட சராசரங்களும், உயிர்த்தெழுந்த ஆண்டவரைப் போற்றித் துதித்திடும் தன்மை சிறப்பிற்குரியது.

தஞ்சை சரபோகி மன்னரின் அரண்மனையில், அரச அவைப் புலவர்கள் பலரும், மன்னர்களையும், மற்றுக் கடவுளர்கள் என்போரையும் பாடிப் பரிசில்கள் பெற்றிட்டனர்! இத்தகையத் தகாத செயலைக் கண்டிட்ட வேதநாயக சாஸ்திரியார் கீர். 22இல்

இயேசுவையே துதிசெய்: நீ மனமே,

இயேசுவையே துதிசெய்

- எனப்பாடுகிறார்.

இயேசுவானவர் மட்டும்தான் துதிக்குப் பாத்திரர் எனக்குறிப்பிடுவது வியத்தகு செயலாகும்!

இன்றைய திருச்சபைகளில் காணப்படும் அவலம் யாதெனில், கடவுளுக்குத் துதி பாடிடாமல், மனிதர்களைச் சார்ந்து, மனிதர்களுக்குத் துதிபாடியும் மனிதர்களின் கால்பிடித்து மிகவும் கீழ்த்தரமாய் செயலாற்றி, பதவிகள், உதவிகள், பணம் காசுக்காய் . . . எனப்பல கூறலாம் இப்படி பரமனை விட்டுத் தூரம் போகும் நிர் பாக்கியவான்களைக் கண்டிடலாம்! இச்செயல்கள் கடவுளின் இறையரசில் கண்டிக்கத்தக்கது!



## 2. ஆனந்தம் பெற்றனர் :

"இவ்வாறு சொல்லியபின் ... மகிழ்ச்சிகொண்டார்கள்" (யோவா. 20 : 20 ).

உயிர்த்த இயேசுவை கண்டதும் புதிய ஆற்றல் பெறுகின்றனர். அத்துடன் மகிழ்ச்சியடைகின்றனர். அதுவரை இருந்த துக்கம் மாறியது. மகிழ்ச்சி உள்ளில் குடிகொண்டது. அதனை அவர்கள் பேரானந்தமாகக் கொண்டாடினர். இதைத்தான் யோவான் 16 : 22இல் இப்போது நீங்களும் துயருறுவீர்கள் ஆனால் நான் உங்களை மீண்டும் காணும்போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சியடையும் எனவும் 16 : 20இல் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் எனவும் யோவான் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த அனுபவத்தைக் குறித்து ஏசாயா முன்னுரைக்கும் போது ஆண்டவரால் விடுவிக்கப்பட்டோர் திரும்பி வருவர். மகிழ்ந்து பாடிக்கொண்டே சீயோனுக்கு வருவர். அவர்கள் முகம் என்றுமுள்ள மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும். அவர்கள் மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைவார்கள் துன்பமும் துயரமும் பறந்தோடும் (ஏசா. 35 : 10) என்று உரைக்கிறார்.

ஏசாயா தேவாலயத்தில் இறைகாட்சியைப்பெற்று தன்னை இறைப்பணிக்காக அர்ப்பணம் செய்ததுடன் (ஏசா. 6 : 8) இஸ்ரயேல் மக்கள் மத்தியில் ஒரு சிறந்த தீர்க்கனாகவும் திகழ்ந்தார். சீடர்கள் இறைகாட்சியை பெற்று மகிழ்ச்சியடைந்ததுடன் ஆண்டவருக்கு சிறந்த சாட்சிகளாக வாழ்ந்தனர்.

இறைவனின் திருக்காட்சி ஆற்றல் தருவதுடன் புதுவாழ்வுக்கு நேராக நம்மை அர்ப்பணிக்கத் தூண்டுகிறது. கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை பிரிக்காமல் நம்மை பாதுகாக்கிறது. நம்மை இழக்க கொடுத்து பிறர் வாழ்வுபெற ஊக்கமளிக்கிறது. அதில்தான் ஆனந்த வாழ்வு நிலைகொள்கிறது.

கிறிஸ்துவின் காட்சியைப் பெற்றுக்கொண்ட தூயபவுல் தனக்கு உண்டான செல்வம், பெருமை, அந்தஸ்து என எல்லாம் உதறிதள்ளிவிட்டு இனி "வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார்" (கலா. 2 : 20) எனவும் "கிறிஸ்துவின் பொருட்டு மற்றெல்லாவற்யையும் இழப்பாக கருதுகிறேன்" எனவும் கூறி தம் வாழ்க்கையை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்து செயல்பட்டார். இதனால் கிறிஸ்துவுக்குள் ஆற்றல் அடைந்து ஆனந்தம் கொண்டார்.

ஆண்டவருக்குள் எப்போதும் விசுவாசி சந்தோஷப்பட அழைக்கப்படுகிறான். இது கடவுளின் ஈவானதால் சூழ்நிலை

**03-06-2012**

***பெந்தேகோஸ்தே திருநாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிறு***

# மூவொரு கடவுளை வழிபடுதல்

## WORSHIP THE TRIUNE GOD

| | |
|---|---|
| ஏசா. 6 : 1 – 8 | உரோ 11 : 33 – 36 |
| தி.பா. : 97 | மத் 11 : 22 – 27 |

"கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது அவருடைய ஞானமும், அறிவும் எத்துணை ஆழமானவை" (ரோமர் 11 : 33).

எளிதில் புரிந்து கொள்ளமுடியாத ஆனால் வழிபாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிற கிறிஸ்தவ மறை பொருள் "மூவொரு கடவுள்" "மின்சாரம்" என்பது ஒரே சக்தி தான். ஆனால் அது விளக்கை எரிய வைக்கிறது. மோட்டாரை இயக்குகிறது. வண்டியை ஓட வைக்கிறது. இவ்வாறு சக்தி ஒன்று, இயக்கங்கள் பல. "மூன்றில் ஒன்று" என்பது இயேசுவில் வாழ்வில் வெளிப்படுகிறது. இறைமகன் இயேசு தமது வாழ்வில் தாம் தந்தையிடமிருந்து வந்ததாகவும், தந்தையுடம் திரும்பிச் செல்வதாகவும், தூய ஆவியை அளிப்பதாகவும் கூறியுள்ளார் (யோவான் 14 : 16-17, மத். 11 : 27). திருமறை முழுமையிலும் மூவொரும் கடவுளின் வெளிப்பாட்டை நாம் தெளிவாகப் புரிய முடியும். தொடக்கநூல் 1 : 1இல் கடவுள் (தேவன்) என்ற வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. இது எபிரேய மொழியில் "எலோகிம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த "எலோகிம்" என்ற வார்த்தை ஓர் பன்மை. அதாவது இரண்டுக்கும் மேற்பட்ட நபரை குறிக்கிறது. எனவேதான் பிற்பகுதியில் மனிதரைப் படைக்கும் போதும், ஏனைய திருமறைப் பகுதிகளிலும் நமது சாயலாக படைப்போம் (தொ.நூ. 1 : 26), நம்மைப்போல் (தொ.நூ. 3 : 22), யார் நமது காரியமாய் போவான்? (ஏசா. 6 : 8) என்று பன்மையில் குறிப்பிடப்படுகின்றன. மும்மை (திரித்துவம்) என்பது ஒரு மறையுண்மை. இது நம் விசுவாச வாழ்வுக்கு வளமை சேர்க்கிறது. திரித்துவத்துக்குள்ளே அடைந்து நிற்கிற மூன்று முழுமைகள் எவை என இவண் காண்போம்.

### 1. தந்தையின் அருள் செல்வம்

"... கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது!" (உரோ 11:33)

கடவுளின் ஐசுவரியம் (அருள் செல்வம்) என்பது அவர் தம்மை வழங்குவதிலே (கொடுப்பதிலே) விளங்குகிறது. தந்தையின் தனிப்பண்பாகிய அன்பு இதில் வெளிப்படுகிறது. 1 யோவான் 4 : 16-இல்



### 3. தூய ஆவியரில் வாழும் திருச்சபை

"ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, தூய ஆவி என்னை ஆட்கொள்ளவே எனக்குப் பின்னால் பெரும் குரல் ஒன்று எக்காளம் போல முழங்கக் கேட்டேன். நீ காண்பதை ஒரு சுருளேட்டில் எழுதி எபேசு, சிமிர்னா, பெர்காம், தியத்திரா சர்தை, பிலதெல்பியா, இலவோதிக்கேயா ஆகிய ஏழு இடங்களிலும் உள்ள திருச்சபைகளுக்கு அதை அனுப்பிவை" (தி.வெ. 1 : 10, 11)

இவ்வாக்கை பாடலாய் வடிவமைத்தால் நம் மனக்கண்களைவிட்டு மாறிடாது.

**பாடல் கும்மி (ஏழு திருச்சபைகள்)**

"எபேசு, சிமிர்னா, பெர்காம், தியத்திரா,
சர்தை, பிலதெல்பியாவுடனே,
இலவோதிக்கேயா . . . ஒன்றிடும் சபைகள்
ஏழுக்கும் எழுதி அனுப்பிடுவாய்"

இந்த ஏழு திருச்சபைகளும், தோமா அமைத்த ஏழு திருச்சபைகள் போல வாழும் திருச்சபைகளாக செயல்பட்டிட வேண்டும் என்பது, உயிர்த்த கிறிஸ்துவின் திருவுளம் என்பதே உண்மை.

பெந்தக்கோஸ்து நாளில் பேதுருவின் அருளுரையில் "இறுதி நாட்களில் நான் மாந்தர்யாவர் மேலும், என் ஆவியைப் பொழிந் தருள்வேன் உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர். உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும், உங்கள் முதியோர், கனவுகளையும் காண்பர். அந்நாட்களில், உங்கள் பணியாளர் பணிப்பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந் தருள்வேன், அவர்களும் இறைவாக்கு உரைப்பர் (திருத்தூதர் பணிகள் 2 : 17-18) என்றுரைக்கிறார்.

இன்றையத் திருச்சபைகளில், சிறுவர் தொடங்கி, முதியோர் வரை, இறைப்பணியர்கள், மூப்பர்கள் எல்லாரும் தூய ஆவியரைப்பெற்றுக் கொண்டு, தூயாவியரின் பெலத்தால் ஆவிக்குரியக் காரியங்களைப் புரிந்திடல் வேண்டும். பவுலாரின் வாக்குப்படி ஆவியின் கனி ஒன்பதும் பெற்று பாவிக்குரிய கிரியைகளைத் தவிர்த்திடல் வேண்டும். வன்முறை தீவிரவாதம், அகற்றி இச்சையடக்கமுடன் செயல்படல் வேண்டும்.

இயேசு திருமுழுக்கேற்றவுடன் தூயாவியர் புறா இறங்குவதுபோல வந்திறங்கிய காட்சியும் விண்ணிருந்து வந்த சாட்சியும் மாட்சியானதே. என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் என கடவுள் உரைக்கிறார் (மத். 3 : 16, 17) சமாதானப் புறாக்களாய், சாந்தம் நிறைந்தவர்களாய், அமைதித் தோற்றமுடன் இறைமக்கள் செயல்பட்டால் தூயாவியரில் வாழும் திருச்சபைகளாய் விளங்கும்.

நாசரேத்தார் தொழுகைக் கூடம் சென்ற இயேசுவானவர்; ஓய்வுநாளில் இறைவாக்கினர் ஏசாயாவின் சுருளேட்டில் இடம்பெற்றதை படித்தியம்பியமை சிறப்பிற்குரியது.

"ஆண்டவரின் ஆவி என்மேல் உளது; அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்; ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர்விடுதலை அடைவர், பார்வையற்றோர், பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக். 4 : 18-19) என்றிடும் பதங்கள் இக்காலத்திருச்சபைகளுக்கும், உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆவியரால் நற்செய்தியுடன் நற்செயல்களும் இடம் பெற்றிடல் வேண்டும் எனக் காட்டுகிறார்.

மரியான் உபதேசிகர், கீர். 404இல் குறிப்பிடும் வண்ணம் உயிர்த்த கிறிஸ்துவானவரால் வாழும் திருச்சபைகள் வளரும் திருச்சபைகள், வளம் காணும் திருச்சபைகள் அனைத்தும் விண்ணகத்தாரைப் போலவே மண்ணகத்தாரும் கடவுளில் கூடி, பாடி புகழ்ந்து, மகிழ்ந்து வாழ்ந்திடல் வேண்டும்.

"சத்தியதரசர்களும், உத்தியோகத்துரைகளும்,
சங்கத்தோர்களுங் கிருபை தங்கி வாழ்வே,
எத்திசை மனிதர்களும், பக்தர் விசுவாசிகளும்,
ஏக மிகுஞ்சமாதானமாக வாழவே,
உத்தமப் போதகர்களும், சத்தியத் திருச்சபைகளும்
உயர்ந்து - வாழ தீயோன்
பயந்து - தாழ, மிக
நயந்து கிறிஸ்துவுக்கு ஜெயந்தான், நயந்தான் என்றும்" - சுந்தர

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, நீர் இயேசு கிறிஸ்துவை உயர்த்தி, அனைத்திற்கும் ஆண்டவராய் ஏற்படுத்தினீர். பூமியிலுள்ள அவருடைய திருச்சபையில் அவரின் இருப்பின் வாக்குறுதியை திடமாய் புரிந்து கொள்ளவும், பூமியின் கடைசி பரியந்தமும் அவரின் உடனிருப்பில் மகிழ்ந்து களிகூரவும் எங்களுக்கு பற்றுறுதி தாரும். உம்மோடும் தூயாவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் அதே கிறிஸ்து வழியே. ஆமென்.*

**அருள்திரு. D.S. செல்வராஜ்**



ஒப்புமையாக சொல்லப்பட்டுள்ளது. பாபிலோனில் இஸ்ரயேல் மக்கள் சந்தித்த துன்பம் கரைபுரண்டு ஓடும் ஆறுகள் ஏற்படுத்தும் அழிவிற்கு ஒப்புமையாக உள்ளது. ஆனால் இந்த அழிவுகளின் நடுவில் அழிவில்லா ஆண்டவர் தம் மக்களை பாதுகாத்து அமைதியின் வாழ்விற்குள் அழைத்து வருவார். சோதனையை மனவுறுதியோடு தாங்குபவர் பேறு பெற்றோர், கடவுள் தம்மீது அன்பு கொள்வோருக்கு வெற்றி வாகையினைத் தருகிறார் (யாக். 1 : 12) என்பதற்கேற்ப நாம் வாழ்வில் சந்திக்கும் துன்பங்களிலிருந்து விடுதலை பெறக்கூடிய மன வலிமையைத் தந்து வழிநடத்துவார்.

**3. அன்பில் நிலைக்கச் செய்கிறார் :** (ஏசா. 43 : 4)

அச்சத்தோடு அமைதி இழந்து வாழ்ந்த இஸ்ரயேலரை ஆண்டவர் வெறுத்து விடாது விலையேறப் பெற்றவர், மதிப்பு பெற்றவர் என அழைத்து அவர்களில் அன்பு கூருகிறேன் என வாக்குரைக்கிறார். கடவுள் அன்பிற்கு உறைவிடம், அன்புடையவர், எல்லோரிடத்திலும் அன்பு கூறுவார் என்பது உண்மை. பாபிலோனில் இறையன்பிலிருந்து விலகி பாகால் வழிபாட்டிற்குள்ளாக வாழ்ந்த தம் மக்களை கைவிடாது அன்பு செலுத்துகிறார் (ஏசாயா 43 : 4). அதோடு அவர்தம் அன்பினை பிரதிபலித்திட ஒருவரிலொருவர் அன்பு செலுத்தி வாழ கற்றுக் கொடுக்கிறார்.

இன்று அன்பில்லா மனிதர்களாய் உடன் மாந்தரை சத்துருக்களாய் காணும் உலக வாழ்வில் சகோதர அன்பில் நிலைத்திருந்து இறை ஆசிகளை பெற்றுக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். உன்னைப்போல பிறரையும் நேசி என்றுரைத்த ஆண்டவர் இயேசுகிறிஸ்து அன்பிற்கு அடைக்கலமாய் இருக்கிறார். மனுக்குலம் மீது கொண்ட அன்பிற்கு அடையாளமாய் தன்னையே பலியாக்கினார். இம்மாதத்தில் இயேசுவில் வெளிப்பட்ட இறையன்பில் நிலைத்திருந்து இறைப் பாதுகாப்பைப் பெற்று மகிழ்வோடு வாழ்வோம்.

**திரு. ரமேஷ் டி. தாஸ்**

## 1. எங்கும் நிறைந்த ஆவியர் : Holy Spirit is Universal

“ஆவியரின் தன்மையை லூக்கா, தி.ப. 1:8இல் கோடிட்டுக் காட்டுகிறார். “தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்” (தி.ப. 1 : 8). இங்கு தூய ஆவியானவர் எங்கும் நிறைந்தவராக எல்லோரையும் பலப்படுத்துகிறவராக உலகத்தின் கடைமுனை மட்டும் இருக்கின்ற எளியவர்களையும் பலவீனர்களையும் ஆற்றல் படுத்துகிறவராக இருக்கிறார். “இக்கொட்டிலைச்சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவி சாயக்கும். அப்போது ஒரே மந்தையும், ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்” (யோவா. 10 : 16).

## 2. வேற்றுமையில் ஒற்றுமைக் காணச் செய்பவர் : Holy Spirit’s role is to see unity not uniformity

பெந்தேக்கோஸ்து அனுபவம் ஐக்கியத்தின் எடுத்துக்காட்டு. (தி.ப. 2). பாபேல் கோபுர அனுபவம் (தொ.நூ. 11) ஐக்கியமும் கீழ்படிதலும் இல்லாத நிலை. சுய பெருமையினால் கோபுரம் கட்டும் நிகழ்ச்சி வெற்றி பெறவில்லை. ஆனால் பெந்தேக்கோஸ்து அனுபவம் வெவ்வேறு நாவுகள் இருந்தும் ஐக்கியமாய் செயல்படத் தூண்டியது. அவர்கள் எல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். பல மொழிகளில் பேசிய அவர்களுடைய செய்திகள் எல்லாராலும் புரியப்பட்டது (தி.ப. 2:1). தென்னிந்திய திருச்சபை வேற்றுமையில் ஒற்றுமையை வெளிப்படுத்தும் திருச்சபை. ஆங்கிலிக்கன், மெதடிஸ்ட், பிரஸ்பிட்டேரியன், காங்கிரிகேஷன் திருச்சபைகள் ஒன்று சேர்ந்து 1947 செப். 27இல் உருவானது தான் தென்னிந்தியத் திருச்சபை. இது 20 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற மிகப்பெரிய அற்புதமாகும். ஆனால் இன்றைய கேள்வி 1947க்குப் பின்னர் ஏன் மிகப் பெரிய அற்புதங்கள் திருச்சபையில் நடைபெறவில்லை என்பதே. இதற்கு முக்கிய காரணம் நமது பெலவீனங்களே. M. Koo என்ற தாய்வான் நாட்டு விசுவாச வீரர் ‘you and me’ என்ற கட்டுரையில் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு தகுந்த எடுத்துக்காட்டு தருகிறார்.

“நீ சூரியனின் உதயம் கடலிலிருந்து வருகிறது என்கிறாய். மலைநாட்டில் வாழ்கிறவனாகிய நான் சூரிய உதயம் மலையிலிருந்து வருகிறது என்கிறேன். இருவரும் பலமணி நேரம் வாதாடினோம். கடைசியில் நான் உன்னிடத்தில் வந்து பார்த்தபோதும் நீ என்னிடத்தில் வந்து பார்த்தபோதும் இரண்டும் சரியே.”

நீ இது கோடை காலம் என்கிறாய். நான் இது குளிர்காலம் என்கிறேன். இரண்டு பேரும் வாதாடினோம். கடைசியில் நீ என் நாட்டிற்கு வந்தபோது, நான் உன்னிடத்திற்கு வந்தபோது இருவர் சொன்னதும் சரி என்கிறார். இதே போல் பல உண்மைகளை தருகிறார். இவ்வாறு தூய ஆவியர் வேற்றுமையில் வேற்றுமையில் ஒற்றுமை காண உதவுகிறார்.



## 3. கட்டளையிடும் ஆவியர் : Holy Spirit Commands

தி.ப. 15இல் ஆதி விசுவாசிகளில் ஏற்பட்ட சிக்கல்களை தீர்ப்பதற்கு எருசலேம் மாமன்றம் கூடினது. இந்த மாமன்றத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு சரீர விருத்தசேதனம் தேவை என்றும் இருதய விருத்தசேதனம் மட்டுமே தேவை என்றும் வாதாடப்பட்டது. ஆனால் நிறைவில் யூதர்கள் மட்டுமல்ல, புற இனத்து மக்களும் திருச்சபையில் சேர்க்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக்கொள்வது போதுமென தூய ஆவியர் வெளிப்படுத்துகிறார். இந்த உண்மையோடு பவுல் இரண்டாம் ஊழியப் பயணத்தை வெற்றிகரமாக தொடங்கினார். ஐரோப்பாவிற்கு செல்ல வேண்டும் என்று இருந்தவர் ஆவியானவராலே தடுத்து நிறுத்தப்பட்டு சின்ன ஆசியாவுக்கு பயணத்தை தொடங்குகிறார். எருசலேமில் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு எருசலேம் மாமன்றம் உதவியாக இருந்தது. வெளிச்சடங்காச்சாரமல்ல உள்ளான மாறுதல் அவசியம் என்ற உறுதிப்பாட்டோடு பவுலின் இரண்டாம் ஊழியப் பயணம் வெற்றி தந்தது. செயல்பாடுகள் சவால்களின் மத்தியிலும் சாட்சியாய் அமைந்தது. இந்த செயல்பாடுகளுக்கு கட்டளையிடும் ஆவியானவருக்கு பவுல் கீழ்படிந்ததாலே தான் முடிந்தது. ஒரு கட்டத்தில் தடுத்து நிறுத்தும் ஆவியர் மறு கட்டத்தில் கடந்து வர அழைக்கிறார் (தி.ப. 16:7).

மனித விருப்பத்துக்கு முக்கியம் கொடுப்பதை விட்டு இறை சித்தத்துக்கு நாம் ஒப்புக்கொடுக்கும்போது தூய ஆவியர் நம்மை பெலப்படுத்தி, ஐக்கியப்படுத்தி வழிநடத்துவார். அதற்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக.

**மன்றாட்டு :** *கடவுளே உம்முடைய ஆவியானவர் உம்முடைய மக்களாகிய எங்களை உம் பிள்ளைகளாய் மாற்ற எங்களிடத்தில் வந்திருக்கிறார். விண்ணகத்தின் அனுபவத்தை இப்பூமியில் எங்களுக்கு தந்தருளுவீராக ! நாங்கள் அவரில் ஒன்றாய் இணைக்கப்பட்டவர்களாய் அவருடைய வல்லமையில் வாழ்ந்து அனைத்து மக்களுக்கும் உம்முடைய சாட்சிகளாய்த் திகழ எங்களுக்கு உதவி செய்தருளும். உம்மோடும் அதே தூயாவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

அருள்திரு. டாக்டர் **P.J. ஜெயசீலன்**

**01-06-2012**

*அருணோதயத் தொழுகை*

# பாதுகாக்கும் பரமன்

ஏசா. 43 : 1–7

"நான் உன்னோடு இருப்பேன்" (ஏசா. 43 : 2).

இஸ்ரயேலர் பாபிலோன் சிறையிருப்பில் வாழ்ந்த நாட்களில் கொடுமைகள் பலவற்றை அனுபவித்தனர். கடவுள் தங்களோடு இல்லை, இருந்தால் இத்தகைய வேதனைகளை சந்திக்க வேண்டிய தேவை இல்லை எனவும் நம்பினர். சிறையிருப்பின் அனுபவம் பாதுகாப்பற்ற பயம் நிறைந்த வாழ்வின் அனுபவமாய் இருந்தது. இச்சூழலில் கடவுள் பாதுகாக்கின்றவர், விடுதலை தருகின்றவர் என்ற செய்தி ஏசாயா இறைவாக்கினர் வழியாய் உரைக்கப்பட்டது. இவ்இறைவாக்கில் கடவுள் சிறையிருப்பிலிருக்கும் தம் மக்களோடு இருந்து அவர்களை விடுவித்து எருசலேமுக்கு திரும்ப கொண்டு வருவார் என்ற நம்பிக்கையை இன்றைய தியான வசனம் உணர்த்துகிறது. புதிய மாதத்தின் ஆரம்ப நாளில் பல்வேறு விதமான எதிர்பார்ப்புகளோடு அமர்ந்திருக்கும் நமது வாழ்விலும் பாதுகாக்கும் பரமனின் செயல்பாடுகள் நிறைவேறும். பாதுகாக்கின்ற கடவுளின் செயல்பாட்டினால் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் என்ன?

### 1. அச்சம் அகற்றுகிறார் : (ஏசாயா 43 : 1, 5)

கடவுள் தங்களோடு இருந்திருந்தால் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் தங்களுடைய பயம் நீங்கி வாழமுடியும் என்ற நிலையிலிருந்த மக்களுக்கு அச்சம் அகற்றுகின்ற செய்தியாக இவ்வசனம் உள்ளது. அச்சம் மனித வாழ்வில் உறுதியில்லாத மன நிலையை ஏற்படுத்துகிறது. வாழ்வில் அமைதியோடு வாழ அச்சம் இல்லாதிருக்க வேண்டும். கடவுள் அச்சமகற்றி அமைதி ஏற்படுத்துகிறவராய் இருக்கிறார். அஞ்சாதிருங்கள் என்பது ஆண்டவர் அருளும் அமைதியின் செய்தி (லூக். 1 : 10, 1 : 30, 24 : 37 - 38). இம்மாதத்தில் கடவுள் நமது அச்சம் அகற்றி அமைதியோடு வாழ அருள் செய்வார்.

### 2. ஆறுகளை கடக்கச் செய்கிறார் : (ஏசா. 43 : 2)

ஆறுகள் வாழ்வில் ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருந்தாலும் கரைபுரண்டோடும் ஆறுகளினால் அழிவு ஏற்படும் என்பது உண்மை. இப்பகுதியில் ஆறுகள் மனித வாழ்வில் வரும் துன்பங்களுக்கு



**27-05-2012**

*பெந்தேகோஸ்தேத் திருநாள்* *DMPB ஞாயிறு*

# வாரும் தூய ஆவியரே உம் மக்களை ஒன்றாக்கும்

## COME HOLY SPIRIT, UNITE US YOUR PEOPLE

ஏசா. 61:1–11 தி.ப. 2:1–13
தி.பா. 107:31–43 யோவா. 16:5–15

"உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (யோவா 16 : 13)

சிட்டுக்குருவி ஒன்று மரத்தின் உச்சியில் முட்டையிட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. இதனை உணர்ந்து கொண்ட கட்டுவிரியன் பாம்பு அந்த முட்டைகளைச் சாப்பிடுவதற்காக மரத்தின் மீது ஏறி வந்துகொண்டிருந்தது. இதைக் கண்ணுற்ற பல சிட்டுக்குருவிகள் மிக அதிகமாக கத்தின. ஆனால் அவைகளில் ஒன்று விரைவிலே தரைக்கு வந்து பாம்பு விரட்டிப் பச்சிலை ஒன்றைக் குருவிக் கூட்டின் முகத்துவாரத்திலே கொண்டு வைத்துவிட்டு சற்று அப்பால் அமைதலாக இருந்து விட்டது. எல்லாக் குருவிகளும் அமைதலாகிவிட்டன. மேலே இருந்த பாம்பு குருவிக் கூட்டின் அருகாமையிலே வந்து இலையின் வாசனைப் பிடிக்காமல் அப்படியே கீழே இறங்கிக் கொண்டிருந்தது. பிதாவிடமிருந்தும் குமாரனிடமிருந்தும் செயல்படுகின்ற பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளும் பச்சிலை போன்று வல்லமையானவைகளே. அவரது செயல்பாடுகள் மிக முக்கியமானது.

தூய ஆவியானவர் இன்று மக்கள் நடுவிலும் உலகிலும் ஐக்கியத்தை ஏற்படுத்த செயல்பட்டு வரும் ஆற்றலை நாம் நினைவுகூர அழைக்கப்படுகிறோம். இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மூலமாக பிதாவிடமிருந்தும், குமாரனிடமிருந்தும் பெறப்படுகிற தூய ஆவியானவர் நிரந்தரமாகத் திருச்சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளார். இந்த ஆவி இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன் வெகு சிலருக்கு, சில வேளையில் கொடுக்கப்பட்டது. படைப்பாளராக இருந்து செயல்படும் கடவுள், குமாரனாக இயேசு கிறிஸ்துவின் வழி நம் அருகாமையிலிருந்து ஆலோசனை தந்து உதவிச் செய்யும் ஆண்டவர், இன்று தூய ஆவியானவரின் வாயிலாய் நமக்குள் இருந்து நம்மை எப்பொழுதும் பெலப்படுத்துகிறவராகவும், வழி நடத்துகிறவராகவும் இருக்கிறார். தூய ஆவியானவருக்கு நம் இதயக் கதவை எப்பொழுதும் திறந்து கொடுத்து அவர் செயல்பாட்டிற்கு நம்மை ஒப்புக்கொடுப்பது மிக அவசியம். இன்று அவரின் செயல்பாடுகள் பற்றி கீழ்வருவனவற்றின்படி சிந்திப்போம்.

## 2. படைப்பில் மாட்சிமைப் படும் கடவுள்

மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? (தி.பா. 8 : 4).

கடவுளை மாட்சிமைமிக்கவராகப் படைப்பு வெளிப்படுத்துகிறது. கடவுளின் வார்த்தை கடவுள் தம் மக்களோடு உடன்படிக்கை செய்து கொள்பவர் என்பதை வெளிப்படுத்துகிறது. கடவுளின் படைப்பு அவரது அறிவையும் ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது. கடவுளின் வார்த்தை அவரது அன்பையும் அருளையும் அறிவிக்கிறது. படைப்புகளுக்காய் சூரியனை உதிக்கச்செய்து மழையைப் பெய்யப்பண்ணுகிறார் (மத். 5 : 45) விண்ணகத்தந்தை வானத்து பறவைகளுக்கு உணவு அளிக்கிறார் (மத். 6 : 26). சாலமோன் கூட தம் மேன்மையில் அணிந்திராததை அணியச் செய்கிறார் (மத். 6 29). கடவுள் சாயலாக படைக்கப்பட்ட உம் புதல்வர்கள் இளமையில் செழித்துவளரும் செடிகள் போல் இருப்பார்களாக. எம் புதல்வியர் அரண்மனைக்கு அழகூட்டும் செதுக்கிய சிலைகள் போல் இருப்பார்களாக (தி.பா. 144 : 12).

படைப்பில் மாட்சிமைப்படும் கடவுளை குறித்து யோவான் எழுதும்போது, "பின்பு விண்ணகத்திலிருந்து எழுந்த பெரும் குரல் ஒன்றைக் கேட்டேன். அது இதோ கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள் தாமே அவர்களோடு இருப்பார். அவரே அவர்களுடைய கடவுளாய் இருப்பார். அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்துவிடுவார். இனிமேல் சாவு இராது. துயரம் இராது. அழுகை இராது, துன்பம் இராது. முன்பு இருந்தவையெல்லாம் மறைந்துவிட்டன என்றது" (தி. வெளி. 21: 3,4).

அதிக ஒலித்தொல்லையினால் உயிரினங்கள் தாங்கி கொள்ளா வண்ணம் செவிப்பறை செயலிழப்பு, இருதய பலவீனம், மூளையின் செயல்கள் திறன் இழப்பு, உடலில் ஹார்மோன் சுரக்கும் தன்மையில் மாறுபாடு, வயிற்றில் கரு ஊனமுறுதல், இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, தூக்கமின்மை, நரம்பு தளர்ச்சி, மனநோய் முதலியன ஏற்படுகின்றன.

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க வேண்டிய நாம் மாசு படுத்துகிறோம். தொழிற்சாலை கழிவு நீரால் மாசு ஏற்படுகின்றது. நீரை சேமிக்கும் இடமாக மண்ணும், ஆறுகளும், கடலும் இருக்கின்றன. எனவே உரங்கள் இரசாயான உலோகங்கள், தொழிற்சாலைக் கழிவுகள், நிலத்தில், நீரில், கலப்பதை தடுப்போம். இதில் கவனம் செலுத்தும்போது படைப்பில் கடவுள்



கடவுள் அன்பாகவே இருக்கிறார் என்று எழுதப்பட்டுள்ளது. ஆண்டவர் இரக்கமும் பரிவும் உள்ள இறைவன். சினம் கொள்ள தயங்குபவர். பேரன்பு மிக்கவர். நம்பிக்கைக்கு உரியவர் (வி.ப. 4 : 6). தந்தையாகிய கடவுள் தமது ஒரே மகனையே கையளிக்கும் அளவுக்கு நம்மேல் அன்பு கூர்ந்தார். (யோவா. 3 : 16). தமது சொந்த மகனையே நமக்காக கையளித்த தந்தை மற்ற அனைத்தையும் நமக்கு கொடுப்பது உறுதி என்கிறார் தூய பவுல் (ரோமர் 8 : 32). கடவுளின் அருள் செல்வம் என்பது அவர் தன்னை வெறுமையாக்குவதில் வடிவம் பெறுகிறது. தந்தை தகுதியும் எல்லையும் மீறி நம்மீது அன்பு பொழிகிறார் (ஏசா. 54 : 10). நம்மை பாதுகாத்து பராமரிக்கிறார்.

கூட்டு வாழ்வுக்கு அடிப்படை அன்பு, அதுவே தந்தையாகிய கடவுளிடமிருந்து நாம் பெறும் அருட்செல்வம். பிளவுகள். உறவு முறிவுகள், நுகர்வு கலாச்சாரங்கள் நிறைந்த சமூகச் சூழலில் அன்பாய் நாம் வாழும்போது தந்தையாம் கடவுளை நாம் உணர முடியும்.

## 2. மைந்தரின் ஞானம்

"...அவருடைய ஞானமும்..." (ரோமர் 11 : 33). கிறிஸ்துவின் "ஞானம்" பிரிவினைச் சுவர்களை தகர்த்து இரு திறத்தாரையும் ஒன்றிணைப்பதிலே விளங்குகிறது. திருமறை ஞானத்தை ஒரு ஆளாக (நபராக) உருவகப்படுத்துகிறது (நீதி. 8 : 22-31). கிறிஸ்துவே கடவுளின் வல்லமையும், ஞானமுமாய் இருக்கிறார் (1 கொரி. 1 : 24). பவுல் கொரிந்தியரில் (1 கொரி 3 : 19) ஞானத்தை விண்ணக ஞானம், மண்ணக ஞானம் என வகைப்படுத்துகிறார். விண்ணக ஞானம் மண்ணக நலங்களை அழிக்க (வெறுக்க) சொல்லவில்லை. மாறாக விண்ணக நலன்களை மண்ணக நலன்களோடு தொடர்புப்படுத்தச் சொல்கிறது (1 கொரி 3 : 21-23, மத். 11 : 27, ஏசாயா 6 : 8). உலகம் - நாம் - கிறிஸ்து - கடவுள் என்ற உறவு கிறிஸ்துவால் தூய்மையடைகிறது. நாம் இருப்பது கிறிஸ்துவுக்காக. உலகம் இருப்பது நமக்காக. கிறிஸ்து இருப்பது கடவுளுக்காக.

1 கொரி. 3 : 21 - 23இல் பவுல், விண்ணகத்தை மண்ணகத்தோடு இணைத்தவர்தான் கிறிஸ்து என்கிறார். அவரே மானிட குலத்தின் மையம். இறை மைந்தரின் தனி பண்பாகிய "ஞானம்" அவரது அருளில் வெளிப்படுகிறது. "ஒன்றிணைதல் " இறை அருளில் கிருபையின் வெளிப்பாடு. அவரது ஞானம் அருள்வடிவில் நம்மை வந்தடைகிறது. நமக்கு எதிராக இருந்த பாவ கடன் பத்திரத்தை அவர் சிலுவையில் அறைந்து அழித்துவிட்டார் (கொலோ. 2 : 14). நம்மை தூய்மைப்படுத்தி மீட்டார் (1 யோவான் 1 : 7). ஒன்று படுத்தினார். மைந்தரின் ஞானம் நமக்கு இலவச அருள் கொடையாக அருளப்பட்டுள்ளது. அவர் நம்மை தூய்மைப்படுத்தி கடவுளோடு ஒன்றிணைப்பதிலே அது வெளிப்படுகிறது. இதை உணரும்போது - இறை மைந்தனை ஆழமாக நாம் அறிய முடியும். நாமும் ஒன்றிணைக்கும் பணியை செய்ய அழைக்கப்படுகிறோம்.

## 3. தூயாவியரின் அறிவு

"... அவருடைய.... அறிவு எத்துணை ஆழமானவை" (ரோமர் 11 : 33).

தூயாவியரின் அறிவு புதுப்பிப்பதிலே வெளிப்படுகிறது. "உமது ஆவியை நீர் அனுப்ப அவை படைக்கப்படும். மண்ணகத்தின் முகத்தை புதுப்பிக்கிறீர்" (தி.பா. 104 : 30). உலர்ந்து போன எலும்புகளுக்கு உயிர் கொடுத்து வாழ வைப்பவர் தூயாவியர் (எசே. 37 : 1-14). கிரேக்கத்தில் தூயாவியை குறிக்கும் வார்த்தை "ப்நியுமா" இப்பதத்திற்கு அறிவின் ஆவி என்ற பொருளும் உண்டு. தூயாவியர் அறிவின் ஆவியை தந்து கற்றுக்கொள்ளச் செய்கிறார். கற்றுத் தருகிறார். அவர் தரும் அறிவு நம்மை புதுப்பிக்கிறது. புது படைப்பாய் மாற்றுகிறது. அவர் நமக்கு நம்பிக்கையின் நங்கூரமாய் இருக்கிறார். தூயாவியரின் அறிவு படிப்பிப்பதிலும் புதுப்பிப்பதிலும், உயிரூட்டுவதிலும், உரமூட்டுவதிலும் நினைபடுத்துவதிலும், நன்மை - தீமையைத் தெளிவு படுத்துவதிலும், தீமைகளைக் கண்டித்து உணர்த்துவதிலும், நேர்வழியைக் கண்டடையச் செய்வதிலும் துன்பம் ஏற்பதிலும், நன்மைச் செய்வதிலும், வெளிப்படுகிறது. கடவுளின் அன்பு தூயாவியர் வழியாக நம்மீது பொழியப்படுகிறது (ரோமர் 5 : 5). அவர்வழியாகவே நாம் கடவுளை அப்பா பிதாவே என அழைக்கும் "மகன்" உரிமைப் பெறுகிறோம். தூயாவியரின் அறிவு - நட்புறவு, நீதிக்கு தோழமை போன்றவற்றிலே கருக்கொள்கிறது. அவரின் அறிவில் நாம் வாழும்போது அவர் அருளும் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகியவற்றை நாம் பெற்று அவரை உணர முடியும். புதுப்படைப்பாக்கும் தூயாவியரின் அறிவு நம்மில் "கரு" கொள்ளவும், ஆவியின் கனியால் மலரும் நட்புறவு சமூதாயத்தில் பரவவும் அர்ப்பணிப்போம்.

மூவொரு கடவுளில் வெளிப்படும் அருட்செல்வம் (அன்பு), ஞானம் (அருள்) அறிவு (நட்புறவு) நம்மில் உதயமாகட்டும்.

**மூவொரு கடவுள்:**

| | | |
|---|---|---|
| அருட்செல்வம் | - வெறுமையாக்குவதில் | - பிதா |
| ஞானம் | - இணைப்பதில் | - குமாரன் |
| அறிவு | - புதுப்படைப்பாக்குதல் | - தூயாவியர் |

**மன்றாட்டு :** *வல்லவரும் நித்தியருமான கடவுளே! எங்கள் பற்றுறுதி அறிக்கையின் வழியாக ஒருமைப்பாட்டின் மகத்துவத்தில் நித்திய திரித்துவத்தை அறிந்துணரவும், வழிபடவும் நீர் எங்களுக்கு கிருபை தந்திருக்கிறீர். இந்த பற்றுறுதியில் நாங்கள் மாறாமல் நிலைநிற்கவும் வழிபடவும் தேவரீர் எங்களைக் காத்து இறுதியில் உம்முடைய நித்திய மகிமையில் எங்களைக் கொண்டு வருவீராக! உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம். ஆமென்!*

**Rev. M. பிரேம்சிங் ஜெயக்குமார்**



இப்படிப்பட்டச் சூழலில் கடவுளின் மாட்சியை வெளிப்படுத்தும் படைப்பு நமக்கு தரும் உண்மைகளை இன்று சிந்திப்போம்.

## 1. படைப்பில் வெளிப்படும் கடவுள்

"உமது கை வேலைப் பாடாகிய வானத்தையும் அதில் நீர் பொருத்தியுள்ள நிலாவையும் விண்மீன்களையும் நான் நோக்கும்போது" (தி.பா. 8 : 3) என்று தாவீது புகழ் பாடுகிறார்.

படைப்பில் தம்மை வெளிப்படுத்தும் இறைவனை பெரும்பாலோர் உணர்வதில்லை. நமது கடவுள் தம்மை வெளிப்படுத்தும் கடவுள். தொடர்புச் சாதனங்கள் வழியாக அவர் நம்மோடு தொடர்பு கொள்கிறார். கதிரவனின் ஒளி கடவுள் ஒளியாக இருக்கிறார் என்று கூறுகின்றது. கதிரவன் இன்றி உலகம் ஒளி பெறாது. இவ்வாறு கடவுளின் ஒளி, நம்மை இருள் என்னும் பாவத்திலிருந்து தூக்கி எடுத்து ஒளிமிகு தூய வாழ்வை அருளுகிறது. படைப்பின் காரணராம் இறைவனை மகிழ வைத்த படைப்புகளுள் ஒன்றான மானிடம் இறைவனுக்கு துயரம் கொடுத்தது.

மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது (தொ. நூ 6 : 5,6).

வானத்தை கடவுள் நிலை நிறுத்தினார். கடல் மீது அடிவானத்தின் எல்லையைக் குறித்தார். உலகத்தின் மேகங்களை அவர் அமைத்தார். ஆழ்கடலில் ஊற்றுகளை அவர் தோற்றுவித்தார். அவர் கடலுக்கு எல்லையை ஏற்படுத்தினார். அந்த எல்லையைக் கடல்நீர் கடவாதிருக்கும்படி செய்தபோது, பூ உலகிற்கு அவர் அடித்தளமிட்டார். இவ்வாறு மனித இனத்தோடு இருப்பதில் மகிழ்ச்சி கண்டார் (நீதி. 8 : 27-31).

அறிவர் தியோடர் வில்லியம்ஸ் "God Alive" என்ற நூலில் எலிசபெத் பேரட் பிரௌனிங் (Berat Browning) கூறிய வாசகம் "மண்ணகம் விண்ணகத்தால் நிறைந்திருக்கிறது. முட்புதர் கடவுளின் அருட்பிரசன்னம் எனும் நெருப்பால் கொழுந்துவிட்டு எரிகிறது. தங்கள் காலணிகளை கழற்றுபவர்கள் அதாவது தங்கள் உரிமையை சுய சித்தத்தை கடவுளுக்கு அர்ப்பணிப்போர் எரியும் முட்செடியில் இறைவனைக் காண்பர். பிறர் அம்முட்புதர்களை சுற்றி அமர்ந்து பழங்களை பறிப்பர்" எனக் குறிப்பிட்டார். இவ்வாறு படைப்பில் வெளிப்படும் கடவுளை காண்கிறோம்.

கொடுப்பார் (யாக். 1 : 5). நாம் அனைவரும் நிறைந்த ஞானம் உடையவர்களல்ல. அறிவின் ஊற்றாகிய ஆண்டவர், தம்மிடம் வந்து கேட்பவர்களுக்கு ஞானத்தை வழங்குகிறார். ஆண்டவரை நம் வாழ்வில் முதன்மைப்படுத்தி, அவரை சார்ந்து வாழாமல் எப்படி கேட்க இயலும். சாலமோன் ஆண்டவருக்கு பலி செலுத்தி ஆராதித்து மகிழ்ந்தார். ஆண்டவர், "உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்" என்று கூறினார். அறிவை நாடிய சாலமோன், புகழையும் செல்வத்தையும் இலவசமாய் பெற்றார்.

ஆலய ஆராதனைகள், திருமறைப்பள்ளி, பக்தி முயற்சி சங்கம், விடுமுறை வேதாகம பள்ளி ஆகியவற்றை தவிர்த்து சிறப்பு வகுப்புகளுக்கும், கணிணி வகுப்புகளுக்கும், வேறு பல பயிற்சிகளுக்கும் பிள்ளைகளை அனுப்புவதை பெற்றோர் கைவிடவேண்டும். பிள்ளைகளும் ஆண்டவரின் அருள்பெற நாடவேண்டும். திருமறை படிப்பு, இறைவேண்டல் போன்றவை வாழ்வில் சிறப்பிடம் பெறவேண்டும்.

## 2. கடமையில் கரிசனையோடிருங்கள்

ஆண்டவரின் அருளை தேடிவிட்டு அமைதியாக இருந்தால் அறிவு வந்துவிடாது. நாம் செய்யவேண்டியக் கடமைகளை கரிசனையுடன் நிறைவேற்ற வேண்டும். "முயற்சி திருவினையாக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. ஞானத்தையும், மெய்யுணர்வையும் தேடிப்பெறு (நீதி. 4 : 5). ஞானத்தை தேடி அடைந்தோர் நற்பேறு பெற்றோர் (நீதி. 3 : 13). தேட்டம் இல்லாமல் கண்டுபிடிப்பு இல்லை. உழைப்பு இல்லாமல் சம்பாத்தியம் இல்லை. எனவே, தேட்டமும் உழைப்பும் மிகவும் அவசியமானவை. பிள்ளைகள் ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து பாடங்களை நன்கு படிக்கவேண்டும். செய்யவேண்டிய அனைத்து கடமைகளையும் சோம்பல் இன்றி குறித்த சமயத்தில் நிறைவேற்ற வேண்டும். தேர்வுகளில் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். நண்பர்களுடன் விளையாடி பொழுதுபோக்கி எதிர்காலத்தை சூன்யமாக்கியோர் பலர்.

அசோக், ரமேஷ் இருவரும் நண்பர்கள். ஒரே வகுப்பில் படித்தனர். எப்போதும் இருவரையும் இணைந்தே காணவியலும். வகுப்புகளை தவறவிட்டு தேவையற்ற குறும்புகளில் ஈடுபட்டனர். ஆலய ஆராதனைகளிலும் கலந்துகொள்ளவில்லை. பத்தாம் வகுப்பு தேர்வில் இருவரும் தோல்வியடைந்தனர். ரமேஷின் படிப்பு நிறுத்தப்பட்டது. அசோக் தொடர்ந்து கடினமாக படித்தான் ஆலயத்துக்கும் ஒழுங்காகச் சென்றான். பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிபெற்றான். பொறியியல் கல்வி கற்று பணியில் சேர்ந்தான். பணி செய்து கொண்டே இந்திய ஆட்சிப் பணிக்கான தேர்வு எழுதி வெற்றி பெற்றான். பக்கத்து மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியாளராக பணியமர்த்தப்பட்டான். பாதியில் படிப்பைவிட்ட அசோக்கின் நண்பன் ரமேஷ் அங்கு தங்கி கூலி வேலை செய்து வந்தான். ஒருநாள் மாவட்ட ஆட்சியாளரான தன் நண்பனை சந்திக்க சென்றான். அன்புடன் உபசரித்த அசோக் கடமையில் கரிசனையின்றி செயல்பட்டதன் காரணமாக கடின வேலைகளை செய்யும் நிலைக்கு ஆளான நண்பனுக்கு ஆறுதலும், ஆலோசனைகளும் வழங்கினான். நல்லதொரு வேலை பெற உதவி செய்வதாக உறுதியளித்தான். கடின உழைப்பாலும், கரிசனையான



செயல்பாட்டினாலும் அறிவையும், இறையருளையும் பெறவியலும் வேலை செய்யாத கை வறுமையை வருவிக்கும்; விடாமுயற்சியுடையோரின் கையோ செல்வத்தை உண்டாக்கும் (நீதி. 10 : 4).

## 3. கண்ணியமான பண்புகளை வளர்த்துக்கொள்ளுங்கள்

இன்றைய உலகில் அறிவு பெருகினாலும், நற்பண்புகள் அருகிவிட்டன. ஏட்டுக்கல்வி மட்டுமல்ல, சிறந்த வாழ்க்கை கல்வியும் மிக அவசியமானதாகும். பிள்ளைகள் எந்த சிரமமுமின்றி நன்றாய் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கடினமாய் உழைக்கும் பெற்றோரை பிள்ளைகள் மதிப்பதில்லை. நல்வழிகாட்டும் பெரியவர்கள், அறிவு புகட்டும் ஆசிரியர்கள் போன்றோருக்கும் மரியாதை வழங்குவதில்லை. இவை வாழ்வின் ஆசிகளுக்கு முட்டுக்கட்டைகள் என்பதை பிள்ளைகள் உணரவேண்டும். நல்லஅறிவுரை கேட்டுத் திட்டமிட்டால் வெற்றி பெறுவாய் (நீதி. 20 : 18). பிள்ளாய்! உன் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடி; தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே (நீதி. 6 : 20). பிள்ளைகள் கல்விக்காக வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் தங்கியிருக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது பல தீமைகளுக்குத் தங்களை உட்படுத்தி விடுகிறார்கள். இவை தீய விளைவுகளை அவர்களது வாழ்வில் ஏற்படுத்திவிடும். போதையின் தீமையினாலும், இணையதளம், அலைபேசி ஆகியவற்றாலும் பாதை தவறிய பிள்ளைகள் ஏராளம். இணையம், அலைபேசி, தொலைக்காட்சி போன்றவை சிறந்த தகவல் ஊடகங்களாய் நன்மை தருபவையாயினும், அவை அளவோடு தேவையுணர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். அரசரது சிறப்புணவினாலும், அவர் பருகிவந்த திராட்சை இரசத்தினாலும் தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்டார் (தானி. 1 : 8). தானியேல் தம் மனதில் கொண்ட தீர்மானத்தில் மாற்றமின்றி வாழ்ந்து சிறப்புப்பெற்றார். உங்களிடையே ஞானமும், அறிவாற்றலும் உடையவர் யாராவது இருந்தால், ஞானம் தரும் பணிவாலும் நன்னடத்தையாலும் அவற்றைக்காட்டட்டும் (யாக். 3 : 13). நற்பண்புகளை வெளிப்படுத்தும் நற்செயல்களே ஞானம் பெற்றிருப்பின் சிறப்பு. கீழ்ப்படிதலும், நற்பண்புகளுமற்ற ஞானம் பயனற்றது. பிள்ளைகள் சுயநலம் தவிர்த்து, பொதுநலம் நாடும் பண்புகளை தம்மில் வளர்த்துக்கொண்டு, பிறருக்கு பயன் ஏற்பட வாழவேண்டும்.

மணல் மேல் வீடு கட்டிய அறிவாளி பெரும் மழையில் தம் வீட்டை இழந்தார். பாறைமீது வீடு கட்டிய அறிவாளி எச்சேதம் வந்தும் அழிவின்றி உறுதியாய் நின்றார் (மத். 7 : 24-27). மாணவர்கள் தம் வாழ்வை நற்பண்புகளாகிய கற்பாறையின் மேல் கட்ட இறையறிவு சார்ந்து கற்க வேண்டும். கல்வி, உண்மை அறிவின் தேட்டமாக அமைந்தால் மட்டுமே கல்வியின் சிறந்த நோக்கம் நிறைவுபெறும். அறிவுத்தேட்டம் இறையுறவின் நாட்டமாக அமையவேண்டும். கரிசனையுடன் கடமையாற்றுவதாய்க் கல்வியின் பணிகள் அமையவேண்டும். கண்ணியமான நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளவேண்டும். இக்கல்வியாண்டின் பணிகள் இத்தகு சிறப்புகளுடன் அமைய இறைவன் அருள்தருவாராக! ஆமென்.

**Rev. R. ஹென்ஸ்லின் நேசராஜ்**

**10-06-2012**

*சுற்றுப்புறச் சூழல் ஞாயிறு*

# கடவுளின் மாட்சியை வெளிப்படுத்தும் படைப்பு

## Creation Proclaims God's Glory

| | |
|---|---|
| நீதி. 8 : 22 – 31 | தி.வெ. 21 : 1 – 8 |
| தி.பா. : 8 | லூக். 8 : 22 – 25 |

"உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்" (தி.பா. 8: 6).

கடவுளின் மாட்சிமை அவரது செயல்களால் மேன்மைப்படுகிறது. தாவீது கண்களால் காண்பவைகளிலிருந்து இன்னல் காண முடியாதவற்றை ஆராய்ந்து அறிய நம்மை அழைக்கிறார். நாத்திகன் ஆகாய விரிவைப் பார்க்கிறான். அங்கே அமைந்துள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்தையும் பார்க்கின்றான். ஆனால் அவைகளை உருவாக்கிய இறைவனை இல்லை என மறுக்கிறான். தாவீதரசர் 8-ஆம் திருப்பாடலில் இறைவனின் மாட்சிமையையும் மானிடரின் மேன்மையையும் எடுத்துக் கூறுகின்றார். படைப்பவர் இன்றி படைப்பு இல்லை. படைப்புகள் இறைவனையும் அவர் மாண்பையும், மாட்சியையும் வெளிப்படுத்துகின்றன. படைப்பு வெளிப்படுத்தும் கடவுளின் மாட்சியைக் குறித்து சுற்றுப்புறச் சூழல் ஞாயிறில் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம்.

கூடன்குளம் அணுமின் நிலையம் செயல்படத்துவங்கும் போது மக்களின் வாழ்வாதாரங்களும், வாழ்வு உரிமைகளும் கடுமையாகப் பாதிக்கப்படும். குறிப்பாக மீனவர்கள், விவசாயிகள் என அனைத்து தரப்பு மக்களின் உயிருக்கு உலைவைக்கும். இந்த அணு உலையிலிருந்து வெறியேற்றப்படும் தண்ணீரில் உள்ள இரசாயனங்கள் கடலில் கலப்பதால் கடல்நீர் மாசுபடும். மீனவர்களின் வாழ்வுரிமைகள் அடியோடு பாதிக்கப்படும். நிலத்தடி நீரும், காற்றும், மாசுபட்டு, பயிர்கள், கால்நடைகள், பறவை இனங்கள் பாதிக்கப்படும். காய்கறிகள், பழங்கள், பால் போன்றவைகள் விஷ உணவாக மாறி "புற்றுநோய்" (Cancer) போன்றக் கொடிய நோய்கள் ஏற்படும். எதிர்காலக் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகவும், கொடிய தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுவர்.



**03-06-2012** *மாணவர் ஞாயிறு*

# கல்வி : உண்மை அறிவின் தேட்டம்

## Education : Search for true Knowledge

| | |
|---|---|
| 1 அர 3 : 5 – 14 | பிலி. 4 : 4 – 9 |
| தி.பா. 119 : 33 – 40 | மத். 7 : 24 – 29 |

... உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும் (1 அரசர் 3 : 3 – 14).

உண்மை அறிவை வழங்குபவர் கடவுளே. எனவே, அறிவுத் தேட்டம் ஆண்டவரைச் சார்ந்ததாக அமையவேண்டும். ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே (நீதி. 2:6) என சாலமோன் குறிப்பிடுகிறார். கல்வி மனித வாழ்வின் வளர்ச்சி நிலைகளுக்கு சிறந்த ஆதாரமாக அமைகிறது. கல்வியறிவினால் சிறந்த வாழ்வுக்குரிய நல்ல நெறிமுறைகளும், அறிவியல் கண்டுபிடிப்புகளும் நமக்கு கிடைத்திருக்கின்றன. ஆனால், இன்றைய அறிவுத் தேட்டம் சிறந்த பண்புகளை மறந்துவிட்டு செல்வநாட்டம் சார்ந்து செயல்படுவது பெரும் வருத்தத்திற்குரியதாகும். கல்வி வாயிலாக சிறந்த எதிர்கால தலைமுறை உருவாக்கப்படுவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. மாணவர்களை, பயனுள்ள பண்பாளர்களாக வடித்தெடுக்கும் சிற்பிகள் அவர்களே. மக்களுக்கு நீதி செய்யவும், நன்மை தீமை பகுத்தறியச் செய்யவும் இறையறிவை நாடிய சாலமோன் கல்வியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகச்சிறந்த முன்மாதிரியாகிறார். மாணவச் செல்வங்கள் எதிர்கால உலகை சிறப்புள்ளதாக வடிவமைக்க விரும்பும் கடவுளின் கருவிகளாக மாற வேண்டும். இப்புதிய கல்வியாண்டில் இறைவன் வழங்கும் அறிவாற்றலைப் பெற நம்மை அர்ப்பணித்து கல்விப்பணிகளில் ஈடுபடுதல் சிறப்பானதாக அமையும். அதற்கு ஆண்டவர் தரும் ஆலோசனைகளை இவண் காண்போம்.

### 1. கடவுளின் அருள் நாடுங்கள்

சாலமோன், ஆண்டவரிடம் அன்புகொண்டவராய் வாழ்ந்தார் (Iஅரசர் 3 : 3). இறைப்பற்று அவரிடம் நிறைந்திருந்தது. இன்று, அறிவுத்தேட்டம் அபாரமாய் நடந்து கொண்டிருக்கிறது. எப்படியாயினும், பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் பெறச் செய்யும் அபாரமான முயற்சியை பெற்றோர் மேற்கொள்கின்றனர். போட்டிகள் நிறைந்த வாழ்க்கைச் சூழலில் முயற்சிகள் அவசியமானதே. எனினும், இறையுறவினில் பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரரின் முக்கிய கடமையாகும். ஆண்டவரைத் தேடும் ஆர்வத்தை பிள்ளைகள் மனதில் ஏற்படுத்தவேண்டும். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (நீதி. 1 : 7a). அறிவின் தொடக்கம் ஆண்டவரை சார்ந்து வாழ்தலேயாகும். உங்களில் குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடம் கேட்கட்டும்; அப்பொழுது அவரும் ஞானத்தைக்

வறிய நிலையை அடைந்துக் கொண்டிருக்கும் நிலையில் உலகப் பொருளாதாரத்தைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்து, 'பொருளாதார வல்லரசாகும் நிலையையே' ஆங்கிலத்தில் Globalization என்றும் தமிழில் ''உலகமயமாகுதல்'' என்றும் சொல்லப்படுகிறது.

இன்று 'இராணுவ வல்லரசு' என்று இருப்பதைவிட 'பொருளாதார வல்லரசு' என்று இருப்பதையே உலக நாடுகள் விரும்பி அதற்காக போட்டியிடுகின்றது.

இதில் 'ஒரு நாடோ' அல்லது 'ஒரு குழுவான நாடுகளோ' வல்லரசாகும் என்று வேதாகமத்தின் அடிப்படையிலும் சொல்லப்படுகிறது. இதற்கான முன் அடையாளத்தையே நாம் தானி. 3-ல் வாசிக்கிறோம். இந்த 'உலகமயமாகுதல்' என்னும் விபரீதக் காரியம் எப்படி நடைபெறப் போகிறது என்பதை தானி. 3-ன் அடிப்படையில் சிந்திப்போம்.

**1. அறிவிப்பா ? வருவிப்பா ?:** (தானி. 3 : 4, 5)

இங்கே 'கட்டியங்காரன்' என்று சொல்லப்படுபவன் 'அறிவிப்பாளர்' ஆகும். செய்தி அறிவிப்பதற்கென்றே பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் - முரசு, பேரிகை, தமுக்கு, பறை, தாரை, தப்பட்டை போன்ற தோல் கருவிகள். இதை தான் பயன்படுத்தி கட்டியங்காரன் அறிவிக்க வேண்டும். ஆனால் கட்டியக்காரன் இந்த அறிவிப்பை, அறிவிப்பாக அறிவிக்காமல் கட்டளையாக அறிவிப்பதால், இவைகளைப் பயன்படுத்தவில்லை. இது அறிவிப்பாக இல்லாமல் அனைவரும் கண்டிப்பாக வரவேண்டும், பணிய வேண்டும் என்னும் வருவிப்பு கட்டளையாக இருக்கிறது.

மேலும் இது 'அறிவிப்பு' அல்ல 'கட்டளை'? என்பதற்கான ஆதாரம் - தானி 3 : 6 '. . . அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையில் நடுவிலே போடப்படுவான் என்றான்', இது ஒரு பயமுறுத்தும் கட்டளை. அதனால் தான்இது 'அறிவிப்பு' அல்ல, 'வருவிப்பு' என்று சொல்லப்படுகிறது. இங்கே பயன்படுத்தப்படும் கருவிகள் தானி. 3 : 5 எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு - இவைகள் மரியாதை செலுத்தத் தூண்டும் இசையை இசைக்க பயன்படுபவை. அரசு விழாக்களில், தேசிய விழாக்களில் இது பயன்படுத்தப்படும்போது, இந்த இசையின் கெம்பீரம் அனைவரையும் எழுந்து வணங்க வைக்கும். அதுதான் இங்கே நடைபெறுகிறது, அனைவரும் கீதவாத்திய சத்தத்தைக் கேட்டவுடனே பணிந்து கொண்டார்கள், யூதர் மட்டும் பணியவில்லை.



மாட்சிமைப்படுவார்.

### 3. படைப்பில் ஆளுமை தரும் கடவுள்

உமது கை படைத்தவற்றை அவர்களும் ஆளும்படி செய்துள்ளீர், எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்கு கீழ்ப்படுத்தியுள்ளீர் (தி.பா. 8:6).

படைப்பை பாதுகாக்கவும் ஆளுகை செய்யவும் ஒப்படைத்தார். இறைவன் தந்துள்ள ஆளுமை அதிகாரம் ஒரு தலைமுறையினருக்கோ சில தலைமுறையினருக்கோ அல்ல. மாறாக அனைத்து தலைமுறையினருக்கும் உரியது. கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப்பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள் என்றார் (தொ.நூ. 1 : 28). இவற்றை பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார் (தொ.நூ. 2 : 15).

இஸ்ரயேல் மக்களுக்கு மோசே இணைச்சட்டம் நூல் வழியாக வழங்கிய பேருரையில் ''ஒரு நகருக்கு எதிராகப் போர் தொடுத்து நீ அதை நெடுநாள் முற்றுகையிட்டுக் கைப்பற்றினால் அதிலுள்ள மரங்களைக் கோடாரியால் வெட்டி அழிக்காதே. நீங்கள் அவற்றின் பழங்களை உண்ணலாம். ஆனால் அவற்றைவெட்டலாகாது'' (இணைச் சட்டம் 20 : 19). மரம், செடி, கொடிகள், படைப்புகளனைத்தும் மனிதனின் வாழ்வாதாரங்கள். மனிதரில் படைப்பை பாதுகாக்கும் பொறுப்பு மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. இன்றைய உலகில் நாம் காண்கின்ற இயற்கை சீற்றங்கள், அதிக மழை, அதிக வறட்சி, இவைகள் படைப்புகளை சரியாய் பாதுகாக்கப்படாததாலேயே உருவாகின்றன.

இயேசுவும் அவருடைய சீடர்களும் படகில் ஏறியதும் ஏரியில் அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்று அவர் சீடர்களுக்குச் சொன்னார். அவர்களும் படகைச் செலுத்தினார்கள். அப்பொழுது ஏரியில் புயல் அடித்தது. படகு நீரால் நிரம்பியது. அவர்கள் ஆபத்துக் குள்ளானார்கள். இயேசு விழித்தெழுந்து காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் கடிந்து கொண்டார். உடனே அலை ஓய்ந்தன. அமைதி உண்டாயிற்று. இயேசு அவர்களிடம் உங்கள் நம்பிக்கை எங்கே? என்றார் (லூக். 8 : 22-25). ஆகவே கடவுளில் நம்பிக்கை கொள்வோர் படைத்தவரிடம் இணைந்திருப்பர்.

மண் ஆசையை சோதனையாக தீயோன் நமது ஆண்டவரிடத்திலும் கொண்டு வந்தான் (மத். 4 : 8,9). நிலம் மனிதனின் வாழ்விற்கு இறைவன்

வழங்கிய ஆதாரங்களில் ஒன்று. பூமியின் பலன்களை புசிக்கிறோம். பூமி சேகரித்து வைக்கும் நீரை குடிக்கிறோம். பூமியில் வீடுகட்டி வாழ்கிறோம். மண்ணில் தொடங்கி மண்ணிலே வாழ்வை முடிக்கிறோம். நாம் வாழ்ந்து வரும் தலைமுறைக்கு விட்டுச் செல்லும் இறைவனின் அருட்கொடை மண் என்பதை நாம் அறிந்து கொண்டால் நில ஊழல்கள் எழாது. மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை (தி.பா. 24 : 1).

மனுக்குலம் படைப்பை பழுதடையச் செய்த நிலையில் கடவுளுடன் இணைந்து சுற்றுப்புற சூழலின் பழுதுநீக்கும் பணியைச் செய்ய அழைக்கப்படுகிறோம். அரியணையில் வீற்றிருந்தவர் இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன் என்று கூறினார் (தி.வெ. 21:5). இறைபடைப்பை பாதுகாக்க துணை புரிவோம்.

**மன்றாட்டு :** *வல்லவரான கடவுளே, நாங்கள் உமது படைப்பின் மேன்மையில் களிகூறுகிறோம். உமது படைப்பில், உமது மகிமையையும் நீர் எங்களோடு தங்கியிருப்பதையும் நாங்கள் காண்கிறோம். உமது ஆற்றல், ஞானம், அன்பு இவைகளுக்கு மறுமொழியாக நீர் எங்களுக்கு தந்திருப்பவைகளை உமது மாட்சிக்கென்றே பயன்படுத்த எங்களுக்கு உதவி செய்யும். படைக்கப்பட்ட உமது உலகின் ஆற்றல் அனைத்தையும் நீர் முன்பாகத் தந்திருப்பவரும் உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

**Rev. M.P. விஜயகுமார்**



**24-06-2012**

## உலகமயமாதலுக்கு கிறிஸ்தவ பதிலுரை
## CHRISTIAN RESPONSE TO GLOBALISATION

தானி. 3 : 1 – 18 தி.வெ. 21 : 22–27,
தி.பா. 67 லூக். 6 : 20 – 31

தாழ்வு காலத்தில் சிந்தனை செய்ய வேண்டுமென்ற ஞானமான காரியத்தை பிரசங்கி என்ற சாலமோன் ஞானி சொல்லுகிறார். (பிர. 7 : 14)

இன்று அநேக 'தாழ்வு செய்திகளை கேள்வி கேள்விப்படுகிறோம்' அதில் முக்கியமானது 'பொருளாதாரங்களில் ஏற்படும் தாழ்வு'. பணத்தின் சர்வதேச மதிப்பு வீழ்ச்சி, விலைவாசி ஏற்றம், எரிபொருள் தட்டுப்பாடு என்று பொருளாதாரம் சம்பந்தமான பலச் செய்திகளையே அதிகம் கேள்விப்படுகிறோம். ஆனால் அதைக் குறித்து அதிகம் சிந்திப்பதில்லை.

Australia-விலுள்ள Queensland பல்கலைக்கழக விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் German ஆராய்ச்சியாளர்கள் இணைந்து குரங்குகளிடம் ஆராய்ச்சி பண்ணினார்கள். என்ன அடிப்படையில் இந்த ஆய்வை நடத்தினார்களென்றால் இவைகளுக்கு தங்கள் எதிர்காலம் எப்படியிருக்குமென்ற கவலை இருக்கிறதா? என்ற அடிப்படையில் ஆய்வு நடத்தினார்கள். இந்த ஆய்வுக்காக குரங்குகளுக்கு ஏராளமாக உணவை கொடுத்தார்கள். ஆனால் குரங்குகள் என்ன செய்ததென்றால் தேவைக்கு மட்டும் சாப்பிட்டுவிட்டு, மீதியை பத்திரமாக சேமித்து வைத்துக்கொண்டன. பறவைகள் கூட இன்று தானியங்களை சேமித்து வைக்கிறது. ஆனால் மனிதனிடம் இது இல்லை.

இன்று உலகத்திலே பொருளாதார வல்லரசு என்று சொல்லுகிற அமெரிக்க ஐக்கிய நாடும் தனது பொருளாதாரத்தில் கடும் வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் தனி நபர் சேமிப்பு அங்கு அதிகமில்லை. இருக்கிறபடியால் தங்களுக்கு கிடைக்கும் அதிக வருமானத்தையும் வீணாக செலவழித்து விடுகிறார்கள்.

இன்று, உலகமெங்கும் இந்த சூழல் வேகமாகப் பரவிக் கொண்டேயிருக்கிறது. சேமிப்பு இல்லாமல், நாடுகள் பொருளாதாரத்தில்

இயேசுநாதர் ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது (மத். 5:3) என்றார். இந்த ஏழ்மை நிலை கிறிஸ்தவ வாழ்விற்கு சவாலாக அமைந்துள்ளது.

இப்பகுதியில் (1 அரச. 21 : 1-29) அரசன் ஆகாபிற்கும் நாபோத்திற்குமிடையேயுள்ள ஏழ்மையின்மேல் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரத்தின் செயல்களைக் காணமுடிகிறது. ஏழ்மை நிலை அதிகார வர்க்கத்தினரால் கொச்சைப்படுத்தப்படுகிறது. இப்பகுதியில் ஒருவர் அதிகாரமும் செல்வமுமுடைய அரசர், மற்றொருவர் இறைவனையே நம்பி வாழும் ஏழ்மையானவர். கடவுள் நம்பிக்கையின்றி, ஆன்மிகப் பண்புகளின்றி அதிகாரம், செல்வம் இவைகளை நம்பி வாழ்வோருக்கு ஆகாப் யேசுபேல், ஒரு அரச தம்பதியர் முன் உதாரணம்.

அதிகாரத்தை பயன்படுத்தி ஆகாப் நாபோத்தின் நிலத்தை கையகப்படுத்தினார். நாபோத் ஆண்டவரை மட்டுமே சார்ந்திருந்தார். அதனால் ஆண்டவர் நீதி செய்தார். தாவீது, உரியா நிகழ்வும் இதற்கு ஒத்துள்ளது (2 சாமு. 11:1-26). இன்றைய நமது அன்றாட வாழ்விலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமலில்லை. ஏழ்மை நிலை தனை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளும்போது அதனை மேற்கொள்ள ஆண்டவர் பெலன் அருள்வார். இறைப்பற்றாளர்கள் பலர் ஏழ்மைக்குள் தள்ளப்பட்டனர். அதனை ஆண்டவரின் (யோபு 1:21; 2 சாமு. 11:1-26)பொருட்டு ஏற்றுக் கொண்டனர்

இயேசு நாதர் ஏழ்மை நிலை கொண்டோருக்கே விண்ணரசு என்கிறார் (மத். 5:3). நீதியாய் வாழ்ந்தும் ஏழ்மை நிலை துன்பநிலை தொடர்கிறதே என ஏங்கும் மக்கள் ஏராளமுண்டு இந்த நிலையில் எளியோரைப் பற்றி கரிசனையும் ஆண்டவரில் நம்பிக்கையையும் கொண்டு வாழ்வோமானால் இந்த ஆன்மீக சவாலை மேற்கொள்ள முடியும்.

### 2. செழுமை : (லூக். 12:13-21)

“பணம் கடல்நீர் போன்றது அதனை அதிகம் குடிப்பவனுக்கு அதிக தாகமுண்டாகும்” என்பது பழமொழி. இன்று செல்வம் கடல்நீர் போன்று சேமிக்க, சேமிக்கக் நிறைவு ஏற்படுவதில்லை. இந்த பணத்தை சேமிக்க மானிடர் எதையும் செய்யத் தயாராக உள்ளனர். முதலில் செல்வமும் பின்பு ஆண்டவரும் என்ற நிலை ஏற்பட்டு இன்று கிறிஸ்தவ வாழ்வில் செழுமை அல்லது செல்வம் ஒரு சவாலாக அமைந்துள்ளது.

இப்பகுதியில் இயேசு கிறிஸ்துவால் சொல்லப்பட்ட இம்மனிதன் (லூக். 12:12-21), விளைச்சலை நினைத்து பூரித்தான். செழுமையான விளைச்சலைத் தந்த கடவுளையோ, உழைத்தத் தொழிலாளர்களையோ



அவன் நினைக்கவில்லை. கடவுளை மறந்து தன் உடமைகளில் மூழ்கியதுபோது செல்வம் அவனது உயிருக்கு சவாலாக அமைந்தது.

செல்வம் பிறரை நினைப்பதுமில்லை பிறர் வாழ்வில் அக்கறை காட்டுவதுமில்லை, மாறாக துன்பங்களுக்கு துணைநிற்கிறது, வன்முறைகளையும், சமூக விரோதங்களையும் தூண்டுகிறது. ஆதரிக்கின்றது. பிறர் மேல் ஆதிக்கம் செலுத்த தீவிரிக்கின்றது. திருமறை இவைகளை ஒருபோதும் ஆதரிக்கவில்லை. செல்வம் சேர்த்தல், சொத்துக் குவிப்பு, அபகரித்தல் இவைகளைத் திருமறைக் கண்டிக்கிறது (இ.ச. 24:15; ஏசா. 10:1; ஆமோ. 2:6). செல்வம் பற்றிய இயேசுநாதரின் கருத்துக்களை (லூக். 6:20; மாற். 10:24; லூக். 1:53; மாற். 10:17-27) கடைபிடிப்பதில் இறைமக்கள் முன்னுரிமை கொடுப்தில்லை. செல்வச் சேமிப்பா? ஆன்மிக வாழ்வா? இது நம் முன்னால் வைக்கப்படும் சவால்.

### 3. செழுமை நற்செய்தி : (தி.ப. 8:9-25)

துன்பத்தினூடே வாழ்வு, உபத்திரவத்தின் குகை, சிலுவை சுமத்தல் இவைகளினூடே வாழும்போது இறையாற்றல் நம்மை தேற்றி பெலப்படுத்தும். ஆண்டவர் ஆயராக அனுதின வாழ்வில் நம்மை நடத்துவார். இதுவே நமது அசையா நம்பிக்கை. ஆனால் இன்று இந்த இறையாற்றல் வியாபார நோக்கில் ஆசீர்வாதம் (செல்வம்) என்ற பெயரில் இறை மக்களின் பற்றுறுதி சிதைக்கப்படுகிறது. பொருள் சார்ந்த பக்திக்கு மக்கள் தூண்டப்படுகின்றனர். அதற்கு சாதகமான திருமறை ஆதாரங்களை பயன்படுத்தி (இ.ச. 8:18; மலாக். 3:10; யோவா. 10:10; III யோ. 2:4). தவறாக பொருள் கொண்டு நற்செய்தி வழங்கப்படுகிறது. இதனை செழுமை நற்செய்தி (Prosperity Gospel) என்று கூறலாம்.

சமாரியாவில் சீமோன் (தி.ப. 8:9-24) தூயாவியாரின் ஆற்றலைக் கண்டு வியாபாரமாக்க முயன்றான். தான் இதுவரை சேர்த்த செல்வத்தைக் கொண்டு தூயாவியரை விலைக்கு வாங்க முற்பட்டான். மாய வித்தை போன்று தூயாவியாரைக் கொண்டு மக்களிடம் அதிக லாபம் பெற தீர்மானித்தான். ஆனால் இறையாற்றலுக்கு முன்னால் நிற்க முடியவில்லை. இன்று நீதி, மனிதநேயம், சிலுவைப் பாடுகள் இவைகளை சற்றேனும் கருத்தில் கொள்ளாமல் லாபநேக்கில் செயல்படும் செழுமை நற்செய்தியாளர்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றனர். இறைமக்களும் ஏமாற்றமடைந்து கொண்டேயிருக்கின்றனர். இதன் விளைவாக காணிக்கைக்கேற்ற ஜெபங்கள், அற்புதங்கள், அடையாளப் பொருட்களை பயன்படுத்துதல் போன்றவைகளும் பெருகிக் கொண்டே வருகின்றன. இது சீமோன் தூயாவியாரை புரிந்து கொண்டதற்கும் செழுமை நற்செய்திக்கும் எந்த வேறுபாடுமில்லை.

திருமறையில் இயேசு நாதரின் நற்செய்தி நிறை வாழ்வுக்கு அழைக்கிறது. (மத். 6:19-21-24; லூக். 16:13; லூக். 18:22-25; மத். 19:21; I யோ. 2:15; I தீமோ. 6:3-5). இயேசுநாதர் காட்டிய வழியில் நம்பிக்கையோடு வாழ்வோமானால் செழுமை நற்செய்தி போன்ற சவால்களை மேற்கொள்ள முடியும்.

**முடிவுரை :**

அசிசி நகரத்து பிரான்சிஸ் பிறப்பால் மிகப் பெரிய செல்வந்தராயிருந்தும் எளியோரைக் கண்டு மனமிரங்கி அவர்களுக்குத் தொண்டு செய்ய தெருக்களிலே யாசிக்கத் தொடங்கினார், செல்வந்தர் தோற்றத்தை விட்டு ஒரு பிச்சைக்காரனைப் போன்ற தோற்றத்தை ஏற்றுக் கொண்டார். இந்த அடியாரைப் போன்று ஏழையாயினும் செல்வந்தராயினும் அனைவரும் மானிடர் என்ற எண்ணம் வரவேண்டும். நம்மை அதற்கு அற்பணம் செய்தல் அவசியம். மேற்கண்ட சவால்களை மேற்கொள்ள கிறிஸ்து காட்டிய வழியில் நடத்தல் வேண்டும் (ஏசா. 53:1-12; மத். 5:3; மத். 6:2-24; லூக். 4:16-19; லூக். 6:24-26; லூக். 12:22-34; மத். 25:40). இதன்படி நடப்போமானால் அவைகள் நமது ஆன்மீகவாழ்விற்கு வலுசேர்க்கும்.

**மன்றாட்டு :** *வல்லமையும் அருளும் நிறைந்த ஆண்டவரே! உண்மையான ஆன்மீகம் என்பது உலகப்பொருள் சார்ந்தது அல்ல. மாறாக நிலை வாழ்வு வளர கடவுளுடன் கொண்டுள்ள உண்மையான உறவில் இருக்கிறது என்று கற்பித்திருக்கிறவரே, நாங்கள் உண்மையான ஆன்மீகத்துடன் நித்தியமான வாக்குறுதிகளை சுதந்தரிக்க நீர் எங்களுக்கு உதவி புரியும்படி வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றைக்கும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

அருள்திரு. **S. பெல்சன் கிராமணி**



**17-06-2012**

## கிறிஸ்தவ ஆன்மிக வாழ்வின் சவால்கள்

**CHALLENGES TO CHRISTIAN SPIRITUALITY**

I அர. 21:1–29 தி.ப. 8:9–24
தி.பா. 53 லூக். 12:13–21

“ஒன்று செய்வேன் என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் அங்கு என் தானியத்தையும் பொருள்களையும் சேர்த்து வைப்பேன்” லூக். 12 : 18.

**முன்னுரை :**

அருட்பணி பயிற்சி முடித்து பணிக்களம் திரும்பியிருந்த பணியாளர் ஒருவர் தன் பேராசிரியரிடம் போய் “ஐயா ஆசி கூறி விடைதாருங்கள்” என்றார். அப்போது இறையியல் கல்லூரி பேரசிரியர் அவரிடம் நீ ஆண்டவரித்தில் இரண்டு காரியங்களைக் கேட்கவேண்டும் ஒன்று ஆண்டவரே சிலுவை சுமப்பதற்கு மனவலிமையும், திண்ணமானத் தோள்களையும் எனக்குத்தாரும். இரண்டாவது ஆண்டவரே என்னை செல்வந்தன் ஆக்கிவிடாதேயும் என்பவைகளே அவை. இப்படிக்கேட்பாயானால் உன் திருப்பணி சிறப்பாக அமையும் என ஆசிகூறி அனுப்பினார்.

சிலுவையா?, சுகமா?, செல்வமா?, ஏழ்மையா? இவைகளே கிறிஸ்தவர்களாகிய நம் வாழ்வில் சவாலாக அமைந்துள்ளன. செல்வச் செழுமையோடு வாழ்வது குறைவற்ற வாழ்வு என்றும் ஆசீர்வாதம் என்றும் நினைக்கும் இவ்வுலகில் துன்பத்தினுடே கடந்து செல்லும் பக்தர்களின் நிலை என்ன? வாழ்வே துன்பம் தானா? துன்பமில்லா வாழ்வு உண்டா? இதுபோன்ற சவால்களை இம்மூன்று திருமறைப்பகுதிகள் வழியாகக் காண்போம்.

**1. ஏழ்மை :** (I அரச. 21 : 1-19)

ஏழ்மை என்பது ஒருவரும் விரும்பி ஏற்கும் நிலையன்று, மக்கள் ஏழ்மைக்குள் தள்ளப்படுகின்றனர். இந்த ஏழ்மை வெறும் பொருளாதாரம் மட்டும் சார்ந்ததன்று, வறுமையில் உழல்வோர், சமூகக் கொடுமைகளால் இகழ்ச்சிக்கும், நிந்தைக்கும் உள்ளாகி கௌரவம், மரியாதை, கண்ணியம் அனைத்தையும் இழந்தோர் இவர்களைக் குறிக்கின்றன. இவர்களையே

-என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே, எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்கிறார்."

## 2. இறையருள்: பெற்றுக்கொண்டவைகளை மேம்படுத்துகிறது

மாற்றங்களும் முன்னேற்றங்களும் மற்றும் மேம்படுத்துதலும் இறையருள் எனலாம். மேம்பாடு அல்லது முன்னேற்றம் என்பது ஆடம்பரம், அதிக செலவு செய்வதினால் அல்ல. வாழும் மக்களோடு இணக்கமாக, மோதல்கள் இல்லாது அமைதியோடு வாழ்வது எனலாம். இன்று வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள கலாச்சார சீர்கேடுகள் இறையருளால் பெற்றுக்கொண்டவைகளை சீரழிக்கும் அவல நிலைகளை காண முடிகிறது.

இறைவனின் படைப்பில் இணக்கமாக வாழ்தல், மிக முக்கியமான செயல் எனலாம். இறையருளால் நாம் பெற்றுக்கொண்ட அனைத்தும் இணக்கத்தினை உண்டுபண்ணவே ஆகும். இணக்கமாக வாழ வேண்டுமெனில், பிறரின் ஆற்றல், ஆற்றலின்மை, நம்பிக்கை இவைகளை நாம் புரிந்துகொள்ள கடமைப்பட்டுள்ளோம். எனவே ஆண்டவர் ஒவ்வொரு மனிதனும் பெற்றக்கொண்டவைகளை முறைப்படி மேம்படுத்த கால அவகாசங்களை அளிக்கின்றார். லூக்கா 12:13இல், "புறப்படும்போது, அவன் தன் ஊழியக்காரரில் பத்து பேரை அழைத்து, அவர்களிடத்தில் பத்து ராத்தல் திரவியங்கொடுத்து நான் திரும்பி வருமளவும் இதைக் கொண்டு வியாபாரம் பண்ணுங்கள் என்று சொன்னார்."

## 3. இறையருள் பொறுப்பாண்மையை வலியுறுத்துகிறது

இறையருளால் பெற்றுக்கொண்டவைகளை மேம்படுத்தவும், பொறுப்பாண்மையுடன் நடக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றோம். இங்கு தாலந்து என்று குறிப்பிடப்படுவது என்ன என்று ஒரு கேள்வியை எழுப்புவது நலம். தாலந்து என்று இங்கே குறிப்பிடுவது மனிதருடைய திறமைகள் அல்ல. அவை கடவுளால் வழங்கப்படும் இறையரசுக்கு அடுத்த பண்புகளும் தகவுகளுமான நீதி, அன்பு, உண்மை போன்ற பண்புகளாகும். இறையரசை தேடத் தேட வளர்ந்து பெருகும் தன்மை வாய்ந்தவை. இறையரசுக்கான செயல்பாடுகளே இங்கு வாணிபமாக உருவகப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு புரிந்து கொள்வது மிக மிக அவசியம். இந்த உவமை நாம் நீண்ட காலம் புரிந்துகொண்டபடி திறமைகளை வளர்த்துக்கொள்ளும்படி தூண்டும் அறிவுரையுமன்று. வியாபாரம் செய்து பொருளீட்டுவதை நியாயப்படுத்தும் ஆண்டவரின் போதனையுமன்று. மாறாக இறையருள் இறையரசுக்கான தகவுகளை நம்மில் மேம்படுத்துகிறது எனலாம்.

இந்த அமைப்பினை உணர்ந்து இறையருளால் அனுதினமும்



அறிவிப்பா? வருவிப்பா? என்ற பிண்ணனியத்திலே ஒரு காரியத்தை மட்டும் உறுதியாக சொல்லமுடியும். அதாவது 'பொருளாதார வல்லரசாகி' உலகமயத்தை உலகமெங்கும் தீவிரமாகப் பரவச் செய்து உலகை ஆளப் போகும் 'வல்லரசு' நிச்சயமாக மக்களிடம் 'அறிவிப்பை' வைத்து வேண்டுகோள் விடுக்காது; மாறாக கட்டளையே இடும். அதுவே பின்னாட்களில் சர்வாதிகாரத்தையும் உபத்திரவ காலத்தையும் உருவாக்கும்.

## 2. பொற்சிலையா ? பொருள் சிலையா ? : (தானி. 3 : 7)

'பொற்சிலை' என்பது பொருளாதார உச்சநிலையை குறிக்கிற 'பொருள் சிலை' ஆகும்.

உலக மயமாக்கலின் தத்துவமே - நீ எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டால் வாழ்க்கை எளிது என்பதுதான் (Life is easy, when you accept all). இங்கேயும் பொற்சிலையை வணங்குவது என்பது 'எல்லாவற்றையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்று உறுதி ஏற்பதற்கு அடையாளம்.

பொதுவாக ஐந்து காரியங்களை முறிக்கவே கூடாது. வாக்குறுதி (Promise), நம்பிக்கை (Trust), அன்பு (Love), சொந்தம், உறவு (Relationship), இருதயம் (Heart). ஆனால் எவர் ஒருவர் பொருளாதார ரீதியாக இந்த பொற்சிலையை பணிந்து இந்த முடிவு எடுக்கிறாரோ, அதற்கு பின், அவரால் இந்த ஐந்து காரியங்களை முறிக்காமல், ஏமாற்றாமல் இருக்க முடியாது. உலகில் நிலவப் போகிற பொருளாதார வறிய நிலையை, இந்நிலையை கொண்டு வந்து விடும்.

உலக மயமாக்கலின் உச்சநிலை எதுவென்றால் உலகில் எங்கு காணினும் தங்களுடைய பொருளையே பரவச் செய்வதாகும். இதை தான் Global Marketization - சந்தை நிலை உலகமயமாக்கல் என்பார்கள்.

இது ஒரு நாட்டிலுள்ள ஏனைய பொருள் உற்பத்தியை பாதிக்கும்.

இன்று நாமும் நம் நாட்டு தயாரிப்புக்களை விட வெளிநாட்டு தயாரிப்புக்களையே விரும்பி வாங்குகிறோம்.

இந்த 'பொற்சிலை' பொருளாதாரம் வந்து விட்டால் போட்டிக்கு வேறு பொருட்களே இருக்காது.

மேலும் இப்போதே அதிக பணசுமையை பணப்பைக்கு தரக்கூடாது என்று Credit Card, Debit Card வெளிநாடுகளில் வந்துவிட்டது. நம் நாட்டிலும் பரவி வருகிறது. இது இருந்தால் சேமிப்பு இருக்காது.

இனி வரும் காலங்களில் இப்படி பணப்பை எடுக்க வேண்டியதில்லாமல் உயிரி தொழில்நுட்பம் (Bio-technology) மூலமாக கையின் மணிக்கட்டிலேயே ஒரு Chip பொருத்தி அந்த மனிதனை கண்காணிக்கும் GPRS என்னும் தொழில்நுட்பத்தையும் அதில் புகுத்தப் போகிறார்களாம். இதையே திருமறை மிருகத்தின் 'முத்திரை போடப்பட்ட நிலை' என்கிறது.

உலகமயம் என்னும் மாயம் மனிதனை முழுமையாக அடிமைப்படுத்தப் போகிறது. தானி. 3 : 6இன் படி எந்த பெரிய மனிதனும் இதற்கு விதிவிலக்கல்ல. எல்லாரும் அடிமைப்படுத்தப்படுவர் என்பதையே சொல்லுகிறது.

### 3. அக்கினிச் சூளையா ? அவியாத அக்கினியா ? (தானி. 3 : 15)

யூதர்களின் விசேஷம் என்னவென்றால் தங்கள் மரபை, தங்கள் வழிபாட்டு முறையை மாற்றிக் கொள்ளவே மாட்டார்கள்.

இங்கேயும் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதர்கள், ராஜாவாகிய நேபுகாத்நேச்சரால் மிரட்டப்படுகிறார்கள். தானி. 3 : 15. ஆனாலும் அவர்கள் தங்கள் திடமுடிவை பின் வாங்கவில்லை.

அந்தக் காலத்திலே பிரபலமாக இருந்த தண்டனை முறை 'அக்கினித் தண்டனை'. இது தொடர்ந்துக் கொண்டே இருந்தது. கல்தேயருக்கு பின் வந்த கிரேக்கரும் இதைப் பயன்படுத்தினர்.

பித்தளை, வெண்கலத்தை நெருப்பினால் உருக்க முடியாது. Falraius என்ற மன்னன் Brazon Bull என்ற பித்தளை காளை செய்து, அதனுள் கொலை செய்யப்படுவோரை போடுவித்து பூட்டுப் போட்ட பின்னர் தீ வைத்து விடுவான். உள்ளே இருக்கும் மனிதன் உயிருக்காக ஓலமிடுவது, இந்த பித்தனை காளை சத்தமிடுவது போலவே இருக்கும். கி.மு. 554-ல் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டபோது இந்த பித்தளை காளை கடலில் தூக்கி எறியப்பட்டது.

கி.மு. 500-ல் Celtic பழங்குடி மக்கள் Wicker Man என்னும் பெரிய கொடும்பாவி உருவத்தை பெரிய கம்புகளால் சரம் கட்டுவது போல கட்டி, மனித உருவம் செய்து, அதனுள் பலி பொருட்களான கால்நடைகள்,



**01-07-2012**

## உக்கிராணத்துவ ஞாயிறு

**உக்கிராணத்துவம் : வளங்களை மேம்படுத்தலும் பொறுப்புணர்வும்**

**Stewardship : Resource Management and Accountability**

2 அரசர். 12 : 1–6 | பிலி. 4 : 10–20
தி.பா. 15 | லூக். 19 : 11–27

"அதற்கு அவர் : உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." லூக். 13 : 26

காந்தியடிகள் இவ்வுலகில் மனிதனது தேவைகள் சந்திக்கப்பட அனைத்து வளங்களும் உள்ளது. ஆனால் அவனது போட்டியினால் பொறாமையினால் தேவைகள் சந்திக்கப்படாமல் போய் விடுகிறது என்றார். "God created the world to meet every one's need, not for every one's greed."

இறைவன் இவ்வுலகில் மனுக்குலத்திற்கு தேவையான அனைத்து வளங்களையும் படைத்துள்ளார். அவற்றை முறைப்படி பயன்படுத்தவும், மேம்படுத்தவும் மனுக்குலம் கடமைப்பட்டுள்ளது. ஆனால் லூக்கா 19:26-இல் இறைவன் நமக்கு தந்தவைகளை அவரது சித்தம் அனுதினமும் செயல்பட, உக்கிராணத்துவத்துடன் நடப்பது நமது கடமையாகும். இறையருள் மூலமாக நாம் நன்மை பெறுகிறோம், ஆகவே நாம் பெற்றுள்ள நன்மைகளுக்காய் உக்கிராணபிள்ளைகளாயிருக்க வேண்டும்.

### 1. இறையருள் : பெற்றுக்கொள்ள செய்கிறது

பெற்றுக்கொள்வது என்பது எல்லோருக்கும் விருப்பமான செயல். ஆனால் பெற்றுக்கொண்டவைகளுக்கு பொறுப்பாண்மையுடன் நடக்கிறோமா என்பதை சிந்திக்க தூண்டுவது தான் இந்த உவமையின் சிறப்பு. நாம் பெற்றுக்கொண்டவைகள் எல்லாம் இறையருளால் பெற்றவைகள் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

குறுகிய காலத்தில் அதிகம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், தேவைக்கு மிஞ்சி, இறைச் சித்தத்திற்கு எதிராக, அதிக ஆசையினால் பெற்றுக்கொள்ள நினைப்பது எல்லாம் வளமையானது அல்ல, என்ற சிந்தனைக் கொள்வது நலம். இறைவன் நமது நிலையினை அறிந்து நம்மை பயன்படுத்த அவர் விரும்பும்போது அவரது கருவிகளாக செயல்பட கடமைப்பட்டுள்ளோம். பவுலடியார் கூறும்போது பிலிப். 4:13-இல்

**01-07-2012**

*அருணோதயத் தொழுகை*

# அமைதி வாழ்வு அருளும் ஆண்டவர்

ஏசா. 2 : 1–5

"அவர்தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார்; நாமும் அவர் நெறிகளில் நடப்போம்." (ஏசா. 2 : 3)

1947-ல் இந்தியா விடுதலை பெற்றிருந்தும் சமயத்தின் பெயரால் வன்முறைகள் தொடர்ந்தன. அப்போதைய ஆட்சியாளர்களால் தீர்வு காண முடியாத நிலையில் (1948) காந்தி உண்ணாநிலையை அறிவித்தார். அவர் முன் வைத்த கருத்து அமைதி திரும்பும்வரை உணவு உண்ணமாட்டேன் என்பதாகும். இரண்டொரு நாட்களில் தலைவர்கள் தீவிரமாக செயல்பட்டனர். வன்முறை நீங்கி அமைதி ஏற்பட்டது.

இன்று உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறதெனில் அதற்கு காரணம் சிலரது அகிம்சையும் அன்பு வாழ்வுமாகும்.

இஸ்ரவேல் மக்கள் இழைத்த தவறு கடவுளிடமிருந்து அவர்களைப் பிரித்தது. நாடும் தங்களுக்குள் பிளவுபட்டு இருந்தது. ஆன்மீகம் இழுவை நிலையில் இருந்தது. உயிரற்ற வழிபாடு (கடவுளற்ற கடவுள் வழிபாடு) உறவுகளுக்குள் விரிசல், சமூக உறவற்ற நிலை, வலிமை நாடான ஆசீரியாவினால் யூதாவுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் போன்ற முரண்பாடுகளினால் வாழ்வைக் குறித்த நம்பிக்கை இழந்து அமைதியற்ற சூழலில் மக்கள் வாழந்தனர்.

இந்நிலையில் இறைவாக்கினராகிய முதலாம் ஏசாயா முடிவில்லா அமைதி வாழ்வைக் குறித்த நம்பிக்கையினைக் கொடுக்கிறார். கடவுளே அவ்வாழ்வை வழங்குவதாகவும் பதிவு செய்கிறார். எருசலேம் ஆலயம் மீண்டும் உயிருற்றெழும் மக்களினங்கள் அதை நோக்கி வருவார்கள். இவ்வாக்கு இப்புதிய மாதத்தில் முதல் நாளில் நமக்கு தரும் செய்தி என்ன? கடவுள் அவர் தம் ஆலயத்திலிருந்து நமக்கு அருளும் அமைதி எத்தகையது? இம்மாதத்தில் கடவுள் எங்ஙனம் நம்மோடு செயல்படுகிறார் என்பதை சிந்திப்போம்.



## 1. அமைதியை போதிப்பார் : (ஏசா. 2 : 3)

இஸ்ரவேலர் கடவுளை படைகளின் தலைவராகவும், எதிரிகளை அழிப்பவராகவும் பார்த்து பழக்கப்பட்டவர்கள். புற இனத்து மக்களை அழித்து தங்களுக்கு அமைதி தருவார் என நம்பியவர்கள். இவர்கள் ஆயுதங்களின் வழி அமைதியை எதிர்பார்த்தவர்கள். ஆனால் ஆலயம் அமைதிக்கான வழி காட்டுதலைப் பெறும் இடமாக காட்டப்படுகிறது. இச்செய்தி இஸ்ரவேலருக்கு முரண்பாடாக இருந்தாலும் உயர்த்தப்பட்ட ஆலயத்தில் வேற்றுமைகளைக் களைந்து ஒருங்கிணையும்போது அமைதிக்கான வழியை ஆண்டவர் கற்றுத் தருவார் என்ற இறை உண்மையைத் தெளிவுபடுத்துகிறார். அப்படித் தெளிவுபெறும் மக்கள் அவ்வழி நடக்க தங்களை அர்ப்பணிப்பார்கள் என்ற உண்மையையும் உணர்த்துகிறார். வாழ்வைக் குறித்த தெளிவினை உணரும்போது அதை நடைமுறைப்படுத்த கடவுள் துணை செய்கிறார். அது அமைதிக்கான முயற்ச்சிக்கு வழி நடத்தும்.

## 2. அமைதியை செயல்படுத்துவார் (ஏசா. 2 : 4)

கடவுள் அமைதியை கற்றுக் கொடுப்பவராக மட்டுமல்ல அதை செயல்படுத்துகின்றவராகவும் விளங்குகிறார். உலகம் அமைதி என்று பேசினாலும் ஆயுதங்களை (அணு) உருவாக்கி பிற நாடுகளை அச்சுறுத்தி தங்கள் நாடுகளில் போலியான அல்லது மயான அமைதியை உருவாக்க விளைகின்றனர். இந்த அமைதி கடல் நீரோட்டத்திற்கு மேல் உள்ள தண்ணீரைப் போன்றது. அதோடு இச்செயல் கடவுள் நம்பிக்கையைவிட ஆயுத நம்பிக்கையை முதன்மைப்படுத்துகிறது.

ஆயுத நம்பிக்கை அமைதியான சூழலுக்கு வழி நடத்தாது என்பது உண்மை. அப்படியெனில் ஆண்டவரது ஆட்சியில் வன்முறை அல்லது அழிவிற்குரிய கருவிகள் மனிதனின் வாழ்விற்கான அடிப்படைத் தேவையை உருவாக்க உதவுகின்ற கருவிகளாக மாறுகின்றன. வழக்குகள் முடிவிற்கு வருகின்றன. ஒரு இனம் மற்றொரு இனத்திற்கு எதிராக வன்முறையை பயன்படுத்தாது. வேற்றுமைகளற்ற ஒருங்கிணைந்த சமூகம் கட்டமைக்கப்படுகிறது. அமைதி கடவுளால் செயல்வடிவம் பெறுகிறது.

## 3. அமைதி வழி நடத்துவார் (ஏசா. 2 : 5)

தன்னிலை உணர்ந்து மீட்படைந்த மக்களினம் ஒரு சமூகமாக இணைகிறது. கடவுளது தலைமைத்துவத்தின் கீழ் அவரது ஒளியில் அமைதி வழி நடத்தப்படுகின்றனர். மீகா. 4 : 4இல் அவர்களுள் ஒவ்வொருவரும் தம் திராட்சைத்தோட்டத்தின் நடுவிலும், அத்தி மரத்தின் அடியிலும்

அமர்ந்திருப்பர். அவர்களை அச்சுறுத்துபவர் எவருமில்லை. ஏனெனில் படைகளின் ஆண்டவரது திருவாய் இதை மொழிந்தது என வாசிக்கிறோம். ஆகவே கடவுள் அவரது அமைதி வழியில் நம்மை நடத்துகையில் அச்சம் நம்மை ஆட்கொள்வதில்லை.

எனவே இப்புதிய மாதத்தில் அமைதி வாழ்விற்கு உடமைகளின் மீதும், ஆயுதங்களின்மீதும், வன்முறைகளின் மீதும் நம்பிக்கை வைக்காமல் நிலையான அமைதி வாழ்வு அருளும் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து அவரது வழிகாட்டுதலின்படி வாழ்வை அர்ப்பணிப்போம். அவரில் அமைதி பெற்று அமைதியின் கருவிகளாய் அவர் வழியில் செயல்படுவோம்.

அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் (மத். 5 : 9). அமைதி ஏற்படுத்தி கடவுளின் பிள்ளைகள் எனும் உரிமையினைப் பெற்று இம்மாதத்தில் புனித பயணத்தைத் தொடருவோம்.

**திரு. ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**



பறவைகள் வைத்து, பின்னர் வைக்கோல், காய்ந்த புற்கள் வைத்து கட்டி தீ மூட்டி விடுவர். இதுவும் பின்னாட்களில் கொலை கருவியானது. நேபுகாத்நேச்சார் காலத்தில் அக்கினிச் சூளை கொலை கருவியாக இருந்தது. இருந்த போதிலும் இந்த யூதர்கள் அதற்காக அஞ்சவில்லை. அவர்கள் அஞ்சியதெல்லாம் மத். 3 : 12-ல் சொல்லப்பட்டுள்ள அவியாத (or) அணையாத அக்கினி. அதாவது ஆண்டவரின் நியாயத்தீர்ப்பு. மத். 13 : 42, 50-லும் இதை பார்க்கிறோம்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே! முழு படைப்புக்கும் காரணரே! நீர் உம்முடைய திருச்சபைக்குத் தந்திருக்கிற ஆற்றலினால் சவால்களைச் சந்திக்கவும், பற்றுறுதியில் உறுதியாய் நிலைத்திருக்கவும் உதவி செய்யும். அத்துடன் சோதனைகளை மேற்கொள்ளும் வலிமையையும் அருள்வீராக. மாறுபடும் சூழல்கள் மத்தியில் சான்று பகரும் பற்றுறுதிச் சமூகமாகச் திகழ உதவிசெய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றைக்கும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே வேண்டுகிறோம் ஆமென்.*

**அருள்திரு. J. பிரகாஷ் நாயகம்**

மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புகள் சரி செய்யப்படும்.

திருச்சபையின் பணித்திட்டங்கள், நலத்திட்டங்கள் ஆகிய அனைத்தும் திருச்சபையிலுள்ள அடித்தட்டு மக்களின் நலன் சார்புடையதாக அமைதல் பயன் தரும். இல்லாமையில், இயலாமையில் உழல்வோர் சார்புநிலையில் திருச்சபையும் அதன் செயல்பாடுகளும் அமைதலே கிறிஸ்து விரும்பும் திருப்பணியாகும்.

**மன்றாட்டு :** கடவுளே, புதிய உடன்படிக்கையாகிய மகிழ்வின் சபையில் ஏழைகளையும், பாவிகளையும் அவர்களின் இடத்தை பெற்றுக் கொள்ள அழைத்தீர். எளிமையானவர்களிடத்திலும் துன்பப்படுகிறவர்களிடத்திலும் கடவுளின் உடனிருப்பை உம் திருச்சபை எப்போதும் மதிக்கவும் உம்முடைய மேஜையில் ஒன்றாக கூடி இருக்கும் சகோதர சகோதரிகளை ஏற்றுக் கொள்ளவும் கற்றுக் கொள்ள உதவி செய்யும். இவைகள் அனைத்தையும் உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் எங்கள் கடவுளாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம் ஆமென்.

அருள்திரு. S. **ஜாண் சகாயம்**



பொறுப்பாண்மையுடன் வாழ்வோம்.

இறையருள் நம்முடன் இருப்பதாக.

**மன்றாட்டு :** *நீதியுள்ள கடவுளே, ஏழைகள் உம் அரசில் பங்கு கொள்வார்கள் எனவும், சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரிப்பார்கள் எனவும் எங்களுக்கு கற்றுத்தந்தீர். திருச்சபை ஏழைகளை அடையாளம் காணவும் அதன் வளங்களை பொறுப்புணர்வோடும் கடமையுணர்வோடும் பகிர்ந்தளிக்க உதவி செய்யும். பயனற்ற விளம்பரங்களிலிருந்து உம் திருச்சபையை பாதுகாத்தருளும். அதன் மூலம் நாங்கள் இவ்வுலகத்தினூடாக பயணிக்கும்போது எங்களுக்கு மாதிரியாக எங்கள் கடவுளாகிய இயேசு கிறிஸ்துவினூடாக உம் உதாரத்துவமான அன்பை காண்பிக்க உதவியருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் உம்முடன் அரசாளும் உமது திருமைந்தன் இயேசு கிறிஸ்துவினூடாக வேண்டுகிறோம். ஆமென்.*

அருள்திரு. அறிவர் **A.R. செல்லையா**

**08-07-2012**

***இறையியல் கல்வி ஞாயிறு***

# இறைமக்களை பற்றுறுதியில் வளர்த்தல்

**NURTURING THE PEOPLE OF GOD IN FAITH**

ஆமோ. 7 : 10–17 | 1 திமொ. 4:6–15
திபா. 119 : 33–48 | மாற். 6 : 30–44

"நான் வரும்வரை விசுவாசிகளுக்கு மறைநூலைப் படித்துக் காட்டுவதிலும், அறிவுரை வழங்குவதிலும் கவனம் செலுத்து" (1 திமொ. 4 : 13)

கடவுளை புரிந்துகொள்ளும் அறிவைப் பற்றி "சார்வாக்கா" என்ற தத்துவம் சொல்லுகிறதாவது. நான்கு பார்வையற்றவர்கள் யானை எப்படியிருக்கும் என பார்க்க சென்றனர். ஒருவர் யானையின் கால்களைத் தொட்டு யானை தூண்போல் இருக்கும் என்றான். வேறு ஒருவர் யானையின் காதைத் தடவி, யானை முறம்போலிருக்கும் என்றான் இப்படியாக துதிக்கையைத் தொட்டவன் யானை உலக்கை போன்றும், வாலைத் தொட்டவன் யானை துடைப்பான் போன்றும் இருக்கிறது என்று அறிக்கையிட்டனர் யானை தூணும் அல்ல துடைப்பானும் அல்ல. இதுபோன்று இறையியலை கற்காதவன் கடவுளைக் குறித்து தெளிவாக (முழு அறிவு) புரிந்து கொள்ள இயலாது. கடவுள் இயலைக் கற்றவன் கண்டிப்பாக தெளிவை அடையலாம், அறியலாம். சமயங்கள் கடவுளை விதவிதமாகவெளிப்படுத்தினாலும் நமது திருமறை வெளிப்படுத்தும் கடவுள் (ஏசுக்கிறிஸ்து) துல்லியமாக அறியப்படத்தக்க காரணம் நமது கடவுளை பௌதீகமாக உணர முடிகிறது. வரலாற்றில் இடம் பெற்று வெளிப்படுத்துகிறார். இதனை 1யோவா. 1:1-ல் கேட்டதும், கண்டதும் தொட்டதுமாயிருக்கிற என்பதிலிருந்து ஏசுகிறிஸ்து மாயை அல்ல என்பது புரிகிறது. இறையியல் என்பது இறைவனை கண்மூடித்தனமாக நுகராது ஆய்வின் அடிப்படையில் கற்பதாகும். அவரது படைப்பு, குணங்கள், சபித்த அப்போஸ்தலரின் மாற்றம், கிறிஸ்தவரின் குரல்வளையை முறிக்க சென்ற புலி, கிறிஸ்துவுக்காக தன்னுயிரை கொடுத்த பவுல் இவையனைத்தும் இறைவன் வாழுகிறார். என்பதற்கு சான்று." கடவுள் எந்த வடிவம் என்பதை விட அவரது ஆற்றல் மீட்பின் செயல் இவைகளை புரிவதே மேல். இறைக்கல்வி இறைவனைப் பற்றிய அறியாமையை மாற்றுவதே.

## 1. இறையியல் கல்வி தெளிவு தருகிறது :

இறைவாக்கினர் ஆமோஸ் இறைவார்த்தைகளை திரித்து சொல்வதை விரும்பவில்லை. சமாதானம் இல்லாத இடத்தில் சமாதானம்



தீர்க்கதரிசிகளின் இக்குரல், ஏழைகளின் சார்பாக எழுந்த இறைவனின் குரலே ஆகும்.

## 2. இறை ஆற்றலுக்கான தேடலின் இடம் திருச்சபை :

(தி.ப. 4:27-32)

தொடக்கத் திருச்சபையினர் கிறிஸ்துவுக்காக தாங்கள் எதிர்கொண்ட எதிர்ப்புகள் நீக்கப்பட வேண்டும் என்றோ தங்களை எதிர்க்கும் தீயவர்கள் தோல்வியைத் தழுவட்டும் என்றோ, தங்களின் பாதுகாப்பு குறித்தோ இறைவனிடம் மன்றாடாது முழுத்துணிவுடன் கடவுள் வார்த்தைகளை எடுத்துரைக்கும் வரம் கேட்டும், ஊழியர்கள் வழியாய் இறைஆற்றல் வெளிப்படவும் மன்றாடினர். அவ்வமயம், அவர்கள் மன்றாட்டு இறைவனால் கேட்கப்பட்டதின் வெளிப்பாடாக அவர்கள் குழுமி ஜெபித்த இடத்தில் அச்சமூட்டும் நடுக்கம் நிகழ்வுற்று அவர்கள் இறை ஆற்றலை பிறருக்குக் கூறும் வலிமை பெற்றனர். இவ்வனுபவத்தால் சுயநலனை துறக்கும் ஆற்றலினை இறையடியவர்கள் பெற்றதுடன் தங்கள் உடமைகள் குறித்த அவர்கள் சிந்தனைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதன் விளைவாக தங்கள் உடமைகளைக் குறித்து எவரும் உரிமை பாராட்டவில்லை. தேவைக்கு அதிகமாக தங்களிடம் இருந்தவற்றையல்ல தங்கள் வீடுகளையும் அடிப்படை தேவைகளாகிய நிலபுலன்களையும் விற்று அந்தத் தொகையை பொது கணக்கில் சேர்த்து விட்டனர் (தி.ப. 4:32-34). எனவே தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. இங்ஙனம் மக்கள் அனைவரின் நல்லெண்ணத்தையும் தொடக்க திருச்சபையினர் பெற்று சாட்சியத்துடன் வாழ்ந்தனர். இதன் மூலம் உயிர்த்தெழுதலின் மக்களாக தங்களை நிரூபித்தனர் (தி.ப. 4:33).

## 3. சமூகம் தழுவிய ஆன்மீகமே கிறிஸ்து வழங்கும் விடுதலை :

(லூக். 4:16-21)

கிறிஸ்து வழங்கும் விடுதலை தனி மனித வாழ்வு தழுவிய ஆன்மீகமாக அமையாமல் முழு உலகும் (சமூகம்) தழுவிய ஆன்மீகமாக அமைந்திருந்தது. எனவே திருச்சபை இத்தகை சிந்தனைகளை உள்வாங்கிக் கொள்தல் அவசியம். இதைத்தான் இயேசு நாதரின் நாசரேத்தூர் கொள்கை விளக்க அறிவிப்பில் ஆண்டவர் அருள்தரும் ஆண்டு (யூபிலி வருடம்) என்று கூறப்பட்டுள்ளது. தாங்கள் பெற்ற கடனுக்கு ஈடாகச் செலுத்தப்பட்டு மீட்க இயலா நிலையில் பிறர் வசம் உள்ள மூதாதையரின் உடமைகள் அதன் உரிமையாளர் வசம் வந்து சேரும். இதன் மூலம் சமூக ஏற்ற தாழ்வுகள் அகன்று மானுடம் மனித அந்தஸ்துடனும், சுய மரியாதையுடனும் வாழும் நிலை ஏற்படும். இல்லாமையின் காரணமாக

**3. இறையியல் கல்வி தீமையை எதிர்க்கிறது :** (1தீமோ. 4:6-15)

திருமறைப்படி தீமை செய்வதும், நன்மை செய்யாதிருத்தலும் பாவமே. வீண் பேச்சு விகற்பங்களையும், சீர்கேட்டையும் உருவாக்கும் உலக இச்சை நேர்வழியை மாற்றும் அன்பில்லாத ஒழுக்கத்தையும், ஒழுக்கமில்லாத அன்பையும் உருவாக்கும். எனவே தூய பவுலார் ஊழியர்களுக்கு ஒருவனும் அசட்டைப்பண்ணாதபடிக்கு வாழவேண்டும் என்கிறார். வார்த்தை, நடத்தை கற்பு இவைகள் தவறும்போது தீமை தளிர்க்கும்.

வாழ்வில் நன்மையை குறைக்கும்போது தீமை வளரும். தீமையை குறைப்பதினால் நன்மை வளரும். தீமையின் வேரை கண்டுபிடித்து (இறைக்கல்வி) அதனை அகற்ற முயலுவது நன்மை செய்ய வழியாகும் எதை செய்ய வேண்டும் என்பதில் கவனம், நேர்மையான சிந்தனை, பயன்தரும் செயலைச் செய்வது, முதலியை தீமையை குறைப்பதாகும். இதனைத்தான் நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும். என பவுல் கூறுகிறார். மெழுகுவர்த்தியை கொழுத்ததினால் (கற்றுக்கொள்ளுதல்) இருள் தானாக சென்றுவிடுகிறது. இதைத்தான் தீமோத்தேவுக்கு 4:15-ல் இவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் என பவுல் எழுதுகிறார்.

**முடிவுரை :** இறைகல்வி மிகவும், அவசியம். நான் கடவுளைக்குறித்து எண்ணுகிற எண்ணம் சரியானது அல்ல. பலருடைய எண்ணங்களை கற்றால் நாம் ஒரு முடிவான தெளிவுக்குவரலாம். சுருங்கக்கூறின் நன்மை செய்தால் தீமையை தவிர்க்கலாம். நன்மைகளின் தொகுப்பே கடவுள்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, நீர் இயேசுகிறிஸ்துவிலே சாதாரண மக்களை அழைத்து உம் சீடர்களாக்கி அவர்களை உம் உண்மையை கற்றுக் கொடுக்கவும் போதிக்கவும், அனுப்பினீர். எம் நாட்டிலுள்ள எல்லா இறையியல் கல்லூரிகளும் உம் பணிக்காக ஆண்களையும் பெண்களையும் தகுதிப்படுத்த அவைகளை கண்ணோக்கிப்பாரும். பிறரை கரிசனையோடு பார்க்கவும். உம்முடைய வார்த்தையில் உறுதியுடன் போராடி மேற்கொள்ளவும் அதனூடாக அவர்கள் உமக்காக பேசவும், செயல்படவும் உம் மக்களை பற்றுறுதியில் வளர்த்தவும் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இவ்வுலகில் துவக்ககால திருச்சபை தலைவர்களை தெரிந்தெடுத்து உருவாக்கிய எங்கள் கடவுளாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

அருள்திரு. **V. டேவிட்**



**15-07-2012**

# ஏழ்மையும் ஏழைகளோடு ஒன்றிணையும் திருச்சபையும்

## POVERTY AND THE CHURCH'S SOLIDARITY WITH THE POOR

| | |
|---|---|
| ஆமோ. 8:4-7 | திப. 4:27-32 |
| தி.பா. 145 | லூக். 4:16-21 |

**"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை; எல்லாம் அவர்களுக்கும் பொதுவாய் இருந்தது (தி.ப. 4 : 32).**

"Poverty" என்னும் ஆங்கிலச்சொல் "வறுமை" என Universal Deluxe Dictionary மொழியாக்கம் செய்துள்ளது. வறுமை என்பது மனித அந்தஸ்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்குத் தேவையான வாழ்வாதாரங்கள் குறைவுபட்ட நிலையாகும். வறுமை அனைத்துத் தீமைகளிலும் கொடியதும் குற்றங்களில் மிகவும் இழிவானதும் ஆகும் என ஓர் அறிஞர் குறிப்பிடுகிறார். வறுமை உலகு சார்ந்த ஓர் முக்கிய பிரச்சினை ஆகும்.

இவ்வுலகின் மக்களை இரண்டு வகையினராகப் பிரிக்கலாம். ஒரு வகையினர், செல்வப்பெருக்கோடு உலகின் பெரும்பான்மை செல்வங்களையும், வளங்களையும் துய்க்கும் சிறுபான்மையினர். மற்றொரு வகையினர் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் பெரும்பான்மையினர். பசியாலும், பட்டினியாலும் பிணியாலும் பிற பீடைகளாலும் துன்புறுகின்ற பெரும்பான்மை இரண்டாம் வகையினரையே எளியவர், சிறைப்பட்டவர், ஒடுக்கப்பட்டவர் என்றெல்லாம் திருமறை கூறுகின்றது (ஏசா. 61:1; ஆமோ. 8:4). இந்தவகை மக்கள் எப்படி உருவாக்கப்படுகின்றனர்?

சிலர் வளமாக வாழ்வதற்காகப்
பலர் வறுமைக்குள்ளாக்கப்படுகின்றனர்
சிலர் உரிமை வாழ்வு நடத்துவதற்காகப்
பலர் அடிமைகளாக்கப்படுகின்றனர்
சிலர் வசதியாக வாழ்வதற்காகப்
பலர் நெருக்கி ஒடுக்கப்படுகின்றனர்

இவ்வாறு, வறுமைப்படுத்தப்பட்டும், ஒடுக்கப்பட்டும், நெருக்கப்பட்டும் வாழ்வோர் உலகில் எக்காலத்திலும் எவ்விடத்திலும் உண்டு. இவர்களேஎண்ணிக்கையிலும் மிகுந்து காணப்படுகின்றனர்.

இத்தகையோரின் நல்வாழ்வுக்காகவே தாம் இருப்பதாக ஆளுவோர் கூறிக் கொள்கின்றனர். மன்னர் ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு தான் கூறினர். மக்கள் ஆட்சிக் காலத்திலும் இவ்வாறு தான் கூறுகின்றனர். ஆனால் நாளுக்கு நாள், இந்த இரண்டாம் வகையினரின் எண்ணிக்கை கூடுகின்றதே தவிரக் குறையவில்லை. காரணம் ஆளுவோரின் சொல்லும், செயலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதாகும்.

எளியவரின் மேம்பாட்டுக்கென்று வகுக்கப்படும் திட்டங்கள் எல்லாம் செல்வர்களுக்கு வாழ்வளிக்கும் திட்டங்களாகவே மாறிப்போகின்றன. ஏனெனில் திட்டங்களை வகுப்பவரும் செயல்படுத்துபவரும் செல்வர்களாகவே இருக்கின்றனர்.

இந்த நிலையில் தான் எளியவர்கள் கவனிப்பாரற்றவர்களாக, “மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக”, நெருக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், உரிமை இழந்தும், வாழ்விழந்தும் நாடெங்கும் காணப்பட்டனர், காணப்படுகின்றனர். இப்பேர்ப்பட்டவர்கள் தான் இயேசுவின் பணியில் முதன்மையானவர்களாகக் கருதப்பட்டனர். இந்த மக்களை மனிதன் மறந்தான், இறைவன் மறக்கவில்லை. இப்பேர்ப்பட்வர்கள் சார்பில் நின்று இவர்கள் உரிமைகளுக்காய் இறைவன் குரல் கொடுத்தார்.

### 1. இறைவனால் மறக்கப்படாத மக்கள் : (ஆமோ. 8:4-7)

சமயக் கடமைகள் சடங்கை நிறைவேற்றுவதில் அடங்கி இருந்தன. அவை சமுதாய உறவுகளை சிறிதளவும் தொடவில்லை. இதனால் அரசு அதிகாரிகளின் துணையுடன் செல்வர்கள் ஏழைகளை ஈவு இரக்கமின்றி வாட்டி வதைத்தனர். இதன் விளைவாக ஏழைகள் பசியாலும், பட்டினியாலும் மடிந்தனர். சிலர் தங்களையே அடிமைகளாக விற்கலாயினர். கொடிய வாதைக்கும், கொள்ளை நோய்க்கும் பலியாயினர், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறைய உறைவிடமின்றி, அல்லல் பட்டனர். இக்கொடுமைகள் இஸ்ரவேலருக்குச் செய்யப்பட்டாலும் அவைகள் யாவேக்குச் செய்யப்பட்டவையே. பொருட்களைப் போன்றே ஏழைகளையும் வாணிபப் பொருளாக்கினர்.

இந்த மக்களை மனிதர் மறந்து விட்டனர். ஆனால், இறைவன் மறக்கவில்லை இறைவாக்குரைப்போர் வாயிலாக, வறுமைப்பட்ட இந்த மக்களைப் பற்றிய செய்தியை இறைவன் கூறிக்கொண்டே இருந்தார்.



இருக்கிறது என்று கூறி கூலிக்கு இறைவாக்கு சொல்லுகிற அமத்சியா ஆமோசை எதிர்க்கிறார். ஆமோஸ் இதைக்கண்டு கவலைப்படாது இறைவார்த்தையை அப்படியே சொல்லுவது இறைவனைக் குறித்த தெளிவு என எண்ணுகிறார். நீ போய் இஸ்ரவேலுக்கு விரோதமாய் இறைவாக்கு உரை என்பதிலிருந்து இறை வெளிப்பாட்டை சுயநலத்திற்கும், சுய ஆலயத்திற்கும் பயன்படுத்த விரும்பாது அப்படியே சொல்வதாகும். ஊழியம் அப்பத்திற்காக அமையும் போது இறைவார்த்தை தவறாக அமைகிறது. மோசே, சீடர்கள், பவுல் போன்றோரை அனுப்புவதற்குமுன் அழைத்தார். அழைத்தார் என்றால் கற்றுக்கொடுத்தார் என்பது பொருள். நகோமியிடம் ரூத் கற்று களத்தில் செயல்பட்டதினால் மேன்மை கசப்பினூடே தேடிவந்தது. இதனால் ரூத்தின் நற்குணம் உத்தமமாயிருந்தது (3:10) இறைவன் பாதப்படியில் கற்காதவன் இறைவனைக் குறித்த தெளிவை வெளிப்படுத்த இயலாது. இங்கே ஒரு ஆசாரியனுக்கு இறைவாக்கினருக்கும் மோதல் காரணம் உண்மைக்கு (ஆமோஸ்) முன் பொய் (அமத்தியா) நிற்கமுடியவில்லை.

### 2. இறையியல் கல்வி மாற்றுருவாக்கிறது :

அந்தியோக்கியா சபையில் பிரசங்கத்தைவிட (அப். 11:20) புத்தி சொல்வதைவிட (11:23), கற்றுக்கொடுத்தபோது (உபதேசம்-கற்றல்) (11:26) கிறிஸ்தவரானார்கள். தெளிவாக கற்கும்போது, சந்தேகம் வர இடமில்லை மாற்று உபதேசம் மாற்ற இயலாது. மாற்கு 6:34-ல் ஏசு உபதேசிக்க (கற்றுகொடுக்க) தொடங்கினதினால் 5 அப்பங்களும் 2 மீன்களும் பகரப்பட்டன மனம் தெளிவினால் பக்குவப்படும்போது மனம் பகர முன்வருகிறது. இயேசுவின் நீங்களே அவர்களுக்கு அப்பம் கொடுங்கள் என்ற போதனை சாதனையாகிறது. இது இன்றைய உலகத்தின் சவால். பகரப்பட வேண்டிய செல்வங்கள் தேங்கிக் கிடக்கிறது (கறுப்புப்பணம் அளவுக்கு அதிகமான சொத்து-லஞ்சம் etc) 80 விழுக்காடு செல்வங்கள் 20 விழுக்காடு மக்களிடத்திலும், 20 விழுக்காடு செல்வங்கள் 80 விழுக்காடு மக்களிடத்தில் இருக்கக் கூடாது. பணம் பகிர்ந்தால் மணம் தானாக வரும். ஒரு மனிதன் தாராளமாய் வாழவும் செல்வத்தில் மூழ்கி வாழவும் இயேசு விரும்பவில்லை. ஆடம்பரம் அழகல்ல அழிவே. இது நிலையான வாழ்விற்கு தடையே. பூமிதான இயக்கத்தை உருவாக்கிய வினோபாபாவேயின் எண்ணம் சரியானதே பகரப்பட கடவுளைக் குறித்த தெளிவை கற்கவேண்டும் பகரவில்லை என்றால் கடவுள் இல்லா மனம் கல்லாகும். உலகம் வறுமையில் தொங்கும். யாக்கோபு அப்போஸ்தலர் கூறுவது சரியே. குளிரில் வாடுகிறவனுக்கு மன்றாட்டும் அவசியம் (மனதிற்கு) போர்வையும் (உடலுக்கு) அவசியம் (யாக். 2 : 16). இறைவனைக்குறித்த அறிவு மாற்றுருவாக்கத்தை உலகத்திற்கு அளிக்கும்.

திருமுழுக்கைப் பற்றியத் தவறான போதனைகள் பெருகி நிற்கும் இக்காலத்தில் அகவாழ்வில் ஏற்படவேண்டிய மாற்றத்துக்கு முதன்மை தருவதை தவிர்த்து புறச்சடங்குக்கு முதன்மை தரும் மக்கள் முன், திருமுழுக்கு கிறிஸ்துவுடன் பாடுபடவும், அவருடன் பாவத்துக்கு செத்து, அவருடன் உயிர்த்தெழுந்து நித்திய மகிமையை சுதந்தரிக்க வழிவகுக்கிறது என்பதை கற்றுக் கொள்கிறோம். திருமுழுக்கின் வழியாக திருச்சபையில் அங்கமாகிறபோது நமது வாழ்வில் ஏற்படவேண்டிய மாற்றமும், சான்று பகரும் வாழ்வும் முக்கியமானது என்பதை உணர்ந்து கொள்வோம்.

**மன்றாட்டு :** *உடன்படிக்கையின் கடவுளே, வருகின்ற உம் இறையரசை அறிவிக்க திருமுழுக்கின் வழியாக எங்களை அழைத்தீர். நாங்கள் வாழ்வின் எல்லா சூழல்களிலும் உம்முடைய அன்பையும் அமைதியையும் உண்மையோடு சான்று பகர நீர் அப்போஸ்தலர்களுக்கு கொடுத்ததைப் போன்ற உறுதியைத்தாரும், உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம் ஆமென்.*

**அருள்திரு. Y. லாறன்ஸ்**



**22-07-2012**

# அருட்பொழிவு அருட்பணி: அர்ப்பணிக்க அழைப்பு

**ORDANED MINISTRY : CALLED TO COMMITMENT**

எரே. 1 : 4 – 19 கலா. 2 : 1–10
திபா. 122 மத். 16 : 13 – 20

"அதைச் செய்வதில் தான் நான் முழு ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தேன்". கலா. 2 : 10

Ordination என்கின்ற ஆங்கிலச்சொல் Order என்பதிலிருந்து பிறந்தது. இச்சொல்லின் பொருள் திருச்சபையின் திருப்பணியினை ஒழுங்குபடுத்தும் அலுவலுக்கென்று மக்களை ஏற்படுத்துவது என்பது தான். எந்த ஒரு சமுதாயத்திலும் ஒழுங்கு என்பது தன்னியல்பாக வருவதில்லை. ஆகையால் இத்தகைய ஓர் அலுவலை ஏற்படுத்துவது தேவையான ஒன்றாகிறது. திருச்சபை என்பது அழைக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட ஒரு மக்களாலான அமைப்பு. இப்படிப்பட்ட சமுதாயத்திற்குள் ஒழுங்கை ஏற்படுத்துவது அருட்பெழிவு பெற்ற அருட்பணியாளரின் அர்ப்பணிப்பால் மட்டுமே செய்து நிறைவேற்ற முடியும்.

அர்ப்பணிக்க அழைப்பினைப் பெற்றோர் ஓர் அருட்பணியின் மூன்று நிலைப்பாட்டுக்குள்ளே தங்களை உட்படுத்திக் கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

**1. தன்னிலை அறிதல்** : (எரே. 1 : 4-19)

அருட்பொழிவு அருட்பணிக்கு அர்ப்பணிக்க அழைக்கப்படுவோர் தன்னிலை அறிதல் அவசியம். இறைவாக்கினர் எரேமியா கடவுளால் தெரிவு செய்யப்பட்டவர். தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே கடவுளால் அறியப்பட்டவர். பிறக்கு முன்னே கடவுளால் திருநிலைப்படுத்தப்பட்டவர். மக்களுக்கு இறைவாக்கினராக ஏற்படுத்தப்பட்டவர். அவர் கடவுளின் அழைப்பை பெற்றபோது தன்னிலை உணர்ந்தார். "என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாதே. சிறு பிள்ளை தானே (எரே. 1 : 6-7)" எனப்படிக்கிறோம். இந்த அறிதல் தான் எரேமியாவை ஆற்றல் மிகு பணி செய்ய அடித்தளம் அமைத்துக் கொடுத்தது எனலாம்.

தன்னை அறிந்து தாழ்த்தி நின்ற எரேமியாவுக்கு கடவுள் தந்த ஆற்றலும், ஆக்கமும் நிறைந்த வாக்குத்தத்தம்... சிறு பிள்ளை நான் என்று சொல்லாதே

யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகின்றேனோ அவர்களிடம் செல், எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை இடுகின்றேனோ அவற்றைச் சொல்... இதோ பார் என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும், இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும்பொறுப்பாளராக ஏற்படுத்தியுள்ளேன் ( 1 : 7-10) என்று கூறி எரேமியாவை அருட்பணிக்கு ஆற்றல்படுத்துகின்றார். அருட்பணியர் அருட்பணியில் தன்னால் சாதித்து விட முடியும் என்று சிந்திக்காமல் தன்நிலை அறிந்து கடவுளிடம் தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

**2. கிறிஸ்துவை அறிக்கை செய்தல் :** (மத். 16 : 13-20)

அருட்பொழிவு அருட்பணிக்கு அர்ப்பணிக்கும் ஒருவர் கிறிஸ்துவை அறிக்கை செய்வது அவசியம். நாம் படித்த நற்செய்தி பகுதியிலும் கிறிஸ்து நாதர் தம் சீடரை நோக்கி, “மானிட மகன் யாரென்று மக்கள் செல்கிறார்கள்” என்று கேட்டார். “அதற்கு அவர்கள் சிலர் திருமுழுக்கு யோவான் எனவும், வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்குனருள் ஒருவர் எனவும் சொல்கின்றனர்” என்றார்கள். ஆனால் நீங்கள் யார் என சொல்கிறீர்கள் என்று ஆண்டவர் கேட்டபொழுது சீமோன் பேதுரு மறுமொழியாக “நீர் மேசியா, வாழும் கடவுளின் மகன்” என்று கூறினார். இந்த அறிக்கையைக் கேட்ட ஆண்டவர், யோனாவின் மகனான சிமோனே, நீ பேறு பெற்றவன், ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு (பேதுரு என்னும் கிரேக்க சொல்லுக்குப் பாறை என்பது பொருள்) . இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் என்று கூறி விண்ணுக்கும் மண்ணுக்கும் ஒரு மாபெரும் பொறுப்பை கொடுக்கிறார்.

அருட்பொழிவு அருட்பணி திருச்சபையைக்கட்டுவது. விண்ணரசுக்கு மானிடத்தை ஆயத்தப்படுத்துவது. இப்பணிக்கு கடவுள் அருட்பணியாளரை ஆற்றல்படுத்த கிறிஸ்துவைக்குறித்தத் தெளிவான அறிக்கைத் தேவை. பவுலார் சொல்வதைப்போல “இதன் பொருட்டே நான் இவ்வாறு துன்புற்று வருகிறேன். ஏனெனில் நான் யாரிடம் நம்பிக்கை கொண்டுள்ளேன்” என அறியேன் அவர் என்னிடம் ஒப்படைத்ததை இறுதிவரை காத்திட வல்லவர் என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு ( 2 தீமோ. 1 : 12). ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே (பிலிப். 1 : 21). அதோடு, எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு (பிலி. 4 : 13) என்ற அறிக்கை அவசியம். இத்தகைய அர்ப்பணம் ஒரு அருட்பணியின் அடித்தளம்.



அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்கு தெரியாதா? (உரோ. 6 : 3)

திருமுழுக்கின் வழியாக கிறிஸ்து இயேசுவின் மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்கிறார் பவுலடிகளார். பழைய வாழ்க்கை முற்றிலும் அழிக்கப்பட்ட அல்லது முற்றிலும் மாற்றப்பட்ட நிலையினை திருமுழுக்கு வழியாகப் பெறுகிறோம்.கடந்த கால பாவ வாழ்வுக்கு முடிவை கிறிஸ்துவின் சாவில் நாம் இணைந்து கொள்வதால் அடைகிறோம். மனித வாழ்வில் மேலோங்கி நிற்கும் நான் என்னும் ஆணவமும், எனக்கு, என்னுடைய என்ற சுயநலமும் கிறிஸ்துவின் சாவில் இணைவதால் முற்றிலும் அழிக்கப்படுகிறது. பவுலடிகளார் சொல்கிறார் எனவே இனி வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா. 2 : 20[a]). திருமுழுக்கு பெறுபவர் பழமைக்கு (தீமைக்கு) செத்து நம்மை அதாவது புதிய வாழ்வுக்கென எழுப்பப்படுகிறார் (Iபேதுரு 2 : 24). கிறிஸ்துவுடன் சாதல் என்பது பாவத்துக்கு மரித்து கிறிஸ்துவுடன் வாழ்தல் என்பதாகும்.

**3. திருமுழுக்கு : கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் இணைதல்**

அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். (உரோ. 6 : 5)

இறப்பு இல்லாமல் உயிர்த்தெழுதல் இல்லை. திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் சாவில் இணைந்து பின் அவரது உயிர்த்தெழுதலில் இணைந்து உயிர்த்தெழுந்திருக்கிறோம். பாவத்துக்கு செத்து நீதிக்கு பிழைத்திருக்கிறோம் (Iபேதுரு 2 : 24). உயிர்த்தெழுதலின் அனுபவம் பாவத்தால் கட்டப்பட்ட நிலையிலிருந்து நம்மை விடுதலையாக்கி பழைய வாழ்வில் நின்று புதிய வாழ்வைத் தருகிறது (IIகொரி. 5 : 17). உயிர்த்தெழுதலின் வாழ்வு என்பது கனிதரும் வாழ்வு ஆகும். உயிர்த்தெழுதலின் மூலமாக கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகிறோம். கிறிஸ்துவுடன் இணைக்கப்படுவதன் வழி நற்கனி தர இயலுகிறது (யோ. 15 : 4 - 5). கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுந்திருக்கும் அனுபவம் நம்மை உலகுக்கு சான்றளிக்கச் செய்கிறது. கோதுமை மணி நிலத்தில் விழுந்து சாவதால் புதியக் கோதுமை செடியை தந்து உலகுக்கு பயனுள்ள கோதுமை மணிகளைத் தருகிறது (யோ. 12 : 24). கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுந்த ஒரு மனிதர் தன்னை உலகுக்கு தந்து சான்றாக வேண்டும். மட்டுமன்று வாழ்வில் தொடர்ந்து கிறிஸ்துவுக்காகப் பாடுகளை ஏற்கும் நிலைக்கு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். உயிர்த்தெழுதலில் இணைவோர் கிறிஸ்துவுடன் வாழும் மாட்சியின் வாழ்வை அல்லது அவருடன் காலகாலமாய் வாழும் நிலை வாழ்வை அடைகின்றனர்.

இத்தகைய பணிக்கு அழைக்கப்பட்டவர்கள் அருட்பணியாளர்கள். ஆண்டவர் இயேசுகிறிஸ்து முழுக்க முழுக்க தன்னை உலகுக்காக தந்தவர்.

கடைசி ஒரு துளி உதிரத்தையும் உலகுக்காக சிலுவையில் சிந்தியவர்.

ஆக அருட்பொழிவு அருட்பணிக்காக அர்ப்பணிக்கும் ஒவ்வொருவரும் சிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நின்று

* தன்னிலை உணர்ந்து

* கிறிஸ்துவை அறிக்கை செய்து

* விடுதலைப் பணியில் இணைத்து அர்ப்பணிப்போம் இறையரசை இங்குக் கட்டுவோம்.

**மன்றாட்டு :** *மீட்பராகிய எங்கள் கடவுளே, அனைவரும் மீட்கப்படவும் உண்மையை அறிகின்ற அறிவில் வரவும், நீர் விரும்புகின்றீர். உம்முடைய மக்களுக்கு அவருடைய வழியை ஆயத்தம் பண்ணும்படியாக அவருடைய அப்போஸ்தலர்களை அனுப்பினதைப் போல, உம் திருச்சபையும் நோயாளிகளை குணப்படுத்தவும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவும், உம்முடைய அன்பின் நற்செய்தியை அறிவிக்கவும் தொடர்ந்து செயல்படவும் அருள்தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசுக் கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

அருள்திரு. S.M. **டேனியல் தேவதாசன்**



**29-07-2012**

# திருமுழுக்கு : கிறிஸ்துவோடு இணைதல்

**Baptism : Incorporation into Jesus**

| | |
|---|---|
| தொநூ. 7 : 1 – 24 | உரோ. 6 : 1 – 11 |
| திபா. : 84 | யோவா. 15 : 1 – 8 |

“இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார் அவ்வாறு நாமும் புது வாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்”. (உரோ. 6 : 4)

உள்ளான அருள் ஏற்பு அனுபவத்திற்கு வெளிப்படையான அடையாளங்களாக திருச்சபையில் இருபெரும் திருவருட்சாதனங்களான திருமுழுக்கும், திருவிருந்தும் இடம்பெற்றுள்ளன. பொதுவாக கிறிஸ்தவ சமயத்தை பின்பற்ற முன்வருவோர் திருமுழுக்கு வழியாக திருச்சபையில் சேர்க்கப்படுகின்றனர். மக்கள் இதை ஒரு சடங்காகவும், கடமையாகவும் எண்ணுவதால் இதன் முக்கியத்துவம் உணரப்படாமற்போயிற்று. சில சபைப் பிரிவுகள் இதன் முக்கியத்துவத்தை அளவுக்கு மிஞ்சி அழுத்தி வருவதால் பல கிறிஸ்தவர்கள் குழப்பமடைந்து வருகின்றனர்.

திருமுழுக்கு கிறிஸ்தவ சமயத்தின் ஆதாரமாக விளங்கும் யூதசமயத்திலிருந்து தோன்றியது எனக் கருதப்படுகிறது. ஆனால் திருமறையில் புது வாழ்வுக்குள் வருவதற்கும், பாவம் மன்னிக்கப்படுதலுக்கும், தூய்மைப்படுதலுக்கும் அடையாளமாகத் தண்ணீர் பயன்படுவதாகச் சொல்லப்பட்டுள்ளது (எசே. 36:25, திபா. 51:7). யூத சமயத்தவர் பிற சமயத்தவரை அசுத்தமானவர்களாகக் கருதினர். எனவே ஒருவர் யூதராக மதம் மாறும் போது சில சடங்குகள் செய்யப்பட்டன. ஆண்களுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. விருத்தசேதனம் முடிந்தவுடன் அவர்களை தண்ணீரில் மூழ்கி எழச் செய்தனர். முழுக்குநர் யோவான் கொடுத்த திருமுழுக்கு மனம் திரும்புதலுக்கென்று அல்லது உள்ளம் தூய்மையாகுதலுக்கு கொடுக்கப்பட்ட அடையாளம் ஆகும். கிறிஸ்தவத் திருமுழுக்கு திருச்சபையில் அங்கமாவதற்கென்று கருதப்பட்டாலும் தூய ஆவியரின் அருட்பொழிவு, இயேசுவின் மரணம், உயிர்தெழுதல், ஆளுகை ஆகியவற்றுடன் தொடர்புடையது. திருமுழுக்கு கிறிஸ்துவுடன் இணைதல் என்பதை இச்செய்தியின் வழியாகத் தியானிப்போம்.

## 1. திருமுழுக்கு : கிறிஸ்துவின் துன்பங்களில் இணைதல்

நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது (உரோ.6 : 6[a]) .

“திருமுழுக்கு என்பது ஒருவன் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படுதலைக் குறிக்கிறது” என்கிறார் புல்ட்மேன். சிலுவையில் அறையப்படுதல் துன்பத்தை ஏற்றுக்கொள்தலைக் குறிக்கிறது. துன்புறும் கிறிஸ்துவில் துன்பத்தை ஏற்கும் அனுபவமே திருமுழுக்கு. இயேசுவின் திருமுழுக்கு நேரத்தில் முழுக்கு முனிவர் யோவான் இயேசுவை பற்றிக் கூறிய அறிக்கையில் “இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டியாம் இவரே உலகத்தின் பாவத்தை போக்குவார்” என்கிறார் (யோவான் 12 : 29). இவ்வறிக்கையில் வெளிப்படுவது உலகத்தின் மக்களின் பாவத்துக்காய்ப் பாடுகளை ஏற்பவர் என்பதாகும். கடவுளின் அன்பு மக்களுக்காய் வெளிப்படுத்தப்பட்ட துன்புறும் அன்பாகும். இயேசுவின் திருமுழுக்கு உலகோரின் பாவங்களை சுமந்து மானிடனாக துன்புற தன்னை மாற்றிக் கொள்ளுதலைக் குறிப்பிடுகிறது. இறையாட்சியின் அரியணையில் வலது இடதுபுற இருக்கைகளுக்காக ஆசைப்பட்ட சீடர்களிடம் இயேசு கேட்டது “நான் குடிக்க போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா” என்பதே (மத்.20 : 22 - 23). இங்கு இயேசுநாதர் அதிகாரத்தை அல்ல அனுபவிக்க போகும் துன்பத்தைக் குறித்து சொல்வதைப் பார்க்கிறோம். இயேசு கூறுகையில் “ஆயினும் நான் பெற வேண்டிய திருமுழுக்கு உண்டு அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன்” (லூக். 12 : 50) எனவே இவ்வார்த்தைகள் துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் ஓர் ஒப்படைப்பாக இயேசுவின் திருமுழுக்கு அமைகிறது என்பதைக் காட்டுகிறது. இயேசுவில் நாம் பெறும் திருமுழுக்கு அவருடைய பாடுகளில் நம்மை இணைக்கிறது. மத். 16 : 24-இல் “என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றட்டும் என்றார்” இயேசு. திருமுழுக்குப் பெறுவோர் துன்பத்தின் வழியாக இயேசுவை பின்பற்ற அழைக்கப்படுகின்றனர். இன்று அதிகார ஆசையும் அதற்கான சண்டைகளும் பெருகி வரும் போது திருமுழுக்கு நம்மை இயேசுநாதரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி துன்பத்தின் வழியாக கிறிஸ்துவுக்காக வாழ அவருடன் இணைக்கிறது என்பதை உணர்ந்து கொள்வோம்.

## 2. திருமுழுக்கு : கிறிஸ்துவின் மரணத்தில் இணைதல்

திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம்



## 3. விடுதலைப் பணியில் இணைதல் : (கலா. 2 : 1-10)

பவுலார் கலாத்தியருக்கு கடிதம் எழுதும்போது, யூதர்களின் திருத்தூதராகச் செயல்படும் ஆற்றலை பேதுருவுக்குத் தந்தவரே பிற இனத்தாருக்குத் திருத்தூதராகச் செயல்படும் ஆற்றலை எனக்குத் தந்தார் (கலா. 2 : 8-9) எனக்கூறி ஏழைகளுக்கு உதவி செய்வதில் தான் முழு ஆர்வத்தோடு ஈடுபட்டதாகச் கூறுகின்றார் (2 : 10).

கிறிஸ்துவின் விடுதலை தரும் பணி தான் அருட்பணியாளரின் ஆர்வமான பணி என்பதை சுட்டிக் காட்டுகின்றார்.

அருட்பொழிவு அருட்பணி, விடுதலைப்பணி செய்வதில் ஆர்வமுடையதாக இருக்க வேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தனது நாசரேத்தூர் அறிக்கையில் “ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைபட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்” (லூக். 4 : 18-19) எனத் தனது விடுதலைப் பணியினை பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

இத்தகைய விடுதலைப் பணியில் தம்மை இணைத்து முழுஆர்வத்தோடு பணி செய்வதே அருட்பொழிவு. அதுவே அருட்பணியின் அர்ப்பணம்.

ஒருவர் தனக்காக அருட்பொழிவு பெறுவதல்ல மக்களுக்காக அருட்பணியாளராகிறார். தண்ணீரை மொண்டு வீறுகொண்டு எழுகிற மேகம் தண்ணீரைத் தானே குடிப்பதற்காகவா எழுகிறது? இல்லை. பன் மடங்கு பெருக்கி பார் மகிழத் தருவதற்காக, தோகைகளை விரித்து ஆடுகிற மயில் தானே களித்திடவா ஆடுகிறது? இல்லை மற்றவர் கண்டு களித்திட, நிலமானது பொன்னையும், மணியையும் தன்னகத்தே சேர்த்து வைப்பது, தானே அணிகலன் செய்து போட்டுக் கொள்ளவா? இல்லை மற்றவர்கள் போட்டுக் கொள்வதற்காக. ஒளிதனை உமிழந்திடும் திருவிளக்கு எதற்காக? தனக்காக அல்ல. இருளில் உள்ளோர் இடர்நீக்கி இன்புறுவதற்காக.

இவைபோல குருவானவரும் அல்லது அருட்பொழி பெற்று அருட்பணியாற்றுவோரும் நீர்மேகமாக நித்திரப் பொற்குவியலாக, தோகை மயிலாக, திருவிளக்காக தாம் பெற்ற கல்வியை ஆன்மீக அனுபவத்தை, தாம் பெற்ற இறையருளை தனக்கென்றே வைத்துக் கொள்ளாது மக்கள் பணிக்குப் பயன்படுத்த அழைக்கப்பட்டவர்கள்.

**01-08-2012**

*அருணோதயத் தொழுகை*

# உடனிருந்து ஆசி வழங்குபவர்

செப். 3 : 14–20

“உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்”. (செப். 3 : 17).

ஆபிரகாம் லிங்கன் அவர்கள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தபோது உள்நாட்டு கலவரம் நடந்தது. லிங்கன் அவர்கள் எந்த பதற்றமும் இன்றி திடமாக இருந்தார். இதைக் கவனித்த உதவியாளர், லிங்கனிடம் உங்களால் எந்தப் பதற்றமும் இன்றி எப்படி அமைதியாக இருக்க முடிகிறது என்று கேட்டபோது லிங்கன் சொன்னார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து உடனிருக்கிறார்.

கடவுளின் உடனிருப்பு ஆற்றல் மிக்கது. ஐயத்தை அகற்றி வாழ்வைக் குறித்த தெளிவையும், அமைதியையும் அருளுகிறது. கடவுளால் அருளப்படும் ஆசி வாழ்விற்கு உகந்தவர்களாக மாற கடவுள் நம்முடன் இருப்பது மட்டுமல்ல நாமும் கடவுளுடன் இருக்க வேண்டும்.

இஸ்ரவேலர் கடவுளின் முதன்மை குடிமக்கள். ஆனால் இறை அழைப்பையும், இறை உறவையும் மறந்து கடவுளைவிட்டு விலகி தங்களுக்கு விருப்பமான வழிகளைத் தெரிந்தெடுத்தனர்.

கானானின் செழுமை வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து இறை வழி பாட்டை சடங்காச்சாரமாக மாற்றினார்கள். (வழிபாட்டில் கலப்பிடம்) உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்களை ஒடுக்கினார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் அபயக்குரல் எழுப்பினார்கள். விடுதலைக்கு எசேக்கியா எடுத்த முயற்சி தோல்வியடைந்தது. எனவே கடவுளின் தீர்ப்பு உயர்ந்தவர்களுக்கு எதிராக வருகிறது. அசீரியா - இஸ்ரவேல், யூதா நாடுகளை சீழ்குலைத்தது. யூதா வரிகட்டும் நிலைக்கு அடிமைப்படுத்தப்பட்டது. சித்தியர்களினால் ஏற்பட்ட வன்முறைகள் உயர்ந்தவர்கள் கொள்ளைப்பொருளாக்கப்பட்டனர். எளியவர்கள் ஏழைகள் ஒடுக்கப்பட்ட மக்கள் விடப்பட்டனர்.

இச்சூழலில் எஞ்சியிருந்த மக்களுக்கு கடவுள் அருளும் வாக்கு உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் (செப். 3 : 17) என்பதே. இம்மாதத்தில் கடவுளின் உடனிருப்பால் நமக்கு கிடைக்கும் ஆசிகள் என்ன?

**1. ஆக்கினையை அகற்றுவார் :** செப். 3 : 15

துன்பத்தில் தோய்ந்து போயிருந்த ஒரு சமூகத்திற்கு ஆண்டவர் இறைவாக்கினர் வழி பாதுகாப்பின் நம்பிக்கையை ஊட்டுகிறார். இந்த



சிறுபான்மை சமூகம் விடுதலையை, கடவுளால் அருளப்படும் நீதியை எதிர்பார்த்த சமூகம். நாட்டில் அநீதியாளர்கள், துன்புறுத்துவோர் நிறைந்திருந்தபோதும் இறை நம்பிக்கையில், உண்மை வாழ்வில் உறுதியாக இருந்தவர்கள், வாழ்வின் விளிம்பில் இருந்தாலும் அமைதி வாழ்வை எதிர்பார்த்தவர்கள். இந்நிலையில் இவர்களை அடிமைப்படுத்தியவர்கள், துன்புறுத்தியவர்கள் அகற்றப்படுகிறார்கள். செப். 3 : 15-ல் ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டு, உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார் என்ற மீட்பின் செய்தி கொடுக்கப்படுகிறது. இதனை விடுதலையின் செய்தி என்றும் கடவுள் உடனிருக்கும்போது கிடைக்கும் மகிழ்ச்சியின் செய்தி என்றும் குறிப்பிடலாம். இம்மாதத்தில் நமது வாழ்விலும் கடவுள் நமது ஆக்கினைகளை அகற்றி ஆசி வழங்குபவராய் செயல்படுவார்.

**2. கூட்டி சேர்ப்பார் :** (செப். 3 : 20)

கடவுளது தண்டனைத் தீர்ப்பிற்குப்பின் எஞ்சியிருக்கும் சமூகம் கடவுளது தலைமைத்துவத்தின் கீழ்க் கூட்டி இணைக்கப்படும் என்னும் மகிழ்வின் செய்தி செல்லப்படுகிறது. வாழ்வின் ஓரங்களில் வைக்கப்பட்டவர்கள் வாழ்வின் மையத்திற்கு கொண்டு வரப்படுகிறார்கள் (ஆமோ. 9 : 15) சிதறுண்ட சமூகம் ஒரு புதிய சமூகமாக கூட்டி இணைக்கப்படுகிறது. இவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் திரும்ப கொடுக்கப்படுகின்றன. உடமைகளை சொந்தமாக்கிக் கொள்கின்றனர். தங்களுக்கென குடியிருப்புகளை அமைக்கிறார்கள். நிலைப்படுத்தப்பட்ட வாழ்வைப் பெறுகிறார்கள். கூட்டி சேர்க்கப்படுகிறவர்கள் அவர் தம் உரிமையினைப் பெற்று மகிழ்வோடு வாழும் உன்னத நிலையினை அடைகின்றனர். இம்மாதம் இத்தகைய நன்மையினால் கடவுள் நம்மை வழி நடத்துவார்.

**3. புது வாழ்வு கொடுப்பார் :** (செப். 3 : 19)

அடையாளம் தெரியாமல் இருந்தவர்கள் இங்கே கடவுளால் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். கடவுளின் ஆளுகையின் கீழ் அதனை புதிய வாழ்வாக அனுபவிப்பார்கள் என்பது இறைவாக்கு. இந்தப் புதிய வாழ்வில் தடைகள், ஒடுக்குதல்கள்,ஆதிக்கங்கள் பிரிவினைகள் இருப்பதில்லை. சமூகத்தில் குறைவாக எண்ணப்பட்டவர்கள் உயர்த்தப்பட்டு பெயரும், புகழும் அடைவார்கள். இதுவே இறைவன் அருளும் நிலைவாழ்வு அல்லது நிறைவாழ்வு என்பதாகும். கடவுளால் வழங்கப்படும் அமைதியும், மகிழ்ச்சியும், துதிபாடலும் அவர்களது வாழ்வில் தொடர்ந்திருக்கும் என்பதே புதிய வாழ்வு. நமக்கும் நமது ஆண்டவர் இப்புதிய மாதத்தில் நமது ஆக்கினைகளை அகற்றி ஒரு புதிய சமூகமாக நம்மை ஒருங்கிணைத்து, இம்மானுவேலர் இயேசுக்கிறிஸ்துவின் வழி புது வாழ்வினைத் தந்து வழி நடத்துவார். கிறிஸ்துவோடு நமது பயணத்தை தொடர்ந்து இறையாசி பெறுவோம்.

**திரு. ஸ்டீபன்**

**05-08-2012**

*அருட்பணி ஞாயிறு*

# ஆவியரின் அருட்கொடைகளும் அருட்பணியும்

## Gifts of the Holy Spirit and One Mission

| | |
|---|---|
| II அர. 2 : 1 – 8 | I கொரி. 12 : 1 – 31 |
| தி.பா. 8 | யோவா. 15 : 12 – 27 |

அருட்கொடைகள் என்பது "கரிஸ்மா" என்ற கிரேக்கச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். இறைவன் கருணையோடு வழங்கும் இலவசக் கொடைகள் என்பது இதன் பொருள். இறைவன் அளிக்கும் கொடைகளுள் தலைசிறந்தது தூய ஆவியரே. நமக்கு அருளப்பட்ட தூய ஆவியர் வழியாய் இறையன்பு நம் உள்ளங்களில் பொழியப் பெறுகின்றது (உரோ. 8 : 15). தூய ஆவியர் நம் உள்ளத்தில் உறைந்து, தாம் விரும்பியளிக்கும் அருட்கொடைகளின் வழியே தம்மையே வெளிப்படுத்துகின்றார் (I கொரி. 12:1-4). பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே இறைவனின் ஆவி அடியவரை ஆட்கொண்டு அவர்களைத் தம் கொடைகளால் நிரப்புகிறார். எசேக்கியேல்இறைவாக்கினர் 36 : 26-ல் "கல்லான இருதயத்தை கனிய வைப்பவர்" ஆவியர் என உணர்த்துகிறார். யோவேல் 3 : 1-ன் படி ஆவியரின் கொடைகள் எல்லா இனத்தவர் மேலும் பொழியப்படும் என அருட்கொடைகளின் பொதுமைப் பண்பை வெளிப்படுத்தியுள்ளார்.

அருட்பணியின் தேவையினை இயேசுவின் கட்டளையின் வழியாக நாம் அறிந்துக் கொள்ள முடிகின்றது. மட்டுமின்றி கடவுளின் இருபெரும் அனுப்பும் நிகழ்ச்சிகளிலும் அதனைக் காண்கின்றோம். ஒன்று, கடவுள் தமது மைந்தனை உலகிற்கு அனுப்பியது. மற்றது தமது ஆவியை முதற்பலனாகத் தந்தது. ஒரு புறத்தில் கடவுள் தமது ஒரே பேறான மைந்தனை அனுப்பியதால் அவரது அனுப்பு நிலை வெளிப்படுகிறது. ஆனால், தூய ஆவியை அனுப்புவதில் கடவுளே திருச்சபையின் அருட்பணியில் இயங்குகிறவராக நெருக்கடிக் கட்டங்களில் ஈடுபடுகிறவராக ஒருமைப்பாட்டை வளர்க்கிறவராக, நற்செய்தி உரைத்தல், குணமாக்குதல், பணி செய்தல் ஆகியவற்றை உந்தித்தள்ளுகிறவராக விளங்குகிறார்.

பெந்தேகோஸ்தே நாளில் சீஷர்கள் யாவரும் ஒருமைப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்த போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார். இன்று திருச்சபைகளிலே



இறைமக்களிடையே மிகுந்த குழப்பத்தையும் விவாதத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆதி திருச்சபையினை போன்று இன்றும் இந்த அருட்கொடைகள் தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டு தவறான முறையில் பயன்படுத்தப்படுவதால் திருச்சபைகள் கட்டப்படுவதற்கு பதிலாக உடைக்கப்பட்டு பிரிந்து கிடக்கின்றது.

திருச்சபையின் திருப்பணிகள் பல, உறுப்பினர்களின் செயல்திறன்கள் பல, அதுபோல ஆவியாரின் அருட்கொடைகள் பல. இந்த பன்மையிலும் ஒப்பற்ற ஓர் ஒற்றுமையைக் காண்கிறோம். திருப்பணிகள் ஒரே ஆண்டவரிடமிருந்து வருகின்றன. ஆற்றல் மிக்க செயல்கள் யாவும் ஒரே இறைவனிடமிருந்து வருகின்றன. அதுபோல் அருட்கொடைகள் அனைத்தும் ஒரே ஆவியரிடமிருந்து வருகின்றன (I கொரி. 12 : 4). உடலின் உறுப்புகள் உடலின் நன்மைக்காக ஒத்துழைப்பது போல் அருங்கொடைகள் யாவும் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் பயனுக்காக ஒன்று சேர்ந்து செயல்படுகின்றன. (I கொரி. 12 : 12-27).

தூய ஆவி ஐக்கிய சமுதாயத்திற்கு பல்வேறு முழுமையான ஈவுகளை வழங்குகிறது. இன்றையத் திருச்சபையில் காணப்படும் பற்பல பிரிவுகளுக்கும் தவறான போதனைகளுக்கும் காரணம் திருச்சபை மக்கள் பரிசுத்த ஆவியரை பற்றிக் கொண்டுள்ள பல தவறான கருத்துக்களேயாகும். தேவ ஆவியினால் நிரப்பப்பட்டுள்ள ஒவ்வொரு விசுவாசியும் தாம் பெற்றுள்ள கிருபை வரங்களை திருச்சபையைக் கட்டியெழுப்புவதற்காக பயன்படுத்த வேண்டும்.

இன்றைய திருமறை பகுதிகள் இந்த ஆவியரின் அருட்கொடைகள் அருட்பணியில் எவ்வாறு வெளிப்பட முடியும் என்று கூறும் சிந்தனைகளை காண்போம்.

### 1. சத்தியம் பகிரு (Share the truth) : I கொரி. 12 :3

"தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் இயேசுவே ஆண்டவரென சொல்ல முடியாது"

பவுலார் இப்பகுதியில் ஆவியரின் 9 அருட்கொடைகளை குறித்து கூறுகிறார். (1) ஞானத்தை போதிக்கும் வரம் (12 : 8), (2) அறிவை உணர்த்தும் வரம்(12 : 8), (3) விசவாசம் (12 : 9), (4) குணமாக்கும் வரம் (12 : 9), (5) அற்புதங்களை செய்யும் வரம் (12 : 10), (6) தீர்க்கத்தரிசனம் உரைத்தல் (12 : 10), (7) ஆவிகளைப் பகுத்தறிதல் (12 : 10) (8) பற்பல பாஷைகளைப் பேசுதல் (12 : 10), (9) பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் (12 : 10). மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரங்களும் அல்லது கொடைகளும் திருப்பணிகளின் வளர்ச்சிக்காகவே அன்றி பிரிவினைகளை ஏற்படுத்த அல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா. 5 : 22, 23) ஆகியவை ஆவிக்கேற்றப்படி விசுவாசிகளை வளர்த்தும் என்கிறார். (கலா. 5 : 25). ஆவியின் கனிக்கும் ஆவியரின் வரங்களுக்கும் இடையே சமநிலை காணப்படவேண்டும். பரிசுத்தமாக்கபடவும் நற்குணங்கள் பெறவும் ஆவியின் கனி உதவுவது போன்று ஆவிக்குரிய பெலன் (Spiritual Strength or Power) பெற ஆவியரின் அருட்கொடைகளும் அவசியமாகின்றது.

அருட்பணியின் வளர்விற்கு சத்தியம் பகிர்தல் மிக அவசியமான ஒன்று. தூய ஆவியரின் கட்டுப்பாட்டிற்குள் நாம் வளருகையில் திருச்சபையின் அருட்பணிகள் கட்டி எழுப்பப்படும். திருச்சபை கிறிஸ்துவின் ஒரே சரீரம். வேறுபாடுகளையும் கருத்து வேறுபாடுகளையும் களைந்து ஒரே எதிர்நோக்கோடு நாம் செயல்பட வேண்டும். நதி ஒரே திசையில் செல்வது போன்று நாம் ஆவியரின் வழியில் சத்தியத்தின் பாதையில் செல்ல பழகிக்கொள்ள வேண்டும். ஒரு நதியிலே ஒரு பகுதி ஒரு திசையிலும் மற்ற பகுதி வேறு திசையிலும் செல்வதில்லை செல்லவும் முடியாது. அது போன்று திருச்சபையும் அல்லது அருட்பணியும் வெவ்வேறு திசைகளில் செல்ல முடியாது. திருச்சபைகளிலே நாம் சுயமாய் நினைப்பதை செய்வதை தவிர்த்து ஆவியரின் செயல்பாட்டிற்கு முற்றிலும் ஒப்புக்கொடுப்போம். நாம் “நம்மில்” மரித்து “அவரில்” பிழைக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

“உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார் (யோ. 16 : 13)சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்” யோவான் 16 : 13.

### 2. சாட்சியாயிரு (Bear Witness): யோவான் 15 : 27

“நீங்களும் சான்று பகர்வீர்கள், ஏனெனில் நீங்கள் தொடக்க முதல் என்னோடு இருந்து வருகிறீர்கள்”

திருச்சபை ஒரு நற்செய்திச் சமூகமாக (Community of the Gospel), அதாவது அடிப்படையில் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் ஓர் அன்பின் சமூகமாக இருக்கிறது. இந்த நற்செய்தியில் அல்லது சாட்சி பகிர்தலில் கடவுளின் அன்பு, ஆறுதல், ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவை உள்ளடங்குகின்றன. ஆகவே திருச்சபை ஒரு ஐக்கியமாக, அதாவது நற்செய்திக்குச் செவிமடுத்த சமூகமாக இருந்து எல்லாரும் ஆறுதல், சமாதானம் (Shalom) ஆகியவற்றை அடைந்து மகிழுவதற்கு ஏற்ப ஓர் அன்பின் சமூகமாக (Community of love) இயங்கக் கடன்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியரின் வரங்களால் அல்லது அருட்கொடைகளால் நிரம்பப்பட்டு சாட்சி பகருதல் என்பது உலகத்திலிருந்து வேறுபட்ட ஒரு புரட்சிகரமான வாழ்வுக்கு நம்மைத் தூண்டுகின்றது. “உங்களுக்குள்ளே



அப்படி இருக்கலாகாது” என்று கூறும் இயேசு, இறையரசின் மக்கள் வாழ வேண்டிய புதிய வாழ்க்கை நெறியினை குறிப்பிடுகின்றார் (மாற்கு 10 : 43).

தீமை நிறைந்த உலகிலே திருச்சபை உலகத்துக்கு உப்பாகவும் ஒளியாகவும் வைக்கப்பட்டிருக்கிறதேயன்றி திருச்சபை பிரிந்து, ஒதுங்கி வாழ முடியாது. நாம் இந்த உலகத்திற்குரியவர்களல்ல (not of the world) ஆனால் இந்த உலகத்திலேயே இருக்கின்றோம் (In the World). ஆகையால் புனிதமான உலகச்சிந்தை (Holy Worldiness) தேவையாகின்றது. இதை உணர்ந்து கொள்ளாத பக்தி வெறியும், துறவும், ஒறுத்தலும் சாட்சி வாழ்விற்கு புறம்பானவையாகும்.

### 3. சாத்தியமாக்கு (Make it possible) : (2 அர. 2 : 2)

“வாழும் ஆண்டவர் மேல் ஆணை! நான் உம்மைவிட்டு பிரியமாட்டேன் என்றார்”

எலியா ஆவியரின் வரங்களால் நிரப்பப்பட்டு வல்லமையாய் பயன்படுத்தப்பட்டார். கர்மேல் பர்வதத்திலே பாகாலின் தீர்க்கர்களுக்கு முன்பாக தன்னந்தனியாக கடவுளின் பெலத்தோடு நின்று ஆண்டவரே தெய்வம் - உண்மையான தெய்வம் என்று சாதித்து காட்டியவர். மட்டுமன்றி ஆகாப் ராஜாவின் முன்பு தைரியத்தோடு நின்று “ஆண்டவரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவர்கள்” என்று இறைவார்த்தையினை வெளிப்படுத்தினவர். இவ்வாறு தான் பெற்ற அருட்கொடைகளால் கடவுளின் நாமத்தை மகிமைப்படுத்தினவர் எலியா தீர்க்கன். அருட்கொடைகள் கடவுளுக்கு நேராக வழிநடத்தும் வழிகாட்டிகளாக அமைதல் வேண்டும் என்பதனை நிருபித்தவர். இன்று அருட்பணியில் ஆவியரின் அருட்கொடைகளையும் வல்லமையையும் பெற்று ஆவிக்குரியவர்களாய் அற்புத வாழ்வு வாழுவோர் சில வேளைகளில் காலப்போக்கில் தூய ஆவியரால் இயக்கப்படாமல் வீழ்ச்சியுறுகின்றனர். புகழ்பெற்ற ஊழியர்களும் கூட திருப்பணியினை அரசியலும் வியாபாரமுமாக்கி பொருள் சேர்க்கவும் வீண் ஆடம்பரமாக வாழவும் பயன்படுத்துகின்றனர். இறை தொண்டு செய்வதாக மக்களை ஏமாற்றி திருச்சபையின் உள்ளேயும் வெளியேயும் உலா வருகின்றனர். இறைப்பணி ஆற்ற தூய ஆவியரின் வல்லமை தேவை (லூக். 1 : 15; 3 : 22; தி.ப. 9 : 17) எலியாவின் சீடராக செயல்பட்ட எலிசா தனது தலைவனிலே வெளிப்பட்ட ஆவியின் வரங்களை இரட்டிப்பாய் பெற தடைகளை தாண்டி இலட்சியம் சாத்தியமாக தொடர்ந்து பின்பற்றினார்.

தூய ஆவியருக்குநம் உள்ளத்தில் இடம் கொடுத்து அவரது சரீரமாகிய திருச்சபையில் இனம்,மொழி, ஏழை, பணக்காரர், படித்தவர்,

படிக்காதவர், ஆண், பெண், சிறியவர், பெரியவர் என்ற பேதங்களை களைந்து சத்தியம் பகிரவும், சாட்சியாய் வாழவும் அருட்பணி சாத்தியமாக்கபடவும் நம்மை அர்ப்பணிப்போமாக. ஆமென்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, உமது தூய ஆவியானவரை உம்முடைய திருச்சபை வாழ்வு பெறவும், ஒளி பெறவும் அனுப்பினீர். ஆவியின் கனியை அன்பிலும், மகிழ்விலும், சமாதானத்திலும் நாங்கள் பெற்றுக் கொள்ள எமது உள்ளத்தை திறந்தருளி உமது அருளை வழங்கியருளும். எங்கள் தனிப்பட்ட நலனுக்கு அல்ல, மாறாக அருட்பணிக்கு நேராய் முழு திருச்சபையின் வளர்ச்சிக்கென்று உமது அருளைத் தருவீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.*

**அருள்திரு. P. சேம் பிளசிங்**



**12-08-2012**

# பல்சமய சூழலில் திருமுழுக்கும் மனமாற்றமும்

**Baptism and Conversion in a Pluralistic Society**

| | |
|---|---|
| 2 அரசர் 5 : 1–19 | 1 பேது. 2 : 1–10 |
| தி.பா. 51 | யோவா. 3 : 1–8 |

“மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது” (யோ. 3 : 3).

“பன்மை” என்ற வார்த்தை இன்று நம்முடைய சூழலில் கலாச்சாரம், மொழி, சமயம் மற்றும் பல நிலைகளில் நம்முடன் குடிகொண்டிருக்கிறது. சமயங்களின் பன்மைச் சூழல் நம்முடைய சிந்தனைக்கு பொருத்தமானது. நமது இந்தியா நாட்டின் பல்சமயச் சூழலில் திருமுழுக்கு மற்றும் மனமாற்றம் போன்ற கருத்தமைவுகளை எப்படி புரிந்துகொள்கிறோம் என்பது நாம் சிந்திக்க வேண்டிய ஒரு சவாலாகும். இதற்கு நற்செய்திப் பகுதியில் வரும் இயேசுவுக்கும் நிக்கதேமுக்கும் இடையே நடைபெறும் உரையாடலின் சிந்தனைகள் உதவியாக அமைகிறது.

இப்பகுதியில் “மறுபடியும் பிறக்க வேண்டும்” என்று இயேசு கூறும் வார்த்தைகளே நம் சிந்தனைப் பொருளுக்கு வலுசேர்க்கிறது. “புதியவர்களாய் வாழ வேண்டும்” என்பது தான் இதன் உட்பொருளாகும். முழுக்குமுனிவர் யோவான் இயேசு கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம்பண்ண வரும்போது “மனம்மாறி திருமுழுக்கு பெறுங்கள்” என்று அழைத்து நற்செய்தியைப் பறைசாற்றினார் (லூக். 3 : 3). இயேசு கிறிஸ்துவும் தம் திருப்பணியை இவ்வுலகில் தொடங்கும் போதும் “மனம்மாறுங்கள்” என்று அழைத்தார் (மாற். 1 : 15). அதே அழைப்புதான் இங்கும் நிக்கதேமுக்கு கொடுக்கப்படுகிறது.

## 1. மனமாற்றம்

மனமாற்றம் என்பது பழைய வாழ்வை விட்டுவிடுதல் ஆகும். யூத கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் மனமாற்றம் என்பது “தீமையை விட்டுவிடுவதற்கும், விசுவாசத்தின்வழி கடவுளோடு உறவை ஏற்படுத்துவதற்குமான ஒரு முழு அழைப்பாகும்”. பொதுவாக, மனமாற்றம் பல படிநிலைகளின் (stages) வழி உருவாகிறது. மனமாற்றம் தீடீரென்று ஏற்படுவதுமுண்டு. கட்டாயப்படுத்தப்பட்ட தூண்டுதலினால் கூட்ட மனமாற்றங்கள் (Mass conversions) நிகழ்ந்ததுண்டு. உண்மையும் வாழ்வின் அர்த்தத்தையும் தேடி பெற்றுக்கொண்ட நேர்மையான

மனமாற்றங்களும் உண்டு. ஆன்ட்ரூ வின்கேட் (Andrew Wingate) என்ற இறையியலாளர் கூற்றுப்படி, "மனமாற்றம் என்பது ஒவ்வொரு வார்த்தைகளின் தன்மைகளில் விடுதலை உண்டு என்றும், அது உண்மையோடும் நெருங்கிய தொடர்புடையதென்றும் ஒருவர் நம்பி, ஒரு புதிய சிந்தனையோடு சமய வாழ்வுக்குள் நுழைய தனியாகவோ அல்லது ஒரு குழுவின் உறுப்பினராகவோ எடுக்கும் ஒரு தனிப்பட்ட தீர்மானத்தை உள்ளடக்கிய ஒரு தொடர்நிலை (process) ஆகும்". எனவே மனமாற்றம் என்பது வெளிப்படையான சமய மாற்றம் அல்ல மாறாக, அது உள்மனம் சார்ந்த, தனிப்பட்ட ஒன்றாகும். இந்த மனமாற்றத்தில் ஒருவருடைய அடையாளம் மாற்றப்பட்டு, ஒரு புதிய சமுதாயத்தின் ஏற்பு நிலை உருவாகிறது.

திருச்சபைச் சூழலில் மனமாற்றம் என்பது இயேசு கிறிஸ்துவின் முழு மனிதத்துவத்துக்கும், கடவுளின் தூய முழுமை நிலைக்கும் நேராக நடந்துகொண்டிருக்கும் ஒரு வளர்ச்சி நிலை (a process of growth) ஆகும். இத்தகைய மனமாற்றத்தையே இயேசு நிக்கதேமுவிடமும் அதனைத் தொடர்ந்து இன்றைய கிறிஸ்தவரிடமும் எதிர்ப்பார்க்கிறார்.

## 2. திருமுழுக்கு

திருமுழுக்கு என்பது புதியவர்களாய் வாழ்வதற்குரிய அடையாளம். திருமுழுக்கு பெறும் அனைவரும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுவது திருமறை கூறும் ஒரு சிந்தனை (உரோ. 6 : 1-11). ஆனால் திருமுழுக்கு இன்று வெறும் ஒரு சமயச் சடங்காக மாறிவிட்டது. இந்தியச் சூழலில் நடைமுறையிலிருப்பது போல, திருமுழுக்கு என்பது வெறும் ஒரு சமய திருவருட்சாதனம் (Sacrament) அல்ல. அது கிறிஸ்தவ திருச்சபையிலும், கிறிஸ்தவ சமுதாயத்திற்குள்ளும் நுழையும் செயலாகும்.

## 3. இந்தியச் சூழலில் மனமாற்றமும் திருமுழுக்கும்

பல் சமயத்தவர்கள் வாழும் இந்தியா போன்ற சூழலில் "மனமாற்றம் திருமுழுக்கும்" என்ற சிந்தனை சமய வன்முறைகள் போன்ற பல குழப்பங்களுக்கு வித்திடுகின்றதாக அமைகிறது. கிறிஸ்தவத் திருப்பணியின் குறுகிய கண்ணோட்டமே அதற்கு முக்கிய காரணம் என்பது வருந்துவதற்குரியது. சமயச் சிந்தனையாளர் எலியாஸ் (K.P. Aleaz) இந்தியாவில் சமய மாற்றம் சார்ந்த வன்முறைகளுக்கு கிறிஸ்தவர்களின் இரண்டு காரணங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

1. இந்திய மக்களில் பெரும்பாலும் புரிந்துகொண்டிருப்பதுபோல கிறிஸ்தவத் திருச்சபையின் மனமாற்றம் என்பது மக்களைக் கட்டாயப்படுத்தி, தவறாகக் கவர்ந்து ஏமாற்றி உருவாக்கும் மனமாற்றம் ஆகும்.
2. கிறிஸ்தவம் ஒரு அந்நிய அல்லது வெளிநாட்டு சமயம் (foreign religion) என்று கிறிஸ்தவர்களால் உயர்த்திக் கூறப்படுவது.



இவை இரண்டும் இயேசு கிறிஸ்துவில் கடவுள் தந்த நற்செய்திக்கு எதிரான கிறிஸ்தவர்களின் வன்முறைகள் (A Christian violence against the gospel of God in Jesus) என எலியாஸ் கூறுகிறார். கிறிஸ்தவ சமயத்திற்கெதிரான வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு கிறிஸ்தவர்கள் இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்டது போல மனமாற்றமும் திருமுழுக்கும் தனிநபர் சார்ந்த ஒன்று. இந்தியச் சூழலில் கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக்கொண்டும், குடும்ப மற்றும் சமூகச் சூழல்களைக் கருத்தில் கொண்டும் திருமுழுக்கிலிருந்து விலகி நிற்போர் உண்டு.

## 4. கிறிஸ்து வழங்கும் புதுவாழ்வு

இறைவனின் அழைப்பு மனிதரின் மனமாற்றத்திற்கும் புதிய வாழ்வுக்குரியது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தை தரும் சிந்தனை "மனமாற்றம் அல்லது புதிதாகப் பிறத்தல்" என்பதாகும். உடலளவில் மட்டும் பிறப்பது மனித இயல்பை மட்டும் பெறுவது. தீமைகளுக்கு உடன்பட்டு வாழும் வாழ்வு. கடவுளின் சாயலோடு அல்லது இயல்போடு வாழ்வதற்கு கடவுளில் (தூய ஆவியால்) பிறக்க வேண்டும் (யோவா. 3 : 6). இதைத்தான் மறுபடியும் பிறத்தல் என இயேசுகிறிஸ்து கூறுகிறார். புதுப்பிறப்பு என்பது ஒரு மாற்றத்துடன், அதாவது, நம் இருப்புநிலையின் உட்பொருளின் மாற்றத்திலிருந்து, மனிதனின் தன்மை மாற்றத்திலிருந்து தொடங்குகிறது (The new birth begins with a change in the very substance of our being, in the very nature of human). இங்கு மனிதனின் பாவத்தன்மை அல்ல, உள்ளுறைகின்ற கடவுளின் ஆவியார் மற்றும் பெறுகின்ற மனிதனின் மாற்றத்தைத் தீர்மானிக்கும் காரணி (the decisive factor) ஆகிறார். அதன்பின்பு இனி வாழ்வது நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் என்னும் நிலை உருவாகிறது.

இயேசுகிறிஸ்துவைக் குறித்த நற்செய்தி ஒரு மனிதனில் மாற்றத்தைத் தரவேண்டும். இந்த மாற்றம் அவரைப் புதுப்படைப்பாக மாற்றுகிறது. "மனமாற்றத்தின் வழி மட்டுமே மனிதன் புதுப்படைப்பாக முடியும்" என்பது இந்தியக்கிறிஸ்தவ இறையியலாளர் தேவானந்தனின் (P.D. Devanandan) கருத்து. நாம் பழையன களைந்து, அதாவது, மனமாற்றம் அடைந்து, புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்ளும் போது புதுப்படைப்பாகிறோம். கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகிறோம். மனம்மாறி, புதியவாழ்வு பெற்று, நற்செய்திக்கு சான்றுகளாய் வாழ்வோம்.

**மன்றாட்டு** *:எங்கள் கிருபையுள்ள ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவில் புது வாழ்வையும், இவ்வுலகின் பன்மைச் சூழல் மத்தியில் திருமுழுக்கின் வழியாய் இறையரசை சுதந்தரிக்கும் அருளையும் வழங்குகிறீர். இயேசு கிறிஸ்துவில் புது வாழ்வை நாங்கள் பெற்றுக் கொள்ள உதவிபுரிய உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.*

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**

**15-08-2012**

***சுதந்திர தினம்***

# "சமூக இணைவு"

## "COMMUNAL HARMONY"

| | |
|---|---|
| தொ.நூல் 11 : 1–9 | 2 திமொ. 2 : 14–26 |
| தி.பா. 66 | மத். 5 : 38–48 |

"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாயிருங்கள்" (மத். 5 : 48).

"சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" - என்பது உரிமைக்குரல்

"சுதந்திரம் வந்தென்னங்க"
"சுத்தமா பட்டினி தாங்க"- இதுக்கு
பேரு சுதந்திரமா? இல்ல
பேச்சு தந்திரமா? - இது
மக்களின் நாடித்துடிப்பு,

வெள்ளையனை வெளியேற்றினோம் ஆனால் இந்த மண்ணில் கொழுத்து வளரும் கொள்ளையர்களை வெளியேற்ற வழிகாணோம் என்பது நாட்டின் சுதந்திரத்தை சீர்தூக்கிப் பார்க்கும் ஒரு யதார்த்த வாதியின் ஆதங்கம்.

இந்தியா உறவுகளில் செழித்து வளருகிற நாடு, உறவுகளுக்கு உரிய மரியாதை தரும் நாடு, ஆகவே குடும்ப உறவுகள் இன்னும் அழியாமல் இருக்கிறது. இணைந்து வாழும் கணவன் மனைவி, வயது சென்ற பெற்றோரைக் கரிசனையுடன் கவனிக்கும் பிள்ளைகள், பிள்ளைகளுக்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கும் பெற்றோர்கள் எல்லாமே இங்கு உண்டு. ஆனால் மறுபுறம் உறவுச் சீர்கேடுகளும் உண்டு. சாதீயம் மக்களைப் பிளவுபடுத்தியிருக்கிறது. அப்படியே பொருளாதாரமும் மக்களைப் பிளவு படுத்தியுள்ளது. எங்கும், எதிலும் சுய நலம். இதனால் பிரிவினை.

இந்தியக் குடியரசு சட்டங்களிலேயே மிகவும் அதிக பட்ச தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுவது பிரிவினைவாதம் தான். பிரிவினைக்கு முயற்சி செய்ததாகத் தண்டனை பெற்றவர்கள் கொலைக் குற்றவாளிகளுடன் தனித்தனி அறைகளில் அடைத்து வைக்கப்படுவார்கள்.



நாட்டின் ஐக்கியம் முக்கியமானதாக் கருதப்படுகிறது. இன்றைய திருமறைப் பாடங்கள் தரும் செம்பொருள் "சமூக இணைவு." இறைவன் விரும்பும், விண்ணகம் மகிழும் இணைவு பற்றி திருமறைப் பாடங்களிலிருந்து தியானிப்போம்.

### 1. பிரிவினை தவிர்த்து பண்புடன் வாழுங்கள்:

(தொ. நூல். 11:1-9)

மனிதன் மனிதனை சார்ந்தே வாழ்பவன். மனிதனைப் படைத்த இறைவனும், மனிதனை இயற்கையுடனும் மனிதனுடனும் இணைந்து வாழ வைத்தார் (தொ. நூல். 1:26). தனித்து வாழ்வது நல்லதல்ல (தொ.நூல். 2:18) என்றார். ஆனால் தொ.நூல். 11:1-9இல் மக்கள் சுயநலத்தால் தங்களுக்கு பெயர் உண்டாக்குவோம் என்று கோபுரம் கட்டத் தொடங்கினர். ஆண்டவர் அவர்கள் மொழியில் குழப்பத்தை உருவாக்கி உலகெங்கும் அவர்களை சிதறுண்டுபோகச் செய்தார் (தொ.நூல். 11:9).

ஒரே மொழி, ஒரே இனம் சிறந்தது எனக் கருதப்பட்டாலும் வேற்றுமையிலும் ஒற்றுமை அதைவிட சிறந்தது. பல்வேறு மொழி, கலாச்சாரம், இனம் ஆகியவற்றைச் சார்ந்த அனைவரின் நலனிலும் நாட்டம் கொள்வது ஒற்றுமையின் சின்னம் ஆகும். அதுவே உண்மையான ஒற்றுமை.

### 2. பகை தவிர்த்து பற்றுறுதியுடன் வாழுங்கள்:

(2 திமொ. 2 : 14-26)

"வெறும் சொற்களைப் பற்றிச் சண்டையிடுவது பயனற்றது, அது கேட்போரின் அழிவுக்கு ஏதுவாகும் எனக் கடவுள் முன்னிலையில் சான்று பகர" திமோத்தேயுவுக்கு தூய பவுலார் எழுதுகிறார். மேலும் "மடத்தனமான அறிவற்ற விவாதங்கள் சண்டைகளைத் தோன்றுவிக்கும் என அறிந்து அவற்றை விட்டுவிடு" எனக் கூறுகிறார் (2திமோ. 2:14,23).

ஒரு பெரிய வீட்டில் பொன், வெள்ளிக்கலன்கள் மட்டுமல்ல, மண் மற்றும் மரத்தாலான கலன்களும் உள்ளது போன்று சமூகத்தில் பல்வேறு நிலையில், மொழி, நிறம், கலாச்சாரம் கொண்ட மக்களும் உண்டு. கலன்களில் சில மதிப்புடையவை, சில மதிப்பற்றவை, ஆனால் யாவும் வீட்டிற்குத் தேவையானவை. அதுபோலவே நாட்டிலும் மதிப்புடையவர்களும் மதிப்பற்றவர்களும் வாழ்கிறார்கள். எனவே வாக்கு வாதங்களைத் தவிர்த்து யாவரையும் ஏற்று இறைவனில் பற்றுறுதி கொண்டு வாழ வேண்டும். கோபமும் மத, இன வெறியும் விண்ணுக்கும், விண்ணவருக்கும் ஏற்புடையது அல்ல. மாறாக நீதியும், நியாயமும் அவருடையது.

### 3. பழி தவிர்த்து பரிவுடன் வாழுங்கள்: (மத். 5:38-48)

பழிக்குப் பழியே கூடாது, பழிக்குப் பதிலாக நமக்கு எதிராக வன்முறை செய்தோரிடம் நாம் பொறுமையுடன் பழக வேண்டும் என்பது இயேசுநாதரின் புரட்சிகரமான போதனை. இதன் விளைவாக வன்முறை செய்வோர் அதைத் தவிர்த்து விடுவர் அமைதி ஏற்படும். இந்த அமைதி நிலைக்கு நாம் காரணராக வேண்டும். வன்முறை தொடராமல் இருக்க ஒருவர் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அது நாமாக இருக்க வேண்டும் என்பது இயேசுவின் போதனை. பல்வேறு சமய நம்பிக்கை உள்ள மக்கள் வாழும் பாரத நாட்டில் கிறிஸ்துவின் அடியவராகிய நாம் பிறரை மன்னித்து மனித நேயத்துடன் வாழுவோம். நாட்டின் ஒருமைப்பாட்டினைக் காப்போம். இதன் வழியாய் இறைநாமம் மாட்சிமைப்படட்டும்.

இறையாசி நம் அனைவருடனும் தங்குவதாக.

**மன்றாட்டு :** *கடவுளே, நீர் எல்லா மக்களையும் உமது சாயலில் படைத்தீர். எங்கள் நாட்டில் தேவரீர் தந்திருக்கிற அதிசயிக்கத்தக்க பன்மை கலாச்சாரங்களுக்காகவும் மக்களுக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி சொல்கிறோம். எங்கள் நண்பர் வட்டங்களில் பலநிலைகளில் நாங்கள் ஏற்படுத்தும் பிளவுகளையும் எங்கள் மனதிலிருக்கும் வகுப்புவாத சிந்தனைச் சுவர்களையும் உடைத்துப் போடுவீராக. உமது எழுந்தருளலை இதர பற்றுறுதியுடையோருடனும் வெளிப்படுத்துவீராக. உம்முடைய பிள்ளைகளாகிய எங்கள் அன்பு உமதன்பில் முழுமையடையச் செய்வீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம் ஆமேன்.*

திரு. **D. சாது டேனியல்**



**19-08-2012**

## பன்மை : ஒரே மக்களினமும் பற்றுறுதியைப் பகிர்தலும்

**Pularlity : Common Humanity and Faith Sharing**

| | |
|---|---|
| யோனா 4 : 1–11 | உரோ. 14 : 1–14 |
| தி.பா. 36 | யோவா. 12 : 20–32 |

"நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" (யோவா. 12 : 32)

இந்தியா பன்மைச்சூழல் நிறைந்த நாடு. பல்மொழி பேசும் மக்கள், பல்வகை கலாச்சார பழக்க வழக்கங்கள், பலபற்றுறுதி கோட்பாடுகள், பாரம்பரியங்கள் இணைந்து வாழும் அழகிய சூழலைக் காணலாம். எந்த நாடுகளிலும் இல்லாத இச்சிறப்பு நம் தாய்நாட்டுக்கான தனிச்சிறப்பு. இந்தியாவின் முதல் ஜனாதிபதியான டாக்டர். இராதாகிருஷ்ணன் "Indian culture is a rainbow culture" இந்திய கலாச்சாரம் அழகிய வானவில்லைப் போல பல வண்ணங்களைக் கொண்டது என்கிறார். வானவில் அழிவின் அடையாளம் அல்ல, அது மீட்பின் அடையாளம் என்பதாக திருமறை கூறுகின்றது. வானவில் ஒரு நம்பிக்கையின் அடையாளம் ஆகும். ஆனால் ஏழை - செல்வந்தன் என்று வறுமை - செழுமை வேறுபாடுகளும் இனம், மொழி, சமுதாய ஏற்றத்தாழ்வுகளும் ஒரு வேறுபட்ட பன்மைச்சூழலை உருவாக்கிவிட்டதை நாம் அறிவோம். எனவே, பன்மைச்சூழல் பெரிய சிக்கலை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது. (Plurality is in crisis) சிக்கலை ஏற்படுத்தும் பன்மைச் சூழலை ஒருங்கிணைக்கும் முயற்சியைவிட வானவில் கலாச்சாரம் போன்ற பன்மையை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் தான் அதிகம். இந்துத்துவா அமைப்புகள் ஐந்து விதமான ஒற்றுமைகளை ஏற்படுத்த முயன்றது. இந்தியா ஒரேநாடு நாம் அனைவரும் இந்தியர்கள் என்று புவியியல் சார்ந்தும், ஆரிய கலாச்சாரத்தை திணித்து கலாச்சார ஒருமைப்பாட்டையும், இந்துமதம் இந்தியாவின் சமயம் என்று சமயம் சார்ந்த ஒருமைப்பாட்டையும், வர்க்கம் சார்ந்தும், சமஸ்கிருதமொழி ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் என்று மொழி சார்ந்த ஒருங்கிணைக்கும் முயற்சிகள் நடைபெற்றன.

மேலும் உலகமயமாக்குதலின் வழியாக நுகர் கலாச்சாரத்தை (Consummeristic culture) திணித்து ஒருங்கிணைப்பு முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பக்க விளைவுகளாக மதவாதம், அடிப்படைவாதம், வறுமை போன்றவை இந்தியாவின் இறையாண்மையை சீரழித்துக் கொண்டிருக்கிறது. எனவே, பேணிக்காக்க வேண்டிய பன்மையை காக்க பற்றுறுதியை பகிர்ந்து இயேசு விரும்பிய ஒரே மக்களினத்தை உருவாக்க எப்படி முயலவேண்டும் என்பதை சிந்திப்போம்.

**1. பன்மையை நிகழ்வாக உணர்தல்** (Acknowledging plurality as a reality )

பன்மைச்சூழல் கடவுளின் படைப்பு. சமுதாய - பொருளாதார, சமய வேறுபாடுகள் மனிதனின் பாவத்தின் விளைவு. நோவாவின் மகன்களான சேம், காம், யாப்பேத்து பெருவெள்ளத்திற்குப் பின் பல இடங்களில் குடியேறினார்கள். காலப்போக்கில் சந்ததிகள் வளர்ந்தன. இவர்கள் தான் பாபேல் கோபுரம் கட்டவும், ஒரே கலாச்சார - அமைப்பு சார்ந்த பாபேலாகிய நிறுவனத்தை ஏற்படுத்தவும் நினைக்கிறார்கள்.கடவுள் அவர்களைச் சிதறப்பண்ணினார். இதனால் கடவுள் பன்மைச்சூழலை விரும்புகிறவர் என்று புரிந்துகொள்கிறோம். (God was against developing mono structure). பன்மை கடவுளின் அருள்கொடை, வேறுபாடுகள் கடவுளின் படைப்புத் திட்டத்தின் ஒரு பகுதி என்று புரிந்து கொள்கிறோம். (Pluraily is God's gift and diversity in the very structure of God's cvertion). எனவே, கடவுளின் படைப்பாம் பன்மையைக் கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

இறைவாக்கினர் யோனா கடவுளிடம் சினமடைகிறார். நீர் மனம் மாறுகிறவர் என்கிறார். பலர் கடவுள் மனம் மாறுவதில்லை என்று நினைக்கிறார்கள். கடவுள் மனம் மாறுகிறவர் என்றால் கர்மா கோட்பாட்டை நாம் நம்புகிறோமா? பெருந்திரளான நினிவே மக்களின் அழிவை கடவுள் விரும்பவில்லை. மக்கள் அழிவை விரும்புவதும், அவர்களது வாழ்வைக் குறித்த அக்கரையற்று ஓடுவதும் அடிப்படைவாத சிந்தனைகள்தான். நினிவே மக்களும் கடவுளுக்குரியவர்கள், அவர்களிடமும் பற்றுறுதியை பகிர்ந்து கொள்வதும், அழிவிலிருந்து அவர்களை மீட்பதும் இறைவாக்கினர்களின் பணியாகும். நம் பற்றுறுதியைச் சாராதவர்கள் அழிய வேண்டும் என்று நினைப்பது பற்றுறுதிக்கு புறம்பானது.

**2. பன்மையை ஏற்றுக்கொள்ளுதல்** (Accepting Plurality)

பன்மைச்சூழலை ஏற்றுக்கொள்வது என்பது அனைவரையும் ஏற்றுக்கொள்தல் ஆகும். உரோமையர் 14 : 1-11-ல் நம்பிக்கையில் வலுவற்றவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள், பிணியாளர்களை ஏற்றுக் கொள்ளுங்கள், ஒரு நாள் மற்றொரு நாளைவிட சிறந்தது என்று சொல்லமுடியாது போன்ற பவுலடியாரின் கருத்துக்கள் பன்மைச் சூழலை ஏற்றுக்கொள்வதின் அவசியத்தைக் காட்டுகிறது. அனைத்து முழங்கால்களும் எனக்கு முன் மண்டியிடும், நாவு அனைத்தும் என்னைப் போற்றும் என்ற ஆண்டவரின் கூற்றுக்களை உறவுச் சார்ந்து சிந்திக்கவேண்டும் எனும் கருத்தினை உணர்த்துகிறது. பொதுவாக அனைத்து சமயத்தவரும் கிறிஸ்துவை வழிபடுவர் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இறுதி தீர்ப்பு அவர்களுக்கு மட்டும் உரியது என்றல்ல, நாமும் அவர்களுடன் இணைந்து நடுதீர்ப்புக்கு உட்படுகிறோம். எனவே பன்மை என்பது நம் வேறுபட்ட தன்மைகளுடன் கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ்வதேயாகும் என்று புரிந்து கொள்கிறோம். நான் கிறிஸ்தவனாக இருப்பதில் மகிழ்வும் மனநிறைவும் அடைகிறேன். இதற்கு



அநேக காரணங்களை என்னால் சொல்ல முடியும். இதனைப்போன்று ஒரு இந்து நண்பரோ அல்லது இசுலாமிய நண்பரோ சொல்லும்போது அதனை நாம் ஏற்றுக்கொள்ளும் மனபக்குவம் வளரவேண்டும். (Unity is not uniformity, but unity in diversity)

திருத்தூதுவர் செயல்களிலும் அவர்களின் பிரிவில் தூய ஆவியரின் அருளுதலும், பல்மொழிபேசுதலும் பன்மையை ஏற்றுக்கொள்ளுதலின் சிறப்பை உணர்த்துகிறது. அங்குகூடியிருந்த 17 மொழிகள் பேசிய மக்கள் இணைந்து தூய ஆவியரின் அருள்பொழிவை பெற்றபோது ஒருவர் மற்றொருவரை புரிந்து கொள்ளும் ஆற்றல் கிடைக்கிறது. நம் கூடுகைகள் பன்மை நிலையில் அமையும்போது தான் பெந்தேகோஸ்தே அனுபவம் அருளப்படுகிறது.

**3. பன்மையைப் பற்றிய எதிர்நோக்கு** (Anticipating plurality)

யோவான் 12-ம் பிரிவு, இயேசுவை காணவேண்டும் என்ற அவலுடன் தொடங்கி தொண்டு செய்வது, ஆண்டவரின் மதிப்பீடு என்று குறிப்பிடுகிறது. தமக்கென வாழ்வோர் - பிறருக்காக வாழ்வோர் என்று இருவகை மனிதர்கள் இங்கு சொல்லப்படுகிறார்கள். பிறர்கென வாழ்வோர் கோதுமை மணியாக விழுந்து - மடிந்து - உயிர்பெற்றெழுந்து - விளைச்சல் கொடுப்பர். தனக்கென வாழ்வோர் வாழ்வை இழந்து விடுவர். பிறருக்கென வாழ்வோர் பன்மைநிலையில் தொண்டாற்றுபவர்கள். ஏசாயா இறைவாக்கினரின் பன்மைச் சூழலின் ஒருமைப்பாட்டு திருக்காட்சி (11) இவ்வுலகில் பன்மை சமுதாயங்களை நாம் எவ்வாறு நல்லெதிர்பார்ப்புடன் கட்ட முயலவேண்டும் என்பதைக் காட்டுகிறது. How do we live together in harmony with people of different cultures, traditions and faiths?

பன்மையைப் பற்றிய புரிந்து கொள்ளுதலுக்கு அடிப்படை யாவே கடவுள். அவர் பன்மையாகவே இருக்கிறார். (God is plural) கடவுள், கிறிஸ்து, தூயஆவியார் இணைந்த மூவெருக்கடவுள் பன்மையர். எனவே, பன்மையராகிய மூவொருக்கடவுள் தான் படைத்த பன்மைச்சூழலில் ஒன்றாக இணைந்து ஒரே மக்களினமாக ஒருவர் பற்றுறுதியை இன்னொரு பற்றுறுதியாளரிடம் பகிர்ந்து அதன் வழியாக நம் பற்றுறுதியை வளர்த்துக்கொள்ள முற்படுவோம்.

**மன்றாட்டு :** கடவுளே நீர் அனைவரையும் உமது சாயலில் உருவாக்கினீர். இரக்கத்துடன் முழு மனுக் குடும்பத்தையும் கண்ணோக்கி மக்களின் மனதைக் கறைப்படுத்தியிருக்கும் கொடூர குணத்தையும் காழ்ப்புணர்ச்சியையும் எடுத்துப் போடுவீராக. பிரிவினைச் சுவர்களைத் தகர்த்து அனைவரையும் அன்பின் கட்டுகளால் ஒன்றிணைப்பீராக. நாங்கள் பன்மைக் கலாச்சாரம் மற்றும் பல்சமய மக்களுக்காக மகிழ் கொண்டாடவும் அதன் வழி பொது மானுடத்திற்காக எங்கள் கண்களின் காட்சிகள் தூரக் காட்சியுடன் விரிவடையச் செய்வீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றைக்கும் வாழ்ந்து உம்முடன் ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியே. ஆமென்.

அருள்திரு. Dr. **பீட்டர் சிங்**

**26-08-2012**

# இறை மக்களின் அரசியல் பொறுப்பு

**Political Responsibility of God's People**

ஆமோ. 5 : 1–17 திப. 24 : 10–27
தி.பா. 105 : 1–11 மத். 13 : 31–43

"நன்மையை நாடுங்கள், தீமையைத் தேடாதீர்கள்" (ஆமோ. 5 : 14).

"அதிகாரம் என்பது மற்றவர்களை ஆளுவதற்கே" என்ற சிந்தனை பெருகி வரும் காலத்தில் இன்றைய இறைமக்களின் அரசியல் பொறுப்பு எனும் தலைப்பு கூர்ந்து கவனிக்கத்தக்கது. அரசியலை சாக்கடை எனக் கருதும் பெருவாரியான கிறிஸ்தவர்கூட திருச்சபை தேர்தல்களில் படுதீவிரமாக ஈடுபடுவதைக் காணலாம். வாக்கு சேகரிப்பு, பேரம் பேசுதல், வாக்காளரை சிறைபிடித்தல், சுவரொட்டிகள் ஒட்டுதல், வழக்கு மன்றங்களில் தடை வாங்குதல் போன்றவைகள் இன்றைய திருச்சபை தேர்தல்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கட்சி அரசியல், திருச்சபை அரசியல் என்பவைகளை வேறுபடுத்தி, இதில் எது நல்லது என்று தெரிவு செய்ய முடியும் ? திருவிவிலியம் இதைக் குறித்து நமக்கு தெளிவுப்படுத்துகிறதா ? திருவிவிலியம் நமக்கு துணை நிற்க முடியுமா ? என்ற கேள்விகள் எழாமலில்லை. இன்று நமக்கு தரப்பட்ட மூன்று திருவிவிலிய பிரிவுகளும் அரசியல் சார்ந்ததே. ஆமோஸ் இறைவாக்கினர் நீதிக்கான அரசியலையும், பவுலடிகளார் லஞ்சம் கொடுக்க மறுத்து பகிரங்கமான விசாரணை கோருவதையும், ஆண்டவராகிய இயேசுநாதர் இறையரசுக்கான அரசியலையும் பேசும் பகுதிகளை நாம் சிந்திக்க இருக்கிறோம்.

## 1. பணியாற்றுவதற்கான அரசியல்

ஆண்டவர் இயேசு பின்பற்றிய முறையியலும், ஒருவித அரசியலே ! அதிகாரத்தைக் கைப்பற்றாமல் தம் ஈடுபாட்டின் வழியாக அரசியலைப் பின்பற்ற முடியும். அதிகாரம் வழங்கப்படாத ஒருவர் எப்படி அதிகாரமுள்ளவராக போதிக்க முடிந்தது என்பதற்கு ஆண்டவரே சாட்சி (மத். 7:28;21:3). அது அவரது பணியால் கிட்டிய அதிகாரம். ஒதுக்கப்பட்ட கடைநிலை மக்களின் தேவைகளைக் குறித்த கரிசனை கொண்டவராதலால் அவர் அதிகாரம் பெற முடிந்தது. "உங்களில் யார் என்னை குற்றமுள்ளவர் எனத் தீர்க்க முடியும்." என்று சமயத் தலைவர்களையும், மக்களையும் பார்த்து கேட்கும் அளவு தன்னில் அப்பழுக்கற்ற தன்மையைக் கொண்டிருந்ததால், அவரிடம் குறை கூறப்படும் தன்மை இல்லாததால் அவரிடம் ஏற்பட்ட தைரியமே அவரை அதிகாரமுள்ளவராக்கியது. குறைந்த



மக்களுக்கு ஆற்றும் பணியாலே அவர் அதிகாரம் பெற்றார். அவரது மக்கள் பணியே அரசியலாகியது. இவரது இந்த அரசியல் நிலைப்பாடே அவரை பொய் வழக்குக்கும், சிலுவைக்கும் வழிநடத்தியது என்றால் மிகையாகாது.

இறைவாக்கினர் ஆமோஸ் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நடைபெற்று வந்த இஸ்ரவேல் மக்களின் அநியாய வாழ்க்கையை கண்டித்து இறைவாக்குரைத்தார். நியாயத்தை எட்டியாக மாற்றியவர்கள். நீதியை தரைபட எறிந்தவர்கள் (5:7). நியாயம் பேசுபவர்களை பகைத்தவர்கள், யதார்த்தவாதியை வெறுக்கிறவர்கள் (5:10) ஆகியோர் இருக்கும் வரை ஓலமும், சிறையிருப்பும், புலம்பலும்தவிர்க்க முடியாது என எச்சரிக்கிறார் (5:16-17). அன்றைய ஆமோஸ் இறைவாக்கினர் இன்றைய நாள் போன்ற கட்சி அரசியல்களில் இல்லாவிட்டாலும், அவரை ஒரு நீதிக்கான அரசியலைப் பேசுகிறவர் எனப் பார்க்கலாம். இது போன்ற பணித்தளங்களின் வழியே நாமும் அரசியலில் ஈடுபடலாம். இதுவே பணியாற்றத் தூண்டும் அரசியலாகும்.

"அதிகாரம் என்பது மற்றவர்களை அடக்கி ஆள்வதற்கல்ல பணி செய்யவே" என்பது விவிலிய செய்தி. இருப்பினும் அதிகாரம் வந்தபின் பிறருக்கான சேவை செய்யும் மனப்பான்மை இன்று அனைத்து மக்களிடமும் குறைந்து வருகின்றது. உடனடி வருமானம் கிடைக்காத பணிகளைச் செய்ய இன்று ஆட்கள் இல்லை. வருமானம், இலாபம் இவைகளை மையமாகக் கொண்ட கல்வியிலும், வளர்ச்சியிலும், வேலைவாய்ப்புகளிலும் நாட்டம் அதிகரிக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். சம்பளமில்லாத பணி என்பது இன்று இயலாத ஒன்று. ஆயினும், சம்பளம் வாங்கிக் கொண்டே பணி செய்யாமல் நேரத்தை ஓட்டுவதும், தன் பணியை மற்றவர்களிடம் சுமத்துவதும், கடமைக்குரிய பணி செய்ய லஞ்சம் வாங்குவதும் நம்மிடையே இன்றைய பெரும் அறைகூவலாக உள்ளன. நமக்குக் கிடைத்த பணிக்கு நீதி செய்வதும் அதனை கடவுளின் பணியாகப் பார்ப்பதும், பலனை எதிர்பாராததும் இன்றைய கிறித்தவ அறமாகும். இதுவே பணிக்கான அரசியலாகும்.

## 2. பணிவிற்கான அரசியல்

பெரும்பாலான நேரங்களில் அதிகாரம் மக்களை திமிர்த்தனமாக, மமதை கொண்டவராக நடக்கத் தூண்டுகிறது. ஒரு சிலர் அதிகாரம் கிடைத்தவுடன் மக்களிடமிருந்து அந்நியமயமாகிவிடுவர். தாழ்மைக்கும் பணிவுக்கும் வழிநடத்தும் ஓர் அரசியலை ஆண்டவர் இயேசுவிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். "காட்டு மலர்களைக் கவனித்துப் பாருங்கள் ஆகாயத்துப் பறவைகளை கவனித்துப் பாருங்கள்." (மத். 6:26-28) என்ற கூற்றுக்கள் இந்தப் பணிவிற்கான அரசியலை நினைவுப்படுத்துகின்றன. எளிய இயற்கையிடமிருந்து கற்றுக்கொள்ளவும் பணிவு தேவைப்படுகிறது.

அளவு புளித்தமா முழுமையான மாவின் புளிப்புக்கு வழிவகுக்கிறது. அது எப்படியெனில் ஆரவாரமில்லாத, அமைதியான புரட்சியை ஒரு சிறிய அளவு புளித்தமாவின் செயல்பாட்டில் காணமுடிகிறது (மத். 13:33). சின்னஞ்சிறிய கடுகுவிதை பெரிய வளர்ச்சிக்குரியதாக பார்க்கப்படுகிறது (மத். :31-32). அமைதியான நீதிக்கான அரசியலும், செயல்களும் தன்னில்தானே உரக்கப்பேசும் தன்மை வாய்ந்தவை. அவை கடவுளைக்கூட கேட்கச்செய்யும். கரிசனையோடு கூடிய அந்தரங்க இறைவேண்டலும்கூட ஓர் அரசியல் சார்ந்ததே! ஒரு கைக்கு தெரியாமல் இன்னொரு கை செய்யும் ஈகைகூட பணிசார்ந்த அரசியலே (மத். 3:3-4). அமர்க்களமான பெரிய விருந்தில் அமைதியாக ஒரு மூலையில் இருந்து கலந்து கொள்வதும் பணி சார்ந்த அரசியலே (லூக். 14:7-11). நாம் சிலவேளைகளில் பணிவாக கற்றுக்கொள்ள தயாராகயில்லை. வரும் வாய்ப்புகளை துணிகரமாக தூக்கி எறிகிறோம். கட்சி அரசியல் சார்ந்த பொதுதேர்தல்களில் ஓட்டுப்போடச் செல்லாமல் தவிர்ப்பதும், அந்நேரத்தை தனது வீட்டுப்பணி செய்யவோ, உறவினர்களைப் பார்க்கச் செய்வதோ மிகப்பெரிய பாவமாகும். நல்ல ஆட்சியை தெரிவுசெய்ய கிடைக்கும் வாய்ப்பினை நாம் உள்ளுணர்வோடு உதறித்தள்ளுவது. “அரசியல் எனக்கு வெகுதூரம்” எனனத் தப்பி ஓடுவதற்கு சமம். அண்மை காலங்களில் கற்றவர்களைவிட கல்லாதவர்களே வாக்கு சாவடிகளுக்கு செல்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இது ஒரு நிர்விசாரமான அரசியல் போங்கு. பொறுப்புள்ள இறை மக்கள் அவ்வாறு செய்வதில்லை.

## 3. பற்றுறுதிக்கான அரசியல்

“விசுவாச வாழ்க்கைக்கு அரசியல் தேவையா? என்ற கேள்வியைஎழுப்புவோர் இன்று ஏராளம்.” இதற்காகவே மண்ணுலகை வெறுத்து விண்ணுலகை விரும்பும் பற்றுறுதியாளர்கள் ஏராளம் உள்ளனர். இவர்கள் நடுவே இறையாட்சி, இறையரசு என்ற இயேசுவின் குரல் நம்மைத் திரும்பிப் பார்க்கச் செய்கிறது. இறையாட்சி அல்லது இறையரசு என்பதே கடவுளோடு நாம் வாழும் ஒரு சூழலைக் குறித்த ஓர் அரசியலைப் பேசுவதாகும். நம் அன்றாட விசுவாச வாழ்வு பற்றுறுதி அறிக்கையோடு இணைத்துச் செல்லும் ஓர் அரசியல் பயணமாகும்.

பவுலடிகளார் தன் திருப்பணியின் காலகட்டத்தில் பொய் குற்றச்சாட்டுக்கு உட்படுகிறார் (தி.ப. 24:1-9). இப்பொய்யான குற்றச்சாட்டை இலஞ்சம் கொடுத்து தீர்க்க அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கிட்டியது. ஆயினும் அவர் இலஞ்சம் கொடுக்க மறுக்கிறார் (24:26). வெளிப்படையாக சாட்சியளிக்கிறார் (24:10-21). இயேசுவைப்பற்றிய நம்பிக்கையை நடைமுறை எதார்த்தத்துக்கு ஏற்ப சூழல்சார்ந்து விளங்குகிறார் (24:25). தன்னை பகிரங்கமாக விசாரணை செய்யுமாறு அழைப்பு விடுக்கிறார். இது பற்றுறுதியால் விளைந்த அரசியல். இதுபோன்ற வெளியரங்கமான அரசியல்



இன்று மக்களாட்சியில் மிகவும் பாராட்டப்படுகிறது. திறந்த மனப்பான்மையுடன் பேச்சுவார்த்தை செய்வது, விசாரணை செய்வது என்பது நல்ல அரசியல் கூறுபாடுகளாகும். அந்தரங்கமாக நடத்தப்படும் அரசியலுக்கு இவை எதிரிடையானவை என்பதை நாமும் புரிதல் வேண்டும்.

ஆண்டவர் இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டலை இறையாட்சிக்குரிய அல்லது இம்மண்ணுலகுக்குரிய அரசியல் என்று நாம் பார்ப்பதுதான் சிறப்பு. ஆனால் நம்மில் பெரும்பாலோனோர் இதனை முழுக்க விண்ணகம் சார்ந்து பார்க்கின்ற ஒருவித அரசியலால் நடைமுறைப்படுத்த வேண்டிய நல்ல அரசியலையே நாம் ஒரு தூர காட்சிக்கான கனவாக்கி விடுகிறோம். தூரக்காட்சி தேவைதான் ஆனால் அக்காட்சி மண்ணகம் சார்ந்ததாக அமைய வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். மண்ணகம் சார்ந்த அரசியலுக்காக நம் பற்றுறுதி பயன்படாவிடில் எந்தப்பயனும் இல்லை.

### முடிவுரை

“அரசியலையும், திருமறையையும் கலக்க அல்லது குழப்ப வைக்க வேண்டாம் என்று கூறுபவர்கள் எப்படிப்பட்ட திருவிவிலியத்தை படிக்கின்றனர் என்பது எனக்குப் புரியவில்லை?” என தென்னாப்பிரிக்க முதன்மை ஆங்கிலிக்கள் பேராயர், டெஸ்மண்டு டுடு ஆச்சரியத்துடன் கேட்கிறார். அந்த அளவு நம் நல்லதோர் திருவிவிலியம் அரசியலைப்பற்றி பேறுகிறது. ஆனால் முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலும் நம் போலித்தன்மை ஒருபோதும் தொடர்ந்து நிலைநிற்க முடியாது என்பதை நம் நினைவில் கொள்ளவேண்டும்.

இறைமக்கள் அரசியல் பொறுப்புடையோராக மாறவேண்டுமெனில் அடிப்படையாக மனமாற்றம் தேவை. மேலும் அவர்கள் அரசியலைப்பற்றிய தெளிவான பார்வையும், கடவுள் சார்ந்த அரசியலையும், மக்கள் சார்ந்த அரசியலையும் கூர்மைப்படுத்தல் வேண்டும். அரசியலில் ஈடுபடும் அனைவரையும் “ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்” என பொதுமைப்படுத்தி விடாமல் தனித்தன்மையோடு ஈடுபடுவோரை ஊக்குவித்தல், பாரட்டுதல் வேண்டும். எப்படிப்பட்ட அரசியலை வெறுக்க வேண்டும்? நல்லவர்கள் ஏன் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டும்? நல்லவர்கள் பொதுவாழ்வில் ஒதுங்கிச் செல்வதால் அவ்விடத்தை கொள்ளையர்கள் நிரப்பிக் கொள்கின்றனரே! (நீதியரசர் 9:6-15) என்பதையும் புரிதல் வேண்டும்.

திருச்சபையில் ஒருவர் எந்த அரசியல் கட்சியையோ, அதிகாரக் குழுவினரையோ, சாராமல் நியாயத்திற்காக குரல்கொடுக்கிறார் எனில் அவரை நல்தொரு மக்கள் அரசியலில் ஈடுபடுவகிறவர் என்றுதான் பார்க்க வேண்டும். அதுபோன்று ஒரு கிறித்தவர் தம் பகுதியில் தண்ணீர் மாசுபடக்

கண்டால், அல்லது பன்னாட்டு கம்பெனிகளுக்கு தாரைவார்ப்பதைக் கண்டு மக்களைத் திரட்டி போராடினால் அவரையும் மக்கள் அரசியலில் ஈடுபடுகிறார் என்று கூறுவதே சிறப்பு. இதுதான் சுயநலமற்ற கிறிஸ்தவ அரசியல் எனலாம்.

இறையரசு சார்ந்த அரசியலை திருச்சபையிலிருந்து நாம் தொடங்கவேண்டும். அரசியலையும் பொறுப்புமிக்க பணியாக மாற்ற வேண்டும். கட்டுப்பாடற்ற, கேள்விக்கு அப்பாற்பட்ட வெறித்தனமான அரசியல் அதிகாரம் என்பதைக் காட்டிலும் பொறுப்புமிக்க, சுயநலமற்ற, பொது மக்கள் கரிசனை கொண்ட அரசியலை கிறித்தவர்கள் எதிர்ப்பதிலும், ஈடுபடுவதிலும் எந்தத் தவறும் இல்லை. இன்றைய உலகுக்கு தேவைப்படுவதெல்லாம் மக்களாட்சிக்கான நல்ல அரசியல், எளிய மக்களுக்கான அரசியல், மாற்று திறனாளிகளுக்கான அரசியல், நீதிக்கான அரசியல் ஆகியவைகளே! ஆண்டவர் இயேசுவின் அரசியலும் இத்தகையதே. இத்தகைய இயேசுவின் பணி அரசியலில் இலாபத்திற்குப் பதிலாக சிலுவையே கிடைக்கலாம். அதுபோன்ற வழியையே ஆண்டவர் காட்டுகிறார். அந்தத் தியாக அரசியலில்தான் கிறிஸ்தவத்தின் வலிமையும், பொறுப்புணர்வும் விளங்குகிறது.

**மன்றாட்டு :** *கடவுளே, நீர் நீதியை விரும்பி பூவுலகில் அமைதியை நிறுவுகிறீர். உமது அரசின் தகவுகள் இவ்வுலகில் விரைந்து செல்லப்படுவதற் கேதுவாய் சமூக வாழ்விலும் நாட்டு வாழ்விலும் எங்கள் பொறுப்புக்களை ஏற்க உந்துதல் தருவீராக. நீதிக்காகவும் அமைதிக்காகவும் உழைக்க எங்களுக்கு ஆற்றல் தருவீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம், ஆமேன்.*

அருள்திரு. முனைவர். **சாலமன் விக்டசு**

**01-09-2012**

*அருணோதயத் தொழுகை*

# வழி நடத்தும் வல்லவர்

**விப. 33 : 12–23**

**"எனது பிரசன்னம் உன்னோடு செல்லும்" (விப. 33 : 14).**

இறைவனது வழி நடத்துதலை புதிய மாதத்தில் எதிர்நோக்கி அவர் பாதம் அமர்ந்திருக்கும் நமக்கு இறைவன் தருகின்ற வார்த்தை எனது பிரசன்னம் உன்னோடு செல்லும்.

இஸ்ரயேல் மக்களை வழி நடத்தின மோசே, ஆண்டவரே உமது வழிகளை எனக்கு காட்டியருளும் என வேண்டுதல் செய்தார். அதற்கு ஆண்டவர் "எனது பிரசன்னம் உன்னோடு செல்லும்" என பதிலளித்தார். அதற்கு மோசே உம்முடைய சமூகம் என்னோடே கூட செல்லாமற் போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும் (வி.ப. 33 : 15) என வேண்டிக் கொண்டார். இது இறை வழி நடத்துதல் இல்லாமல் வாழ்வின் பயணத்தினை தொடரமுடியாது எனும் நிலையினை உணர்த்துகிறது. மோசேயின் வேண்டுதலுக்கு கிடைத்தபதில் இம் மாதத்தில் கடவுள் நம்மையும் வழி நடத்த முடியும் என்பதை உணர்த்துகிறது.

**1. முன் செல்கிறார்** : (வி.ப. 33 : 14)

விடுதலைப் பயணத்தின் வெற்றியினைக் காண இறைவழி நடத்துதல் தேவை என மன்றாடின மோசேக்கு இறைப்பிரசன்னம் உனக்கு முன்பாகச் செல்லும் என வாக்கு கொடுக்கிறார். இறைப் பிரசன்னம் முன் செல்கையில் பின் தொடர்பவர்களுக்கு பயம் இல்லை. பயணத்தின் இடையில் எதிரிடும் தடைகளை தகர்ப்பதற்கும். எதிராளியின் தாக்குதலிருந்து காப்பதற்கும் செவ்வையான பாதையில் செல்வதற்கும், இறை பிரசன்னம் முன் செல்லும் என்கிறார்.

பாபிலோன் சிறையிருப்பில் வேதனையுற்று எருசேலமுக்கு திரும்பிவரும் எண்ணத்தோடிருந்த மக்களுக்கு "நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளை செவ்வையாக்குவேன்" எனும் நம்பிக்கையினைத் தருகிறார் (ஏசா. 45 : 2). வாழ் நாட்களில் அடுத்த நாளையாவது நிமிடத்தையாவது அறிந்திராத நம்மை இறைப் பிரசன்னம் ஆட்கொண்டு, நமக்கு முன் செல்லுமாயின் எத்தனை மகிழ்ச்சி. இறைப் பிரசன்னத்தில் அமர்ந்திருக்கும் நாம் இதன் தொடர் வழி நடத்துதலோடு இம்மாதத்தினைத் தொடர்வோம்.



**2. பெயரிட்டு அறிகிறார் :** (வி.ப. 33 : 17)

நமக்கு முன் செல்லும் இறைவன் அவரைத் தொடர்ந்து செல்லும் அவரது அடியவரை அறிந்திருக்கிறார். பல வேளைகளில் நாம் நம்மைக்குறித்து அறிந்தவர் எவரும் இலர் என நினைக்கிறோம். ஆனால் நமது ஆண்டவர் நம்மை "அறிந்து பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரயேலின் ஆண்டவராகிய கடவுள் நானே" என்கிறார் (ஏசா. 45 : 3). யோவான் நற்செய்தியாளர் இறைவனை மேய்ப்பவராக அடையாளம் கண்டு ஆடுகளாகிய தம் அடியவரைப் பெயர் சொல்லி கூப்பிடுகிறவராகவும் ஆடுகளை அறிந்தும் ஆடுகளால் அறியப்பட்டும் இருக்கிறவராக குறிப்பிடுகிறார் (யோ. 10 : 34).

லூக். 19 : 5இல் ஆயக்காரனும் செல்வந்தனுமாயிருந்த சகேயுவை காட்டத்தி மரத்திலிருந்து பெயர்சொல்லி அழைத்து தமது பிள்ளை எனும் உரிமையினைக் கொடுத்த ஆண்டவர் இன்று நம்மையும் அறிந்திருக்கிறார். இம்மாதம் இறை அன்பை உணர்வோம். பெயர் சொல்லி அழைக்கும் அவர் பின் செல்வோம்.

**3. கிருபை அருள்கிறார்:** (வி.ப. 33 : 17)

பெயர் சொல்லி அறிந்து அழைத்து வழி நடத்தும் ஆண்டவர் நம்மை கைவிடுகிறவரல்ல. கலங்காது வாழ கிருபை அருள்பவராய்ச் செயல்படுகிறார். கடவுளின் கிருபையினை எதிர் நோக்கியிருந்த மோசேக்கு என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது என்கிறார். எங்கெல்லாம் இயலாமை நம்மை ஆட்கொள்கிறதோ, எப்போதெல்லாம் நாம் பெலவீனப்படுகிறோமோ எவ்விடத்திலெல்லாம் நம்மை உதாசீனப் படுத்தப்படுவோமா அங்கே இறைவனது கிருபை நம்மை ஆட்கொள்கிறது.

தாழ்மை நிலையில் இருந்த மரியாளுக்கு கடவுள் கிருபையை அருளி கடாட்சித்தார் (லூக் 1 : 28). இயலாமையில் தன்னை ஆண்டவருக்கு முன்பாக தாழ்த்தின ஆயக்காரனுக்கு கிருபை கிடைத்தது. (லூக். 18 : 13) பெலவீனத்தின் நடுவில் அது நீங்கும்படியாக மூன்று முறை கடவுளிடம் விண்ணப்பம் செய்த பவுலுக்கு அதனைத் தாங்கக்கூடிய கிருபை கிடைத்தது. (2 கொரி. 12 : 9) இவ்வாறாக இறை அருளால் கிருபையின் மேல் கிருபை பெற்றோம் என யோவான் (1 : 16) கூறுகிறார்.

புதிய மாதத்தில் இறைசமூகம் வந்துள்ள நாம் எட்டு மாதங்கன் நம்மை நடத்தின ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். புதிய மாதத்திலும் இறைப்பிரசன்னம் நமக்கு முன் செல்லட்டும். இறை சத்தம் நம்செவிகளில் கேட்கட்டும். இறை அருள் நம்மை முழுமையாய் நிரப்பட்டும் என உண்மையான பற்றுதியோடு வேண்டிக்கொண்டு பணிகளை தொடருவோம். இறை ஆசி பெறுவோம்.

**திரு. N. ஜெசின்**

**02-09-2012**

# இயேசுவே குரு

## Jesus the Guru

நீதி. 4 : 1–9 — தி.ப. 22 : 1–5

தி.பா. 111 — லூக். 4 : 31–44

“ . . நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றி நற்செய்தி அறிவிக்க வேண்டும்; இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்” என்று சொன்னார் (லூக். 4 : 33).

ஒரு தனி மனிதனுடைய வாழ்வின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்பவர்களில் ஒருவர் குரு அல்லது ஆசிரியர். எனவேத் தான் குருவினை தமிழ் பண்பாட்டினில் மாதா, பிதா, குரு, தெய்வம் என வரிசைப்படுத்தி குருவின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றனர். ஆங்கில அகராதியில் குரு என்ற வார்த்தைக்குத் தரப்படும் பொருள் an influential leader or teacher அதாவது செல்வாக்கு மிக்க அல்லது வல்லமையுள்ள தலைவர் அல்லது ஆசிரியர் என்பதாகும். இயேசுவை ஒரு குருவாக, ஆசிரியராக, செல்வாக்குமிக்கத் தலைவராகப் பார்ப்பதே இவ் அருளுரையின் எதிர்பார்ப்பு. திருமறையைப் படிக்கும் போது “என் சீடர்களோடு உம் வீட்டில் பாஸ்கா கொண்டாடப் போகிறேன் எனப் போதகர் கூறுகிறார் எனச் சொல்லுங்கள்” (மத். 26 : 18) என்கிறபோதும் “நீங்கள் என்னைப் போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள் நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான். ஆண்டவர்தான்”. (யோவான் 13 : 13-14) எனக் குறிப்பிடுகின்றபோதும் இயேசு தம்மை ஒரு குருவாக அல்லது ஆசிரியராக காண்பிக்கிறார் என்று கருதலாம்.

மேலும் இயேசுவின் நண்பர்கள், சீடர்கள் மட்டுமல்ல பரிசேயரும் மறைநூல் வல்லுனர்களும்கூட இயேசுவை ஓர் குருவாகவே கருதுகிறார்கள். மத். 8 : 19இல் அப்பொழுது மறைநூல் அறிஞர் ஒருவர் வந்து “போதகரே நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்” என்றார். லூக்கா 3 : 12இல் “போதகரே நாங்கள் என்ன செய்யவேண்டும்?”

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பிளேவியஸ் ஜோசபுஸ் தமது Antiquities of the Jews என்ற நூலில் இயேசுவை ஒரு குரு அல்லது ஆசிரியராகவே குறிப்பிடுகின்றார். இவ்வாறு இயேசுவை போதகர் என்று



அழைக்கிறபோது ஆசிரியர் அல்லது குரு என்கிற பொருளில்தான் குறிப்பிடுகிறோம் என்பது தெளிவு. இப்பின்னணியில் இயேசு ஜெபக் கூடங்களில் கற்பித்தார் (மத். 4 : 23), கெனசரேத் ஏரிக்கரைகளில் பெருங்கூட்டத்தில் பாடம் கற்பித்தார் (மாற்கு 2 : 13; 4 : 31), ஆலயங்களில் கற்பித்தார் (லூக். 19 : 47; 20 : 1) என நற்செய்தியாளர்கள் குறிப்பிடுவது இயேசுவை ஒரு குருவாகவே காண்பிக்கிறார்கள் எனப் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இயேசுவை குருவாக புரிந்துகொள்ளும் நாம் அவர் எதைக் கற்பித்தார்? எவ்வாறு கற்பித்தார் என்ற உண்மைகளை இவ் அருளுரையில் சிந்திப்போமாக.

### 1. இறையாட்சியைப் பற்றிக் கற்பித்த இயேசு என்னும் குரு: (லூக்கா 4 : 43)

ஆற்றல்மிகு குருவாக இயேசுவின் போதனைகளில் இறையாட்சி குறித்த சிந்தனைகள் முதன்மைப்பெற்றன. இறையாட்சியைக் குறித்து இயேசு கற்பித்ததைக்குறித்து கூறும்போது “அவர் கலிலேயாப் பகுதி முழுவதும் சுற்றி வந்தார் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்தார். விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார்” என மத். 4 : 23-லும் “காலம் நிறைவேறிவிட்டது இறையாட்சி நெருங்கிவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” என மாற்கு 1 : 15-லும் குறிப்பிடக் காண்கிறோம். தாம் கண்ட சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வு மிக்க ஆதிக்க சிந்தனையுடைய, அடிமைப்படுத்தும் அரசு மாறி இறையாட்சி உருவாக வேண்டும் என்பதே இயேசுவின் திட்டம். சமூக மாற்றமும், சமூக விடுதலையும் இதனுள் அடங்கும். இதனையே தமது இறையாட்சிக்குரிய போதனைகளில் வெளியிட்டார். இறையாட்சி பற்றிய தெளிவு பெறுவதும், இறையாட்சிக்கு அழைத்துச் செல்லும் விடுதலை ஞானம் அடைதலையும் முக்கியப்படுத்தினார். இறையாட்சிக்குத் தேவை அன்றிருந்த அநீதி அமைப்பு மாறி நீதியும், சம்மற்ற சமத்துவமும் அமைப்பு மாறி அன்பும் அன்பற்ற நிலைமாறி நிறைந்து இருக்கின்ற சமூக அமைப்பு வேண்டும் என்கிற மனமாற்றம் தேவை என தம் போதனைகள் வழியாக வலியுறுத்தினார். புது சமுதாயத்திற்கான இயேசுவின் சாட்சியே இயேசுவின் இறையாட்சி குறித்த சாட்சி எனலாம் (The Kingdom of God : Jesus Vision of a New Society). இதற்கான மனமாற்றத்தினை தம்போதனைகளில் முன் வைத்தார். மனித விடுதலைக்கு நேராக நடத்திச் செல்லும் இறையாட்சியின் அளவீடுகள் விடுதலை (Freedom) கூட்டுறவு (Fellowship) மற்றும் நீதி (Justice) என்பனவாகும். இவை குறித்த அழுத்தம் இயேசுவின் இறையாட்சி தழுவியப் போதனைகளில் அழுத்தம் பெற்றன. இயேசு ஓய்வுநாளின்

கடுமையான சட்டங்களை உடைத்து (மாற்கு 7 : 1-15) தொழுநோயாளர்களை தொட்டு (மாற்கு 1 : 42), சமுதாயத்தால் ஓரங்கட்டப்பட்டவருடன் உணவருந்தி (மாற்கு 2 : 15-17), மனித விடுதலைக்காய் உழைத்தார். அயலானின் அன்புகூர்ந்து ஐக்கிய உறவை வளர்க்கும் போதனையைத் தந்தார் (யோவான் 13 : 34; 15 : 12). உண்மையான கூட்டுறவு அல்லது ஐக்கியத்துடன் கூடிய நீதி சார்ந்த செயல்களை, போதனைகளை இயேசு முதன்மைப்படுத்தினார். எடுத்துக்காட்டாக ஓய்வுநாள் குறித்த விவாதம் மாற்கு 2 : 23-3 : 6 கொர்பான் காணிக்கையைப் புறக்கணித்தல் மாற்கு 7 : 9-13; தேவாலய சுத்திகரிப்பு மாற்கு 17 : 15-19 போன்றவற்றைக் கூறலாம். இவ்வாறு இயேசு அறிவித்த இறையரசு அல்லது இறையாட்சி விடுதலை கூட்டுறவு மற்றும் நீதி என்ற வாழ்வின் நிலைகளுக்காக நம்மை நடத்தி அது கடவுளுடனும் மனிதனுடனும் விடுதலை தரும் உறு நிலைகளை உருவாக்கி சமூகத்தில் விடுதலை வாழ்வு தரும் அமைப்புகளை உருவாக்குகிறது. இத்தகைய சக வாழ்வு நிலை உருவாக்கத்திற்கு குருவாகிய இயேசு போதித்தார் மற்றும் சாதித்தார் எனலாம்.

**2.அதிகாரத்தோடு கற்பித்த இயேசு என்னும் குரு:** (லூக்கா 4 : 32)

நற்செய்தியைத் தொடர்பு படுத்தும் இயேசு, அவரது கற்பித்தலைக் கேட்டவர்கள் பிரமிக்கும் வகையில் கற்பித்தார். . . . அவரது போதனையைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர். ஏனெனில் “அவர்கள்தம் மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு அவர்களுக்கு அவர் கற்பித்தார்” (மத். 7 : 28, 29). ஒருமுறை பேய்பிடித்த மனிதர் ஒருவரைப் பார்த்து “வாயை மூடு, இவரை விட்டு வெளியே போ” என்று இயேசு அதனை அதட்டினார் (லூக்கா 4 : 35) என ஆழுமையோடு சொல்லுகிற அதிகாரம் இயேசுவிடம் இருப்பதைப் பார்த்து மக்கள் ஆச்சரியப்பட்டனர். இயேசுவின் காலத்தில் சமயத் தலைவர்களுக்கு நிறுவனம் சார்ந்த அதிகாரம் காணப்பட்டது. அதனை தங்கள் சுயநலத்திற்காக அவர்கள் பயன்படுத்தினர். ஆனால் இயேசு அவ்வாறின்றி தந்தையாகிய கடவுளுடன் வேரூன்றிய நிலையில் கவர்ந்திழுக்கும் அதிகாரம் (Charismatic authority) உடையவராய்த் திருச்சட்டம் சார்ந்த, அறிவு சார்ந்த, திறனாய்வாளராய் (மாற். 2 : 23-28) செயல்பட்டார். சுருங்கக் கூறின் இயேசுவின் அதிகாரம் விடுதலை செய்யும்அதிகாரம் எனலாம். இயேசு தம் தந்தையுடன் கொண்டிருந்த உயரிய நட்புறவும், ஒடுக்கப்பட்டோரின் கண்ணீரைக் கண்டு கலங்கிப்போய் விடுகின்ற கருணைக் குணத்தாலும் அவருக்கு அந்த அதிகாரத்தொனியைத் தந்தன. இதனால்தான் சட்டம், சமய சித்தாந்தங்களை கற்றுத் தேர்ந்த மறைநூல் வல்லுநர்களுக்கில்லாத அதிகாரம் இயேசுவுக்கு இருந்தது. இன்றும் திருச்சபை வாழ்வில், பணியில் ஈடுபடும் அனைவரும் திருமறை சார்ந்த வழிகாட்டுதல்படி பணிவிடைகளை அணுகுதல் சிறப்பு (Scriputre is the highest norm for all authority) இறைபயத்தோடும் இறை உறவிடனும் கூடிய திருப்பணி ஈடுபாடு தேவை.

அரசர் ஒருவர் தம் உருவத்தை பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். புகழ்பெற்ற ஓவியனிடம் தம் உருவத்தை வடிவமைக்கக் கூறினார். ஓவியனும் மிகவும் கடினப்பட்டு அரசரின் விருப்பிற்கேற்ப அவர் உருவத்தை ஓவியமாக்கினான். ஓவியத்தைப் பார்த்த அரசருக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. என் உருவத்தை இப்படி அவலட்சணமாக வரைந்திருக்கின்றாய்? என் கண் ஒன்று சரி இல்லை, கன்னத்தில் குழி, தலையிலே வழுக்கை, முன் வரிசைப் பற்களில் மூன்றினைக் காணவில்லை இப்படி அவலட்சணமாக என் உருவத்தை வரைந்த உனக்கு மரண தண்டனை தான் என கத்தினார். அப்போது ஓவியர் அரசரிடம் அரசே தாங்கள் எனக்குத்தரும் மரண தண்டனையைக் குறித்து கவலை இல்லை. ஆனால் நீங்கள் என் தலையை வெட்டும் முன் உங்கள் முகத்தைக் கண்ணாடியில் ஒருமுறை பார்த்து விட்டு வாருங்கள் என்றான். அரசன் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தபோதோ வெட்கித் தலை குனிந்து ஓவியன் வரைந்த அத்தனை அவலட்சணங்களும் தன் முகத்தில் இருப்பதைக் கண்டு, தன்னிலை உணர்ந்து ஓவியரிடம் மன்னிப்புக் கேட்டார். ஆம் ஒரு குருவின் பணியானது இவ்வாறு மனிதன் தன்னிலைகுறித்து அறியும்படி உதவுவதே. இயேசுவாகிய குரு இறையரசின் தகவுகளை சுட்டிக்காட்டி அதிகாரத்துடன் போதித்து மனிதன் மனிதனாக வாழும்படி உழைத்தார். நாம் கிறிஸ்துவாகிய குருவைப் பின்பற்றி இறையரசின் தகவுகளை வளர்த்திடுவோமாக !

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே! எல்லா ஞானத்திற்கும் ஊற்றானவரே! எல்லா அறிவிற்கும் கிரீடமுமானவரே! உம்முடைய பிரமிப்பூட்டும் செயல்களை பார்க்கும் கண்களையும் புரிந்து கொள்ளும் மனதையும் தாரும். நாங்கள் உம்முடைய படைப்புகளினூடாக உம்மை அறியவும் எங்களுடைய கல்வி, எங்களுடைய திறமையையும் எங்களுடைய அறிவையும் பயன்படுத்தவும், உம்முடைய மகிமைக்காக கடினமாக உழைக்கவும் அருள்தாரும்.*

**அருள்திரு. W. ஸ்டான்லி ஜோண்ஸ்**

**09-09-2012**

*பெண்கள் ஞாயிறு*

## பெண்களின் அருட்பணியை நினைவு கூர்தலும் கொண்டாடுதலும்

**Remembering and Celebrating Women's Ministry**

1 சாமு. 1 : 1–29 — தி.ப. 16 : 11–15

லூக். 46–55 — மாற். 15 : 37–47

"இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக். 1 : 48).

'நினைவுகூருதல்' என்னும் சொல் ஏதோ ஒன்னு மறைக்கப்பட்டு - மறக்கப்பட்டு இருப்பதைக் குறிப்பிடுகிறது. பெண்களின் அருட்பணி திருச்சபையால் மறைக்கப்பட்டு, மறக்கப்பட்ட செய்திதான். வேகமாக மாறிவரும் உலகில் மனிதன் தன் சமுதாய - பொருளாதார - அரசியல் - சமய நிலைகளின் மாற்றத்திற்காக முயன்று வருகின்றது. வெளியில் எவ்வளவு மாற்றங்களை விரும்பினாலும் திருச்சபைக்குள் வரும்போது அடிப்படை வாதிகளாக சிந்திக்கிறார்கள் - பேசுகிறார்கள் - செயல்படுகிறார்கள். ஆணாதிக்கச் சிந்தனைகள் சற்று குறைந்தாலும் பெருமளவில் பெண்களின் திருப்பணி ஒரு குறுகிய வட்டத்திற்குட்படுத்தப்பட்டுவிட்டது. நினைவு கூருதல் என்பது நினைத்துப் பார்ப்பதல்ல, மாறாக திட்டமிடுவது - எப்படி மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று செயல்படுவதாகும். பெண்கள் திருப்பணியைக் குறித்த தெளிவு திருச்சபைக்குத் தேவை. சில திருச்சபைகள் இதனை முடிந்துவிட்ட ஒன்று என்றும், சில திருச்சபைகளில் இப்போதுதான் தொடங்கியிருக்கிறது என்றும், ஆனால் நாங்கள் தொடங்கவே மாட்டோம் என்று பல திருச்சபைகள் சிந்திக்கிறார்கள். சில இடங்களில் இது ஒரு பிரிவினையை ஏற்படுத்தியது பொதுவாக, பெண்கள் திருப்பணி என்பது பெண்கள் என்ற பணிகளில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணம் காலகாலமாக பழக்கத்திலிருக்கும் ஆண் சார்ந்த சிந்தனைகளாகும். இறைப்பணி என்பது பேதுரு போன்ற அப்போஸ்தலர்களை மையமாகக் கொண்டு சொல்லப்படுவதால் ஆண் போதகர்கள் என்ற சிந்தனையைத் தாண்டி வர தயக்கம் திருச்சபைகளில் காணப்படுகிறது. இவர்கள் பவுலடியாரின் அழைக்கப்பட்ட அழைப்பை பாருங்கள் என்ற திருமொழியை மேற்கோள் காட்டுவார்கள். ஆனால் அதே பவுல் "கிறிஸ்துவுக்குள் ஆணென்றுமில்லை, பெண்ணென்றுமில்லை" என்று சொல்வதை மறந்துவிட்டார்கள் போலும். ஒருவேளை, திருமறையை



நாம் ஆழ்ந்து படிக்கவில்லையோ என்று சிந்திக்கச் செய்கிறது. கடவுளின் சமநிலை படைப்பாம் பெண்கள் இறைப்பணியில் செயல்படவும், அவர்களது திருப்பணியை ஏன் நினைவுகூர்ந்து கொண்டாட வேண்டும் என்பதைக் குறித்து திருமறைத்தரும் அறைகூவல்கள் யாவை?

### 1. பெண்களின் ஆர்வப்பற்று (The Devotion of Women)

சாமுவேலின் முதல் நூலில் குழந்தைப்பேறு இல்லாத துயரம் அன்னாளை "சத்தமிட்டு" ஆலயத்தில் அழும் அளவிற்கு கொண்டுச் செல்கிறது. எல்கானாவிற்கு இது பெரிய குறையாகத் தெரியவில்லை. தாய்மை அடையும் நிலையில்லாதது பெண்களுக்குத்தான் அதிக அவமானங்களையும், அவலங்களையும் ஏற்படுத்தும் எனவே, தன் கர்ப்பத்தை கடவுள் தான் அடைத்தார், அவரால்தான் திறக்க முடியும் என்று அன்னாள் நம்புகிறார்கள். குழந்தையில்லாத அன்னாள் இன்று நம் சமுதாயங்களில் நிகழுவதைப்போன்று இது கடவுளின் தண்டனை என்ற அவப்பெயரைக்கூட பெற்றிருக்கலாம். எனவே, ஒரு குழந்தையைத் தந்தால் அது எனக்கல்ல, ஆண்டவருக்குச் சொந்தம் என்று பொருத்தனை பண்ணினார்கள். மட்டுமல்ல, ஆசாரியனாகிய ஏலியின் புதல்வர்களான ஓப்னி, பினேகாஸ் போன்றவர்கள் நெறி தவறி வாழ்கிறார்கள். தன் மகன் ஆலயப்பணிவிடைச் செய்ய வேண்டும். இது கடவுள்மேல் கொண்ட ஆர்வப்பற்றைக் குறித்திருக்கிறது. அன்னாள் இவ்வுலகிற்கு சாமுவேலாகிய இறைவாக்கினரை உருவாக்கினார்கள். சாமுவேலின் இறைப்பணி பயிற்சி பட்டறை அவரது தாய் அன்னாள் ஆவர். இன்னும், பல குடும்பங்களில் அம்மாக்களின் இறைபற்று - இறைவேண்டல் திருப்பணியாளர்களை உருவாக்குகிறது.

திருப்பணி என்பது "அருட்பொழிவு" என்ற நிலையில் பிரித்து புரிந்து கொள்ளப்படுகிறது. அருட்பொழிவு (ordinations) என்பது ordinisஎன்னும் சொல்லிலிருந்து வருகிறது. இதன் பொருள் ஒழுங்கு முறை order) வீட்டில் அனைத்துப் பணிகளையும் ஒழுங்காக நிறைவேற்றும் பெண்கள் ஏன் திருப்பணியை ஒழுங்குமுறையாக செய்யமாட்டார்கள்? என்ற கேள்வி எழவேண்டும். தாய்மாரின் பிடிசோற்றை வாங்கி உண்ணும் நாம் ஏன் பெண்கள் பரிமாறும் உணவை உண்ணும் நாம் அவர்கள் பரிமாறும் திருவருட்சாதனங்களாகிய அப்பம், ரசம் ஆகியவற்றை பெற்றுக்கொள்ள ஏன் தயங்குகின்றோம்? திருப்பணிக்கு அன்னாள் மாதிரி.

### 2. பெண்களின் அர்ப்பணிப்பு (Dedication of Women)

பிலிப்பு நகரத்திருச்சபையில் லீதியாள் என்ற புற இனத்துப் பெண்ணைப்பற்றிய சிலக்குறிப்புகள் தி.ப. 16 : 14-15இல் படிக்கிறோம். இவர் கிறிஸ்தவர் அல்ல. பவுலின் செய்தியைக்கேட்டு மனந்திரும்பிய வசதிபெற்ற பெண். கிறிஸ்தவ நற்செய்தி வசதிபடைத்தோரிடமும் மாற்றத்தை

உருவாக்குகிறது. லீதியாளின் இதயம் திறக்கப்படுகிறது. தன் இல்லத்தை திருப்பணியாளர்களுக்குத் திறந்து கொடுக்கிறார். குடும்பத்துடன் திருமுழுக்குப் பெற்ற முதல் பெண் இவர்கள். திருப்பணியில் இவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. ஓர் ஆணாதிக்க யூத சூழலில், கிறிஸ்தவர்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை குறைந்த காலத்தில் லீதியாள் தன் இல்லத்தை திறந்து கொடுத்து வாழ்வில் கடினப்பாட்டை ஏற்றுக் கொண்டவர்கள் திருப்பணிக்கு ஒரு சிறந்த மாதிரி. பெண்கள் கடின வேலைசெய்வதிலும், மன உறுதியுடனும் செயல்படுகிறவர்கள். ஆண்கள் திருப்பணியைக்குறித்து தீர்மானம் போடுகிறார்கள் பெண்கள் தேனீர் போடுகிறார்கள் என்ற பெண்களின் திருப்பணி கரிசனையை திருச்சபை செவிகொடுக்க வேண்டும்.

### 3. பெண்களின் அறைகூவல் (Declaration of Women)

ஆண்கள் தான் தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்ற சிந்தனை யூத சமுதாயத்தில் தான் இயேசுவின் சிலுவையின் அடிவாரத்தில் நின்றுகொண்டிருந்த பெண்கள் கூட்டத்தில் மகதல மரியாள், மரியா, சலோமி இவர்களது அறைகூவலிடும் அர்ப்பணிப்பை மாற்கு (15 : 37-47) குறிப்பிடுகிறார். ஆண் சீடர்கள் பயந்து மறைந்து - மறுதலித்து ஓடியச்சூழலில் கல்லறை வரைக்கும் சென்று இயேசுவின் துன்பகாலத்தில் உடனிருந்த பெண்கள் திருப்பணிக்கு அறைகூவலிடுகிறார்கள். இவர்கள் தான் திருப்பணிக்குத் தகுதியுள்ளவர்கள். உயிர்த்தெழுந்தச் செய்தியை உலகிற்கு முதன்முதலில் சொன்னவர்கள் பெண்கள். இவர்கள் துணிந்து சொல்லாவிட்டால் ஒருவேளை இயேசுவின் உயிர்த்தெழுதல் செய்தி அறியாத செய்தியாகத்தான் இருந்திருக்கும். இவர்களைவிட திருப்பணிக்கு பொருத்தமானவர்கள் யார்? மறைந்திருக்கும் ஆண் அப்போஸ்தலர்களுக்கும் உயிர்த்தெழுதலின் செய்தியைச் சொன்னவர்கள் இவர்கள். எனவே தான், இவர்கள் அப்போஸ்தலர்களுக்கும் அப்போஸ்தலர்கள் (Apostles to the Apostles). இயேசுவின் மீட்புப்பணியில் முக்கிய பங்கு பெற்றவர்கள். எலிசபெத் பியாரென்சா என்னும் பெண் இறையியலாளர் இயேசுவின் பாடுமரணங்களை இன்று திருச்சபை சிந்திக்கும் போது காட்டிக்கொடுத்த யூதாஸ், மறுதலித்த பேதுரு ஆகியோரின் பெயர்களை நினைவுகூருகின்றன. ஆனால் உடனிருந்த பெண்களின் பெயர் சொல்லப்படாதது தெரிந்மெடுக்கப்பட்ட நினைவு (Selective memory) என்கிறார்.

தெர்த்துலியன் என்னும் திருச்சபை இறையியலாளர் “இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து” என்கிறார். இயேசுவுக்காக இரத்த சாட்சிகளாக உயிர்விட்ட பெண்களும், ஆண்களும் தான் இன்று முளைத்தெழுந்த திருச்சபையின் வித்துக்கள். இத்தகைய திருச்சபைகளில் ஆண்களும் பெண்களும் இணைந்து திருப்பணிபுரியும் வட்டமேஜை (Round



table) திருப்பணி முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். திருச்சபை - திருப்பணி - ஆளுகை முறைகளில் சமநிலை சீடத்துவ முறை (Discipleship of requsts) ஏற்பட வேண்டும்.

**மன்றாட்டு :** *எங்கள் பெற்றவராம் கடவுளே! உலகின் மீட்பிற்கும், விடுதலைக்கும் பெண்களை பங்காளிகளாக தெரிவு செய்தவரே! கடந்த காலங்களிலும் இக்காலத்திலும் பல பெண்களின் ஊக்கமான பங்களிப்பை உண்மையாய் ஒத்துக் கொள்ளவும் அவர்களின் ஆற்றலை கொண்டாடவும் உதவி செய்யும். மானிட வாழ்வின் சிறந்த நன்மைக்காக செயல்பட்ட துன்பமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் நிலையிலும் அவநம்பிக்கையில் அவர்களின் ஆழமான நம்பிக்கையையும் அவர்களின் தலைமைத்துவத்தையும் நற்செய்திக்கு சான்றுபகரும் அகத்தூண்டுதலையும் ஏற்றுக் கொள்ள அருள்தாரும். உம்முடைய சமூகமாகிய ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒருவரை ஒருவர் பக்குவப்படுத்தி வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளவும் சமநிலை, விடுதலை, மகிழ்ச்சி, துதி இவைகள் உம் கிருபையால் உண்மையாக மாற உதவி புரியும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளும் இயேசுக்கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்!*

அருள்திரு. Dr. **ஜவி பீட்டர்சிங்**

**16-09-2012**

# வன்முறைச் சூழலில் அமைதி

## Peace in the Context of Violence

ஏசா. 2 : 1–4 | 1 தெச. 5 : 12–28
தி.பா. 120 | மத். 2 : 13–23

. . . அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். (ஏசா. 2 : 4)

ஒழுங்குமீறி நடக்கும் அனைத்து செயலும் வன்முறை என்று கூறலாம். ஆனால் ஒழுங்கு என்பது என்றும் மாறாத ஒன்று அல்ல, காலத்திற்கு ஏற்ப மாறக்கூடியது. வன்முறை இன்று நாடுகளிலும், குடும்பங்களிலும், பணியிடங்களிலும், பாடசாலையிலும், எல்லா இடங்களிலும் இருக்கின்றது. வன்முறை என்பது கொலை செய்தல், கலகம், முரட்டுத்தனமான அளிப்பு, கற்பளிப்பு, மீறல், காயப்படுத்துதல் போன்றவைகளை குறிப்பிடுகின்றது. போர் காலங்களில் வன்முறையின் தன்மை கொடுரமுகமாக தோன்றுகின்றது. இலங்கையில் இனமோதல்களினால் ஏற்பட்ட வன்முறை ஒரு தலைமுறையையே இல்லாமல் ஆக்கிவிட்டது. வன்முறையில் இன்று அதிகம் ஈடுவடுபவர்கள் ஆண்களே. வன்முறையில் ஈடுபட்டு சிறையிலிருப்போர் 7 : 1 என்ற கணக்கில் ஆண்களும் பெண்களும் இருக்கின்றனர். வன்முறையில் கைது செய்யப்படுபவர்களில் 34 சதவீதம் 23 வயதுக்கு உட்பட்டவர்களே வன்முறை மனித வாழ்வில் மட்டுமல்ல பிற உயிரினங்களிடையேயும் உணவுத் தேடலுக்காக, இருப்பிடங்களுக்காக, தன்னைக் காத்துக்கொள்ள இன்னும் பல சூழல்களில் நடைபெறுகின்றது.

மனிதச் சூழலில் ஏற்படும் வன்முறையை திருமறை அடையாளம் காட்டுகின்றது. தாக்குதல் (தி.பா. 140 : 2) குழி தோண்டுதல் (தி.பா. 7 : 15), வஞ்சகம் (72 : 14), பழிச்சொல் (140 : 2), ஏமாற்றுதல் (மல். 2 : 16), பொய் சாட்சி (யாத். 23 : 1) போன்ற செயல்களும் வன்முறையாக குறிப்பிடுகின்றன. ஏசாயா வன்முறைச் சூழலில் அமைதியை வரும்காலக் கனவாக கண்டு மேசியா ஆளுகை காலத்தில் அமைதி தோன்றும் என முன்னறிவிக்கின்றார்.

### 1. அமைதிக்கு வழிகாட்டும் ஆன்மீகம்

ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள் (ஏசாயா 2 : 2).



ஆன்மிகம் என்ற பெயரில் பல போர்களை உருவாக்கிய காரணங்கள் வரலாற்றில் பல உண்டு. சிலுபைப் போர்கள் இதில் முக்கியமானவை. இன்று இத்தகையச் சூழலை 'புனிதப் போர்' என்ற எண்ணத்தில் தந்திரமாக நடைபெறுகின்றது. உரியாவின் மனைவியை தன்வசப்படுத்த உரியாவை சாகடித்தார் (2 சாமு 11 : 15). ஆனால் தாவீது தன்னை கொல்ல பலமுறை விரட்டின சவுலை (1 சாமு. 18 : 10; 19 : 9-17) இரண்டு முறை வாயப்பு கிடைத்தும் கொல்லாமல் விட்டது ஆன்மிகமாகும் (1 சாமு. 24 : 24). கடவுளையே போர்த் தலைவராக மிகைப்படுத்தின காலம் உண்டு (சங். 100 : 5). ஆனால் பிற்கால மேசியா பார்வை வளர்ந்தபோது அமைதியின் அரசராக, தாழ்மையின் அடையாளமாக கடவுள் விளக்கப்பட்டார் (சக. 9 : 9).

வன்முறை வாழ்வு உலகையே அழிவுக்கு நடத்துகின்றது (ஆதி. 6 : 11). ஆனால் ஆன்மிகம் நல்லவர்களை உருவாக்குகின்றது. இருபத்தி மூன்று வயதுடைய விகேஷ் என்ற இளைஞன் ஒரு ஆண்டுக்கு முன் இருந்த சிறிய பகைக்காக கொலை செய்துவிட்டு ஏசப்பா கொலை செய்யச் சொன்னார் என்று 7-12-2011இல் பத்திரிகையில் செய்தியாக வந்தது. இயேசு பிறர் இரத்தத்தை சிந்துபவரல்ல தன் இரத்தத்தை பிறருக்காக சிந்துயவர். இதுவே சிறந்த கிறிஸ்தவ ஆன்மிகம். செம்மையானதை அறியாததே வன்முறைக்கு காரணம் (ஆமோ. 3 : 10). இஸ்ரயேல் மக்களும் செம்மையானதை விட்டபோது தீமைக்கு சென்றார்கள் (எரே. 6 : 7). ஏசாயா 2 : 3-ல் ஆலயம் அனைவரையும் இணைக்கும் அமைதியின் ஆன்மிக இடமாக மாறுவதை கூறுகின்றார். விருத்த சேதனமில்லாதவர்கள் ஆலயத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. 3 : 2இல் ஆலயம் உயர்த்தப்படும்போது அனைத்து மக்களும் இணைவார்கள் கொடுமையில்லை (ஏசாயா 60 : 18; 53 : 9). கடவுள் ஆன்மிக ஆயுதமாக மாறுகின்றார்.

### 2. அமைதியின் கருவியாக மாறும் ஆயுதம்

. . . அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள் (ஏசா. 2 : 4).

ஒரு அணுகுண்டு தயாரிக்க செலவிடும் பணத்தில் மூன்றரை லட்சம் ஆரம்ப பள்ளிகளை கட்டலாம் என்றார் இந்திராகாந்தி. உலகில் இருக்கும் அணு ஆயுதங்கள் எல்லாம் உலகை 100 தடவை முற்றிலும் எரிந்துவிடுமாம். அழிவுக்காக அதிக விலை கொடுக்க உலகம் ஆயத்தமாகி கொண்டிருக்கின்றது. திருமறையில் தொடக்கக் காலத்தில் ஆயுதங்கள் வேட்டையாட, போருக்காக செய்யப்பட்டது. கல் சிறந்த ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. பின்னர் வில், அம்பு, கம்பு, கத்தி, கவண் போன்ற உலோகம் அல்லாத ஆயுதங்களும் பயன்பட்டன. கி.பி. 5ஆம் நூற்றாண்டில்

செம்பு உருக்கி ஆயுதமாக்கப்பட்டது. தாக்குவதற்கும் தற்காப்பதற்கும் என இருவகை ஆயுதம் இருந்தது. மார்புக்கவசம் தற்காக்கவும் பட்டயம் ஈட்டி தாக்கவும் கோலியாத் பயன்படுத்தினார். (1 சாமு. 17 : 45). உசியா அரசர் தாக்கும் ஆயுதங்களை உருவாக்கினார் (2 நாளா. 26 : 15). குறுகிய தூரத்தில் தாக்க குத்துவாள் எனவும் மத்திய தூரத்தில் தாக்க ஈட்டி என்றும், நீண்டதூரம் தாக்க அம்பு, கவண் (1 சாமு. 17 : 49) எனவும் பயன்படுத்தன. சாலமோனின் 1400 தேர்படை செல்வத்தின் ஒரு பகுதியாக இருந்தது (1 இரா. 10 : 14-24).

ஆயுதம் பெண்ணின் கருவறையை கூட கீறிப்போடுகின்ற அளவுக்கு கொடூரமானது (ஆமோஸ் 1 : 13). அழிவின் ஆயுதம் அமைதியின் கருவியாக மாறவேண்டும். எழுதுகோல், ஊன்றுகோல் போன்ற ஆயுதங்கள் மனித வாழ்வின் ஏற்றத்திற்கு பயன்படுவதுபோல் பட்டயம் மண்வெட்டியாய் மாற வேண்டும் (மீகா. 4 : 3). இயேசுவை ஏற்றுக்கொள்ளாத சமாரியரை அக்கினியால் அழிக்க எண்ணம் கொண்ட சீடரை மானிட மகன் அழிக்கவரவில்லை மாறாக மானிடரை மீட்க வந்தேன் என்று இயேசு கூறினார் (லூக். 9 : 54, 56). சீடர்கள் வன்முறையால் இயேசு கைது செய்யப்படுவதை தடுக்க முயன்றனர் (லூக். 22 : 49, 50). இயேசு எதிரியை குணப்படுத்துகின்றார் (22 :51). சாந்தமே உலகை உரிமையாக்க முடியும் (மத். 5 : 4). அழிவின் ஆயதமல்ல அமைதியின் ஆயுதங்கள் உருவாக வேண்டும்.

## 3. அமைதியால் அகற்றப்படும் ஆயுத பயிற்சி

. . . இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (ஏசாயா 2 : 46).

உலக பயங்கரவாதியாகக் கருதப்பட்ட பின்லேடனை பிடிக்க பல்வேறு ஆயத்தங்கள் பயன்படுத்தப்பட்டன. 10 ஆண்டு தேடுதலில் 6000 அமெரிக்க வீரர்கள் பலியானார்கள். 12 லட்சம் அப்பாவி பொது மக்கள் பலியானார்கள். இதற்கு செலவான ரூபாய் 58 இலட்சத்து 50 ஆயிரம் கோடி. இந்தியாவின் 2011-2012 ஆண்டுக்கான பட்ஜெட் 12 லட்சம் கோடி மட்டுமே. தமிழக அரசின் 2011-2012 பட்ஜெட் 99 ஆயிரம் கோடி மட்டுமே. இதைப்போன்று 58 பட்ஜெட் செய்யலாம். வன்முறைக்கு பதில் வன்முறையே என்ற எண்ணமே உலக நாடுகள் ஆயுதப் பயிற்சியை அதிகரிக்க காரணமாயிருக்கின்றன. தீமைக்கான பயிற்சி அகற்றப்பட வேண்டும். லேவியின் செயல் அவரை வன்முறையின் கருவியாக்கியது (ஆதி. 49 : 5). வன்செயல் செய்வோரை தீமை விரட்டி வேட்டையாடும் என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுகின்றார் (140 : 12). மறுமுறை தாக்குதல் அல்ல மறுகன்னத்தை திருப்பிக் காட்டுதலே கிறிஸ்தவம். ஏசா போன்றவர்களும் யாக்கோபு போன்றவர்களும் அமைதியின் பாதைக்கு திரும்பும்போது தற்காப்பு ஆயுதங்களும் தாக்கும் ஆயுதங்களும் அவசியமில்லாமல் போகின்றது.



மந்தைகளும், பரிசுப் பொருட்களுமே தேவையாகின்றது (தொ.நூ. 33 : 8). ஓனாய் போன்று தாக்கும் முரட்டு குணமுடையவர்களும் ஆடு போன்ற அமைதியானவர்களும் கூடி வாழும் அமைதி (ஏசாயா 11 : 6) மேசியா தரும் அமைதி, அமைதி உருவாகும்போது ஆயுதங்களும் ஆயுதப் பயிற்சிகளும் அவசியமற்றதாக விடுகின்றது. கடவுளே சமாதானகாரராக இருக்கின்றார்.

அன்பும், தியாகமும், ஆன்மிகமுமே வன்முறையாளருக்கும் துன்புறுவோருக்குமிடையே அமைதியை ஏற்படுத்துகின்றது (1 சாமு 26). ஆகவே அமைதி உருவாக மிக முக்கியமான தேவை உண்மையான ஆன்மீகமே ஆகும்.

**மன்றாட்டு :** *நிலையான கடவுளே! உம்முடைய முழுமையான ஆளுகையில் அழிவுதரும் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. ஆயுதங்கள் பின் வாங்கப்படுகிறது. ஆனால் நீதியின் ஆயுதம், வன்முறையின் ஆக்கசக்திகள் இல்லாமல் அன்பின் சக்தியும் பயன்படுத்தப்படும். எனவே எல்லா மக்களும் உம்முடைய பிள்ளைகளாக அமைதியின் அரசன் என்ற கொடியின் கீழ் ஒன்றிணைய உம் தூய ஆவியை வல்லமையாய் (விளம்பியருளும்) விரிவுபடுத்தியருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளும் உமக்கே ஆட்சியும் மகிமையும் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

**அருள்திரு. J. ரெஞ்சித் வேதகுமார்**

23-09-2012

# இறைமக்களை அருட்பணியில் உருவாக்குதல்

## (EQUIPPING LOCAL CONGRECATION IN MISSION)

நெகே. 2 : 11 – 18 | 2 தீமோ. 4 : 1 – 8
தி.பா. 100 | லூக். 24 : 44 – 49

"... கட்டியெழுப்புவோம் வாருங்கள் ..." (நெகே. 2 : 18)

திருச்சபை கிறிஸ்துவை தலைவராகக் கொண்டு இறைமக்களால் மக்களுக்காய் இயங்கிக் கொண்டிருக்கும் ஆன்மிக மக்கள் இயக்கம். இறைமக்கள் என்போர் அமைதியாக ஆசாரியர்களைச் சார்ந்து வாழ்வோர் அல்லர்; மாறாக இறைமக்கள் அனைவரும் ஆசாரியர்கள். சீர்திருத்த செம்மல் மார்ட்டின் லூத்தர் அவர்கள் இறைமக்கள் அனைவரும் ஆசாரியர்கள் என்பதை தனது உரையிலும் எழுத்திலும் அழுத்தமாக குறிப்பிட்டுள்ளார் (Priesthood of All Believers). ஆகவே தற்கால திருச்சபை இறைமக்களை ஜெபி (Pray), கொடு (Pray), கீழ்படி (Obey) என்ற குறுகிய ஆன்மிக வட்டத்திற்குள் அடைத்து வைத்து பாதுகாப்பது ஆலயத்திற்குள் மக்களை முடங்கி கிடக்கும் சூழ்நிலைக்கு கொண்டு நிறுத்தியுள்ளது. அருட்பணியை ஆடல் (Dancing), பாடல் (Singing), தேடல் (Seeking), சேர்த்தல் (Receiving) ஆகிய கண்ணோட்டத்தில் திருச்சபை தொழுகை நடத்தி கடவுள் மனிதனை படைத்த நோக்கத்திற்கு முற்றிலும் தூரமான அர்த்தமற்றப் பார்வையை அருட்பணியில் ஏற்படுத்தியுள்ளது. இன்று உலகை ஆட்டிபடைக்கும் முக்கியமான நோய்களில் ஒன்று "ஆன்மிக வெறுமை நோய்" (Spiritual Emptinen Discese). ஆன்மிக வெறுமையால் ஏற்படும் பதற்றம், கலக்கம் ... போன்ற நிறைவற்ற தன்மையில் பரிதபிக்கும் இறைமக்களை திரும்பவும் உண்மை நிலைக்கு (Actual Stage) கொண்டு வந்து அருட்பணியில் உருவாக்குவது திருச்சபையின் கடமையாகும். சிந்தனைக்காக தரப்பட்டிருக்கும் திருமறைப் பகுதிகளில் இழந்த அலங்கத்தைக் கட்டுவதற்காக மக்களை உருவாக்குதல் (நெகே. 2 : 1-14). இறைமக்கள் கடவுளை அறிந்து புகழ்பாடி கடவுளை மகிமைபடுத்தும் திருகூட்டம் (திரு. 100 : 1-5), இறைமக்கள்ப்பணி என்பது எல்லா மக்களுக்கும் வேறுபாடில்லாமல் நற்செய்தியை சொல்லுதல் (லூக். 24 : 44-49), இறைப்பணியாளரின் வாழ்வு, வார்த்தை அருட்பணி உருவாக்கத்திற்கான மாதிரிகள் (2 தீமோ. 4 : 1-8) என்பதை உணர முடிகிறது. கண்ணுக்குத் தெரியாத கடவுளின் ஆற்றலை சரியாய்



தடுமாற்றமில்லாமல் மக்களுக்கு கொடுப்பது உண்மையான திருப்பணி. இதற்கு மக்களை ஆயத்தப்படுத்த நான் என்ன செய்ய வேண்டும்? இறையாற்றலை உணர்ந்து கொண்டவர்கள் செயற்கரிய காரியங்களை செய்ய முடியும் (Those who can see the invissible, can do the impossible). நெகேமியா கடவுளின் ஆற்றலை உணர்ந்தவர். ஆகவே இழந்து கிடக்கும் அலங்கம் கவனிப்பாரில்லாது கிடக்கும் மூதாதையர்கள் பயன்படுத்திய இடங்கள், வேதனையுடன் நாட்களை கடத்தும் இஸ்ரயேல் மக்களின் வாழ்வு புணரமைத்து மாற்றத்தை ஏற்படுத்த முனைப்புடன் செயல்பட்டார். கட்டும் பணியில் சீர்செய்யும் பணியில் நெகேமியா இறைமக்களை எப்படி உருவாக்கி பயன்படுத்தினார் என்பதை தியானிப்போம்.

### 1. அழைத்து அருட்பணியில் உருவாக்குதல்

... அலங்கத்தை கட்டுவோம் வாருங்கள் (நெகே. 2 : 17). அழைப்பு அருட்பணிக்கு அவசியமானது. சாமுவேலை கடவுள் அழைத்தார் ...... நெகேமியா அருட்பணிக்காய் மக்களை அழைத்தார். இவரது அழைப்பு ஆயத்தத்துடன் கூடிய அழைப்பாக அமைந்தது.

- அழைப்பு தருவதற்கு முன் பானபாத்திரக்காரன் நெகேமியா காரணங்களை அறிந்துக்கொண்டார்.

- செய்திகளை கேட்டுவிட்டு அமைதியாக இருந்துவிடவில்லை.

- செய்திகளை அறிந்த பின்னர் சீர்செய்வதற்கான திட்டம் தீட்டினார்.

- பணியில் தன்மை, பணிக்குரிய செலவு, பொருட்கள், காலம் இவைகளை கணக்கில் கொண்டார்.

- இறைமக்களை அருட்பணியில் அழைப்பதில் அவசரம் காட்டவில்லை.

- இறைமக்களை அழைப்பதற்கு முன் ஆழமான ஆயத்தங்களை செய்தார்.

- அழைப்பில் அச்சமும், அதிகாரமும் வெளிப்படவில்லை.

- அழைப்பை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மக்களோடு தன்னை தொடர்புபடுத்தினர்.

நெகேமியா அருட்பணியில் மக்களை உருவாக்குவதற்கு கொடுத்த அழைப்பினை பொருளுள்ள அழைப்பாக மக்கள் ஏற்றுக்கொண்டனர். தற்கால ஆன்மிகக் கூட்டங்களில் தரப்படும் அழைப்புக்கள் பணி, பணியிடம், வணிபொருள் ...... ஒன்றுமில்லாமல் வாருங்கள் என்று மக்களை அழைத்து திசை திருப்பும் கூட்டங்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது. இத்தகைய போலி அழைப்பிற்கு நெகேமியாவின் அழைப்பு

வித்தியாசமானதாயும் மக்களை அருட்பணியில் ஒன்றிணைக்கும் மாதிரியாகவும் அமைந்துள்ளது. ஆகவே அழைத்து அருட்பணியில் மக்களை உருவாக்கும் உண்மைத் திருச்சபையாக வாழ முற்படுவோம்.

## 2. மனமாற்றத்தை ஏற்படுத்தி அருட்பணியில் உருவாக்குதல்

..... எழுந்து கட்டுவோம் வாருங்கள்....... நெகே. 2 : 18.

மனமாற்றம் கடவுளில் கொண்டிருக்கும் ஆழமான நம்பிக்கையின் வெளிப்பாடு. அருட்பணியை பகுதி நேரப்பணி (Part Time), முழுநேரப்பணி (Full Time) என்று எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்புக்களில்லை. காரணம் மனமாற்றமடைந்த இறைமக்கள் அனைவரும் அருட்பணியாளர்கள்.

- நெகேமியா மக்களின் மனமாற்றத்திற்காக சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்தினார்.

- கடவுளின் கரம் அரசரின் உதவி ஆயத்தமாயிருக்கிறது என்பதை அறிவித்தார்.

- தொய்வில்லாமல் கட்டுமானப்பணிகளைக் கொண்டு நடத்தும் வழிமுறைகளையும் வாய்ப்புக்களையும் சொல்லி தைரியமூட்டினார்.

- நெகேமியாவின் வார்த்தைகள் இஸ்ரயேல் மக்களின் மன மாற்றத்திற்கு காரணமாயிற்று.

- இழந்த, பயன்படுத்தப்படாத, பராமரிக்கப்படாத, வாழ்வாதார மில்லாத சூழ்நிலைகள் மாறுவதற்குரிய வாய்ப்புக்களைஅறிந்த மக்களின் மனம்மாறியது.

- இஸ்ரயேல் மக்களின் அறிக்கை ..... இந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளை திடப்படுத்தினார்கள். எதிர்ப்புக்களையும் மீறி கடினப்பாடுகளைத் தாண்டி தொய்வில்லாமல் பணிகளைக் செய்ய உதவியது (நெகே. 4 : 20-23).

- மனமாற்றத்துடன் மேற்க்கொள்ளும் திருப்பணிகள் முழுமையடைந்து மக்களுக்கு பயனுள்ளதாய் அமைகிறது.

- மாதிரியான மனமாற்றம் நிறைந்த வாழ்வும் பணியும் திருப்பணிக்கு அவசியம் என்பதை தூய பவுலார் வலியுறுத்துகிறார் (IIதீமோ. 4 : 1-8).

- மனமாற்றம் பரந்த கண்ணோட்டத்தில் மக்கள் ஒன்றிப்பு பணியில் முழுமையாக செயல்பட தூண்டும் என்பதை இயேசுகிறிஸ்து வலியுறுத்துகிறார் (லூக். 24:47).

- நெகேமியா மனமாற்றத்திற்கு மக்களை வழிநடத்தி அருட்பணியில் உருவாக்குவதில் மாதிரியாக செயல்பட்டார்.

- இறைமக்கள் மனமாற்றமடைந்து பணிகளை மேற்கொண்டால்



சாதகமில்லாத சூழ்நிலைகளையும் ஏற்புடையச் சூழல்களாக மாற்றம் செய்யமுடியும்.

அருட்பணி எப்போதும் இலகுவாய் அமைவதில்லை. ஜெல்லி மீன்கள் புயல் வருவதற்கான அறிகுறி தெரிந்தவுடன் கடலின் ஆழ்பகுதிக்கு சென்று புயலின் தாக்கத்திலிருந்து தங்களை தப்பித்துக் கொள்ளும். மனமாற்றம் கண்டவர்கள் ஒன்றித்து பணி செய்வதுடன் துன்பங்களை கண்டு துவண்டுபோகாமல் குறைகளை நிறைவு செய்யும் பார்வையுடையவர்கள். ஆகவே மனமாற்றத்துடன் அருட்பணியரை அருட்பணியில் உருவாக்கும் பணியில் தொடர்வோம்.

## 3. ஊழியர்களாக அருட்பணியில் உருவாக்குதல்

..... அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்.... (நெகே. 2 : 20).

அழைக்கப்பட்டவர்கள், மனமாற்றமடைந்தவர்கள் ஊழியர்களாக உருவாக்கப்பட்டவர்கள். நெகேமியா அனைவருக்கும் வாய்ப்பை பகிர்ந்து கொடுத்து ஊழியத்தை நிறைவு செய்ய முன்வந்தார். இந்த ஊழியர்களின் பணிகள் சிறப்புதன்மை கொண்டதாக அமைந்தது.

- நேகேமியாவின் வார்த்தைக்குக் கீழ்படிந்தார்கள்.

- சகிப்புத் தன்மையோடு பணி நிறைவுபெறும் வரையிலும் பணி செய்பவர்கள்.

- எதிர்ப்பில்லாமல் இடிந்த அலங்கம் கட்டப்பட வேண்டும் என்ற ஒரே பணித் திட்டத்தோடு செயல்பட்டார்கள்.

- அச்சுறுத்தலுக்கு அஞ்சாதவர்களாய் (நெகே. 4 : 23) நின்றார்.

- திறமைகளை சரியாக பயன்படுத்தினார்கள் (நெகே. 4:21)

- தனித்தன்மையை (Self-identity) விட்டுக்கொடுக்காதவர்களாய் திகழ்ந்தனர்.

- தீயோனின் அச்சுறுத்தலை அசட்டை பண்ணினர்.

- இழந்த அலங்கத்தைக் கட்டி புணரமைத்து கடவுளோடு உறவினை வலிமைபடுத்தினார்கள்.

தற்கால ஊழியர்கள் வெயில்படாமல் திருமறையை கையிலெடுத்து மேடை, வானொலி, தொலைகாட்சி கிறிஸ்தவ பேச்சாளர்களாக, நடிகர்களாக பேசியும், நடித்தும் தங்களை ஊழியர்களாக சுயமாக அறிமுகப்படுத்துவோரின் எண்ணிக்கை பெருகி வருகின்றன. ஆகவே திருச்சபை இறைமக்களை அருட்பணியில் உண்மை ஊழியக்காரர்களாக உருவாக்குவோம்.

இறைமக்களை அருட்பணியில் உருவாக்கினால் சாதனைகளை ஆன்மிக வாழ்வில் கொண்டுவரமுடியும். நெகேமியா இடிந்த அலங்கத்தை கட்டுவதற்கு இறைமக்களை அருட்பணிக்காய் உருவாக்கினார். தீமைகளுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று கற்றுக்கொண்ட இறைமக்கள் தீமைகளை எதிர்த்து போராடும் அருட்பணி செய்ய தங்களை உருவாக்க வேண்டும். நெகேமியாவின் காலச்சூழல்களில் போன்ற எழுந்து கட்டும் நிலைகளில்லை. ஆகவே இறைமக்களாகிய நாம் இடித்து தள்ளும் அருட்பணிக்காய் அல்ல எழுந்து கட்டும் அருட்பணிகள் உருவாக்கப்படவேண்டும். சமத்துவமின்மை, தீவிரவாதம், ஆள்பெலம், பணபெலம், ஆணவம், இயற்கை வளத்தை சீரழித்தல், ஆன்மீக மோசடிகள்..... வலுபெறும் சூழலில் தற்கால திருச்சபை இறைமக்களை அருட்பணியில் உருவாக்கும்போது தீமைகள் இடிக்கப்பட்டு பகையில்லாத, படைகளில்லாத பண்புள்ள சமூகத்தையும் இறையன்பின் மகத்துவத்தை உருவாக்கவேண்டும். தீமைகளை "வாருங்கள் இடித்து தள்ளி இல்லாமல் செய்வோம்" என்று மக்களை அழைத்து, மனமாற்றத்தை ஏற்படுத்தி உண்மை ஊழியர்களாய் அருட்பணியில் மக்களை உருவாக்குவோம்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே! உம்முடைய மக்களுக்கு அனேக திறமைகளையும், உம்முடைய மகன் இயேசுக்கிறிஸ்துவின் வழியாக கொடுத்து உம்முடைய அரசின் பணியையும் கொடுத்தீர். தாங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை கவனத்தோடு செய்ய அவர்களை தகுதிப்படுத்த வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளும் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

**Rev. முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**



**27-09-2012**

***தென்னிந்தியத் திருச்சபை நாள்***

# வழிபாட்டில் ஒன்றிணைதல்

**United in Worship**

எசே. 37 : 15 – 22 எபே. 4 : 1–6
தி.பா. 122 யோவா. 17 : 20–26

"நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக . . ." (யோவா. 17 : 23)

தென்னிந்தியத் திருச்சபை (C.S.I.) 1947 செப்டம்பர் 27 ஆம் நாள் உருவானது. இது தனியொருத் திருச்சபையாய் உருவானதல்ல. மாறாக எதிரும் புதிருமான தன்மைகள் கொண்ட ஆங்கிலிக்கன், காங்கிரிகேஷனல், பிறஸ்பிட்டேரியன், மெதடிஸ்ட் போன்ற பல திருச்சபைகள் ஒன்றிணைந்து உருவானது. இது, திருச்சபை இணைப்பு இயக்கத்தில் நடந்த ஓர் அற்புதம். ஏனென்றால் இன்று திருச்சபைகள் உடைந்து பிரிகின்றதே தவிர உடைந்தவைகள் இணையவில்லை.

தென்னிந்தியத் திருச்பை உருவான நாளைக் கொண்டாடுதல் நாம் பெற்றுள்ள விடுதலை, ஆசீர்வாதம் உயர்வு போன்றவைகளை நினைத்து கடவுளைத் துதிக்கின்ற நிலையாகும். தென்னிந்தியத் திருச்சபை அமைப்பு ரீதியான திருச்சபை. ஆன்மீகம், உயிரூட்டமுள்ள தொழுகை, சிறந்த நிர்வாகம் இவைகள் அனைத்தையும் ஒன்றடக்கியத் திருச்சபை. அதோடு ஆழமான பற்றுறுதியோடு எல்லாரும் ஒன்றாய் வாழ வேண்டும் எனும் சிந்தனையுடைய திருச்சபையாகும்.

திருமறைச் சார்ந்து சிந்திக்கும்போது, திருச்சபை என்பது வெளியே அழைக்கப்பட்ட மக்களின் கூட்டம். இங்கே மக்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். மக்களின் பற்றுறுதி மையப்படுத்தப்படுகிறது. அதோடு திருச்சபை கிறிஸ்துவின் சரீரம். திருச்சபை மக்கள் அனைவரும் சரீரத்தின் அவயவங்கள். மக்கள் அனைவரும் திருச்சபையில் அவரவர் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். மட்டுமல்லாது திருச்சபை மக்கள் அனைவரும் ஒன்றுகூடி கடவுளை வழிபடுமிடம். மக்கள் வழிபாட்டில் ஒன்றாய் கூடி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி கடவுளை மாட்சிமை படுத்துகின்றனர்.

இன்று திருச்சபைக்கு இத்தகைய முக்கியத்துவத்தை நாம் கொடுக்கிறோமா? தென்னிந்தியத் திருச்சபை இதனை மையப் படுத்துகின்றதா? திருச்சபை உறவு, அதின் வழிபாடு உணர்த்தும் உண்மை என்ன என்பதை சிந்திப்போம். திருச்சபையின் வழிபாடு ...

**1. உறவுகளை ஒன்றுபடுத்துகிறது** (எசே. 37 : 22)

மக்கள் கூட்டமாக அழைக்கப்பட்டுள்ள திருச்சபை, மக்கள் உணர்வடைந்து, நல் உறவுகளை உருவாக்கி, ஒன்றுபடுத்துமிடமாக அமைந்துள்ளது. பிளவுபட்டு நிற்கும் திருச்சபை அமைப்பு ஒன்றாக்கப்பட எசேக்கியேல் இறைவாக்கினரின் கையிலிருந்த இரண்டு கோல்களும் ஒன்றான அனுபவம் உணர்த்துகிறது. இந்த ஒன்றான அனுபவத்தில் பிரிந்து நிற்கிற கடவுளின் பிள்ளைகளான பன்னிரு கோத்திரத்தார் ஒன்று சேர்வர் எனும் உண்மை உரைக்கப்படுகிறது. அதாவது யூதாவும் அதை சார்ந்த இஸ்ரயேலரும் எப்ராயீமும் ஒன்றாய் இணைக்கப்படுவார்கள்.

சாலமோன் அரசரின் மரணத்திற்கு பின் அரசியல் ரீதியான பிளவு ஒருங்கிணைந்த இஸ்ரயேல் நாட்டில் ஏற்பட்டது. நாடு யூதா என்றும் இஸ்ரயேல் என்றும் பிளவுபட்டது. தற்போது இவை இரண்டும் ஒன்றுபடும். இனிமேல் பிரிவினையில்லை. ஒரே ராஜா, ஒரே ஆளுகை, ஒன்றித்து கடவுளை மக்கள் வழிபடுவர் என்பது இறை வாக்கு. பிரிவினைகள் நிறைந்தவர்கள் ஒன்றாய் வாழ்வது சிறப்பானது. இந்த ஒற்றுமை மனிதரிடையே நிலவிட இறைவன் தம் மக்களோடு செய்யும் உடன்படிக்கை அவர்கள் என் மக்கள், நான் அவர்கள் கடவுளாயிருப்பேன் (எசே. 37 : 23) என்பதாகும்.

எசேக்கியேலின் கரத்தில் ஒன்றாகும் கோல், பிரிந்த கோத்திரங்கள் ஒன்றாகி கடவுளோடு உறவினுள் வருவர் எனும் இறைவாக்கிற்கேற்ப பல கொள்கைகள் கொண்ட திருச்சபைகள் C.S.I. என்னும் ஒரே அமைப்பில் ஒன்றாகி, ஒன்றான கடவுளை வழிபட்டு வருகிறது. இதன்மூலம் அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டுமென்ற இயேசு நாதரின் வேண்டுதல் முழுமை பெறுகிறது (யோ. 17 : 22). மட்டுமல்லாது சகோதரர் சகோதரரிகள் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்தனை நன்மை? எத்தனை இன்பம்? (தி.பா.133 : 1). இந்த வாழ்விற்கு நலமான வழிபாட்டு உறவுகள் உதவுகிறது. தென்னிந்தியத் திருச்சபை வழிபாட்டு உறவு சகோதர உறவுகளையே பிரதிபலிக்கிறது. ஆகவே பல்வேறு சிந்தனைகள், பின்னணியங்கள், செயல்பாடுகள், தன்மைகள் கொண்ட நாம் திருச்சபை எனும் ஒரே அமைப்பில் ஒரே சிந்தனையோடு கடவுளை வழிபடும்போது நமது உறவுகள் ஒன்றுபடுத்தப்படுகிறது.



**2. அன்பிலே வளரச் செய்கிறது** (எபே. 4 : 1-6)

தென்னிந்திய திருச்சபை உறவும் வழிபாடும் இறை மக்களை அன்பிலே வளரச் செய்கிறது. இறை உறவிலே வளரவும், மாந்தர் தம்மிடையே உறவினை ஏற்படுத்தி அதன் வாயிலாக அன்பிலே நிலைத்திருக்கவும் திருச்சபையின் செயல்பாடுகள் அமைந்திட வேண்டும். பவுலார் எபேசிய திருச்சபையாருக்கு எழுதுகையில் அன்பினாலே ஒருவரையொருவர் தாங்க வேண்டுமென வலியுறுத்துகிறார். இத்தன்மை திருச்சபையின் வழிபாட்டு உறவில் சிறப்பிடம் பெறுகின்றது.

பொதுவாக எபேசியர் திருமுகம் திருச்சபைப்பற்றி பல ஆழகான உருவகங்களைத் தன்னகத்தே கொண்டுத் திருச்சபை ஓற்றுமையாக அன்பிலே வளரவேண்டும் எனும் போதனையினைத் தருகிறது. திருச்சபையின் மக்கள் கடவுளின் அழைப்பினைப் பெற்றவர்கள். இந்த அழைப்புக்கு ஏற்ற நிலையில் அவர்கள் வாழ்ந்திட வேண்டுமென்கிறார் (எபே. 4 : 1) இந்த அழைப்பு அன்பில் நிலைத்திருப்பதையே ஆழமாக குறிக்கின்றது. ஆகவே திருச்சபை மக்கள் முழு மனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும், ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ வேண்டும் (எபே. 4 ; 2, 3). இந்த உண்மையான அன்பு அனைவரும் ஒன்றாய் வாழவும் வழிபாட்டில் இறைவனோடு இணைந்து கொள்ளவும் உதவியாயிருக்கிறது.

ஐக்கிய திருச்சபையாகிய தென்னிந்தியத் திருச்சபை உறவிலே வாழ்கிற நாம், திருச்சபைக் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ளது போல நாமும் ஒன்றாய் இணைந்து அன்பிலே பூரணமடைந்து வழிபாட்டில் ஒன்றாகி வாழ்வது சிறப்பானதாக அமையும்.

**3. ஆவியின் ஒருமையைக் காக்கிறது :** (யோவா. 17 : 20-26)

உறவிலே ஒன்றாகி அன்பிலே வளரும் இறைமக்கள் ஆவியின் ஒருமையினைக் காத்திட வேண்டும் (எபே. 4 : 3). ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்திடும் நிலையில் திருச்சபை உறவு அமைந்திட வேண்டும். ஆண்டவர் ஒருவர், நாம் கொண்டுள்ள இறை நம்பிக்கை ஒன்றே, திருமுழுக்கும் ஒன்றே, எல்லோருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே. அவர் எல்லோருக்குள்ளும் இருக்கிறார் என்பவை ஆவியின் ஒருமையினை உணர்த்தும் பவுலாரின் கருத்துக்களாகும். (எபே. 4 : 4-6).

இயேசு தனது தலைமைக் குரு இறை வேண்டலில் இவ் ஆவியின் ஒருமைப்பாட்டினை உணர்த்துகிறார். அனைவரும் ஒன்றாயிருக்க வேண்டும், இயேசு தந்தையோடு இணைந்திருப்பதுபோல மக்களும் சக

மனிதரோடும் இறைவனோடும் இணைந்து வாழ வேண்டுமென மன்றாடுகிறார் (யோவா. 17 : 20-23). இம்மன்றாட்டின் அடிப்படையிலே தென்னிந்திய திருச்சபையின் ஒருமைப்பாட்டு வாழ்வு அமைந்துள்ளது. இரண்டு மூன்று பேர் ஒரு மனமுள்ளவர்களாக ஒன்றாயிணையும் போது அவர் நடுவில் இறைவன் வாசம் பண்ணுகிறார். அவர்களோடு உறவு ஏற்படுத்துகிறார் (மத். 18 : 20). தொடக்ககால திருச்சபையினர் ஒருமனப்பட்டவர்களாய் ஆலயத்தில் அனுதினமும் ஒன்றாய் கூடி வழிபட்டார்கள் (தி.ப. 2 : 46).

ஆவியின் ஒருமையினைக் காக்கும் நமது இறைவழிபாட்டின் முழுமை இரவும் பகலும் அவரை அவரது ஆலயத்தில் வழிபடும் உன்னத நிலையினைத் வெளிப்படுத்துகிறது (தி.வெ. 7 : 15). ஐக்கிய திருச்சபையின் அங்கமாய் இறைவனை வழிபடும் நாம் கடவுளோடுள்ள உறவில் சீர்பொருந்துவோம், அழைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் அங்கமாவோம். பிளவுபட்டு நிற்கும் திருச்சபைகள் ஒன்றாகிட இணைந்து செயல்படுவோம்.

**மன்றாட்டு :** *கடவுளே, நீர் வாழ்வை தருகின்றவர். தென் இந்திய திருச்சபையின் வாழ்வுக்காக உம்மிடம் மன்றாடுகிறோம். திருச்சபையை தூய்மையாக்கும் தொழுகைகளை புதிதாக்கும் சான்று பகருவதற்கு தேவையான ஆற்றலைக் கொடும். புதிதாக்கும் ஒற்றுமையை உருவாக்கும் உம்விருப்பத்திற்கு கீழ்ப்படிய ஒருங்கிணைந்து தேடும் அனைவருக்கும் உம் ஆற்றலைக் கொடும். உம்முடைய பிள்ளைகளைப்பிரிக்கும் வேறுபாட்டைக் குணமாக்கி அதனூடாக நாங்கள் தூய ஆவியார் தரும் ஒற்றுமையை அமைதியின் உறவோடு துரிதப்படுத்த உம் ஆற்றலைத்தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளும் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**



**30-09-2012**

*முதியோர் ஞாயிறு*

## முதியோர் : ஞானத்தையும் அனுபவத்தையும் இளைஞருக்கு பகிர்தல்

## Aged : Sharing wisdom and Experience with the Young

| | |
|---|---|
| யோசு 23 : 1 – 6 | 1 தீமோ. 5 : 1 – 10 |
| தி.பா. 71 | லூக். 2 : 25 – 35 |

"முதிர் வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல் அவனைத் தகப்பனைப் போலவும் ....... முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப் போலவும் பாவித்து புத்தி சொல்லு" (1 தீமோ. 5 : 1, 2).

முதிர் வயதுப் பருவம் என்பது மனித வாழ்வின் இரண்டாம் குழந்தை பருவம் என்று கூறுவர். இது முதியோர் குழந்தைகளைப் போல கவனமாக பராமரிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அக்டோபர் 1 ஆம் நாள் உலக 'முதியோர் தினம்' என அனுசரிக்கப்படுகிறது. பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அரசுத் துறைகளும் முதியோரை பராமரிப்பது குறித்த கரிசனையை நமக்கு வலியுறுத்துகின்றன. இதன் அவசியத்தை ஆன்மிகக் கட்டளையாகவும் நாம் திருமறையிலிருந்து பெறுகின்றோம். நமது கிறிஸ்தவக் கரிசனைகள் அனைத்திற்குமே உரைகல்லாக நாம் நமது ஆண்டவரின் மாதிரியைப் பின்பற்றுகிறோம். முதியவர்களும் இளையவர்களுக்கு மாதிரியாக அவர்களது நல் வாழ்வை மனதில் வைத்து வாழ வேண்டும். இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக விளங்கும் போது இறைவனின் திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியும். இறைப்பணியிலும் இளைஞர் மற்றும் முதிர் வயதுள்ளவர்கள் முக்கியமானவர்கள். எனவே எவ்விதம் முதியவர்கள் இளையவர்களிடமும், இளையவர் முதியவர்களிடமும் கரிசனையுடையவர்களாக விளங்கவேண்டும் என்பது பற்றி சிந்திப்போம்.

### 1. முதியவர்களின் இளையவர்கள் குறித்த கரிசனை : யோசு. 23 : 6

இஸ்ரயேல் மக்களை வழி நடத்தும்படி ஆண்டவர் தெரிந்து கொண்ட தலைவர் மோசேக்கு பின் அவர்களை வழிநடத்த ஆண்டவர் தெரிந்து கொண்ட தலைவர் தான் யோசுவா. கடவுள் யோசுவாவுக்குக் கொடுத்த பொறுப்பு என்னவென்றால் இஸ்ரயேல் மக்களின் பிதாக்களுக்கு கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை அவர்களுக்குப் பங்கிடுவதாகும் (யோசு. 1 : 6). யோசுவா கடவுள் கூறிய படி நாட்டை சுதந்தரிப்பதற்கு அவர்களுக்கு முன் நின்று எதிரிகளைத் துரத்தி நாட்டைப்

பிடித்து அதனை சொந்தமாக்கி இஸ்ரயேல் மக்களுக்கு ஞானமாக பங்கிட்டார் (யோசு. 23 : 4). காலத்தின் கட்டாயத்திற்கேற்ப அவரும் வயது சென்றவராகிறார். வயது முதிர்ந்தப் பெரியவராக அவருக்கு இஸ்ரவேலின் இளம் தலைமுறையினரைக் குறித்த கரிசனை இருந்தது. தனது வாழ்வின் வெற்றிக்கு அடிப்படையாக எது இருந்ததோ? அதை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். மோசேயின் நியாயப்பிரமாண நூலில் எழுதியிருக்கிறதை விட்டு வலதுபுறமாகிலும் இடதுபுறமாகிலும் விலகிப் போகாமல் அதைக் கைக்கொள்ள நிர்ணயம் பண்ணிக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை கூறினார். இது அவருக்கு இளையவர்களின் மேலிருந்த கரிசனையைக் காட்டுகிறது. மேலும் தீத்து 2 : 3 - 5இல் முதிர் வயதுள்ள பெண்கள் பிற இளம் பெண்களுக்கு மாதிரிகளாக விளங்கவேண்டும். அவர்கள் அவதூறு பண்ணாதவர்களாக, வதந்திகளை பரப்பாதவர்களாக, அங்குமிங்கும் போய் கதை கேட்காதவர்களாக இருக்கவேண்டும். நல்ல செயல்களை இளையத்தலைமுறைக்குக் கற்றுக்கொடுக்கிறவர்களாக விளங்கவேண்டும். சிதைந்து வரும் உறவு முறைகளை புதுப்பிக்கின்ற வர்களாக இருக்க வேண்டும். இன்று இளந்தலைமுறைகள் கெட்டு சீரழிவதற்கு ஒரு காரணம் முதியவர்கள் இளைய தலைமுறைக்கு சரியான விசுவாச பயிற்சி கொடுக்காததே

**2. இளையோர்களின் முதியவர்கள் குறித்த கரிசனை :** 1 தீமோ. 5 : 1, 2

தீமோத்தேயு, தீத்து போன்றோர் இளம் ஊழியர்கள், இளமை துடிப்பும், தைரியமும், சுறுசுறுப்பும் மிக்கவர்கள். இருவரும் வயது வித்தியாசமும் இன்றி சபை மக்கள் எல்லாரையும் நேசிக்கவும், எல்லாருக்கும் ஊழியம் செய்யவும் பவுல் ஊக்குவிக்கிறார். இன்றைய இளம் தலைமுறை நவீனமயமாக்குதலின் வேகத்திலும் விவேகத்திலும் முன்னிலையில் உள்ளவர்கள் என்பதில் சந்தேகமில்லை. புதிய சாதனைகளையும் அதிகமாக தங்களின் நுண்ணறிவால் நிகழ்த்துகின்றனர். இதன் விளைவாக பல வேளைகளில் முதியவர்கள் குறைவாக மதிப்பிடப்படவும் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணவும் செய்கிறார்கள். ஆனால் முதியவர்களின் அறிவு, மதிநுட்பம், தொழில் நுட்பம் போன்றவைகளுக்கு மேலாக பட்டறிவு சார்ந்த ஞானத்தில் உயர்ந்தவர்கள் எனும் உண்மையை மறந்துவிடுகிறார்கள். பல நேரங்களில் முதியவர்களின் ஆலோசனையை விரும்புவதில்லை. ஆனால் ‘முதியோர் சொல் முன்னே கசக்கும், பின்னர் இனிக்கும்’ என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. அனுபவ ரீதியாக முதியவர்கள் தரும் ஆலோசனைகளை இளையவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். லூக். 2 : 34, 35-இல் சிமியோன் இயேசுவைக் கைகளில் ஏந்தி ஆசீர்வதித்த நிகழ்வு சொல்லப்பட்டுள்ளது. முதியவர் சிமியோன் இயேசுவை குறித்தும் மரியாளைக் குறித்தும் சொன்னவை பின்னர் நிறைவேறின. நீதியும் தேவபக்தியுமுள்ள முதியவர்கள் இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் வரவேண்டிய அமைதி சமாதானத்திற்காக காத்திருந்தவர்கள். பரிசுத்த ஆவியின் உதவியோடு



உழைத்தவர்கள் என்பதை அறியலாம். முதியோர்கள் ஆசீர்வாதத்தின் ஊற்றாக இருந்தவர்கள் என்பதை உணர்ந்து நாம் அவர்களைக் கனப்படுத்த வேண்டும். அவர்கள் இளையவர்களின் எதிர்காலத்திற்காக ஆசீர்வாதத்தை உருவாக்கித் தருகிறவர்கள்.

**3. முதியவர்கள் மற்றும் இளையவர்கள் குறித்த இறைவனின் கரிசனை :** லூக். 18 : 18 - 20)

நித்திய வாழ்வை பெறுவதற்கான வழி என்ன? என்று கேட்ட செல்வந்தனான தலைவர் ஒருவருக்குப் பதிலாக உடனடியாக ஆண்டவர் சுட்டிக்காட்டியது 10 கட்டளைகள் தான். அதிலும் 5 கட்டளைகளை அவராகவே முன்மொழிந்து இவற்றைப் பின்பற்றுவதே அதற்கு அடிப்படை வழி என்று கூறியுள்ளார் (லூக். 18 : 18 - 20). அதாவது முதிர்வயதுள்ள தாய் தகப்பன்மாரை கனம்பண்ணி, மதித்து அதன் வழியாகத் தான் நித்திய வாழ்வைப் பெறமுடியும் என்பதை இயேசு சுட்டிக் காட்டுகிறார். இதில் இளையவர், முதியவர் இருவருக்கிடையே இருக்கின்ற இறைவனின் கரிசனை வெளிப்படுகிறது. அருள்நாதர் இயேசுவும் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த நிலமையிலும் தமது வயதானத் தாயாரை பராமரிக்கும் உள்ளுணர்வு பெற்றபடியினால் தமக்கு அன்பாயிருந்த சீஷனிடம் தமது தாயாரைப் பராமரிக்கும் பொறுப்பைக் கொண்டார். சீடனும் அதனை அவரது தாயாரை தன்னிடமாக ஏற்றுக்கொண்டார். (யோவா. 19 : 26). ஆக முதியோரை ஏற்றலும் அவர்தம் வாழ்வில் ஏற்றத்தை உருவாக்கும் கரிசனையோடு வாழ்தலும் கிறிஸ்து நமக்குத் தரும் ஆன்மீகப் பண்பாக நாம் போற்றி வளர்க்க அழைக்கப்படுகின்றோம். முதியவர்களுக்கு இளையோர்கள் அளிக்க வேண்டியவைகள் மாத்திரமல்ல அவர்களிடமிருந்து நாம் பெறக் கூடியவைகளும் ஏராளமாக உள்ளன என்பதே இன்று நாம் உணரக் கூடிய உண்மைகளாகும். இளையவர் பெரியவர்களிடமிருந்து பெறும் உயர்பயன்கள் யாதெனில் “Golden Oldies” என்பது போன்று தங்கமயமான நன்மைகளை இளையவர்கள் பெறுகிறார்கள்.

அன்பானவர்களே ! சிறுவர், வயதுவந்தோர், இளையோர், முதியோர் என பல நிலைகளில் மனிதர் வாழ்கின்றனர். முதியோர் இளையோருக்கு நல் ஆலோசனைகள் வழங்கி அவர்களை விசுவாச வாழ்வில் வழிநடத்த வேண்டியது அவர்களது கடமை. அதேபோல் இளையவர்கள் முதியவர்களை மதித்து, போற்றி எனது வாழ்வு சிறக்க தங்களையே தியாகம் செய்தவர்கள் என்பதை மனதில் கொண்டு அவர்களை பத்திரமாய் பேண வேண்டியது இளையவர்களின் கடமை. இரு தரப்பினரும் தங்கள் கடமைகளை சரியாக நிறைவேற்றி அதின் வழியாக இறைவனின் திட்டத்தை, சித்தத்ததை, கரிசனையை நிறைவேற்ற வேண்டியது இரு தரப்பினரின் கடமை.

அவ்வாறு விளங்க கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் துணை அருள்வாராக. ஆமென்.

**அருள்திரு. G. சாம் ரிச்சர்ட் நெல்சன்**

**01-10-2012**

*அருணோதயத் தொழுகை*

# புது பெலன் அருளும் ஆண்டவர்

தி.பா. : 138

**"உமது வலக்கையால் என்னைக் காப்பாற்றுகின்றீர்" (தி.பா. 138 : 7).**

மனிதன் கடவுளை பல நிலைகளில் புரிந்து கொள்கின்றான். தனது வாழ்வுச் சூழ்நிலையின் அடிப்படையில் சிலர் விடுதலையாளராய், சிலர் ஆலோசனை தருபவராய், சிலர் ஆறுதல் தருபவராய், சிலர் குணமளிப்பவராய் இன்னும் பல கோணங்களில் புரிந்து கொள்கின்றனர். திருப்பாடலாசிரியர் கடவுளை புது பெலன் தருகிறவராய் இங்கே குறிப்பிடுகிறார். மனிதன் நிலையற்றவன், பெலனிழந்தவன், நிர்ப்பந்தமானவன். ஆனால் திருப்பாடல் 81 : 1-இல் கடவுள் பெலன் நிறைந்தவராயிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இப்புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நமது வாழ்வில் கடவுள் நமது சோர்புகளிலும் பெலவீனங்களிலும் தடுமாற்றங்களிலும் நம்மோடிருந்து புது பெலன் தருகிறவர் எனும் நம்பிக்கையில் வாழ்வினைத் தொடர அழைக்கப்பட்டுள்ளோம். கடவுள் எத்தகைய புது பெலனை நமது வாழ்வில் தருகிறார்? என்பதை இவண் தியானிப்போம்

**1. கூப்பிடுகையில் பதில் தருகிறார்:** (தி.பா. 138 : 3)

கடவுளை நோக்கி கூப்பிடும்போது அவர் பதில் தருகிறார். அவர் தருகின்ற பதில் புது பெலனை அருளுகிறது. பெலனிழந்த நேரங்களில் இறைவனை நோக்கி கூப்பிடுகிற அனுபவம் வாழ்வின் அனைத்து சூழல்களிலும் அவரைச் சார்ந்து வாழ்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. நமது ஆண்டவர் கேட்பவருக்கு பதில் தருகிறவர். உண்மையில் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு இரக்கம் செய்கின்றவர். இன்று எல்லாம் அனுகூலமாயிருக்கும்போது மக்கள் கடவுளை தேடுவதில்லை. ஆனால் தனது சுய பெலத்தால் எதையும் செய்ய முடியாத நிலை வரும்போது கடவுளை கூப்பிடுகிறார்கள். திருப்பாடலாசிரியர் வாழ்வின் அனுபவம் அவர் எல்லா சூழல்களிலும் கடவுளை சார்ந்து இருப்பதை உணர்த்துகிறது. கடவுளை நோக்கி கூப்பிடுவது என்பது ஆபத்து அல்லது நெருக்கடிகள் வாழ்வில் வரும்போது மட்டும் அழைக்கும் உதவி அழைப்பு போல் (அவசர போலீஸ் 100 போல் அல்லது 108 போல் அல்லது 101) இருக்கக் கூடாது. எப்போதும் அவரை அழைத்து அவரையே எல்லாவற்றிலும் சார்ந்து வாழ்கின்ற அனுபவம் இருக்க வேண்டும். கூப்பிடுகையில் பதில் தருவார்



என்பது நாம் சந்திக்கும் விருப்பமில்லா அனுபவமெல்லாம் அப்படியே மாறிவிடும் என்பது அல்ல, இருக்கிற வேதனையின் கொடுமையிலும் நாம் கீழே விழாமல் அதனை தாங்கி மேற்கொள்ளக்கூடிய அனுபவங்களை தந்து முன்னேறிச் செல்ல புது பெலனைத் தருகிறார் என்பதே உண்மை.

**2. கூட இருந்து காக்கிறார்** : (தி. பா. 138 : 7)

மனிதனின் உயிர் கடவுள் இயல்பாக கொடுத்துள்ள அவரது ஈவு. உயிரில்லாத மனித வாழ்வு செயல்படாதது. மனித வாழ்வின் செயல்பாட்டில் இறைவனின் பங்களிப்பு சிறப்புக் குரியது. கடவுள் நம்மை எல்லா தீமையினின்றும் பாதுகாக்கிறவர் (தி.பா. 121 : 7). தீமைகள் வாழ்வினை நெருக்கி அழிவிற்கு நேராய் அழைத்துச் செல்கையில் கடவுள் நம்மோடிருந்து நமது உயிரினைக் காத்து புது வாழ்வு அருள்கிறார்.

உடனிருந்து காக்கும் கடவுள் நம்மைவிட்டு விலகுவதுமில்லை. அவர் நம்மை கைவிடுவதுமில்லை. போகும்போதும் வரும்போதும் உடனிருந்து காக்கிறவர் அவர் (தி.பா. 121 : 8) அவரது உடனிருப்பு நமக்கு புதுப்பெலன் தருகிறது. எதிர் கொள்ளும் சவால்களை வெற்றியோடு சந்திக்க உதவுகிறது. இப்புதிய மாதத்தில் நாம் கடவுளை சார்ந்து செயல்படுகையில் அவர் நம்முடனிருந்து புதுபெலன் தந்து வழி நடத்துவார்.

**3. கூடி வாழச் செய்கிறார் :** (தி.பா. 138 : 6)

கூப்பிடுகையில் கூட இருந்து வழி நடத்தி புதுபெலன் அருளும் ஆண்டவர் உயர்வான வாழ்வினை அருளுகின்றார். இவ்வுயர்வான வாழ்வு உலகின் தீமைகளை மேற்கொள்ளுகின்ற உன்னத அனுபவம். இந்த உன்னத அனுபவத்தை பெறுகின்றவர் அவரைப் புகழ்ந்து பாடுவர். காரணம் இறைவனது மாட்சி மிகவும் பெரியது (தி.பா. 138 : 5). அவர் உன்னதத்தில் உறைபவர் (தி.பா. 138 : 6). உன்னதத்தில் உறைகின்ற அவர் உலகில் உயரிய நிலையினை அடையும் ஏக்கத்தோடு வாழ்கின்றவர்களின் ஏக்கத்தினை நீக்குபவர் (தி.பா. 138 : 6).

இன்று சமூக பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த அமைப்பில் நாம் வாழும்போது, நலிந்தவர் இன்னும் நலிவடைந்து செல்கின்றனர். வலுவுள்ளோர் தொடர்ந்து வலுப்பெற்று வாழ்கின்றனர். நலிந்தவர் ஏன் ஆண்டவரே ஏன் எனக் கேள்வி எழுப்புகையில் புது பெலன் அருளும் ஆண்டவர் நலிந்தோரைக் கண்ணோக்குகிறார். (தி.பா. 138 : 6) நலிந்தவரைக் கண்ணோக்குவதால் அவர்கள் இழந்த பெலனைத் திரும்பப் பெறுகின்றனர். இந்த புது பெலன் புது வாழ்வுக்கு அழைத்துச் சென்று மகிழ்வடையச் செய்கிறது. இப்புதிய மாதத்தில் கடவுளது கரங்களில் பெலனற்ற நம்மை கையளிப்போம், அவர் தம் வார்த்தைகளுக்கு செவிமடுப்போம் புது பெலன் பெற்று அவரோடு பயணத்தை தொடர்வோம்.

**திரு. J. காட்சன்**

**07-10-2012**

***பெந்தேகோஸ்தேக்குப் பின்வரும் எட்டாம் ஞாயிறு***

# இறைப்பணியில் துணிவு

## Courage in God's Service

ஏசா. 43 : 1–7, திப. 4 : 13 –20
திபா. 71 : 12–24 லூக். 12 : 4–12

"அவர்களது துணிவைக்கண்டு வியப்படைந்தனர். அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதையும் உணர்ந்து கொண்டனர்" (திப. 4 : 13).

இறைப்பணியில் இறை மக்களை ஆற்றல் படுத்தி பயன்படுத்துபவர் இறைவன். அவரது திருவடிகளை பின்பற்றி இறை சித்தம் நிறைவேற்ற அர்ப்பணிப்பவர்கள் தூய ஆவியானவரின் ஆற்றலை இறைப் பணிகளில் அனுபவிக்க முடியும். நற்செய்தியின் நாயகரான இயேசு கிறிஸ்து திருப்பணிக்கு மாதிரியாக இருக்கிறார். உலகத்தின் தீமைகள், அதிகாரங்களோடு எந்நிலையிலும் இயேசு கிறிஸ்து சமரசம் செய்து கொள்ள வில்லை. மாறாக தீமையின் ஆற்றலை தைரியமாக எதிர்கொண்டு வெற்றியடைந்தார். தன்னைப் பின்பற்றுகின்ற அடியவர்களையும் திடப்படுத்தி "உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே இருக்கிறேன்" என்றார். இறைப்பணி கண்ணியமானது, கடினமானது, கட்டுப்பாடானது. சிறப்பாக அநீதிக்கு எதிரான துணிச்சல் இறைப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு மிக தேவை. தவறுகள் நடைபெறும்போது அதைக் கண்டு கொள்ளாத அனுபவம் இறைப்பணிக்கு அழகல்ல. அதை எதிர்க்கும் துணிவு தேவை. கண்டித்து உரைத்தல் தேவை. ஆலயத்தை சுத்திகரித்தலுக்கும், பிரதான ஆசாரியர், பரிசேயர், வேதபாரகர் போன்றோரின் மாய்மால வாழ்வை கண்டிக்கும் பணி வாழ்வுக்கும் இயேசு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்.

திருமறையைப் படிக்கின்றபோது இறைப்பணியில் ஈடுபட்டவர்களில் பலர் சாதாரணமானவர், பயந்தவர், சந்தேகப்பட்டவர், மறுதலித்தவர், அதிக கல்வியற்றவர் ஆவர். ஆனால் இவர்கள் இறை ஆற்றலினால் நிரப்பப்பட்ட போது துணிவுடன் நற்செய்தியை அறிவித்தனர். இவர்கள் வருகையை அறிந்தவுடன் "உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள்" என்றனர் திப. 4 : 13இல் பேதுரு, யோவான் ஆகியோர் பேசும் தைரியத்தைக் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்கள், பேதைகள் என்பதை அறிந்திருந்த படியால் ஆச்சரியப்பட்டு அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என அறிந்து கொண்டனர். அவர்களைப் பேசக் கூடாது என்று பயமுறுத்தியபோது,



அப்போஸ்தலர்கள் தைரியமாக சொன்ன பதில் எங்களால் பேசாமலிருக்கக்கூடாது. கடவுளுக்குக் கீழ்ப்படிவதே எங்கள் நோக்கம் என்றனர். இதுதான் இறைப்பணியாளருடைய நிலைப்பாடு. அதிகாரத்திற்கோ, அகம்பாவத்திற்கோ, அச்சுறுத்தலுக்கோ பயப்படாமல் ஆண்டவருக்கு மட்டுமே பயந்து, கீழ்ப்படிந்து பணியாற்றும் நிலை (ஏசா. 43 : 5). அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன் (லூக். 12 : 4). என் நண்பர்களாகிய உங்களுக்கு நான் சொல்கிறேன் உடலை கொல்வதையன்றி வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்சவேண்டாம். திருமறை எந்நிலைகளில் இறைப் பணியில் துணிவுடன் பணியாற்ற உணர்த்தும் சிந்தனைகளை இவண் காண்போம்.

### 1. நற்செய்தி அறிவிப்பதில் துணிவு : (திப. 4 : 20)

என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது.

கிறிஸ்தவம் ஒரு கட்டுக் கதையல்ல. இது ஓர் உண்மை அனுபவம், வரலாற்று நிகழ்வு. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் எருசலேமிலும், பிற பகுதிகளிலும் சுற்றித் திரிந்து தாங்கள் பெற்ற அனுபவங்களை பறைசாற்றி அறைகூவல் விடுத்தனர். அவர்கள் செய்தியில் உண்மை இருந்தது. ஆற்றல் இருந்தது. அது நற்செய்தியாக இருந்தது. தாங்கள் சொன்ன செய்தியின் உண்மை நிலைக்காக தங்கள் உயிரை கொடுக்கவும் முன் வந்தனர். தயங்கவோ, பயப்படவோ இல்லை. இவர்களின் நற்செய்தியின் மையச் செய்தி கிறிஸ்து உயிர்த்த ஆண்டவர் என்பதே. இச்செய்தியால் வெறுப்படைந்த சதுசேயர், பிரதான ஆசாரியர் கோபம் கொண்டு இதைக் குறித்து பேசக் கூடாது என்றபோது பேதுரு, யோவான், நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது என்றனர் (திப. 4 : 20). கிறிஸ்துவை குறித்து தாங்கள் பெற்ற அனுபவத்தை அறிக்கையிடும் துணிவை அவர்கள் பெற்றனர். எதிர்ப்பேச்சு பிறர் பேச இடமளிக்காத வாழ்வு இவர்களிடம் இருந்தது (திப. 4 : 14). திப. 4 : 1-இல் பிரதானிகள் அதிகாரிகள் இவர்களைப் பிடித்து எந்த நாமத்தில் இதை செய்தீர்கள் என கேட்க, உங்களால் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டு, கடவுளால் உயிர்ப்பிக்கபட்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனக் கூறி, அவராலேயன்றி வேறொருவராலும் மீட்பு இல்லை என்றனர் (திப. 4 : 12; 1 கொரி. 12 : 3). தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் இயேசுவை ஆண்டவர் என்று கூறமுடியாது. திப. 13 : 33-இல் பவுல் நற்செய்தியை அறிவிப்பது என் கடமை என்றார்.

### 2. நற்செய்தியின் ஆண்டவர் நம்மோடிருப்பார் என்பதில் துணிவு (எசா. 43 : 5)

அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். இறைப் பணியை துணிவுடன் செய்ய இறைத்துணை தேவை. இறைத்துணையன்றி எதையும் சாதித்துவிடமுடியாது. நானாக சாதித்துவிடுவேன் என்ற மதமை

இருக்கும்போது முடிவு தோல்வியாக அமையும். கர்த்தர் நம் மேய்ப்பராய் இருக்கும்போது மட்டுமே நாம் தாழ்ச்சியடையோம். அனுதினமும் நம் வாழ்வில் பணியில் நம்மோடிருக்கும் ஆண்டவரை நாம் அறியவேண்டும். கர்த்தர் என் பட்சத்தில் இருக்க மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என பக்தன் ஒருவர் குறிப்பிடுகிறார்.அவரே நமக்கு அடைக்கலம் பெலன் துணை. வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் நம் ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்ற உறுதி, துணிவு நமக்கு தேவை.

ஏசா. 43-ஆம் அதிகாரத்தில் இஸ்ரயேல் மக்கள் சிறையிருப்பின் மத்தியில் இறைவன் தர இருக்கும் விடுதலை வாழ்வின் உறுதி மொழியை படிக்கிறோம். நீ பயப்படாதே நெருப்பு, தண்ணீர், போன்றவற்றை கடந்தாலும் பயம்வேண்டாம். காரணம் நீ எனக்கு உரியவன். அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடிருக்கும்போது பயம் வேண்டாம். துணிவுடன் பணியாற்றுவோம். தி.பா. 46 : 11 படைகளின் ஆண்டவர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் கடவுளே நமக்கு அரண். தி.பா. 46 : 1-3-இல் கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார். அதனால் நிலவுலகம் நிலை குலைந்தாலும் மலைகள் ஆழ்கடலில் அதிர்ந்து நடுங்கினாலும். கடலின் அலைகள் கொந்தளித்து பொங்கினாலும் எங்களுக்கு அச்சமென்பதே இல்லை. காரணம் படைகளின் ஆண்டவர் எங்களோடு உள்ளார். இறைமகன் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டப்பெயர் இம்மானுவேல். “கடவுள் நம்முடன் இருக்கிறார்” (மத். 1 : 23) என்பது தான் பொருள். இந்த துணிவு இறைப்பணியில் தேவை. அவனின்றி ஓர் அணுவும் அசையாது - பழமொழி. லூக். 12 : 7-இல் உங்கள் தலைமுடி எல்லாம் கூட எண்ணப்பட்டிருக்கிறது.

### 3. நற்செய்தியின் ஆண்டவருக்கு பயந்து, நல்லது செய்ய துணிவு : (லூக். 12 : 4)

**என்** நண்பர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன். உடலை கொல்வதை யன்றி வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்குஅஞ்ச வேண்டாம்.

இயேசு நாதர் தன் மக்களிடம் “இறைவனுக்கு பயந்து வாழவும், இறை விருப்பம் செய்யாதவர்களுக்கு பயப்பட வேண்டாம்” எனவும் போதித்தார். இயேசுகிறிஸ்து இவ்வுலக அதிகாரத்திற்கோ, துரைத்தனங்களுக்கோ, தீய சக்திக்கோ பயப்படவே இல்லை. சிறப்பாக ஆலயம் ஆத்மீகத்துக்குரியது. அதிகாரத்திற்கோ ஏமாற்றுதலுக்கோ உரியது அல்ல என்பதை தெளிவுப்படுத்தினார். எருசலேம் ஆலயத்தில் பலிபொருட்கள் பழுதற்றவை என்ற ஒப்புதலுக்காக ஆலய வளாக கடைகளில் கூடுதல் விலையில் விற்கப்பட்டதை கிறிஸ்து கண்டித்தார். உரோம நாணயம் சேக்கல் நாணயமாக மாற்றப்பட்டு காணிக்கை படைக்கும் வகையில் கொள்ளை லாபம் பெற்றதை கண்டித்தார். ஜெபவீடு கள்ளர் குகையாக மாற்றப்பட்டதை கண்டு துணிவுடன் நல்லது செய்ய சாட்டை எடுத்தார். உண்மையான, தூய்மையான ஜெப வீட்டை எதிர்பார்த்தார். இறை சமூகம் வீண் பேச்சுக்கோ, சுய லாபத்திற்கோ, போட்டி பொறாமைக்கோ உரிய இடமல்ல



என்பதை வெளிப்படுத்தினார்.

இன்று தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டவும், பொருளாதாரத்தையும் லாப நோக்கையும், குடும்ப பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு கிறிஸ்துவை வழிபட வருவோருக்குத் தடையாக இருக்கும் சக்திகளை கிறிஸ்துவைப்போல துணிவுடன் எதிர்க்கும் மன பக்குவம், துணிச்சல் இறை பணியில் தேவை. D.L. மூடி தண்ணீர் குழாயை வர்ணம் பூசுவது தண்ணீரை சுத்தம் செய்வதாக அமையாது என்றார் (White washing the Pump won't make the water pure). நம் இதயத்தையும், இறை இல்லத்தையும் தூய்மையாக்கும் துணிவு தேவை. இன்று உலகில் நல்லது செய்ய முயலும் போது நமக்கு நெருக்கம், வேதனை, தொந்தரவு தர முயலும் தீய சக்திகளுக்கு பயப்பட வேண்டாம் என கிறிஸ்து கூறுகிறார். துணிவுடன் பணியாற்ற பரமன் அழைக்கிறார். பாதாளத்தில் நம்மை தள்ள வல்ல பரமனுக்கு மட்டும் பயந்து இவ்வுலக பாதகர்களுக்கு பயப்படாமல் இறைப்பணியில் துணிவுடன் செயல்படுவோம்.

பொகீமியாவின் சிங்கம் என்று அறியப்பட்ட ஜாண்ஹஸ் திருச்சபை சீர்திருத்த வாதிகளில் குறிப்பிடத்தக்கவர். பொகீமியாவில் ஹஸ்ஸினெட்ஸ்-ல் பிறந்து ப்ராகுவே பல்கலை கழகத்தில் கற்றார். ஜாண் விக்ளிப் நூல்களால் கவரப்பட்டு, அவரது ஆயுட்கால சீடரானார். 33-வயதில் குருவானார். பல்கலைக்கழக பேராசிரியராக மெய்யியல் துறை தலைவராக முகவராக Rector) பதவி வகித்தவர். சிறந்த அருளுரையாளர். ஜாண் ஹஸ், குருக்களின் தவறான வாழ்வை, பாவ மன்னிப்பு சீட்டைக் கண்டித்தார். மனம் வருந்துவோருக்கே பாவ மன்னிப்பு. திருச்சபையின் தலைவர் கிறிஸ்துவே என்றார். இவர் அருளுரையாற்ற தடை விதிக்கப்பட்டது. பின் சபையிலிருந்து நீக்கப்பட்டார். 1415-ல் ஹஸ் தீயிலிடப்பட்டு கொலை செய்யப்பட்டார். இறக்கும்போது நான் தீயவைகளை போதிக்கவில்லை. உதடுகளினால் போதித்ததை இப்பொழுது என் இரத்தத்தினால் முத்திரையிடுகிறேன் என கூறி மரித்தார்.

**மன்றாட்டு :** *ஆண்டவராகிய கடவுளே! நாங்கள் உமக்கு துணிவுடனும் உறுதியுடனும் பணி செய்ய நம்பகத் தன்மையினாலும், உண்மையாலும் எங்களை நிரப்புவீராக. அதிகாரப் பார்வை எங்களை திசை திருப்பாதபடியும் கொடுமைகள் எங்களை துவளச் செய்யாமலும் காப்பீராக. பயமோ, இழப்போ, மனஉளைச்சலோ எங்களை நம்பிக்கை இழக்கச் செய்யாதிருப்பதாக. உம்முடைய திருவுளம் நிறைவேற்றப்படும்பொழுது எங்களுக்கு உம்மால் எல்லாம் ஆகும் என்பதை அறிந்து கொள்ளச் செய்வீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

**Rev. T. டேவிட் கிளேட்ஸன்**

**14-10-2012**

*மாற்றுத் திறனாளிகளின் ஞாயிறு*

# மாற்றுத் திறனாளிகளின் மாண்பினை உறுதிப்படுத்துதல்

## Affirming the Dignity of the Physically and Mentally Challenged

2 சாமு. 9:1–13 திப. 3:1–10
திபா. 103 மத். 15 : 29–31

"... ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் அவர் உரிமைகளை வழங்குகின்றார்" (திபா. 103 : 6)

உடல் ஊனமுற்றோர் என்னும் சொல் வழக்கு இன்று மாற்றுத்திறனாளிகள் என்று அவர்கள் திறனை மையப்படுத்தி உயர்வாக சொல்லப்படுகிறது. ஆய்வுக் கட்டுரைக்காக மருத்துவர் ஒருவரை சந்தித்தபோது கண் பார்வையற்ற ஒருவருக்கு மாற்றுத்திறன் அதிகமாக இருக்கும். ஏனெனில் ஐம்புலன்களுக்கும் பணியாற்ற வேண்டிய முறையின் உணர்வு திறன் நான்கு புலன்களுக்கு முனைப்புடன் பணியாற்றுவதால் அவர்கள் திறன் அதிகமாக இருக்கும் என்றார்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 3ஆம் நாள் அனைத்துலக ஊனமுற்றோர் தினமாக நினைவுகூரப்படுகிறது. அக்டோபர் மாதம் 2ஆம் நாள் உலக கண்ணொளி தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனாலும் இன்றும் மாற்றுதிறனாளிகள் குறித்த உயரிய சிந்தனை மக்களிடையே இல்லை.

திருமறையில் மாற்றுதிறனாளிகள் நிலை குறித்து ஆழமாக ஆய்ந்தோமென்றால் ஆண்டவரால் அதிகம் நேசிக்கப்பட்ட மக்களாக மாற்றுதிறனாளிகள் காணப்படுகின்றனர். இறைமகன் இயேசு, குள்ள மனிதராம் சகேயுவோடு உணவருந்தி தன்னோடு வந்தவர் இறைமொழி கேட்க உதவியாய் எப்பத்தா என்று காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமானவரைப் பேசவைத்து நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று பர்திமேயுவின் கண்களை திறந்து மாற்று திறனாளிகளோடு தன்னை இணைத்துக் கொண்டார். அவர்தம் செயல்பாட்டின் மாண்பினை திருமறையின் ஊடாக காண்போம்.

### 1. அங்கீகரிக்கும் ஆண்டவர் : 2 சாமு. 9 : 1-13

மாற்றுத்திறனாளிகள் சக மனிதர்களால் அங்கீகரிக்கப்பட



வேண்டும் என்பதை ஆண்டவர் விரும்புகின்றார். 2சாமு. 9ஆம் அதிகாரத்தில் தாவீது யோனத்தான் நிமித்தம் என்னால் தயை பெற மீதியாய் இருக்கிறவர் உண்டோ என்று கேட்டார் இந்த கேள்விக்கு பதில் யோனத்தானுக்கு இரு கால் ஊனமுற்ற மகன் ஒருவன் இருக்கிறான் என்று பதில் வந்தபோது தாவீது மாற்றுதிறனுடைய மெபிபொசேத்து என்று அவனை ஒதுக்கிதள்ளாது அவன் மீது கரிசனை கொண்டு அவனை அங்கீகரிக்கின்றார். அவனிடம் "அஞ்சாதே" என பயத்தை போக்குகின்றார். "நான் உனக்கு கருணை காட்டுகிறேன்." என்கிறார். உன் மூதாதையர் நிலத்தை தருவேன் என்கிறார். அவனை அங்கீகரிக்கும் அடையாளமாக நான் உன்னோடு உணவருந்துவேன் என அவனை ஏற்றுக் கொள்கிறார். கிறிஸ்துவின் திருப்பணியிலும் மத். 20 : 30 முதல் வழியருகே இருந்து சத்தமிட்ட கண்பார்வையற்றவரை ஆண்டவர் அங்கீகரித்து பார்வையளித்தார்.

### 2. ஆதரவளிக்கும் ஆண்டவர் : மத். 14 : 29-31

மனிதன் உடலளவில் மட்டுமல்லாது மனதளவிலும் குறையுடையவராக வாழ்ந்து வருகின்றான். உடல் நலம் மிக்க உலக மனிதர்களில் மனநலம் இல்லாதோர் அதிக விழுக்காடு இருப்பதாக இன்றைய ஆய்வு தெரிவிக்கிறது. மத். 14:29இல் நடுகடலில் நிகழ்வு ஒன்று நடைபெறுகிறது. கடல்மீது நடந்து வந்த இயேசு நாதரை கண்டு தானும் நடக்க வேண்டும் என விரும்பிய பேதுரு முழு விசுவாசமற்ற சூழலில் நடக்க முற்படுகின்றான். காற்றை கண்டு பயத்தில் மூழ்கி செல்கையில் மனபலம் குன்றிபோகிறது உடல் திடன் அற்று போகிறது. ஆதரவு கரம் நாடிக் கதறுகிறான். இச்சூழல் அவரது நிலை ஓர் உள திடன் அற்ற மாற்று திறனாளியின் நிலைப்போல் அமைகிறது. கிறிஸ்து இயேசுவின் கரம் அவனுக்கு முன்பாக நீட்டப்படுகிறது. கிறிஸ்துவின் ஆதரவை உணருகின்றான் இன்றும் மனதளவில் பலன் குன்றியவராய் இருக்கும் மக்களிடையே இயேசுவின் ஆதரவளிக்கும் கரம் ஆழ்கடலில் இருந்து தூக்கிவிட நீட்டப்படுகிறதை மறந்து போக வேண்டாம்.

### 3. அன்பு செய்யும் ஆண்டவர் : திப. 3 : 1-10

மாற்று திறனாளிகள் அன்பு செய்யப்பட வேண்டியவர்கள் ஆனால் சமுதாயம் அவர்ளை பிச்சையெடுப்பவர்களாக காணுகிறது. அவர்களிடம் உள்ள மாற்றுதிறன் மதிக்கப்படலில்லை. திப. 3 : 1 முதல் நாம் காணும் போது ஆலயத்தில் அலங்கார வாயிலில் அன்றாடம் பிச்சையெடுக்க வைக்கப்பட்டு இருந்த இருகால்களும் ஊனமுற்ற மனிதன் பேதுரு மற்றும் யோவானை பார்த்து பிச்சைக் கேட்டார். வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை அன்பு செய்யும் ஆண்டவரின் வல்லமை மட்டுமே என்னிடம் உள்ளது எனக்கூறி அந்த மாற்றுதிறனுடையோரிடம் அன்பு கூர்ந்து அவன் வலக்கரத்தை பற்றி நாசரேத் இயேசுகிறிஸ்துவின் பெயராலே எழுந்து

நடந்திடும் என தூக்கிவிட்டார். அம்மனிதன் குதித்தெழுந்து நடந்து இறைவனை துதித்தவாறு ஆலயத்தில் பிரவேசித்தார். இறையன்பின் ஆற்றல் பேதுருவினூடாக மாற்றுதிறனாளியிடம் வெளிப்பட்டது.

இன்று கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் மாற்றுத் திறனாளிகளாய் நம்மோடு வாழ்ந்து கொண்டு இருப்பவர்களை அங்கீகரிக்க கற்றுகொள்ள வேண்டும் அதுமட்டுமல்லாது நமது திருச்சபை வாழ்வில் இவர்களுக்கு ஆதரவு கரம் நீட்ட வேண்டும். மனிதன் மனிதாபிமானம் மிக்கவன் என்பதை மையமாகக் கொண்டு மாற்றுதிறனாளியின் வாழ்வில் மணம் வீசும் படியாய் அன்பை பகிர்ந்து கொள்பவர்களாய் மாற வேண்டும். இப்படி வாழ்வோமெனில் இறைவன் விரும்பும் இனிய வாழ்வு இம் மண்ணில் வளரும் இறையாசி நம்மில் பெருகும். ஆண்டவர் தாமே நம்மை ஆசீர்வதிப்பராக.

**மன்றாட்டு :** *எங்கள் ஆண்டவராகிய கடவுளே, உம்முடைய மைந்தர் இயேசு கிறிஸ்து அனைத்து சுகவீனங்களையும் மாற்றும் மிகப்பெரிய குணமாக்குபவர். மனரீதியாக பாதிக்கப்பட்டோருக்கு அமைதியருளி உடல் ரீதியாக குறையுடையோருக்கு பெலன் தந்து உம்முடைய ஆவியானவரால் தாங்குவீராக. திருச்சபை உமதன்பு மற்றும் இப்படிப்பட்டடோருக்கு கரிசனையுடன் வாழ்வதாய் இருப்பதாக. உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து ஆளுகை புரிபவராய் புத்தி சுயாதீன மற்றும் மாற்றுத் திறனாளிகளை இவ்வுலக வாழ்வில் கண்ணியப்படுத்தி ஏற்றுக் கொண்ட எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

*திரு.* **N. ஜெசின்**



**21-10-2012**

***இளையோர் ஞாயிறு***

# பொருள் நிறைந்த வாழ்வைத் தேடும் இளையோர்

## Youth in Search of a Meaningful life

சஉ. 11 : 9 – 12 : 8 | 1 திமொ. 4 : 6–16
தி.பா. 119 : 9–16 | மத். 6 : 16–24

"... உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே" (சஉ. 12 : 1)

வாழ்வில் இனிமையானதும் இன்றியமையாததும் இளமைப் பருவம். பொதுவாக 13 வயது முதல் 35 வயது வரையுள்ள பருவம் இளமைப்பருவமாகும். இளைஞன் என்ற வார்த்தை கெம்பீரமான வார்த்தை, அதை உச்சரிக்கும் போதே என் தலை தானாக நிமிர்கிறது என்றார் மார்க்சின் கார்கி. அறிஞர் அண்ணா இளைஞர்கள் நாட்டின் தீட்டிய ஈட்டிமுனைகள் (cf. திபா 127 : 5) என்றார். இளமைப் பருவம் சாதனைகள் பல புரியத் துடிக்கும் பருவம். இளமை பருவத்தில் புத்தர் ஞானம் பெற்றார். நெப்போலியனின் வெற்றியின் அடித்தளம் இளமைப் பருவத்தில் அமைந்தது. சர். ஐசக் நியூட்டன் தனது 19ஆவது வயதில் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். ஐன்ஸ்டீன் தனது 21-ம் வயதில் அணுகுண்டு தயாரிக்கும் விதியைக் கண்டுபிடித்தார். மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் திருமறையைப் பயன்படுத்தி வன்முறைக் கூடாது என உரையாற்றியபோது அவரது வயது 24.

இப்படிப்பட்ட இளமைப் பருவத்தில் படைப்பாளரை நினைக்க வேண்டியது அவசியம். தொலைக்காட்சி, அலைபேசி, ஆடை, அலங்காரம், வசதி வாய்ப்புகளால் கிடைக்கின்ற மதிப்பு, மரியாதை, புகழ் போன்றவற்றால் படைப்பாளரை நினைக்க மறுக்கும் சூழலில் இளமையில் படைப்பாளரை நினைக்க என்னச் செய்யவேண்டும் என்பதை இவண் அறிந்துகொள்வோம்.

**1. இறை உறவில் நிலைக்க வேண்டும் :** (மத். 19 : 16-24)

இளமையில் இறை உறவு தேவை. இறைவனோடு உறவு சீராக இருக்க வாழும் மனிதரிடம் உள்ள உறவை சீராக வைத்திருத்தல் அவசியம்.

மத்தேயு 19 : 16-24-இல் நிலைவாழ்வை பெற்றுக்கொள்ள நான் என்ன நன்மை செய்யவேண்டும்? என்று செல்வரான இளைஞர் ஒருவர் இயேசு கிறிஸ்துவிடம் கேட்டார். இயேசு கிறிஸ்து கொலை மற்றும் களவு செய்யாதே, பொய்சாட்சி சொல்லாதே அனைவருடன் அன்புறவுடன் பழகு, தாய் தந்தையை மதித்து நட என்றுக் கூற அதற்கு மறுமொழியாக செல்வரான இளைஞர் இவை அனைத்தையும் நான் கடைபிடித்து வருகிறேன் என்றார். இயேசு கிறிஸ்து அவரிடம் நிறைவுடையவராக மாற நீர் விரும்பினால் உமக்கு உள்ளவைகளை விற்று ஏழைகளுக்கு கொடும் என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் அந்த இளைஞர் வருத்தத்துடன் திரும்பிச் சென்றார். அதாவது தான் பாதிக்கப்படுகின்ற அளவிற்கு கொடுக்க மனமற்றவராகக் காணப்பட்டார். ஆனால் இயேசு கிறிஸ்துவை காண விரும்பிய சகேயு என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்துவிடுகின்றேன். எவர் மீதாவது பொய் குற்றஞ்சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான்கு மடங்காக அதை திருப்பிக் கொடுத்து விடுகின்றேன் (லூக். 19 : 8) என்று தான் பாதிக்கப்படுமளவிற்கு கொடுத்து மனித உறவை சீர்ச்செய்து இறை உறவில் நிலைக்க முயற்சிக்கிறார்.

தூய பவுல் திமொத்தேயுவுக்கு எழுதும்போது "உலகப் போக்கிலான புனைக் கதைகளையும், பாட்டிக் கதைகளையும் விட்டு விலகி இறைப்பற்றில் வளர பயிற்சி செய்" என்றார் (1 திமொ. 4 : 7). இறைப்பற்றில் வளர தியானம் (இறைவேண்டல்), திருமறைத் தேட்டம் (திருமறை படித்தல்), தியாகம் போன்றவை தேவை. அதாவது தியானம் (இறைவேண்டல்) இறைவனோடு உரையாடச் செய்கிறது. திருமறைத் தேட்டம் இறை வார்த்தை மூலம் உரையாடச் செய்கிறது. தியாகம் இறைவார்த்தையில் செயல்படத் தூண்டுகின்றது. பாபிலோனிய அடிமைத்தனத்துடன் வேதனையுடனும் உடன் இருந்தோரின் நெருக்குதலுடனும் நொறுங்கிய நிலையில் இருந்த தானியேல் என்ற இளைஞர் துன்பம் வந்த பிறகும் இறைவேண்டல் செய்து இறைபற்றில் வளர்ந்து இறை உறவில் நிலைத்தார். விளைவு சிங்க குகையில் போடப்பட்டார். ஆனால் இறைவன் சிங்கங்களின் வாயை அடைத்து பாதுகாத்தார் (தானி. 6). ஆக இறைப்பற்றுடன் கூடிய இறை உறவு நம்மை பாதுகாக்கிறது. எனவே நாம் நம்மை ஆய்ந்து பார்த்து இறை உறவில் நிலைத்து இளமையில் படைப்பாளரை நினைத்து இறை ஆசி பெறுவோம்.

## 2. இறை அச்சத்துடன் வாழ வேண்டும்: (1 திமொ. 4 : 12)

படைப்பாளரை நினைக்க இறை அச்சம் தேவை. இறை உறவு



சிதையக்கூடாது. இறை அன்பில் தொடர வேண்டும் என்ற ஆவலில் உதயமாவதே இறை அச்சம். எனவே இறை உறவில் சிதையாமல் அன்புறவில் தொடர பவுலடிகளார் திருத்தொண்டனாகிய திமொத்தேயுவிற்கு எழுதும்போது நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும். அதற்காக பேச்சு, நடத்தை, அன்பு, தூய்மை, நம்பிக்கை ஆகிய இறை அச்ச பண்புகள் உன்னில் மாதிரியாகட்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

இறை அச்சத்துடன் வாழ தூய வாழ்வே அடிப்படை. இதற்கு மாதிரியாக யோசேப்பை கூறலாம். தன் சகோதரர்களால் விற்கப்பட்ட இளைஞரான யோசேப்பு போத்திபாரின் இல்லத்தில் அடிமைப்பணிச் செய்தார். அப்போது போத்திபாரின் மனைவி வழியாகத் தவறுச் செய்ய தூண்டப்பட்டார். ஆனால் இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்யலாமா? என்று கேட்டு இறை அச்சத்துடன் மறுப்பு தெரிவித்தார். அத்துடன் தவிர்க்க இயலாதச் சூழலில் ஓடி தப்பிவிட்டார். இதனால் சிறைச்சாலை செல்ல வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது (தொ.நூ. 39). ஆனால் எகிப்தில் உயர்ந்த பதவியைப் பெற்றுக்கொள்ள யோசேப்பின் இறை அச்சம் அவருக்கு உதவியது (தொ.நூ. 41 : 41-45). இறை அச்சம் படைப்பாளரை நினைக்கத் தூண்டி அதன்மூலம் உயர்வைத் தருகிறது. எனவே நாம் இறை அச்சத்துடன் வாழ்ந்து படைப்பாளரை நினைத்து இறை ஆசிபெறுவோம்.

## 3. இறை அழைப்பிற்கு கீழ்ப்படிய வேண்டும் : (ஏசா 6 : 8)

"யாரை நான் அனுப்புவேன் . . . இதோ நானிருக்கிறேன்."

இறை அழைப்பு அனைவருக்கும் பொதுவானது. இறை அழைப்பின் சத்தத்திற்கு கீழ்ப்படிவது படைப்பாளரை நினைக்கச் செய்கிறது. ஏசாயா இறைவாக்கினர் யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்? என வினவும் ஆண்டவரின் சத்தம் கேட்டார். அதற்கு மறுமொழியாக அடியேனை அனுப்பும் என்றார் (ஏசா. 6 : 8). இளமையில் இறைவனின் அழைப்பிற்கு செவி கொடுத்ததால் நல்ல இறைவாக்கினராக மாறினார் இறைவாக்கினர் ஏசாயா.

மாற்கு 1 : 16-20-இல் இயேசு கிறிஸ்து கலிலேயாக் கடல் ஓரமாக சென்றபோது இளைஞர் சீமோன், அவர் சகோதர் அந்திரேயா, செபதேயுவின் மக்களாகிய யாக்கோபு, யோவான் ஆகியோரைப் பார்த்து "என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்றுக்

கூறி இறைப்பணிக்கென அழைப்புக் கொடுத்தார். உடனே அவர்கள் கீழ்ப்படிந்து வலைகளை விட்டு பின் தொடர்ந்தார்கள். வல்ல செயல்கள் பலச் செய்து பலரை இறை மக்களாக்கினார்கள்.

சவுல் இறை அடியார்களை துன்புறுத்திக் கொண்டிருந்தவர். இறை அடியார்களை கைது செய்து எருசலேம் கொண்டு வர தமஸ்குவிற்கு புறப்பட்டார் சவுல் (தி.ப. 9 : 2). இப்படிச் சென்ற சவுல் தமஸ்கு நெருங்கும்போது திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஒளியின் வாயிலாக இறைவனால் சந்திக்கப்படுகின்றார். "சவுலே சவுலே ஏன் என்னை துன்புறுத்துகிறாய்?" என்றுக் கேட்ட இறை அழைப்பை சவுல் பெற்றுக்கொண்டார். அந்த அழைப்பிற்கு கீழ்ப்படிந்து தன்னை இறைப்பணிக்கென அர்ப்பணித்தார். ஆற்றலுடன் இறைப்பணிச் செய்தார்.

அன்பிற்குரியவர்களே! இளைஞர்கள் இறைவனால் நேசிக்கப்படுகின்றவர்கள். இறைப்பணி செய்ய இறைவனால் விரும்பப்படுகின்றவர்கள். அதனால் இறைவன் அழைக்கும்போது இறைப்பணிச் செய்ய, இறைவிருப்பம் நிறைவேற்ற நம்மை அர்ப்பணித்து இறை அழைப்பிற்கு கீழ்ப்படிந்து இறை ஆசி பெற்றுக்கொள்வோம். இளமைப் பருவம் படைப்பாளரை நினைக்க இறைவன் தந்த பரிசு. எனவே இறை உறவில் நிலைத்து, இறை அச்சத்துடன் வாழ்ந்து, இறை அழைப்பிற்கு கீழ்ப்படிய முற்படுவோம். படைப்பாளரை நினைத்து இறை ஆசியைப் பெறுவோம்.

**மன்றாட்டு :** *வல்லமையுள்ள கடவுளே, எங்கள் இளையோர் கணிக்க முடியாத குழப்பும் உலகில் வளர்ந்து வருவதைப் பார்க்கின்றோம். உம்முடைய வழிகளை அவர்களுக்குக் காண்பித்து, உலக வழிகளுக்கு மேலாக உமது வாழ்வை அருளுவீராக. சுயநல நோக்குடன் வாழ்வதைவிட உம்மைப் பின்பற்றுவதே சிறந்தது. அவர்கள் தங்கள் பற்றுறுதியை உம்மில் வைக்கவும் உம்முடைய படைப்புகளில் தங்கள் மகிழ்வை வைக்கவும் தேவரீர் அவர்களுக்கு ஆற்றல் தருவீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

**திரு. R. டேவிட் ஜெபசிங்**



**28-10-2012**

# பற்றுறுதியைப் புதுப்பித்தலும் தூண்டியெழுப்பதலும்

**"Renewing and Rekindling the Faith"**

| | |
|---|---|
| தொ.நூ 16 : 12–25 | 2 திமொ. 3 : 10–17 |
| தி.பா. 119 : 9–16 | மத். 23 : 1–12 |

"நீ குழந்தைப் பருவம் முதல் திருமறை நூலைக் கற்று அறிந்திருக்கிறாய். அது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையால் உன்னை மீட்புக்கு வழி நடத்தும் ஞானத்தை அளிக்க வல்லது" (2 திமொ. 3 : 15)

## முன்னுரை

மேலைநாட்டு, அருட்தொண்டர் ஒருவர் நமது திருச்சபை ஒன்றில் சிறந்ததொரு அருளுரையாற்றினார். நிறைவில் திருச்சபையினரோடு, தான் ஆற்றிய அருளுரை அடிப்படையில் அவர்கள் விசுவாசம் (பற்றுறுதி) எப்படியிருக்கிறது என்று கேட்டுக்கொண்டே வந்தார். ஒவ்வொருவரும் ஒரு பதிலைச் சொல்ல, ஒருவர் திடீரென விழித்தவராய் "விசுவாசம் பன்றி மேய்க்கப் போயிருக்கு" என்று சொன்னார். இதைக்கேட்டு முதலில் அதிர்ந்த அருட்தொண்டர் பதிலுரைத்தவரின் மகன் பெயர் விசுவாசம் என்பதும், அருளுரைமுழுக்க அந்நபரின் சிந்தனை இங்கே இல்லை என்பதையும் பின்னர் அறிந்துகொண்டார். இந்நாட்களிலும், பற்றுறுதி என்பதைப்பற்றிய தவறான புரிந்து கொள்ளுதலும், பொறுப்பற்ற வாழ்வும் நம்மிலே இருப்பதைக் காண்கிறாம். சீர்திருத்தல் நாளை நினைவுகூரும் நமக்கு இந்நாள் பற்றுறுதி வாழ்வில் ஒரு புதிய தூண்டுதலைத் தருவதைக் காணலாம்

## 1. பற்றுறுதியைப் புதுப்பித்தல் : சீர்திருத்தல் காலம்

திருச்சபை வரலாற்றில் ஓர் இருண்ட காலம், இறைவார்த்தை மறக்கப்பட்ட நாட்கள். திருச்சபையில் மாய்மால பற்றுறுதி, மூட நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முன்னிறுத்தப்பட்டிருந்தன. பற்றுறுதியின் வழியில் கிறிஸ்தவ சமயம் ஒரு கர்ம மார்க்கமாக மாறியிருந்தது. கிருபையால் வரும் மீட்புக்குப்பதில், மனிதன் தன் சொந்த முயற்சியால் தேடிக் கொள்ளும் நிலையில் மீட்பு காட்டப்பட்டிருந்தது. இறை வசனம் பற்றுறுதியில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தது. இச்சூழலில் கடவுள் திருச்சபையில் சீர்திருத்தம் ஏற்பட இறையடியார்கள் பலரை எழும்பச் செய்தார். குறிப்பாய் அருஸ்தீனிய மடத் துறவியாயிருந்த மார்ட்டின் லூத்தர் அவர்களையும் அவர்தம் நண்பரையும் பயன்படுத்தினார். கி.பி 1517 அக்டோபர் 31இல் ஜெர்மனியில் வித்தன்பர்க் ஆலயக் கதவில் மார்ட்டின்

லுத்தர் அவர்கள் இறை வார்த்தையை அடித்தளமாய்க் கொண்ட 95 - நியாயங்களை (95 Theses) அறைந்து வைத்தார். அன்று புத்துயிருட்டபட்ட சீர்திருத்த அலை இன்றும் தொடருகிறது. இது திருச்சபையை பிளவுபடுத்தும் ஒரு முயற்சி அல்ல. மாறாக சபையை சுத்திகரிக்கவும் தொடக்க கால பற்றுறுதிக்கு திருப்பும் ஒரு முயற்சியாகவே இருந்தது. அறிவர் மார்ட்டின் லுத்தருக்கு முன்னும் அரசியலில், சமூகத்தில், பொருளாதாரத்தில் சீர்த்திருத்ததைத் தூண்டிவிடும் காரணிகள் பல இருந்தன. அவை அடிப்படையில் தனிப்பட்ட மனிதனின் ஆன்மிக மற்றும் பற்றுறுதி இயக்கமாக இருந்தன. ஆனால் லுத்தரின் நாட்களில் இது மக்கள் இயக்கமாக மாறியது. இது தனிப்பட்ட மனிதனின் ஆன்மிகத் தேவைகளைச் சந்திப்பதுடன் மக்கள் இயக்கமுமாய் மாறியதே இதன் வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது. இறைவார்த்தையின் அடித்தளத்தில் மனந்திரும்புதலோடு கடவுளின் அருளில் நம்பிக்கை வைத்து பற்றுறுதியில் புதுப்பிக்கப்பட்ட, தூண்டியெழுப்பப்படும் அனுபவம் சீர்த்திருத்தல் நாட்களுக்கு மட்டுமல்லாது இன்றைய சமகாலத் தேவையின் அனுபவமாகவுமிருக்கிறது.

## 2. தவறான மற்றும் உண்மைப் பற்றுறுதி (False and Genuine Faith)

இருட்டில் இருந்து கொண்டு நம்பக்கூடாததை நம்புவது தவறான பற்றுறுதி ஆகும். கடவுளின் அருளில் களிகூர பற்றுறுதி ஒன்றே நமக்கு ஏற்புடையது. நம்முடைய பற்றுறுதி ஒரு கொள்கையில் அல்ல ஒரு மதத்தில் அல்ல ஒரு நபரில் இருக்க வேண்டும். கடவுளில் இருக்க வேண்டும். நான் யாரிடம் நம்பிக்கை கொண்டுள்ளேன் என அறிவேன் என்று சொல்வது (2திமொ.1.12) திரித்துவக் கடவுளிலேயே வைத்துள்ள நம்பிக்கை" என பவுலடியார் கூறுகிறார்.

**மத். 6 : 24-34**இல் மீட்பர் இயேசுவின் மலைப் பொழிவின் வார்த்தைகள் படைப்பாளாரான கடவுளில் வைக்கும் பற்றுறுதிக்கு நம்மை நடத்துகிறது. எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. பற்றுறுதி கடவுளிலா? செல்வத்திலா? என்றால் கடவுளிலேயே என்று நிலைத்திருப்பதே உண்மைப் பற்றுறுதி. சீர்திருத்தல் நாட்களில் கடவுளும் வேண்டும் உலகப் பொருளும் வேண்டும் என்ற நிலை இருந்தது. மார்ட்டின் லுத்தர் சொன்னார் இல்லை விசுவாசத்தால் (பற்றுறுதியால்) மட்டுமே, திருவசனத்தால் மட்டுமே அருளால் மட்டுமே, கிறிஸ்துவால் மட்டுமே, மீட்பு என்றார். இதுவே புதுப்பிக்கப்பட்ட பற்றுறுதியின் அடிப்படை; அதாவது மூவொரு கடவுளில் மட்டுமே வைக்கும் நம்பிக்கை.

இன்று நாம் எப்படி இருக்கிறோம்? பொய்யான தெய்வங்களை. அந்நிய தெய்வங்களை கடவுளாகக் காணும் ஓர் மாயையில் இருக்கிறோம். இன்றைய உலக மயமாக்கல் சூழலில் Media, Market, Mammon இம்மூன்றும் திரித்துவக் கடவுளாக நம்மால் பார்க்கப்படும் சூழல்



இருக்கிறது. லாபம் உண்டென்றால் கடவுள் வேண்டும் லாபம் தராத கடவுள் தங்கள் கடவுள் இல்லை. இது முற்றிலும் தவறு. நம்மைப் படைத்த கடவுள் நிச்சயம் நம்மை வழி நடத்துவார் என்று எல்லாக் காலத்திலும் எல்லாச் சூழலிலும் அவரில் முழு நம்பிக்கை வைப்பதற்கு புதுப்பிக்கப்பட்ட பற்றுறுதி வேண்டும். அது கடவுளின் வசனத்தால் மட்டுமே வருகிறது (2 திமொ. 3 : 15-17).

**தொ.நூ. 16 : 12-15இல்** ஆபிராமிடமிருந்தும் தன் தலைவியான சாராவிடமிருந்தும் நெருக்கத்தினிமித்தம் கொடுமையினிமித்தம் தப்பியோடிப் போகும் அடிமைப் பெண் ஆகாரைக் கடவுள் காண்கிறார். வாழ்வுக்காய் ஏங்கும் அந்நபர் தன்னைப் பாலை நிலத்தில் காண்பவருக்கு காண்கின்ற இறைவன் நீரே என்று பெயரிட்டு அழைப்பதைக் காண்கிறோம். பாலை நிலம் போன்ற கைவிடப்பட்ட வெறுமையான வாழ்விலும், துன்பத்திலும், பிரச்சினையிலும், கடவுளைக் காண்பதே, அதாவது எல்லாம் அனுகூலமாயிருக்கும்போது அல்ல, எல்லாம் கைவிடப்பட்டதாக உணரும்போது கடவுளில் நம்பிக்கை கொள்வதும் புதுப்பிக்கப்பட்ட பற்றுறுதியின் அடிப்படை (பிலி. 4 : 6,7). இத்தகைய பற்றுறுதி திருவசனம் வழியாக வருகிறது (ரோமர் 10 : 14-17).

* உண்மைப் பற்றுறுதி கடவுளில் மாத்திரமே நம்பிக்கை வைக்கும்
* உண்மைப் பற்றுறுதி - கிறிஸ்து வழி வரும் மீட்பில் அக்களிக்கும்
* உண்மைப் பற்றுறுதி - கடவுளின் தூய்மையில் நம்மை வளரச் செய்யும் (1 தெச. 4 : 6-16).

## 3. பற்றுறுதியை மெய்ப்பித்தல்

புதுப்பிக்கப்பட்ட பற்றுறுதி வாழ்வு, நிச்சயம் செயல்பாடு சார்ந்த வாழ்வுக்கு நம்மை நடத்தும். செயல்களில் வெளிப்படாத வாழ்வு பற்றுறுதி வாழ்வு அல்ல. பற்றுறுதி மெய்ப்பித்தலின் அடிப்படை கடவுள் நம்மை பரிசுத்த வாழ்வுக்கென்றே அழைத்திருக்கிறார் என்பதிலிருந்து துவங்குகிறது. 16ஆம் நூற்றாண்டின் சீர்திருத்தம் ஏற்பட முதல் காரணங்களில் ஒன்று ஆசாரிய வகுப்பினரும், இறை மக்களும் துன்மார்க்கத்தில் வாழ்ந்த வாழ்வு ஆகும். தூய பவுல் தெசலோனிக்கே சபைக்கு "கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார்" ( 1 தெச. 4 : 7 லேவி. 11 : 44, 45, 19 : 2, எபேசி. 1 : 3, 1 பேது. 1 : 15, உபா. 7 : 6,11) என்றுச் சொல்லுகிறார். இந்த அழைப்பு சிலாக்கியத்துக்குரியதும், அதேநேரம் இறைத் திருவுளத்திற்கு கீழ்ப்படியும் பொறுப்பும் நிறைந்தது ஆகும். மேலும் 1 தெச. 5 : 23, 24இல் கடவுள் தான் நம்மை தூய்மையாக்குகிறார் என்கிறார். எனவே நம்முடைய பற்றுறுதியின் வாழ்வு செயல்களில் வெளிப்படும் அளவில் தூய்மையாக்கப்பட இறையருளில் முற்றிலும் நம்பிக்கை வைத்து நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுக்க வேண்டியது மிக அவசியமாகிறது. இப்படி திருச்சபையின்

பற்றுறுதி வாழ்வு நாளுக்கு நாள் வளருவதே பற்றுறுதியில் மெய்ப்பித்தல் வாழ்வாகும்.

எனவே சீர்திருத்தம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் உரியதாயிராமல் எப்பொழுதும் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒன்றாகும். மட்டுமல்ல பற்றுறுதி தூண்டியெழுப்பப்படுவது பற்றுறுதி புதுப்பிக்கப்படும் நிச்சயத்திலும் வாழ்வு புதுப்பிக்கப்படும் உறுதிப்பாட்டிலும் அடங்கியிருக்கிறது. 1994இல் கொரியாவில் நடந்த ஆசிய ஊழிய மாநாடு 'திருச்சபையை' இப்படி வரையறை செய்தது. திருச்சபை என்பது "மக்களின் திருச்சபையாகத் திகழ்ந்து நற்செய்தியின் பொறுப்பாளராக இருந்து, மக்களின் போராட்டங்களில் பங்கு பெற்று, ஆராதிக்கின்ற, பகிர்ந்து கொள்கின்ற, நற்பணி செய்கின்ற மக்கள் குழுவாக இருக்க வேண்டும்." சாக்ரமந்துக்களை முறையாய்க் கையாண்டு கூட்டுறவில் வாழும் தூயவர்களின் கூட்டமான திருச்சபை மேற்சொன்னபடி, செயல்படும் திருச்சபையாய் வாழ, வளர பற்றுறுதி புதுப்பிக்கப்பட்ட, தூண்டியெழுப்பப்பட்ட வாழ்வு அவசியம்.

**முடிவுரை**

நான்காம் நூற்றாண்டு திருச்சபைத் தந்தையர்களில் ஒருவரான புனித அகஸ்டின் "ஆண்டவரே திருச்சபை புதுப்பிக்கப்படுவதாக, புதுப்பித்தல் என்னில் ஆரம்பிக்கட்டும்" எனக் கூறினார். இடர்வரினும், கடவுளின் பிள்ளைகளாய் இறை வார்த்தையில் நம்பிக்கை கொண்டு புதுப்பிக்கப்பட்ட பற்றுறுதி வாழ்வுக்கு நம்மை அர்ப்பணிப்போம். அதற்கு தூயாவியார் துணைபுரிவார். ஆமென்.

**மன்றாட்டு** : *அரசாளும் கடவுளே! அனைத்து உள்ளங்களையும் ஆள்பவரே உமக்குக் கீழ்ப்படிய எங்களை அழைத்து உண்மையான விடுதலையை எங்களுக்கு அருளுகிறீர். உம்முடைய மைந்தரின் வழிகளுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க எங்களில், பற்றுறுதியை புதுப்பித்து தூண்டியெழுப்புவீராக. நாங்கள் எங்களுக்கு இடறலுண்டாக்கும் எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு அவரில் எங்கள் பார்வையை பதிக்கவும் சிலுவைப்பாதையில் திடமாய் ஓடவும் அருள் செய்வீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து ஆளுகை புரியும் ஓட்டத்தை வெற்றியுடன் முடித்திருக்கிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

**அருள்திரு. P.D. அலக்சாண்டர்**

01-11-2012 அருணோதயத் தொழுகை

## நிறைவு அருளும் ஆண்டவர்

யோவா. 2 : 1 – 11

"இதுவே இயேசு செய்த முதல் அடையாளம். இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது இதன் வழியாக அவர் தம் மாட்சியை வெளிப்படுத்தினார்" (யோவா. 2 : 11).

யூத மக்களிடையே திருமண விழா ஏழு நாட்கள் நடைபெறும். அதில் மகிழ்ச்சியின் அடையாளமாக ஆடலும், பாடலும் விருந்தும் காணப்படும். சிறப்பாக இந்த விழாக்களில் உறவினர்களும், நண்பர்களும் கூடிவந்து ஒரு சமூக விழாவாக கொண்டாடும் பழக்கம் பல நூற்றாண்டுகளாகக் காணப்படுகிறது. இந்த விழாவில் அனைத்தும் நிறைவாக இருக்கவேண்டும் என்பது யூதர்களின் எதிர்பார்ப்பு. ஆனால் இந்த விழாவில் யூதபாரம்பரியத்தில் விருந்துகளில் தாராளமாகப் பரிமாறப்படுவதும் மிகமுக்கியமாகக் கருதப்படுவதுமான திராட்சைரசம் குறைவுபட்டது. இயேசுகிறிஸ்துவின் வழிகாட்டுதலின்பேரில் அந்த விழாவில் வந்த குறை நிறைவானதாக மாற்றியது. இந்த நிறைவுக்கு காரணம் என்ன என்பதைப் பற்றி இவண் சிந்திப்போம்.

### 1. முழுமையான கீழ்படிதல்

"அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோ. 2 : 5)

இவ்வசனம் இயேசுவின் தாய் வேலைக்காரருக்கு கொடுத்த அறிவுரையாகும். இந்த அறிவுரையின்படி, திராட்சைரசம் வேண்டி வந்த வேலைக்காரர் இயேசுவின் சொற்படி கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பினர். அவரது வார்த்தையின்படி அவர்கள் நிரப்பின தண்ணீரை திரும்ப மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடம் கொண்டு சென்றனர். இதில் வேலைக்காரனிடம் காணப்பட்ட முழுமையான கீழ்ப்படிதல் தெளிவாகத் தெரிகிறது. கடவுளின் வார்த்தைக்கு நாம் முழுமையாய்க் கீழ்ப்படிய முன்வரும்போது அங்கு நிறைவான அனுபவங்களை காணமுடியும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி மரியாளிடம் தேவதூதன் கூறியபோது மரியாளுக்கு பயம், தயக்கம், இது எப்படியாகும்? என்ற கேள்வி எனப் பல நிலைகளுக்குள் கடந்துச் சென்றாள். ஆனால் தூதனிடம் அவள் கூறிய கடைசி வார்த்தைகள் "நான் ஆண்டவருக்கு அடிமை" என்பதாகும் (லூக். 1 : 38). இங்கு அவள் தான் எல்லாவிதங்களிலும் கடவுளின் வார்த்தைக்கு அடிபணிகிறேன் என்று கூறுகின்றாள். அதன் விளைவாக "இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னை



பாக்கியவதி என்பார்கள்" என்ற சிறப்பை எண்ணி மகிழும் பாக்கியம் கிட்டியது.

### 2. முழுமையான விசுவாசம் : யோவா. 2 : 8

சாடிகளில் தண்ணீரை நிரப்பிய வேலைக்காரரிடம் அதை மொண்டு பந்தி விசாரிப்புகாரனிடம் கொடுங்கள் என்று இயேசு கூறிய போது எவ்வித தயக்கமும் இன்றி வேலைக்காரர் இயேசுவின் வார்த்தையில் விசுவாசம் வைத்தனர். அந்த நம்பிக்கை இயேசுவின் ஆற்றல் நிறைவாய் வெளிப்படக் காரணம் ஆயிற்று. திருமறையில் இயேசுவின் வல்ல செயல்கள் நடைபெறும் எல்லா இடங்களிலும் மனிதர்களின் விசுவாசம் முக்கிய இடம் பெறுகிறது (மாற். 2 : 5; 5 : 34, 36). ஆனால் எங்கே விசுவாசம் இல்லையோ அங்கே இயேசுவால் ஒரு அற்புதமும் செய்ய இயலவில்லை (மாற். 6 : 5, 6). காரணம் நமது விசுவாசமே இறைவனின் ஆற்றல் செயல்பட அடிப்படைக் காரணம் ஆகும் (மாற். 11 : 23).

அன்புடையீர் இறைவனில் ஆற்றல் நம்மில் விளங்கவேண்டும் எனில் நாம் அவரது வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்படிந்து அவரிடம் முழுமையான விசுவாசம் வைக்கவேண்டும்.

**அருள்திரு. விக்டர் ஞானராஜ்**

02-11-2012

## அனைத்து ஆன்மாக்கள் தினம்

எசா. 25 : 6–9 எபி. 12 : 1–2
தி.பா. 118 : 14–15, 17–21 யோவா. 11 : 21–27

**மன்றாட்டு :** *நிலை வாழ்வின் கடவுளே, மேகங்களைப்போல எங்களை சூழ்ந்து கொண்டிருக்கும் காணமுடியாத சாட்சிகளை இந்நாளில் நினைவுகூர அருள்தாரும். வாழ்விலும் மரணத்திலும் அவர்களின் சாட்சிக்காக உமக்கு நன்றி சொல்கிறோம். காணமுடியாதவர்களின் வாழ்வின் இருப்பு நிலையில் வாழும் நாங்கள் அதற்கு நாங்கள் தகுதியுடையவர்களாய் வாழ துணைபுரியும். நாங்கள் இவ்வுலக வாழ்வில் எங்களுக்கு முன் சென்றவர்களையும் உம்மில் மறைத்து வைக்கப்பட்டுள்ள வாழ்வை மறவாமலும் அதனூடாக வரவிருக்கின்ற வாழ்வின் ஆசீர்வாதத்தை நாங்களும் பகிர்ந்துகொள்வதற்கு உம் அருளைத் தரவேண்டுமென, உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளும் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமேன்.*

**04-11-2012**

*அகில உலகத் திருமறைப்பள்ளி தினவிழா*

## "கிறிஸ்தவக் கல்வி ஞானத்திலும், கற்பனையிலும் வளருதல்"

**CHRISTIAN EDUCATION : GROWING IN WISDOM AND STATURE**

| | |
|---|---|
| இ.ச. 6 : 1–9 | உரோ. 12 : 1–4 |
| தி.பா. 40 : 1–8 | லூக். 2 : 42–52 |

"இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக். 2 : 52).

**முகவுரை**

யூதர்களின் முக்கியமான பண்டிகைகள் மூன்று அவை (a) பஸ்கா பண்டிகை, (b) அறுவடை (அல்லது) பெந்தேகோஸ்து பண்டிகை (c) கூடார பண்டிகை என்பன. யூதர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது பண்டிகை காலங்களில் எருசலேம் தேவாலயத்திற்குச் சென்று தொழுகையில் கலந்து கொள்ளவேண்டும். அப்போதைய எருசலேமின் மக்கள் தொகை ஏறக்குறை 25000. ஆனால் 60000 முதல் 1 லட்சம் வரையிலும் பக்தர்கள் எருசலேமில் கூடுவார்கள். ஒரு யூதச் சிறுவன் தன்னுடைய 13-வது வயதில் அதிகாரப்பூர்வமாக இளைஞன் என்ற அந்தஸ்தைப் பெற பண்டிகை நாட்களில் எருசலேமுக்கு வர வேண்டும். இயேசுவின் பெற்றோர், ஒரு வருடத்திற்கு முன்னதாகவே இயேசுவின் 12ஆவது வயதில் எருசலேமிற்கு அழைத்துச் செல்கின்றனர். பெண்கள் கலந்துக்கொள்ள வேண்டும், என்பது கட்டாயமல்ல. ஆனால் மரியாளும் ஆர்வமாக கலந்து கொள்கின்றார்.

அ. புஷ்பராஜன் என்பவர் கூறும்போது, "தம் பிள்ளைகளுக்கு சொத்து சேர்ப்பதில் கவனம் செலுத்தும் பெற்றோர், தாம் பெற்றுள்ள இறை நம்பிக்கையை, இறை அனுபவத்தை தம் பிள்ளைகளுக்கு கொடுத்து அவர்களை ஞானத்திலும், கற்பனையிலும் வளரச் செய்ய வேண்டும் என்பது பிள்ளைகளுக்கான பெற்றோரின் கடமைகள்" எனக் கூறுகிறார். இதற்குகாரணம் அவர்கள் நமது குடும்பத்தின் தளிர், திருச்சபையின் தீபங்கள், விண்ணரசின் வீரர்கள்.

### 1. சிறுவர்கள் : குடும்பத்தின் தளிர்கள் (தி.பா. 128:3)

குடும்பம் என்பது ஒரு பெரிய மரம். அந்த மரத்தில் வரக்கூடிய தளிர்களே குழந்தைகள். இந்தத் தளிரை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டியது பெற்றோரின் கடமை. ஒரு மரமானது எப்படி உரம் போட்டு, தண்ணீர் பாய்ச்சு, எருபோட்டு, களைப்பிடிங்கி பாதுகாக்கப்படுகின்றதே அப்படியே பாதுகாக்கப்பட்டால் மட்டுமே நல்ல பூக்கள், காய்கள், கனிகள் கொடுக்கும். ஒவ்வொரு வளர்ச்சிக்கு ஏற்றப்ப இந்த தளிர்கள் பக்குவமாகப் பரமரிக்கப்பட வேண்டும். அதற்கு கேடு வந்தால் விளைச்சலைப் பெற முடியாது என்பதுபோல நம்குடும்பத்தில் குழந்தைகள் பக்குவமாகப் பாதுகாக்கப்ட்டால் பண்பட்டு பலன் தருபவர்களாக விழங்குவர்.

"நாற்றில் பிழைத்தால் சேற்றில் போச்சி"

"ஐந்தில் விளையாதது ஐம்பதில் வளையாது" என்பவை பழமொழிகளாகும்.

இளந்தளிரானது சரியான முறையில் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படாமல் இருந்தால் கேடு அதனுள் உட்புகுந்து கொஞ்சம் கொஞ்சமாக மரத்தை அரித்து அதை பட்டுபோக பண்ணும். இன்று குழந்தைகளையும், இளைஞர்களையும் அழிக்கின்ற வைரஸ் எவைகளென்றால் செல்போன், தொலைகாட்சி பொட்டி, இன்டர்நெட் போன்றவைகள் என்பது ஒத்துக்கொள்ள வேண்டியவைகளே.

ஒரு ஆலயத்தின் முன் பகுதியில் இப்படியாக எழுதப்பட்டிருந்தது.

(i) செல்போன் கொண்டுவராமல் இருப்பது நல்லது.

(ii) செல்போன் கொண்டு வந்து அதை பயன்படுத்தாமல் இருப்பது சிறந்தது.

(iii) செல்போன் கொண்டு வந்து அதை பயன்படுத்துவது அபத்தமானது. ஆலயத்தில் வந்து, கடவுளோடு தொடர்பு கொண்டு, அவர் பேசுகிறதைக் கேட்கிறோமா? அவர் சொற்படி நடக்கிறோமா? அல்லது குடும்பத்தில் அரிக்கப்படும் தளிர்போல் நம்மையே அழித்து கொண்டிருக்கிறோமா? (தி.பா. 1:1-3).

அன்னை தெரசாவுக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். ஒருநாள் அம்மா மூன்று பேருக்கும் புதிய ஆடை வாங்கி கொடுத்தார். அனைவருக்கும் அளவுகடந்த மகிழ்ச்சியாக இருந்தது. அந்த வேளை ஒரு சிறிய குழந்தை அங்கு வந்து பழைய ஆடைகள் தருவீர்களா? என்று கேட்டது. உடனே அன்னை தெரசா அக்குழந்தைக்கு புதிய ஆடையை கொடுத்துவிட்டார். இதைக்கண்ட மற்ற சகோதரிகள் தாயிடத்தில் இச்செயலைப் போய்ப் புகாராகத் தெரிவித்தனர். ஆனால் தாயோ, அதை கடிந்துக் கொள்ளாமல் அந்த செயலை செய்தது நல்லது எனக்கூறி பாராட்டினார். அச்செயல்தான் பின் நாட்களில் தெரசாவை புனிதராக மாற்றியது.

### 2. சிறுவர்கள் : திருச்சபையின் தீபங்கள் (லூக். 44:46)

ஒருமுறை யோசேப்பு மற்றும் மரியாளின் குடும்பத்தை சோகம்

ஆட்கொண்டது. யோசேப்பும் மரியாளும் இயேசுவை காணாமல் துயரத்தில் மூழ்கினர். ஆனால் காணாமல் போன இயேசுவை 3-ஆம் நாள் மீண்டும் எருசலேம் தேவாலயத்தில் கண்டு அளவற்ற ஆனந்தம் அடைந்தனர். அவர் தேவாலயத்தில் முதியோரோடு தீபமாக சுடர்விட்டு கொண்டிருந்தார் (லூக். 2:41-46). நமது வீட்டில் எல்லா நவீன வசதிகளும் இருந்தும் நாம் நிம்மதியாக இல்லை. காரணம் நாம் கடவுளையே தொலைத்து விட்டோம்.

ஒருவர் தமது வீட்டின் சாவியை தொலைத்துவிட்ட காரணத்தால் அதை ஒரு மின்சார விளக்கு கம்பத்தின் அடியில் தேடினாராம். ஏனெனில் அங்குதான் வெளிச்சம் இருந்ததாம். சாவியைத் தொலைத்தது ஓரிடம், அதைத் தேடுவது வேறு இடம். நாமும் இந்த உலகின் கவர்ச்சியில் கடவுளை தேடுகிறோம். அதில் நாம் கடவுளை காண முடியாது.

யோசேப்பும் மரியாளும் இயேசுவை பல இடங்களில் தேடி அவரை காண முடியவில்லை. இறுதியில் அவர் திருச்சபையில் தீபமாக சுடர்விட்டுக் கொண்டிருந்ததை பார்த்து அகமகிழ்ந்தனர் (லூக். 2:44-46).

இறை வார்த்தையை இயேசுவிடம் கேட்க வந்த மக்கள் பசியோடு இருந்த வேளையில் 5-அப்பங்கள் 2 மீன்களோடு இருந்த சிறுவன் அவர்களுக்கு இருளிலே தீபமாக சுடர்விடுகின்றான் (யோவா. 6:9). இயேசுநாதர் ஒரு நல்லமகனாக, 12-வது வயதிலே இலட்சியம் உடையவராக இருந்ததாக நற்செய்திபடம் பிடித்துகாட்டுகிறது. ஒரு தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டுமென்று உங்களுக்கு தெரியதா? திருச்சபைக்கு தீபமாக சுடர்விடக்கூடிய இலட்சியம் அவரிடம் இருந்தது.

பிள்ளை வளர்ப்பு என்பது கட்டிடம் கட்டுவது போன்றது. தொடக்கத்தில் சாய்வாக இருந்தால் தெரியாது. ஆனால் உயரம் போகப் போகத்தான் அது சரியாக கட்டப்படவில்லை என்பது தெரியும். பின் அதை சரி செய்வது கடினம். ஆகவே சிறுபிள்ளைகளாக இருக்கும் போதே கடவுளுக்கு பயமுள்ளவர்களாக கீழ்படிதல் உள்ளவர்களாக, சுடர்விட திருச்சைபயில் அவர்களை வளர்ப்போம். ஆண்டவரின் நாள் என்று அழைக்கப்படும் ஞாயிற்றுகிழமைகளில் குடும்பமாக ஆலயத்திற்கு செல்வோம். பிள்ளைகளோடு இணைந்து இறைவார்த்தையே கேட்டு, திருவிருந்தில் பங்கு கொண்டு, கடவுளின் அருளையும், மன்னிப்பையும் பெற்று மகிழ்வோம்.

### 3. சிறுவர்கள் : விண்ணரசின் வீரர்கள் (மாற். 10:15)

இறையாட்சியை சிறு பிள்ளையைப் போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மாற். 10:15). விடுமுறை வேதாகமப் பள்ளி பிள்ளைகளிடம் ஒருமுறை மோட்சத்திற்கு போக வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என ஆசிரியர் கேட்டார். அதற்கு பிள்ளைகள், பொய் சொல்ல



கூடாது திருடக்கூடாது. அப்பா அம்மா பேச்சை கேட்க வேண்டும் தவறாமல் ஆலயம் செல்ல வேண்டும் என்று அழுத்தி கொண்டே போனார்கள். உண்மைதான் நாம் விண்ணரசுக்கு செல்ல வேண்டும், என்றால் அக்குழந்தைகள் சென்னதைச் செய்ய வேண்டும். ஆனால் அதைவிட முக்கியமாக இறையாட்சியை சிறு குழந்தையைப் போல ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்பட மாட்டார்கள் என இயேசுநாதர் சிறுவர்களை எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார். விண்ணரசின் வீரர்களான பிள்ளைகளிடமிருந்து நாம் கற்பவைகள்.

(i) கள்ளம் கபடமற்ற தூய்மையான உள்ளம்.

(ii) தாழ்மையான பண்பு

(iii) திறந்த மனதுடன் வாழ்க்கையை அணுகுதல்

(iv) பிறரை மன்னித்து வாழ்தல்

(v) நம்பிக்கையோடு வாழ்தல் போன்ற நற்குணங்களாகும். இவைகளை கற்று நம் வாழ்வில் அவைகளை செயல்படுத்த வேண்டும்.

கல்கத்தா நகரத்தின் ஒருபகுதியில் கூடியிருந்த சில சிறுவர் சிறுமிகள் கீழ்காணும் பாடலை பாடிக் கொண்டிருந்தார்களாம். “மற்ற குடும்பத்துடன் பிள்ளைகளுக்கு நல்ல வீடுகளும் அழகிய தோட்டங்களும் இருக்க குப்பை மேடுகளே எங்கள் தோட்டமாகவும் அழுக்கு படிந்த தெருக்களே எங்கள் வீடாகவும் இருக்கிறதே ஏன்? இப்பாடலில் குழந்தைகளை இயேசு நேசிக்கிறார் என்ற கருத்துக் கொண்ட பாடல் பாடும். அக்குழந்தைகளில் நாங்களும் அடங்குவோமா?”. அறுவடையோ மிகுதி, வேலையாட்களே கொஞ்சம் (மத். 9:37) என்று இயேசு அன்று கூறியது இன்றைய நிலைக்கும் பொருந்தும் நம்முடைய குழந்தைகளை குடும்பத்தின் தளிர்களை திருச்சபையின் தீபங்களாக, விண்ணரசின் வீரக்களாக வளர்ப்போம்.

**மன்றாட்டு** : *கடவுளே குழந்தைகள் இறையரசிற்குரியர்கள் என்பதை எங்கள் கடவுளும் உம்முடைய மகனுமாகிய இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொண்டார். எல்லாக் குழந்தைகளும் உம்முடைய அறிவிலும் ஞானத்திலும் வளரவும், அவர்கள் அனைத்துலகத்திற்கும் ஆசீர்வாதமாக காணப்பட அவர்களை ஆசிர்வதியும். சிறியோர்களுக்கு அனைத்து திருச்சபைகளும் கரிசனை காண்பிக்க அதிகாரத்தை கொடும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் என்றென்றைக்கும் வாழ்ந்து அரசாளும் இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.*

அருள்திரு. **C. சுதீபன்**

**11–11–2012**

***ஐக்கிய ஞாயிறு***

# அருட்பணியில் ஒன்றிணைதல்
# United in Mission

| | |
|---|---|
| மீக்கா. 6 : 1 – 8 | 2 கொரி 4 : 7 – 15 |
| தி.பா. 106 : 1–12 | லூக். 10 : 1 – 9 |

"உம்முடைய மக்களின் மகிழ்ச்சியில் நானும் பங்கு கொள்ளும்படி செய்யும்" (தி.பா. 106 : 5).

சமூக, அரசியல் தளங்களில் இன்று Mission என்ற சொல் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இச்சொல், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, குறிப்பிட்ட நிபந்தனைகளோடு; ஒரு நாட்டின் அல்லது ஒரு அரசின் சார்பாளர்கள் இன்னொரு நாட்டிற்கு அல்லது இடத்திற்கு அனுப்பப்படுவதற்கு இச்சொல்லால் குறிக்கப்படுகிறது. இலத்தீன் மொழியிலிருந்து உருவெடுக்கும் 'மிஷியோ' (Misseo) என்ற சொல் 'அனுப்புதல்' என்னும் பொருளைக் குறிக்கிறது. கிறிஸ்தவ வழக்கில், இச்சொல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. காரணம் வெறும் அனுப்புதல் எனும் செயலோடு நின்று விடாமல் அனுப்புதலில் இருக்கும் நோக்கு, செயல்முறை, ஆட்கள் போன்ற பல்வேறு உண்மைகளைச் சுட்டி நிற்கின்றது. திருவிவிலியம் அறிவிக்கும் உண்மைகளில் ஒன்று "கடவுள் அனுப்புகிறவர்", இதுவே அருட்பணிக்கு மையமாகவும் அமைகின்றது. அவர் குறிப்பிட்ட காலங்களில் இறைபணிக்கு அனுப்புகிறார். இறையாட்சியை விரிவாக்கம் செய்வதே அருட்பணியின் நோக்கம். திருச்சபை இதற்கு ஒரு அடையாளமாக அல்லது ஊடகமாக செயல்படுகிறது.

இயேசு கிறிஸ்துவும் தம் சீடர்களை அருட்பணிக்கு அனுப்பினார் (மத். 10) தந்தையானவர் தம்மை அனுப்பினது போல தாமும் தம் சீடர்களை உலகத்திற்கு அனுப்பியதாக கூறினார் (யோவா. 17 : 18; 20 : 21). இந்த சீடர்களின் விரிவாக்கமே திருச்சபை. கடவுளால், இயேசு கிறிஸ்துவின் வழியாய் சீடர்களின் தொடர்ச்சியாகத் திருச்சபை இன்று அருட்பணி இயக்கமாய் இயங்கிக் கொண்டிருக்கிறது. தூய ஆவியானவர் இவ்வியக்கத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். ஆனால் மிகைப்படுத்தப்பட்ட மனித சிந்தனைகளால் இவ்வியக்கத்தில் ஏற்பட்டிருக்கும் வேற்றுமைகளும் பிரிவினைகளும் ஏராளம். திருச்சபையின் பலவித பிரிவுகள் வேற்றுமைகளைக் களைந்து ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவே இந்த நாள் அறைகூவல் விடுக்கிறது. இதற்கு என்ன செய்ய வேண்டுமென இவண் காண்போம்.



### 1. ஒன்றிணைந்து திட்டமிடுதல் : (Unity in Planning)

திட்டமிடுதல் இல்லாத எந்த செயலும் ஒழுங்கற்ற நிலையில் சென்று விடுகிறது. அருட்பணியில் திட்டமிடுதல் மிக முக்கியத்துவம் பெறுகிறது. இயேசு கிறிஸ்து 72 சீடர்களை நியமித்து அவர்களை இரண்டு இரண்டு பேராக ஒவ்வொரு கிராமங்களுக்கும் அனுப்புகிறார். தாம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி, தாம் செல்லவிருந்த கிராமங்களுக்கே அவர்களை அனுப்புகிறார் (லூக். 10 : 1-9). இயேசு கிறிஸ்துவின் நோக்கம் அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பது, அறுவடை செய்வது (லூக். 10 : 2) இறையாட்சிக்கென்று ஆயத்தப்படுத்துவது, அனுப்பப்படுகிற சீடர்கள் எப்படி அருட்பணியை நிறைவேற்றுவது என்ற தெளிவான வழிகாட்டுதலையும் திட்டத்தையும் கொடுக்கிறார்.

அருட்பணி இயக்கமாகிய திருச்சபை, இன்று தெளிவான திட்டங்கள் இல்லாமல் இயங்குவதைக் காணமுடிகிறது. 20-ஆம் நூற்றாண்டில், இந்தியாவின் தென்மாநிலங்களில் அமைந்திருந்த திருச்சபைகள் பலப் பிரிவுகளாக பிரிந்து செயலாற்றிக் கொண்டிருந்தன. ஆனால் திருச்சபையின் ஒருமைப்பாடு திருச்சபை தலைவர்களால் வலியுறுத்தப்பட்டு அதற்கான திட்டமிடுதலில் தலைவர்கள் ஒன்றிணைந்தனர். இந்த ஒன்றிணைந்த திட்டத்தின் விளைவே 'தென் இந்தியத் திருச்சபை' என்னும் மக்கள் கூட்டமைப்பு (C.S.I.). இவ் அமைப்பு ஒருமைப்பாட்டை வலியுறுத்தியே அருட்பணியாற்றுகிறது. குறிப்பாக வடஇந்தியத் திருச்சபை (C.N.I.), தென் இந்திய திருச்சபை (C.S.I.) மற்றும் மார்த்தோமா திருச்சபை ஆகியவைகளை அருட்பணியில் ஒன்றிணைக்கும் முயற்சி இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நாம் வாழும் காலத்திற்கான அருட்பணியைத் தெளிவுடன் அறிந்திருக்கவில்லையானால் ஐக்கியம் என்பது கானல் நீராகிவிடும்.

### 2. ஒன்றிணைந்த செயல்பாடுகள் : (Unity in Practice)

இங்கிலாந்து நாட்டை ஆண்ட முதலாம் சார்லஸ் மன்னன் 1949-இல் கொல்லப்பட்டார். அவருக்குப்பின், 9 ஆண்டுகள் கிராம் வெல் நாட்டை ஆட்சி செய்தார். ஒருநாள் மன்னர் கிராம்வெல் திருச்சபைக்குள் நுழைந்தார். இயேசுவின் 12 சீடர்களின் தங்கச்சிலைகள் அங்கே வைக்கப்பட்டிருந்ததைப்

பார்த்தார். "உலகம் அனைத்திற்கும் சென்று என் நற்செய்தியை அறிக்கையிடுங்கள்" என்று கட்டளையை ஏற்றுக் கொண்ட சீடர்கள் தங்க உருவில் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த சிலைகளை இவைகளை விற்று அருட்பணி நடைபெறுகிற நாடுகளுக்கு அருட்பணி தேவைகளுக்காக அனுப்புங்கள் என்று கட்டளையிட்டார். அவருடைய இச்செயல் பல நாடுகளில் அருட்பணி வேகமாய்ப் பரவிடத் துணை நின்றது. இத்தகைய செயல்பாடுகள் இன்று அருட்பணி வளர்வதற்கு மட்டுமல்ல, "உம்முடைய மக்களின் மகிழ்ச்சியில் நானும் பங்குகொள்ளும்படிச் செய்யும்" (தி.பா. 106 : 24) என்ற திருப்பாடல் ஆசிரியரின் நோக்கம் நிறைவேறும் வகையிலும் அமைந்திருக்கிறது. திட்டமிட்ட செயல்பாடுகள் திருச்சபைகளையும் இறைமக்களையும் ஒன்றிணைத்து இறையாட்சியை நிச்சயம் வலுப்படுத்தும்.

### 3. ஒன்றிணைந்து பறைசாற்றுதல் : (Unity in Proclamation)

ஆபிரகாம் எனும் மூதாதையரைக் கடவுள் தெரிந்தெடுத்து அனுப்பினார் (தொ.நூ. 12 : 3). ஏசாயா போன்ற இறைவாக்கினரைத் தெரிந்தெடுத்து அனுப்பினார் (ஏசா. 6 : 8-10). எல்லோருக்கும் மகுடமாக தம் திருமைந்தரை இயேசு என்னும் மானுட உருவில் அனுப்பினார் (யோவா. 3 : 16). கடவுளின் திருத்திட்டத்தை உலகறியச் செய்ய நற்செய்தியைப் பறைசாற்றுதலே இதன் நோக்கமாக இருந்தது. இதில் புதிய மதிப்பீடுகளின்படி வாழ்தல், போதித்தல், கண்டித்தல் விடுதலைப்பணி செய்தல் ஆகியவை உள்ளடங்கும். இயேசுவும் தம் சீடர்களை அனுப்பி ஏற்றுக் கொள்வோருக்கு நற்செய்தியுரைக்க கட்டளை கொடுக்கிறார் (லூக். 10 : 11).

தூய பவுலடியார், தன் அருட்பணிப் பயணத்தின் வழியாய் நற்செய்தியை உலகம் அறிந்துகொள்ள அருள்தொண்டாற்றினார். கடவுளின் இரக்கத்தால் நாங்கள் இத்திருப்பணியைப் பெற்றிருக்கிறோம் (2 கொரி. 4 : 1) என்று குறிப்பிடுகிறார். இதனால் எங்களுக்கு ஏற்படும் இன்னல்கள் ஏராளம். ஆனாலும் கடவுள்மீது நம்பிக்கைக் கொண்டவர்களாய்ப் பாடுகளை ஏற்று நற்செய்தியைத் தெளிவுடன் உரைக்கும் (2 கொரி. 4 : 13, 14) அருட்பணியை நிறைவேற்றுகிறோம் என்கிறார்.

அருட்பணியின் விளைவால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள் இன்று பலவிதப் பிரிவுகளாக (denominations) பிரிந்து செயல்படுகின்றன. ஆனால் இத்தகையச் சூழலிலும் கடவுளுக்கு தொண்டாற்றுகிறோம் என்ற எண்ணத்தில் தம் எல்லைகளைத் தாண்டிப் பணியாற்ற முற்படும்போது சமூகம், பொருளாதாரம், அரசியல், பண்பாடு கலைகள் போன்ற பல்வேறு



துறைகளில் முழுமைபெறும். பல்வேறு சூழமைவுச் சார்ந்த மக்களிடம் அருட்பணியை தொடர்புபடுத்தும் போது சூழலுக்குப் பொருத்தமாக புது அமைப்புகளுடன் புதுமுறைகளில் பரந்துபட்ட அளவில் செயல்படுவதால் அருட்பணி உயிர்துடிப்புடன் விளங்கும். ஏனென்றால் கடவுளின் அன்புக்கு எல்லை இல்லை. இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி முழுமையும் இறையாட்சியை மையப்படுத்தி இருந்ததே தவிர திருச்சபையை நிறுவும் நோக்கில் அமைந்திருக்கவில்லை. இறைமக்களை இறையாட்சியில் சேர்க்கவே முழுமையான காலத்தை பயன்படுத்தி பணிவிடையை நிறைவேற்றினார். ஒன்றிணைந்து திட்டமிட்டு தெளிந்த செயல்பாடுகளுடன் நற்செய்தியை பறைசாற்றி இறையாட்சிப் பணியை நிறைவேற்றுவோம்.

**மன்றாட்டு :** *நிலைபேருடைய என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்ட கடவுளே! உம் திருச்சபையை அமைதிக்கும் நீதிக்கும் கருவியாக இருப்பதற்கு உம் திருச்சபையை நீர் அழைத்தீர். இந்தியாவிலுள்ள ஒருமைப்பாட்டு திருச்சபைகளுக்கு, எது சரி என்பதை அறிந்து கொள்ளவும் அதை தைரியத்தோடு செயல்படுத்தவும் உம்முடைய ஞானத்தை தாரும். நேர்மையான வழியை பார்ப்பதற்குரிய தெளிவான பார்வையையும் அவ்வழியிலே நடக்கக்கூடிய விடா முயற்சியையும் எங்களுக்கு தாரும். அமைதியின் தூரக்காட்சியையும், முழுமையையும் அதற்காக உழைக்கின்ற கட்டுப்பாடையும் எங்களுக்கு தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசுக்கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம்.*

**அருள்திரு. J. வின்சென்ட் ராபர்ட்**

**18-11-2012**

*பெண் குழந்தைகள் ஞாயிறு*

# பெண் குழந்தைகளைப் பாதுகாத்தல்

**Protecting the Girl Child**

எண். 27 : 1 – 11 | தி.பா. 12 : 12 – 17
தி.பா. 48 : 8 – 14 | மாற். 10 : 13 – 16

"அவர்களுக்கும் உரிமைச் சொத்தில் பங்கு கொடுத்து, அவர்கள் தந்தையின் உரிமைச் சொத்து அவர்களுக்கு கிடைக்கச் செய்" (எண். 27 : 7).

கடவுள் உலகினைப் படைத்தபோது ஆணையும் பெண்ணையும் சமமாகப் படைத்தார். ஆனால் மனிதன் அவைகளில் வேறுபாட்டினை ஏற்படுத்தினான். இவ்வேறுபாடு முதிர்ந்தவரிகளிடையே மட்டுமல்லாது குழந்தைகளிடமும் இருக்கிறது. இவ்வேறுபாட்டினால் அதிகமாக பாதிக்கப்படுவது பெண்களும், பெண் குழந்தைகளும் மட்டுமே. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 12 மில்லியன் பெண் குழந்தைகள் பிறக்கின்றன. இக்குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதியினர் மடிந்துவிடுகின்றனர். இந்தியாவில் 75 மில்லியன் குழந்தைகள் போதிய உணவு கிடைக்காமல் வறுமையில் வாழ்கின்றனர். இவர்களில் 75% பேர் பெண் குழந்தைகள். ஏறத்தாழ 7,50,000 பெண் சிசுக்கள் கருவிலே ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் அழிக்கப்படுகின்றனர். அதோடு, பெண் குழந்தைகளுக்கெதிராக பாலியல் வன்முறைக் கொடுமைகள் அதிகம் நடைபெறுகின்றன. இக்கொடுமைகள் பஞ்சாப், அரியானா, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் அதிகமாக நடைபெறுகின்றன. கௌரவமாக, பாதுகாப்புடன், உரிமையுடன் வாழ வேண்டிய பெண் குழந்தைகள் துன்புறும் போது திருச்சபையாக திருமறை வெளிச்சத்தில் நின்று அவர்களைப் பாதுகாப்பது இன்றியமையாதக் கடமையாயிருக்கிறது. ஏன் அவர்களை பாதுகாக்கப்பட வேண்டும்? எப்படி அவர்களை பாதுகாக்க வேண்டும் என சிந்திப்பது சிறந்தது.

## 1. தலைமுறையினைக் காக்கிறவர்கள்

"புதல்வர் இல்லாத காரணத்துக்காக எங்கள் தந்தையின் பெயர் ஆக குடும்பத்திலிருந்து ஏன் நீக்கப்பட வேண்டும்?" (எண். 24 : 4)

ஆண்பிள்ளைகள் மட்டுமே தலைமுறையினைக் காக்கமுடியும் எனும் நிலையினை ஆணாதிக்க வர்க்கத்தினர் ஏற்படுத்தியிருந்தனர். ஆண்பிள்ளைகள் இல்லாதச் சூழலில் பெண் பிள்ளைகளுக்கு உரிமைச் சொத்தில் பங்கு கொடுத்து, தலைமுறையினைக் காக்க வழிகாண வேண்டும். ஆனால் இந்த வாய்ப்பினை பெண் பிள்ளைகள் மோசேயின் நாட்களில் பெறமுடியவில்லை. ஆனால் வரலாற்றில் 3 மற்றும் 2 மில்லனியத்தில் ANE ஆண் பிள்ளைகள் இல்லாதச் சூழலில் பெண் குழந்தைகள் தலைமுறையினைக் காக்கிறவர்களாக இருந்தனர்.

மனாசே குடும்பத்தைச் சார்ந்த செலொபுகாத்தின் பெண்பிள்ளைகளான மக்லா, நோகா, ஒக்லா, மில்கா, திர்சா ஆகியோர் மோசே, தலைவர்கள் மற்றும் மக்கள் கூட்டம் முன்பாக வந்து நின்று, "எங்கள் குடும்பத்தில் ஆண் வாரிசு இல்லாத நிலையில், நாங்கள் எங்கள் தலைமுறையினைக் காப்போம் ஆகவே எங்களுக்குரியதை எங்களுக்குத் தாருங்கள். எங்களது தந்தையின் பெயர் குடும்பத்திலிருந்து நீக்கப்படாமல் இருப்பதற்கு, நாங்கள் தலைமுறையினைக் காப்போம்" (எண். 27 : 1-8) எனக் கேட்டனர். இஸ்ரயேலிலே கோத்திரம் மாறி திருமணம் செய்தால் தலைமுறையினைக் காக்க முடியாது. நாங்கள் அப்படியல்ல, எங்களைக் கொண்டு எங்கள் தந்தையின் பெயர் வம்ச வரலாற்றில் இடம் பெறச் செய்ய முடியும் எனவும் அதோடு கானான் கடவுள் தம் மக்களுக்கு வாக்களித்த இடம் கடவுள் மக்களோடு உடன்படிக்கை பண்ணின இடம். அதில் எங்களுக்கும் பங்குண்டு என உணர்ந்து போராடினர்.

ரூத் தனது மாமியாருடன் "நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், உமது ஜனம் எனது ஜனம்" எனப் போராடினதால் தலைமுறைக் காக்கப்பட்டது. இயேசு அந்த தலைமுறை வரிசையில் அறியப்படுகிறார் (ரூத். 1 : 16, 17). சிறை பிடித்து வரப்பட்ட சிறுமியினால் நாகமான் குணமடைந்தார். சிறுமி நாகமானின் தலைமுறைப் பெயரினைக் காப்பாற்றினாள். இல்லையென்றால் தொழுநோய்ப் பிடித்தவன் சமூகத்திற்கு வெளியே வாழ வேண்டும்.

இன்று நம் கண் முன் இத்தகைய தலைமுறையினைக் காக்கின்ற பெண் குழந்தைகள் கருவிலும், உணவில்லாமலும் மடியும் போதும், வாழுமிடங்களில் பாலியல் மற்றும் வன்முறை கொடுமைகளை சந்திக்கும் போதும் அவர்களைப் பாதுகாப்பது நமது கடமையல்லவா?

## 2. உரிமையுடையவர்கள்

"எங்களுக்கும் பங்கு தாருங்கள்" (எண். 27 : 4)

எங்கள் தந்தையின் சகோதரர்களிடையே எங்களுக்கு உரிமையுடைய உரிமை சொத்தில் பங்கு தாருங்கள், நாங்கள் அதற்கு உரிமை பெற்றவர்கள். இவர்களின் இக்கோரிக்கை வழியாக மனாசே கோத்திரத்தார் யோர்தானின் மேற்கு பகுதியின் இடங்களை சொந்தமாக்கினார்கள் (யோசு. 17 : 3 - 6). பெண் பிள்ளைகள் தங்கள் உரிமைக்காக போராடி வெற்றி

கண்டனர். யோபுவின் குமாரத்திகள் தங்களது தகப்பன் சொத்தில் உரிமைப் பெற்றனர். தொ.நூ. 31 : 14இல் பெண் பிள்ளைகள் நிலத்தினை உரிமையாக பெற முடியாது என்றச் சூழலில் ராகேலும் லேயாளும் "எங்கள் தகப்பன் வீட்டில் எங்களுக்கு பங்கு உண்டா? நாங்கள் அந்நியராய் எண்ணப்படுகிறோம். எங்களை விற்று எங்கள் பணத்தை வாயிலே போட்டுக் கொண்டார்கள். நாங்களும் உரிமையுடையவர்கள்" என போராடினர். தற்போது செலோபுகாதின் பிள்ளைகளும் உரிமை கேட்கிறார்கள்.

ஏன் உரிமை கேட்டார்கள்? எப்படி அவர்கள் உரிமையுடையவர்கள்? (எண். 27 : 3). மூன்று காரணத்தை முன் வைக்கிறார்கள்.

(i) எங்கள் தந்தை வனாந்தரத்தில் மரணமடைந்தார். அவரால் அவருக்குரிய உரிமைச் சொத்தை பெற இயலவில்லை.

(ii) எங்கள் தந்தை உரிமைச் சொத்தினை பெறமுடியாத கோராகை சார்ந்தவரல்ல (எண். 15, 16). எண். 14 : 29, 30ன்படி கோராகை சார்ந்தவர்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக முறுமுறுத்தார்கள். இவர்கள் கானானில் பிரவேசிப்பதில்லை எனும் நிலையிருந்தது.

(iii) எங்கள் தந்தை அவர் தம் பாவத்துக்காகவே இறந்தார் (எண். 27 : 3), (எண். 15 : 32 - 36 ஓய்வுநாட் பாரம்பரியம் மீறியதால் ஒருவர் கொல்லப்பட்டார் அவர்தான் இவர் என Rebbi Akia என்னும் ரபி கூறுகிறார்).

இந்த மூன்று காரணங்களினாலும், அவருக்கு புதல்வர் இல்லாத காரணத்தினாலும் நாங்கள் உரிமையில்லாதவர்கள் அல்ல, உரிமையுள்ளவர்கள், உரிமைக்காக போராடும் மக்களின் குரலை கேட்கிறவர் இறைவன். இவர்தம் குரலையும் மோசே வாயிலாக அறிந்து, செலொபுகாதின் குமாரத்திகள் உரிமை பெறத் தகுதியுள்ளவர்கள், அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென கடவுள் மோசேயிடம் கூறினார். ஆகவே உரிமையினைப் பெற்றார்கள், இவர்கள் பெற்ற உரிமை தொடர்ந்து இஸ்ரயேலருக்கு நியமமாகவும், விதிமுறையுமானது (எண். 27 : 11).

உரிமைக்கான போராட்டத்தில் உரிமை நிலைநிறுத்தப்பட்டது. பொதுவாக தலைமகன் மட்டுமே சொத்தில் இரண்டு பங்கினைப் பெறுவதற்கு வாய்ப்பு இருந்தது (இணை. 21 : 17). ஆனால் செலொபுகாதின் பெண் பிள்ளைகள் இரண்டு பங்குகள் வீதம் மொத்தம் பத்து பங்குகள் பெற்றனர் (யோசு. 17 : 5). இன்று உரிமையிழந்து, உரிமைக்காக ஏங்கும் பெண் குழந்தைகள் அவர்தம் உரிமையினைப் பெறவும், பயமில்லாமல் பாதுகாப்பாக வாழவும் உழைத்திட திருச்சபை முன் வரவேண்டும்.



## 3. இறையாட்சிக்குரியவர்கள்

"சிறு பிள்ளைகளைத் தடுக்காதீர்கள் ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்குரியது" (மாற். 10 : 14).

சிறு பிள்ளைகள் இயேசு தொடும்படியாக அவரிடம் கொண்டு வந்தபோது சீடர்கள் அதனைத் தடுத்தனர். காரணம் இயேசுவின் நாட்களில் உரோம, கிரேக்கக் கலாச்சாரத்தினால் பிள்ளைகளைக் குறித்து மதிப்பிட்டு, ஏற்றுக் கொள்ளாத நிலையே இருந்தது. ஆனால் யூத பாரம்பரியத்தில் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுத்தனர். ஆகவே யூத பிள்ளைகள் யூதக் கட்டளைகளைக் கைக்கொள்ள வலியுறுத்தப்பட்டனர் (இ.ச. 6 : 7,8). சிறு பிள்ளைகள் எனும் கூட்டத்தில் பெண் குழந்தைகளும் அடங்குவர். ஆகவேதான் இவர்கள் இறையாட்சியின் பிள்ளைகள் என அவர்களை ஆசீர்வதித்தார் இயேசு (மாற். 10 : 16). மட்டுமல்லாது இறையாட்சியின் பிள்ளைகள் என இயேசு அவர்களை ஆசீர்வதித்தார் (மாற். 10 : 16). இறையாட்சியில் இவர்களை ஏற்காத சீடர்களை கடிந்து கொண்டார் (மாற். 10 : 14). இயேசுவின் விடுதலைத் திருபணியில் பெண் குழந்தைகள் வாழ்வு பெற்றனர் (மாற். 5 : 22 - 42).

இறையாட்சிக்குரிய நமது பெண் பிள்ளைகள் பல்வேறுவிதமான அடிமைத்தனங்கள், குழந்தைத் தொழிலாளர், பாலியல் தொழில், வன்முறைகள் இவைகளினால் பாதிக்கப்பட்டு இறையாட்சிக்கு வெளியிலே வாழ்விழந்து நிற்கிறார்கள். இறையாட்சிக்குரிய பிள்ளைகள் உலகிலே வாழும் பாங்கினைப் பெறமுடியாமல் கருவிலே அழிக்கப்படுகிறார்கள், பல பிள்ளைகள் உணவின்றி பட்டினியினால் சாகிறார்கள். இத்தகையோரில் இறையாட்சி சிதைக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவில் இறையாட்சியில் பங்குபெற வாய்ப்பினைப் பெற்றுள்ள நாமும் நமது திருச்சபைகளும் பெண் குழந்தைகளை பேணி பாதுகாக்கவும் அவர்தம் உரிமையினைக் கொடுக்கவும் இறையாட்சியின் பிள்ளைகளாய் அவர்களை வழிநடத்தவும் அழைக்கப்பட்டுள்ளோம். இறையாசி நம்மோடிருப்பதாக!

**மன்றாட்டு** : *எல்லாம் வல்ல கடவுளே! உம்முடைய மகன் தம் உலக வாழ்வில் சிறு குழந்தைகளை ஆசீர்வதித்தார். அக்குழந்தைகள் சமத்துவமற்ற நிலையிலும் ஒடுக்குதலுக்கும் பலியாக்குப்பட்டிருக்கின்ற குழந்தைகளை வாழ்வின் புதிய நம்பிக்கையாகிய உம் மேன்மையான தொடுதலைப் பெற்றுக் கொள்ள உம்மிடம் வேண்டுகிறோம். குறிப்பாக பெண் குழந்தைகள் நியாயத்தை கண்டு கொள்ளவும் உண்மையான மதிப்பையும் மானிட சமுதாயத்தில் அன்பைக் கண்டு கொள்ளவும் அவர்களின் வாழ்வு உம்முடைய படைப்பின் நறுமணத்தை மலர்களாக வெளிக்கொணர அருள் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம் ஆமென்.*

**திருமதி. லளிதா தேவகடாட்சம்**

**25-11-2012**

# ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தப்படுதல்

## (Preparing for the Coming of the Lord)

1 குறி. 24 : 1 – 19 எபி. 5 : 1 – 10
தி.பா. 115 லூக். 1 : 8 – 23

"அவர் நிறைவுள்ளவராகி தமக்குக் கீழ்ப்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார்" (எபி. 5 : 9)

திருவருகைக் காலத்திற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் நாம் நம் பற்றுறுதி வாழ்வில் நம்மை ஆயத்தப்படுத்துவது அவசியம். வருகையின் காலங்கள் நம் அன்றாட வாழ்வில் விழிப்போடிருந்து வரும் ஆண்டவரை எதிர்கொண்டுச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்தி நிறைவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும் அனுபவம் ஆகும்.

குறுகிய கால மனித வாழ்வில் எந்த நேரத்தில் எது நிகழும் என்பது நமக்குத் தெரியாது. எல்லா சூழ்நிலைகளிலும் விழிப்பாக செயல்பட்டு புனிதத்தின் நிறைவாகிய விண்ணக வாழ்வை நமதாக்கிக் கொள்ள நாம் ஆயத்தமாக இருக்க அழைக்கப்படுகின்றோம்.

பவுலாரின் ஆயத்தத்தின் அழுத்தத்தை கூறும்போது, "திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய நாள் வரும், அழிவு சடிதியாய் வரும். ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்" 1 தெச. 5 : 2-6 என்கிறார்.

ஓட்ட வீரன் ஓட ஆயத்தப்படும்போது இருந்து கொண்டு இருக்க மாட்டான். அதுபோல ஒவ்வொரு பற்றுறுதியாளரும் ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தத்தோடிருக்க அழைக்கப்படுகின்றனர்.

நமது ஆயத்தத்தின் நிலைப்பாட்டைச் சிந்திக்கும்போது கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதி சார்ந்து மூன்று உண்மைகளை புரிந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம். How we should be prepard?

### 1. திரு சட்டத்திற்கு கீழ்ப்படிந்து ஆயத்தப்படுதல்

"இவர்களே தங்கள் மூதாதையாகிய ஆரோன் இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தந்த விதி முறைகளை தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்கேற்ற வரிசை



முறைப்படி ஆண்டவரின் இல்லம் சென்று அங்கு நிறைவேற்றுவதற்காகப் பதிவு செய்யப்பட்டவர்கள்" (1 குறி. 24 : 19).

திருக்கோயிலின் பரிசுத்தப்பணிக்கென்று அதாவது புனித அலுவலுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட தலைவர்கள், ஆரோனின் வழித் தோன்றல்கள். இவர்கள் இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தங்களுக்குக் கொடுக்கப்பட்டப் பொறுப்புக்களை ஆண்டவரின் இல்லத்தில் நிறைவேற்றியவர்கள் இவர்கள் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தங்களை இறைப்பணிக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டவர்கள். இந்த ஆயத்தம் அவர்கள் இறைப்பணியை சிறப்புடன் நிறைவேற்ற ஏதுவாக இருந்தது எனலாம்.

இஸ்ராயேலருக்கு கடவுள் கொடுத்தக் கட்டளையை மையப்படுத்தி ஆண்டவர் இயேசு "கடவுளை முழுமையாக அன்பு செய், உன்னில் நீ அன்பு செய்வதை போல பிறனையும் அன்பு செய்" எனக் கூறி அன்பு என்ற ஒரே கட்டளைக் குள்ளே திருச்சட்டத்தையும் இறைவாக்கையும் அடக்கிவிட்டார். ஆக அன்பு செய்கின்றவர்களாக ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தப்படுத்த அழைக்கப்படுகின்றோம்.

### 2. திருசித்தத்திற்கு அர்ப்பணித்து ஆயத்தப்படுதல்

மெசியாவாகவும் மகா தலைமை குருவாகவும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர் ஆண்டவர் இயேசு கூறியது :

மெல்கிசேதக்கின் முறைமையின்படி அவர் என்றைக்கும் ஆசாரியர். மெல்கிசேதக்கைப்பற்றியக் குறிப்பை முதலாவது தொ.நூ. 14 : 18-இல் காண்கிறோம். மேல்கிசேதக்கு சாலோமின் ராஜா. சாலோம் என்றால் எருசலேம். தாவீது எருசலேமைக் கைப்பற்றினபோது மெல்கிசேதக்கின் வரிசையில் அரசரானார். மெல்கிசேதேக்கு அரசனும் பிரதான ஆசாரியருமானவர்.

உரத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் இயேசு ஜெபித்தாரென்பது உண்மையானப் பிரதான ஆசாரியர் மனிதருக்காக அடைந்த வேதனையைக் காட்டுகிறது. அவருடைய பயபக்தி கடவுளின் சித்தத்தை அவர் பூரணமாய் நிறைவேற்றினதில் விளங்குகிறது. மரணத்திலிருந்து விடுதலைப் பெற வேண்டுமென்று அவர் ஜெபிக்கவில்லை. பிதாவின் சிதத்த்திற்கு தம்மை ஒப்புக் கொடுத்ததே அவருடைய வேண்டுதலின் ஆளம். கிறிஸ்துவின் பூரணத் தன்மை தந்தையாம் கடவுளின் சித்தத்தை செய்து நிறைவேற்றியதில் வெளிப்பட்டது.

அதுபோல பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணரா யிருக்கக்கடவீர்கள் (மத். 5 : 48) என்ற கிறிஸ்தேசுவின் வா:த்தையின்படி நம் பூரணத் தன்மை இறை சித்தத்திற்கு அர்ப்பணிப்பதில் வெளிப்படும். ஆகவே இறை சித்தத்திற்கு அர்ப்பணித்து நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

## 3. திருக்காட்சிப்பெற்று சான்றாக ஆயத்தப்படுதல்

ஆசாரியர்கள் நான்கு குடும்பங்களிலும் சேர்த்து (லூக் 1 : 5) மொத்தம் இருபதினாயிரம் பேர் என ஜோசிபால் என்ற யூத வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார். இவர்கள் இருபத்தி நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஆதலால் வகுப்பு ஒன்றிற்கு சராசரி 830 ஆசாரியர் இருந்தனர். வாரத்திற்கு ஒரு வகுப்பு வீதம் ஆண்டிற்கு இருமுறை ஒவ்வொரு வகுப்பினரும் ஆலயப் பணிவிடை புரிவர். வகுப்பிற்கு ஏறக்குறைய 830 ஆசாரியர்கள் இருந்ததால், தூபம் காண்பிக்கும் சிறப்புப் பணிபுரியும் ஆசாரியரைச் சீட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கும் வழக்கமிருந்தது. காலையிலும் மாலையிலும் தினம் இருமுறை ஆலயத்தில் பரிசுத்த இடத்தில் கடவுள் சந்நிதானத்தில் தூபம் காட்டப்படும் (வி.ப. 30 : 7). வாழ்க்கையில் ஒரே ஒரு முறை அருளப்படும். இவ்வுரிமைளைப் பெற்ற ஆசாரியர்கள் தங்கள் பணிவிடைக்குப்பின் சீட்டுப் போடுதலில் பங்குபெற முடியாது.

இப்படி வாழ்க்கையில் ஒரேமுறை கிடைக்கும் பாக்கியத்தை (தூபங்காட்டுதல்) அனுபவித்துக் கொண்டிருந்த பொழுது திருக்காட்சி கண்டு ஒரு நிறைவாழ்வு பெறுகின்றார் சகரியா (லூக். 1 : 13-16). சகரியாவின் காத்திருப்பும் ஆயத்தமும் அவருக்கு திருக்காட்சியும் நிறைவாழ்வும் கிடைத்தது.

சகரியா எலிசபெத் தம்பதிகள் முதிர் வயதில் குழந்தை பேறு பெற்று இறைவனுக்கு சான்றானார்கள். நாமும் நம் வாழ்வில் குறைநீங்கி நிறைவாழ்வு பெறத் திருக்காட்சி பெற்று சான்று பகர ஆயத்தப்படுவோம். பழங்காலத்தில் கதை ஒன்று சொல்லுவார்கள். மனி த வாழ்வு என்பது பையூரிலிருந்து பொய்யூருக்கு வந்து, பொய்யூரிலிருந்து மெய்யூருக்குப் போகிறோம் என்பார்கள். பையூர் என்பது தாயின் வயிறு. அது நிலையானது அல்ல. பிறகு பொய்யூராகிய மாய உலகத்தில் மனிதன் பிறக்கிறான் வளர்கிறான். இளவயதும் வாலிபமும் மாயமாய் கடந்து போகிறது. இந்த உலகமும் நிலையானது அல்ல. முடிவாக மெய்யூருக்குச்செல்ல வேண்டும். அதுதான் நிரந்தரமான விண்ணக வாழ்வு. ஆகவே குறுகிய காலக் கட்டத்தை கொண்ட இம்மண்ணக வாழ்வில் எச்சரிக்கையோடு செயல்படவேண்டும்.

விழிப்புடன் இருந்து திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்து திருசித்தத்திற்கு



அர்ப்பணித்து திருகாட்சிப் பெற்று சான்றுபகர ஆயத்தப்படுவோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து திருச்சட்டத்தை நிறைவேற்றினவராய், தந்தையாம் கடவுளின் திருச்சித்தத்தை நிறைவேற்றியவராய், திருக்காட்சி பெற்று முன் மாதிரியாய் நமக்கு முன் விளங்குகிற அவர் அடிச்சுவட்டில் நின்று நியாதிபதியாய் வருகை தரும் ஆண்டவரின் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்துவோம். இறையரசை சுவைப்போம்.

**மன்றாட்டு :** *வாழ்கின்ற கடவுளே! நீர் எங்களை பாவத்திலிருந்து மனந்திருந்தவும் நற்செய்தியில் நம்பிக்கை வைக்கவும் உம் வருகையின் ஆட்சியை கொண்டாடவும் உம்முடைய மகன் வழியாக எங்களை அழைத்தீர். கிறிஸ்துவின் முதல் அப்போஸ்தலர்களைப்போல சீடத்துவத்திற்கான உம் அழைப்பினை நாங்கள் கேட்கவும் எங்கள் பழைய வாழ்வை மறக்கவும் உடைபட்ட உலகில் நற்செய்தியாகிய புதிய வாழ்வை எடுத்துரைக்கவும் எங்களுக்கு துணைபுரியும். உம்மோடும், தூய ஆவியரோடும்என்றென்றும் வாழ்ந்து அரசாண்டு உலகிற்கு நற்செய்தியைக் கொண்டு வரும் எங்கள் கடவுளாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.*

**அருட்திரு. S.M. டேனியல் தேவதாசன்**

27-38). இறைதூதுவரின் அறிவிப்பை நற்செய்தியாக மரியாள் ஏற்று அதை கொண்டாடுவதே “மரியாளின் பாடல்” என திருமறையும், திருச்சபையும் நமக்குக் கற்றுத்தருகின்றன. நற்செய்தியைக் கொண்டாடுவதிலிருக்கும் ஆன்மிக உண்மைகளை கீழ் குறிப்பிடும் கருத்துக்களின் அடிப்படையில் புரிந்துகொள்ளலாம்.

**1. இரக்கத்தின் நற்செய்தியைக் கொண்டாடுவோம் :** (லூக். 1 : 50, 54)

இறைவனின் இரக்கமே நற்செய்தியாகும். இறைவன் தம்முடைய திருமகனை இவ்வுலகிற்கு கையளிப்பது இரக்கத்தின் வெளிப்பாடாகும். இவ்வுலகை மீட்டுக்கொள்ள இறைவன் இயற்கை, மனிதன் மற்றும் அனைத்தின் மீதும் இரக்கம் கொண்டார். இயற்கையையும் மனிதனையும் அழிப்பது இறைவனின் திட்டமல்ல, மாறாக அவைகள் மீது இரக்கங் கொண்டு அவைகளை மீட்டுக் கொள்வது அவரின் திட்டமாகும். இறைவனின் இத்திட்டத்தை நிறைவேற்ற தம் திருமகனை அனுப்ப மரியாளைத் தெரிந்து கொள்கிறார். இறைவனின் திட்டத்திற்குரிய பாத்திரமாக தாம் தெரிந்து கொள்ளப்பட்டதை இறை தூதுவர்கள் சொல்லிய போது மரியாள் தாம் தெரிந்து கொள்ளப்பட்டிருப்பது தனது நீதியை முன்னிட்டும், தனது செல்வாக்கை முன்னிட்டும், தனது குடும்பத்தை முன்னிட்டும் நிகழாமல் இறைவனின் இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்ததாகப் பாடுகிறார். முழுக்கு முனிவர் யோவானின் பிறப்பைக் குறித்து அறிவிக்கும் போதும் இறைவனின் இரக்கத்தால் நிகழ்ந்ததாக சகரியா குறிப்பிடுகிறார் (லூக். 1 : 77). சகரியா யோவானின் பிறப்பை இரக்கத்தின் நற்செய்தியாகக் கொண்டாடுகிறார். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவிலும் “இரக்கமுள்ளவர் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” என்பதை மத். 5 : 7-இல் படிக்க முடிகிறது. ஆகவே இறைவன் நம்மீதும் இயற்கையின் மீதும் வைத்திருக்கின்ற இரக்கத்தை நினைத்து எப்பொழுதும் நன்றி கூறி நற்செய்தியாகக் கொண்டாடுவோம்.

**2. இறையாற்றலின் நற்செய்தியைக் கொண்டாடுவோம் :** (லூக். 1 : 51-53)

இறைவனின் இரக்கம் இறையாற்றலாக வெளிப்படுகிறது. இறைவனின் ஆற்றல் குறுகிய எல்லைகள், குறுகிய வட்டங்கள், குறுகிய எண்ணங்கள், சுயநலங்கள் போன்றவைத் தாண்டி செயல்படுகிறது என்ற நற்செய்தியை மரியாள் தம்முடைய பாடலின் வாயிலாக வெளிப்படுத்திக் கொண்டாடுகிறார். எப்படியெனில் மேசியாவின் வருகையைப் பற்றிய யூதர்களின் எதிர்நோக்கு மிகவும் குறுகலான சிந்தனையின் அடிப்படையில் அமைந்திருந்தன. அவர்கள் வகுத்திருந்த எல்லைகளுக்குள் இறையாற்றல் நிகழ்ந்துவிடும். அதாவது மேசியா வருகை நிகழ்ந்துவிடும் என நம்பிக்கைக் கொண்டனர். ஆனால் இறையாற்றல் இருதய சிந்தனையில் அகந்தையும், இறுமாப்பும், வெளிவேடமும், பொறாமையும், உள்ளவர்களை சிதறடித்து இறுமாப்பாய் ஆளுகிறவர்களின் ஆசனங்களைக் கவிழ்த்து அவர்களை



வெளியே துரத்தி, தாழ்மையுள்ளவர்களை ஆசனங்களில் அமர்த்தி, அவர்களை உயர்த்தி, பசித்தவர்களை நன்மைகளினால் நிரப்பி, செல்வச் செருக்குடையோரை வெறுமையாய் அனுப்பிவிடும் ஆற்றல் வாய்ந்த ஒன்றாகும். ஆகவே சமூக, சமய, அரசியல், பொருளாதாரம் சார்ந்த மாற்றங்களைத் தருகின்ற இறையாற்றலை நாம் இன்று நற்செய்தியாகக் கொண்டாட வேண்டும். நாம் வாழும் உலகில் காணப்படும் அநீதிகளை, ஊழல்களை, ஆன்மிக வெளிவேடங்களை அகற்றும் இறையாற்றலைக் கண்டு அதை நற்செயதியாக ஏற்றுக் கொண்டாட வேண்டும்.

**3. இறையரசின் நற்செய்தியைக் கொண்டாடுவோம் :** லூக். 1 : 55

கடவுளின் இரக்கம் இறையாற்றலாக வெளிப்பட்டு இஸ்ரயேலருக்கு இறையரசின் நற்செய்தியாக மாறுகிறது என மரியாள் தம்முடைய பாடலில் குறிப்பிடுகிறார். இஸ்ரயேலர் இறையரசை நோக்கி காத்திருந்தவர்கள். இவர்களின் நோக்கம் என்னவெனில் இறைவன் தம்முடைய தாசனாகிய தாவீதின் வாயிலாக நல்லாட்சியை வழங்கியிருந்தார். தாவீதின் ஆட்சியை மக்கள் கடவுளின் நேரடி ஆட்சியாகக் கருதி மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள். தாவீதின் காலத்திற்குப் பிறகு வந்த அரசர்கள், மற்றும் ஆட்சியாளர்கள் இறைவனைப் புறக்கணித்து விட்டு அதே சமயத்தில் இறைவனின் திருவுள விருப்பப்படி செயல்படுவதாக மக்களிடம் எடுத்துரைத்துவிட்டு தங்கள் விருப்பப்படி சுகபோகமாக வாழ்ந்தார்கள். இவர்களின் சுகபோகமாக வாழ்விற்கு சமயத் தலைவர்களும், சமயச் சட்டங்களும் ஆதரவும், விளக்கமும் கொடுத்தன. இச்சூழலில் தாவீதின் ஆட்சியை எதிர்பார்த்த எளிமையான இஸ்ரயேலர் நம்பிக்கையுடனும், நல் எதிர்நோக்குடனும் இறை நம்பிக்கையுடனும், வாழ்ந்து வந்தார்கள். இத்தகையோரின் நம்பிக்கையும், நேர்மையும், நீதியும், உண்மையும், எளிமையும், வீண்போக வில்லை என்பதை வெளிப்படுத்தும் வகையில் மரியாள் தம்முடைய தாசனாகிய இஸ்ரயேலை ஆதரித்தார் என்ற (லூக். 1 : 55) இறையரசின் நற்செய்தியை வெளிப்படுத்தி இஸ்ரயேலருக்கு நற்செய்தியைக் கூறி கொண்டாடும்படி அறை கூவல் விடுக்கிறார். நாம் வாழும் சூழலில் உண்மையான இஸ்ரயேலரைப்போல இறைவனின் ஆட்சியை எதிர்நோக்கியிருப்பவர்கள் மரியாளின் பாடலின் அறைகூவல் போன்று நற்செய்தியைக் கொண்டாடி மகிழ்வோம். பிறருக்கு நற்செய்தியை எடுத்துரைப்போம். நற்செய்தியாக வாழுவோம்.

**மன்றாட்டு :** *எல்லாம் வல்ல கடவுளே! உம்முடைய இறையரசை எடுத்துரைப்போர், அதிகாரத்தோடு கற்றுக் கொடுக்கவும் உம் மகனை அனுப்பினீர். நாங்களும் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் உடைக்கப்பட்ட இதயங்களை ஒன்றிணைக்கவும், கட்டுண்டவர்களுக்கு விடுதலையை எடுத்துரைக்கவும் உம் தூய ஆவியால் எங்களை அபிஷேகம் பண்ணியருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

**Rev. ஹென்றி தாஸ்**

- மோசேயின் அழைப்பு (வி.ப. 3 : 4, 33 : 17b)
- ஆபிரகாமின் அழைப்பு (தொ.நூ. 15 : 1, 22 : 1)
- எரேமியாவின் அழைப்பு (எரே. 1 : 11)
- ஆமோசின் அழைப்பு (ஆமோ. 7 : 8; 8 : 2)

கடவுள் பெயர் சொல்லி அழைத்து அவரது கருவிகளாய் பயன்படுத்துகிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணியினைக் கொடுத்து அழகு பார்ப்பவர் நம் கடவுள். கிறிஸ்து இயேசுவின் ஆளுமையில் அழைப்பின் குணங்கள் முழுமையுறக் காண கிடைக்கின்றன என்பது உண்மை. தந்தையின் குரலுக்கு கீழ்ப்படியும் மிக சிறந்த ஊழியர் அவர் என்பதனை விவிலிய மறை எடுத்துக் காட்டுகின்றன. கடவுள் நம்மையும் பெயர் சொல்லி அழைக்கிறார். பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரயேலின் தேவனாகிய கடவுள் நானே என்கிறார். அவர் சத்தத்திற்கு கீழ்ப்படிவோம் !.

## 2. நேர்வழி நடத்துபவர்: (எசா. 45 : 2)

"நேர்மையான மனிதர் ஒருவர் இறைவனது உன்னதமான படைப்பு" என்கிறார் போப். உண்மையான வழிகளில் நேர்மையாக நடந்து கொள்வதையே கடவுள் விரும்புகிறார். கோணலான வழிகளில் நடப்பவர்களைக் கண்டுபிடித்து நேர்வழிக்கு நேராக திருப்புகின்றார் (தி.பா. 18 : 32). "என்னை பலத்தால் இடைகட்டி என் வழியை செவ்வைப் படுத்துகிறவர் தேவனே" என திருப்பாடலாசிரியர் கூறுகின்றார். தன்னை எப்படிப்பட்ட பாதைகளில் எல்லாம் கடவுள் நடத்தினார் என்பதையும் அந்த பாதைகளில் நடக்க எப்படிப்பட்ட உதவிகள் கிடைக்கப் பெற்றன என்பதையும் இப்பகுதியில் விளக்குகின்றார் (நீதி. 21 : 29b). செம்மையானவனோ தன் வழியை நேர்படுத்துகின்றான். கடவுள் நேர்வழி நடத்துகின்றவர். கோணலானப் பாதையை செவ்வைப்படுத்துகின்றவர் (மத். 7 : 13, 14). இடுக்கமான வழியையும், விசாலமான வழியையும் பற்றி இயேசு விளக்குகின்றார். இடுக்கமான வாசலை பயன்படுத்துவோர் நேர்வழியை நாடுவோர் எனவும் கூறுகின்றார். இடுக்கமான வழி கோணலான நடக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றது. கடவுள் நல்ல வழிகளையும், தீமையான வழிகளையும் இவ்வுலகத்தில் வைத்திருக்கின்றார். நாம் தெரிந்து கொள்ளும் வழிகளிலே நமது வாழ்வும் அமைந்திருக்கின்றது. நாம் தெரிந்துகொள்ளும் வழி எப்படிப்பட்டது? கோணலானவைகளை செம்மையாக்கி நேர்வழி நடத்தும் கடவுளின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நேர்வழி நடப்போம்.

## 3. ஆசீர்வாதம் அருளுபவர் : (எசா. 45 : 4)

ஆசீர் என்ற சொல் "ப்ரெக்" என்றும், "பெராக்கா" என்றும் அழைக்கப்படுகிறது. ஆசீர்வாதம் என்ற சொல் அனைத்து கிறிஸ்தவர்கள் வாயிலும் சொல்லப்படுகின்ற ஒன்று. ஆனால் பொருள்ள வகையில்



கையாளப்படுவதில்லை. ஆசீர்வாதம் என்பது இன்றைய காலச் சூழ்நிலையில் ஒருவர் கொண்டிருக்கின்ற பொருள் வளம் தான் என்ற தவறான கருத்து இருப்பினும், விவிலிய மறை அடிப்படையில் நோக்கும் போது சொத்து என்பது ஆசிர்வாதமா? (or) சாபமா? என்று நினைக்கும் தருணத்தில் நிச்சயம் ஆசீர்வாதம் தான் என்று கூறிவிடலாம். ஆனால் சொத்து ஒருவருக்கு தரப்படுவதன் உண்மையான நோக்கம் சொத்து உடைய நபர் மற்றவர்கட்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே. ஆயினும் கிறிஸ்து தமது திருச்சபைக்கு அளித்த, உலகின் மீதான இறுதியான, வெளிப்படையான செயல் அவருடைய ஆசீர்வாதம் ஆகும் (லூக். 24 : 50). ஏசாயா இறைவாக்கினர் வழிகடவுள் நான் உங்களை பெயர் சொல்லி அழைத்த படியால் உங்கட்கு இருளில் மறைத்து வைக்கப்பட்ட கருவூலங்களையும், மறைவிடங்களில் வைக்கப்பட்டுள்ள புதையல்களையும் தருவேன் (எசா. 45 : 4) என்கிறார். கடவுள் தரும் ஆசீர்வாதம் சேர்த்து வைப்பதற்காக அல்ல. பிறருக்கு உதவி செய்வதற்காக என்பதனை மனதில் கொண்டு ஆசீர்வாதம் அருளும் ஆண்டவரிடமிருந்து ஆசி பெற்றுக் கொள்வோம்.

கடவுள் கருணையும், இரக்கமும் உடையவர். நாம் அவரிடம் வேண்டிக் கொள்ளும் முன்பே நம் தேவைகளை அறிந்து அதனை செய்து நிறைவேற்றுபவர். நமது வழிகளைப் பார்த்து, கோணலான வழிகளில் நாம் செல்லும் போது தடத்து நிறுத்தி அந்த கோணலை செவ்வையாக்கும்படி தன்னையே தியாகமாக தந்து தந்தையின் பணியினை நிறைவேற்றினார்.

நம் கடவுள் . . . .

தூர இருப்பவரல்லர், கூட இருப்பவர்
வேடிக்கை பார்ப்பவரல்லர், வேதனையில் பங்கெடுப்பவர்
சினம் கொள்பவரல்லர், துணை இருப்பவர்
தீய வழி நடத்துபவரல்லர், நல்வழி நடத்துபவர்

கோணலை செவ்வையாக்கும் கடவுளை ஏற்று, அவர் காட்டும் வழி நடப்போம் இறை ஆசி பெற்று கொள்வோம்.

**திரு. ஜெபதாஸ்**

**02-12-2012**

*வருகையின் முதல் ஞாயிறு*

## நற்செய்தியைக் கொண்டாடுதல்
## Celebrating the Good News

தொ.நூ. 18 : 1 – 15 எபி. 2 : 1 – 10
தி.பா. 146 லூக். 1 : 39 – 56

ஆண்டவரை எனது உள்ளம் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது (லூக். 1:47)

**முன்னுரை :** "நற்செய்தி" என்றச் சொல்லை திருமறையின் ஒளியில் நன்கு புரிந்துகொண்டால் மட்டுமே நற்செய்தியைக் கொண்டாட முடியும். திருமறையை ஒரு நற்செய்தி நூலாகத் தொகுத்த காலத்திலிருந்து மக்கள் ஏற்றுக்கொண்டு, கடவுளின் செயல்பாடுகளைக் கண்டு வியந்து கடவுளைப் போற்றுவதும், அவரின் சொற்படி வாழ்வதும் கொண்டாட்டமாகக் கருதப்பட்டு வருகிறது. கடவுளின் படைப்பிலிருந்து நற்செய்தி துவங்குகிறது. கடவுளின் படைப்பிற்கு மனிதன் செலுத்தும் நன்றியே கொண்டாட்டமாகும். ஆபிரகாம் வாழ்க்கையில் கடவுளின் செயல்பாட்டைக் கண்டு, கடவுள் தம்முடைய விருப்பப்படி குழந்தைச் செல்வத்தை கையளிக்க விரும்புகிறார். ஆபிரகாம், சாராள் இருவரும் அந்தச் செய்தியை நற்செய்தியாகக் கருதினார்கள் (தொ.நூ. 18 : 1-15). கடவுள் தாம் படைத்த உலகம் மற்றும் மனிதகுலத்தை பாவத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும், அழிவிலிருந்தும் விடுவிப்பதற்காக தம் திருமகனை இவ்வுலகிற்கு அனுப்பத் திட்டமிட்டார். கடவுளின் மீட்புப் பணிக்காக அவரின் மீது நம்பிக்கை வைத்த மக்கள், கடவுளின் வருகைக்காக காத்திருந்தனர். கடவுளின் மீட்பின் வருகை முழு மனிதக் குலத்திற்கும், இயற்கை அனைத்திற்கும் முழுமையான விடுதலையாகவும், நற்செய்தியாகவும் அமைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது (எசாயா 11 : 1-9). இறைவனின் வியத்தகு திட்டத்தில் சகரியா, எலிசபெத், யோசேப்பு, மரியாள், முழுக்கு முனிவர் யோவான், ஆன்மிகத் தந்தை சிமியோன், தீர்க்கத்தரிசியாகிய அன்னாள், இறைதூதர்கள், மேய்ப்பர்கள், சாஸ்திரிகள், போன்றவர்கள் பயன்படுத்தப்பட்டனர். மட்டுமல்லாமல் விண்மீன் மற்றும் புல்லணை ஆகியவை அடையாளங்களாயின. இறைவனின் திட்டத்தில் பங்களிக்க யோசேப்பு, மரியாள் இருவருக்கும் இறைத் தூதுவர்கள் வழியாக இறைவன் அழைப்பு விடுத்தார். இறைத்தூதுவர் கொடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட மரியாள், தம்மை இறைவனுக்கு அடிமையாகக் கையளிக்கிறார் (லூக். 2 :



**01-12-2012**

*அருணோதயத் தொழுகை*

## கோணலை செவ்வையாக்கும் கடவுள்

எசா. 45 : 1–8

"நான் உனக்கு முன்னே போய் கோணலானவைகளை செவ்வையாக்குவேன்" (எசா. 45 : 2).

இன்றைய மனிதன் வாழ்க்கையில் பல தடைகள் வருகின்ற போது அதனைத் தாண்டிச் செல்ல சக்தியின்றி, பெலனின்றி தவித்து நிற்கும் நிலை அதிகமாகக் காணப்படுகின்றது. காரணம் மனிதன் தன்னுடைய வாழ்வில் கோணலான வழிகளைத் தெரிந்து, அந்த வழியில் வாழ விரும்புகிறான். அந்த வழிகள் உலக பெருமையை நாடியும், பணத்தின் அடிப்படையிலும், சுயநலப் போக்கிலும் அமைகிறது. இதனை நாம் சிந்திப்பதில்லை.காரணம் நாம் விண்ணுலகின் மகிமையையும், இவ்வுலகின் நிலையாமையையும் உணர்வதில்லை. ஆனால் கடவுள் அந்த பாதையில் குறுக்கிட்டு நமது மீட்பிற்காகவும், நம்மை நல்வழிப்படுத்தவும், மனந்திருந்தி வாழவும் நாம் நினைப்பதற்கு நேர் மாறான பாதையில் நடத்துகிறார் அதுவே சிலுவைப் பாதை. வேதனையின் பாதை. ஆனால் அவ்வழியே நமக்கு நன்மை பயக்கும் மீட்பின் பாதையாக மாறுகின்றது. துன்பத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் போது கடவுளின் பிள்ளைகளாக மாறுகிறோம். கடவுளோடு சேர்ந்து வாழும் போது துன்பங்கள் வரத்தான் செய்யும். ஆகவே நாம் முழுமையான மனிதனாக வாழவேண்டும் என்றால் துயரங்களை ஏற்பது அவசியம்.

"Suffering Accepted makes the person
Suffering unaccepted Breaks the person"

கடவுள் கோணலானவைகளை செவ்வையாக்குவேன் என்கிறார். எப்படி செவ்வையாக்குவார் என்பதை சிந்திப்போம்.

### 1. பெயர் சொல்லி அழைப்பவர் : (எசா. 45 : 3)

கிறிஸ்தவன் என்பவன், அழைப்பு பெற்ற ஒருவன் என்பதனை திருச்சபை துவக்க காலத்திலே கண்டுணர்ந்து உள்ளது. கடவுள் யார்? என்பதனை அறிந்து கொள்வதற்கும் அழைப்பு துணை செய்கின்றது. இந்த அழைப்பில் உள்ள தனிப்பட்டப் போக்கு விவிலியத்தின் மூல சொற்களாகவே நிருபணமாகிறது. கடவுள் தாம் அழைக்கும் மனிதனின் பெயரை உச்சரிக்கிறார். பெயர் சொல்லி அழைக்கும் கடவுளாக தன்னை அறிமுகம் செய்வதிலிருந்து இதனை உணர முடிகிறது.

இறையழைப்புக்கு உண்மையாயிராத மன்னர்களுக்கும் அதன் விளைவாக இறை ஒப்பந்த வாழ்வை விட்டுவிலகி, அவரது கற்பனைகளை மீறிய இறை மக்களுக்கும் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப் பற்றி பேசி வந்தார் இறைவாக்குநர் எரேமியா (தொ.நூ. 21, 22). தற்போது அவர் மாறாத, ஆண்டவர் அருட்பெருக்கால் உருவாக்கும் நம்பிக்கை மற்றும் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து அளிக்கும் அரசியல்-சமூக-பொருளாதார விடுதலையைப் பற்றிய புது அருட்பாடலைப்பாடுகிறார் (எரே. 23 : 5-6). இறைவன்தாமே தங்களது சொந்த வரலாற்றில் தாவீது மன்னர் குடும்பத்தில் விடுதலையாளராக (மேசியாவாக) வரவிருப்பதையும், அவர் திட்டமாய் நிலைநாட்டவிருக்கும் அவரது ஆளுகையின் தனிச் சிறப்பையும் அவர் பறை சாற்றுகிறார். வருகின்ற விடுதலையாளர் நீதிமிக்கவர், அவரே உண்மையான மேசியா "சேமாசடக்" எனும் எபிரேயச்சொல் இங்குப் பயன்படுத்தப்படுகிறது. அவர் தனியாள் மற்றும் கூட்டு வாழ்வில் ஏதாவது ஒரு வழியில் நிறைவேற்றியே ஆவார் என கோடிட்டுக்கூறுகிறார். எரேமியாவின் சமகால மன்னன் "ஆண்டவர் என் நீதிபரர்" என பொருட்படும் வகையில் சிதேக்கியா எனும் பெயரைச் சூட்டிக் கொண்டார். ஆனால் அவர் எச்சரிப்புகளை உதறித் தள்ளி ஆண்டவரின் உடன்படிக்கையன்பை விட்டு விலகிவிட்டார். எனவே அவரைக் கடிந்துரைத்து, அவரிடம் இறைவாக்குநர் எரேமியா, ஆண்டவர் நமது நீதிபரர் (செதக்கீனு) என திருத்தக்காட்டி அருட்பாவை அமைக்கிறார். எரேமியா எடுத்துரைத்த அவ்இறைவாக்கு நிறைவுறும் வகையில் சுமார் 750 ஆண்டுகளுக்குப்பின் இறையன்பும் நம்பிக்கையும் பட்டுப்போன ஈசாயின் அடிமரத்திலிருந்த எதிர்பார்க்கவே முடியாதவகையில் காரிருள் கடுங்குளிரில் துளிர்த்த கிளையென அதிசயமானவர் ஆண்டவர் இயேசு பெத்தலை முன்னணையில் வருகை தந்தமை மற்றொருமுறை உணர்ந்து நன்றி கூறுவோம். நிலையான நீதியையும் அமைதியையும் உருவாக்கும் தாவீதின் கிளையில் கனியும் (கன்னிப்பெண்ணின்) "விதை" (தொ.நூ. 3 : 15) "தாவீதின் மைந்தன்' (2 சாமு. 7) மானிடரை மீட்கும் வகையில் சொந்த வாழ்வைப் பணயமாக்கி "பாடுபடும் அருட்பணியாளர்' (ஏசா. 53) அவர் ஒருவரே. "ஆமென் ஆண்டவர் இயேசுவே வாரும்".

### 2. வரலாற்றை நிறைவாக்கும் ஆண்டவர் இயேசுவே வாரும்
(தி.வெ. 22)

முதல் திருச்சபையார் பேசிவந்த அரமாயிக் மொழியிலிருந்து உருவாகிய சிரியாக் மொழியில் "மாரனதோ" (மாரன் எதோ) எனும்சொல் ஆண்டவர் வருகிறார் அல்லது வரவிருக்கிறார் எனப் பொருள்படும். விடுதலையாளரின் (இயேசு நாதர்) சிறப்பு வருகை இரு கட்டங்களில் நிறைவேறுவதாக பழைய ஏற்பாட்டுப் குறிப்புகள் சுட்டுகின்றன. (எ.டு.) தூயாவியாரால் விடுதலைப் பணிக்கென அனுப்பப்படும் மேசியா



**09-12-2012**

***வருகையின் இரண்டாம் ஞாயிறு*** ***திருமறை ஞாயிறு***

# இறைவாக்கு உலகிற்கு வெளிச்சம்

**Word of God : The Light of the World**

தொ.நூ. 1 : 1 –2 4 எபி. 4 : 10 – 13
தி.பா : 119 : 105–112 யோவா. 8 : 12 – 20

**"உலகின் ஒளி நானே; என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்" (யோவா. 8 : 12).**

மின் விளக்குகள் கண்டுபிடிக்காத முற்காலத்தில், தெருக்களில் ஆங்காங்கே விளக்கு எரிவதற்காக பந்தங்களை வைத்திருப்பார்கள். தினமும் மாலை நேரத்தில் ஒருவர் வந்து அவைகளை எரியவைப்பார். ஒரு நாள் மாலைப்பொழுதில் ஜாண்ரஸ்கின் தன் நண்பர்களுடன் தெருவில் பேசிக் கொண்டிருந்தபோது தெருவிளக்குகளை எரிய வைக்கிறவர் தன் கையில் வைத்திருந்த தீப்பந்தத்தைக் கொண்டு ஒவ்வொரு விளக்காக எரிய வைத்தார். சிறிது நேரத்தில் அனைத்து விளக்குகளும் சுடர்விட்டு எரிந்து வெளிச்சம் கொடுத்தது. இதைப் பார்த்த ஜாண் ரஸ்கின் இந்த தெருவிளக்கு எரிய வைக்கிறவர் போலவே ஒவ்வொரு கிறிஸ்தவரும் இருக்க வேண்டும். அதாவது தான் செல்லுகிற இடமெல்லாம் ஒளியூட்டக்கூடியவராக இருக்க வேண்டும் என்றாராம்.

ஒளி என்றச் சொல்லுக்கு பலப்பொருள்கள் கொள்ளலாம். வெளிச்சம், மகிமையின், வெளிச்சம் இறைவனின் வார்த்தையாம் வெளிச்சம் எனவும் திருமறைக் காட்டுகிறது. மேலும் மேசியாவே ஒளியாகவும், மனுக்குலம் இருள் களைந்து ஒளியை பெற்றுக் கொள்ள கடவுளே மனிதனைத் தேடி வருகிறார் எனவும் ஏசாயா இறைவாக்கினர் குறிப்பிடுகிறார். இவ்வுலகில் ஒளியின்றி எவரும் வாழ இயலாது. ஒளியைப் பெற்றுக் கொள்ளும் உயிரினங்கள் உயிரூட்டமாக வாழ்கிறது. ஆகவே வாழ்விழந்த வலுவிழந்த மனுக்குலம் உயிரூட்டம் பெற இறைமகன் இயேசு ஒளியாக இவ்வுலகில் வந்தார். ஒளியாக வந்த கிறிஸ்துவின் ஒளிப்பெற்று வாழும்போது இருளை மேற்கொண்டு, வெளிச்சத்தில் நேரான பாதையில் பயணிக்க முடிகிறது. எனவே "இயேசுவே உலகின் ஒளி" என்று அறிந்து கொள்ளும்போது அவரில் உறவு கொண்டோர் இருளில் வாழ முடியாது என்பதை புரிந்து கொள்ளுதல் மிக அவசியம். ஆகவே வார்த்தையாய் உலகில் வந்த மெய் ஒளியாம் இயேசுவின் பண்புகளை திருமறை துணை நின்று தியானிப்போம்.

## 1. பாதை காட்டும் ஒளி : (தி.பா. 19 : 105)

வாழ்க்கை என்னும் கடலில் பயணித்துக் கொண்டிருக்கும் மனுக்குலம் இருளில் வீழ்ந்து பாதை தெரியாமல் வழிதவறிச் செல்லும்போது இறை வார்த்தைகள் பாதை காட்டும் ஒளியாக அமைகின்றன. பாதைகள் தெளிவாக இருந்தால் பயணம் எளிமையாக இருக்கும் என்பதற்கேற்ப பாதைக்கு வெளிச்சமாக பக்கத்தில் இருந்து வழி நடத்துவதும் பாதுகாப்பு கொடுத்து பலப்படுத்துவதும் உறுதிப்படுத்தி உயர் நிலையில் வைப்பதும் மெய் ஒளியாம் இறை வார்த்தையே.

சீர்கெட்டுப்போன மானிடம் ஒளியில் நடக்கும்போது ஒருவருக்கொருவர் நட்புறவைப் பெறுகின்றனர் (1 யோ. 1 : 7). சகோதர அன்பில் உறவு கொள்கின்றனர் (1 யோ. 2 : 10). ஒளியைப் பெற்று அதில் நடப்போரின் கண்ணீரின் நாட்கள் ஒழிந்துபோம் என்று ஏசாயா இறைவாக்கினர் வெளிப்படுத்துகிறார் (ஏசா. 60 : 20).

தமக்கென தெரிவு செய்த இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணத்தில் மோசேயின் வழியாக தம் வார்த்தைகளை உள்ளடக்கிய திருச்சட்டத்தைக் கொடுத்து அதன் வழியாய் மனிதன் நடக்க வேண்டியப் பாதைகளை காண்பித்தார் இறைவன். மேலும் அவைகளை தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கவும் தங்கள் வீட்டின் நிலைக்கால்களில் பதிக்கும்படியாகவும், ஒவ்வொருவரும் தங்கள் இதயத்தில் பதித்து அவைகளில் நடக்கக் கட்டளையிட்டார் (உபா. 6 : 4-5). காலம் கடந்த பின் இவைகளே துன்பச் சூழலில் பாதை காட்டும் ஒளியாக மாறி விடுதலையைப் பெற்றுக் கொடுத்தது. இந்த அனுபவத்தில் துன்பத்தில் துணை நின்ற பாதை காட்டின இறைவனின் மாட்சியை "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும்" அதுவே என்கிறார் கவியரசர் தாவீது (தி.பா. 119 : 105).

இறைமக்கள் இறை நம்பிக்கையில் பெருகும்படியாக கடவுளின் மேன்மையான செயல்களும் வாக்குறுதிகளும் பாதைக்காட்டும் ஒளியாக த்திகழ்கின்றன. மனுக்குலம் பாவம் செய்து பாதை தவறும் போதும் துன்பத்தில் தடம் புரளும் போதும் கலங்கி கால் தடுக்கும் போதும் ஆறுதலை கொடுத்து தெளிவானப் பாதையைக் காட்டுவது இறை வார்த்தையாம் ஒளியே. ஆகவே இந்த அனுபவத்தைப் பெற தாவீது அரசர் "ஆண்டவரே உம் விதி முறைகள் காட்டும் வழியை எனக்கு கற்றுத்தாரும்" (திபா. 119 : 33) என்கிறார். ஆகவே வழிகாட்டும் ஒளியாம் திருமறையைப் பின்பற்றி பிறரை ஒளிரச் செய்வோம்.

## 2. இருள் அகற்றும் ஒளி : (யோவா. 8 : 12)

மானிட வாழ்வில் ஒளி வீசும்போது வாழக்கை நறுமணம் பெறுகிறது. இவ்வாறு அனைத்து மக்களையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி இறை வார்த்தையாம் ஒளியே. "கடவுள் ஒளியாய் இருக்கிறார் அவரில் இருள் என்பதே இல்லை" என்கிறது திருமறை.



**23–12–2012**

***வருகையின் 4–ம் ஞாயிறு***

# மாரநாதா-ஆண்டவர் இயேசுவே வாரும்

**Maranatha : Come Lord Jesus**

| | |
|---|---|
| எரே. 23 : 1 – 8 | தி.வெ. 22 : 6 – 21 |
| தி.பா : 96 | யோவா. 14 : 8 – 14 |

"இதோ! நான் விரைவில் வருகிறேன் . . ." (தி.வெ. 22 : 12).

சமீபத்தில் வெளிவந்த செய்தித்தாளின் சிந்தனைத்துணுக்கு ஒன்றில், திருச்சபை சீர்திருத்தவாதி கால்வின் அருஞ்செயல்புரியும் ஆறு வயது சிறுவனாகக் காட்டப்பட்டார். அவர் புலி போன்று வேடமணிந்த ஆங்கிலேயச் சிந்தனையாளர் கோபேசை நோக்கி "இந்நிமிடம் சீராய் வாழ்வதே என் வாழ்வின் நோக்கு". நாளை நீ சாலையொன்றைச் கடக்கும்போது விபத்தில் சிக்கி இறக்க நேரிடலாமே. அதனால்தான் கூறுகிறேன் "இந்நிமிட வாழ்வே வாழ்வு" என்றார். அவருக்குப் பதிலளித்த கோபேசு. "என் பாதையில் எது வருகிறது என பார்த்துச் செயல்படுவதுதான் என் வாழ்வின் நோக்கு" என்றார். இன்றைய திருமறைப் பகுதிகள் துன்பமிகு நமது அனுதின வாழ்வுப் பாதையில் எதிர்பாராது நம்மைச் சந்தித்து நமக்கு பெருவாழ்வூட்டும் ஆண்டவரையும் அவரது ஆற்றலூட்டும் வாக்குறுதிகளையும் அறிமுகம் செய்கின்றன. குறிப்பாக, "இதோ உரிய பலன்களுடன் உடனடியே வருகிறேன்" எனும் ஆண்டவர் குரல் கேட்டு "ஆமேன் மாரநாதா! (ஆண்டவர் இயேசுவே வாரும்) என பணிவுடன் பதிலளித்திட அழைக்கப்படுகிறோம்.

## 1. முன்னணையில் தவழ்ந்திடும் ஆண்டவரே வாரும் : (எரே. 23 : 5-6)

"ஆண்டவர் (மேசியா) வந்துள்ளார் / வருகிறார்" எனும் இருபொருட்படும் அரமேயக் மொழிச் சொல்லாம் "மாரநாதா"-வைத் தங்கள் அனுதின சொல்வழக்குகளில் மட்டுமல்ல, கடிதங்கள், ஏடுகள், கல்லறைகளிலும், தொடக்கக்காலத் திருச்சபையினர் எழுதி வந்தனர். அதைத் தொடர்ந்து அம்மரபில் நின்று, இன்று உலகெங்கிலும் திருச்சபையார் நாம், "ஆமென் மீட்பராய் பெத்தலை முன்னணையில் தவழ்ந்திடும் ஆண்டவரே வாரும் (மாறநாதா)" என அடிக்கடி மன்றாடி நம்மை வாழ்வளிக்கும் அவரது திருப்பணிகளுக்கென நன்றிப்படையல் ஆக்குகின்றோம்.

சுமார் 2700 ஆண்டுகளுக்கு முன் இஸ்ரேல் நாட்டில்

**16-12-2012**

*வருகையின் 3-ம் ஞாயிறு*

# பாவக் கட்டிலிருந்து விடுதலை

## Deliverance from the bondage of Sin

ஏசா. 40 : 1 – 11 | தி.வெ. 2 : 12 – 17
தி.பா. 51 | லூக். 1 : 68 – 79

"நம்மை ரட்சிக்கும்படிக்கு .... நமக்கு ரட்சண்ய கொம்பை ஏற்படுத்தினார்" (லூக். 1 : 74, 75).

கடவுளோடு நல்லுறவுடன் வாழ்ந்த மனிதன் கடவுளின் வார்த்தையைப் பற்றிய சந்தேகத்தினால் தீயோனின் வார்த்தையை நம்பினான். பாவத்தில் விழுந்தான். தேவசாயலை இழந்தான். பாவத்தின் கட்டுக்குள் சிறைபட்டுப் போனான். தேவசாயலை இழந்த ஆதிபெற்றோரின் வழிமரபில் தோன்றிய மனுக்குலம் பாவ சந்ததியினராக வாழ நேரிட்டது. பாவத்தின் கட்டு பரிசுத்தமுள்ள கடவுளோடு நல்லுறவுடன் வாழ இயலா நிலையினை உருவாக்கிவிட்டது. இந்த உறவினை செம்மைப்படுத்த இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது என்கிற நிலை ஆயிற்று. பாவக்கட்டிலிருக்கும் மனிதன் தன்னை விடுவித்துக்கொள்ள கடவுளுக்கு கொடுக்கும் எதுவும் பூரணமானதல்ல என்பதால் மனிதனின் அவலநிலையைக் கண்டு தம் சொந்த குமாரன் இயேசுவை உலகிற்கு அனுப்பச் சித்தங்கொண்டார். இதனை தீர்க்கர்களும் உலகிற்கு உரைத்தனர். இம்மாபெரும் நிகழ்வை நினைவு கூறும் இக்காலத்தில், இயேசுவை "உலகின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" எனப் பறைசாற்றிய முழுக்குமுனிவர் யோவானின் தந்தை சகரியா, "நம்மை ரட்சிக்கும்படிக்கு நமக்கு ஒரு ரட்சண்ய கொம்பை ஏற்படுத்தினார்" என்று கூறுகிறார். இதன்வழியே கடவுளின் மீட்புச்செயல் பற்றி சிந்திப்போம்.

### 1. சந்திக்கும் ரட்சண்யக் கொம்பு

ஏதேனில் மனிதனை முகமுகமாக சந்தித்த கடவுள் பார்வையில் மனிதன் பாவத்தினால் விலகி செல்லவே இறைமனித உறவு சிதைந்தது. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கடவுளை தரிசிக்க இயலாது. மனிதன் பாவகட்டினால் இந்நிலையை அடைந்தான். எனவே பாவமனிதனை மீட்க கடவுள் மனுக்குலத்தை சந்திக்க மனுஉருவாக வந்தார். லூக். 1 : 74-இல் "தமது ஜனத்தை சந்தித்து..." எனும் வார்த்தை கடவுளின் மீட்பின் செயலில் முதல் அனுபவத்தை வெளிப்படுத்துகிறது. நம் மீட்பர் நம்மை சந்திக்கும் மீட்பர். இதனை லூக். 1:79-இல் "உன்னதத்திலிருந்து தோன்றிய



அருணோதயம்" நம்மை சந்தித்திருக்கிறது என்கிறார். பாவகட்டிலிருந்து மனுக்குலம் விடுவிக்கப்பட இறைவனின் இச்சந்திப்பு மிக அவசியமானது. இச்சந்திப்பு நம்மால் அல்ல. இறை அன்பினால் வெளிப்பட்டது. அவரே நம்மை சந்திக்கிறார். எங்கெங்கோ தேடியும் காணஇயலா கடவுள் கிறிஸ்துநாதர் வழியாக மக்களை சந்திக்கிறார். இதுதான் இறைவருகையின் மிக முக்கியமான அம்சமாகிறது. நம்மை சந்திக்கும் ரட்சண்யக் கொம்பு கிறிஸ்துவே.

### 2. சங்கரிக்கும் ரட்சண்யக் கொம்பு

தீமையை அழிப்பது மீட்பின் செயலுக்கு அவசியமானது. இயேசுநாதர் உன்னதத்திலிருந்து வந்த ஒளியாக அந்த காரத்தையும் மரண இருளையும் சங்கரிக்கிறார் (லூக். 1 : 78). அறியாமை என்னும் அந்தகாரம் நம் முன்னோரையும், நம்மையும் அடிமைப்படுத்தி வைத்திருந்தது அதனை அகற்ற, சங்கரிக்க உலகில் வந்தார். மெழுகுவர்த்தி தன்னை இழந்தாலும் இருளை அழித்துக்கொண்டிருக்கும் அதுபோல இறைமைந்தனும், தாம் "தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடினப் பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" (பிலிப். 2 : 6, 7). எதற்காக? மனுக்குலத்தைக் கட்டியுள்ள இருளை சங்கரிக்கவே. வெளி 2 : 16-இல் தீமையை சங்கரிப்பேன் என்கிறார். எசா. 11 : 4-இல் பூமியை தமது கோலால் அடித்து துன்மார்க்கரை சங்கரிப்பார் என எழுதப்பட்டிருக்கிறது. தீயோரையும், தீயோனையும், தீமைகளையும் சங்கரிக்க சர்வ வல்லமையுள்ள மீட்பர் வருகிறார். சங்கரிக்கும் ரட்சண்யக் கொம்பு கிறிஸ்துவே.

### 3. சமாதானம் தரும் ரட்சண்யக் கொம்பு

எசா. 40 : 2,2-இல் என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள். எருசலேமுடன் பட்சமாய் பேசி அதன் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்று அதற்கு சொல்லுங்கள் என தீர்க்கன் வழி சமாதானம் உரைக்கிறார். தம் ஜனம் சமாதானமாய் வாழவேண்டும் என விரும்பும் மீட்பர்இவர். சங். 23-இல் அமர்ந்த தண்ணீரண்டையில் நடத்தும் சமாதான மீட்பர் பற்றி கூறப்பட்டுள்ளது. எசாயா 9 : 6-இல் அவர் பற்றி சமாதானபிரபு என்று கூறப்பட்டிருக்கிறது. லூக். 2-இல் பூமியிலே சமாதானம் என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏசாயா 53-இல் "நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது" என்றெழுதப்பட்டிருக்கிறது. யோவா. 14 : 27 என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு வைத்து போகிறேன் என்கிறார். யோவா. 20 : 19-இல் பூட்டிய அறைக்குள்ளும் பிரவேசித்து பயந்த சீடர்களுக்கு உங்களுக்கு சமாதானம் என்றார். ஏனென்றால் இவர் மானிடத்திற்கு சமாதானம் வழங்க வந்த ரட்சண்யக் கொம்பு. சமாதானமற்ற மனிதன் தம்மை தேடினால் உலகால்

கொடுக்க முடியாததும் எடுக்கமுடியாததுமான சமாதானத்தை தருகிற ரட்சண்யக் கொம்பு கிறிஸ்துவே.

இறையன்புக்குரியவர்களே! வருகையின் காலங்களில் இறை வருகையை அதிகமாகச் சிந்திக்கிற நாம் நம்மை சந்தித்த உன்னத ஒளியை உள்ளத்தில் ஏற்போம். நம்மை சந்தித்தவரை நாம் சந்திக்க ஆயத்தமா? நம் தீமைகளைச் சங்கரிக்க வேண்டியவைகள் என்ன? அமைதி இழந்த மானிடத்திற்கு சமாதானம் தர வந்திருக்கும் இந்த (மீட்பரை) ரட்சண்யக் கொம்பை சந்தித்து, தீமைகளை சங்கரித்து சமாதானம் பெறுவோம். இறையாசி நம்முடனிருப்பதாக!

**மன்றாட்டு :** *எல்லாம் வல்ல கடவுளே! கோதுமையிலிருந்து களைகளை அகற்றவும், நன்மையானவைகளில் தீமைகளும் சார்ந்திருக்கும் உலகிலே உம் மகனை நீர் அனுப்பினீர். உம்முடைய தூய ஆவியாகிய அக்கினி எங்களுடைய பேராசையையும், வஞ்சகத்தையும் புனிதப்படுத்தட்டும். நாங்கள் தூய்மையாக்கப்பட்டு உம்மிலே நாங்கள் எங்கள் அமைதியை கண்டு நீர் எங்களிலே மகிழ்வடைய உதவி செய்யும். உம்மோடும், தூய ஆவியரோடும், என்றென்றும் ஆளுகை செய்து வருகையை உறுதி செய்து அவருடைய நாளை நெருங்கிக் கொண்டிருக்கிற உம்முடைய மகனும், எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. K. கிளாட்ஸ்டன்**



வாழ்வுரிமையை அழிக்கின்ற அனைத்து சக்திகளும் இருள் ஆதிக்கம் ஆகும். சகோதர உறவு அற்றோரும் இருளில் வாழ்கின்றனர். இருள் அவர்கள் கண்களைக் குருடாக்கும் என்கிறார் திருத்தூதுவர் யோவான் (1 யோ. 2 : 9-11). மாறாக வாழ்வுரிமையை அளிக்கின்ற அனைத்தும் ஒளி சார்ந்தவைகள் ஆகும். மனிதரில் காணப்படும் அன்பு, அமைதி, நீதி, சமத்துவம், பகிர்வு போன்றவை ஒளியின் செயல்பாடுகளாகும். ஆகவே ஒழுங்கின்மையும் வெறுமையும் இருளாக காணப்பட்ட உலகை நிறைவிற்கு கொண்டுவர ஒளி உருவாக்கப்பட்டது (தொநூ. 1 : 1-3). இந்த ஒளியே வாழ்வின் அடித்தளம். மேலும் உலகைப் படைத்த இறைவன் ஒளியாய் இருப்பதோடு அவரின் திருவார்த்தைகளும் ஒளி கொடுப்பதாய் காணப்படுகின்றன.

ஒளி இருக்குமிடத்தில் இருளுக்கு இடமில்லை. ஒளி இருளைப் போக்கி ஒளிரச் செய்கிறது. ஆகவே இருளான உலகை ஒளிரச் செய்ய மெய் ஒளியாம் இயேசு மனிதரானார். எனவே உலகின் ஒளி நானே. என்னை பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார் வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் என்றார் இயேசு. எனவே மெய் ஒளியான இயேசுவில் இருள் இல்லை என்பது மெய்யே.

மெய்ஒளியாம் இயேசுவின் திரு வார்த்தைகளை பின்பற்றுவோர் பண்பட்டவர்களாக, புதுபெலன் பெற்றவர்களாகத் தகுதிப்படுத்தப் பட்டவர்களாக வாழ்வர். இவ்வொளியை ஒருக்காலும் அகற்றவோ, அழிக்கவோ முடியாது. இருளுக்கு ஒளியை மேற்கொள்ளும் ஆற்றல் இல்லை. ஆகவே மனிதனில் காணப்படும் இருளை ஒளி அற்றுப்போகச் செய்கிறது. மனிதனில் காணப்படும் இருளின் தன்மைகளான பகை, பொறாமை, கோபம், பெருமை, பிரிவினை, சுயநலம், இச்சை போன்றவற்றை ஒளி அழித்துவிட்டு அன்பு, அமைதி, ஒற்றுமை, தூய்மை, நீதி போன்ற ஒளியின் பண்புகளை ஒளிரச் செய்கின்றன. ஆகவே இறைவன் ஒளியாய் இருப்பதால் மனுக்குலமான நாம் இருள் களைந்து ஒளிபெற அழைக்கப்படுகிறோம் (1 யோ. 1 : 7).

மனுக்குலத்தை ஒளிரச் செய்வதும், மனுக்குலத்துக்கு உறுதியான உயர்வை தருவதும் மெய்யொளியான இயேசுவே. இவ்வுலகில் நற்செய்தியாய் விளங்கும் ஒளிக்கற்றைகளாக நாம் விழங்கி இயேசுவின் பாதை காட்டுபவர்களாகவும் சமூகத்திலும் திருச்சபையிலும் காணப்படும் இருளைப் போக்குபவர்களாகவும் வாழ்வோம்.

**மன்றாட்டு :** *ஆசீர்வதிக்கப்பட்ட கடவுளே! நாங்கள் கற்றுக்கொள்வதற்காக அனைத்து தூய திருமறை வார்த்தைகளும் எழுதப்படுவதற்கு காரணமானவரே, அவ்வார்த்தைகளை கேட்கவும், படிக்கவும், தியானிக்கவும், அதை உள்ளாக செரிமானம் செய்யவும் எங்களுக்கு உதவி செய்யும். உம்முடைய தூய வார்த்தைகளால் நாங்கள் பலப்படவும், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவும் நிலைவாழ்வின் நம்பிக்கையில் எப்போதும் உறுதியாய் இருக்கவும் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாண்டு இவைகளை எங்களுக்கு தருகின்ற மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் வேண்டுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. J.J. இம்மானுவேல்**

now room for us). இதனை உணர்ந்து இயேசுவின் மானிட உறவைக் கொண்டாடுவோம்.

## 2. கிறிஸ்து பிறப்பு : உருவேற்பின் கொண்டாட்டம்

"வாக்கு மனிதர் ஆனார்" (யோவா. 14அ).

ஒரு காட்டில் எறும்புகள் வரிசையாகச் சென்று ரொண்டிருந்தன. இதைப் பார்த்த சிலந்தி ஒன்று எறும்புக்கூட்டத்தில் உட்புகுந்து வரிசையை குழப்பியது. வரிசை குழம்பி தாறுமாறாகச் சென்ற எறும்புகளைப் பார்த்த துறவி நீங்கள் பாதை மாறிப் போகிறீர்கள் என எறும்புகளிடம் கூறினார். இவரின் கூற்று எறும்புக்களிடம் சென்றடையவில்லை. எப்படி வழி தவறிய எறும்புக்கூட்டத்தை சரி செய்வது என எண்ணிய அவரே எறும்பாக மாறி முன் சென்று எறும்புக் கூட்டத்தை சரி செய்தார். பாதை மாறி பாவ வழியில் சென்ற மனிதரைச் சரி செய்ய இறைவன் பல நீதித் தலைவர்களை, இறை வாக்கினர்களை அனுப்பியும் அவர்களுக்கு மானுடம் செவி சாய்க்கவில்லை. இந்நிலையில் படைப்பிற்கும், படைப்பாளருக்கும் இடையில் இருந்து உருவாக்கிய இறைவனின் வார்த்தை இறைச்சித்தம் பெற்றது. அந்த வார்த்தை வடிவம் பெற்று மனிதருக்கிடையில் ஓர் இனத்தொடர்பாளராக்கியது. இதனால் மானிடர் தம்மை கண்டு, தொட்டு, உணரும் வாய்ப்பை உண்டாக்க இறைவன் மனிதர் ஆனார். இது "இறைவனின் மானிட உருவேற்பு" என இறையியலாளர் சேசுப் சந்திராசென் கூறுகின்றார். பகுத்தறிவு எனும் பொருள் கொண்ட 'சித்' எனும் கிறிஸ்து உலகின் நன்மை தீமை வழிகளைப் பிரித்து மனிதரை நல்வழிப்படுத்த கடவுள் தன்மையில் இருந்த தம்மையே தாழ்த்தி உலகினை மீட்க மனுஉருவேற்றார். இச்செயல் உலகில் தாழ்விடங்களில் வாழும் மக்கள் உயர்விடம்பெறவே நடந்தது. இயேசுவின் மனுவுருவேற்பு உலகின் அடித்தட்டு மக்களின் உயர்வின் அடையாளமாக ஒளிர்கிறது. இது அவரது அருள் மற்றும் உண்மையான அடையாளமாகத் திகழ்கிறது.

கிறிஸ்து பிறப்பு தினத்தன்று பிறந்த, சர் ஐசக் நியூட்டன் தனது தாழ்விடத்திலிருந்த உயர்த்தப்பட்டார். உலகிற்கு அடையாளமானார். திருவிதாங்கூர் மன்னராட்சிக் காலத்தின்போது, தாழ்விடத்தில் வாழ்ந்த மக்கள் பல ஆண்டுகளாக அடிமைகளாக வாழ்ந்தனர். இயேசு மனுவுரு வேற்றதன் கொண்டாட்டம் இம்மக்களுக்கிடையில் வந்ததும் வளர்வுபெற்று எழுச்சியடைந்து இந்தியாவிற்கே உயர்வுக்கு அடையாளமாயினர். இயேசுவின் மனுவுருவேற்பு நம்மை ஏற்றத்தில் கொணர்ந்த மாற்றத்திற்காக மகிழ்வோடு கொண்டாடுவோம்.



(ஆண்டவர் இயேசு), அவரது முதற்கட்டத் திருப்பணியாய் மனுக்குலத்து (படைப்பு)க்கு "அருள்யுகத்தை" உருவாக்குகிறார் (எசா. 61 : 2). அதன் நிறைவுக் கட்டமாக நியாயத்தீர்ப்பு நாளன்று நியாயாதிபதியாக வருவார் (எசா. 61 : 20). மேலும் மேசியா தமது முதல் வருகையில் மனுமக்களின் பிழைகளைத் தம்மேல் ஏற்று மீட்புக்காக தாழ்மையுடன் பாடுபடுவார் (எசா. 53 : 6). அவர் தமது இறுதி (நிறைவு) வருகையின்போது தமது மீட்புப் பணியின் பலனை கண்டு மகிழ்வார். (எசா. 53 : 11).

இறை உறவு (உடன்படிக்கை) வாழ்வைவிட்டு விலகுவதால் நேரிடும் நெருக்கடிச் சூழல்களில் இறைவாக்கு (தீர்க்கத்தரிசன) மரபில் நின்று அடையாளங்கள், தரிசனங்கள், கனவு மொழிகளைப் பயன்படுத்தி இறைச் செயலை உணர்த்தும் "மறைபொருள் வெளிப்பாட்டு" (Apocalyptical literature)நடையில் தம் நூலை வெளிப்படுத்தல் நூலாசிரியர் ஆக்கியுள்ளார். அம்முறையில் சுமார் 800 ஆண்டகளுக்குமுன் இறைவாக்குநர் எரேமியா முன்னுரைத்த தாவீது மன்னரது குடும்ப (ஈசாயின்) த்தின் கிளையாய் வந்த மேசியா இயேசு நாதரே. இவர் ஈசாயின் கிளை மட்டுமன்று, தாவீது குடும்பத்தின் வேரும் அவரே. அவர் தாவீதின் மைந்தன் மட்டுமன்று ஆண்டவரும் அவரே என்கிறார் (திரு.வெளி 22 : 16). மேலும் ஏசுநாதரில் முழு உலகிற்கும் வெளிப்பட்டுள்ள இவ்அற்புத மனுவுருவேற்ற விடுதலையாளர் விண் தந்தையாகிய இறைவனே. இதை உணரும் அவரது சீடர்களாகிய நாம் அவரிலும் சிறந்த விடுதலைப் பணிகளைப்புரிய இயலும் என்ற ஏசுநாதரின் வாக்குறுதியை நூலாசிரியர் தமது நற்செய்தி நூலில் சுட்டுகிறார் (யோவா. 14 : 11-12). குறிப்பாக தமது சமகால (முதல் நூற்றாண்டு) திருச்சபையினர் தன்னை இறைவனின் வெளிப்பாடு என உரிமை பாராட்டி, பிறர் தன்னை வழிபட வைத்த உரோமைப் பேரரசர் சீசரை ஆண்டவராய் ஏற்க மறுத்துவிட்டனர். ஏசுநாதர் ஒருவரையே வாழ்வின் ஆண்டவராய் மெய் விடுதலையாளராய் கண்டு அவரை வழிபட்டமையால் அவர்கள் தங்கள் அனுதின அரசியல் சமூக பொருளாதார உரிமைகளை இழந்து தவித்தனர். அச்சூழலில் வாழ்வின் அனைத்தையும் புதுமையாக்கும் ஆண்டவர் இயேசுவின் வருகை பற்றிய நற்செய்தி (திரு. வெளி 22) முதல் திருச்சபையினரின் பற்றுறுதியைப் பலப்படுத்தியது. தீமைகளைத் துடைத்தெறிய ஆற்றலூட்டியது.

"இதோ விரைவில் வருகிறேன்" என்பதால் நான் உடனடியே (இப்போதே - எப்போதும் எங்கும்) வருகிறேன் எனும் முறையில் ஆண்டவர் விடுதலைச் செயல்களைப் புரிகிறார். எனவே நாம் நமது அனுதின வாழ்வின் பல்வேறு சூழல்களிலுமிருந்து "ஆண்டவர் இயேசுவே வாரும்" என மன்றாடும் போதெல்லாம் அவர் (நம் உணவு மேசையில் விருந்தாளியாய், வாழ்வு பாதையில் உடன் பயணியாய், பணியகத்தில் உடன் பணியாளராய்) வருகிறார். மற்றபடி தனியாள் - கூட்டு வாழ்வு நிலைகளில் நாம் முதிர்வுற்று

அநேகருக்கு ஆசீர்வாதமாய் உருவாகவே ஆண்டவர் தம் இறுதி வருகையையும், நியாயத்தீர்ப்பையும் தாமதம் செய்கிறார் (2 பேதுரு 3 : 8-9).

ஈசாயின் அடிமரத்தினின்று தழைத்தோங்கிக் கனியும் கிளையின் தளிர் இலை, மொட்டு, மலர்கள் இறை உடன்படிக்கையன்புக்கு உண்மையுடனும் நன்றியுடனும் வாழும் மீந்திருப்போராகிய (Remnent) நாமே. எனவே நாம் நமது ஊர்-உலகு களிகூர, காடு-மரங்கள் கெம்பீரிக்க நம்மிடை தங்கி அரசாளும் ஆண்டவர் இன்று நம் வாழ்வுப் பாதையில் நம்மைச் சந்திக்க வந்துள்ளார் என பண்ணிசைத்துப் பாடுவோம் (தி.பா. 96 : 12, 13). நம்மவருள் தேவைகளிலும், வேதனைகளிலும் உழல்வோர் மற்றும் அழகிழந்து உருக்குலைந்து கலங்கும் நம் சுற்றுச்சூழல் படைப்பனைத்துக்கும் வாழ்வூட்ட ஆண்டவர் முன் வந்துள்ளார். அகமகிழ்ந்து அன்புடன் அவர் பணிக்கென நம்மை அர்ப்பணிப்போம். அவருடன் வாழ்வு நடையிடுவோம்.

‘‘ஆமென், ஆண்டவர் இயேசுவே வாரும் !’’.

**மன்றாட்டு :** *எங்கள் கடவுளாகிய ஆண்டவரே ! நீர் எங்களிடத்தில் வருவதற்கு நாங்கள் யார்? ஆனாலும் உம்முடைய மகன் வழியாக மக்களை சந்தித்து அவர்களை மீட்டுக் கொண்டீர். அவருடைய பிறப்பை நாங்கள் கொண்டாட ஆயத்தப்படும் போது உம்முடைய வார்த்தையின் சத்தத்தினால் எங்கள் இருதயம் மகிழ்ச்சியாய் குதிக்கவும் உம் சிறந்த செயல்களை ஆசிர்வதிக்க உம் தூய ஆவியால் எங்களை உந்துதல் செய்ய வேண்டுகிறோம். இவைகள் அனைத்தையும் உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசுகிறிஸ்துவின் வழியே வேண்டுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. அறிவர் செ. டொனால்டு சாமுவேல்**



அவரில் முழுமையாகத் தங்கியிருக்கிறார்’’ எனக் குறிப்பிடுகிறார். இதன் வெளிச்சத்தில் இத்திருநாளில் அழுத்தம்பெறும் “அருளும் உண்மையும்” நிறைந்தவரை கொண்டாடுவதன் பொருள்களை என்பதை நற்செய்திப்பாடத்தின் அடிப்படையில் சிந்திப்போம்.

## 1. கிறிஸ்து பிறப்பு : உறவின் கொண்டாட்டம் :

‘தமக்குரிய உலகில் தோன்றினார்’ (யோவா. 1 : 11).

இந்திய இறையியலாளர் அப்பாசாமி கூறும்போது, “இறைவன் மானிடருக்குள்ளே நிறைந்திருந்திருக்கிறார் (Andaryamin). ஆயினும் மானிடர் அவரை அறிந்து கொள்ளவில்லை” என்கிறார். கிறிஸ்து இறைமகன் என்ற நிலையில் இந்த உலகம் அவருக்கு சொந்தமானது. அவரே அதன் முழு உரிமை கொண்டவர் (தி.பா. 24 : 1). ஆகவே அவர் தமக்குரிய உலகில் தோன்றினார். ஆனால் உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவா. 1: 11). அவரின் பிறப்பின்போது அவருக்கு விடுதியில் இடமில்லை. (லூக். 2 : 7). வளர்வில் தலைசாய்க்க இடமில்லை. “இடமில்லை” எனக்கூறி மறுக்கப்பட்ட விடுதியும் அது இருந்த நிலமும் அவருக்கே சொந்தமானவை. தமக்கு சொந்தமானவற்றை மற்றவர்கள் எடுத்துக் கொண்டும் அவர் உரிமை கொண்டாடாமல் உறவைக் கொண்டாட விடுதியில் தங்கும் பயணிகள் பயன்படுத்திய, விலங்குகள் கட்டப்பட்ட இடத்தில், விலங்குகள் கடித்துப்போட்ட மீதிக் கழிவுகளால் கறைபட்டுப்போன துண்டு தீவனங்களுக்கிடையில் மாட்டுத்தொழுவத்தில் மரியா இயேசுவை ஈன்றெடுத்தார். உலகத்தாரால் ஒதுக்கப்பட்டும் மனித மீட்பின் வேட்கையில் மானிடரான உறவு ஓர் ஆழமான, அழுத்தமான ஒன்று. மறுக்கப்பட்ட அவர் மாறிப்போகாமல் மானுட உறவை வலுப்படுத்தவே உறுவேற்றார். இந்த இறை மனித உறவில் அருளும் மாறாத உண்மையும் நிறைந்திருக்கிறது.

முற்கால அரசர்கள் வாழ்ந்துவந்த அரண்மனைகள் இன்று அருங்காட்சியகங்களாகியிருக்கின்றன. அரசர்கள் உண்ட பாத்திரங்கள், படுத்த கட்டில்கள், போர்த்திய போர்வைகள், பயன்படுத்திய கருவிகள் போன்றவற்றை காட்சிப்பொருளாக வைக்கப்படுகின்றன. அவைகளைப் பார்க்கும்போது நமக்கு தரும் உணர்வூட்டம் பெறும் தகவல் என்னவெனில், அன்று மன்னர்களுக்கெனப் பயன்பட்ட அனைத்தும் இன்று மக்கள் பயன்படுத்தும் உடைமைகளாகின்றன. இந்த உயர்வு இயேசுவின் மானுட உறவால் வந்தது என்பதே உண்மை. அன்று அவர் பிறக்கும் போது அவருக்கு அறையில்லை.. ஆனால் இன்று நமது வழி மரபினர் பிறக்கும்போது அறைகள் ஏராளம் இருக்கின்றன (No room for Christ but

நம்பிக்கை இழப்பை சந்திப்பதையும் கடவுள் கண்ணுற்றார். இதன் மத்தியில் எகிப்திலிருந்து, இஸ்ரவேலரின் விடுதலை பயணம், தாவீதின் வம்சத்தில் தோன்றும் அரசனைக் குறித்த தீர்க்கர்களின் கூற்று. எருசலேமின் வீழ்தலுக்குப் பின் சிதறிய மக்கள், தங்கள் பாடுகளுக்கு காரணம் தங்களது பாவமே என உணர்ந்து, பாடுகளை ஏற்கும் தாசனுக்கான எதிர்பார்ப்பு (எசாயா 53 : 3-5) கொண்ட ஜனத்திற்கு பாடுபடும் தாசனுக்கான நம்பிக்கையை அருளி மீட்பின் செயல்திட்டத்தை உறுதிபடுத்தினர். இதன் நிறைவேறுதல்தான் மத். 1 : 21. மீட்பை சார்ந்து மனிதன் மீது கடவுள் கொண்ட ஆவல். ஆவலை நிறைவேறுதலுக்குதான் மேற்கொண்ட செயல், தனது செயலினால் தான் செய்து நிறைவுபடுத்திய இறை திட்டம் இவைகளை இந்த திருமறை வசனத்தில் மிகத்தெளிவாக காணலாம்.

Christmas means God is interested
Christmas means God is acting
Christmas means God is completing

நமது ஆலய மேசை ஆயருடையில் ஒவ்வொரு கால பருவத்திற்கு ஏற்றபடி பல நிறங்களை பயன்படுத்துகின்றோம். தபசுகாலம் துவங்கி உயிர்த்தெழுதல் திருநாளுக்கு முன் தினம், வருகையின் நாள் துவங்கி கிறிஸ்து பிறப்பிற்கு முன் தினம் வரை ஊதா நிறம் (Violet) பயன்படுத்தப்படுகின்றது. ஊதா நிறம், பச்சாதாபம் அல்லது பிழைக்குமனம் வருந்துகின்ற (Penitential Colour) உணர்வினை உருவாக்கும் நிறம். கிறிஸ்து பிறப்பு நாள் அன்று பயன்படுத்துகின்ற வெண்மை நிறம் காட்டும். தூய்மையும், மகிழ்வும் நமது வாழ்வில் வருகின்ற மாற்றத்தின் பலனை உறுதிபடுத்துகின்றது. ஆகவே கிறிஸ்துபிறப்பு பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி. ஆனால் கிறிஸ்து பிறப்பு வந்துபோகும் வழக்கமான நிகழ்வு அல்ல, வாழ்வின் மாற்றத்திற்கான அனுபவம்.

**2. கடவுள் மனு உருபெற்றதால் மகிழ்வு :** லூக்கா 2 : 12

கடவுள் மனிதனானார் என்கின்ற செய்தி மகிழ்ச்சிதரும் நற்செய்தி. மனு உருவானார் என்பது கடவுளின் குமாரன் தெய்வீகத் தன்மையை இழக்காமலே மனிதத்தன்மை பெறுவதாகும். இது ஒரு இறைசெயல், அற்புதம். ஆனால் இது ஒரு தனிமனித செயலின் வெளிப்பாடாக அன்றி கூட்டு செயலின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. பரத்தில், திரித்துவ கடவுளின் கூட்டு செயலின் விளைவாக, இரண்டாம் நபர் மனித உடல் பெற்று, திரித்துவத்தின் அன்பின் வெளிப்பாடாக உலகில் தோன்றினார். பூமியில் யோசேப்பும் மரியாளும் தங்கள் கற்பினை பாதுகாத்து இறைவனுக்கு அற்பணித்து கடவுளின் திருச்சித்தம் நிறைவேற தங்கள் இணைந்த செயலின் விளைவாக இயேசுநாதர் பரிசுத்தத்தின் வெளிப்பாடாக உலகில் தோன்றினார் (மத். 1 : 18, 19). இயேசு நாதரின் மனித பிறப்பு, மனிதனின் வாழ்வில் பங்களிப்பு, ஆதரவு போன்ற இம்மானுவேலின் திருப்பணியை நிறைவேற்றியது, நற்செய்தியாயினும் இது மனிதனின் இணைந்த செயலுக்கு ஓர் அழைப்பினைத் தருகிறது. கிறிஸ்துவின் மனுஉருவேற்றலை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.



a) Eternal Birth - நித்திய பிறப்பு
b) Worldly Birth - உலக பிறப்பு
c) Spiritual Birth - ஆன்மீக பிறப்பு

மக்கள் மனதில் இறை நம்பிக்கை உருவாகச் செய்து அவர்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவை பிறக்கச் செய்வதே இன்றைய தேவை. இதற்கென கடவுள் திருச்சபையை அழைக்கின்றார், அதிகாரப்படுத்துகின்றார். பவுல் அடிகளாரின் வாழ்க்கையும் அதுவே. குழந்தையை பெற்றெடுப்பதற்கு ஒரு தாய் அனுபவிக்கின்ற பாடுகளை போல கிறிஸ்து பிறர் வாழ்வில் உருவாக பாடு ஏற்கும் ஊழியம் திருச்சபையிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தீத்து 3 : 5 "மறு ஜென்ம முழுகினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" இதுவே இன்றைய உலகிற்கு தேவை.

இரண்டாம் உலகபோரின் இறுதியில், தனது பணிபொறுப்பால், கிறிஸ்மஸ் ஆராதனைக்கு தனது சொந்த கிராமத்திற்கு செல்ல முடியாத ஒரு அமெரிக்கா படைவீரன் லண்டனில் ஒரு குறுகிய சாலை வழியாக சில நண்பர்களுடன் செல்கையில், 'Queen Ann's Orphange'-ஐ கண்டார். கதவை தட்டினார். இல்லத்தின் தலைவி கதவை திறந்தார். கிறிஸ்மஸ் கொண்டாட்டமாக இருந்தாலும், இல்லத்தில் கிறிஸ்மஸ்மரமோ, பரிசுகளோ ஒன்றுமில்லை. இந்த நண்பர்கள் சில பொருட்களை கொடுத்தனர். ஆனால் ஒரு சிறுவன் சுவர் அருகில் தனிமையாக நின்று கொண்டிருந்தான். அவனிடம் உனக்கு எந்த பரிசு வேண்டும் என்றார்கள். அந்த சிறுவன் எனக்கு எந்த பரிசுப்பொருளும் தேவையில்லை. அனால் "நான் நேசிக்கப்பட வேண்டும்" என்றான். இன்றைய உலகத்தின் அழிவின் மத்தியில் எழுப்பப்படும் குரல் இதுதான். இதுபோன்ற மனித இதயங்களிலும் பாவத்தால் வாழ்விழந்து நிற்போரின் ஆத்துமாவிலும் கிறிஸ்துவை உருவாகச் செய்வதற்குகான இணைந்த செயலுக்கு இறைவன் அழைப்பு தருகின்றார். கடவுள் மனிதனானார் என்பது பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி. அனால் இது தனிமனித செயலின் வெளிப்பாடு அல்ல கூட்டு செயலுக்கான ஓர் அழைப்பு.

**மன்றாட்டு :** *கருணையுள்ள நல்ல கடவுளே, இந்த தூய இரவிலே உம் மகனை எங்களுக்குத் தந்தீர். உலகிற்குரிய கடவுள் குழந்தையை சுற்றிப் போர்த்தும் நீண்ட துணியில் சுற்றப்பட்டு உலகின் மீட்பர் ஏழ்மை குடிலில் கிடந்தார். இத்தூய இரவிலே உம்முடைய அன்பின் இரகசியத்தில் எங்களை இழுத்தருளும். உன்னத உயர்வில் நாங்களும் உம்மகிமையைப் பாட விண்ணுலக பெருந்திரளோடு எங்கள் குரலையும் இணைத்தருளும். நாங்களும் காத்துக் கொண்டிருக்கிறவர்களில் ஒருவராகிய மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவைக் கண்டுகொள்ள மேய்ப்பர்களுக்கு மத்தியில் ஓர் இடத்தைத் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசுகிறிஸ்துவின் வழியே வேண்டுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. E. ஸ்டான்லி ராஜ்**

**25-12-2012**

***கிறிஸ்து பிறப்பு திருநாள்***

# அருளும் உண்மையும் நிறைந்தவரைக் கொண்டாடுவோம்

## Celebrating the Grace and the Truth

| | |
|---|---|
| மீக்கா 5 : 2 – 4 | 1 தீமோ. 1 : 14 – 17 |
| தி.பா. 19 | யோவா. 1 : 1 – 14 |

அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்றும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார். (யோ. 1:14 ஆ).

கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழா கிறிஸ்தவ சமயத்தின் ஓர் உன்னதத் திருவிழா. காரணம் கிறிஸ்துவின் பிறப்பில் "அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் எனும் நிலையில் மாட்சியைப் பெற்றிருந்தார்" (யோவா. 1 : 14 ஆ) என்பதனாலாகும். இங்கு சொல்லப்பட்ட "அருளும் உண்மையும்" இறைவனின் இரு அடிப்படைப் பண்புகள் எனவும் அவைகளின் மனித உருவே இயேசு எனவும் இறையிலாளர்கள் கருதுகின்றனர். பழைய ஏற்பாட்டில் இச்சொற்கள் **"ஹெசட் வ எமத்"** எனும் எபிரேயப் பதங்களில் இணைந்து வருகின்றன (வி.ப. 33 : 28, 34 : 5). கடவுள் தம் உடன்படிக்கையின் அன்பைக் காத்துக் கொள்வதில் உண்மையாயிருக்கிறார் என்பதே இவற்றின் வலுவானச் செம்பொருள். 'ஹெசட்' *(Hesed)* என்னும் எபிரேயச் சொல் உடன்படிக்கையின் அன்பைக் குறிக்கும் "கிருபை" அல்லது "அருள்" என்ற பொருளில் இடம் பெறுகின்றது. 'எமத்' எனும் எபிரேயச் சொல்லிற்கு அழிவற்ற, மாசற்ற, உறுதியான என்பவையே பொருள்கள். இதன்படி அருள் இல்லாத உண்மை பயனற்றது, அருளும் உண்மையும் இணைந்தே செல்லும், இவை இரண்டையும் பிரிக்க இயலாது "அருளும் உண்மையும்" இயேசு வழியாகவே இவ்வுலகில் வந்தன, இயேசுவே இவற்றின் உற்றானார் என்பதை அறிய முடிகின்றது. இவ்விருப் பண்புகளின் உறைவிடமான தந்தையின் நெஞ்சிற்கு நெருக்கமான இயேசுவே கடவுளை முழுமையாக வெளிப்படுத்த முடியும் என யோவான் அறுதியிட்டுக் கூறுகிறார். இந்தக் கருத்துக்கு இந்திய இறையியலாளர் A.J.அப்பாசமி என்பவர் "முழு முதற்கடவுளாகிய தந்தையே இயேசுவில் மகனாக மனுவுரு கொண்டு



**24-12-2012** ***கிறிஸ்து பிறப்பு ஆயத்தத் தொழுகை***

**Christmas Eve**

# பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி

## Good News of Great Joy

| | |
|---|---|
| ஏசா. 52 : 7 – 10 | தீத். 3 : 4–8 |
| தி.பா. 148 | லூக். 2 : 1 – 14 |

மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும் (எசா 52 : 10 ஆ)

மறதி நோயினால் பாதிப்படைந்த ஒரு பிரஞ்சு படை வீரனை, புகைவண்டி நிலையத்தில் உடலில் பல காயங்களுடன் சில மக்கள் கண்டெடுத்தனர். படைவீரனின் கேள்வி யாதெனில் நான் யார்? எங்கிருந்து வந்தேன்? என்பது. மூன்று குடும்பத்தினர் இவர் தங்கள் குடும்பத்தின் அங்கம் என உரிமை கோரினர். இதனை தெளிவுபடுத்த இக்குடும்பத்தாரின் இல்லமிருக்கும் கிராமங்களில் இவர் நடத்தி செல்லப்பட்டார். மூன்றாவது கிராமத்தில் குறுகிய தெருவழியாக சென்று, ஓரிரு படிக்கட்டுகளில் ஏறிச்சென்று ஓர் இல்லத்தின் வாசலை திறந்த போது பழைய நினைவுகள் திரும்ப பெறப்பட்டு, உள் உணர்வு தூண்டப்பட்டது. இல்லாத்தாரோடு இணைந்து குடும்பமாக மகிழ்ந்து களிகூர்ந்தனர். கிறிஸ்து பிறப்பு நாட்களில் மீண்டுமாக பழைய பெத்லகேம் கதை, பாதை காட்டிய விண்மீன், முன்னணை, ஆட்டிடையர்கள், தூதர்களின் வாழ்த்து பாடல், மரியாள் யோசேப்பு குடும்பம் இவைகளின் காட்சிகள், பாடல்கள், உண்மையான கிறிஸ்மஸ் மகிழ்வை நமக்கு திருப்பி கொண்டு வருகின்றன. கிறிஸ்து பிறப்பின் முழுமையான சிறப்பு தன்மையை விளக்குவதற்கு மகிழ்ச்சி என்ற வார்த்தைக்கு இணையாக வேறு வார்த்தைகள் இல்லை எனலாம்.

### 1. மீட்பருக்கான வாக்குறுதி நிறைவுப் பெற்றதால் மகிழ்வு

*மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும் (எசா. 52 : 10ஆ).*

தனக்கு எதிராக செயல்புரிந்த தூதர்களை தண்டித்த கடவுள் அதே செயலைச் செய்து இறை உறவை இழந்த மனிதனை மீட்க விருப்பம் கொண்டது விந்தையான செயல். கடவுள் முழு உலகமும் மீட்பு காண விரும்புகின்றவர். இதற்கென்று முதல் நற்செய்தியாக தொ.நூ. 3 : 15-ல் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார். இந்த வசனம் ஓர் சாபத்தின், எச்சரிப்பின் தன்மையுடையது போல் தோற்றமளித்தாலும், சோதனைக்காரனை நிரந்தரமாக வெற்றிபெறுவான் என்ற நற்செய்தியை உள் அமைத்து உள்ளது. இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு கடவுள் பல வருடங்கள் பல ஆயத்தங்கள் செய்ய தேவைப்பட்டது. பல இறை நம்பிக்கையுடையோர்

## 3. நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் : We as the Children of Light

யோவா. 12 : 36

*"நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்"*

ஒரு பெரிய பொறுப்பு நமக்கு முன்பாக வைக்கப்பட்டு உள்ளது. கடவுளைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைக் கண்டடைய வேண்டும் (எசா. 55 : 6). நாம் ஒளியினிடத்தில் விசுவாசமாயிருக்கவேண்டும். ஒளியைத் தொடுவதும் அதனைக் கண்டுபிடிப்பதும் அதில் விசுவாசம் வைப்பதும் நம் வாழ்வில் புதுமையை உருவாக்கும். நாம் இந்த வருடத்தின் கடைசி மணித் துளிகளில் நிற்கும்போது நாம் நம்மை தற்பரிசோதித்து நிறை குறைகளை ஆராய்ந்து பார்த்து கடவுளுக்கும் நமக்கும்; நமக்கும் நம்முடன் வாழ்விற்கும்; நம் பக்தி பயணத்துக்கும் நம் சமூகத்தின் இடையில் இருக்கும் விசுவாச வாழ்வுக்கும் தேவையானவைகள் யாவை என்பதை உய்த்து ஆராய்ந்து கணக்குப் பார்த்துக்கொள்வது அவசியம்.

கர்த்தரிடம் திரும்புவோம். அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். அவர் நம் வழிகளை செவ்வை பண்ணி பிறரோடு ஒன்றுபட்டு இறைவன் படைத்த உலகில் ஒற்றுமையுடன் கூடிய சமாதானம் பெற்று வாழ இறையருள் கூட இருப்பதாக.

**மன்றாட்டு :** *நிலை பேறுடைய கடவுளே, உம்முடைய பார்வையில் ஆயிரம் வருடங்கள் ஓர் இரவின் காவலாக இருக்கிறது. சென்ற நாட்களில் எங்களை நீர் வழிநடத்தியதைப் போல இப்போதும் எப்போதும் வழிநடத்தும். உம் விருப்பத்தை எங்கள் இருதயம் தெரிந்தெடுக்க கற்றுக்கொள்ளவும் புதிய தீர்மானங்களில் பலப்படவும் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாளும் இயேசுகிறிஸ்துவின் வழியே வேண்டுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. S. ஐசாயா**



## 3. கிறிஸ்து பிறப்பு : உடனிருப்பின் கொண்டாட்டம்

'நம்மிடையே குடிகொண்டார்' (யோவா. 1 : 14அ)

இயேசு பிறந்த காலத்தில், வரலாற்றில் செயல்பட்ட இறைவன் எங்கோ இருப்பார் எனும் கருத்து மக்களிடையே நிலவி வந்தது. தோற்றக்க கொள்கையின்படி "இயேசு கடவுள் தன்மை கொண்டவர். அவர் மனிதர் அல்லர். அவர் மனிதத் தோற்றம் தந்தாலும் உண்மையான மனிதராய் இருக்க முடியாது. ஏனெனில் ஞான உணர்வுச் சிந்தனை அடிப்படையில் நன்மையான கடவுள் தீமையையும் பாவத்தையும் பிறப்பிக்கும் மானுடத் தோற்றத்தை ஏற்க இயலாது. எனவே கடவுள் மனிதராக இருக்க முடியாது" எனும் தவறானக் கொள்ரகை பரவி வந்தததது. இக்காலத்தில் யோவான் நற்செய்தியாளர் இயேசு மனிதராகப் பிறந்து நம்மிடையே குடிகொண்டார் என்ற கருத்தை வலுவாகப் பதித்து (யோ. 1 : 14, 1 யோ. 4 : 2) தோற்றக் கொள்கையினை உதறித் தள்ளினார். இதற்கு எடுத்துக்காட்டாக யோவான் நற்செய்தியில் பல வசனங்கள் காணக்கிடக்கின்றன (யோ. 2 : 15; 6 : 51-58; 11 : 33, 35; 38, 19 : 28). இவை அனைத்தும் இயேசு ஒரு சாதாரண மனிதரைப்போல வாழ்ந்தார் என்பதைக் காட்டுகின்றன. மட்டுமன்றி இறைவனின் வாழ்வை மனிதரோடு பகிர்ந்து கொள்ளவே நம்மிடையே குடிகொண்டார் எனவும் யோவான் கூறுகிறார். 'குடிகொண்டார்' வாசம் செய்தார்) என்றச் சொல்லுக்கு 'கூடாரமடித்தார்' எனும் பொருளுமுண்டு. முற்காலத்தில் இஸ்ரயேலரின் பாலை நிலப்பயணத்தின்போது அவர்களின் பெலனற்ற, எளிமையான, இடம்பெயரும் தன்மைகொண்ட கூடாரத்தில் உள்ளுரைத்த இறைவன் பெலவீனமான, அழியகக்கூடிய, சாதாரணமான மனித உருவில் குடி கொண்டார் அல்லது வாசம் செய்தார் எனும் பொருளைப்புரிந்து கொள்ளலாம். சாதாரணத்தன்மையிலிருந்தே இயேசுவின் வளர்ச்சி தொடங்கியது. அழிந்துபோகும் உடலிலே அழியாதவர் வடிவம்பெற்று மனித வாழ்வில் உடனிருக்கிறார். பசித்திருப்போர், ஆடையற்றோர், நோயுற்றோர் சிறைப்பட்டோர் எனும் புறக்கணிக்கப்பட்ட மனிதர் வடிவில் தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்ட குழந்தை அருளையும் உண்மையையும் பிரதிபலித்து உயிர்ப்பின் அடையாளமாய் ஒளிர்ந்தது.

இறையியலாளர் மசூம்தார் என்பவர் எழுதிய "கீழை நாட்டு கிறிஸ்து" (The oriental Christ) நூலில், இயேசுவை ஓர் ஆசியனாகக் (Asian) காட்டுகிறார். எப்பிறாத்தாவின் ஆயிரங்களுக்குள் சிற்றூராம் பெத்லகேமில் பிறந்து, தச்சன் மகனாக வாழ்ந்து, கலிலேயப் பணி வாழ்வில் தொடர்ந்த அவரில் இன்று வலிமைமிக்க மேற்கத்திய கலாச்சாரம் மேலோங்குவதைக்

காணலாம். இதுவரை நம்மில் நிலவிய தருவைபுற்களால் கிறிஸ்மஸ் குடில் செய்யும் அடித்தட்டு மக்களின் பழக்கம்மாறி, பல ஆண்டுகள் பயன்படுத்தும் வகையில் நெகிழியிலான கிறிஸ்து பிறப்பு மரம் (plastic chrismas tree) மின்னி மினுங்கும் நட்சத்திரங்கள் (star lights) போன்ற அலங்காரப் பொருள்கள் வாங்கும் பழக்கங்கள் நம்மிடையில் வேகமாக பரவி வருகிறது. வர்ணம் பூசப்பட்ட மேனாட்டுக் கிறிஸ்துவைக்காட்டி அதில் நம்மை மறக்கும் கலாச்சாரத்தைத் தவிர்த்து சாதாரண தாய்நாட்டுக் கலாச்சாரத்தில் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடுவதால் சாதாரணத் தளக்கலாச்சாரத்தை மதிக்கிறோம் என்ற உணர்வில் கொண்டாட அழைக்கப்படுகின்றோம். இதன் வழி நாம் சாதாரண மக்களோடு உடனிருக்கிறோம் என்பதே பொருள்.

இயேசுவின் பிறப்புப்பெருவிழா நமது தீயவழிகளிலிருந்து தூயவழிக்கு ஆயத்தப்படுத்தும் வகையில் மானிடரிடையே உறவு கொண்டு மானுட உறுவேற்று, இறைவன் எங்கோ இருப்பவர் அல்ல மாறாக நம்மோடிருக்கும் வகையில் உடனிருக்க உறுவேற்று நம்மில் நீடிக்க உதயமான இயேசுவின் பிறப்பு இனிமையாக நமக்கிடையில் நிலவட்டும்!

**மன்றாட்டு :** *உன்னதங்களின் கடவுளே! உம்முடைய பிள்ளைகளாவதற்குரிய ஆற்றலை எங்களுக்கு தருவதற்காக மாமிச பலவீனத்தை உம்முடைய ஒரே மகன் தழுவிக் கொண்டார். உம்முடைய பிரசன்னத்தில் நாங்கள் வாழும்படியாய் உம்முடைய நிலையான வார்த்தை எங்களுக்குள் குடிகொள்ள தெரிந்தெடுத்தது. நீர் எங்களுடையதாக மாற்றப்பட்டது அந்த மகிமை எவ்வளவு விலையுயர்ந்தது என்பதை புரிந்து கொள்ள வேண்டிய ஞானத்தை தாரும். இயேசுகிறிஸ்துவிலே நாங்கள் அழைக்கப்பட்ட எதிர்பார்ப்பு எவ்வளவு பெரியது என்பதை புரிந்து கொள்ளும் ஆற்றலைத் தாரும். உம்மோடும் தூய ஆவியோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் நிலை வாழ்வின் ஒளியைக் கெடுக்கும் இயேசுகிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. S. வில்சன்**



கடவுள் நமக்கு தந்திருக்கும் வாழ்விலும் பதட்டங்கள் உண்டு. வேதனைகள் உண்டு. காரணம் மனிதன் தன் வாழ்வாதரத்தை தானே அழித்து வருவது வாழ்வின் அச்சத்தை அதிகரிக்கிறது. இருப்பினும் இறைவன் நம்மீது கொண்ட அனாதி தீர்மானத்தை மாற்றாமல் வைத்து நம்மில் செயல்பட்டு தம் அன்பை வெளிப்படுத்தி வருகிறார். இவ் அன்பின் அடிப்படையில் பார்க்கும்போது இன்றைய மூன்று பாடப்பகுதியும் தரும் செய்திகளை மூன்று கோணங்களில் சிந்திப்பது நலமாயிருக்கும்.

**1. நாம் ஒரு புனிதப் பயண சமூகம் :** We as a Pilgrim Community தி.பா. 121 : 8

*“கர்த்தர் போக்கையும் வரத்தையும் காப்பவர்”*

கிறிஸ்தவன் நிலையான அரசை நோக்கி பயணம் செய்யும் ஒரு பயணி என ஜாண்பனியன் மோட்சப் பிரையாணம் என்ற நூலில் எழுதியிருக்கிறார். கிறிஸ்தவ சமூகம் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும். குலமூதுவர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்கள் கானான் தேசத்தை எதிர்நோக்கிப் பயணம் செய்த பயணிகள் எப்போதும் இயங்கிக் கொண்டே இருந்தனர். தங்கள் வாழ்வில் லட்சியத்தை எதிர்நோக்கி நடந்தவர்கள். அவர்கள் ஆபத்தை எதிர்த்துநின்று தாக்கி வெற்றி பெற்றவர்கள். நேருக்கு நேராக நின்று சாத்தானையும் அதன் சகல அஸ்திரங்களையும் இறைவனின் சர்வாயுத வர்க்கத்தால் எதிர்த்து வெற்றி கொண்டவர்கள். நம் வாழ்விலும் நாம் அவரில் கட்டுப்பாடுடன் நின்று எதிரியை ஜெயிக்க அவர் நம்மைக் காப்பாராக.

**2. நாம் ஓர் உடன்படிக்கை சமூகம் :** We as a Covenant Community ஏசா. 55 : 12.

*“நீங்கள் மகிழ்ச்சியாய் புறப்பட்டு சமாதானமாய் கொண்டு போகப்படுவீர்கள்”*

பயணம் செய்கிற யாத்திரிகன் ஒரு லட்சியத்தை அடைவதே அவன் நோக்கமாகும் (Journey towards destination). இலட்சியங்களை அடைய நாடும் பயணி அதனைத் தடை செய்யும் சக்திகளை அழிக்கக்கூடிய ஒப்படைப்புடன் இருப்பது அவசியம். வாக்குத் தத்தத்தின் அடிப்படையில் கிறிஸ்தவ சமூகம் வழிநடத்தப்பட்டாலும் ஜனங்கள் தங்களை வழிநடத்தும் கடவுளின் அன்புக்கும் அரவணைப்பிற்கும் கையளிப்பது அவசியம். அவ்வாறு அற்பணிக்கும்போது லட்சியங்கள் நிறைவேறும். நடந்து வந்த பாதைகளில் இறைவனின் வாக்குத்தத்தம் எவ்வித நிலைகளில் செயல்பட்டது இனி எவ்விதம் செயல்படஉள்ளது என்பதை அறிந்து முன்னேறுவதற்கு அவர் துணையாய் இருப்பார்.

## 1. அன்பற்றத் தன்மை : (1 யோவா. 2 : 11)

அன்பு குடும்பத்தின் மகிழ்ச்சிக்கு அடிப்படையான காரணம். சகோதரர் சகோதரி இடையே, பெற்றோர் பிள்ளைகள் இடையே, கணவன் மனைவி இடையே, அன்பற்ற நிலை காணப்பட்டால் அது இருளடைந்த வாழ்வு. இந்த அன்பற்ற நிலை உறவு முறிவுகளையும் அதின் மூலமாக மகிழ்ச்சிக் குறைவையும் உண்டாக்குகிறது. ஆகவேதான் மத். 5 : 23, 24-இல் சகோதரனோடு உறவு இல்லாதவன் உறவை ஏற்படுத்திக் கொண்டு பின்னர் காணிக்கையை செலுத்து என இயேசு கிறிஸ்து கூறுகின்கிறார். கணவன் மனைவி இடையே அன்பின் உறவைப் பற்றி பவுலார் கூறும்போது புருஷன் மனைவியை தன் சொந்த சரீரமாக பாவித்து தன்னில் அன்பு கூருவதுபோல மனைவியினிடத்திலும் அன்பு கூற வேண்டும் என்கிறார் (எபே. 5 : 28, 33) . அதேப்போன்று மனைவியும் புருஷனிடத்தில் பூரண அன்புடையவனாக இருக்க வேண்டும். 2 சாமுவேல் 6 : 20-23-இல் தாவீது மீகாள் இடையே அந்த அன்பு குறைவு காணப்பட்டதால் உறவு முறிவும் மோதலும் ஏற்படுகின்றது.

உண்மையான அன்பு அனைத்து குணங்களையும் உடையதாக இருக்கும் (1 கொரி. 13 : 4-7) இத்தகைய அன்பு நம்மில் காணப்படுமாயின் உடைந்த உறவுகள்கூட திரும்ப கட்டப்படும். இதனால் மகிழச்சி பெருகும்.

## 2. மன்னிக்க மறுக்கும் தன்மை : (லூக். 15 : 26-28)

இங்கு மன்னிக்க மறுக்கும் சகோதரனைக் காண்கின்றோம். தவறுசெய்த இளைய சகோதரன் மனம் திரும்பி வீட்டிற்கு திரும்பி வந்துள்ளான். தந்தை மன்னித்து ஏற்றுக் கொண்டார் (20) வீட்டில் உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சி - விருந்து - ஆரவாரம் (25) ஆனால் மன்னிக்க மறுக்கும் அண்ணனால் அந்த இல்லத்தில் மகிழ்ச்சி தடைபடுகின்றது. அன்பு மிருகங்களிடத்திலும் காண முடியும். ஆனால் மன்னிப்பு இறைவனுக்கே உரிய சிறப்பு பண்பு. எனவேத்தான் இயேசுக்கிறிஸ்து மன்னிப்பிற்கு மாதிரியாக இறைவனையே சுட்டிக்காட்டுகின்றார் (மத். 18 : 32,33). அத்துடன் இறைவனின் அடியவர் மன்னிப்பதற்கு எல்லையை வைக்கக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். ஏனெனில் இறைவனின் மன்னிப்பிற்கு எல்லை என்பதே இல்லை. இந்த மன்னிப்பின் தன்மை நம்மில் இருந்தால் குடும்பத்தில் ஒருவர் தவறு செய்தால்கூட அவரைக் குற்றவாளி என்ற நிலையில் அவரை அணுகாதபடி அவர் மனம் திரும்ப வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் அவரை அணுகுவோம் (கலா. 6 : 1). அப்போது குடும்பத்தில் நிறைவான மகிழ்ச்சி உண்டாகும்.

## 3. சுயம் சார்ந்த தன்மை :

தொ.நூ. 27 : 1-29 வரையுள்ள திருமறைப் பகுதியில் ஈசாக்கு, ரெபேக்காள் இருவரும் தங்கள் இரு பிள்ளைகளையும் சமமாகப்



பாவிக்கவில்லை. ஈசாக்கு மூத்தமகன் ஏசாவை மட்டும் ஆசீர்வதிக்க ஆசைப்படுகிறார் (தொ.நூ. 27 : 4). ஆனால் ரெபேக்காள் அந்த ஆசீர்வாதம் தன் இளைய மகன் யாக்கோபுக்கு கிடைக்க ஈசாக்கின் பார்வையற்றத் தன்மையை பயன்படுத்தி சதி செய்கிறார் (தொ.நூ. 27 : 7,8). இதற்கு காரணம் அவர்கள் இருவரின் சுயநலம். தொ.நூ. 25 : 26,27 வசனங்களில் தனது நாவிற்கு ருசியுள்ள இறைச்சியை வேட்டையாடிக் கொண்டு வருவதால் ஈசாக்கு ஏசாவின் மீதும் யாக்கோபு குணசாலியாக வீட்டில் இருந்து தனக்கு உதவி செய்வதால் ரெபேக்காள் மீது சிறு வயது முதலே பாசம் வைத்து வளர்க்கின்றனர். இதனால் சகோதரிடையே உறவு முறிகிறது. ஒருவரையொருவர் மேற் கொள்ளவும் அழிக்கவும் முயலுகின்றனர் (தொ.நூ. 25 : 31, தொ.நூ. 27 : 41). இதனால் இணைந்து மகிழ்ச்சியுடன் வாழ வேண்டிய குடும்பம் பிரிகின்றது. மகிழ்ச்சி அற்றுப் போகின்றது.

இன்று குடும்பத்தில் இத்தகைய தன்மையினாலும், நான் சொல்வதை அனைவரும் கேட்க வேண்டும் என்று மற்றவர்களது உணர்வுகளை மதிக்காத சுயநல தன்மைகளாலும் உடைந்து போகின்ற குடும்பங்கள் ஏராளம்.

அன்புடையீர் குடும்பத்தின் மகிழ்ச்சிக்கு தடைகற்களாய் நிற்கும் அன்பற்றத் தன்மை மன்னிக்க மறுக்கும் பண்பு, சுயம் சார்ந்த வாழ்வு இவற்றைவிட்டு மகிழ்ச்சியான குடும்பத்தைக் கட்டியெழுப்புவோம். இறைவன் நம்முடன் இருந்து துணை செய்வாராக!

**மன்றாட்டு** : *நிலைபேருடைய கடவுளே, எங்கள் படைப்பாளரே குடும்பங்களாக வாழ எங்களை உருவாக்கினீர். உம்முடைய மக்கள் வாழும் எல்லா குடும்பங்களையும் உம்முடைய பராமரிப்பில் நாங்கள் அர்ப்பணிக்கிறோம். அவர்களை நம்பிக்கையினாலும், ஒழுக்கத்தாலும், அறிவாலும், அடக்கத்தாலும், பொறுமையாலும் கடவுள் பற்றினாலும் நிறைந்தருளும். திருமணத்தால் ஒன்றிணைக்கப்பட்டவர்களை நிலைத்திருக்கும் அன்பினால் கட்டியருளும். பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கவும் அவர்களுக்குள்ளே இரக்கமாகிய தீயை ஒளிரச் செய்யும். அதனூடாக அன்பையும் அரவணைப்பையும் கிறிஸ்துவினூடாக காண்பிக்க உதவிபுரியும். உம்மோடும் தூய ஆவியரோடும், என்றென்றும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்துவின் வழியே வேண்டுகிறோம். ஆமென்.*

**அருள்திரு. விக்டர் ஞானராஜ்**

**31-12-2012**

*வருட இறுதித் தொழுகை*

## ஆண்டவரே நமது உதவியும், மீட்பருமானவர்

## The Lord is our Help and Redeemer

ஏசா. 55 : 6 – 13 | 2 கொரி. 13 : 5 – 13
தி.பா. 121 | யோவா. 12 : 35–36

"நீங்கள் நம்பிக்கையில் நிலைத்திருக்கிறீர்களா என உங்களையே சோதித்துப் பாருங்கள்" (2 கொரி. 13 : 5).

இவ்வருடத்தின் பக்திப் பயணத்தின் இறுதியில் நாம் வந்திருக்கிறோம். வர்த்தக உலகில் ஆண்டு இறுதிக் கணக்கு முடிவு செய்வார்கள். இதனை ஆங்கிலத்தில் (Stock Checking) என்பார்கள். இதில் மொத்தம் வாங்கிய தொகை, விற்பனையானவை, மீதம் இருப்பவை, வங்கியில் இருக்கும் தொகை ஆகியவற்றை சரிபார்த்து வருட லாபம் எவ்வளவு அல்லது நஷ்டம் எவ்வளவு எனக் கணக்கு எடுப்பார்கள். Calendar என்பதற்குகூட லத்தின் மொழியில் கணக்குப் புத்தகம் என்று தான் பெயர்.

இன்று, நாம் கடந்த ஒரு வருட காலமாக செய்து வந்த அனைத்து செயல்களையும் சிந்தித்து நன்மை செய்தவை எத்தனை? தீமை செய்தவை எத்தனை? என்பதை உணர்ந்தறிவோம். கடவுளிடமிருந்து பெற்ற தாலந்துகள் ஐந்து, அது பத்தாக வளர்ந்ததா? இல்லை பெற்றது ஒன்று அதுவும் நிலத்துக்கு அடியில் சென்று விட்டதா? எனக் கணக்கிட வேண்டும்.

மேலும் எவ்வளவு கடவுள் நம்மிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார், எவ்வளவு பெரிய காரியங்களை செய்தார், எவ்வளவு நன்மைகளை நமக்குத் தந்தார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்(Count Your Blessed Stocks).

கடந்த 365 நாட்களாக பூமி சூரியனை ஒருமுறை சுற்றி வந்துள்ளது. அடுத்த சுற்றுக்கு ஆயத்தமடைகின்றது. கடவுளின் படைப்பில் ஒரு அணு கூட சிறிதும் மாற்றமின்றி அதின் அச்சில் சுழன்று கொண்டிருக்கிறது என்றால் நாம் கிறிஸ்து இயேசுவாகிய அச்சில் நின்று அவர் சித்தப்படி இயங்கி வருகிறோமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.



**30-12-2012**

*குடும்ப ஞாயிறு*

## அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பம்

## Warmth and love in the family

தொ.நூ. 27 : 1–29 | 1யோவா. 2 : 7–17
தி.பா : 127 | லூக். 15 : 11–32

"அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள்" (லூக். 15 : 24)

மனிதனின் மகிழ்ச்சியின் அடிப்படை குடும்பம். ஏனெனில் மனிதனின் மகிழ்ச்சி எப்போதும் உறவுகளுடன் இணைந்ததாகக் காணப்படுகின்றது. அந்த உறவுகளின் அடிப்படையே குடும்பம் தான். கடவுள் முதல் குடும்பத்தை உருவாக்குமுன் அவரது எண்ண ஓட்டங்களை குறிப்பிடும் திருமறை "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று அவனுக்கு தகுந்த துணையை உண்டாக்குவேன்" என்று குறிப்பிடுகின்றது. அத்துடன் நில்லாது மனிதனுக்கு ஏற்ற துணையாக மனுஷியை உருவாக்கிய கடவுள், அவர்கள் வாழும் தோட்டத்திற்குச் சென்று அவர்களுடன் உலாவும் பழக்கத்தையும் வைத்திருந்தார் (தொ.நூ. 3:8).

குடும்பம் என்பதே மனிதனின் மகிழ்ச்சிக்காக கடவுள் அமைத்துக் கொடுத்த ஒன்றாகும். அந்த குடும்பத்தில் நாம் எப்படி வாழ்கின்றோமோ அதின் அடிப்படையில் தான் நமது மகிழ்ச்சியும் குடும்பத்தின் மகிழ்ச்சியும் அமைகிறது.

ஜாண் பி. செரின் என்பவர் கூறும் போது "மகிழ்ச்சி என்பது நமது சுழ்நிலைகளால் அமைவது அல்ல அது நமக்குள் இருக்கிறது. அது வானவில்லைப் போல நாம் பார்க்கக்கூடிய ஒன்று அல்ல அல்லது நெருப்பின் சூட்டை நாம் உணருவது போல உணரக்கூடியதும் அல்ல. அது நாம் எவ்வாறு இருக்கிறோமோ அதின்படி அமைவது" என்கிறார். குடும்பத்தின் மகிழ்ச்சியில் ஒவ்வொரு அங்கத்தினரில் மகிழ்ச்சியும் அடங்கி இருக்கிறது. குடும்பத்தில் ஒருவரது செயல்பாடுகள், குடும்பத்தின் அனைத்து அங்கத்தினரின் மகிழ்ச்சியையும் சிதைத்து மனிதன் எப்போதெல்லாம் உறவைக் கெடுக்கின்றானோ அப்போதெல்லாம் தனது மகிழ்ச்சியையும் பிறரது மகிழச்சியையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றான். இன்று மகிழ்ச்சியான குடும்பம் அமைவதற்கு தடையாக உள்ள காரணிகள் குறித்து சிந்திப்போம்.

பயந்த மருத்துவப் பணிப் பெண்களாக காணப்பட்டார்கள். இந்தப் பெண்கள் எகிப்திய மன்னனுக்கு நேரடித் தொடர்புடைய பெண்களாக காணப்பட்டனர். இறையியலாளர்கள் குறிப்பிடும்பொழுது இந்த பணிப்பெண்கள் எபிரேய மருத்துவப்பணிப் பெண்களாகவோ அல்லது எபிரேய பெண்களுக்கு பிரசவம் பார்க்க நியமிக்கப்பட்டிருந்த எகிப்திய பணிப் பெண்களாகவோ இருக்கலாம் என்கின்றனர். (வி.ப. 1 : 15, 18-19). உண்மையாகவே இந்த பெண்களின் பணி ஆபத்து நிறைந்தது. அதே வேளையில் மாற்றுருவாக்கத்திற்கு அடித்தளம் அமைப்பதுவுமாயிருந்தது. இப்பெண்கள் தங்களை விடுதலைப்பணியில் ஈடுபடுத்த இவர்களிடமிருந்த சிறப்பியல்புகளைத் தியானிப்போம்.

### 1. அறிவை ஆயுதமாய் பயன்படுத்தினர் : (வி.ப. 1:19)

விடுதலைப் பயணத்தில் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுத்த கட்டளைகளில் ஒன்று வி.ப. 20:13 "கொலை செய்யாதே" என்பதாகும். சிப்ராள், பூவாள் கொலை செய்தல் பாவம் என்ற சிந்தனையில் தெளிவுடையர்களாய் காணப்பட்டனர். ஆகவே, ஆண் மகவு என்றால் அதை கொன்று விடுங்கள் என்ற பார்வோனின் கட்டளைப்படி செய்யவில்லை. இதை அறிந்த பார்வோன் அவர்களை அழைத்து கேட்கிறான் ஆண் மகவை உயிரோடு ஏன் காப்பாற்றுகிறீர்கள் என்றான். அதற்கு அவர்கள் அறிவுப்பூர்வமான பதிலை கூறுகின்றனர். அரசே "எபிரேயப் பெண்கள் எகிப்தியப் பெண்களைப் போன்றவரல்லர். வி.ப. 1 : 19. அவர்கள் வலிமை கொண்டவர்கள். மருத்துவப்பெண்கள் செல்வதற்கு முன்னே அவர்களுக்குப் பிள்ளைப்பேறு ஆகி விடுகிறது" என்று கூறினர். வன்முறைக்கு எதிராக இவர்கள் அமைதியான அறப்போராட்டம் நடத்தினர். குழந்தைகளை பாதுகாப்பதில் வரும் சிக்கல்களை சமாளிப்பதில் மிக முனைப்பாகக் காணப்பட்டனர். விடுதலைப்பணிக்கு தங்கள் உயிரையும் துச்சமாகக் கருதினர். நீதிமொழிகளில் கூறப்பட்ட புத்தியுள்ள பெண் தன் வீட்டை கட்டுகிறாள் என்பதை செயலாக்கம் செய்தனர். இஸ்ரயேல் மக்கள் இனம் அழிந்து போகாமல் அவர்கள், சமூகம், இல்லம் கட்டி எழுப்பப்படும் கடவுளின் கருவிகளாய் செயல்பட்டனர். ஒரு சமூக விடுதலைக்கு வித்திட்டனர். தங்களை அர்ப்பணித்தனர். மாற்றுருவாக்கத்தின் மகுடமாய் திகழ்ந்தனர். இவர்களைப் போன்று அன்றாட வாழ்விலும் பணியிலும் பெண்கள் அறிவை ஆயுதமாய் பயன்படுத்த வேண்டும். பார்வோனின் எபிரேயக் குழந்தைகளை கொலை செய்ய வேண்டுமென்ற கொடுமையான சட்டத்தை அறிவென்னும் கருவியால் மேற்கொண்டனர். ராகாப் என்ற விலைமாது தன் அறிவால் வேவுகாரரை மறைத்து வைத்து, அவர்களையும் காப்பாற்றி, தன்னையும் அழிவின் ஆழக்குழியிலிருந்து காப்பாற்றிக் கொண்டாள். வீர வார்த்தைகளை வாளாய் பயன்படுத்திய தெபோராள் பாராக்கை தைரியத்தோடு போர்முனைக்கு அனுப்பி, இஸ்ரயேலர்



*திருமறைப் பள்ளி ஆண்டுவிழா* **விழாக்கால அருளுரை**

## பணிந்து வாழும் பிள்ளைகள்

லூக். 2 : 40 – 52

"குழந்தை வளர்ந்தது, வலிமைபெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது" (லூக். 2 : 40).

திருச்சபையின் திருப்பணிகளில் மிகவும் சிறப்புக்குரியத் திருப்பணி திருமறைப்பள்ளித் திருப்பணி. திருச்சபையின் குழந்தைகளை கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்தும் சீரியப் பணியினை இது நிறைவேற்றுவது மகிழ்வான அனுபவம். இவ்அனுபவத்தோடு ஆண்டுவிழா கொண்டாடும்போது கடந்த கால இறைவழி நடத்துதலுக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த ஆண்டுவிழா நிகழ்வில் இயேசுவின் இளமைப்பருவம், அப்பருவத்தில் பெற்றோர் அவரைக் கையாண்ட முறை ஆகியவற்றை சிந்திப்பது நமது பிள்ளைகளை குடும்ப அளவிலும் திருச்சபை அளவிலும் கையாள வேண்டிய உண்மைகளை கற்றுத் தருகிறது.

இயேசுவின் 12 வது வயதில் அவரது பெற்றோர் யூத வழக்கத்தின் அடிப்படையில் பஸ்கா பண்டிகை கொண்டாட எருசலேமுக்கு அழைத்துச் சென்றனர். 12 வயது யூத பழக்கத்தில் வாலிபராகும் வயதிற்கு முந்திய வயது. இந்த வயதில் பஸ்கா பண்டிகை கொண்டாட எல்லா பிள்ளைகளும் எருசலேம் செல்ல வேண்டும். எருசலேம் செல்லும் பாதையில் கொள்ளையர்கள் உண்டு. ஆகவே கூட்டம் கூட்டமாக செல்வர். இந்த கூட்டத்தோடு ஆவியில் பெலன் கொண்ட இயேசுவாகிய குழந்தையும் பங்குபெற்று எருசலேம் சென்று பண்டிகை கொண்டாடினது. ஆனால் முடிவில் எருசலேமிலே தங்கிவிட்டது. இது அவரது பெற்றோருக்கு தெரியாமலிருந்தது (லூக். 2 : 43). பண்டிகை முடிந்து பெற்றோர் ஊர் திரும்பியபோது இயேசு அவர்களோடு வரவில்லை என்பதை ஒரு நாள் பயணம் முடிந்த பின் கண்டனர். அப்போது இயேசுவின் பெற்றோர் என்ன செய்தனர் என்பதை சிந்திப்போம்.

### 1. இருப்பிடமறிய தேடினர் (லூக். 2 : 44)

பனிரெண்டாவது வயது வாலிப வயது. இவ்வயதினரைக் கவனமாக கையாள வேண்டும். 12 வயதில் பண்டிகைக் கொண்டாடச் சென்ற இயேசுவின் இருப்பிடம் பெற்றோருக்குத் தெரியாமலிருந்தது. மூன்று நாள்

பிரயாணத் தூரத்தில் முதல் நாள் பிரயாணம் முடிந்த பின்னர் உறவினர், அறிமுகமானவர் அனைவரிடமும் தேடினர். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. முதல்நாளிலேயே தங்களது கட்டுப்பாட்டில் பிள்ளையில்லை என்பதை பெற்றோர் கண்டுபிடித்தனர். ஆகவே உடனடி பிள்ளையின் இருப்பிடமறியத் தேடினர்.

ஆவியின் பெலன், ஞானத்தின் நிறைவு, கடவுளின் கிருபை மிகுந்த பிள்ளையே தவறினதென்றால் நமது பிள்ளைகள் எப்படி? ....தவறுமா?

நமது பிள்ளைகள் எத்தனை ஆண்டுகளாக தவறிக்கிடக்கின்றன? மீட்கமுடியாத சூழலில் தேடுகிறோம். பலன் இல்லை வேதனை. இச்சூழலில் பிள்ளைகள் இறை உறவில் நிலைத்து நிற்க பெற்றோருக்கும் திருச்சபைக்கும் பங்கு உண்டு. தங்களது குழந்தை இறைக்குழந்தை, தவறிச் செல்லாது எப்படியும் திரும்ப வீட்டிற்கு வந்துவிடும் என எண்ணி பெற்றோர் நாசரேத் பயணத்தை தொடரவில்லை. சற்றும் தாமதிக்காமல் பிள்ளையின் இருப்பிடத்தை அறிய எருசலேமுக்குத் தேடிச்சென்றனர். இறுதியில் பிள்ளையின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தனர்.

எனது பிள்ளை என்னைவிட்டு செல்லாது என பிள்ளைகள் மீது முழு நம்பிக்கையும் கொண்டுள்ள பெற்றோர் எத்தனை? அப்படி பிள்ளைச் சென்றாலும் திரும்பி வரும் எனக் காத்திருக்கும் பெற்றோர் எத்தனை? பிள்ளைகளின் இருப்பிடம் பெற்றோருக்கு தெரிய வேண்டும். லூக்கா. 15 : 4 யில் காணாத ஒரு ஆட்டை மேய்ப்பன் தேடிச் சென்றான். மீதமுள்ள 99 ஆடுகள் இருக்கிறதே ஒன்றுதானே... அது வரும் எனக் காத்திருக்கவில்லை. திருச்சபையும் இத்திருப்பணியினை நிறைவேற்ற வேண்டும்.

**2. கண்டித்து வளர்த்தனர்** (லூக். 2 : 48)

இருப்பிடமறியத் தேடின இயேசுவின் பெற்றோர். அவரை எருசலேம் ஆலயத்தில் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். காரணம் என்னவென்றால் அவர் போதகர் நடுவில் அமர்ந்து அவர்களது பேச்சை கவனித்து, கேள்வி எழுப்பினார். அவரது பதிலை கேட்டவர்கள் அனைவரும் மலைத்து போயினர். (லூக். 2 : 46). இச்சூழலில் நாமென்றால் பிள்ளையை பார்த்து பெருமை கொள்வோம். ஆலயத்தில் தானே இருந்தார் என்று இயேசுவை அவர்கள் பாராட்டவில்லை. மகனே ஏன் இப்படி செய்தாய்? இதோபார் நானும் உன் தந்தையும் மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே என அன்போடு கண்டித்து உணர்த்தினர். காரணம் எருசலேமில் அமர்வதை பிள்ளை சொல்லவில்லை. பெற்றோரின் கட்டுபாட்டை விட்டு பிள்ளை வெளியே வந்துவிட்டது.



*பெண்கள் சங்க ஆண்டுவிழா* **விழாக்கால அருளுரை**

# மீட்பின் ஊடகங்கள் பெண்கள்

வி.ப. 1 : 15–21

கடவுள் மருத்துவப் பெண்களுக்கு நன்மை செய்தார். இஸ்ரயேல் மக்களையும் எண்ணிக்கையில் பெருகச் செய்தார். (வி.ப. 1 : 20)

இஸ்ரயேல் மக்களின் விடுதலை வாழ்வில், பயணத்தில் பெண்களின் பங்களிப்பு சிறப்பானது. இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மோசேயின் தாய், மோசேயின் சகோதரி மீரியாம், பெயர் குறிப்பிடப்படாதப் பார்வோனின் மகள், சிப்ராள், பூவாள் என்ற மருத்துவப் பணிப்பெண்கள் போன்றோர் ஆவார்.

“மனித விடுதலை” என்பது அடிப்படை உரிமைகளில் ஒன்று. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் ஒரு இனம், சமூகம், நாடு மற்றொரு இனத்தை சமூகத்தை அடக்கி ஆளும் வரலாறுகளை நாம் காணலாம். மனித நேயம், மனித மாண்பு, மனித நலம் போன்றவை அடக்குமுறையில் பேணிகாக்கப்படுவதில்லை. அடக்குமுறை, அநீதி, தீவிரவாதம், பயங்கரவாதம், வன்முறைகள், பிரிவினைகள் இவை மனுக்குலத்தை அழிவிற்கு எடுத்துச் செல்கிறது. இதற்கு காரணம் அதிகார வெறி, ஆணவம், செல்வதிரட்சி, பொறாமை, அடக்கி ஆளும் சுபாவம், வலிமையற்றோர், வலிமைபெற்று அதிகாரத்தை, ஆட்சியை பிடித்து விடுவார்களோ என்ற அச்சம் போன்றவை. ஆகவே சிறுபான்மையர் ஒடுக்கப்பட்டு நசுக்கபடுகின்றனர். இவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இஸ்ரயேல் மக்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட வேளையில் அவர்களை மரணத்தின் விளிம்பிலிருந்து விடுதலை செய்யும் விடிவெள்ளியாய் திகழ்ந்தவர்கள்தான் சிப்ராள், பூவாள் என்ற மருத்துவ பணிப்பெண்கள். இவர்களைக் குறித்து சிந்திப்பதும், இறைநாமத்தை மகிமைப்படுத்துவதும் நம் கடமையன்றோ!

இந்நாளின் சிந்தையின் கருப்பொருள் “பெண்களும் கடவுளின் விடுதலைப் பணியின் பங்காளர்களே”. இதற்கான நடுவண் வசனம் வி.ப. 1 :7. “மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருப்பவர்களாதலால் எகிப்திய மன்னன் தங்களுக்குக் கூறியிருந்தபடி செய்யவில்லை, ஆண் குழந்தைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்”. எகிப்திய அரசனின் அரச கட்டளை என்னவெனில் பிறக்கும் எபிரேய ஆண் குழந்தைகளைக் கொலை செய்யவேண்டும். ஆனால் சிப்ராள், பூவாள் என்ற மருத்துவபணிப் பெண்கள் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில் அவர்கள் கடவுளுக்கு

அவர்கள் விருப்பம் போல் வாழ்வதற்கு அனுமதிக்கிறோம். பிள்ளைகள் கீழ்படியாதபோது வேதனையடைகிறோம். ஆலயத்திலிருந்த சிறுவனாகிய இயேசுவை பெற்றோர் ராஜாவாக பார்க்காமல் பிள்ளையாக பார்த்து கீழ்படியாமையினை உணர்த்தினர். தொடர்ந்து அவர் பெற்றோருக்கு அடங்கி வாழ்ந்தார்.

பிள்ளைகளே! திருமறை "பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கீழ்படியுங்கள்" (எபே. 6 : 1) என்றும் "தந்தையும் தாயையும் மதித்துநட, இதனால் நீ நலம் பெறுவாய், மண்ணுலகில் நீடூழி வாழ்வாய்" (எபே. 6 : 2, 3) என்றும் போதிக்கிறது. இப்போதனைகளை கைக்கொண்டால் வாழ்வில் மேன்மை பெறலாம்.

இயேசு தனது முப்பது வயது வரை பெற்றோருக்கு உதவியாய், கீழ்ப்படிந்து தந்தையோடு தொழில் செய்தார். இயேசு தனது இளமை பருவத்தில் ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும், மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் (லூக். 2 : 52). நமது பிள்ளைகளும் இந்நிலையில் வளர திருச்சபையின் திருமறைப்பள்ளியின் செயல்பாடு அமைந்திட கடவுள் உதவிச் செய்வாராக. ஆமென்.

**அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்**



*பக்திமுயற்சி சங்க ஆண்டுவிழா* **விழாக்கால அருளுரை**

# தூய வாழ்வு வாழும் இளையோர்

**1 தெச. 4 : 1–8**

கடவுள் நம்மை தூய வாழ்வுக்கே அழைத்துள்ளார்... (1 தெச. 4 : 7).

இளமைப்பருவம் வாழ்வின் வளமை பருவம். இளமைப் பருவம் வாழ்வின் லட்சியங்களை உள்ளடக்கி சாதனைகளை சாதிக்கும் பருவம். எதிர்நீச்சல் போட்டு எதிரிடும் எதிர்ப்புகளை தகர்த்தெறியும் பருவம். இப் பருவத்தில் பல தடுமாற்றங்கள் வருவது இயல்பு. இப்பருவத்தில் வாழ்வின் லட்சியம் புரியாமல் வாழ்வை அழித்துக் கொண்டிருக்கின்றனர். அநேகர் தன் இளமைப்பருவத்தை நல்ல முறையில் கட்டிக்காப்போர் சிலரே. இந்நிலையில் தூய பவுலார் கடவுள் நம்மை ஒழுக்க கேட்டிற்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார் எனக்கூறி இளமைப் பருவத்தில் தூயவாழ்வு தான் பொருள் நிறைந்த வாழ்வை தரும் என்பதை சிந்திக்கத் தூண்டுகிறார் என்பதை கீழ்வருவனவற்றின்படி சிந்திப்போம்.

## 1. தூய்மையைச் சார்ந்து வாழ்தல்

இன்றையச் சூழலில் இளமைப்பருவத்தை பல்வேறு தீய வாழ்வுக்கு உட்படுத்தி, தங்களது வாழ்வை அழிப்பவர் பலர். தீமைகள் பல செய்து தங்களையும், தங்களைச் சார்ந்த சமூகத்தையும் சீரழித்து கொண்டிருக்கும் சூழலில் தூய வாழ்வின் முக்கியத்துவத்தை பவுலார் கடவுள் தூயவராய் இருப்பதுபோல நீங்களும் தூயோராய் இருங்கள் (1 தெச. 4 : 7, லேவி. 19 : 2). எனக் கூறுகிறார். மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுத்தத்தையும் நம்மைவிட்டு நீக்கி, நம்மை சுத்திகரித்து, தூய்மையாக்குதலை கடவுள் பயத்தோடே முழுமைப்படுத்தக்கடவோம் என தூய்மைபடுத்துதலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார் (2 கொரி. 7 : 1). எபே. 4 : 29, 30இல் தீய வாத்தைகள், தீய செயல்கள் ஒன்றும் உங்களிலிருந்து புறப்பட வேண்டாம். உங்கள் பாவ செயல்களால் தூய ஆவியாரைத் துக்கப்படுத்தாதிருங்கள் (1 கொரி. 6 : 15) உங்கள் உடல் கிறிஸ்துவின் உடலை என்பதை மறந்து, தூய்மைக் கேடான வாழ்வுக்கு உங்கள் உடல் ஒப்புக்கொடுக்க வேண்டாம் என பவுலார் சொல்வதைப் புரிந்து கொள்கிறோம்.

யோசேப்பு தன் வாழ்வில் தீய வாழ்வுக்கு தன்னை அழித்துவிடாமல் தூய்மையைக் கடைபிடிக்க விரும்பினார் (தொ.நூ. 39 : 9). நான் இத்தனைப் பெரிய பாவத்திற்கு உட்பட்டு கடவுளுக்கு எதிராக பாவம் செய்வது எப்படி? என்று தனக்குள்ளே கேள்விப்பட்டு தம் வாழ்வு ஒருபோதும் தூய்மை கேட்டிற்கு உட்படலாகாது என்றெண்ணி தன் வாழ்வில் தூய்மைத் தன்மையை நிலை நாட்டுகிறார். இன்றைய இளையோர் எத்தகைய சூழலிலும் தீமைக்கும் தீய வாழ்வுக்கு கொஞ்சம் கூட இடமளிக்காமல் தூய வாழ்வில் நிலைத்திருக்க அழைக்கப்படுகிறார்கள். தூய்மையான வாழ்க்கை வாழ்பவர்கள் இவ்வுலகம் கடவுளை கண்டுக்கொள்ள துணையாயிருப்பார்கள்.

## 2. இறைவனை சார்ந்து வாழ்தல்

பொருள் நிறைந்த வாழ்வைத்தேடும் இளையோர் இறைவனை சார்ந்து வாழ அழைக்கப்படுகிறார்கள் (உரோ. 6 : 11). பாவ வாழ்விலிருந்து விலகி வாழ "பாவத்துக்கு இறந்து நீதிக்குப் பிழைத்து கிறிஸ்துவோடு இணைந்து கடவுளுக்காக வாழ வேண்டும்" என பவுலார் கூறுகிறார். இதுவே இறைவனைச் சார்ந்து வாழும் வாழ்வாகும் (கலா. 3 : 27). நீங்கள் கிறிஸ்துவை அணிந்து கொண்டிருக்கிறீர்கள். ஆகவே கிறிஸ்துவை தங்களில் பிரதிபலிக்கின்ற இளையோராய் வாழ்தல் அவசியம் (கலா. 2 : 20) கிறிஸ்து என்னில் வாழ்கிறார் எனக்கூறி கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வதையும், சார்புநிலை வாழ்வையும் முக்கியப்படுத்துகிறார். கொலே. 2 : 6-.இன் படி நீங்கள் "இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களாகவும், அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொள்ளுங்கள்" என அறிவுரை கூறுகிறார்.

மட்டுமல்லாது, என்னோடு இராதவன் எனக்கு விரோதியாயிருக் கிறான் (லூக். 11 : 23) என இயேசு கூறினார். இளமை பருவத்தில் கடவுளைச் சார்ந்து வாழ அழைக்கப்படுகிறோம். தீய வாழ்வில் நம்மை இணைத்து, நம்மையே அழித்துக்கொள்வதை விட்டுவிட்டுக் கடைசி வரை கிறிஸ்துவில் நம்மையே இணைத்துக் கொண்டு, கிறிஸ்தவப் பண்புகளை வெளிப்படுத்துபவராய் வாழவேண்டும். இறைவனைச் சார்ந்து வாழும் போது தீமையை நாம் மேற்கொள்கிறோம். கடந்துவிட்ட நிமிடம் தவறவிட்ட சொல், நழுவவிட்ட வாய்ப்பு, சென்றுவிட்ட இளமை பருவம் இவைகள் வாழ்வில் திரும்ப கிடைக்கவே கிடைக்காது. ஆகவே ஒருமுறை மட்டும் வாழும் இவ்வுலகில், இளமை பருவத்தை யாரும் தாழ்வாகக் கருதாதபடி (அசட்டை பண்ணாமல்) தூய்மையாக வாழ்ந்து, இறைவனைச் சார்ந்து இளமை பருவத்தை பொருள்நிறைந்த வாழ்வாய் மாற்ற இறைவன் அருள்புரிவாராக!

**திரு. ஸ்டாலின்**



இன்று பிள்ளைகள் பெற்றோரை கண்டிக்கும் சூழலில் பெற்றோரின் வாழ்வு இருக்கிறது. பிள்ளைகள் தவறு செய்யும் போது பெற்றோர் பிள்ளைகளை அன்போடு கண்டித்தல் வேண்டும். தந்தை தண்டித்து திருந்தாத பிள்ளை உண்டோ? (எபி. 12 : 7). இவ்வுலக தந்தையர் தமது பிள்ளைகளை தங்களுக்கு நலமென தோன்றிய வகையில் சிறிது காலம் நம்மை தண்டித்து திருத்தினார்கள் (எபி. 12 : 10) என்பவை திருமறையும் தவறும் பிள்ளைகளை தண்டிக்க வலியுறுத்துகிறது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

பெற்றோரின் கண்டிப்பை பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். பெற்றோர் தரும் தண்டனை கசக்கும்போது மற்றவர்கள் நம்மை தண்டிக்க வேண்டிய சூழலை சந்திக்க நேரிடும். பிள்ளைகளின் நலமான வாழ்வுக்காக பிள்ளைகள் தவறு செய்யும் போது பெற்றோர் தண்டிக்கின்றனர். இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் நன்மையானதாய் அமைகிறது. இதனைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

நமது வாழ்வுச் சூழலில் பிள்ளைகள் மிகுந்த அறிவுள்ளவர்களா யிருக்கிறார்கள். பெற்றோரின் தண்டனையை ஏற்க விரும்புவதில்லை. 5 வயது நிரம்பிய பிள்ளை தாய் தண்டிக்கும்போது தாய்க்கு தன்னிடம் அன்பில்லை எனக் கூறுகிறது. ஆனாலும் தவறு செய்யும் பிள்ளைகளை அன்போடு கண்டித்து உணர்த்தும் பொறுப்பு பெற்றோருக்கும் திருச்சபைக்கும் உண்டு.

## 3. கீழ்படியக் கற்று கொடுத்தனர் (லூக். 2 : 51)

"அவர்களுக்கு பணிந்து நடந்தார்"

பெற்றோரது கண்டிப்பு பிள்ளைகள் கீழ்படிதலுள்ளவர்களாய் வாழ வேண்டும் என்பதற்காகவே. இயேசு பெற்றோருக்கு கீழ்படிந்து, அவர்களோடு நாசரேத் சென்றார். அங்கு அவர்களுக்கு பணிந்து நடந்தார். பெற்றோருக்கு பணிந்து நடக்கின்ற பிள்ளைகளைக் காட்டிலும் பிள்ளைகளுக்கு பணிந்து நடக்கின்ற பெற்றோர்கள் இன்று அதிகம். இன்று பெருகிவரும் மணமுறிவிற்கு இதுவும் ஒரு காரணமாக உள்ளது.

Psychologists சொல்லுகிறார்கள் 5 வயது வரையுள்ள பிள்ளைகள் ராஜாக்கள். அவர்களை ராஜாக்களைப் போல் நடத்த வேண்டுமாம். அவர்கள் விரும்புவதை நிறைவேற்ற வேண்டும். ஆனால் 6 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை பிள்ளைகளாக வளர்க்க வேண்டும். அவர்களை ராஜாக்களாக பார்க்ககூடாது, வளர்க்க கூடாது ஆனால் இன்று வளர்ந்த பிள்ளைகளை ராஜாக்களாக கருதி, அவர்களை அன்பாக கண்டிப்பதில்லை.

ஒன்றித்து வாழ்வதற்கு நாம் செய்ய வேண்டியது எவை என சிந்திப்பது ஆண்கள் சங்க ஆண்டுவிழாவில் சிறந்ததாக அமையும்.

## 1. பகைமையைக் களைந்து பாசத்துடன் வாழ்தல்

இன்று வீட்டிற்குள்ளேயும் நாடுகளுக்குள்ளேயும் பகைமை மேலோங்கி நிற்கிறது. நாகூம் 1 : 11-இல் தீய ஆலோசனைகளை கூறுபவன் உன்னிடமிருந்து தோன்றினான் என்று இறைவாக்கினர் நாகூம் நினிவே மக்களை குறித்து கடும் சினம் கொண்டு உரைக்கிறார். 2 அரசர் 21 : 1-18 யூதா அரசன் மனாசே, இஸ்ரயேலர்கள் மீது தீய ஆலோசனைகளைக் கொடுக்கிறார். மன்னர் மனாசே கடவுள் எரிச்சலடையும் அளவுக்கு தொழுகை மேடுகளை எழுப்பி, அதையே சார்ந்து ஓடி, தம் மகனையே நெருப்பில் சாகக் கொடுத்தார், இப்போது கடவுள், சாலமோனிடமும் பேசினார். இம்மக்கள் இஸ்ரயேலருக்கு கட்டளையிட்ட யாவையும் கடைபிடித்தால் அலைந்து திரிய விடமாட்டேன் என்று கூறினார் (வசனம் 9). ஆனால், அவர்கள் அதற்கு செவி கொடுக்கவில்லை. ஏனெனில் மனாசே அவர்களை வழிதவறி நடக்க செய்ததால், இஸ்ரவேலரும் வேற்றினத்தாரைவிட அதிகமாக தீயன செய்தனர். இதன் விளைவாய் மன்னனும் எருசலேம், யூதா மக்களும் தவறுக்கேற்றத் தண்டனையை பெற்றுக் கொண்டனர். இதனால் நாம் பகைமை மனித உறவினைச் சிதைக்கிறது. பகைவரை மன்னிக்க இயேசு கற்றுக் கொடுத்துள்ளார். ஆகவே நாமும் நம்மிடம் குடி கொண்டுள்ள பகைமையை களைந்து பாசத்தை பெருகசெய்யும் போது நிறைவாழ்வு பெற முடியும்.

## 2. தன்னலத்தை துறந்து பரிவுடன் வாழ்தல்

மண்ணுலக மக்கள் பரிவுடன் வாழாது தன்னலத்தையே சார்ந்திருப்பதை இன்றைய உலகில் காண்கிறோம். எஸ்தர் 6-ம் அதிகாரத்தில் ஆமானின் தன்னலம் சார்ந்த செய்தியை காண்கிறோம். வசனம் 4-ல் ஆமான் மொர்தேகாயை தூக்கிலிட தூக்கு மேடையையும் செய்துவிட்டு மன்னரிடம் உரிமை பெற்றுக் கொள்ள அரசமாளிகையின் வெளிமுற்றத்தில் தன்னலத்தோடு நின்றான். இதனை அறிந்த மன்னர் ஆமானை உள்ளே அழைத்தார். ஆமானிடம் தாம் மரியாதை செய்ய விரும்புபவருக்கு எது செய்ய வேண்டும் எனக் கேட்டார். வசனம் 6-ல் ஆமான் தன்னலத்தோடு தனதுள்ளத்தில் தென்பட்டதை கூறினான். இறுதியில் மன்னன் மரியாதை செலுத்தும் மனிதர் மொர்தேகாய் என ஆமானுக்குக் கூறப்பட்டது. பின் ஆமான் புலம்பி, தன் தலைக்கு முக்காடிட்டுக் கொண்டு வீட்டிற்கு விரைந்தான். எஸ்தர் 7 : 9, 10 மொர்தேகாயை தூக்கிலிட ஆமான் செய்து வைத்திருந்த அந்த தூக்கு மரத்திலேயே ஆமானை தூக்கிலிட்டார்கள். இந்த ஆமான் தன்னலத்தை சார்ந்திருந்ததின் விளைவு, தான் செய்ததூக்கு மரத்தில் தூக்கப்பட்டு சாவும்



வெற்றிவாகை சூட உதவினாள். பெண்கள் எச்சூழலிலும் அறிவை ஆயுதமாய் பயன்படுத்த வேண்டும்.

## 2. பக்தியை பணியில் காட்டினர் : (வி.ப. 1 : 17)

வி.ப. 1:17-இல் மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர்களாக இருந்தனர். இறைப்பக்தியை தங்கள் மகத்துவமான அருட்பணியில் காட்டினர் (நீதி. 31 : 30). "ஆண்டவரிடம் அச்சம் கொண்டுள்ள பெண்ணே புகழத்தக்கவள்" பெண்கள் தங்கள் இறைப்பக்தி வாழ்வினால் புகழ்ச்சிக்கும், கனத்திற்குமுரிய பாத்திரங்களாக விளங்கவேண்டும். கடவுளுக்கு அஞ்சி வாழும்பொழுது தீமைக்கு, விலக்கி காக்கப்படுவோம். விடுதலை பணியில் சிப்ராள், பூவாள் தங்களை ஈடுபடுத்த காரணமாயிருந்தது அவர்களின் இறைபக்தி, பணியில் நேர்மை, ஒப்படைப்பு, அர்ப்பணிப்பு, தூய சிந்தனை போன்றவையாகும். கடவுளின் செயல்திட்டத்தை செயலாக்கம் செய்யும் ஊடகங்களாய் இவர்கள் காணப்பட்டனர். கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்ததால் அரசனின் அடக்குமுறைக்கு எதிராகச் சிந்திக்க, செயல்படத் தூய ஆவியின் ஆற்றலை பெற்றனர். கடவுளுக்கு பயப்படும் மனிதன் தீமைக்கு அஞ்சமாட்டான்.

இரண்டாம் உலகப்போரின் போது ஹிட்லர் யூதர்களை கொன்று குவித்தான். போலந்து நாட்டில் வாழ்ந்த யூதர்களை ஆவி உலைகளில் இட்டு கொலை செய்தான். அப்போது இருபத்தி மூன்று வயதான Irish Sentler என்ற மருத்துவ தாதி பணி செய்து கொண்டிருந்தாள். பணிக்கு செல்லும் போதெல்லாம் அங்கு அடைக்கப்பட்டு ஆவி உலைகளில் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் யூதர்களுக்காக மனம் வருந்தினாள். அவர்களை காப்பாற்ற என்ன வழி என யோசித்தாள். ஒரு நாள் அவ்யூதர்களிடம் ஒரு யோசனையை கூறினாள். அன்பு சகோதர, சகோதரிகளாக நீங்கள் இந்த உலைக்கு பலியாகப் போகிறீர்கள். ஆனால் உங்கள் இனம் அழிக்கப்படாமல் இருக்க உங்களுக்கு நான் உதவி செய்வேன். உங்கள் குழந்தைகளை நான் காப்பாற்ற முயற்சிக்கிறேன் என்றாள். அவள் கூறியபடி ஒவ்வொரு நாள் பணி முடிந்து செல்லும் போதும் சிறு குழந்தைகளை அவள் பையில் வெளியே எடுத்துச் சென்றாள். எடுத்துச்செல்லும் குழந்தையின் பெற்றோர் பெயர், முழு விலாசம், குழந்தையின் பெயர், பிறந்த தேதி போன்ற செய்திகளை எழுதி அவள் வீட்டு தோட்டத்தில் ஜாடியில் மறைத்து வைத்து மண்ணில் பத்திரமாய் மறைத்து வைத்தாள். குழந்தைகளை நல்ல உள்ளம் உடையோருக்கு தத்துக் கொடுத்தாள். தன்னுடைய பணியின் நாட்களில் சுமார் 2500 குழந்தைகளை காப்பாற்றினாள். இவர்களுடைய பெயர் நோபல் பரிசிற்கு பரிந்துரைக்கப்பட்டது. இவருடைய பெயர் அதிகார பூர்வமாக வெளியே சொல்லப்படும் முன் வெளியே பெயர் பரப்பப்பட்டதால் பரிசு

கொடுக்கப்படவில்லை. அறுபது இலட்சத்திற்கு மேலான யூதர்களை கொன்று குவித்த ஹிட்லரால் யூதர்களின் துணிவை, மன உறுதியை கொலை செய்ய முடியவில்லை. Irish Sentler காப்பாற்றிய குழந்தைகள் இன்று விஞ்ஞானிகளாய் பெரிய தலைவர்களாய் உலகம் முழுவதும் காணப்படுகின்றனர். இறைப் பக்தி பெண்களை சாதனையாளர்களாய் மாற்றுகிறது. இறைப் பக்தியை நம் பணியில் காட்டும் பொழுது இறைச்சாயலில் படைக்கப்பட்ட மனிதனுக்கு வாழ்வு கொடுக்கும் ஊடகங்களாய், கடவுளின் உண்மைச் சீடர்களாய் காணப்படுவோம்.

**3. வெற்றியை வாழ்வில் கண்டனர் :** (வி.ப. 1 : 21)

வி.ப. 1 : 21-இல் இம் மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால், அவர், அவர்கள் குடும்பங்களைத் தழைக்கச் செய்தார். தி.பா. 128 : 1, 2 ஆண்டவருக்கு அஞ்சி நடந்ததால் மருத்துவப் பெண்களின் குடும்பங்களை கடவுள் தழைக்கச் செய்தார். ஆண்டவருக்கு பயப்படுகிற சிறியோரையும், பெரியோரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பார். மருத்துவப் பணிப்பெண்கள் ஆவியாரின் ஆற்றலை அற்புதமாய் பயன்படுத்தினர் கடவுளுக்குப் பயந்து பணி செய்ததால் எகிப்திய மன்னனின் தந்திர புத்தியில் வெற்றி கண்டனர். எபிரேயக் குழந்தைகளுக்கு வாழ்வு கொடுத்தனர். கடவுளிடமிருந்து வளமான ஆசீர்வாதத்தைப் பெற்றனர். கொடுக்கிறவனுக்கு கொடுக்கப்படும் என்ற இறை வார்த்தைகளுக்கு சொந்தகாரர்களாய் சிப்ராள், பூவாள் மாற்றப்பட்டனர்.

இறைமைந்தன் இயேசு தம்முடைய நாசரேத்தூர் அறிக்கையில் (லூக். 4 : 18-19). கடவுள் தன்னை சிறைபட்டோர் விடுதலை அடையவும், பார்வையற்றோர் பார்வையடையவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்யவும் அனுப்பினதைக் கூறுகின்றார். அருள்நாதர் இயேசுகிறிஸ்து ஒடுக்கப்பட்டோரின் வாழ்வு மலர, ஒளிர, தன்னை அர்ப்பணித்தார். விடுதலையாளர் இயேசு கிறிஸ்துவின் பாதச் சுவடுகளைப் பின் தொடர்ந்து பணி செய்ய கடவுள் நம்மை அழைத்திருக்கிறார். வரதட்சணை என்னும் புற்றுநோயால் அவதிப்படும் பெண்கள், கருவறையிலே மலர முடியாமல் கருகி விடும் குழந்தைகள், கயவர்களால் பாலியல் பலாத்காரத்திட்குட்படும் பெண்கள், தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாய் பணி செய்யும் குழந்தைகள், பணியிடங்களில், கேலி, கிண்டலுக்கு ஆளாகும் பெண்கள், அழகிய உடம்பில் திராவகம் ஊற்றப்பட்டு அலங்கோலப்படும் பெண்கள், விளம்பர பொருளாய் பெண்களை ஊடகங்கள் பயன்படுத்தும் அவலங்கள் இவைகளுக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும். பெண்மை போற்றுதற்குரியது. வன்முறைக்கு எதிராக குரல் கொடுத்து இறை ஆசியை பெறுவோம்.

**அருள்திருமதி. சார்லட் சவுந்திரராஜன்**



*ஆண்கள் சங்க ஆண்டு விழா* **விழாக்கால அருளுரை**

## ஒன்றித்து வாழ்தல்

தி.பா. 133

சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது (தி.பா. 133 : 1)

தென்னாப்பிரிக்காவில் கறுப்பு இனத்தவராக பிறந்த இங்கிலாந்து முன்னாள் கிரிக்கெட் வீரர் பாசில் லீவில் டி ஒலிவேரா அனுபவித்த பாடுகள் ஏராளம். இவரது ஆட்டத்திறனை தென்னாப்பிரிக்க அணி புரிந்து கொள்ளாமல் புறக்கணித்தது. இதனால் கிரிக்கெட்டுக்கு தாயகமான இங்கிலாந்தில் முயற்சி செய்யலாம் என பி.பி.சி. ரேடியோவில் வர்ணனையாளராக இருந்த ஜான் அர்லாட் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அர்லாட்டுக்கு பாசியை தெரியாது. ஆனாலும் நிறம் காரணமாக ஒருவரின் எதிர்காலம் வீணாகக்கூடாது என நினைத்தார். பின் இரண்டாண்டுகளுக்குப்பின் அட்லாட்டிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் இங்கிலீஸ் கிளப்பில் தொழில்துறை விளையாட்டு வீரராக அவர் தேர்வு செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிட்டிருந்தது. பின் பாசில் இங்கிலாந்து வந்து 5 ஆண்டுகளில் பிரிட்டீஷ் குடிமகனார்.

1966-இல் இங்கிலாந்து அணிக்கு விளையாட பாசில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது திறன் மேம்பட்டுக் கொண்டிருந்தது. பின் இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவுடன் மோதியது. முதலில் தடுமாறிய பாசில் இறுதி டெஸ்ட் போட்டியில் 158 ரன் எடுத்து இங்கிலாந்துக்கு வெற்றியைத் தேடி கொடுத்தார்.

அடுத்த போட்டி தென் ஆப்பிரிக்காவில், அப்போது அந்த அரசு வெள்ளையர் அல்லாத ஒருவரை எங்கள் மண்ணில் அனுமதிக்கமாட்டோம் என்றது. ஆனால் பாசிலுக்கு ஆதரவாக இங்கிலாந்தே கொந்தளித்தது. ஆனால் தென் ஆப்பிரிக்கா இங்கிலாந்துடனான போட்டிகள் அனைத்தையும் ரத்து செய்தது. ஒரு வீரரை நீக்கியதற்காக நாடே கொந்தளித்ததும், சேர்த்து கொண்டதற்காக ஒருநாடு போட்டியையே விலக்கிக் கொண்டதும் பாசில் வாழ்வில் மட்டுமே நடந்தது.

இன்றைய மானிடரிடையே ஒன்றித்து வாழும் உணர்வு இல்லை. திருப்பாடலாசிரியர்சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது நன்று மற்றும் இனியது என்கிறார் (தி.பா. 133 : 1). இயேசுநாதர் தாமும் தந்தையும் ஒன்றித்து வாழ்வது போல நீங்களும் ஒன்றாய் இருங்கள் என்கிறார். தன்னலத்தை மட்டும் சாராது

அடிமையின் தாழ் நிலையைக் கண்ணோக்கினார். எனக்கு அரும்பெரும் செயல்களை செய்துள்ளார். ஆகவே அவர் தூயவர் என்று வாழ்வில் முதலிடம் கொடுத்து பாடுகின்றார். திருப்பாடல் ஆசிரியர் பாடும் போது, “நம் கடவுளை புகழும் பாடலை என் நாவினின்று எழச் செய்தார்” என்று கூறுகிறார் (தி.பா. 40 : 3). இறைவனை எல்லா சூழல்களிலும் புகழ்ந்து போற்றிப் பாடவேண்டும். அப்படிப் பாடும் போது பரவசமும், பக்தி விருத்தியும் உருவாகிறது.

ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணபிள்ளை பாடிய சத்தாய் நிஸ்களமாய் என்ற பாடலில் இறைவனை இவ்வாறு புகழ்ந்து பாடுகின்றார்.

| | | |
|---|---|---|
| சத்தாய் | - | அழிவில்லாத |
| நிஸ்களமாய் | - | ஆவிக்குரிய மெய் அறிவு |
| ஒரு சாமியம் | - | ஒப்புமை இல்லாத |
| சித்தாய் | - | வெளிப்படும் மறைப் பொருளாக |

ஆனந்தமாய் - மகிழ்ச்சியின் உச்சமாக, திகழும் திரித்துவமே என்று பொருள்படுத்திப் பாடுகின்றார். ஒவ்வொரு பாடல்களையும் பொருள் உணர்ந்து பாடும்போது, உள்ளம் மகிழும், மயிர்சிலிக்கும், கைகளும், நினைவுகளும் தாளம் போடும். தொழுகையில் வந்திருப்போரையும் இறைவனோடு ஒன்றிணைக்கச் செய்கிறது. மரியாளும் தன்னுடைய வாழ்வு நிலைகளை எண்ணிப் பார்த்து கடவுளை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகிறது என்று பாடுகிறார். அதுபோல நாமும் வாழ்வின் நிலைகளை நினைத்து இவைகளில் இறைவனின் செயல்திட்டம் என்ன? என்று உணர்ந்து வாழ்வை அர்ப்பணித்து மீட்பருளும் பாடல்களை பாடி இறைவனை போற்றுவோம்.

## 2. அறிவுரைத் தரும் பாடல்

அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை, தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். (லூக். 1 : 50)

மரியாளின் இந்த பாடல் வரிகளில் இறைவனுக்கு அஞ்சி வாழுங்கள், இறைவனின் மீட்பையும் இரக்கத்தையும் தலைமுறையாய் பெறுவீர்கள் என்று சுட்டிக்காட்டுகிறது. உள்ளத்தில் செருக்குடன் செயல்படுபவரையும், அகந்தை உணர்வுகளோடு பேசுவோரையும் இறைவன் அங்கீகரிக்க மாட்டார். ஆகவே தாழ்மையை தரித்து வாழுங்கள். அப்போது இறைவன் உங்களை உயர்த்துவார் என்று அறிவுரை தந்து பாடுகின்றார். மேலும் தன்னுடைய வாழ்வின் அனுபவத்தையும் சுட்டிக்காட்டுகிறார். அடிமையாகிய என்னையும் நினைத்து பார்த்தார். எனக்கும் இரக்கம் பாராட்டினார். இது முதல் எல்லா தலைமுறையினரும் என்னை பேறுபெற்றவர் என்று போற்றும் அளவில் என்னை உயர்த்தினார். என்னை மீட்டு எடுத்தார் என்று பாடுகின்றார்.



மரியான் உபதேசியார் ‘புத்தியாய் நடந்து வாருங்கள்’ (ஞான. கீர். 386) என்ற பாடலில் ஓர் இறை மனிதன் எப்படி இறைவனுக்குள் வாழ வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

பாடலின் 3-வது சரணத்தில்

ஆருடைய பிள்ளைகள் நீங்கள்? - திரு உரையில்
அறிந்து உணர்ந்து பாருங்கள்
சீருடைய தெய்வப் பிள்ளைகள் - நீங்கள் ஏதிந்த
தித்தரிப்பு செய்யும் வகைகள்?

என்று பாடுகிறார். நாம் யார்? சீராக வாழும் இறைப்பிள்ளைகள் அல்லவா? ஆகவே புத்தியாய் நடந்து, திருவசனத்தின்படி அஞ்சி வாழுங்கள் என்று சீரான வாழ்வை காட்டுகின்றார். இன்று அறிவுரைகளை கற்று தரும் அர்ப்பணிப்புள்ள பாடல்களை தொழுகையில் அதிகமாய் பாடுவது இல்லை. ஆகவே, அறிவுரை தரும் பாடல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பாடுவோம். மீட்பை சொந்தமாக்குவோம்.

## 3. ஆற்றல் படுத்தும் பாடல்

பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் (லூக். 1 : 53).

உடல் சார்ந்த பசியை யாரும் விரும்புவது இல்லை. இயேசுவும் விரும்பவில்லை. இயேசுவின் மலைபொழிவில், அருளுரை கேட்க வந்த மக்கள் பசியோடு திரும்பிச் செல்வதை விரும்பவில்லை. அனைவருக்கும் உணவு கொடுத்து பசியாற்றினார். வாழ்வு தரும் உணவாகவே வெளிப்பட்டார். இஸ்ரயேலரின் விடுதலைப் பயணத்தில் பசித்தபோது இறைவன் அப்பங்களை பொழிந்து பசியைப் போக்கினார். மனிதர்கள் பசியாய் இருக்க இறைவன் விரும்பவில்லை என்பதை மரியாளின் பாடல் பிரதிபலிக்கிறது. பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் என்ற பாடலின் வரிகள் நம்பிக்கை இழந்து கேள்விகளோடு நிற்கிற மக்களுக்கு புது நம்பிக்கையினை தந்து ஆற்றல் படுத்துகிறது என்ற செய்தியினை தருகிறது.

உலக இன்னல்களில் சிக்குண்டு, கவலை, கண்ணீர் மன அழுத்தங்கள், பிரிவினைகள், இழப்புகள் வேதனைகளோடு பலர் உள்ளம் சார்ந்தப் பசிகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உள்ளம் ஆற்றப்பட வேண்டி தொழுகையில் பங்கெடுக்கிறார்கள். இந்த நிலையில் வருகின்ற மக்களின் உள்ளத்தை திடப்படுத்தி ஒருமுகப்படுத்தி இறைவனோடு இணைக்கிறது பாடல்கள். சீறி வருகின்ற நஞ்சுத் தன்மை கொண்ட பாம்பு - இசையினால் தன்னையும் மறந்து, நஞ்சு தன்மையும் மறந்து ஆடுகின்றதுபோல நஞ்சு தன்மைகொண்டோரையும், நஞ்சுத் தன்மையையும் மறக்கச் செய்கிறது பாடல்கள். கடினமான வேலைகளில் ஈடுபடுகின்றவர்கள் கூட பாடல்களை பாடிக் கொண்டு தங்கள் வேலைகளை இலகுவாக்குகின்றனர். இப்படி எல்லா சூழ்நிலைகளில் வாழ்ந்து

கொண்டிருக்கும் மக்களின் உள்ளத்தை ஆற்றல் படுத்துகிறது பாடல்கள். ஆகவே தான் இறைத் தொழுகையில் பாடல்கள் முக்கியப்படுத்தப்பட்டு பாடகர் குழுவினர் என்ற அமைப்பை தொழுகை கூடங்களில் ஏற்படுத்தி பாடலையும் பாடல் குழுவினரையும் முக்கியப்படுத்தப்பட்டள்ளனர். தொடர்ந்து மரியாளின் பாடல்களைப்போல உள்ளத்தை ஆற்றல்படுத்தும் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாடுவோம்.

அன்பர்களே!

பாடல்கள் இறைவனை ஆவியோடும் உண்மையோடும் வழிப்படத் துணை புரிகிறது. மரியாளின் பாடல் இதற்கு சாட்சியாய் அமைகின்றது. மேலைநாட்டுக் கலாச்சாரங்கள் தொழுகைகளில் புகுந்து நம் கலாச்சாரப் பாடல்களுக்கு ஆபத்துக்கள் வந்துவிடும் நிலையினை உருவாக்கியுள்ள சூழலில் தொழுகையில் வந்திருக்கும் மக்களின் நிலையை உணர்ந்து பாடுவோம். பாடல்கள் வழியாய் தொழுகையை மெருகூட்டுவோம். அனைவருக்கும் கிறிஸ்துவின் மீட்பின் பாதையை பாடல்வழியாய் காட்டுவோம்.

**திரு. பீபின்**





# மீட்பருளும் பாடல்கள்

**லூக். 1 : 46 – 55**

**“...** என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது**”** )லூக். **1 : 47** b).

“பாடல்” இறைவன் மனுக்குலத்துக்கு தந்துள்ள ஆக்க சக்தி ஆகும். இதன் வழி தனிமனித உணர்வுகள் மட்டுமன்றி, உறவுகளும் வலுப்படுத்தப் படுகின்றது. அனைத்து தரப்பினரையும் ஈர்க்கின்ற, கட்டுப்படுத்துகின்ற தன்மை கொண்டதாய் விளங்குகிறது. ஆகவே இன்று பாடல் தனிமனித வாழ்விலும், தொழுகைகளிலும், சிறப்பிடம் கொண்டதாக விளங்குகிறது. 1 குறி. 15 : 16-22 வரை படிக்கும் போது, தாவீதின் காலத்தில் ஒரு சிறப்பான ஒழுங்குப்படுத்தப்பட்ட பாடகர்குழு இருந்தது. அதில் லேவியர் தலைவர் கெனனியா ஒரு சிறந்த பாடல் ஆசிரியராகவும் செயல்பட்டார் என அறிய முடிகிறது. லூக். 2 : 13, 14-இல் இறைவன் மனு உருவாய் இந்த உலகில் தோன்றிய உடன் இறைத்தூதர்களால் பாடபப்பட்ட பாடல்

“உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி
உண்டாகுக” என்பதாகும்.

மேலும் பல பாடல்கள் திருமறையில் காணப்படுகின்றன. இன்று சிந்தனைப் பாடமாக தரப்பட்ட பகுதியில் மரியாளின் மீட்பருளும் பாடல்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இந்த மரியாளின் பாடல்களின் சிறப்புக்களை சிந்திக்கலாம்.

## 1. இறைவனைப் போற்றும் பாடல்

“ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகிறது” (லூக். 47a).

இயேசுவின் தாய் மரியாள். இவர் கலிலேயாவைச் சார்ந்தவர். லேவி கோத்திரத்தில் 20-ஆம் வயதில் திருமணம் நிச்சயம் பெற்றவர் இந்நிலையில் இறை தூதனால் இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் முன்னறிவிப்பினைப் பெற்றவுடன் மரியா, யூதேயா மலை நாட்டிலுள்ள எலிசபெத்தை வாழ்த்தினார். உடனே எலிசபெத்து தூய ஆவியரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர் என்று வாழ்த்தினார். உடனே மரியாள் இறைவனை போற்றி, பெருமைப்படுத்தி பாடுகின்றார். அவர் தம்

குடும்ப விழா

விழாக்கால அருளுரை

# இறைப்பற்றுள்ள குடும்பம்

நீ.த. 13 : 1 – 14 | 1 கொரி. 12 : 12 – 27
தி.பா. 128 | லூக். 15 : 11 – 32

"என் மகன் இறந்து போயிருந்தான் இவன் மீண்டும் உயிர்பெற்று வந்துள்ளான். காணாமல் போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" (லூக். 15 : 24).

குடும்பம் அன்பு உள்ளங்களின் சங்கமம் ஆழமான உறவுகளின் அர்ப்பணம். குடும்பம் என்பது சமுதாயக் கூட்டமைப்பின் அடிப்படையான ஓர் அங்கம், அது உறவு என்னும் ஆழமான கூட்டை சிறு சிறு இலைகளால் பின்னுகிற கலைஞர்கள் கூடி வாழும் இடம். நிறைவு, சொல், செயல், எண்ணம், ஏக்கம் இருமனம் இணைந்து வாழும் வாழ்வாகும். உடலோடு கலந்த உணவு சக்தியாகிறது போல இறைவனோடு பற்றாய் வாழும் குடும்பம் உலகில் உள்ளத்தில் உயர்ந்து நிற்கிறது. இன்றைய சித்தனையில் இறைப்பற்றுள்ள குடும்பமாய் வாழ நாம் செய்ய வேண்டியது என்ன என்பதைத் திருமறை வழி நின்றுத் தியானிப்போம்.

**1. இறைத்திட்டத்திற்கு செவி கொடுக்கும் குடும்பம் :** நீ.த. 13 : 14.

இத் திருமறைப் பகுதியில் மனோவாவின் குடும்பத்தைக் குறித்து சொல்லப்படுகிறது. ஒரு குடும்பத்தில் காணவேண்டிய குணநலன்களை மனோவாவின் குடும்பத்தில் காணலாம். மனோவா இறைவனோடு விண்ணப்பம் செய்த போது தேவதூதன் தரிசனமாகி அவரது குடும்பம் நிறைவேற்ற வேண்டியவைகளைக் குறித்து கூறினார். அவ்வார்த்தைக்கு அவரும் அவர் மனைவியும் கீழ்ப்படிந்து, இறைத்திட்டத்திற்கு இசைந்து வாழ்ந்தார்கள். மனோவாவும் மனைவியும் இசைந்து இணைந்து இறைவனோடு வாழ்ந்ததினாலே அவர்களது குழந்தையாகிய சிம்சோனுக்கு மிகப்பெரிய பொறுப்பை இறைவனே அளிக்கிறார். பாவத்தில் அமிழ்ந்து அடிமைகளாய் பெலிஸ்தரின் கையிலிருக்கும் இஸ்ரவேலரை மீட்டெடுக்கும் பணியினை அதன்மூலம் நிறைவேற்றினார். இன்று இறைத்திட்டத்திற்கு செவிக்கொடுக்காதபடியால் குடும்பங்கள் உடைந்து வீழ்ந்து போகிறது. பிள்ளைகள் பொறுப்பற்றவர்களாய் சீரற்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆனால் மனோவாவின் குடும்பம் இன்றைய நம் குடும்பங்களுக்கு ஓர் சவாலே என்பதை மறந்துவிடக்கூடாது.

**2. இறையரசின் வாழ்வில் புத்துயிர்பெற்ற குடும்பம் :** லூக். 15 : 24

"என் மகன் இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர்பெற்று



நிலையாகும். இறைவனின் மக்களாகப் படைக்கப்பட்டவர்கள் பிறர் மீது பரிவுடன் வாழவேண்டும் என்பதை திருமறை ஆழமாக வலியுறுத்துகிறது. முடக்குவாதமுற்று நடக்கமுடியாமல் வாழ்ந்தவரை நான்கு பேர் சுமந்து சென்று பரிவு காட்டின போது அவர் நலம் பெற்று வாழ்ந்தார். இத்தகைய தன்னலம் துறந்து பிறர் நலம் பேணும் நிலை நம்மில் ஏற்பட்டால் ஒன்றித்து வாழலாம்.

**3. கனவீனத்தை விடுத்து பண்புடன் வாழ்தல்**

படைகள் ஆண்டவரிடம் அச்சம் கொண்டு ஒன்றித்து வாழவேண்டிய மானுடம் அவரை உதாசீனப்படுத்தி கனவீனமடைந்தது. ஆனால் கடவுள் மக்களை புறக்கணிக்கவில்லை. தனது மக்களை, தான் அவர்கள் மீது கொண்ட அன்பின் பூரணத்தால் என் மக்கள் என பாசத்தோடு அழைத்தார். (இ.ச. 10 : 12, 13). ஆனால் அவர்கள் அதை உதாசீனப்படுத்தி கனவீம் பண்ணுகிறார்கள். ஆகவே மலா. 1 : 6-ல் மகன் தந்தையை, ஊழியன் எஜமானை கனம் பண்ணுகிறான், அப்படியானால் என் கனம் எங்கே? எனக்கு பயப்படும் பயம் எங்கே? என ஆசாரியராகிய இஸ்ரயேலரிடம் கேட்கிறார். அதற்கு பதில் மொழியாய் உமது நாமத்தை எப்போது அசட்டைப் பண்ணினோம் என மக்கள் கூறினர். நம் கடவுள் இங்ஙனம் வாழ்பவர்களை நோக்கிப்பார்ப்பவரல்ல. ஆண்டவர் யாரை நோக்கிப்பார்க்கிறார் எனில் ஆவியில் நொறுங்குண்டு வசனத்துக்கு நடுங்குபவரையே (ஏசா. 66 : 2). லூக். 17 : 11-19-இல் பத்து தொழுநோயாளர்கள் இயேசுவினிடத்தில் வருகின்றனர். சுகம் பெறுகின்றனர். ஆனால் தந்த இயேசுவுக்கு பணிந்து, நன்றிக்கூறி, பண்பினை வெளிக்காட்டியவன் ஒருவன். அவனிடம் இயேசுநாதர் எழுந்து செல்லும் உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது எனக்கூறி சுகம் கொடுத்தார். இதன் மூலம் கடவுள் பண்புடன் வாழ்பவர்களுக்கு நலமான வாழ்வு வழங்குவார் என்பதை புரிந்து கொள்ளமுடிகிறது.

எனவே மண்ணில் ஒன்றித்து வாழ பகைமையை களைந்து பாசத்துடன் தன்னலத்தை துறந்து பரிவுடனும், கனவீனத்தை விடுத்து பண்புடனும் வாழ்வோம்.

**திரு. ஜாண் ஸ்டாலின்**

சங்கப்பண்டிகை

விழாக்கால அருளுரை

# ஆசி அருளும் இறைவன்

மலா. 3 : 7 – 12 2 கொரி. 9 : 1 – 15
தி.பா. 24 லூக். 21 : 1 – 4

"மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை" (தி.பா. 24 : 1).

கடவுளுக்கு காணிக்கை கொடுப்பதும், ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வதும் மகிழ்ச்சியான அனுபவம். காணிக்கை (Offering) என்பதன் பொருள் A presentation made to a deity as an act of religions worship or sacrifice; an oblation, a contribution of gift, especially one made at a religions service. நாம் வழிபடும் ஆண்டவருக்கு, வழிபடும் இடத்தில் கொடுக்கின்ற ஓர் கொடை, என்பதாகும்.

யூதர்கள் காணிக்கைக்கு "Qorbanot" எனும் சொல்லை பயன்படுத்துகின்றனர். இதன் பொருள் கொடுத்தல் (giving), பதிலாள் (Substitution), நெருங்கி சேர்த்தல் (Coming Closer) என்பவையாகும்.

கொடுத்தல் என்பது உழைப்பையும், உடமையையும் தனக்கு பாதிப்பு ஏற்படும் அளவுக்கு கொடுத்தலாகும்.

பதிலாள் என்பது தான் பெற வேண்டிய தண்டனைக்கு பதில் பிறிதொருவர் தண்டனை பெறுவதாகும்.

நெருங்கி சேர்தல் என்பது காணிக்கை நம்மை கடவுளிடம் நெருங்கி சேர உதவுகிறது என்பதாகும்.

அதோடு கடவுள் ஆசிகளின் உறைவிடம் என்றும் நம்பினர். அவர் தம் அடியவருக்கு ஆசி வழங்கி அவர்களை வழி நடத்துகிறார். சங்கப் பண்டிகை என்பது கடவுள் வாழ்விலே தந்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்தும் பண்டிகை. இந்நாளில் நமது வாழ்வோடும் உழைப்போடுமிருந்து நம்மைக் காத்த ஆண்டவரைப் போற்றி, மகிழ்வுற வேண்டும். இந்நாளில் ஆசி வழங்கும் ஆண்டவரின் செயல்பாடு எப்படியுள்ளது என சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

## 1. நன்றிப் படையலும் நன்மை பெறுதலும் : (மலா. 3 : 10)

கடவுளுக்குரியதை நன்றியுணர்வோடு அவர்தம் ஆலயத்தில் படைக்கின்றபோது நன்மை தருவேன் என படைகளின் ஆண்டவர் கூறுகிறார். இராயனுக்குரியதை இராயனுக்கும், கடவுளுக்குரியதை



சேர்த்து, வயலுடன் வயல் சேர்த்து அவைகளை உயர்வகை வண்ணங்களால் அலங்கரித்து, மகிழ்வடைகிறோம்.

பறவைகளில் கூடுகட்டி வாழும் பழக்கம், குயில் வகைகளுக்கு இல்லை என அறிகிறோம். ஆனாலும் தன் கூட்டிலும் குயில்கள் முட்டையிட விட்டுக்கொடுக்கும். காகங்களும் நமக்கு பாடம் கற்பித்து தருகிறது. நாம் வீடு இல்லாதவர்க்கு வீடு கொடுக்க; நம் வீட்டின் எல்லைகளையும் பகிர்ந்து கொடுக்க கடவுள் நிரந்தர குடிமக்களாய் நம்மை நம் வீட்டில் வாழ்விக்கிறபடியால் முதற்பலன்களை அவருக்கே ஆனந்தமாய் படைப்போம்.

## 3. நிரந்தரமில்லாதவர்கள் நிமலனுக்கு சொந்தமானார்கள்: (இ.ச. 26 : 10).

ஆண்டவர் அருளிய நிலத்தின் கனிகளின் முதற்பலன்களை, கூடையில் கொண்டு வந்து அவர் முன்னிலையில் பணிந்து, படைத்து ஆனந்தமடைய வேண்டும். வி.ப. 34 : 26-இல் "உன் நிலத்தின் முதற்பலன்களில் முதன்மையானவற்றை உன் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்திற்கு கொண்டு செல்வாய்....." என்று கட்டளையிட்டார். எவைகளை ஆண்டவர் முன்னிலையில் வைக்க வேண்டுமெனில் (எண். 18 : 12, 13) உயர்தர எண்ணெய், உயர்தர திராட்சை ரசம், உயர்தர தானியம், (எண். 15 : 20) முதல் மாவிலிருந்து பிசைந்து செய்த அடை (அதிரசம்) போரடிக்கிற களத்தின் படைப்பு, கத்தரித்த ஆட்டு மயிரின் முதற்பங்கு போன்றவையாகும் (இ.ச. 18 : 4); இவைகள் அனைத்திலும் மேலான முதற்பலன் காணிக்கையாக வி.ப : 13:2ன் படி தலைப்பேறு அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய் எனக் கடவுள் அவர்களிடம் கேட்டார். ஏனெனில் முதன்மையானது கடவுளுக்குரியது.

அழிவுக்குரிய சீரிய தேசத்தாராய் நாடோடிகளாய் அங்குமிங்கு அலைந்து திரிந்து வாழ்ந்த மக்கள் நிலஉரிமைப் பெற்று, பயிரிட்டு, அதின் பலன்களை அறுவடைச் செய்து, சொந்த இல்லங்களில் இனிமையாய் வாழும் அனுபவம் நிரந்தரமில்லாத தங்களுக்கு நிமலன் ஆண்டவர் செய்த நன்மையென்றே நன்றிப் படையல் படைத்தனர். இறைவனுக்குரியவர்கள் அவருக்குரியதை (காணிக்கையினை) வஞ்சனையின்றிக் கொடுக்கவேண்டும். அறுவடைப் பண்டிகைக் கொண்டாடும் நாமும், அடிமைகளாய், நில உரிமையின்றி வாழ்ந்த நமக்கு இறைவன் நில உரிமையினைத் தந்து ஆசி வழங்கியுள்ளார். நிமலனுக்கு சொந்தமாக மாற்றியுள்ளார் எனும் உணர்வோடு கொண்டாட வேண்டும். நமது அறுவடைப் பண்டிகை ஆனந்தம் அருளும் அறுவடைப் பண்டிகையாக அமைய இறைவன் உதவிச் செய்வாராக.

**திரு. I. விக்டர் வேதராஜ்**

ஏற்று நம்மை ஆசீர்வதிக்க நாம் முதன்மையானவைகளையும் சிறப்பானதையும் முக மலர்ச்சியோடும், உண்மையோடும் கொடுக்க வேண்டும்.

### 3. நன்றிப் படையலும் இறைப் பராமரிப்பும் : ( லூக். 21 : 4)

இறைவனுக்கு நன்றிப்படையல் படைக்க எருசலேம் தேவாலயத்தில் எக்காள வடிவிலான உண்டியல்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆலயத்தில் கடவுளை வழிபட வரும் மக்கள் இவைகளில் காணிக்கை செலுத்தி கடவுளைப் போற்றினர். காணிக்கை கொடுப்பதில் பெண்களும் உற்சாகமாக பங்கு பெற்றனர். செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தின் ஒரு பகுதியை காணிக்கையாகப் போடுவதை இயேசு நாதர் கவனித்துக் கொண்டிருந்தார். ஆனால் வித்தியாசமாக பெண்மணி ஒருவர் காணிக்கை போட்டதைக் கண்டு அவளை புகழுகிறார். இந்த பெண்மணி ஓர் ஏழைப் பெண்மணி. சொத்துக்களோ, உடைமைகளோ இல்லாமல் மிகுந்த வறுமையோடு வாழும் ஏழ்மையைக் குறிக்கும் "Ptoche" என்ற கிரேக்கச் சொல் இவளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. தனது பிழைப்புகள் தன்னிடமிருந்த எல்லாமுமான அந்த இரண்டு காசுகளையும் காணிக்கைபெட்டியில் போட்டுவிட்டாள். மறு நாளுக்கென்று அவளிடம் எதுவும் இல்லை. அதைப்பற்றி அவள் கவலைப்படவுமில்லை. அடுத்த நாள் கவலையை ஆண்டவரது கரத்தில் கொடுத்துவிட்டாள். இது கடவுளின் பராமரிப்பின் மீது அவளுக்கிருந்த நம்பிக்கையை காட்டுகிறது. கடவுள் நம்மைப் பராமரிப்பவர், தேவைகளை சந்திப்பவர் (மத். 7 : 32) என்பதைத் தெளிவாக அறிந்திருந்தார்.

இப்பகுதியை லூக். 20 : 47 துவங்கி லூக். 21 : 6 வரை அடங்கியுள்ள வசனங்களை இணைத்து படித்துப் பார்ப்போமானால், இயேசு கிறிஸ்துவுக்கு ஏழை விதவைகள் மீது இருந்த அக்கரையினையையும், ஆலயம், ஆலயக் குருக்களின் அக்கரையின்மையையும் படிக்க முடியும். ஏழை விதவைகளை பராமரிக்க வேண்டிய கடமைக்கு பதிலாக விதவைகளின் வீடுகளை பட்சித்து (லூக். 20 : 47) ஆலயத்தின் பண்டக சாலைகளை நிறைத்து ஆலயத்தை கொழுப்பாக்குகிறதை ஆண்டவர் கண்டிக்கிறார் (லூக். 21 : 5, 6). அதோடு ஆலயம் தன்னிடம் வரும் ஏழைகளையும், விதவைகளையும், ஆதரவற்றவர்களையும் பராமரிக்க வேண்டுமென்பதை உணர்த்துகிறார். ஆகவே நன்றி உணர்வோடு நன்றி படையலை நாம் படைக்கும்போது இறையாசிகளைப் பெற்றுக் கொள்கிறோம். அதோடு நம் நன்றிப்படையல்கள் ஏழைகள் வாழ்வில் ஒளி கொடுக்க திருச்சபை கருவியாய் செயல்பட வேண்டும்.

அருள்திரு. J. **ஸ்பர்ஜன் இன்ப ஜெயா**



*அறுவடைப் பண்டிகை* **விழாக்கால அருளுரை**
(Harvest Festival)

## ஆனந்தம் அருளும் அறுவடை

இ.ச. 26 : 1 – 11

இஸ்ரயேல் மக்களுக்கு, கடவுள் விதித்த நியாயப்பிரமாணங்களில், "பண்டிகைகள் ஆசரித்தல்" முக்கியமானதாக, அவருக்கு ஏற்புடையதாக இருந்தது. எனவே பண்டிகைகளை "ஆண்டவரின் பண்டிகை நாட்கள்" என்று அழைப்பார்கள் (லேவி. 23 : 4). மக்கள் புனிதமாய் கடைபிடிக்க வேண்டிய "ஆண்டவரின் பண்டிகைகள்" பல இருந்தன. அவைகள் முறையே பஸ்கா பண்டிகை (புளிப்பில்லா அப்பப் பண்டிகை), அறுவடைப் பண்டிகை, சேகரிப்பு விழா, வாரப்பண்டிகை, கூடாரப்பண்டிகை போன்றவையாகும் (வி.ப. 23, லேவி. 23-ம் அதிகாரங்கள்). இவைகளை ஆண்டவரின் பண்டிகைகளாக ஏன் இஸ்ரயேலர் ஆசரிக்க வேண்டும்? அதை எப்படி ஆசரிக்க வேண்டும்? எப்படிப்பட்டவர்கள் ஆசரிக்க வேண்டும்? எங்கே ஆசரிக்க வேண்டும்? எத்தனை நாட்கள் ஆசரிக்க வேண்டும்? என்றும் பல ஒழுங்கு முறைகளையும்கடவுள் கொடுத்தார். அவைகளின் ஊடாக நாம் இன்று "ஆண்டவரின் அறுவடை விழாவை" (or) அறுப்பு காலப் பண்டிகையை எவ்வாறு ஆசரிக்க வேண்டும் என்பதை திருமறைச் சார்ந்து சிந்திப்போம்.

### 1. நில உரிமை இன்றி வாழ்ந்தவர் உரிமைப் பெற்றனர் :

(இ.ச. 26:1, 5)

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு போன்ற முற்பிதாக்கள் பூமியிலே நில உரிமையின்றி நாடோடிகளாகவே வாழ்ந்தனர். ஆபிரகாம் "உரிமைப் பேறாகப் பெறவிருந்த இடத்திற்கு" அழைக்கப்பட்டபோது கீழ்படிந்து போனார். யாக்கோபு ஆராம் தேசத்தில் அதிக ஆண்டுகள் நில உரிமை இன்றி வாழ்ந்தார் (தொ.நூ. 28 : 5, 29 : 1-31 : 41). இது போலவே இஸ்ரயேலர்களும் எகிப்தின் கோசேன் நாட்டில் சொந்த நில உரிமையின்றி வாழ்ந்தனர். இவ்வாறு ஏறக்குறைய 430 வருடம் வாழ்ந்த மக்களுக்கு கானான் நாட்டை ஆண்டவர் உரிமை சொத்தாக யோசுவா மூலம் பங்கிட்டு கொடுத்தார்.

நில உரிமை இன்றி வாழ்ந்த மக்கள் உரிமை நிலத்தில் (பட்டா பூமி) வாழும் போது, கடவுளுக்கு நன்றி செலுத்த, நிலத்தின் விளைச்சல்களில் முதல் கனியை கடவுளுக்கு, அவர் தம் நாமம் விளங்குமாறு தேர்ந்து கொள்ளும் இடத்தில் கொண்டு வந்து, படைத்து மகிழவேண்டும் என்று எதிர்பார்த்தார்.

நாம் வாழும் நம் நாட்டில் கூட நம் முன்னோர்கள் அநேகர் கோயில் சொத்துக்களிலும், குத்தகை நிலங்களிலும் (பாட்ட சொத்து), ஒத்திக்கு

கொடுத்த நிலங்களிலும் (ஈடு) , புறம்போக்கு இடங்களிலும் (பட்டா இல்லா பூமி) வாழ்ந்தனர். இன்று நமக்கு சொந்தமாக நிலம் இருப்பதால் நாம் எவ்வளவு ஆனந்தம் கொள்கிறோம். சிலவேளையில் அதினால் மனமேட்டிமையும் வருகிறது. ஆனால் இன்றும் அப்படிப்பட்ட நிலங்களில் (பிறர் பூமி) எத்தனையோ பேர் வாழ்கிறார்கள். தி.பா. 50 : 12-இல் "எனக்கு பசியெடுத்தால் நான் உங்களை கேட்கப் போவதில்லை, ஏனெனில் உலகும், அதில் நிறைந்துள்ள யாவும் என்னுடையவையே" என்று ஆண்டவர் கூறுகிறார். ஆகையால் "ஆண்டவரின் பூமியில்" "உரிமையுடன் வாழ்கிற நாம்" நம் நிலங்களில் விளைகின்ற விளைச்சலின் முதற்பலன்களை அவருக்கே கொடுத்து ஆனந்தமாய் வாழவேண்டும். வாழ்கிறோமா? அல்லது எளியோர் மேல் அக்கரை கொள்ளாது அவர்களின் நிலங்களையும் நாம் அபகரித்துக் கொண்டு "ஆண்டவர் தந்தார்" என்று ஏமாற்றி வாழ்ந்து ஆனந்தத்திற்காக தவிக்கிறோமா? (எ.கா. யேசபேல் நாபோத்தின் தோட்டம் அபகரித்தாள் (1 அரச. 21-ம் அதி. தி.பா. 41 : 1).

## 2. நிரந்தர குடியுரிமையின்றி வாழ்ந்தவர் குடியுரிமைப் பெற்றனர்:

(இச. 26 : 1, 5)

தொ.நூ. 15 : 13-இல் உன் வழி மரபினர் "வேறொரு நாட்டிற்கு பிழைக்க செல்வர், உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து அத்தேசத்தாரை சேவிப்பார்கள்..." என்று ஆண்டவர் ஆபிராமிடம் சொன்னார். சொன்னபடியே நடத்தினார். எகிப்திலே தங்களுடையதல்லாத கோசேன் நாட்டில் "நிரந்தர குடியுரிமை" யின்றி (நிலையான வீடு) கூடாரங்களில் வாழ்ந்தனர். இவர்களை மோசேயின் வழியாக, ஆண்டவர் அழைத்து கொண்டு வந்து, யோசுவாவின் வாயிலாய் கானான் நாட்டை பகிர்ந்து குடி உரிமையாக சொத்தைக் கொடுத்து, அவைகளில் வீடுகள் கட்டி குடியிருக்கவும், குடும்பங்களாய் வாழவும் வைத்தார். அனைத்து வளங்களும் உள்ள செழிப்பான (பாலும், தேனும் ஓடுகிற) நாட்டையேக் கொடுத்தார். அதில் தி.பா. 127 : 1-இன் படி "ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில் அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்" என்றபடி ஆண்டவர் வீட்டையும் கட்டிக் கொடுத்தார். தி.பா:122:7-ன்படி அந்த "வீட்டிற்குள் அமைதியும், மாளிகைகளில் நல்வாழ்வும்" அமைத்தார். இதை உணர்ந்து கொள்ளும் இறைமக்கள், ஆண்டவர்க்கு முதல்பலன் கனிகளை படைத்து ஆனந்தமாக கொண்டாட வேண்டுமென விரும்பினார்.

இன்று நம்நாட்டில் சொந்த வீடுகளில் வாழமுடியாமல் எத்தனையோ பேர் பாதுகாப்பு இல்லங்களில் (முதியோர் இல்லம், அனாதைகள் இல்லம், விதவைகள் இல்லம், சாலையோரங்கள், திண்ணைகளில்) வாழ்கிற சூழ்நிலையில் கடவுள் நமக்கு சொந்த இல்லம் தந்து, அதில் நலமுடன் குடியிருக்கச் செய்வது எத்துணை இன்பம் (ஆனந்தம்) என்பதை உணர வேண்டும். நன்மைகளோடு வாழும் நமக்கு ஏழைகளைக் கண்டவுடன் பரிவு வராது மனமேட்டிமை வந்து விடுகிறது. ஏசா. 5 : 8-இன் படி வீட்டுடன் வீடு



கடவுளுக்கும் நாம் கொடுக்க வேண்டும். இவ்வாறு கடவுளுக்குரியதை நாம் நன்றிவுணர்வோடு அவருக்கு கொடுக்கையில், அவர் அதனை பிரியமுடன் ஏற்று நம்மை ஆசிர்வதிக்கிறார். காயின், ஆபேல் இருவரின் காணிக்கையில் நிலத்திலே வியர்வை சிந்தி உழைத்து அந்த நன்றியுணர்வோடு படைத்த ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்தார் (தொ.நூ. 4 : 4). தசம பாகத்தை ஆண்டவருக்கு கொடுக்கும்போது ஆசீர்வதிக்கிறார் (மலா. 3 : 10). கொடு உனக்கு கொடுக்கப்படும் என்கிறார். ஏன் கடவுளுக்கு நன்றிக் காணிக்கை படைக்கவேண்டும்? பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதின் குடிகளும் கடவுளுக்குரியவை (தி.பா. 24 : 1) கடவுள் பூமியை படைத்து அதை பயன்படுத்தவும், பாதுகாக்கவும் அதில் உழைத்து வாழவும் நமது கரங்களில் தந்துள்ளபடியால் அதிலிருந்து கிடைக்கும் நன்மைகளை அவருக்கு நன்றிப்படையலாக கொடுக்க வேண்டும். இவ்வாறு நாம் கொடுப்பதினால் நாம் திரும்ப பெற்றுக் கொள்கிறோம். எந்த அளவினால் நீங்கள் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும்.

நாம் மன வெறுப்போடு கொடுக்கும் காணிக்கைகளையும் நன்றியில்லாமல் கொடுப்பவைகளையும், சகோதரர்களோடு ஒப்புரவின்றி கொடுக்கும் காணிக்கைகளையும் (மத். 5 : 22-24), சுய நலத்திற்காகவும் பெருமைக்காகவும் கொடுக்கும் காணிக்கைகளை அவர் அங்கிகரிப்பதில்லை. ஆகவே நன்றி உணர்வோடு படைத்து நன்மைகளைப் பெறுவோம்.

## 2. நன்றிப் படையலும் முக மலர்ச்சியும் : ( 2 கொரி. 9 : 7)

நன்றிப் படையலான காணிக்கையினைப் படைக்கும்போது மனவருத்தத்தோடும், மற்றவரின் கட்டாயத்தின் பேரிலும் கொடாமல் அவரவர் தம் மனதில் தீர்மானித்தபடியே முக மலர்ச்சியோடு கொடுக்க வேண்டும். இவ்வாறு முக மலர்ச்சியோடு கொடுக்கும் காணிக்கைகளை கடவுள் ஏற்றுக் கொள்கிறார். முக மலர்ச்சியால் கடவுளின் பெருந்தன்மை கடவுள் தந்த ஆசிகளின் நிறைவு, நன்றி உணர்வு போன்றவைகள் அடங்கியுள்ளது.

இவ்வாறு முக மலர்ச்சியோடு நாம் காணிக்கை படைக்கும்போது அதனை ஏற்றுக் கொள்ளும் கடவுள் எல்லா நன்மைகளினாலும் நிறைந்து எந்த சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் தருவதோடு அதிகமாகவும் தருவதற்கு வல்லமையுள்ளவர் (2 கொரி. 9 : 8). அனனியா சப்பிராள் இருவரும் காணிக்கை படைக்கையில் உண்மையுள்ளவர்களாக இல்லாததால் முக மலர்ச்சியோடு படைக்க முடியவில்லை. ஆகவே நமது காணிக்கையில் உண்மைத் தன்மை இருக்க வேணடும். உண்மையுள்ள வர்களை கடவுள் உயர்த்துகிறார். நம்முடையக் காணிக்கைகளை கடவுளை

*N.M.S.* **ஞாயிறு**

# இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை

| | |
|---|---|
| ஒசே. 6 : 1 – 6 | யூதா 17 – 25 |
| தி.பா. 46 : 1 –10 | மத். 28 : 16 – 20 |

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் . . ." (மத். 28 : 19அ).

"இடையில் விட்டுவிட இது நேரமல்ல"..... உலகத்தின் முடிவு பரியந்தம் என்ற தொடர் நமது கடவுளுக்கு ஒரு திட்டம் இருக்கிறதென்பதைக் காட்டுகிறது. இதனைப் பிரதான கட்டளை அல்லது மாபெரும் அழைப்பு என்றும் கூறலாம் (The Great Commission).

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு தந்திருக்கிறதான கட்டளையை நிறைவேற்ற வேண்டியது நமது கடமை.

என்.எம்.எஸ். ஞாயிறை இன்று நாம் அனுசரிக்கிறோம். என்.எம்.எஸ். என்பது மிகவும் பழமையான, திருச்சபைகளோடு இணைந்து பணியாற்றுகிற அருட்பணி இயக்கமாகும். ஆண்டவரின் பிரதான கட்டளையை கருத்தில் கொண்டு இந்திய தேசமெங்கும், அண்டை நாடுகளான நேபாள், பூட்டான், நியான்மார் போன்ற பகுதிகளிலும் திருப்பணியை நிறைவேற்றி வருகிறது. கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நாமும் இத்திருப்பணியில் நம்மை இணைத்துக் கொள்வோம்.

பிரதானக் கட்டளையை நிறைவேற்றவது எப்படி? மேற்குறிப்பிட்ட மத்தேயு நூலின் கடைசி வாக்கியங்கள் அறைக்கூவல் கூவி நம்மை அழைக்கிறது. அருட்பணி ஆற்றுவதற்கென்று நம்மை அற்பணிப்பதும், நமக்குள்ள யாவையும் ஒப்படைப்பதும் சாலச் சிறந்தது. இவ்விதமாகவே இங்கிலாந்து தேசத்தின் செய்தித்தாள் ஒன்றில் விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இலண்டன் மாநகரச் செய்திகள்

ஆபத்தான பயணத்திற்கு ஆட்கள் தேவை
கடுமையான குளிர்... மாதக்கணக்கில் காரிருள்
இடையறாத அபாயங்கள்
பத்திரமாக வீடு திரும்புவது சந்தேகமே
ஒரு வேளை வெற்றி பெற்றால்
பெயரும் புகழும் நிச்சயம்.

ஆயிரக்கணக்கானோர் விண்ணப்பித்தனர். விளம்பரம் கொடுத்தவர் புகழ்பெற்ற ஆர்டிக் பிரதேசத்தைக் கண்டுப்பிடித்தவரான சர் ஏர்னஸ்ட்



வந்துள்ளான் காணாமற் போனான், மீண்டும் கிடைத்துள்ளான், என அவர்கள் மகிழ்ந்து கொண்டாடினார்கள்".

உலக வாழ்வில் வளர்ச்சியாய், மகிழ்ச்சியாய் நாள்தோறும் வாழவேண்டிய குடும்பங்கள் வீழ்ச்சியின் நிலையில் நிலையில்லாமல் தள்ளப்படுவதை காணலாம். மனிதனின் மண்ணாசை, பொருளாசை. பண ஆசை போன்ற ஆசைகளால் குடும்ப உறவுகளில் சீர்குலைவுகளும் சுக்குநூறாய் உடைந்து போன நிலைகளும் ஏற்படுகின்றன. இளைய மைந்தனுக்கு, தந்தையின் பாசம் முக்கியமாக இல்லை. தந்தையின் பணம் மட்டுமே முக்கியமானதாக இருந்தது. வாழ்வில் தெளிவில்லாதவனாய் உலக நண்பர்கள் தான் முக்கியம் எனும் நிலையிலிருந்தார். ஆனால் தன் வாழ்வில் இருந்த பொருள், பணமெல்லாம் திர்ந்த நிலையில் வெறுமை அடைந்தார். வெறுமையாக்கப்பட்ட நிலையில் வெறுப்பாய் தோன்றிய தந்தையின் வீட்டை நினைத்தார். தெளிவடைகிறார். நான் தவறு செய்துவிட்டேன் என்று மன்னிப்புக் கேட்டு இறையரசின் புத்துயிரான வாழ்வை பெறுகிறார். குடும்பத்திலோ மகிழ்ச்சியின் கொண்டாட்டம். மனம் திரும்பும் ஒரு பாவியைக் குறித்து விண்ணகத்தில் அதிக மகிழ்ச்சி உண்டாகும் என்ற மனநிறைவு தரும் வெளிப்பாட்டை நற்செய்தி தருகிறது. இறையரசில் புத்துயிர் பெற்ற குடும்பங்களாய் நம் குடும்பத்தை கட்டியெழுப்ப நம்மை அர்ப்பணம் செய்வோம்.

## 3. இறைவனோடு இகவாழ்வில் ஒன்றாய் சான்று பகரும் குடும்பம்

"உடல் ஒன்றே உறுப்புகள் பல உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்துவும் இருக்கிறார்."

பல இல்லங்களில் இயேசுகிறிஸ்து இல்லத்தின் தலைவர் என்று பொறிக்கப்பட்டிருக்கும். அவ்வில்லங்களில் இவ்வாசகத்திற்கும் வாழ்விற்கும் பெருத்த இடைவெளியை நாம் காணலாம். நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். எனவே குடும்பம் ஒன்று அதின் அங்கத்தினர் அனைவரும் கிறிஸ்துவின் அவயவங்களே. உடல் ஒரு உறுப்பால் ஆனது அல்ல. பல உறுப்புகளால் ஆனது. அதுபோல குடும்பமும் பல அங்கத்தினர் சேர்ந்த அமைப்பாகும். ஒன்றிணைந்து வாழ்வதன் மூலமே நல்லதொரு குடும்பமாய் சான்று பகர முடியும். "இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு அன்பு நிறைந்திடும் இடமுண்டு" என்கிற பாடலின் வரிகள் இறைவனோடு இக வாழ்வில் வாழ வலியுறுத்தும் கருத்துக்களே. எனவே இறைப்பற்றுள்ள குடும்பமாய் இறைவனுக்கு செவி கொடுத்து இறையரசின் வாழ்வில் புத்தாக்கம் பெற்ற சாட்சியுள்ள குடும்பமாய் நமது குடும்பங்களை கட்டியெழுப்புவோம். இறைவனின் கரங்களில் நம்மை அர்ப்பணிப்போம். இறை ஆசிப் பெறுவோம்.

**திரு. J. பிரபின் செல்வமணி**

இறைநம்பிக்கையோடு இறைவேண்டல் செய்கையில் பதில் தந்து ஆசீர்வதிப்பார்.

**2. இறைத் துணையினை நாடினார் :** (2 குறிப். 14 : 11)

துன்ப நேரங்களில் இறைவன் நமக்குத் துணையாயிருக்கிறார். இக்கட்டு நேரங்களில் உதவிச் செய்கிறவர் அவரே. ஆகவே இந்நேரங்களில் இறைவனதுத் துணையினை நாம் நாட வேண்டும். அரசர் ஆசா தனது படைவீரர்கள், தனது ஆற்றல் இவைகளின் நடுவில் இறைவனது துணையிருந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும் என எண்ணி அதனை நாடுகின்றார். ஆண்டவரே நீர் எங்களுக்குத் துணையாயிரும் (2 குறிப். 14 : 11) என்பதே அவரது இறை வேண்டல்.

"துணை வேண்டும் தகப்பனே உலகிலே

என்னை எதிர்க்கும் சக்திகள் பலஉண்டே"

என்பது நமது நம்பிக்கையின் பாடல். நாமும் துணை வேண்டி இறை வேண்டல் செய்கையில் நமக்கும் பதில் தருகிறார்.

நமது உலக வாழ்வினில் நாம் கொண்டுள்ள மனிதத் துணைக்கு எல்லையுண்டு. ஆனால் எல்லையில்லா இறைவன் நமது இன்ப துன்ப நேரங்களில் நமக்கு துணையாயிருந்து விடுவிப்பார். ஆகவே இறை வேண்டலில் தரித்திருக்கும் நாம் இறைவனைத் துணையாகக் கொண்டு இறைவேண்டல் செய்து வெற்றி காண்போம்.

**3. இறைவனைச் சார்ந்து நின்றார் :** (2 குறிப். 14 : 11)

மனித வாழ்வு சார்பு நிலை கொண்டது. மனிதன் மனிதனோடும், மனிதன் இயற்கையோடும், மனிதன் கடவுளோடும் சார்பு நிலையில் வாழவேண்டும். மனிதனைச் சார்ந்து வாழ்வது முழுமையானதல்ல, அதற்கு ஓர் முடிவு உண்டு. ஆனால் இறைவனைச் சார்ந்து வாழ்தலுக்கு முடிவில்லை. இறைவனைச் சார்ந்து வாழ்தல் வாழ்விலே வெற்றியினைத் தேடித் தரும். அரசர் ஆசா தனது வேதனையானச் சூழலில் இறைவனைச் சார்ந்து இறைவேண்டல் செய்தார். இறைவனைச் சார்ந்தவர் ஆண்டவரே! மனிதர் எங்களை மேற்கொள்ளக்கூடாது என மன்றாடுகிறார் (2 குறிப். 14 : 11). இவரது இறை வேண்டுதல் கேட்கப்பட்டது. கடவுள் இவருக்காக போரிட்டு வெற்றித் தந்தமையால் எதிர்த்து வந்த எத்தியோப்பியர் ஓடிப் போனார்கள்.

அன்பர்களே! நமது இறை வேண்டல்களையும் கேட்கிறதற்கு இறைவன் ஆற்றல் கொண்டவர். முழுமையாய் அவரைச் சார்ந்து, அவரிலே வாழும் போதும் நமக்கு துன்பங்கள் வருவது இயல்பு. ஆனால் இறைப் பற்றுள்ளவர்களாய், இறைத் துணையோடு இறைவனைச் சார்ந்து இறைவேண்டல் செய்கையில் நமக்கு பதில் தருகிறார். நம்பிக்கையோடு அவரைப் பின் தொடர்வோம்.

**திருமதி. D. ஜெயஷாஜ்[6]**



ஷாக்கில்டன் என்பவர். இதைவிட உறுதியான அழைப்பைத் தான் நாம் பெற்றிருக்கிறோம். இதனை நான்கு குறிப்புகளின் வாயிலாக இதை தியானிக்க முற்படுவோம்.

**1. இயேசுவை அறிந்து கொள்ளுங்கள்**

கிறிஸ்துவை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமான ஒன்று. நாம் அவருடைய பிள்ளைகள் தானே? எங்களுக்கு அவரைப்பற்றி தெரியாதா? என்ற வினா நமக்குள் எழும்பலாம். கிறிஸ்துவை சரியாக அறிந்து கொள்ளாத மனிதனால் அவருடைய பிரதான திட்டத்தை நிறைவேற்ற முடியாது. யோவான் 14-ம் அதிகாரத்தில் பிலிப்பு என்ற சீடன் இயேசுவினிடத்தில் பிதாவை எங்களுக்கு காண்பியும், அது எங்களுக்கு போதும் என்று கூறினார். இயேசுவோ மறுமொழியாக பிலிப்புவே இவ்வளவு நாள் நீ என்னுடனே இருந்தும் என்னை அறிய வேண்டிய பிரகாரமாய் அறியாமல் இருக்கிறாய் என்று கூறினார். பிலிப்பு என்ற சீடன் மூன்று வருடம் இயேசுவோடு உடன் பயணம் செய்தவன். அற்புதங்கள் செய்தபோதும் இரண்டு மீனையும் ஐந்து அப்பங்களையும் ஐந்து ஆயிரம் பேருக்கு பகிர்ந்து அளித்தபோதும் உடன் இருந்தார். ஆனாலும் பிதாவும் கிறிஸ்துவும் ஒன்றாய் இருக்கிறார்கள் என்ற உண்மையை அறியாது அறியாமை என்னும் இருளில் இருந்தார். நம்முடைய வாழ்விலும் இன்றைய நிலை அப்படித்தான் இருக்கிறது. ஓசியா 6 : 6 பலியையும் காணிக்கையையும் அல்ல என்னைப் பற்றி அறிகிற அறிவை விரும்புகிறேன் என்றே கடவுள் கூறியுள்ளார். நாம் கிறிஸ்துவை அறிந்து கொள்ள வேண்டுமானால் அவருடைய பாதத்தில் அமர்ந்து (தி.பா. 46 : 10) அவரோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவை பூரணமாய் அறிந்திருக்கிற மனிதன் அவருடைய பிரதான கட்டளையை நிறைவேற்ற தன் வாழ்வு முழுவதையும் அர்ப்பணம் செய்வான்.

**2. சீடராக்குங்கள்**

சீடத்துவம் என்பது கிறிஸ்து நமக்கு கற்றுக் கொடுத்த மாதிரி. பிரதான கட்டளை என்பது சீடத்துவ பணியேயாகும். கிறிஸ்து தன்னை பின்பற்றினவர்களை சீடர்களாக மாற்றினார். தன்னிலும் பிதாவிலும் அன்புகூர வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார். இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் மிகப்பெரிய இழப்பு என்னவென்றால் சீடத்துவ திருப்பணி மறக்கப்பட்டுவிட்டதாகும். மதமாற்றமல்ல, மார்க்கபேதமல்ல, மனமாற்றமே சீடத்துவத்தின் உண்மைநிலை. உலகை பின்பற்றுவதை விட்டுவிட்டு கிறிஸ்துவின் அடிச்சுவட்டின் பின் செல்வதே சீடத்துவம். இன்றைய திருச்சபைகளில் இயேசுவின் அடியவர்கள் என வாழ்ந்துக் கொண்டிருப்போரிடம் சீடத்துவத்தை தேடித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. சீடத்துவம் என்பது தன்னை முற்றிலுமாக இழந்து கிறிஸ்துவை மேன்மைபடுத்துவதாகும்.

திருமறையில் சீடத்துவத்தைப் பற்றிய சிறந்த மாதிரி முழுக்குமுனிவர் யோவானிடத்தில் வெளிப்பட்டதைப் பார்க்க முடிகிறது.

தன்னை பின்பற்றிய சீடர்கள் கிறிஸ்துவை எதிர்கொண்ட போது இவரே மெய்யான தேவ ஆட்டக்குட்டி என்னையல்ல அவரையேப் (இயேசு கிறிஸ்து) பின்பற்றுங்கள் என்றார். இன்றைக்கு நம் வாழ்விலும், திருச்சபையிலும், கிறிஸ்தவ சமுதாயத்திலும் மிகப்பெரிய சவால் சீடத்துவமே.

என்னைப் பின்பற்றுங்கள் என்பதைவிட நான் பின்பற்றுகிற கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள் என்று அடையாளம் காட்டுவதே உண்மைச் சீடத்துவம். கிறிஸ்துவும் பிதாவையே பின்பற்றினார். அவரை மாதிரியாகக் கொண்டு நாமும் சிறந்த சீடர்களாக மாறுவதும், மற்றவர்களை சீடர்களாக மாற்றுவதும் நம் தலையாயக் கடமை. இன்றைய மிகப்பெரிய தேவையும் அதுவேதான்.

### 3. இறை வார்த்தையின்படி வாழுங்கள்

பிரதான கட்டளையை நிறைவேற்றுகிற மனிதன், திருச்சபை, இறைவனுடைய வார்த்தையை அடிப்படையாக கொள்ளவேண்டும். இறைவனுடைய வார்த்தையின்படி வாழப் பழகாதவர்களே கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற துடிக்கிறார்கள்.இன்றைய சமுதாயத்தில் இறைவனுடைய வார்த்தையின்படி வாழ்வது என்பது மிகக் கடினம் தான். ஆனாலும் யோவான் 13 : 15-ல் நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் அப்படியே செய்யுங்கள் என்றே திருவுள்ளம் பற்றினார் கிறிஸ்து. வார்த்தையிலும், தொடர் வாழ்விலும், கடின பாவ சஞ்சலங்கள் நேர்ந்தாலும், வியாதியின் படுக்கையானாலும் மன்னிப்பும் வாழ்வும் தருவேன் என்று வாக்குரைத்த வள்ளலாம் கிறிஸ்துவின் அண்டை மிகத் தைரியமாய் கிருபாசனத்தண்டையில் கிட்டிச் சேருவோம். வார்த்தையின் வல்லமையினால் வாழ்வளிக்கும் நற்செய்தியை, நித்திய வாழ்வை பிரதான கட்டளை என்கிற வாக்குத்தத்தத்தின் மூலம் நிறைவேற்றுவோம்.

### 4. பிரதான வாக்குத்தத்தம்

பிரதான கட்டளையை நிறைவேற்றுங்கள் என்று வாக்குக் கொடுத்த கிறிஸ்து பிரதான வாக்குத் தத்தத்தை நமக்கு ஈவாக தந்திருக்கிறார். (யூதா 24, 25) வழுவாதபடி நம்மைக் காத்துக் கொள்ளுவேன் என்றும், தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மாசற்றவர்களாக நிறுத்துவேன் என்றும் வாக்குப்பண்ணியிருக்கிறார். தொடர்ந்து பற்றுறுதி வாழ்வில் நாம் சந்திக்கிற அனைத்து பாடுகளையும் கடந்து கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றி முடிப்பதற்கு நம்மையும் பலப்படுத்துவார். அனைத்து தேவைகளையும் தவறாமல் சந்திப்பார். பரந்த இந்திய தேசத்தில் பிரதான வாக்குத்தத்தத்தைக் கொண்டு பிரதான கட்டளையை நிறைவேற்றுவோம். இந்திய சுதேச மிஷனரி சங்கத்தின் 435 அருட்பணியாளர்களுக்காக, 9 மலைவாழ் பிள்ளைகளின் விடுதிகளுக்காக இறைவனிடத்தில் மன்றாடுவோம். புதிய திருச்சபைகள், புதிய விசுவாசக் குடும்பங்கள் கிறிஸ்துவில் கட்டப்பட மேற்கூறிய அனைத்து பணிவிடைகளுக்காகவும் நமது பங்களிப்பை தாராளமாய் தந்துதவுவோம்.

**G.ஜெகன்னாதன்**



*ஜெபக்குழு ஆண்டுவிழா* **விழாக்கால அருளுரை**

## நம்பிக்கையின் இறைவேண்டல்

2 குறிப். 14 : 1–12

“எங்கள் கடவுளாம் ஆண்டவரே உம்மில் நம்பிக்கை வைத்து, உமது பெயரால் இப்படையை எதிர்க்க வந்துள்ள எங்களுக்கு துணையாக வாரும்” (2 குறிப். 14 : 11)

இறைவேண்டல் நம்மை கடவுளோடு இணைக்கின்றப் பாலமாக உள்ளது. நம்பிக்கையோடு இறைவேண்டல் செய்யும்போது கடவுள் அதற்காக நன்மையான ஆசீர்வாதங்களைத் தருகிறார். தாவீதின் வழி மரபிலே வந்த ஆசா என்னும் அரசரின் நம்பிக்கையின் இறைவேண்டலை இறைவன் கேட்டு பதிலளித்ததை இங்கு வாசிக்கின்றோம். இதன்மூலம் கடவுள் இறைவேண்டலுக்கு பதில் தருகிறார் எனும் உண்மையினைக் கற்றுக் கொள்கிறோம். ஜெபக்குழு ஆண்டுவிழாவாகிய இந்நாளில் கடவுள் எத்தகைய இறைவேண்டலை கேட்கிறாரென அரசர் ஆசாவின் வாழ்விலிருந்து சிந்திப்பது சிறந்தது.

### 1. இறைப் பற்றுடையவராயிருந்தார் : (2 குறிப். 14 : 11)

ஆசா அரசர் மக்களுக்கு நல்ல ஆட்சியினைத் தந்தவர். கடவுளின் பார்வைக்கு நன்மையானதைச் செய்தவர். பாகால் வழிபாட்டை தேசத்திலிருந்து அகற்றி “யாவே” வழிபாட்டிற்கு முன்னுரிமை கொடுத்தவர், அதோடு மக்கள் கடவுளைத் தேடவும், அவரது திருச்சட்டங்களையும், கட்டளைகளையும் கைக்கொள்ளவும் வழிகாட்டினவர், இவரது ஆட்சி காலத்தில் யூதா நாடு அமைதியாயிருந்தது (2 குறிப். 14 : 2-5). நல்லாட்சியினை மக்களுக்கு தந்து மக்கள் அமைதியாய் வாழவும் வழிகாட்டி, பாதுகாப்பான அரண்களை கட்டினார். அவரது அனைத்து செயல்களையும் கடவுள் ஆசீர்வதித்தார். காரணம் அவர் யாவே மீது கொண்டிருந்த ஆழமான பற்றுறுதியாகும்.

இவரது ஆழமான பற்றுறுதி வாழ்விலே இவரை எதிர்த்து பலம் பொருந்திய படைகளோடு எத்தியோப்பியனாகிய சேரா வந்தபோது, கடவுளை நோக்கி ஆண்டவரே வலியோனை எதிர்க்கும் வலிமையற்றவனைக் காப்பவர் உம்மையன்றி எவருமிலர்! உம்மில் நம்பிக்கை வைத்து உம்மை நோக்கி பார்க்கும் எங்களுக்கு உதவிச் செய்யும் என இறை வேண்டல் செய்தார் (2 குறிப். 14 : 11). அரசர் ஆசா இறைவன் மீது கொண்டிருந்த ஆழமான பற்றுறுதியே இவ் இறைவேண்டலாகும். இதற்கு இறைவன் பதிலளித்தார். ஆகவே நாமும்

கொடுத்தபோது ஆண்டவரின் ஆவி என் மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். . . (லூக். 4 : 18-20) என்று கூறி தன் மூலம் மறைநூல் வாக்கு நிறைவேறி உள்ளதை சுட்டிக்காட்டினார். இயேசுவின் ஆன்மீக போதனை வளர்ச்சிக்கு, வாசித்தல் ஒரு உந்துதலாக அமைந்தது. இன்று வாழ்க்கையின் தேவைகள், நலம், சுகாதாரம், சுயமுன்னேற்றம், பிரச்சனைகள், நோய்கள், தீமைகள் போன்றவற்றை ஆன்மீக, அறிவு களஞ்சியமாகிய திருமறை மூலம் நிறைவேற்ற முயலுகிறோம். அதற்கு திருமறையை சரியாக புரிந்துகொள்ள ஆதார, விளக்க நூற்களை வாசிப்பது மிக மிக அவசியம். கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு என்னும் முதுமொழிக்கு ஏற்ப கல்வி கடந்த காலத்தோடு நிற்பது அல்ல, மாறாக தொடரான ஒன்றாக கொள்ளவேண்டும் (எ.டு.) ஒரு மலர் நல்ல மணம் வீசுகிறது என்றால் செடி, கொடி, மரத்தில் பல நடைமுறைகள். முதலில் மலர்க்காம்பு, காம்பின் துணியில் பசுந்தளிர்க்குவியல் அல்லது இதையொட்டி வளரும் தளிர்கள், மலரின் புறவிதழ்களாக உருவெடுக்கின்றன. இதழ் குவியல், ஒருசில நாட்களில் பல வடிவங்களில் குவிந்து வளருகிறது. தொடர்ந்து இதழ் குவியலில் சிறிய விரிசல், மறுநாள் இன்னும் சிறிய விரிசல். அடுத்து மலரின் நிறம் வெளிப்படுகிறது. இறுதியாக மலர் மலருகிறது. சில ஒரு சிலநாட்கள் அல்லது ஒரே நாட்களில் மலர்ந்து மணம் விசுகிறது. அதுபோல தொடர்ந்து வாசிக்கும்போது உண்மையின் மணம் வீசும்.

### 2. சிந்தித்தான்: (தி.ப. 8 : 30-34)

சிந்தனையே சாதனை என்ற கூற்றின் அடிப்படையில் எத்தியோப்பிய நிதியமைச்சரும் உண்மையறிவுக்கு ஒரு சாதனையாளரானார். விளக்கம் அறிய முடியவில்லையே என்ற எண்ணத்திற்கு விடைகாண முயன்றார். பிலிப்புவின் கேள்வி நீர் வாசிப்பதின் பொருள் உமக்குத் தெரிகின்றதா? புரியமுடியாத புதிர்களை காலநிலைக்கு ஏற்ப அறிய முயலுகின்றான். நம்பிக்கை மட்டும் போதாது சிந்திக்கவும் வேண்டும் என்ற சாக்ரட்டீஸின் கூற்றுக்கு இணங்க சிந்தித்தான். அவன் சிந்தனை தான் உண்மையறிவுக்கு ஆணிவேராக மாறியது. அதோடு மனமாற்றத்திற்கான மகத்தான சக்தி கொண்டதாக மாறியது. இதைத்தான், ‘எண்ணங்களை உள்ளே விடுங்கள். முடியும் என்ற எண்ணங்களை திரும்ப திரும்ப என்னுவதன் மூலம் மனத்தில் நம்பிக்கை பிறக்கிறது’ என்று தத்துவஞானி டிரைவன் கூறுகிறார். இப்படியாக சிந்திக்க எண்ணம் கொண்ட ஒரு மனிதன் நாளடைவில் மாற்றங்கள், சாதனைகள் நிறைந்த பெரும்மனிதனாய் மலர்கின்றான். சாதனைகள், மாற்றங்கள்புரியும் மனித சமுதாயம் சரித்திரத்தின் பொற்காலமாய் மலர்கிறது. ஆகாஸ்வேர் மன்னருக்குத் தூக்கம் வரவில்லை. எனவே அவர் தம் ஆட்சியின் குறிப்புகள் அடங்கிய ஏட்டைத் தம்மிடம் கொண்டு வாசிக்குமாறு பணிந்தார். அரண்மனை வாயிற்காவலர்களான அலுவலர் பிக்தானாவும், செரேசும் மன்னர் ஆகஸ்வேரை கொல்ல வகை தேடினதை மொர்தக்காய் அறிவித்ததாக எழுதப்பட்டிருந்தது (எஸ்தர் 6 : 1, 2). அதை கேட்டவுடன் சிந்தித்து மொர்தக்காய்க்கு மன்னர் உயர்வு அளித்தார். தொடர்ச்சியாக ஆமான் கொலை செய்யவும் பட்டான். இவ்வாறு வாசித்தல் சிந்தனை மாற்றத்தை கொடுக்கிறது. (எ.கா.) ஆப்ரகாம் லிங்கம் வளர்ந்துவரும் நாளில் வறுமை மிகவும் வாட்டியது. அதனால் வயலில் வேலை செய்தார். காடுகளில் சென்று விறகு வெட்டி விற்றார். ஏழு வயதில் தாயை இழந்தார். சிறிய அன்னையில் அரவணைப்பில் தொடர்ந்து வளர்ந்தார். தம் தாயார் வைத்திருந்த புத்தகங்களைப் படிப்பார். கிறிஸ்தவ வேதநூல், ஈசாப் கதைகள், இராபின்சன் குருசோ முதலிய நூல்களை சிறு வயதிலே பல முறை படித்துவிட்டார். அந்த நூல்களை அவர் எல்லாம் படித்ததால் அவருக்கு கல்வியில் அளவற்ற ஆற்றல் ஏற்பட்டது. ஒரு முறை ஒரு புத்தகத்தை வாங்க ஒரு பெரியவரிடம் மூன்று நாட்கள் வயலில் வேலை செய்தார். இப்புத்தகம் அவருக்கு வழக்கறிஞராகவும், அரசியலிலும் ஈடுபட தூண்டியது. அதோடு ஜனாதிபதியாக உயர்த்தப்பட்ட பின் அடிமைத்தனத்தை எதிர்க்கவும் ஏதுவாக அமைந்தது. இதனால் உலகமே போற்றிப் புகழக்கூடிய ஒப்பற்ற தலைவரானார்.

### 3. உண்மையறிவை பெற்றான்: (தி.ப. 8 : 35-39)

எசாயாவின் இறைவாக்கு நூலின் பகுதியாகிய அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும், உரோமம் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறிபோலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார் . . . (தி.ப. 8 : 32-33)-ஐ பிலிப்பு எத்தியோப்பிய நிதியமைச்சரிடம் விளக்கி அவரே இயேசு என்று கூறிய வேளையில் பரந்த சிந்தனையுடன் உண்மையை புரிந்துகொண்டார். உண்மைக்கு வேறொரு பெயர் சத்தியம். தமிழில் சத்தியத்தை குறிக்க உண்மை, வாய்மை, மெய்மை என்று மூன்று சொற்கள் உள்ளன. உண்மை என்பது மனத்தினால் தூய எண்ணங்களையே சத்தியமானவற்றையே எண்ணுவதாகும். அதன் அடிப்படையில் உண்மையானவர் இயேசு என்று ஏற்றுக்கொண்டார் (36). வாய்மை என்பது வாயால் சத்தியமானவற்றையே பேசுவதாகும். இதற்கு ஏற்ப

வாய்மைக்கு திருமுழுக்கு பெற்றார் (38). மெய்மையாவது உடலால் சத்தியமானவற்றையே செய்தலாகும். அதற்கு ஏற்ப மெய்மையான மகிழ்வை சுதந்தரித்தார் (39). இவ்வாறு மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் உண்மையறிவை பெற்றான். (எ.டு.) ஜோசப் பிரிட்ஸ்வி இங்கிலாந்தில் நெசவு வேலை செய்தவரின் மகனாகப் பிறந்தவர். இவர் பள்ளியில் விஞ்ஞானம் கற்கவில்லை. மாதாகோயில் பாதிரியாக நியமிக்கப்பட்டார். இந்த தொழிலிருந்து பல புத்தகங்களை படித்தார். பல விஞ்ஞான உண்மைகளை கண்டறிந்து உலகுக்கு எடுத்துக் கூறினார். நாமும் இவ்வாறு முயல வேண்டும். இதை 'நல்ல புத்தகத்தின் நோக்கம் நம்மை நல்ல வழிக்கு இட்டுச் செல்வதாகும்' என்று ஜோட் பண்டிதர் கூறுகிறார். (எ.கா.) ஏழையாகப் பிறந்து இளமையிலேயே எழுத்தறிவு பெறாமல் ஏழாம் வயதிலே வாழ்க்கைத் துன்பத்தை அனுபவித்தவர் ஜார்ஜ் ஸ்டிவன்சன். இவர் தன்னுடைய எட்டாம் வயதிலே வேலைக்குச் சென்று படிப்படியாக உயர்ந்தார். புத்தகங்கள் படிப்பதிலே அதிகம் ஆர்வம் கொண்டார். நல்லறிவு பெற்று முடிவில் விஞ்ஞானச் சாதனையை ஏற்படுத்தி ரயிலை கண்டுபிடித்து ஓடும்படி செய்தார். பல தன்மைகள் வாய்ந்த நண்பர்கள் தொடர்பைவிட பொறுக்கி எடுக்கப்பட்ட சில புத்தகங்களின் உறவு நமக்கு அதிக நன்மையை அளிக்கும் என்று கோல்டன் என்ற அறிஞர் கூறினார். ஆகவே தி.பா. 1 : 1-3-இல் கூறியபடி திருச்சட்டத்தையும் (திருமறை), பலதரப்பட்ட உயர்ந்த நோக்குடைய புத்தகங்களை இரவும் பகலும் வாசித்து உண்மையறிவை பெறுவோம்.

**அருள்திரு. Dr. M. எட்வின் சோபிதா**

*சபைநாள் விழா* **விழாக்கால அருளுரை**

**(Church Day)**

## ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள்

மீகா. 4 : 1–5 — 1 கொரி. 12 : 12–31

தி.பா. 122 — லூக். 4 : 16–21



*நூலக ஆண்டுவிழா* **விழாக்கால அருளுரை**

## வாசிப்புகலை ஒரு உண்மையறிவு

தி.ப. 8 : 26–39

"அவர் தமது தேரில் அமர்ந்து எசாயாவின் இறைவாக்கு நூலைப் படித்துக் கொண்டிருந்தார்" (தி.ப. 8 : 29).

நவீன உலகில் உண்மையை தேடும் முயற்சிகள் பல. அதைத்தேடும் யுக்திகள் பலமுறையாகும். அவற்றில் ஒன்று வாசிப்பு கலையாகும். வாசிப்புக்கலை என்பது தனிப்பட்ட விருப்பத்துடன் அறிவு, கல்வி, பொழுதுபோக்கு, நேரம் செலவிடுவதற்காக புத்தகம், பத்திரிகை மற்றும் இதர வாசிப்பு உபகரணங்களை படிக்கும் பழக்கமேயாகும். வாசிப்புகலை ஒரு குறிப்பிட்ட காலத்தின் கலை, சமுதாய அமைப்பு, மொழி, கலாச்சாரம், தட்ப வெப்பநிலை, தொழில், பொருளாதாரம் போன்றவற்றையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் சுட்டிக்காட்டும் தன்மை உடையதாக உள்ளது. அதோடு ஆன்மீக வளர்ச்சியில் இறைத்திட்டம், செயல், வார்த்தை, பணி, தரிசனம், எச்சரிக்கை ஆகியவற்றில் உணர்வு பெறவும் செய்கிறது. வாசிப்புப்பிற்குரிய ஆவணங்களை உள்ளடக்கியதே நூலகமாகும். அருட்கலைஞர் ஆர்.எஸ். ஜேக்கப் "நூல் நிலையங்கள் அறிவை வளர்க்கும் தேவாலயங்கள்" என்றும், தாமஸ் ஆல்வா எடிசன் "நூல் நிலையம் இல்லாதவீடு, உயிரில்லாத உடல்போன்றது, வீட்டிற்கு ஒரு நூல் நிலையம் தேவை" என்றும் கூறுகிறார். ஆகவே நூலகத்தை பயன்படுத்துகின்ற வாசகர்கள் அதிலுள்ள ஆவணங்களை உண்மையறிவு பெறும் ஒரு வாய்ப்பாக பயன்படுத்தவேண்டும். வாசித்த அப். 8 : 27-39-ல் மூலம் எத்தியோப்பிய நிதியமைச்சர் உண்மையறிவை எப்படி பெற்றுக்கொண்டான் என்று பார்ப்போம்.

### 1. வாசித்தான் : (தி.ப. 8 : 28)

எத்தியோப்பிய நிதியமைச்சருக்கு பல சுருளோடுகளை வாசிக்கின்ற பழக்கம் இருந்தது. அதனால்தான் எருசலேம் சென்று கடவுளை வணங்கி விட்டு தேரில் பயணம் செய்தவேளையில் எசாயா இறைவாக்கு நூலை படித்துக் கொண்டிருந்தார். இது இயேசுவைப் பற்றிய நற்செய்தி அறிய ஏதுவாயிருந்தது. இயேசு கிறிஸ்துவுக்கும் வாசிக்கின்ற பழக்கமிருந்தது. இதனால்தான் தொழுகைக்கூடத்தில் எசாயாவின் சுருளேடு வாசிக்க